

மொழியா வலிகள்

(A new Novel from Norway) First Edition August 2018

பகுதி 2

இ.தியாகலிங்கம்

சுயவெளியீடு

உதவி

lulu.com

Moliya Valikal
(A new Novel from Norway)

First Edition
August 2018
ISBN: 978-0-244-70629-6

Publication Editor
R.Thiagalingam
Vetlandsveien 117
0686 Oslo
Norway

Pages: 282

Printed & Published by
Lulu.com

பாகம் 2

1 "TS"சின் பயணம்

அந்தப் பெண் சாரதி மிகவும் லாகவமாகவும் வேகமாகவும் காரை ஓட்டிச் சென்றாள். "TS" அவளைக் கண்ணாடியில் பார்த்ததில் அவளுக்குப் பழுப்புக் கண்கள் என்பதைக் கண்டு கொண்டார். மெல்லிய அழகான இதழ்கள். காதில் நீல நிறத்தில் முத்துப் பதித்த தோடு அணிந்து இருந்தாள். அது அவளது நீல நிற ஆடைக்குப் பொருத்தமாக மேலும் அழகு ஊட்டியது. இதழ்களில் மன்மதனையும் மயக்கும் மந்தகாரச் சிரிப்பு. மெலிந்த உடம்பு. சாதாரண உயரம்... நாற்பத்து ஐந்து கிலோவுக்கு மேல் தேறமாட்டாள் என்பது "TS"சின் கணிப்பு.

வாகனத்தில் முன்னுக்கு இருப்பதற்கே "TS"-சிற்கு அதிக விருப்பம். கொண்டு வந்த இரு பொதிகளோடும் முன்னுக்கு இருக்க முடியாது என்பதால் பின்னுக்கு மனம் இல்லாது இருந்து கொண்டார். வாகனம் பயணிக்கத் தொடங்கிய சில கணங்கள் இருவருக்கும் இடையில் எந்தச் சம்பாசனையும் தொடங்கவில்லை. "TS"-சிற்கு ஏதாவது கதைக்க வேண்டும் போல் இருந்தது. எப்படித் தொடங்குவது என்பதில் அன்று அவருக்குக் குழப்பம். அதற்குச் சேர்ந்து வந்த பெடியளை எல்லாம் பாதி வழியில் கைவிட்டு வந்ததான மனச்சாட்சியின் உறுத்தல் காரணம். அதுவும் றூபனை அப்படியான நிலையில் கவனிக்க ஆள் இல்லாது விட்டு வந்ததான மனதின் குடைச்சல் மௌனம் தந்தது. ஊரில் உள்ளவர்களை எண்ணவே அவருக்குப் பிடிக்கவில்லை. இலங்கை இராணுவம் மோசமான தாக்குதல்களை செய்யத் தொடங்கி விட்டது என்பதான தகவலும் இடைக்கிடை காதில் விழுகிறது. பல விதமான மன உளைச்சல்கள் அவர் வசனங்களை இன்று மேலும் விழுங்கிவிட அதைப் பிடிப்பதற்காக அவர் அந்தரப்பட்டார்.

ஒரு அன்னியனிடம் என்ன கதைப்பது என்கின்ற தடுமாற்றத்தில் அந்தப் பெண்ணும் சிறிது தயங்கினாள். பின்பு அதற்கு விடை கண்டவள் போல நோஸ்க்கில்,

"நல்ல வெயில்." என்றாள். சிந்தனையில் மூழ்கி இருந்த "TS" விளங்காது,

"என்ன?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். அவளும் அதன் பின்பு ஆங்கிலத்தில் உரையாடத் தொடங்கினாள்.

"நல்ல வெயில். அது சரி நீங்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்கள்?"

"நாங்கள் சிறீலங்காவைச் சார்ந்தவர்கள்."

"அது அழகான நாடல்லவா?"

"அப்படித் தான் எல்லாரும் சொல்கிறார்கள். நாங்கள் அவர்கள் வெறுப்பில் அந்த அழகை இரசிக்க முடியவில்லை."

"அது உண்மை இல்லையா?"

"பார்ப்பதற்கு அழகான இயற்கை பொங்கும் எழில் மிக்க நாடு என்பது பொருந்தும் என்று நான் நினைக்கிறேன்."

"அதன் மூலம் நீங்கள் கருதுவது என்ன?"

"இயற்கை காட்டும் அழகை அந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் சிறுபான்மையினர் மேல் காட்டியது இல்லை. அவர்களின் வரலாறு இரத்தம் தோய்ந்தது ஆகவே மாறாது தொடர்கிறது. அழகான நாடு என்றால் நாட்டின் இயற்கையும் நாட்டில் இருக்கும் மக்களின் நடத்தையும் அழகாக இருக்க வேண்டும். அழகான நாட்டில் கருணையுள்ள மனிதர்கள், வன்முறையை வெறுக்கும் மனிதர்கள் நிறைந்து இருக்க வேண்டும். அப்படி அழகான மக்களாய் இருந்து இருந்தால் நாங்கள் இந்த அவலங்களோடு நாடு விட்டு நாடு ஓடி வந்திருக்க அவசியம் வந்து இருக்காது."

"உங்கள் ஏக்கம் விளங்குகிறது. இப்படியான பிரச்சனைகளைப் பேசியே தீர்க்க வேண்டும்."

"பேசிப் பேசி களைத்து, வன்முறைக்குப் பதில் வன்முறை என்கின்ற தற்காப்பு யுத்தத்தில் குதித்து விட்டார்கள் எங்கள் இளைஞர்கள்."

"யுத்தம் என்பதே மனிதனை மனிதன் எப்படி உன்னதமாகக் கொல்வது என்கின்ற வித்தையை எந்தக் குற்ற உணர்வும் இல்லாது பயிலும் களம் அல்லவா? மனிதனை, சக மனிதன், மனிதம் மறந்து, மிருகங்களைப் போல அல்ல அதைவிடக் கொடுமையாக கொன்று குவிக்கும் எந்த யுத்தத்தையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் யுத்தம் செய்யாது வாழ்கிறோம். யுத்தம் செய்யாது வாழ முடியுமென நம்புகிறோம்."

"உங்களைப் போன்ற மனிதர்கள் எங்கள் நாட்டில் வாழ்ந்து இருந்தால் அங்கும் யுத்தம் வந்து இருக்காது. நாங்களும் யுத்தத்தை விரும்பவில்லை. காந்தியின் படங்களையே எங்கள் வீட்டில் மாட்டி வைத்து இருந்தோம். அவரைக் கடவுளாக, தலைவனாக, வழி காட்டியாக நினைத்தோம். தெற்கில் இருந்து எங்களுக்கு அன்னியமான இராணுவம், எங்களை அடக்குவதற்காய், அவமானப் படுத்துவதற்காய், கொல்லும் அதிகாரத்தைப் பயங்கரவாதச் சட்டமாக மாற்றிக் கையில் எடுத்துக் கொண்டு வந்தது. வந்தவர்கள் காந்தியின் படத்தை இழுத்துப் போட்டு கால்களால் மிதித்தார்கள். எங்கள் மீது வலுக்கட்டாயமாக யுத்தத்தைத் திணித்தார்கள். நான் எதுவும் இட்டுக்கட்டிச் சொல்லவில்லை. நடந்த உண்மையைச் சொல்கிறேன். நாங்கள் போராடப் புறப்படவில்லை. எங்கள் மீது போராட்டம் திணிக்கப்பட்டது. அகிம்சாவாதிகளான நாங்களே உயிர் காக்க ஆயுதத்தை ஏந்த நிர்ப்பந்திக்கப் பட்டோம். கொல்லப்படும் போது, யாரும் துணைக்குக் கை கொடுக்காத போது, ஆயுதத்தை நம்புவதை விட எங்கள் இளைஞர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. அவர்கள் தற்காப்பு யுத்தம் ஒன்றைத்தான் தொடங்கினார்கள்."

"இப்போது உங்கள் நாடு எப்படி இருக்கிறது?"

"சூறாவளியில் அகப்பட்டு திசை தெரியாது ஆழ்கடலில் பயணிக்கும் கப்பல் போல எங்கள் போராட்டம். அங்கே தொடர்ந்தும் பிரச்சனையாகவே இருக்கிறது. ஆனால் எனக்குப் பிந்திய செய்திகள் சரியாகத் தெரியாது."

"பிரச்சனை தீர்ந்தால் உங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போவீர்களா?"

"நிச்சயமாகப் பிரச்சனை தீர வேண்டும். எங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்று சுதந்திரமாக வாழ வேண்டும்

என்று ஆசைப்படுகிறேன். பிரச்சனை தீருமா என்பதே எனது பெரிய கவலை."

"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?"

"நீங்கள் அந்த நாட்டில் வாழ்ந்து இருந்தால் இப்படிக் கேட்கமாட்டீர்கள். உங்களுக்கு எப்படி விளங்கப்படுத்துவது என்பது எனக்கு விளங்கவில்லை. சுருங்கச் சொல்வது என்றால் அங்கு நடக்கும் பேச்சு வார்த்தைகள் மனதிற்கும் நாக்கிற்கும் சம்பந்தம் இல்லாதவை. உண்மை இல்லாத பேச்சுவார்த்தைகள் ஒருபோதும் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதில்லை. அதனால்த்தான் நான் அப்படிச் சொல்கிறேன்."

"உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?"

"மனைவியையும், மகளையும் அவளது தகப்பனோடு விட்டுவிட்டு அவசரமாக நான் தப்பித்து வர வேண்டியது ஆகிவிட்டது."

"ஓ… நீங்கள் உங்கள் குடும்பத்துடன் விரைவாகச் சேர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்."

"பாக்கர்னஸ்சிற்கு எதற்காகப் போகிறீர்கள்?"

"நான் பாக்கர்னஸ்சிற்குப் போய் அங்கிருந்து ஒஸ்லோவுக்குப் போகிறேன்."

"பேருந்தில் போகிறீர்களா?"

"யாரிடமாவது லிப்ற் கேட்டுத்தான் போக வேண்டும்."

"வாழ்த்துகள். நாங்கள் பாக்கர்னஸ் வந்தாகிற்று."

"உங்கள் உதவிக்கு மிக்க நன்றி." கூறிவிட்டு "TS" வாகனத்தை விட்டு இறங்கினார். மீண்டும் குனிந்து அவளுக்கு நன்றி கூறினார். பாக்கர்னஸ்னசில் இருந்து ஒஸ்லோ செல்லும் E-16 பாதையில் நின்று வாகனத்தை நிறுத்தும்படி கேட்க வேண்டும் என்று அறிந்து வைத்திருந்தார். அவர் அந்தப் பாதையால் நடந்து வந்த போது ‘கோணபோஸ்’, ‘வார்டால்’ என்பதோடு பல பெயர் பலகைகள் இருந்தன. அவர் ‘கோனபோஸ்’ செல்லும் பக்கம் சென்றார்.

பச்சை மரங்கள், மலையில் பளிங்குப் பனி, அதன் அடிவாரத்தில் சிவப்பு வீடுகள், அதைத் தாண்டிக் கறுத்த

நெடுஞ்சாலைகள், அதன் கீழ் நீல மேகமே பூமியில் வைர வடிகாலாக வழிந்தோடும் ஆறு, மஞ்சள் நிறத்தில் போக்குவரத்து விபரம் சொல்லும் அலுமேனியத் தகடுகள், அவற்றின் மேல் கண்ணாடிக் கதிர்கள் பரப்பும் ஆதவனின் மூர்க்கம் ஆகிய பலவற்றால் தாக்குற்று "TS" அப்படியே சில கணங்கள் நின்று அந்த அழகைத் தன் கண்களால் கிரகிக்க முடியுமா என்று தனக்குத் தானே ஒரு சோதனை வைத்துப் பார்த்தார். நிறம் நிறமாக அள்ளி வீசிய அந்த இயற்கையும், செயற்கையும் அவரை மெய்மறக்கப் பண்ணியது. எவ்வளவு நீற்றாக இருக்கிறது இந்த நாடு? படைக்கப்பட்டதா? அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டதா? அவருக்கு மலைப்பே மிஞ்சியது. பணக்கார ஐரோப்பியர்கள் பாய்ந்து விட்ட முன்னேற்றத்தை எண்ண "TS"-சிற்கு எப்போதும் மீளா மலைப்பே. அந்த மலைப்பில் இருந்து தன்னை ஒருவாறு விடுவித்துக் கொண்டு ‘கோணபோஸ்’ பாதைக்கு வந்து ஒரு ஓரத்தில் பைகளை வைத்துவிட்டு, வரும் கார்களுக்குக் கையைக் காட்டி நிறுத்த முயற்சித்தார். பல வாகனங்கள் நிற்கவில்லை. சிலர் முதலில் மெதுவாக்கி விட்டுப் பின்பு எதற்காகவோ மனதை மாற்றிக் கொண்டு சென்று விட்டார்கள். சில வாகனங்கள் நின்றன. ஒஸ்லோ போக வேண்டும் என்ற போது தாங்கள் ஒஸ்லோ போகவில்லை என்றார்கள். "TS" ஒரு மணித்தியாலம் காவலர்களைப் போல் சளைக்காது வந்த வாகனங்களை எல்லாம் ஓரம் கட்டப் பண்ணினார். கடைசியாக ஒரு வயது போன தம்பதிகள் ஓரம் கட்டப்பட்டனர். ஒஸ்லோ போவதாக ஒத்துக் கொண்டார்கள். தானும் வரமுடியுமா? என்று "TS" கேட்டபோது தாராளமாக என்றனர். ஒரு சிறிய பிரச்சனை. "TS"-சிற்கு முதலில் விழி பிதுங்கியது. அவற்றைத் தடவிக் கொஞ்சுவது எல்லாம் அவர் இயல்பல்ல. அதுவும் தன்னைப் போன்ற ஆத்மா என்பது அவருக்கு அப்போது விளங்காத காலம். அவற்றை அவர்கள் செல்லப் பிள்ளையாகக் கொஞ்சிக் குலாவுவது இவர்கள் வழக்கம். இதையெல்லாம் பார்த்தால் பயணம் ஆகாது.

"TS" பின் ஆசனத்தில் இடம் பிடித்து, அவர்கள் செல்லப் பிராணியான அல்சேசனுடன் ஆசனத்தை பணிவாகப் பகிர்ந்து கொண்டார். தனித்து இருந்தவருக்குத் தனக்கு ஒரு பேச்சு, நக்குத் துணை கிடைத்ததில் ஏகப்பட்ட புளுகம் அதற்கு. அதன் தயவில் அவர் இருந்தும் அது

வாலை நன்கு ஆட்டித் தலையைத் தாழ்த்தி அவரையும் எசமானாக எண்ணி வணக்கம் சொல்லிற்று. பின்பு பாச மிகுதியால் பரிவு கொண்டு அடிக்கடி அவரை நக்கிச் சுத்தமாக முகம் கழுவி விட்டது. அவர் திரும்பி ஊர் பார்ப்பதாகப் பராக்குப் பார்த்த போதும் அது அதீத பாசத்தோடு அவர் பிடரியை நக்கி மகிழ்ந்தது. "TS" இந்த அன்புத் தொல்லையால் நெளிந்தார். கதவைத் திறந்து ஓட முடியாத வேகத்தில் வண்டி தெருவைப் பின் எறிந்து முன்நோக்கிப் பயணித்தது. பாட்டி திரும்பிப் பார்த்துச் சிரித்தார். மாட்டுப்பட்டாயா என்று அவர் கேட்பது போல "TS"சிற்கு அது இருந்தது. எல்லாம் பழக்கமே. பழகிக் கொள்ள வேண்டியதே. என்பதாக "TS" முடிவு செய்து கொண்டார். சிறிது நேரத்தின் பின்பு நீ பிடரியை நக்கினால் என்ன மூஞ்சையை நக்கினால் என்ன என்கின்ற போக்கில் "TS" பின்னுக்குத் தள்ளி ஆசனத்தில் வசதியாக அமர்ந்து கொண்டார். அல்சேசனின் காதல் முடிந்து அது மடி மீது தலை வைத்து விடியும் வரை தூங்கவா என்பது போல அவர் மடியில் உரிமையோடு உறங்கியது. "TS"சின் கை தன்னிச்சையாகவே அதன் தலையைத் தடவியது. அத்தால் அது அவர் மடியில் நிம்மதி கண்டது. உள்ளத்தில் அது அலாதியாக அதன் இணை பற்றிக் கனவு கண்டது.

பயணம் பக்கத்தில் அன்புமிகு துணையோடு தொடர்ந்தது. வாகனங்களும், கட்டடங்களும், வயல்களும் அதற்குப் பயன்படுத்தும் இயந்திரங்களும், என்பதாக எங்கள் நாட்டைவிட நூறு வருடங்கள் தொழில்நுட்பத்தில் முன்னுக்கு நிற்பதான பிரமை "TS"சிற்கு உண்டாகியது. இது தனித்து எண்ணெய் வளத்தால் மட்டும் வந்த முன்னேற்றம் இல்லை என்பதாக அவர் எண்ணிக் கொண்டார். இந்த நாடு ஓரளவு தொழில்நுட்ப முன்னேற்றம் அடைந்த நாடாக இருந்து இருக்க வேண்டும். எண்ணெய் வளமும் சேர்ந்து கொள்ள மிகவும் வசதியான நாடாக மாறிவிட்டது என்று அவர் நினைத்தார்.

அந்தக் கிழவி தனது செல்லப் பிள்ளையை அழகாகத் தூங்க வைத்ததில் "TS" மீது கருணை கொண்டார். அதனால் அவர் "TS"சைப் பார்த்து,

"ஒஸ்லோவில் யாரிடம், எங்கே போகிறீர்கள்?" என்று நோர்வே மொழியில் கேட்டார். "TS"சிற்கு அது விளங்கவில்லை. பின்பு அவர் ஆங்கிலத்திற்கு மாறினார்.

"உல்லவோல் மருத்துவ மனைக்குப் போகிறேன். அங்கு எனது நண்பன் ஒருவன் வேலை செய்கிறான். அங்கு வந்தால் எனக்கு வேலை எடுத்துத் தருவதாகக் கூறி இருக்கிறான்."

"நீங்கள் நோர்வே மொழியைப் படித்தால் வேலை சுலபமாகக் கிடைக்கும்."

"நிச்சயமாக. அதற்கான சந்தர்ப்பம் இன்னும் கிடைக்கவில்லை."

"ஒஸ்லோவில் அப்படியான வசதிகள் இருக்கும்."

"நிச்சயம் நான் கேட்டுப் பார்ப்பேன்."

"உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கின்றனரா?"

"ஆம். ஒரு பெண் குழந்தை இருக்கிறாள்."

"எத்தனை வயது அவளுக்கு?"

"பதின்னான்கு வயதாகிறது."

"மனைவி?"

"மனைவியும் பிள்ளையும் இலங்கையில் வாழ்கிறார்கள்."

"அவர்களுக்குப் பிரச்சனை இல்லையா?"

"பிரச்சனை ஆகத்தான் இருக்கிறது."

"அப்போது அவர்களை ஏன் கூட்டிக் கொண்டு வரவில்லை?"

"நான் திடீரென்று எதிர் பாராத பிரச்சனையாற் புறப்பட வேண்டியது ஆகிற்று. அதனால் அவர்களை அழைத்து வரவில்லை. சிறிது காலத்தில் இங்கு அழைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப் படுகிறேன்."

"அவர்கள் விரைவாக உங்களிடம் வருவார்கள். நீங்கள் நம்பிக்கையாக இருங்கள்."

"நன்றி."

ஒரு எரிபொருள் நிலையத்தில் வாகனத்தை நிறுத்தினார்கள். "TS" வண்டிக்குள் இருந்தார். அந்தக் கிழவி வந்து கதவில் தட்டி "TS"சையும் தங்களோடு வருமாறு

சைகை காட்டினார். "TS" அவர்களோடு சென்றார். அவர்கள் சாப்பிடுவதற்கு ஒவ்வொரு சீஸ்வேர்கர் வாங்கினார்கள். ஒவ்வொரு கோலா எடுத்தார்கள். "TS"சிற்கு அதை வாங்குவதற்குக் கூச்சமாக இருந்தது. அவர்கள் விருப்போடு கொடுப்பதை தட்ட முடியாது வாங்கிக் கொண்டார். "TS"சிற்கு இது புதிதல்ல. மத்திய கிழக்கில் ஏற்கனவே சாப்பிட்டது தான். "TS" அவர்களோடு அந்த எரிபொருள் நிலையத்தில் இருந்து சீஸ்வேர்கரையும் சாப்பிட்டுக் கோலாவையும் குடித்தார். உடம்பில் மீண்டும் நிறையவே சக்தி புகுந்து விட்டதான உசார் வந்தது. "TS" அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறினார். வரும் போது செல்லப் பிராணிக்கும் ஒரு சிஸ்வேர்கர் வாங்கி வந்தார்கள். அதை அந்தக் கிழவர் கையில் பிடித்திருக்க அது கடித்துக் கடித்துச் சாப்பிட்டது. அவரும் அதை விழுந்து விடாதபடி கவனமாகக் காகிதத்தால் சுற்றிப் பிடித்துச் சிறிது சிறிதாக அது கடிப்பதற்காகத் தள்ளித் தள்ளி விட்டார். எல்லோரும் சாப்பிட்டு உடல் உழைவு தீரக் கையைக் காலை நீட்டி மடக்கினர். செல்லப் பிராணி வெளியே சென்று உடலை உதறி அலுப்பு முறித்த பின்பு மீண்டும் வந்து காரில் ஏறியது. அதன் பின்பு மீண்டும் பயணம் தொடங்கியது.

வாகனம் சிறிது தூரம் சென்றதும்,

"இன்னும் ஒரு மணித்தியாலத்தில் ஒஸ்லோ போய் விடலாம்." என்று கூறினார் அந்த மூதாட்டி.

வாகனங்களாலும், மனிதர்களாலும், கட்டடங்களாலும் ஒஸ்லோ ஐரோப்பிய நகர் ஒன்றை "TS"சிற்கு அறிமுகப் படுத்தியது. அது மத்திய கிழக்கைப் போல் இல்லாது வேறு விதமாக இருந்தது. ஐரோப்பிய நகரின் சாயலை எங்கும் காண முடிந்தது. மீண்டும் அவருக்கு இவர்கள் எண்ணெய் பொருளாதாரத்தால் மட்டும் முன்னேறியதான உணர்வு இருக்கவில்லை. எண்ணெய்க்கு முதலும், பின்பும் மாற்றுத் தொழில்களும் இங்கு இருந்து இருக்கின்றன என்று அவர் எண்ணினார். பெரியதொரு கோப்பித் தொழிற்சாலையை கடந்து வாகனம் சென்றது. பின்பு ஒரு பாலத்தால் ஏறி இறங்கி ஒரு பெரிய "Roundabout"இல் திரும்பிச் சென்றார்கள். "TS"சிற்கு எங்கே செல்கிறார்கள் என்று விளங்கவில்லை. இன்னும் சிறிது துரம் சென்றதும் ஒரு பெரிய மின்சமிக்கை வந்தது. அதில் உல்லவோல் என்று எழுதி இருந்ததைப் பார்த்த போது, தன்னை

விடுவதற்காகவே அவர்கள் அங்கு வருகிறார்கள் என்பது அவருக்கு விளங்கியது.

"என்னை ரவுணில் விட்டு இருந்தாலே நான் அவனைத் தொடர்பு கொண்டு வந்து இருப்பேன். உங்களுக்கு வீண் சிரமம்." என்றார் "TS".

"பருவாய் இல்லை. இதில் எங்களுக்குச் சிரமம் ஒன்றும் இல்லை." என்றார் அந்த அம்மையார்.

"மிக்க நன்றி."

"நீங்கள் குடும்பமாக வாழ எங்களது வாழ்த்துக்கள்."

வண்டி உல்லவோல் மருத்துவ மனையை நோக்கிச் சென்றது. அதன் முகப்பில் அவர்கள் வண்டியை நிறுத்த "TS" இறங்கினார். பின்பு தனது பைகளை எடுத்துக் கொண்டு கதவைச் சாத்திவிட்டார். செல்லப் பிராணி சோகமாக அவரைப் பார்த்தது. இனி எப்போது உன்னைப் பார்ப்பேன் என்று அது கேட்பது போல இருந்தது. "TS" மீண்டும் குனிந்து அவர்களுக்கு நன்றி கூறினார். வண்டி மெதுவாகப் புறப்பட்டது. 'நேடற' உல்லவோல் என்று கேட்க வேண்டும் என்பதாகச் சம்பந்தன் போனில் சொல்லி இருந்தான். "எண் என்ன சொன்னான்?" "TS"சிற்கு ஞாபகம் வரவில்லை. பேர்சை எடுத்துப் பார்த்தார். பதினொன்று என்று அதில் அவர் எழுதி வைத்து இருந்தார். "TS"சிற்கு அந்த எண்ணிற்கு எப்படிப் போவது என்று தெரியவில்லை.

சிறிது நேரம் அப்படியே நின்றார். ஒரு இளம் பெண் அவ்வழியால் வந்தாள். அவள் கட்டையாக முள்ளம் பன்றி போல முடியை மாற்றி வைத்து இருந்தாள். அது எண்ணெய் கறுப்பாய் மினுமினுக்கும் தலைமுடி. நீண்ட கழுத்தில் ஒரு நீல மணிமாலை. நீலக் காற்சட்டையும் வெள்ளைக் கம்பளி மேற்சட்டையும் அணிந்து இருந்தாள். பழுப்பு நிறக் கண்களின் உள் மணி கறுப்பாகப் பெரிதாகத் தெரிந்தது. உதடு மென் சிகப்பு சாயத்தால் தேன் முறுக்காக மாறி இருந்தது. அவளது கண்ணில் நிறைந்திருந்த நோண்டல். "TS" அவளை விட விரும்பவில்லை.

"மன்னிக்க வேண்டும். நேடற உல்லவோலுக்கு எப்பிடிப் போவது?"

"ஓ... நான் ஒஸ்லோவிற்குப் புதியவள். எனக்கும் இடம் தெரியாது."

"ரெலிபோன் எங்கே இருக்கிறது?"

"என்னோடு வாருங்கள் காட்டுகிறேன்." என்றாள் அவள்.

அவள் வழிகாட்டுவதாய் முன்னே நடந்தாள். அவள் பின்னே "TS" நடந்தார். தொலைபேசியைக் காட்டிய பின்பு அவள் புறப்பட்டாள்.

"உங்கள் உதவிக்கு நன்றி." என்றார் "TS".

"பருவாய் இல்லை." என்றுவிட்டு அவள் விரைவாகச் சென்றாள்.

"TS" தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மறு முனை கர கரப்புடன் உயிர் பெற்றுக் கொண்டது.

"கலோ நான் "TS". சம்பந்தன் நிற்கிறாரா?"

"இல்லை அவர் வெளியில போயிட்டார். நீங்கள் வந்தாக் கூட்டி வந்து தங்க வைக்கச் சொன்னவர். நீங்கள் இப்ப எங்க நிக்கிறியள்?"

"TS" தான் நிற்கும் இடத்தைக் கூறினார். அவருக்கு அந்த இடம் தெரிந்து இருந்தது. தான் அங்கு வருவதாகக் கூறிவிட்டுத் தொலைபேசியைத் துண்டித்தார். "TS" பத்து நிமிடம் காத்திருக்க வேண்டியது ஆகிற்று. பூபாலன் வந்தான். அவன் ஒல்லியாக ஆறு அடிக்கு வளர்ந்திருந்தான். அடர்த்தியான சுருட்டை முடி. ஆர்வத்தோடு துருவும் அவன் ஆழம் பார்க்கும் கண்கள். நீல நிறக் காற்சட்டையும் நீல மேலங்கியும் அணிந்திருந்தான். அவசரம் இல்லாத அலாதியான நடை. "TS" பையோடு நிற்பதைக் கண்டுவிட்டுச் சிரித்துக் கொண்டு வந்தான்.

"நீங்கள் தானே "TS" அண்ணை?" என்றான்.

"ம்."

"நான் பூபாலன்."

இருவரும் கைகளைப் பற்றிக் குலுக்கிக் கொண்டார்கள். அவன் "TS"சின் பை ஒன்றை வாங்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினான். ஒரு சிறிய வெளி வந்தது. அதையடுத்து

மூன்று பெட்டிகளை ஒன்றோடு ஒன்று மூட்டியது போன்று மூன்று அடுக்குமாடிக் கட்டடங்கள் வந்தன. இந்த மூன்றும் யாரால் திட்டம் இடப்பட்டது என்பது அவருக்கு விளங்கவில்லை. சிக்கனத்தைப் பற்றி அதிகம் சிந்தித்து இருப்பார்கள் என்று அவருக்குத் தோன்றியது. கட்டடம் தனக்கு வயது வந்து விட்டதாக எண்ணெய் பூசாத தோல் போன்ற புறக் கோலத்தால் மௌனமாகச் சொல்லியது. மஞ்சள் நிறத்தில் உருக்குலைந்த பூச்சு எங்கும் தடித்த பாம்புச் செட்டையாகத் தொங்கியது. "TS" சாளரங்களை எண்ணிப் பார்த்தார். பத்து மாடிகள் இருந்தன. ஒவ்வொரு பெட்டிக்கு உள்ளும் நிறைய அறைகள் இருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார்.

"அண்ணைக்குச் சம்பந்தனைக் கன காலமாய் தெரியுமா?"

"ஓ ஊரில பழக்கம். இப்ப எப்பிடி இருக்கிறான்?"

"பருவாய் இல்லை. ஆஸ்பத்திரி வேலை பிரச்சனை இல்லை. அது இப்ப நிரந்தரம் ஆகீட்டுது. இவரை ஒரு பகுதிக்குப் பொறுப்பாளரா விட்டிருக்கினம். உங்களைப் புகுத்திறதில அவருக்கு ஒண்டும் பிரச்சனை இருக்காது."

"வேறையும் சில பெடியள் அங்க முகாமில இருக்கிறாங்கள். அவங்களுக்கும் ஏதாவது எடுத்துக் குடுக்கோணும்."

"ஒரேயடியா எல்லாரையும் புகுத்த ஏலாது. கொஞ்சம் கொஞ்சமா றை பண்ணலாம். சம்பந்தனைக் கேட்டுப் பாருங்க."

"மற்றும்படி சம்பந்தன் பாடு எப்பிடி?"

"அவருக்கு என்ன? முதல்ல வேலை... பிறகு பின்னேரம் வந்து ஒரு வியர் அடிப்பார். சாப்பிடுவார். ரீவி பார்ப்பார். நாள் சுருக்காப் போயிடும்."

"ம்."

"அவருக்குக் கலியாணம் பேசுப் படுகுது எண்டு சொன்னார். கலியாணம் எண்டா இனி ஏதும் 'பிளாற்' பார்த்துக் கொண்டு தனியாகப் போக வேண்டி வரும் எண்டும் சொன்னார். ஆனால் இன்னும் பாஸ்போட் தர இல்லைத் தானே? அது வரைக்கும் எல்லாரும் பொறுக்கத்தான் வேணும்."

இந்தக் கட்டடத்தை முதுமை மூர்க்கமாகப் பற்றிக் கொண்டதா? அல்லது கவனிப்பார் அற்று முதுமையாகத் தெரிகிறதா? என்பது "TS"சிற்கு மீண்டும் பிடிபடாத குடைச்சலாக மனதிற்குள். இன்னும் கொஞ்சம் இதைக் கவனித்து இருக்கலாம் என்றே அவருக்குத் தோன்றியது. கதைத்துக் கதைத்து கட்டடத்தின் அருகே வந்தாகிற்று. பூபாலன் கதவைத் திறந்து உள்ளே போனதும்,

"அண்ணை கடிதம் பார்த்துக் கொண்டு போவமே? நான் இண்டைக்குக் கடிதம் பார்க்கவே இல்லை. சம்பந்தன் பார்த்தானோ தெரியாது. எதுக்கும் ஒருக்காப் பார்த்துக் கொண்டு போனா நல்லது." என்றான்.

"அதுக்கு என்ன பார்த்திட்டுப் போவம்." என்றார் "TS".

அந்த அறைக்குள் நிரையாகச் சிறிய தபாற் பெட்டிகள் வீட்டு எண்களுக்கு ஏற்ப இருந்தன. தங்களது எண்ணைப் பார்த்துப் பூபாலன் தபாற் பெட்டியைத் திறந்து இரண்டு கடிதங்களை எடுத்துக் கொண்டான். அதில் ஒன்று வெள்ளையாக இருந்தது. அடுத்தது நீலமாக இருந்தது.

"வீட்டில இருந்து கடிதம் வந்திருக்குது." என்றான் நீலக் கடிதத்தைப் பார்த்து. அவன் அப்படிச் சொல்லும் போதே அவன் முகத்தில் சிறிது பொறுப்பும், துக்கமும் ஓடியது. அவனது துன்பத்தை ஏன் கிளறுவான் என்கின்ற எண்ணத்தில் "TS" அதைப் பற்றி அவனிடம் மேற் கொண்டு எதுவும் கேட்கவில்லை. கடிதம் எடுத்த பின்பு பாரம் தூக்கி இருக்கும் இடத்திற்கு வந்தார்கள். அதன் தோற்றமும் எண்ணெய் காணாத முதியவரின் தோற்றத்தில் இருந்தது. அதற்குள் ஏறிய பின்பு எட்டு என்கின்ற எண்ணைப் பூபாலன் அழுத்தினான். எட்டாவது மாடியில் அவர்கள் குடியிருப்பது "TS"சிற்கு விளங்கியது. "TS" அமைதி காத்தார். பூபாலன் கடித நினைவில் இருந்து விடுபட்டுத் தானாகவே கதைக்கத் தொடங்கினான்.

"நாங்கள் எட்டாவது மாடியில இருக்கிறம். பிரச்சனை என்ன எண்டால் ஏதும் பயர் அலார்ம் போனா எட்டு மாடி இறங்கி வர வேணும். அந்த நேரத்தில லிப்ற்றில ஏற இயலாது. லிப்ற் ஏதும் பிரச்சனையானால் எட்டு மாடி ஏறிப் போக குடல் வெளியால வந்திடும்."

"மாடி வீட்டு வாழ்க்கையிலும் அசௌகரியங்கள் இருக்கத்தான் செய்யுது."

"வடிவான வீடுகள் எல்லாம் இருக்குது. இதைப் பெரிசா கவனிக்காமல் விட்டிட்டாங்கள்."

"அது பார்க்கவே தெரியுது."

"ஆனா... வாடகை குறைவு. நாங்கள் எக்ஸ்றாவாயும் இருக்கிறம். அதுக்கும் இது வசதி." என்றான் பூபாலன்.

பூபாலன் கதவைத் திறந்தான். சோற்று மணம் நாசியை நிறைத்து வயிற்றில் அமிலத்தை நெருப்பாகச் சுரந்தது. அந்த அறை ஒரு பதினைந்து சதுர மீற்ரர் இருக்கும். சோபா வைக்கும் அளவிற்கு ஒரு கோல். அங்கு ஒரு மஞ்சள் நிறச் சோபா இருந்தது. சோபாவிற்கு முன்பு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று சில்லுப் பூட்டிய தாங்கியில் குந்தி இருந்தது. சிறிய "Cassette player" ஒன்று சாளரத்தின் ஓரத்தில். பகலில் சோபாவாக இருப்பது இரவில் கட்டிலாக மாறும். இரண்டு பேர் அந்தக் கட்டிலில் படுத்துக் கொள்ளலாம். தரையில் மூன்று பேர் படுத்துக் கொள்ளலாம். இரவில் படுக்கும் போது காலதர் திறந்து இருக்க வேண்டும். இல்லா விட்டால் மனிதர் வெளியேற்றும் கரியமில வாயுவில் மனிதர்களே மயங்க நேரிடலாம். ஒரு ஆள் நிற்கும் அளவிற்குச் சமையல் அறை ஒரு ஓரத்தில். அது கிழப் பருவத்தின் கடைசிக் காலத்தின் இழுப்பில். ஒரு சிறிய குளியல் அறையும் அதற்குள் கழிப்பிடமும். இந்த நாட்டவர்கள் இதற்குள் ஆகக்கூடியது இரண்டு பேர் வாழ்வார்கள். தமிழர்கள் சமாளித்து ஆறு பேர் வாழலாம். ஆறு பேரும் ஒரே நேரத்தில் அறையில் நிற்பதற்கோ தூங்குவதற்கோ சந்தர்ப்பம் இருக்காது. இரவில் வேலை செய்பவர்களும் உண்டு. ஒருவன் தூங்கும் போது இன்னொருவன் வேலைக்குப் போவான். இன்னொருவன் தூங்கும் போது மற்றவன் வேலைக்குப் போவான். ஐரோப்பிய வாழ்வின் ஓட்டம் அது.

சோற்று மணமும் இறைச்சிக் கறியின் வாசமும் வயிற்றை மீண்டும் மீண்டும் எரியூட்டி விட்டது. பசிக்கிறது என்று கேட்பதற்கு "TS"சின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. பசிக்கிறதா என்று பூபாலனும் கேட்கவில்லை. கேட்டு இருந்தால் அவசரமாக ஆம் என்று இருப்பார். மனிதன் இருப்பதை மறவாது ஞாபகப்படுத்தும் ஓமகுண்டத்தின் ஆகுதிக்கு அர்ப்பணம் விழுந்து இருந்தால் சாந்தி பெற்று இருப்பார். "TS" பைகளை வைத்து விட்டுச் சோபாவில் இருந்தார். பூபாலன் அந்தப் பைகளைச் சோபாவின் கீழ்

தள்ளி விட்டான். பின்பு தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கினான்.

"சிங்கப்பூர் பாட்டுக் கொப்பி இருக்குது பார்க்கப் போறியளே?" என்றான் பூபாலன். "போடும் பார்ப்பம்." என்று கூறிய போதே தொலைபேசி சிணுங்கியது. பூபாலன் எடுத்துக் கதைத்தான். பின்பு "TS"சைப் பார்த்து,

"இன்னும் ஐஞ்சு நிமிசத்தில வந்திடுவாராம்." என்றான்.

"சரி அப்ப அதுவரைக்கும் பாட்டுப் பார்ப்பம்." என்றார் "TS".

சிங்கப்பூர்த் தமிழர்கள் அப்போது அரை குறை ஐரோப்பியர்கள் போலத் தோன்றினார்கள். இவர்கள் வாரிசுகள் முற்றும் கறுப்பு ஐரோப்பியர்கள் போலத் தோற்றம் அளிப்பார்கள் என்று "TS" நினைத்தார். எங்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளும் இப்படியாக முகவரியைத் தொலைக்கும் நாள் வரும் என்பது அவருக்கு அப்போது விளங்கியது. முகவரியைத் தொலைக்கும் நாள் வரும் என்பதற்காக அவர்களை இங்கு எடுக்காமல் இருக்க முடியாது. அவர்களை இங்கு எடுக்காமல் விட்டால் அவர்களின் இருப்பே கேள்விக்குறி ஆகிவிடும். யுத்தம் என்பது கோரமாக நரனை நரன் நரவேட்டை ஆடுவது. அதில் யார் பாவி, அப்பாவி என்று சாவுக்குத் தெரியாது. அதில் பாவ புண்ணியம் யாராலும் பார்க்கப்படுவது இல்லை. பெடியள் எல்லைப் புறத்தில் செய்வது அநியாயமாக இருக்கலாம். இலங்கை இராணுவம் எங்கள் தேசத்தில் நடத்துவது அதைவிட அநியாயம். அதுவே யுத்தம். தயவு தாட்சண்ணியம் அற்ற நர வேட்டையின் குருட்டுத் தாண்டவம். அதன் விளை பொருள் இரத்த வெள்ளத்தில் மிதக்கும் பிணங்களே. அதை எவ்வளவு உன்னதமாகச் செய்கிறார்களோ அவர்கள் யுத்தத்தில் வெல்லுகிறார்கள். அழிபவர்கள் தோற்கிறார்கள். வெல்வதும் தோற்பதுமாக அழிந்து போகும் எம் இனத்திற்கு ஒரு நாள் விடிவு வர வேண்டும். அது விரைவாக வர வேண்டும்.

"என்ன அண்ணை ரீவி பாக்கிறியளோ இல்லாட்டி ஏதோ கனவு காணுறியளோ?"

"இப்படித்தான் மனசு இடைக்கிடை எங்கையும் கூட்டை விட்டுப் பாஞ்சிடும்."

"இந்தச் சிங்கப்பூர் பெட்டையள் மேக்கப்பில நல்ல வடிவா இருக்கிறாளவை. கறுப்பையும் மேக்கப் வடிவாக்குது."

"உம்மடை கண்ணுக்கு அப்பிடியே தெரியுது?"

"ஏன் அண்ண அப்ப அவளவையின்ரை தோற்றம் முற்றுமாய் பொய் எண்டுறியளா?"

"ஆள் பாதி ஆடை பாதி எண்டுவினம். அது இவைக்கு நல்லாப் பொருந்தும். மேக்கப் இல்லாமல் பார்க்க வேணும். அப்பதான் உண்மை தெரியும். யாழ்ப்பாணத்தாளவை மேக்கப் போடுகிறேல்லை? மிஞ்சிப் போனாப் பவுடரைப் பூசுவாளவை."

"ஐயோ அண்ணை இப்ப யாழ்ப்பாணத்திலையும் மேக்கப் போடத் தொடங்கீட்டினம். உந்தப் பிரச்சனை இல்லாட்டி அவையின்ரை முன்னேற்றம் அடங்காப்பிடாரி நாடகத்தில வாற கதாப்பாத்திரத்தையும் மிஞ்சி இருக்கும். அப்பிடி எல்லாம் செய்ய முடியாத பயத்தில இப்ப எல்லாரும் அடக்கி வாசிக்கினம்."

"நீ சொல்லுகிறதிலையும் உண்மை இருக்குது."

"பெம்பிளையள் எங்கை எண்டாலும் மேக்கப் செய்யாமல் வெளிக்கிடுகிறது குறைவு தானே? இவ்வளவையைப் பாருங்க. எப்பிடி மேக்கப் பண்ணுகினம். வேலை தொடக்கம் எல்லாத்துக்கும் மேக்கப் பண்ணிக் கொண்டுதானே போகினம்."

"வசதி வந்தால் அது கலாச்சாரத்தை நிச்சயமா அதுக்கேத்த மாதிரி மாத்தும். நீர் சொல்ல வாறமாதிரி யாழ்ப்பாணத்திலும் வசதி வரவர இப்பிடித்தான் இருக்கும்."

"மேக்கப் போட்டு வடிவாகிறதுக்கும் ஒரு அஸ்திவாரம் இருக்கத் தானே வேணும்? அதே நேரம் யாழ்ப்பாணத்தில மேக்கப் போடாமலும் திரும்பிப் பார்க்க வைக்கிற அழகிகளும் இருக்கினம்."

"உண்மை தான்."

அழைப்பு மணி அடித்தது. பூபாலன் பாய்ந்து சென்று கதவைத் திறந்தான். சம்பந்தன் இரண்டு பைகளோடு உள்ளே வந்த படியே,

"சொறி அண்ணை. கெதியா வந்திடலாம் எண்டு நினைச்சன். கொஞ்சம் சுணங்கிப் போச்சுது." என்றான்.

ஊரில் சம்பந்தன் வாடிய பயிராட்டம் நோஞ்சானாக, குள்ளமாய் இருப்பான். இப்போது அவனைப் பார்க்க வியப்பாக இருந்தது. ஊரில் இருந்ததைவிட மூன்று சுற்றுப் பருத்து இருந்தான். அதே கறுப்புத் தோல். இருந்தாலும் அது இங்கே குளிர் பட்டு இப்போது மினுங்குவதாய் "TS"சிற்குத் தோன்றியது. கட்டையாக முடியை வெட்டி இருந்தான். நீல காற்சட்டையும் கறுப்பு மேலங்கியும் அணிந்து இருந்தான். விலை உயர்ந்த பாதணிகள் காலில். அவன் உடை விடயத்தில் மிகவும் அக்கறை எடுத்துக் கொள்வான். அதை இங்கும் தொடர்கிறான் என்பது "TS"சிற்கு விளங்கியது.

"ஆளுக்கு ஒரு வியர் எடுத்திட்டுச் சாப்பிடுவமே?"

"இப்ப நான் குடிக்கிறேல்லை. நீங்க குடியுங்க." என்றார் "TS".

"கொம்பனிக்கா ஒரு பியர் சும்மா எடுங்க அண்ணை. அப்பதான் கலகலப்பாய் இருக்கும்."

அவன் ஒரு பியரைத் திறந்து "TS" கையில் திணித்தான். "TS" அதை மனது இல்லாது வாங்கிக் கொண்டார். ஒரு வியர் அடித்துவிட்டுச் சாப்பிட்டால் ஒன்றும் இல்லை. ஒன்று எடுத்தால் மற்றொன்று கேட்பது அதன் குணம். அத்தால் அதைத் தொடுவது இல்லை என்று விட்டிருந்தார். சம்பந்தனும் வற்புறுத்துகிறான். மனதும் ஒரு பியர் தானே என்றது. பசிக்கும் ஒரு முடிவுகட்ட வேண்டும் என்பதால் "TS" அதை அருந்துவதற்குத் தயாரானார்.

சாப்பாடு பரிமாறினார்கள். 'கொண்ஸ்' எனப்படும் முற்றிய கோழியுடன் உருளைக்கிழங்கும் போட்டுக் குளம்பு வைத்து இருந்தார்கள். அத்தோடு கீரைக் கறியும் இருந்தது. பசிக்கும், பியரின் கீறலுக்கும் சாப்பாடு அமிர்தமாய் "TS"சிற்கு சுவைத்தது. முற்றிய கோழி ஆகையால் சவ்வும், முற்றிய நாருமாக பல்லிடுக்கிற்குள் அகப்பட்டுத் தொந்தரவு கொடுத்தன. இருந்த பசிக்கு அவை ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. "TS" சாப்பிட்டு முடித்ததும் பல்லுக் குற்றுவதற்குக் குச்சி கேட்டார். சம்பந்தன் குச்சியை எடுத்துக் கொடுத்து விட்டு,

"கொண்ஸ் எண்டா இருபது குரோண். சில்லிங் எண்டா நாற்பது குரோண். கொண்ஸ்சைத் தானே ஊரில சேவல் எண்டு வெட்டி வதக்கி ருசிச்சம். இங்கையும் அதைத் தொடருறம். அதோடை இது கொள்ளை மலிவு. கோழி இறைச்சி சாப்பிட்ட ரேஸ்ற்ரையும் அனுபவிக்கிறம். என்ன...? இந்தப் பல்லுக்க தான் சவ்வு சிக்கும்... கொஞ்சம் குச்சியை விட்டுக் குடைய வேணும். இல்லாட்டி இவங்களை மாதிரி அரைச்ச இறைச்சியில கறி வைக்கலாம். எங்களுக்கு அது ரேஸ்ற்றா இருக்காது. நாங்கள் சாப்பாட்டிலையும் மிச்சம் பிடிச்சு ஊருக்கு அனுப்புகிறதைத் தவிர்க்க முடியாது. எங்களை நம்பி இருக்கிற சனம் எந்தப் பக்கம் ஓடுதுகளோ, என்ன சாப்பிடுகுதுகளோ எண்டுகிறதை நினைச்சா, எங்களால இதை மட்டும்தான் செய்ய முடியுது எண்டு கவலையா இருக்குது."

"கொண்ஸ்சோ, கோழியோ நல்ல சாப்பாடு. அமிர்தம் மாதிரி இருந்திச்சுது. வெளிநாடுகளில வேலை செய்து காசு அனுப்புகிற காரியம் இப்படித்தான். வாயக் கட்டி வயித்தக் கட்டித்தான் செய்ய முடியும். சிலவேளை அந்தத் தியாகத்தை, இழப்புகளைச் சிலரால முழுமையா விளங்கிக் கொள்ள முடியாமல் போயிடும்." என்றான் சம்பந்தன்.

2 வேலை

சம்பந்தன் நினைத்தது போல வைத்தியசாலையில் கழுவும் வேலையை உடனடியாக அவனால் "TS"சிற்கு எடுத்துக் கொடுக்க முடியவில்லை. உயர் அதிகாரியோடு அதைப் பற்றிக் கதைத்த போது முதலில் அவர் வேலை பற்றி வைத்தியசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் விளம்பரப் படுத்த வேண்டும் என்று கூறினார். அதன் பின்பு நேர்முகப் பரீட்சை, வேலைத் தெரிவு என்கின்ற படி முறைகளை மீற முடியாது என்றும் அவர் தெரிவித்தார். அதற்குக் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகும் என்பது சம்பந்தனுக்குத் தெரியும். அது வரைக்கும் "TS" என்ன செய்வார் என்பது பெரும் தலையிடி ஆகியது. பத்திரிக்கைகளை எடுத்து விளம்பரங்களைப் பார்த்தனர்.

லேனா என்கின்ற துப்பரவு செய்யும் நிறுவனம் தங்களிடம் வேலை இருப்பதாக அறிவித்து இருந்தது. சம்பந்தன் அவர்களோடு நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். அடுத்த நாள் பத்து மணிக்குத் தங்களை அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு அவர்கள் கூறினார்கள்.

அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்கே சம்பந்தனும், "TS"சும் புறப்பட்டு ‘நீடாலன்’ என்கின்ற இடத்தில் இருந்த அவர்கள் அலுவலகத்திற்குச் சென்றார்கள். அந்த இடம் ஒஸ்லோவின் மேற்குப் பக்கத்தில் உள்ளது. ஒஸ்லோவின் கிழக்குப் பக்கத்திற்கும் மேற்குப் பக்கத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு என்று "TS" கேள்விப்பட்டு இருந்தார். ஆனால் இவர்கள் இருப்பது மேற்குப் பகுதியாக இருந்தும் அவர்களது குடியிருப்பு அப்படி அல்ல என்பதும் அவருக்குத் தெரியும். அது கவனிப்பார் அற்ற அரச குடியிருப்பு. மேற்கும் கிழக்கும் இரண்டு துருவங்கள் போன்ற வேறுபாட்டை தம்மகத்தே கொண்டவை. ஒரு துப்பரவுப் பணி செய்யும் நிறுவனம் இந்தப் பகுதியில் அலுவலகம் வைத்து இருப்பது சற்று வித்தியாசம் ஆகத்தான் சம்பந்தனுக்குத் தோன்றியது. இந்தப் பகுதிகளில் பணக்கார நிறுவனங்களே தமது அலுவலகங்களை வைத்து இருப்பார்கள். இந்தப் பகுதியில் வாழ்பவர்கள் கல்வி அறிவு கூடியவர்களாக, வாழ்க்கைத் தரம், சராசரி வருமானம், வாழும் வயது போன்றவை கூடியவர்கள் ஆகவும் இருப்பார்கள் என்கின்ற கணிப்பும் உண்டு. ஒஸ்லோவின் சொற்கமாக மேற்குப் பகுதியும், ஒஸ்லோவின் மூன்றாம் மண்டலமாக கிழக்குப் பகுதியும் பார்க்கப் படுகிறது. கிழக்குப் பகுதியில் குறைந்த ஆயுளை உடைய, குறைந்த வருமானம் கொண்ட, கல்வி அறிவு குறைந்த என்பதாக அபிவிருத்தி வரிசையாகத் தேவைப்படும் மக்கள் வாழும் பகுதியாக கணிப்புக்கள் உண்டு.

அவர்கள் அலுவலகம் ஒரு நவீனமான நாலடுக்குக் கண்ணாடிக் கட்டடத்திற்கு உள்ளே இருந்தது. அதன் வாசலில் சுற்றும் கதவு ஞானப் பழத்தை ஞாபகப் படுத்துவதாய் சுழன்றது. அதற்குள் இருவரும் புகுந்து முழுவதும் சுற்றி ஞானப்பழம் பெறாது உள்ளே சென்றார்கள்.

இவர்கள் இருக்கும் குடிமனைக்கும் இந்த அலுவலகத்திற்கும் சொற்கத்திற்கும் நரகத்திற்குமான

வித்தியாசத்தை "TS"சால் அவதானிக்க முடிந்தது. மிகவும் அழகாக, அழுத்தமாக, பொருத்தமாக மினுமினுக்கும் கட்டுடற் கன்னியின் அழகைக் கட்டடத்தில் புகுத்தி வடிவமைக்கப்பட்ட தேர்ச்சி. "TS" இப்படிப் பார்த்து இருந்தாலும் இது அவருக்கு வியப்பாக இருந்தது. அந்தக் கட்டடத்தின் உள்ளே வரவேற்பு அறைக்கு முன்பு எந்தெந்த நிறுவனம் எங்கெங்கே இருக்கிறது என்கின்ற விவரப் பலகை இருந்தது. நாலாவது மாடியில் லேனா அலுவலகம் இருப்பதாக ஏற்கனவே சம்பந்தன் அறிந்து வைத்து இருந்தாலும் அதை ஒரு முறை அந்த விவரப் பலகையில் பார்த்து உறுதிப் படுத்தினான்.

நாலாவது மாடிக்குச் செல்வதற்குப் பாரம் தூக்கி இருந்தது. இருவரும் பாரம் தூக்கியில் ஏறி நாலாவது மாடிக்குச் சென்றார்கள். அழைப்பு மணியை அழுத்திவிட்டு நின்ற போது ஒரு ஆண் வந்தார். அவருக்கு நாற்பது வயது இருக்கும். கறுப்புக் கண். கறுப்பாகத் தாடியும், மீசையும் இருக்க, அதைக் கட்டையாக வெட்டித் தாடியோடு மீசைக்கு உறவுப் பாலம் ஏற்படுத்தி இருந்தார். பரந்த முகம். சாந்தமான கண்கள். அதில் என்ன என்கின்ற வினாவின் தொக்கு.

"நான் நேற்றுப் போன் பண்ணி இருந்தேன். அதுக்கு நீங்கள் வரச்சொல்லி இருந்தீர்கள்."

"ஓ சம்பந்... இல்லையா?"

"நீங்கள் நன்றாகவே ஞாபகம் வைத்திருக்கிறீர்கள். இவர் "TS"."

"தவசீலன். "TS" என்றும் கூப்பிடுவார்கள்."

"வாங்க... உள்ள வாங்க..."

அவர் கூட்டிச் சென்று உள்ளே ஒரு அறையில் இருக்கவிட்டார். குளிர் இங்கு அதிகமாக இருந்தாலும் பலர் துப்பரவு கருதி நிலத்திற்குக் கம்பளம் பதிப்பது இல்லை. கம்பளத்தைத் துப்பரவு செய்வது கடினமாக இருப்பதோடு அது அதிக அளவு தூசியையும், மணத்தையும் பதுக்கி வைத்துக் கொள்ளும். 'பாக்கேற்' என்கின்ற மரத்தரை வழுவழுப்பாகத் துப்பரவு செய்வதற்கு இலகுவாக இருப்பதோடு, பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். உள்ளே வரும் போது தெற்குப் பக்கமாக அவரது அலுவலகம் இருந்தது. கறுப்பாக, இரண்டு

செங்கல்லை ஒன்றாக வைத்த அளவில் ஒரு அலைபேசி அவர் மேசையில் கிடந்தது. அதைவிடப் பெரிய மடிக்கணினிகளைப் போன்ற அலைபேசியை மருத்துவர்கள் கொண்டு திரிவதாகச் சம்பந்தன் "TS"சிடம் கூறி இருந்தான். "TS" அப்படியானவற்றைத் தான் ஏற்கனவே பார்த்து விட்டேன் என்று அவனுக்கு திருப்பிப் பதில் அளிக்கவில்லை. இவர்கள் எண்ணெய் காசை செலவழிப்பதைவிட மத்திய கிழக்கில் அள்ளி வீசுவதால் அங்கு எல்லாப் புதுமைகளும் முதலில் வந்து விடுகின்றன.

அவரது அறையைவிட ஐந்து அறைகளில் அலுவலர்கள் இருந்து வேலை செய்தார்கள். அதைவிட ஒரு பெரிய அறையில் துப்பரவு செய்வதற்குத் தேவைப்படும் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. அதற்குள் துப்பரவு செய்வதற்குப் பாவிக்கும் சில இயந்திரங்களும் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

அந்த அதிகாரி மீண்டும் கோப்பி பிளாஸ்க் உடனும், கடதாசிக் குவளைகள் உடனும் வந்தார். இவர்களைப் பார்த்து,

"கபே?" என்றார்.

"நன்றி." என்றான் சம்பந்தன்.

"உங்களுக்கு வேண்டுமா?" என்று "TS"சைப் பார்த்து மீண்டும் கேட்டார். "TS" அதைக் குடிப்பதற்குத் தயாரான நிலையில்,

"நன்றி." என்றார். எல்லோருக்கும் கோப்பி பரிமாறிய பின்பு அவர் பேசத் தொடங்கினார். அவர் தாங்கள் அதிகமாக அலுவலகங்கள், கடைகள் போன்றவற்றை அவை மூடிய பின்பு சுத்தம் செய்வதாகவும், அதற்குப் பொறுப்பாகப் பின்னேரங்களில் வேலை செய்யக் கூடிய பணியாளர்கள் வேண்டும் என்பதோடு, வாகனங்கள் ஓட்டத் தெரிந்தால் அது மிகவும் அனுகூலமாய் இருக்கும் என்றார். அத்தோடு தாங்கள் ஐம்பத்து இரண்டு குரோணர்கள் மணித்தியாலத்திற்குச் சம்பளமாக கொடுப்பதாகக் கூறியதோடு ஒவ்வொரு இடத்தைச் சுத்தம் செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்கள் கொடுக்கப்படும் என்பதாகவும், அதற்குள் அந்த வேலையைச் செய்து முடித்துவிட வேண்டும் எனவும் கூறினார். சில வேளை வேறு அதிகாரிகள் வந்து வேலை ஒழுங்காகச் செய்யப்பட்டு இருக்கிறதா எனப் பரிசோதித்துப்

பார்ப்பார்கள் என்பதையும் அவர் கூறினார். ஒரு இடத்தின் சாவியைத் தந்து உங்களை வேலை செய்ய விடுவதால் நம்பகமாக நடந்துகொள்ள வேண்டும் என்றார். மிகவும் இரகசியம் காக்கப்பட வேண்டிய அலுவலகங்களிலும் வேலை செய்ய வேண்டி வரும் என்பதாகவும், அப்படியான அலுவலகங்களில் இருந்து எந்த இரகசியங்களும் கசிவதற்கு நாங்கள் ஏதுவாய் இருக்கக் கூடாது எனவும் விளங்கப் படுத்தினார். அதைவிட அந்த அலுவலகங்களின் அலார்ம்களை எப்படி நிறுத்துவது பின்பு அதை எப்படிச் செயற்படச் செய்வது என்பதை நுணுக்கமாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அதன் பின்பு வேலை நுணுக்கங்களைப் பற்றி விளங்கப்படுத்தி விட்டு அதற்கான பயிற்சி தரப்படும் என்றும் கூறினார்.

நாளை எட்டுமணிக்கு அலுவலகத்திற்கு "TS"சை வருமாறு கூறி விடை கொடுத்து அனுப்பினார்.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்த போது,

"நொக்கிள் வேலை நல்லது தான். எப்ப தொடங்கி எப்ப முடிக்கிறது எண்டது உங்கடை சுதந்திரம். உங்கடை வேலையை ஒருத்தரும் பார்த்துக் கொண்டு நிற்க மாட்டாங்கள். ஆரும் கொம்பிளையின் பண்ணினாத்தான் வந்து பார்ப்பாங்கள். எங்கடை வேலையள் அப்பிடி இல்லை. வேலை இல்லாட்டியும் அங்க நிண்டு துாங்க வேணும். ஆனா எங்களுக்கு வேலையில முறிவு குறைவு எண்டதும் உண்மை. உங்களையும் அதுக்க புகுத்த வேணும் எண்டு ஆசைப்பட்டன். நாள் எடுக்கும் எண்டுகிறாங்கள்."

"கவலைப்படாதையும் சம்பந்தன். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். நான் நிறைய இடங்கள்ள வேலை செய்து இருக்கிறன். இங்க சமாளிக்கிறது ஒரு விஷயமே? நான் வேற பெடியளையும் இங்க எடுக்க வேணும். இப்பிடியான பிறைவேற் கொம்பனிகள் அதுக்கு வசதியாய் இருக்கும். இங்க ஒரு வீடு எடுத்தா நல்லது. அங்க 'பொசைமில' இருக்கிற பெடியளை இங்க கூப்பிட வேணும். தனியா இருந்தால் பைத்தியம் ஆகிப் போவாங்கள். வேலை இருந்தால் நாள் போகிறது தெரியாமல் அவங்கடை காலம் போகும். நிமலன் எண்டு ஒரு சின்னப் பெடியன். அவனுக்குப் படிக்கிற வயது. ஆனால் படிக்கிறதில விருப்பம் இருக்கிற மாதிரித் தெரிய இல்லை.

எல்லாருக்கும் வந்த காசைப் பிடிக்க வேணும் எண்ட நினைப்பு. அதால வேலை செய்யோணும் எண்டது தான் முக்கிய நோக்கமாக இருக்குது." என்றார் "TS".

"உங்களுக்கு வேலை நிரந்தரம் எண்டு எழுதித் தந்தால் வீடு வாடகைக்கு எடுக்கலாம். வீடு எடுத்தால் அவங்களை இங்க கூப்பிடலாம். பிறகு உங்க பார்த்துப் பார்த்து நுளைச்சு விடலாம்." என்றான் சம்பந்தன்.

"அதுதான் என்ரை விருப்பமும்." என்றார் "TS".

மீண்டும் இருவரும் சிகப்பு நிற அட்டை போன்ற "Mercedes-Benz" பேருந்தில் ஏறி ஒஸ்லோ மையத்திற்கு வந்தார்கள். 'குன்னாறியுஸ்' என்னும் அங்காடிக்கு முன்பு இறங்கி அங்கிருந்து "Tram" எடுத்து உலவோல் செல்வதாகத் திட்டம். குன்னாறியுசிற்கு சற்றுத் தள்ளி அதே தெருவில் துருக்கிக்காரனின் கடை ஒன்று இருந்தது. இருவரும் நடந்து அந்தக் கடைக்குச் சென்றார்கள்.

துருக்கிக்காரரும், பாகிஸ்தான்காரரும், வியட்நாம்காரரும் மட்டுமே ஒஸ்லோவில் அப்போது கடைகள் வைத்திருந்த வெளிநாட்டவர்கள் ஆவார்கள். பாகிஸ்தான்காரர்கள் வேலைக்காக அறுபதுகளில் இங்கு வந்து சேர்ந்தார்கள். அதற்கு முன்பு இலங்கையில் இருந்து வேலைக்கு ஆட்களைத் தருமாறு நோர்வே அரசாங்கம் கேட்டதாகவும், அதற்கு அப்போது இலங்கைப் பிரதமராய் இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்கா மறுத்ததாகவும் ஒரு கதை சொல்லப்படுகிறது. அதன் பின்பு பாகிஸ்தானில் இருந்து வந்தவர்களும், அவர்கள் மூலம் வந்தவர்களுமாய் இங்கு பல்கிப் பெருகினர். முதலிற் கூலித் தொழிலாழிகளாக வேலை செய்தவர்கள் பின்பு கடைகள், நிறுவனங்கள் என்று தொடங்கினார்கள். சிலர் படித்து அரச உத்தியோகங்களைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களின் பல கடைகள் குரண்லாண்டில் இருந்தன. அதை விடத் துருக்கியர்களும் பரவலாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களும் மரக்கறி வியாபாரம் ஒஸ்லோவில் செய்கிறார்கள். அப்படியான ஒரு கடைதான் அந்தத் தெருவில் இருந்தது. இப்போது ஒரு தமிழ் கடையும் ஒஸ்லோவில் திறந்து விட்டார்களாம். அங்குதான் இலங்கை மிளகாய் தூள் மற்றும் இலங்கை மரக்கறி, சரக்குப் பொருட்கள் வாங்குவதாம். அதற்கு இன்று போக வேண்டிய அவசியம் சம்பந்தனுக்கு இருக்கவில்லை. தங்களுக்குத் தேவையானவற்றைத் துருக்கிக்

கடையிலேயே வாங்குவதாய் அவன் முடிவு செய்து இருந்தான். "TS"சும் அவனோடு சென்றார். கடைக்கு முன்பாகத் தாங்கி போன்ற ஒன்றில் பெட்டி பெட்டியாக மரக்கறிகளும், பழங்களும் அடுக்கி வைத்து இருந்தார்கள். சம்பந்தன் அங்கிருந்த சிவப்புப் பிளாஸ்ரிக் கூடையில் ஒன்றை எடுத்துக் கொண்டான். கத்தரிக்காய், கறிமிளகாய், போஞ்சிக்காய், தேசிக்காய், பச்சை மிளகாய், வெண்காயம், இஞ்சி, பூண்டு, "Salad", "cucumber", ஆப்பிள், வாழைப் பழம் என்பதாகத் தேவையான பொருட்களைச் சம்பந்தன் எடுத்தான். பின்பு உள்ளே இருவரும் சென்றார்கள். அங்கு மிளகாய் தூளைத் தவிர தேவையான சரக்குப் பொருட்கள், பருப்பு, கடலை, உழுந்து போன்றவையும் இருந்தன. அதைவிட மத்திய கிழக்கில் கிடைக்கும் பலவகை தானியப் பொருட்கள், வாசனைப் பொருட்களும் அங்கு இருந்தன. சம்பந்தன் கொண்டைக் கடலையும், மைசூர் பருப்பும் எடுத்துக் கொண்டான். பின்பு அவற்றைக் கல்லாவில் கொடுத்தான். "TS" அதற்குப் பணத்தை கொடுப்பதற்குத் தயாரானார்.

"இப்ப நான் குடுக்கிறன் அண்ணை. துண்டுகளைச் சேர்த்து வைச்சு யார் எவ்வளவுக்கு வாங்கினது எண்டு எழுதி வைப்பம். மாதக் கடைசியில கணக்குப் பாப்பம். இந்த முறை நீங்களும் வந்ததால செலவு குறைவாய் இருக்கும். ஆட்கள் கூடக் கூட சேர்ந்து சமைக்கிறது இலாபம் எல்லே."

"அது உண்மைதான்" என்றார் "TS". அவருக்குப் பழைய ஞாபகங்கள் வந்து போயின.

பொருட்களுக்கான பணத்தைச் சம்பந்தன் கட்டிய பின்பு அந்தப் பொருட்களை பைகளில் கடைக்காரர் போட்டுக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு குன்னாரியுசிற்கு முன்பு இருக்கும் "Tram" தரிப்பிடத்திற்கு வந்தார்கள். "Tram" தெருவில் ஓடும் இரும்பு இரதமாக வந்தது. "Tram" புறப்படும் போது சம்பந்தன் "TS"சைச் சுறண்டி,

"குடுக்காரர்." என்றான்.

"அவன் காட்டிய திசையில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் நிற்க முடியாது தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றார்கள். அவர்கள் இருவரும் சுதேசிகள். அவர்களின் கோலம் பிச்சைக்காரரைவிட மோசமாக இருந்தது. எண்ணெய் தண்ணி காணாத அவர்கள் உடம்பின் சுருக்கங்களும்,

வெடிப்புக்களும் நீரைக் காணாத பாலைவனக் களிமண்ணாகப் பிளந்து கிடந்தன. கத்தரிக்கோல் தவறியும் படாது காட்டு மரமாக என்றும் வாரப்படாத ரோமங்கள். அழுக்கு ஆசையாக அப்பி இருந்த ஆடைகள். இராமனின் வில்லுண்டை படாமலே கூன் விழுந்த முதுகு. தளர்ச்சியில், நிலை இல்லாது நடுங்கும் கை கால்கள். அழிகிறோம் என்பது தெரிந்தும் அழிவில் இருந்து மீளமுடியாத வீழ்ச்சி. போதை உலகில் புகுந்த பின்பு யதார்த்த உலகை வெறுக்கும் அந்த மனித ஜீவராசிகளைப் பார்க்க "TS"சிற்குப் பரிதாபமாய் இருந்தது. குற்ற உணர்வு மெல்ல அவர் மனதைக் கிள்ளியது? சரியா என்கின்ற கேள்வியின் மன்றாட்டம் அவரிடம். அவர் கண்ணை இறுக மூடிக் கொண்டார். "Tram" இரைச்சலோடு பயணித்தது."

3 அந்த மர்மம்

"TS" வேலை தொடங்கிய பின்பு இரவு பத்துமணி தாண்டியே வீட்டிற்கு வருவார். சமையல் வேலை இல்லாவிட்டால் காலை ஏழரை மணிபோலப் புறப்பட்டு வெளியே சென்று விடுவார். சம்பந்தனுக்கும் பூபாலனுக்கும் இவ்வளவு காலையில் இவர் எங்கே செல்கிறார் என்பது விளங்கவில்லை. அவரைக் கேட்பதற்கும் மிகவும் தயக்கமாக இருந்தது. அந்தக் கழுவும் நிறுவனத்தைவிட வேறு இடங்களிலும் அவர் வேலை செய்கிறார் என்கின்ற கணிப்பே அவர்களிடம் இருந்தது. "TS" நீண்ட காலமாக வேலை செய்து இருக்கிறார். அவர் வேலை செய்யும் இடங்களில் பொறுப்பாகவும், கடினமாகவும் உழைப்பார். இங்கும் அவர் வேலைக்கு ஒரு நிமிடம்கூடப் பிந்திப் போக மாட்டார். வேலை என்பதை கடமைக்குச் செய்வது போல் செய்யாது கர்மயோகம் போல் செய்வது அவர் வழமை. அதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு நேரத்திற்கே புறப்பட்டுச் சென்று உழைத்துக் கொடுக்கிறாரா? கொடுப்பாரா? அவரைத் தெரிந்த வரையில் அப்படி யாரும் தன்னைப் பயன்படுத்தும் படியாக ஏமாந்து போவதும் அவரது இயல்பு இல்லை. அப்படி என்றால் காலையில் வேலை ஆரம்பிக்க முதல் புறப்பட்டு எங்கே போகிறார் என்பது விளங்காது பூபாலனுக்கு ஓயாத மண்டைக்

குடைச்சலாக இருந்தது. அவரிடம் கேட்கும் துணிவு அவனுக்கு இருக்கவில்லை.

அன்று பூபாலனுக்கு ‘வெஸ்திலி’ என்கின்ற ஒஸ்லோவின் கிழக்குப் பக்கத்திற்குப் போய் வரவேண்டி இருந்தது. வெஸ்திலியில் குழந்தைகளைப் பராமரிக்கும் ஒரு நிலையத்தைத் துப்பரவு செய்யும் பணிக்கு ஆட்கள் கேட்டு இருந்தனர். பின்னேரங்களில் பூபாலனுக்கு மருத்துவமனையில் வேலை இல்லை. அந்த நேரத்தில் வீட்டில் இருந்து வீணாகக் காலத்தைக் கழிப்பதிலும் வேலைக்குப் போனால் வந்த கடனை அடைத்து முடித்து விட்டு அடுத்த கட்டமாக வீடு வாங்குவதைப் பற்றிச் சிந்திக்கலாம் என்பது அவன் எண்ணம். அத்தோடு அவனது தங்கைக்கும் கொழுத்த சீதனம் கொடுத்துக் கலியாணம் செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. இல்லாவிட்டால் ஊருக்குள் அவனது குடும்பத்திற்கு இருக்கும் மரியாதை குறைந்துவிடும் என்று வந்த கடிதங்கள் கட்டியம் கூறின. எல்லாவற்றுக்கும் பணம் வேண்டும் என்கின்ற தேவை அவனை உந்தித் தள்ளியது. அத்தால் அவன் புறப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சைக்குச் சென்றான். கழுவும் வேலை செய்பவர்களுக்கு நுணுக்கமாக நேர்முகப் பரீட்சை வைக்காது விட்டாலும் ஒரு அளவிற்கு அது நடந்தே தீரும். சில நடைமுறைகளை மீறாது வேலை வழங்க வேண்டும் என்பதற்கான பல சட்டங்கள் நோர்வேயில் உண்டு. அதை இவர்கள் அனேகமாகக் கடைப்பிடிக்கத் தவறுவது இல்லை.

பூபாலனுக்கு நேர்முகப் பரீட்சையில் என்ன கேட்கப் போகிறார்கள் என்பது தெரியாது. தான் வைத்தியசாலையில் துப்பரவுப் பணியாளராக வேலை செய்த அனுபவத்தை மூலதனமாக்கி இந்த நேர்முகப் பரீட்சையில் தேறி, அந்த வேலையை வென்றுவிடலாம் என்கின்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது. அதற்கு உல்லவோல் மருத்துவ மனையில் இருந்து முதலில் பூபாலன் "Tram"இல் சென்றான். ஒஸ்லோவில் அனேகமான மனிதர்கள் நீற்றாக உடை அணிந்துதான் வருவார்கள். சில வேளைகளில் வாலிபர்களும், நங்கைகளும் கிழிந்த ஆடைகளுடனோ அல்லது நிறம் மாற்றிய பஞ்சவர்ணத் தலை முடி உடனோ எழுபதின் தொடர் போல வருவார்கள். அதை அவர்கள் ஒருவித நவீன அழகியலாகப் பயில்கிறார்கள். அத்தால் கிழிந்த ஆடை அணிபவன் எல்லோரும் வறுமையில் அல்லது

தம்மை தானே பார்த்துக் கொள்ள முடியாத நிலையில் அணிகிறார்கள் என்று இல்லை. தம்மைத் தானே பார்த்துக் கொள்ள முடியாத மனிதர்களும் இருக்கிறார்கள். அப்படியான மனிதர்கள் சிலர் மருத்துவமனையில் இருந்து "Tram"இல் வந்தார்கள். அவர்களின் ஆடையில் கிழிசல்கள் அதிகம் இல்லை. அதற்குப் பதிலாக அவை அழுக்கை நீக்கிப் பல மாதங்கள் இருக்கும் என்பதான தோற்றம். அந்த மனிதர்கள் சவரம் செய்து இருக்கவில்லை. பணக்கார நாடு என்கின்ற கொழுப்பில் பியரில் உப்பிய வயிறுகள் அவர்களுக்கு இல்லை. கை கால்கள் கட்டுப்பாடு இல்லாமல் உதறிய வண்ணம் இருந்தன. அவர்கள் உரத்துக் கதைத்தார்கள். கைகளில் "Shopping" பை வைத்து இருந்தார்கள். ஏறி வந்தவர்கள் வாசலின் அருகே இருந்த ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

இவர்கள் யார்? எதற்காக இப்படி அலைகிறார்கள்? என்பது பற்றிப் பூபாலனுக்கு ஒரு அவிப்பிராயம் இருந்தது. மேற்குலகு கொடுத்து இருக்கும் சுதந்திரமானது இப்படியான பழக்கத்திற்கும் வாசலைத் திறக்கிறது. விற்பவனைப் பிடித்தாலும் பாவிப்பவனைப் பிடிக்க முடியாது. அதற்கு எந்த நாடுகளிலும் அடைத்து வைக்கச் சிறைகளோ திருத்தி அனுப்ப ஆச்சிரமங்களோ போதுமான அளவு கிடையாது. ஒரு சில இடங்களில் இப்படிப் போதைப் பொருளுக்கு அடிமை ஆகின்றவர்களுக்கு உதவி செய்கிறார்கள். போதைப் பொருட்களுக்கு அடிமை ஆனவர்கள் அப்படியான ஆச்சிரமங்களுக்குப் போக விரும்புவது இல்லை. அந்தச் செயல் அவர்களது உயிருக்கே உலை வைத்துவிடும்.

மத்திய புகையிரத நிலையத்தில் பூபாலன் இறங்கினான். அந்த மனிதர்களும் அங்கு இறங்கிக் கிழக்குப் பக்கமாகச் சென்றார்கள். பூபாலன் வெஸ்திலிக்கான சுரங்கரதத்தைப் பிடிப்பதற்குச் சென்றான்.

வெஸ்திலிக்கான சுரங்கரதத்தில் ஏறியவனுக்குப் பதட்டமாக இருந்தது. அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்கின்ற கேள்வி தற்போது பாம்பு படம் எடுத்ததாய் பயமுறுத்தியது. வீட்டில் இருந்து புறப்படும் போது இருந்த துணிவு இப்போது தொலைந்து போனதான அந்தரம். மத்திய புகையிரதத் தரிப்பில் பூபாலன் இருந்த பெட்டிக்குள் இரண்டு பாகிஸ்தான் பெண்கள் வந்து ஏறினார்கள். அவர்களுக்குப் பதினாறு வயது இருக்கும். நோர்வேயில் பிறந்திருக்க வேண்டும் அல்லது நீண்டகாலம்

இங்கு வாழ்ந்திருக்க வேண்டும் என்பது அவர்களது நடை உடை பாவனையில் தெரிந்தது. பாகிஸ்தானில் இருந்து அண்மையில் வந்தவர்கள் அனேகமாகக் குளிரிலும் சுடிதார் அணிந்துதான் செல்வார்கள். பலர் முக்காடு போட்டுக் கொள்வார்கள். அந்த இளம் பெண்கள் சுடிதார் அணியவில்லை. நவீனமாகத் தோன்றிய காற்சட்டையும், மேலங்கியும் அணிந்து இருந்தனர். தலையில் முக்காடும் இருக்கவில்லை. பாகிஸ்தானில் இருந்து முஸ்லீம்கள் மட்டும் நோர்வேக்கு வரவில்லை. கிறிஸ்தவர்களும் வந்து இருக்கிறார்கள். ஆனால் வந்தவர்களில் அதிகம் முஸ்லிம்கள். கட்டையாகக் கழுத்தோடு கதை பேசும் கேசம் அவர்களுக்கு. கண்ணுக்கும் இதழுக்கும் மையெழுதி அழகூட்டிய நவீனம். இரண்டு பெண்களின் தோழிலும் கைப்பை. அவர்கள் வந்து ஆசனத்தில் அமராமல் நின்ற வண்ணம் பயணித்தனர். உருது மொழியில் ஏதோ தங்களுக்குள் கதைத்துக் கொண்டு வந்தார்கள்.

அவர்களைவிட வேறு சில வயது முதிர்ந்த பாகிஸ்தானியரும் அந்தப் பெட்டியில் இருந்தார்கள். அவர்கள் தாங்கள் அணியும் தங்களது கலாச்சார ஆடைகளை அணிந்து இருந்ததோடு சவரம் செய்யப்படாத முகமும், தலையில் தொப்பியும் ஆகத் தோன்றினார்கள். இந்தப் பெண்கள் மீது அவர்கள் பார்வை ஒரு முறை பட்டுத் தெறித்தது. அதில் ஒருவித வெறுப்பு விஷமாய் வடிவதைப் பூபாலன் கண்டு கொண்டான். அவனுக்கு அவர்கள் வெறுப்பு விளங்கியது. அதே வேளை அந்தப் பெண்கள் எடுத்துக் கொண்ட சுதந்திரமும் வியப்புத் தந்தது. தலை முறை தலை முறைக்கான வித்தியாசத்தில் மனிதப் புரிந்துணர்வில் விரிசல்கள் பலமாக விழுகின்றன. துருவங்களாக மாறும் தலைமுறைகளை இணைப்பதற்கு இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது பூபாலனுக்கு விளங்கவில்லை. எங்களுக்கும் ஒரு நாள் இப்படியான நிலை வரலாம் என்கின்ற எண்ணம் அவனுக்கு வந்தது. அதை நினைக்க அவனுக்குத் தன்னையும் கட்டுப்படுத்த முடியாமல் சிரிப்பு வந்தது. அவன் சிரிப்பதை அந்தப் பெண்கள் பார்த்தார்கள். அவர்கள் முதலில் தங்களுக்குள் புருவத்தால் பேசிவிட்டுத் திரும்பி நின்று ஏதோ கதைத்துச் சிரித்தார்கள். அவர்கள் உருதில் என்ன கதைத்தார்கள் என்பது பூபாலனுக்கு விளங்கவில்லை. என்னதான் மாற நினைத்தாலும் உருதை மிகவும் கவனமாக தக்க

வைத்துக் கொள்கிறார்கள். வீட்டில் இவர்கள் பெற்றோர்கள் நொஸ்க் கதைப்பது இல்லை. பெண்கள் ஏன் அடிக்கடி சிரித்துச் சிரித்துக் கதைக்கிறார்கள் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை. இயற்கையின் அந்தச் சூட்சுமம் விளங்காது பூபாலன் வெஸ்திலி நோக்கிப் பயணித்தான்.

வெஸ்திலியில் பாகிஸ்தான்காரர்கள் அதிகம் வாழ்ந்து வருகிறார்கள். அது ஒஸ்லோவின் குட்டி நகரங்களில் ஒன்று. இப்படிப் பல குட்டி நகரங்களை யுத்தத்தின் பின்னாகவும், எண்ணெய் கண்டு பிடித்ததின் பயனாகவும் உருவாக்கினார்கள். அங்கு நிறைய மக்கள் வீட்டு வசதிக்காகக் குடியேறினார்கள். அப்படிச் சில இடங்களில் மலிவான, வசதியான வீடு கிடைத்ததில் பாகிஸ்தானியர் இடம் பிடித்தனர். பாகிஸ்தானைச் சார்ந்தவர்கள் அதிகம் இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகளை பெறுவதே வழக்கம். அப்படியானவர்களுக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் தேவைப்படும். அப்படியான வீடுகள் வெஸ்திலியில் இருப்பதாகப் பூபாலன் கேள்விப்பட்டது உண்டு.

சுரங்கரதம் 'கஸ்ல' என்கின்ற இடத்தில் பூமியின் மேற்றளத்திற்கு மீண்டும் வந்து தொடர்ந்து பல குட்டி நகரங்களைக் கடந்து சென்றது. கஸ்லவில் இருந்து பதின் மூன்றாவது நிறுத்தமும், கடைசி நிறுத்தமுமாக வெஸ்திலி வந்தது. வெஸ்திலி சுரங்கரத நிலையத்தைத் தாண்டி சிறிது தூரம் சென்றதும் அந்தக் குழந்தைகள் பராமரிப்பு மையம் வந்தது. பூபாலன் தயக்கத்தோடு உள்ளே சென்றான்.

உள்ளே சுதேசிகளின் பிள்ளைகளும் சில பாகிஸ்தானியரின் பிள்ளைகளும் ஒரு ஆப்பிரிக்க பிள்ளையும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாள்களில் எதையோ வரைந்தார்கள். அப்படி அவர்கள் வரைவதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் பெண் ஒருத்தி பார்த்துப் பார்த்து ஊக்குவித்துக் கொண்டு வந்தாள். அவள் ஒரு சுதேசப் பெண். அவளுக்குப் பதினெட்டு வயது இருக்கும். பொன் ஊசிகளாகத் தகதகக்கும் அவள் கேசம் முதுகைத் தாண்டி முன்னேறும் மூர்க்கத்தில். பளிங்கான பூனைக் கண்களின் பரபரப்பு. மிளகாய் பழம் போன்ற இதழ்கள். சிரித்த போது தெரிந்த மன்மதனையே மயக்கும் தெற்றிப் பற்கள். ஐந்தரை அடி உயரம். அவள் காற்சட்டையும் சேட்டும் அணிந்து இருந்தாள். பூபாலனுக்கு அவளைப்

பார்க்கப் பார்க்க திவட்டாத தேவலோக மாது போல் தோன்றினாள். திகைப்பில் நின்ற அவனுக்கு அதுவல்ல தான் வந்த வேலை என்பதும் உடனே விளங்கியது. பூபாலன் தயங்கியபடி உள்ளே சென்று தான் யார் என்கின்ற விடயத்தை அவளிற்குச் சொன்னான். அவள் உள்ளே சென்று அந்த மையத்தின் முகவரை அழைத்து வந்தாள்.

மையத்தின் முகவரும் ஒரு பெண் ஆகத்தான் இருந்தார். இது பெண்களின் வேலையிடம் என்பதாகப் பூபாலன் எண்ணிக் கொண்டான். நோர்வே பல விடயங்களில் புரட்சிகரமான நாடாக இருந்தாலும் புரட்சி புக முடியாத பல இடங்களும் நோர்வேயில் இருக்கத்தான் செய்கிறது. தொழில்கள் பல இடங்களில் இயற்கையின் நியதிப்படி பிரிந்தே இன்றும் கிடக்கிறது. சில இடங்களில் புரட்சித் தத்துவங்கள், போதனைகள், சட்டங்கள்கூட எடுபடாது போய் விடுகின்றன. இந்தத் தொழில் பெண்களுக்கே உரியது என்பது போலப் பெண்கள் அங்கே தனித்து வேலை செய்ததைப் பூபாலனால் பார்க்க முடிந்தது. எங்கள் நாட்டின் சாயல் இங்கும் தொழிலில் இருப்பது அவனுக்கு வியப்பைத் தரவில்லை.

அவருக்கு அறுபது வயது இருக்கும். மெலிந்த உடலில் கொழுப்பிற்கு என்ன வேலை என்று கேட்கும் உருவம். எவ்வளவு சாப்பிட்டாலும் சிலருக்கு உடம்பு வைப்பது இல்லை. எவ்வளவு உணவு எரிய வேண்டும் என்பதை கோர்மோன்களும், மூளையும் நிச்சயிக்கின்றன. அது பரம்பரை பரம்பரையாகக் கடத்தப் படுவதாக இருக்கலாம். இவர் சாப்பிடும் உணவு அவர் வாழ்வதற்கு மட்டுமே போதக் கூடியதாகப் பூபாலனுக்குத் தோன்றியது. உணவு இங்கு இல்லாமல் இல்லை. அவருக்கு அதற்கு மேல் உணவை உண்ண முடியாமல் இருந்திருக்க வேண்டும் என்பது பூபாலனுக்கு விளங்கியது. அவரது கேசம் பஞ்சாக வெண் நரை கண்டிருந்தது. அதை அவர் கட்டையாக வெட்டி உள் நோக்கிச் சுருட்டி இருந்தார். மென் பச்சை நிறமான அவரது கண்களில் ஒருவித கனிவு. வெள்ளை சேட்டும் நீல அரைப் பாவாடையும் அணிந்து இருந்தார். அவர் பூபாலனுக்குக் கை கொடுத்துத் தன்னைக் 'கெலேனா' என்று அறிமுகம் செய்து கொண்டார். பூபாலனும் தனது பெயரைச் சொல்லிக் கையைக் குலுக்கித் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

நேர்முகப் பரிட்சை சட்ட விதி முறைகளுக்கு அமைய நடைபெற்றது. மற்றவர்களது நேர்முகப் பரிட்சையும் முடிந்த பின்பு தாங்கள் தொடர்பு கொள்வதாகக் கூறிப் பூபாலனை அவர்கள் அனுப்பி வைத்தார்கள். நேர்முகப் பரிட்சை முடிந்த போது பூபாலனுக்கு வேலை கிடைக்கும் என்கின்ற நம்பிக்கை உண்டாகி விட்டது. இரண்டு வண்டிகளையும் எப்படி ஓட்டுவது என்கின்ற கற்பனையோடு சுரங்கரதத்தில் ஏறி மத்திய புகையிரத நிலையத்தை நோக்கிப் பயணித்தான். சுரங்கரதம் மத்திய புகையிரத நிலையத்தில் வந்து நின்றது.

பூபாலன் அப்போது தான் அதைப் பார்த்தான். அது அவர்தான். என்ன செய்கிறார்? அவனால் தன் கண்களை நம்ப முடியவில்லை. ஒரு முறை தன்னை நுள்ளிப் பார்த்ததோடு கண்களையும் கசக்கி விட்டுப் பார்த்தான். எந்த மாற்றமும் இல்லை. அவர் தன்னுடைய வேலையில் உலகை மறந்து உண்மை உடன் செயற்பட்டார். அந்தக் கருமத்தைவிட யாரையும் அவர் கவனிப்பதாகத் தெரியவில்லை. இது சராசரியான பூபாலனுக்கு அவமானம் ஆகத் தோன்றியது. கீழ்த்தரமான வேலையாகச் சுதேசிகளால் பார்க்கப்படும் என்கின்ற எண்ணம் அவனுள் எழுந்தது. சிறிது நேரத்தில் தான் எண்ணுவது பிழை என்கின்ற மறுப்பு எண்ணம் தோன்றியது. இங்கே எது அவமானம்? எது அவமானம் இல்லை? அவமானம் என்றால் கழுவும் வேலை? அதுவும் மலசலக்கூடம் உள்படக் கழுவும் வேலை, சாப்பாட்டுக் கடைகளில் சாப்பிட்டவர்களின் எச்சில் தட்டுக்களைக் கழுவிச் சுத்தம் செய்யும் வேலை போன்றவை அவமானம் இல்லையா? ஊரில் கழுவும் வேலை செய்வதற்கு யார் செல்வார்கள்? இங்கு வெள்ளாளரும் சரி. பறையனும் சரி. எந்த வேறுபாடும் இல்லாது விழுந்து விழுந்து இவர்கள் கக்கூசைப் பணத்திற்காகக் கழுவுகிறார்கள் தானே? இங்கு வந்த பின்பு பணத்திற்காகச் சாதிவாரியாக வகுக்கப்பட்ட தொழிலை விட்டாகிற்று. தொழில் வாரியாக வகுக்கப்பட்ட சாதி மாத்திரம் நிறமுகூர்த்தங்களோடு சேர்ந்து போவது போலப் போய் கொண்டே இருக்கிறது.

கக்கூசு கழுவுவதைவிட இது அவமானமா? அவமானமாகப் பார்க்கப் படுவதாய் பூபாலனுக்குத் தோன்றியது. அவருக்குப் பணம் தேவைப்பட்டு இருக்கும். அதற்கு வேறு ஒரு வேலை செய்து இருக்கலாம். இன்னொரு கக்கூசைக் கழுவுவது அவமானம் இல்லையா? அதைவிட இது அசுத்தம் அல்லாதது. அப்படி இருந்தும் இதை ஏன் நான்

அவமானமாகப் பார்த்தேன். குப்பைக்குள் இருந்து பொறுக்குவதாலா? குப்பையைவிட அசிங்கமானதைக் கழுவும் நாங்கள் குப்பைக்குள் இருந்து பொறுக்குவதை அசிங்கமாக நினைக்கலாமா? பூபாலனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இதை ஏன் அவர் செய்கிறார் என்பதும் விளங்கவில்லை. சுரங்கரதம் புறப்பட முதல் அதில் இருந்து இறங்கி "Tram" பிடிப்பதற்கு அவசரமாகப் பூபாலன் ஓடினான்.

*

பூபாலன் வீட்டிற்கு வந்த போது மதிய இடை வேளைக்காக வந்த சம்பந்தன் "Rice cooker"கரில் அரிசி அவியப் போட்டு இருந்தான். அது அவியும் மணம் நாசியை நிறைத்தது. அதுவே சுருண்டு கிடக்கும் குடல்களை தட்டி எழுப்பிப் பேய் கூத்து ஆட வைத்தது. பூபாலனுக்கு வயிறு பிறாண்டத் தொடங்கினால் இரண வதைப்படுத்தி விடும். பூபாலன் கறிகளைத் திறந்து பார்த்தான். கொண்ஸ் கறிக்குக்கூட இஞ்சி, உள்ளி தட்டிப் போட்டு வாசமாக வைத்து இருந்தார் "TS". "TS" காலையே எழுந்து தேவையான கறிகள் சமைத்து வைத்துவிட்டுத்தான் போய் இருந்தார். அவரிடம் வழுவாத ஒழுக்கம் இருந்தது. இது இன்ன நேரம் செய்ய வேண்டும் என்றால் அதை அந்த நேரம் செய்து முடித்து விடுவார். மறந்தேன், படுத்தேன், எழுந்தேன் என்கின்ற நொண்டிச் சாட்டு எல்லாம் சொல்வதற்கு அவருக்குத் தெரியாது. கடுமையான உழைப்பாளி. உழைப்பால் முன்னேற முடியும் என்கின்ற நம்பிக்கை கொண்டவர். கழுவுவதை விட அப்படிச் செய்வது அவமானம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அது அவமானமாகப் பார்க்கப்படும் என்பது தான் பலரின் பயம். அப்படி அது பார்க்கப்பட்டாலும் "TS"சிற்கு அதை எப்படிச் சமாளிப்பது என்பது தெரியும். அவர் அந்த வேலை செய்வதிலும் ஏதாவது அர்த்தம் இருக்கலாம். வறட்டு எண்ணங்களோடு வாழ்ந்து வரும் எங்களால் சில வேளை அதை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கலாம் எனப் பூபாலன் சிந்தித்தான்.

"என்ன கடுமையான யோசினை?" என்றான் சம்பந்தன்.

"ஒண்டும் இல்லை."

"முகம் காட்டிக் கொடுத்த பிறகு சொல்லாமல் மறைக்கிறது உன்ரை சுயத்தை இழக்கிற மாதிரி. விருப்பம் இல்லை எண்டால் விடு. நான் யாரையும் எதுக்கும் கட்டாயப்படுத்த வேணும் எண்டு நினைக்க இல்லை."

"இல்லை நான் அப்பிடி ஒண்டும் சொந்த விஷயத்தைப் பற்றி யோசிக்க இல்லை. அது "TS" அண்ணையைப் பற்றித்தான் ஒரு யோசினை. ஆனா... எனக்கே ஒழுங்காத் தெரியாது. எப்பிடி உங்களுக்கு சொல்லுகிறது எண்டுதான்..."

"அவரைப் பற்றி சொல்லுகிறதுக்கு என்ன இருக்கும்? அப்பிடி ஏதும் அறிய வேணும் எண்டாலும் நான் தான் முதல்ல அறிய வேணும். சொல்லும் "TS" அண்ணைக்கு என்ன?"

"நான் இண்டைக்கு இன்ரவீக்குப் போட்டு வரேக்க அவரைப் பார்த்தன்."

"என்னத்துக்கு உந்தச் சுத்தி வளைப்பு. சொல்ல வந்ததைச் சட்டெண்டு போட்டு உடையும்."

"அதில்லை."

"எனக்குத் தலை வெடிக்கப் போகுது."

"யாண்வார்ண ஸ்தாசுனில போத்தில் பொறுக்கிக் கொண்டு நிண்டார். அது தான்."

""TS" அண்ணையா?"

"ம்."

"அதில என்ன தப்பு இருக்குது?"

"நானும் அப்பிடித்தான் நினைச்சன்."

"அவர் அதுவும் செய்கிறார் எண்டா அவருக்கு அதிகமாக் காசு தேவைப் படுகிறதா இருக்கும். அதோடை அவர் இதை மட்டமா நினைக்க இல்லை எண்டு நினைக்கிறன். கக்கூசு கழுவுகிறதை விட இதில என்ன குறையப் போகுது?"

"நானும் அப்பிடித் தான் நினைக்கிறன். ஆனா... எங்கடை சனங்கள் சில வேளை ஒரு மாதிரிக் கதைக்குங்கள்."

"கொலையா? களவா? என்ன குற்றம் எண்டு அவை கதைப்பினம்? உதை எல்லாம் கணக்கு எடுக்கக் கூடாது."

"ம் உண்மை தான்."

இருவரும் சாப்பிடும் போது "TS" உள்ளே வந்தார்.

"என்ன நீ என்னைக் கவனிக்க இல்லையா? யாண்வர்ண ஸ்தசுனில நான் உன்னைப் பார்த்தன். நீ விறுக்கெண்டு போயிட்டாய்?"

"திறிக் எடுக்கிற அவசரத்தில நிக்கேல்லை."

"ம்... அவை அவைக்கு அவை அவையின்ரை பிரச்சனை. நான் போத்தில் பொறுக்கினா அவைக்கு என்ன? நான் யாண்வர்ண ஸ்தசுனில போத்தில் எடுத்துக் கொண்டு நிற்க ஒரு தமிழ் ஆள் வந்தார். பெயர் குமாரசாமியாம். நோர்வேக்குப் படிக்கிறதுக்கு மூண்டு வருசத்துக்கு முதல் வந்தவராம். அவருக்கு நான் செய்கிறது அவமானமாய் தெரியுது. போத்தில் பொறுக்கினாத் தமிழருக்கு அவமானமாம். எனக்கு அது கொஞ்சமும் விளங்க இல்லை. அவருக்கு என்ன அவமானம்? எனக்கு என்ன அவமானம்? நான் ஏன் அவமானப்பட வேணும்? முதலாவது நான் செய்கிறது ஒரு சமுதாயத் தொண்டு. சுற்றுப்புறம் மாசு படுகிறதைத் தடுக்கிறன். அவங்கள் அந்தப் போத்தலைச் சுத்தம் செய்து திரும்ப பாவிக்கலாம் அல்லது வேற பொருட்கள் செய்யலாம். என்னுடைய உழைப்புக்குச் சம்பளம் கிடைக்குது. அது சமுதாயத்திற்கும் நன்மை பயிர்க்குது. நான் யாரையும் தட்டி சுத்த இல்லை. எனக்குச் சரி எண்டுகிறதை நான் செய்கிறன். அவருக்கு அவமானம் எண்டா அவர் செய்யாமல் இருக்கட்டும். சுற்றுப்புறத்தைப் பற்றிய அறிவு இருந்தால் அவர் எனக்கு அந்தப் புத்திமதி சொல்ல வந்து இருக்கமாட்டார். தூள் அடிக்கிறதுகள் தான் போத்தில் பொறுக்குவினமாம். அதுக்குத் தூள் அடிக்கிறவை நல்ல காரியமே செய்யக்கூடாது எண்டது அவர் நினைப்புப் போல. தெரிஞ்சோ தெரியாமலோ அவங்களும் சமுதாயத் தொண்டு செய்யிறாங்கள். அதைப் பாராட்ட வேணும். ஏற்றத் தாள்வு பார்த்து இருந்தா நாங்கள் இங்க துடைப்பத்தைத் தூக்கி இருக்க ஏலாது. அது பார்த்தாப்

பணம் வராது எண்டுதானே தூக்கி இருக்கிறம். பிறகு போத்தில் பொறுக்கினா மானம் போகும் எண்டுகிற அவற்றை கதை விளங்கேல்லை."

"அது எங்கடை பார்வை எப்பவும் கிட்டமாகத் தான் இருக்கும். நீங்கள் உதுக்கு எல்லாம் உங்கடை சக்தியை வேஸ்ற் பண்ணாதேங்க." என்றான் சம்பந்தன்.

"முன்னேறின சமுதாயங்களிலேயே தொழில் பிரிவினை உண்டு. நொஸ்க்குகள் கழுவுகிற வேலையை மதிக்க இல்லை. அதுதான் எங்களுக்கு அந்த வேலை இப்ப கிடைக்குது. அதைப் போல போத்தில் பொறுக்கிறதை யாரும் மதிக்கிறது இல்லை. அதுதான் தூள் அடிக்கிறவைக்குக் கிடைச்சிருக்கும். அதால நாங்கள் கழுவிறதைவிட அதைத் தாழ்வா நினைக்கிறது என்ன மகிமை?"

"நீங்கள் அதைச் சமுதாயத் தொண்டாகவும் நினைக்கிறியள். அவர் அதை வேலையா மட்டும்தான் நினைக்கிறார். பரந்த அறிவு உள்ளவைக்கு மட்டும் தான் உங்கடை நோக்கம் விளங்கும்." என்றான் சம்பந்தன்.

"எனக்கு இன்னும் ஒரு வேலை எடுத்துச் செய்ய முடியும். ஆனா... அது பணத்தை மட்டும் சம்பாதிக்கிறதா இருக்கும். இதுல ஒரு திருப்தி இருக்குது. நான் வாழுகிற பூமியைப் பார்த்துக் கொள்ளுகிற சுகம், திருப்தி இருக்குது. யாருக்கு ஆகவும் நான் அந்தச் சுகத்தை, மனத் திருப்தியை விட்டுக் கொடுக்க வேணும் எண்டு நினைக்க இல்லை."

"இதுதான் அண்ணை உங்களுக்கும் அவங்களுக்கும் உள்ள வித்தியாசம். உங்களோடை கதைக்கிறதே ஒரு புது வித அனுபவம் தான்." என்றான் சம்பந்தன்.

"நீரும் விட்டா நல்லா ஏத்துவீர்."

"ஏத்த வேணும் எண்டு இல்லை. நான் அப்பிடித் தான் நினைக்கிறன். சரி அண்ணை வந்து சாப்பிடுங்க." என்றான் சம்பந்தன்.

4 பாய்ந்த வேல்கள்

அன்று காலை மூன்று மணி இருக்கும். வெளியே சிணு சிணு எனப் பனி நீரைத் தெளிப்பதாக மழை பெய்தது. மழைக் குளிர் பழைய காலதர்களின் இடுக்கால் புகைபோலக் கசிந்து உள்ளே விசமாகப் பரவியது. போர்வையை இழுத்துப் போர்த்தி வெப்பத்தை அடைகாக்கக் குடங்கிய வண்ணம் படுத்து இருந்த மனிதர்கள். மழை என்றால் மனிதனுக்குத் தூங்கும் எண்ணம் வந்து விடுகிறது. இயற்கை சில உணர்வுகளை நிஜமான நிழலாக நிறமூகூர்த்தத்தில் புதைத்து வைத்து விட்டது. இயற்கை எதற்காக அதை ஆதி காலத்தில் புதைத்தது என்பது விளங்காவிட்டாலும் அது தொடர்கிறது. இலங்கையில் என்றாலும் சரி நோர்வேயில் என்றாலும் சரி மழை பெய்தால் பலருக்கும் படுக்கத்தான் தோன்றுகிறது. வெளியே மழையில் கரைந்து போகும் மின்னொளி மங்கி மாய்ந்து போகும் பரிதாபம். எப்போதோ ஒரு தவளை அடித் தொண்டையால் கத்துவது போல இரைந்து செல்லும் ஒரு சில வாகனம். ஒஸ்லோ விழித்துக் கொண்டால் அது இரைச்சல் ஆகிவிடும். இன்னும் விழிக்காத நகரத்தின் அமைதியில் இரவுப் பொழுதிற்கு எல்லை இல்லாது போக வேண்டும் என்கின்ற பலரின் விருப்பம். கற்பனைகள், கனவுகள், அசை போடல்கள், சுருண்ட வண்ணம் போர்வைக்குள் கிடந்தபடி அவரவர் சஞ்சாரம். இரவுகள் விடியாது இருந்து விட்டால் பல தொல்லைகளும் சில வேளை உருவாகாமல் இருக்கலாம். தன்னைச் சுற்றுவதும் சூரியனைச் சுற்றுவதும் பூமியின் தவிர்க்க முடியாத இயக்கம் ஆகிவிட்டது. சுற்றா விட்டால் பூமி பேய் வீடு போல் ஆகிவிடும். இதன் இயக்கமே நிர்மலமான அதன் நீல அழகையும் பூமியில் வாழும் உயிரினங்களையும் பாதுகாத்து வைத்து இருக்கிறது. விடிய வேண்டும். இந்த நாள் தாண்டி இன்னும் ஒரு நாள் வரவேண்டும். தாண்டப்படும் நாட்கள் சந்தோஷமாய் அமையலாம். துக்கமாய் மாறலாம். அந்த நிஜத்தில் இருந்து மனிதன் ஓடி ஒளிய முடியாது. வரப்போகும் எந்தக் கணங்களும் எங்களுக்கு நிரந்தரமாகச் சொந்தம் இல்லை. அது வந்து மடிந்து விரைவாக மறைந்து விடும். அதன் பின்பும் ஒரு கணம் வந்து எம்மைத் தாண்டிச் செல்லும். தாண்டும் கணங்களை எண்ணி மகிழும் அல்லது புழுங்கும் போது எம் இருப்பே இல்லாது கரைந்து போய்விடும். எதுவும் நிரந்தரம் இல்லை. எதுவும்

அழியாச் சொந்தங்களும் இல்லை. இறக்கை முளைத்ததும் குஞ்சுகள் பறந்து போகும் உலகத்தில் சொந்தங்கள் நிரந்தரம் என்பது பகற்கனவு ஆகும். நிரந்தரம் இல்லை என்பது மட்டும் நிரந்தரம் என்பதை விளங்கினாலும் மனித ஜன்மம் மறுபடி மறுபடி தழைக்குள் வீழும். யாரும் ஞானிகள் அல்ல. யாரும் பித்தர்கள் அல்ல. ஞானிக்குள் பித்தனும் பித்தனுக்குள் ஞானியும் ஒளிந்து இருக்கிறார்கள். அந்த முரணான பிம்பங்கள் ஒரு கணத்தில் வெளியே வரும். அட இவனுக்குள் இப்படி ஒருவனா என்று திகைக்க வைக்கும்.

இங்கே குண்டு மழை இல்லை. துப்பாக்கி ஓசையும் இல்லை. விமானத்தின் இரைச்சல்கள் அடிவயிற்றைக் கலக்குவது இல்லை. இரவில், இடையில் விழித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. உயிருக்கு நிரந்தரமான பாதுகாப்பு. உணவுக்கு என்றும் உத்தரவாதம். குடிலுக்கும் கட்டாய வசதி உண்டு. இருந்தும் கவலைகளின் கைகள், அது விடுகின்ற சுவாசம், அதன் உருவம் இல்லாத சஞ்சரிப்பு, என்றும் தொடரும் நச்சரிப்பு என்பன இங்கும் தொடர்கிறது. துருவங்கள் சென்றும் துரத்தும் கவலையை எண்ணிப் புருவங்களை மட்டும்தான் சுழிக்க முடிகிறது.

சிணு சிணுக்கும் மழை உறக்கத்தை மயக்கம் ஆகத் தந்த அந்த வேளை, காலத்தை வென்ற அகாலமாகக் கொழும்பில் இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று "TS"ற்கு வந்தது.

சம்பந்தன் அதை முதலில் எடுத்தான். "TS" தொலைபேசியின் கதறலில் முழித்துவிட்டார். அவர் அதை எடுப்பது என்றால் சம்பந்தனைத் தாண்டிச் சென்று எடுக்க வேண்டும். சம்பந்தனும் முதல் கதறலுடன் எழுந்து இருந்து கொட்டாவி விட்டான். கைகளை ஒரு முறை உதறி முறித்தான். பாய்ந்து தொலைபேசியை எடுத்தான்.

"ஓம்... ஓம்... நிற்கிறார்." என்றான். "TS"சைப் பார்த்து அண்ணை உங்களுக்குத்தான் என்றான். "TS"சிற்கு என்ன என்று விளங்கவில்லை. யாராவது கொழும்பிற்கு வந்தால் தொலைபேசி எடுப்பார்கள். "TS" கொழும்பில் இருந்த அவரது ஒன்றுவிட்ட அண்ணனிடம் தொலைபேசி எண்ணைக் கொடுத்து வைத்து இருந்தார். அவர் கொழும்பில் பல காலமாக வியாபாரம் செய்கிறார். கலவரத்திற்குப் பின்னே பெட்டிக் கடை ஒன்று தொடங்கியவர் இப்போது பல கடைகளுக்குச்

சொந்தக்காரராய் மாறிவிட்டார். தொடக்கத்தில் பெட்டிக் கடை வைத்து இருந்த போது ஐந்து மணித்தியாலங்கள் மட்டும் அவர் கடை மூடி இருக்கும். மீதி நேரம் அவரும் கடையும் சேர்ந்து முழித்து மனிதர்களை அழைக்கும். ஒரு முறை அவரிடம் வருபவர்கள் நிச்சயம் மறு முறையும் வருவார்கள். அவர் பொருட்களின் தரத்திற்கல்ல. அவர் கதைக்கும் விதம் அப்படி இருக்கும். "TS" கொழும்பில் நின்ற போது அவரைச் சந்திக்கச் சென்றார். அண்ணியிடம் தேநீர் வாங்கிப் பருகிவிட்டு அண்ணாவோடு கதைத்து விட்டு வரும் போது தொலைபேசி எண்ணை அவரே கொடுத்தார். ஏதாவது என்றால் தொடர்பு கொள்ளச் சொல்லி இருந்தார். ஊரில் இருந்த பழைய விலாசத்திற்கு எழுதிய கடிதத்தில் அதைப் பற்றி எழுதினார். இப்போது அவர்கள் எந்த விலாசத்தில் எங்கு இருக்கிறார்களோ என்பது அவருக்குத் தெரியவில்லை. இன்று வரை அதற்கு மறுமொழி வரவில்லை. இடையில் யாராவது யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இருப்பார்கள். ஏதாவது தகவல் சொல்ல அல்லது கேட்கத் தொடர்பு கொண்டு இருக்கலாம் என்று அவருக்குத் தோன்றியது. "TS" எட்டிச் சென்று தொலைபேசியை வாங்கினார். இதற்கு நீளமான வயர் மாத்தினால் இப்படி ஆட்களைத் தாண்டிப் பாய வேண்டும் என்கின்ற பிரச்சனை இருக்காது என்று அவருக்குத் தோன்றியது.

"TS" தொலைபேசியை வாங்கிக் கலோ என்றார். அதன் பின்பு அவரிடம் ஓம், ம்..., ஐயோ கடவுளே, என்கின்ற வசனங்கள் மட்டும் தெறித்து விழுந்தன. கதைத்து முடிந்ததும் அவர் யாருடனும் கதைக்கவில்லை. ஆடைகளை மாற்றினார். மேலங்கியை எடுத்துக் கொழுவினார். வெளியே புறப்பட்டார். சம்பந்தன் நேரத்தைப் பார்த்தான். மூன்று ஐம்பது காட்டியது. இந்தச் சாமத்தில் எங்கே போகிறார்? தொலைபேசியில் யார் என்ன சொன்னார்கள்? அறிய வேண்டும் என்கின்ற அவா இருந்தும் அதை மூட்டைக் கட்டி வைத்து விட்டு,

"இப்ப மழைக்க போய் என்ன செய்யப் போகிறியள்?" என்றான்.

"சும்மா வெளியால போயிட்டு வரப் போகிறன். நீங்க படுங்க." என்று கூறியவர் மேற் கொண்டு தாமதிக்காது வெளியே சென்றார். சம்பந்தன் கதவைப் பூட்டிவிட்டு வந்து மீண்டும் படுத்தான். அவனுக்கு யோசனையாக இருந்தது.

பூபாலனும் விழித்து விட்டான். அவனுக்கு ஒரு கணம் என்ன நடந்தது என்பது விளங்கவில்லை. பின்பு "TS" வெளிக்கிட்டு வெளியே போவதைப் பார்த்தான். எதற்கு இந்த நேரத்தில் அவர் வெளியே போகிறார் என்பது அவனுக்கு விளங்கவில்லை. திறிக் ஓடத் தொடங்கி இருக்குமா? என்கின்ற கேள்வி அவனுள் எழுந்தது. இன்னும் ஓடத் தொடங்கி இருக்காது. இந்த அளவு அதிகாலையில் எதுவும் ஒஸ்லோவில் திறந்து இருக்காது. ஐந்து ஐந்தரைக்குப் பின்பு தான் சில படலைகள் திறக்கும். அது வரைக்கும் மயான அமைதியில் நகரம் மூழ்கிக் கிடக்கும். வெள்ளி இரவு என்றாலும் மூன்று மணிக்குப் பின்பு சன நடமாட்டம் செத்துப் போய்விடும்.

"என்ன நடந்தது. ஏன் இப்ப "TS" அண்ண வெளிக்கிட்டு வெளிய போகிறார்?" என்று பூபாலன் கேட்டான்.

"தெரியாது. ரெலிபோன் வந்திச்சுது. என்ன சொன்னாங்களோ? ஏது சொன்னாங்களோ தெரியாது, திடீரென வெளிக்கிட்டுப் போகிறார்." என்று சம்பந்தன் தனக்குத் தெரிந்ததைக் கூறினான்.

"அவர் சில வேளை ஒரு படத்தை வைச்சுப் பார்த்துக் கொண்டு இருப்பார். ஆனா... அதை ஒரு நாளும் யாருக்கும் காட்ட இல்லை. யாரை அதில பாக்கிறவர்?"

"எனக்கும் சரியாகத் தெரியாது. அவர் மிடிலீஸ்ற் போக நான் கொழும்பு போயிட்டன். இப்ப இங்க வர முதல்தான் என்னிட்ட போன் நம்பர் வாங்கினவை. கலியாணம் செய்து இருப்பார். நானும் அவரிட்டை இன்னும் அதைப் பற்றிக் கேட்க இல்லை. அவரும் அதைப் பற்றிக் கதைக்க இல்லை. ஏதோ சிக்கல்ல அவசரமா வெளிக்கிட்டு வந்தவர் எண்டு கொழும்புக்குக் கதைக்கேக்க சொன்னவை. ஏதும் பிரச்சனையா இருக்கலாம். என்ன பிரச்சனை எண்டு அவர் சொல்ல இல்லை."

"இப்ப எங்க வெளிக்கிட்டுப் போகிறார்?"

"தெரியாது. வருவார். நான் இன்னும் கொஞ்ச நேரம் படுக்கப் போகிறன்." என்று கூறிய சம்பந்தன் திரும்பிப் படுத்துக் கொண்டான். அதைத் தொடர்ந்து பூபாலனும் போர்வையால் தலையை மூடிக் கொண்டு படுத்தான். படுத்து இருப்பது வேறு நித்திரை கொள்வது வேறு

என்பது அவர்களுக்குச் சிறிது நேரத்தில் விளங்கத் தொடங்கியது.

*

"TS"சிற்கு உலகம் தலை கீழாகாச் சுற்றித் தன் பாதையை அறுத்துக் கொண்டு அண்டத்தில் மறைவதாக அனைத்தும் இருண்டன. ஐயோ... ஐயோ... என்று கத்திக் கொண்டு தெருவால் ஓட வேண்டும் போல் இருந்தது. இப்படியும் நடக்கும் என்கின்ற அனுமானம் இருந்து இருக்க வேண்டும். எதைப் பற்றிக் கடுமை ஆகச் சிந்தித்து இருக்க வேண்டுமோ அதைப் பற்றிச் சிந்திக்கத் தவறி விட்டதான குற்ற உணர்வு அவரைக் கொன்றது. யாழ்ப்பாணத்தில் நின்று செய்ய முடியாது விட்டாலும் கொழும்பில் நின்று என்றாலும் ஏதாவது பாதுகாப்பு ஒழுங்கு செய்து விட்டு வந்து இருக்க வேண்டும். சரி நான் அதைச் செய்யாது விட்டாலும் அவர்கள் ஏன் அந்த அளவிற்கு அக்கறை எடுத்துக் கொள்ளாது விட்டார்கள் என்பது அவருக்குத் தெரியவில்லை. அவளின் அப்பா இருக்கிறார் தானே என்கின்ற துணிவில் அவள் இருப்புப் பாதுகாப்பானது என்கின்ற மாயை வளர்ந்து விட்டது. என்ன செய்ய முடியும்? இனி... என்னால் இல்லை இறைவனாற்கூட எதுவும் செய்ய முடியாது. என்று அவர் எண்ணினார்.

"TS"சிற்கு ஒன்றும் புலப்படவில்லை. இனி அவள் முகத்தில் எப்படி முழிப்பது? ஒரு கணவனுக்குத் தன் மனைவியை, தன் பிள்ளையைப் பாதுகாக்கத் தெரியாதுவிட்டால் அவனை மதித்து வாழ எந்தப் பெண்ணிற்கு மனம் வரும்? சரிஸ்கா இனி எப்படி அப்பாவின் முகத்தை நிமிர்ந்து பார்ப்பாள். நடந்த கொடுமை கோரத்தின் மகுடம் என்றால் தொடர்ந்தும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை எப்படி இருக்கும்? "TS"சிற்கு எங்கே போகிறேன் என்பது தெரியவில்லை. மழையில் நனைவது மூளையில் உறைக்கவில்லை. தலை தொடக்கம் கால் வரை தெப்பமாக நனைந்த "TS" பித்துப் பிடித்தவனாய் தனக்குள் பிதற்றிய வண்ணம் தொடர்ந்து நடந்தார்.

புவனலோசினியை நினைக்க "TS"சிற்கு இதயம் இரும்பாய் இறுகியது போன்று நோ எடுத்தது. சுவாசக் காற்றை இழுக்க முடியாத அந்தரம் ஏற்பட்டது. எவ்வளவு அன்பானவள்? என்பது "TS"சைப் பித்துக் கொள்ள வைத்தது. உங்களுக்காக உயிரையும் கொடுப்பேன் என்பாளே... இன்று நான் அவளை பாதுகாக்கத் தவறி

விட்டேனே? என் செல்ல மகள் சரிஸ்கா. உன் கண்ணில் நீர் வழிந்தால். அவர் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது பொருமினார். இனி அவள் என்னை அப்பா என்பாளா? உன் கண்ணிலேயே முழிக்கக் கூடாது என்பாளா? ஏன் இந்தக் கொடுமை எனது குடும்பத்திற்கு நடக்க வேண்டும்? நான் என்ன பாவம் செய்தேன்? எப்போதும் நியாயமாக உழைக்கிறேன். எப்போதும் நியாயமாக வாழ்கிறேன். இருந்தும் எனக்கு ஏன் இந்தக் கொடுமை? துர்க்கை அம்மன்? பெண்களையே பாதுகாக்க முடியாத அம்மனா? உன்னை நம்பியதற்கு நீ தந்த பரிசா இது? எனப் பலவாறும் குழம்பிய வண்ணம் "TS" நடந்து சென்றார்.

"TS"சிற்குத் தான் எங்கே செல்கிறேன் என்பது விளங்கவில்லை. தலை தொடக்கம் உடல் பூராகவும் விறைத்த விட்டது. மின்சார சக்தியை இழந்த பொம்மை போல இயக்கம் குன்றியது. தலையில் படும் மழைத்துளிகள் குண்டூசியாக இறங்கும் சித்திரவதை தொடர்ந்தது. வீணாய் வாழ்வதைவிட விறைத்துச் செத்து விடுவோம் என்று அவருக்குத் தோன்றியது. "TS" நடப்பதை நிறுத்தவில்லை. மெது மெதுவாக நடந்தார். நீ வாழ்ந்து என்ன? இறந்து என்ன? நடந்தது நடந்ததுதான் என்று மனம் அறைந்து சொல்லியது. தனக்குப் பின்னால், முன்னால் என்ன நடக்கிறது என்கின்ற அவதானிப்பு எப்போதோ தொலைந்து போயிற்று. இருந்தும் பாதசாரிகளுக்கான பகுதியாலேயே அவர் நடந்தார்.

திடீரென குயிக் குயிக் எனப் காவல் வாகனத்தின் சமிக்கை அருகில் கேட்டது. "TS" நின்றார். திரும்பிப் பார்த்தார். காவல் வாகனம் பின்னே நின்றது. அதில் இருந்து ஒரு அதிகாரி மழைக்கு அணியும் அங்கியோடு இறங்கி வந்தார். அவரின் முகம் "TS"சிற்குச் சரியாகத் தெரியவில்லை. நல்ல உயரமான உடம்பான தோற்றம். இராணுவத்திற்கு உரிய கம்பீரம். வாகனச் சாரதியின் இருக்கையில் ஒரு பெண் அதிகாரி இருந்தார். அவர் முகத்தை மழையில் நனையும் கண்ணாடியின் ஊடாகத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

"TS"சிற்கு அந்த அதிகாரியைப் பார்த்துச் சிரிப்பு வந்தது. நனையாது இருப்பதற்குத் தான் மழைக்கு அணியும் மேல் அங்கி. நனைந்த பின் எனக்கு எதற்கு அது? நான் மடையன். நீங்கள்? என்கின்ற நினைப்பில் அவர் சிரித்தார். அத்தினை சோகத்தையும் யானையை முழுமையாய் விழுங்குவது போல விழுங்குவதற்கு அது அவருக்கு

அப்போது தேவைப்பட்டது. அந்த அதிகாரி மழைக்கு அணியும் மேல் அங்கியால் "TS"சை அவர் அனுமதி இன்றியே போர்த்தார். தன்னோடு அணைத்து வாகனத்திற்குக் கூட்டிச் சென்றார். வாகனத்தில் இருக்க வைத்து விட்டு அவர்கள் வாகனத்தை ஓட்டிச் சென்றனர்.

அது ஒஸ்லோவின் மிகப் பெரிய காவல் நிலையம். இருந்தும் இரவு என்பதால் மயான அமைதியில் கிடந்தது. "TS"சை அழைத்துச் சென்று ஒரு வெக்கையான அறைக்குள் விட்டார்கள். அதற்குள் இரண்டு கதிரைகள் இருந்தன. ஒரு பக்கம் கண்ணாடிச் சுவர் போன்று இருந்தது. அதனூடே வெளியே பார்க்க முடியவில்லை. அந்த அறையில் சாளரங்கள் எதுவும் இருக்க வில்லை. தரை சாம்பல் நிறத்தில் இருந்தது. சுவர்கள் மெல்லிய நீல நிறமாக இருந்தன. கண்ணைக் கூசும் மின் குமிழ்கள் பல தலைக்கு மேல் ஒளியைப் பாய்ச்சின. எதற்காக இங்கு தன்னைக் கொண்டு வந்தார்கள் என்பது "TS"சிற்கு விளங்கவில்லை. என்னவாய் இருந்தால் என்ன என்கின்ற எண்ணமே அவருக்கு வந்தது.

ஒரு பெரிய வெள்ளைத் துவாய் கொண்டு வந்து அந்தப் பெண் அதிகாரி கொடுத்தார். சிறிது நேரத்தில் மீண்டும் அந்தப் பெண் அதிகாரி அவர் அறைக்குள் வந்தார். அவளிற்குக் கரு நாகமான நீண்ட கேசம். நோர்வேயில் சிலர் குட்டையாக வெட்டிக் கொள்வதும் இல்லை என்பதற்கு அவள் கேசம் சர்வ சாட்சி ஆகிற்று. ஐந்தடி எழு அங்குல உயரம் இருப்பாள். வெள்ளை விழிக்குள் கறுத்தப் பொட்டின் சுழற்சி. மெல்லிய செவ்வரத்தம் பூவின் நிறத்தில் இதழ்களின் பொய் விம்பம். அந்த இதழ்கள் வெடித்துக் கவிதையாய் அடிக்கடி மலரும் புன்னகை. அந்த அதிகாரி கையில் சூடான கோப்பி வைத்திருந்தார். அதை "TS"சிடம் கொடுத்து விட்டுச் சென்றார். சிறிது நேரத்தில் கைதிகள் அணிவது போன்ற ஒரு உடுப்பைக் கொண்டு வந்து கொடுத்து அதை மாற்றிக் கொள்ளச் சொன்னார். "TS" கட்டளைக்குப் பணிந்த இயந்திர மனிதன் போல தனது துவாயால் மேலைத் துவட்டி, உடைகளைக் களைந்து, அவள் கொடுத்த உடைகளை அணிந்து கொண்டார். இனி?

அவருக்கு எந்த எதிர்பார்ப்புக்களும் கிடையாது. இனி எதிர்பார்ப்புக்களே வேண்டாம் என்பதாக மனம் செத்து விட்டது. எதிர்பார்ப்புகள், பந்தம், பாசம் இல்லாத போது உண்மையான அமைதி குடிகொள்ளத் தொடங்குகிறது.

"TS" கதிரையில் இருந்தார். அவரின் கட்டுப்பாட்டையும் மீறிக் கண்களால் கண்ணீர் கண்ணாடி வைரங்களாக உதிர்ந்தன. அப்படிக் கண்ணீர் வடிப்பது அவமானமாய் இருந்தாலும் அதை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. கையாலாகாத தன்னை எண்ண எண்ண அவருக்கு தன்மேல் மேலும் வெறுப்பு உண்டாகியது. என் குடும்பத்தையே பார்த்துக் கொள்ள முடியாத நான் எதற்கு மற்றவர்களுக்கு உபதேசம் செய்தேன் என்கின்ற வெறுப்பு அவருக்குத் தோன்றியது. அவர் கண்களில் இருந்து வற்றாத நதி ஒன்று பெருகிய வண்ணமே இருந்தது. அந்தப் பெண் அதிகாரி வெளியே இருந்து கவனித்தாரா தெரியவில்லை. கண்ணீர் துடைப்பதற்கு கடுதாசி கொண்டு வந்து கொடுத்தார். பின்பு அங்கு இருந்த கதிரை ஒன்றை "TS" முன்பு எடுத்துப் போட்டுவிட்டு அதில் அமர்ந்தார். "TS" எதுவும் பேசவில்லை. அவரைப் பார்த்த வண்ணம் இருந்தார். எதிர்பார்ப்புகள், பந்தம், பாசம் முழுமையாகச் செத்ததாக அவரால் உணர முடியவில்லை.

"உங்களுக்கு என்ன பிரச்சனை? எதற்காக அப்படி நனைந்து கொண்டு நடந்து வந்தீர்கள்?" என்று அந்த அதிகாரி கேட்டார்.

"TS" ஏதோ நிறையவே அவரிடம் கூறினார். அந்தப் பெண் அதிகாரி அதைக் கேட்டுக் கண் கலங்கினார். "TS" வேதனை தாங்க முடியாது குலுங்கிக் குலுங்கி அழ அவரை தன்னோடு அணைத்து ஆறுதல் கூறினார். ஆறுதல் கூறுவது வேறு அனுபவிப்பது வேறு என்பது "TS"சிற்கு விளங்கியது. கூறும் ஆறுதலில் வேதனையை அனுபவிப்பவனால் அங்கொன்றும் இங்கொன்றுமே சில வேளைக் கிரகிக்க முடியும் என்பதை "TS" தற்போது உணர்ந்தார். அந்தப் பெண் அதிகாரி தொடர்ந்து ஒரு மணித்தியாலத்திற்கு மேல் "TS" சோடு கதைத்தார். அதன் பிறகு "TS" தனது கதிரையை விட்டு எழுந்தார். "TS"சை அழைத்துச் சென்று வேறு இரு அதிகாரிகளோடு வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டார்.

கைதி உடுப்புகளோடு "TS" வீட்டிற்கு வந்தபோது வீட்டில் யாரும் இல்லை. அவர்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். உடனடியான கேள்விகள் வராமல் "TS"சால் நிம்மதியாக மூச்சு எடுக்க முடிந்தது. ஈரமான தனது ஆடைகளை உலரப் போட்டார். உடுப்பை மாற்றிக் கொண்டார். உடம்பில் குளிர் ஏறுவது போல இருந்தது. மயிர்க்

குச்செறிந்தது. தொலைபேசியை எடுத்து வேலைத்தளத்திற்குத் தொடர்பு கொண்டார். போர்வையால் முதன் முறை தலையை மூடிக் கொண்டு படுத்தார்.

"TS"சிற்கு நித்திரை வரவில்லை. குளிரில் உடம்பு தூக்கி எறிந்தது. நடந்ததை நினைக்கக் கோபமாக, விசராக, வேதனையாக மனது எரிந்தது. தன் மீது மீண்டும் மீண்டும் கோபம் வந்தது. "TS" நித்திரை வராது யோசனையிலும் குளிரின் நடுக்கத்திலும் ஒரு நிலைப்படாது உழன்றார். மீண்டும் மீண்டும் கட்டுப்பாடு இல்லாது பனிக்கும் கண்ணீர்த் துளிகள் தலையணையில் மௌனமாகச் சங்கமமாகின. அது எவ்வளவு நேரம் தொடர்ந்தது என்பது அவருக்குத் தெரியாது. நித்திரை மெதுவாக மயக்கியது.

5 பெடியள் வந்தார்கள்

மூன்று நாட்கள் காய்ச்சலோடும், யோசனைகள் உடனும் இடை விடாது போராடிய "TS" இரண்டையும் மனித இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளென உதறித் தள்ளி வேலைக்குப் போவது என்று முடிவு செய்தார். அப்படி இருந்தும் முதன்மையான தனது மனத் திருப்தியைப் பூர்த்தி செய்யும் வேலைக்கு அவர் போகவில்லை. அதற்குக் கட்டாயம் போக வேண்டும் என்கின்ற கட்டுப்பாடு எதுவும் இருக்கவில்லை. ஒருவித கடமை உணர்வோடு தனக்குத் தானே முதலாளி என்கின்ற சுதந்திரம் அந்த வேலையில் உண்டு. இரண்டாவது வேலை அப்படி அல்ல. சட்டங்கள் விடுப்பு எடுக்க வசதி செய்தாலும் வேலைக்குப் போகாவிட்டால் முதலாளியின் முகம் சுண்டிப் போகும். சொற்களை உதிர்க்காத மூஞ்சூறாய் அது நீண்டு பாயும். அதைப் பார்ப்பது தர்ம சங்கடம் ஆகும். காய்ச்சலில் நின்ற இந்த மூன்று நாட்களுக்கே முதலாளி முகத்தை ஏழு முழத்திற்குத் தூக்கி வைத்துக் கொள்ளலாம் என்பது "TS"சிற்கு விளங்கியது. தவிர்க்க முடியாத அந்தச் சங்கடத்தை சந்திக்க வேண்டும் என்பது அவருக்கு உறைத்தது. "TS" பதட்டத்தோடு வேலைக்குச் சென்றார். "TS"சை பார்த்த உடனேயே முதலாளிக்கு "TS"சின் உடற் சோர்வும் மனச் சோர்வும் விளங்கி விட்டது. "TS" பொய் சொல்ல வில்லை. நியாயம் ஆகத்தான் செய்து

இருக்கிறார் என்கின்ற நினைப்பு முதலாளிக்கு வந்தது. அத்தால் முதலாளி,

"இப்போது எப்படி இருக்கிறது?" என்கின்ற கேள்வியோடு சம்பாசனையைத் தொடங்கினார்.

அன்று வேலையில் "TS"சிற்கு அதிகம் தொந்தரவு கொடுக்கவில்லை. கட்டாயம் செய்ய வேண்டிய தனது சில வேலைகளை முடித்துவிட்டு "TS" நேரத்திற்கே புறப்பட்டார். இன்னும் இரு வேலை செய்ய வேண்டும். அது பாராளுமன்றத்திற்கும் 'நாசுனால்தியேட்டருக்கும்' இடையில் உள்ள ஒழுங்கையில் இருந்தது. அந்த வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பும் அவசரத்தில் வெளியே வந்தார். வாசலில் மூன்று மனிதர்கள் வழி தெரியாது நின்றார்கள். அவர்களைப் பார்க்க "TS"சிற்கு முதலில் வினோதமாகத் தோன்றியது. இப்படியான ஆடைகளோடு அவர் இதற்கு முன்பு மனிதர்களைக் கண்டது இல்லை. "TS" நோர்வேயில் வெள்ளை இனத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரமே இருக்கிறார்கள் என்று நினைத்து இருந்தார். அந்த மனிதர்களும் வெள்ளையாக இருந்தாலும் அவர்களில் இருவர் கொக்கேசியரைப் போன்று இல்லாமல் மங்கோலியரின் சாயலில் வெளிறி இருந்தனர். ஒருவர் மாத்திரம் நீண்டகால இசைவாக்கத்தின் பயனாகக் கிட்டத்தட்ட கொக்கேசியரைப் போன்று தோன்றினார். அவர்கள் அணிந்து இருந்த ஆடை மிகவும் வித்தியாசமாய் இருந்தது. அது நீல நிறத்திலான நீட்டான மேற்சட்டை. அதன் அடிப் பகுதி பாவாடை போல் சுருக்குகள் உடன் இருந்தது. அதில் ஒரு சாண் அளவிற்கு அது சிவப்பும் வெள்ளையும் நீலமும் கலந்த இறுக்கமான கோடுகளாய் இருந்தன. அதைப் போன்று கையின் முடிவிடத்திலும், தோழ்ப் பட்டைகளிலும், கழுத்தைச் சுற்றி அது மார்பு ஊடாக இறங்கும் வரையும் இருந்தது. மற்றைய பகுதிகள் வானத்தின் நீலத்தை மிஞ்சிப் பிரகாசித்தன. இடுப்பில் வெள்ளியில் செய்யப்பட்ட அழகு உருவங்கள் பொதியப்பட்ட பட்டி அணிந்து இருந்தனர். மார்பின் திறப்பை மூடுவதற்கு வெள்ளியில் செய்யப்பட்ட கொளுக்கி பொதியப்பட்டு இருந்தன.

அவர்கள் சராசரி நோர்வே மக்களைவிடக் கட்டையாகத் தோன்றினார்கள். "TS"சிற்கு அவர்கள் தன்னைவிட உயரும் குறைவு போன்று தோன்றியது. கண்களும் தலை முடியும் கறுப்பாக இருந்தன. முகத்தின் தோல் சுதேசிகள் போன்று வெள்ளை. அவர்கள் நீல நிறத்தில் காற்சட்டை அணிந்து

இருந்தார்கள். "TS"சைத் தயக்கத்தோடு பார்த்தார்கள். அவர்களுக்கு "TS"சை போன்ற மனிதர்களோடு பழக்கம் இருந்து இருக்காது என்பது "TS"சிற்கு விளங்கியது. அவர்கள் தயங்கி விட்டு நோர்வேஜிய மொழியில் ஏதோ கேட்டார்கள். "TS"சிற்கு அது விளங்கவில்லை. நோர்வே மொழியை விரைவாகக் கற்க வேண்டும் என்று "TS" எண்ணினார். அந்த மொழியின் ஆளுமை இல்லாததால் போகும் இடம் எல்லாம் தொந்தரவாய் இருப்பதாய் அவருக்குத் தோன்றியது. அவரிடம் இருக்கும் ஆங்கில அறிவு அவருக்கு இப்போது பெரும் உதவியாக இருக்கிறது. அந்த அறிவை எல்லா இடங்களிலும் பாவிக்க முடியாது. ஆங்கிலம் தெரியாதவர்களும் உண்டு. ஆங்கிலம் பேச விரும்பாதவர்களும் உண்டு. அவர்கள் "TS" என்ன பதில் சொல்கிறார் என்பதற்காகக் காத்து நின்றனர். அதைப் பார்த்த "TS" தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார்.

"தயவு செய்து என்ன கூறினீர்கள் என்று ஆங்கிலத்தில் கூற முடியுமா?"

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். பின்பு அவர்களில் உயரமாகத் தோன்றியவர் ஆங்கிலத்தில் "TS" உடன் பேசத் தொடங்கினார்.

"எங்கே பாராளுமன்றம் இருக்கிறது என்று கூறமுடியுமா?"

"ஓ அதுவா. கிட்டத்தான் இருக்கிறது. அந்த மின் சமிக்கை வரையும் நடந்து வலப்பக்கம் திரும்பினீர்கள் என்றால் பாராளுமன்றத்தைப் பார்ப்பீர்கள்."

"ஓ அப்படியா... மிக்க நன்றி."

"அது சரி உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?"

"கேளுங்கள்."

"உங்கள் மேலங்கியும் தோற்றமும் நீங்கள் வேறு நாட்டில் இருந்து வந்தது போன்று தோன்றுகிறதே?"

அவர் சிரித்தார். "TS"சிற்கு எதற்குச் சிரிக்கிறார் என்பது விளங்கவில்லை. தன்னில் என்ன அறியாமையோ என்கின்ற ஒருவித நாணம் உண்டாகியது.

"நாங்கள் சாமர்கள். இந்த நாட்டில் பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறோம். நடு நோர்வேயில்

இருந்து வடக்கு நோர்வேயுடாக, பின்லாண்ட், சுவீடன், ரஷ்யா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பெரிய நிலப்பரப்பில் நாங்கள் வாழ்ந்து வந்தோம். பல மாற்றங்கள் எங்கள் இருப்பில் நலிவை உண்டு பண்ணிவிட்டன. இனியாவது எங்கள் இருப்பைத் தக்கவைக்க வேண்டும் என்று போராடுகிறோம். நாங்கள் விவசாயம் செய்வதோடு மரைகள் வளர்ப்போம். எங்களுக்கு என்று ஒரு மொழியும், கலாச்சாரமும் உண்டு. எங்களுக்கான சுய ஆட்சிக்காகப் போராடி வருகிறோம். அதைப் பற்றி நடக்கும் ஒரு விவாதத்தைப் பார்ப்பதற்கு இப்போது பாராளுமன்றம் போகிறோம்." என்றனர். "TS" தனது அறியாமையை நினைத்து இப்போது மிகவும் வெட்கப்பட்டார்.

"மன்னிக்க வேண்டும். நான் இந்த நாட்டிற்குப் புதிது... எனக்கு இந்த விபரங்கள் ஒன்றும் தெரியாது."

"பருவாய் இல்லை. தெரியாமல் இருப்பதைவிட கேட்டுத் தெரிந்து கொள்வது எவ்வளவோ மேல். நீங்கள் அதைத்தான் செய்து இருக்கிறீர்கள்."

"உங்கள் பதிலுக்கும் விளக்கத்துக்கும் நன்றி."

"நீங்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்?"

"நான் ஒரு தமிழன். இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவன்."

"நான் உலகச் சிறுபான்மையினர் பற்றிச் சில காலம் படித்தேன். உங்கள் போராட்டத்தைப் பற்றியும் அறிந்து கொண்டேன். நாங்கள் ஓரளவிற்கு அதிஸ்ரம் செய்து இருக்கிறோம். இங்கு உள்ள அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்காமலே எங்களுக்கான அதிகாரத்தைப் பெறும் வாய்ப்பு உண்டு. அப்படியான வாய்ப்பு உங்களுக்கு இல்லை என்பது மனவருத்தமான விடயம். உங்கள் நாடும் ஒரு நாள் சுதந்திரம் அடையும். அதில் நீங்கள் சந்தோஷமாக வாழும் காலம் வரும்."

"நன்றி. மிக்க நன்றி."

"சரி எங்களுக்கு நேரமாகிறது. நாங்கள் அவசரமாகப் போக வேண்டும்."

"போய் வாருங்கள்."

அவர்கள் பாராளுமன்றத்தை நோக்கிச் சென்றார்கள். அதை "TS" சிறிது நேரம் பார்த்த வண்ணம் நின்றார். பின்பு சுரங்கரதம் எடுப்பதற்காய் நாசுநால் தியேட்டரை நோக்கி நடந்தார். மத்திய கிழக்கு நகரங்களுக்கும் ஐரோப்பிய நகரங்களுக்கும் வேறுபாடுகள் நிறையவே இருந்தன. அப்படி இருந்தும் ஒஸ்லோ என்பது இலண்டனைப் போன்ற பிரமாண்டமான நகரம் இல்லை. அதன் பாதைகள், போக்குவரத்துக்கள் விரைவாகவே பிடிபடுகிறது. அவருக்கச் சவால் விடுவது இந்த நாட்டு மொழி மட்டுமே. அது படிப்பதற்கு ஒரு பாடசாலை இருப்பதாக "TS" கேள்விப்பட்டார். வேலை நேரத்தை மாற்றி ஆவது இந்த நாட்டு மொழியைப் பயில வேண்டும் என்று அவர் மீண்டும் எண்ணிக் கொண்டார். இப்போது அவர் போய்க் கொண்டிருக்கும் பகுதி ஒஸ்லோவின் மிகவும் முக்கியமான பகுதி. பாராளுமன்றம் இருக்கும் பகுதியை 'சிங்கமேடு' எனச் சிலர் தமிழ்ப்படுத்திச் சொல்வார்கள். பாராளுமன்றத்தின் முன்பு இரண்டு சிங்கங்களின் பெரிய உருவங்கள் இருக்கின்றன. இது அமைதியான சிங்கங்கள். வாளைக் கையில் கொடுத்து இரத்தத்தை ஆறாக ஓடவிடாத நாடு. அந்தச் சிங்க மேட்டையும் பாராளுமன்றத்தையும் தாண்டி நோர்வேயின் தேசிய அரங்கு வருகிறது. அதன் முன்பு சுரங்கரத நிலையம் உள்ளது. சிறிது தாண்டிச் சென்றால் "கால்யோகன்ஸ் காத்தா" எனப்படும் ஒஸ்லோவின் மிக முக்கிய தெரு வருகிறது. அந்தத் தெருவிற்குப் பல சிறப்புக்கள் உண்டு. அது அரச அரண்மனையில் இருந்து மத்திய புகையிரத நிலையம் வரை நீண்டு செல்லும். முக்கியமான பல வர்த்தக நிலையங்கள் அந்தத் தெருவில் உண்டு. அரண்மனைக்குச் செல்லும் ஊர்வலங்கள் அந்தத் தெருவால் தான் செல்லும். அதையும் தாண்டிச் சென்றால் "யுனிவர்சித்தேத் பிளாஸ்" என்னும் இடம் வருகிறது. அதுவும் அந்தத் தெருவின் தொடர்ச்சி. கடைசியாக அது போய் அரண்மனையில் முடியும். அந்தத் தெருவின் பெயர் ஒரு அரசனின் பெயரை மருவி வருகிறது. அந்தத் தெருவில் சிங்க மேட்டிற்குச் சமாந்தரமாக நின்று பார்த்தால் அரண்மனை கம்பீரமாகத் தெரியும்.

"TS"சிற்குச் சிறிது நேரம் சுற்றி விட்டுப் போகலாம் என்கின்ற ஆசை. ஆகுதிக்காய் எரியும் வயிற்றை எண்ணி அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார். காய்ச்சல் மாறி

இருப்பதும் உடம்பு இளைத்து இருப்பதும் பசியைப் பெரும் சுவாலையாக்கிக் குடலை எரிக்கத் தயாரானது. எரிவை அணைக்க வேண்டும். குடலைக் காக்க வேண்டும். அவர் சுரங்கரத நிலையத்தை நோக்கி அவசரமாக நடந்தார். இவர்கள் எப்படித்தான் இவ்வளவு சுரங்கரத நிலையங்களை அமைத்தார்கள் என்பது "TS"சிற்கு வியப்பைத் தந்தது. இதைவிடப் பெரிதாகப் பரீஸ், லண்டனில் இருப்பதாக அவர் கேள்விப்பட்டது உண்டு. அதை அவர் ஒரு நாளும் பார்த்தது கிடையாது. ஆனால் நோர்வேயில் அதைப் பார்க்கும் போது அவருக்கு வியப்பாக இருந்தது. நிலத்திற்குக் கீழ் இரதம் ஓடுவதால் மேற்பரப்பில் உண்டாகும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கிறது. இத்தினை போக்குவரத்து வசதிகள் இருந்தும் வேலை நேரங்களில் முழி பிதுங்குகிறது. சனத்தொகை கூடக் கூட அது இன்னும் அதிகமாகும் என்று "TS"சிற்குத் தோன்றியது.

*

அந்த வீட்டின் கதவு திறந்து இருந்தது. அதை உண்மையில் வீடு என்று சொல்வது இல்லை. இந்த நாட்டு மொழியில் "கீபிள்" என்பார்கள். அது மிகவும் வசதி குறைந்த ஒரு தற்காலிகக் குடியிருப்பு என்று புரிந்து கொள்ளலாம். அதன் கதவு ஏன் திறந்து கிடக்கிறது? வழமையாகச் சம்பந்தனோ அல்லது பூபாலனோ நின்றால் கதவு சாத்தி இருக்கும். அதற்கும் சில காரணங்கள் இருக்கின்றன. இப்படி இடைத் தங்கல் வீடுகளில் இருப்பவர்கள் பாரபட்சம் இல்லாமல் எதையாவது தூக்கிக் கொண்டு சென்று விடுவார்கள். இரண்டாவது சோற்று மணத்திற்கும் கறி மணத்திற்கும் ஏதாவது புரளிக் கதை சொல்லி விட்டுப் போவார்கள். அதுவும் உள்ளி போட்டு சமைத்தால் மூக்கைப் பொத்தி மூச்சு விடாது போவார்கள். அந்த உள்ளிக்கு ஏன் இவர்கள் இப்படிப் பயந்து சாகிறார்கள் என்பது பல வந்தேறு குடிகளுக்கு விளங்குவது இல்லை. அவர்கள் அதைத் தங்கள் சொந்த நாட்டில் அதிகம் பாவித்தவர்கள். இங்கு வந்த பின்பும் அது கிடைப்பதால் அதைப் பாவிக்கிறார்கள். உள்ளி ஒருவித மணத்தைச் சமைக்கும் போதும், சாப்பிட்ட பின்பு, சாப்பிட்டவரின் வியர்வையிலும் வெளி ஏற்றுகிறது. அந்த மணம் இங்கு அன்னியமாக, அருவருப்பாகப் பார்க்கப் படுகிறது. சிலர் உடுப்பை ஏதாவது அறைக்குள் பூட்டி வைக்காது உள்ளி மணம் பிடிக்கவிட்டால் அது போகும்

வரும் இடம் எல்லாம் மணக்கும். அந்த மணம் வந்தேறு குடிகளின் மூக்கைச் சுரண்டா விட்டாலும் சில சுதேசிகளுக்குக் குடைச்சலை உண்டு பண்ணும். அத்தால் கதவு திறந்து வைப்பதைச் சம்பந்தனும் பூபாலனும் வளமையாகத் தவிர்த்தே வந்தார்கள். இன்று அந்த வளமை எதற்காக மாறியது என்கின்ற மின்னல் அலசல் "TS"சின் மூளையில்.

உள்ளே இருந்து தனக்கு அறிமுகமான பல குரல்கள் வருவதையும் "TS" செவிமடுத்தார். அவருக்கு இது கனவா அல்லது நினைவா என்று விளங்கவில்லை. அவர்கள் இப்படி வருவார்கள் என்கின்ற அனுமானம் அவரிடம் இருக்கவில்லை. அது அவர்கள் குரல்கள் தான். "TS"சிற்கு அது உறுதி ஆகிவிட்டது. அவர் ஆர்வத்தோடு வீட்டிற்குள் புகுந்தார். அங்கே சோபாவில் சொரூபன், அருள், நிமலன் ஆகியோர் தாய் வீட்டிற்கு வந்த பிள்ளைகள் போல் இருந்தார்கள். பூபாலன் தொடர்ந்தும் சமையலில் ஈடுபட்டான். இறைச்சிக் கறிக்கு மரக்கறி இறைச்சியான உருளைக் கிழங்கைப் போட்டு தாராளமாகப் பெருப்பித்து, இரண்டாந் தரமாகச் சோறும் போட்டு இருந்தான். மூன்று பேரையும் பார்த்த "TS"சிற்குத் தாயின் உள்ளத்தவராய் கருணை சுரந்தது. அவர்கள் வாடி வதங்கி இருப்பதாக "TS"சின் மனது வாடியது. அவர்களை எடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்க வேண்டும். அதில் அக்கறை எடுத்துக் கொள்ளத் தாமதம் ஆகியது அவர் மனதை உறுத்தியது. இடையில் சுகமில்லாது படுத்ததால் பல நாட்கள் வீணாகப் போய் விட்ட கவலை வேறு அவரிடம் உண்டு. அது இவர்களுக்குத் தெரியுமா? தன்னைப் பற்றி பெடியள் என்ன நினைப்பார்களோ என்கின்ற ஒரு அசௌகரியம் அவரிடம். இருந்தும் மனச் சுத்தி உடன் செயற்பட்டேன் என்கின்ற துணிவு அவரிடம் இருந்தது.

"TS"சிற்குச் சொரூபனைப் பார்க்க வித்தியாசமாகத் தோன்றியது. அவர் அவனை உற்றுப் பார்த்தார். அவர் பார்ப்பதை அவதானித்த அவன் தனது தலையைத் தடவிக் கொண்டான். "TS"சை ஈர்த்தது அந்த முடிவெட்டே. அது புதிதாக இருந்தது. தலையின் இருபக்கமும் குறைத்து வெட்டுவதற்குப் பதிலா வழித்து விடப்பட்டு இருந்தது. இன்னும் சிறிது போய் இருந்தால் தோல் தெரிந்து இருக்கும். முடிதிருத்துபவர் பழகுவதற்காகச் செய்யவில்லை. பக்கங்களை வழித்து உச்சியைக் குவிப்பது இப்போது வந்துள்ள புதுப் ‘பசன்’ என்பது பற்றி

"TS" அறிந்து இருந்தார். வியட்னாம் போரின் காலத்துக் ‘கிப்பிகள்’ மலை ஏறிவிட்டார்கள். அவர்களின் சுதந்திர வெறியாட்டம் அடங்கிப் போய்விட்டது. பிள்ளைகள் பெற்றுக் குடும்ப வாழ்வில் ‘கிப்பி’களுக்கான ஓர்மத்தை அவர்கள் இழந்து போனார்கள். இப்போது புதிதாக இப்படிச் சிலர் முளைத்து இருக்கின்றனர். இளவயது வளைந்து கொடுக்கக் கூடியது. எந்தக் கலாச்சாரத்திலும் கரைந்து போகக் கூடியது. சொரூபன் இங்குள்ள நவீனத்தைக் கற்பூரம் போல் பற்றிக் கொள்கிறான் என்பது விளங்கியது. "TS" விசயத்தை விளங்கிக் கொண்டார். என்றாலும் அவனின் வாயால் அதைக் கேட்க வேண்டும் என்கின்ற ஒரு மெல்லிய குரூர ஆசை அவரிடம்.

"உது என்ன சலூன்ல பிழையா வெட்டிப் போட்டாங்களே?" என்று அவனைப் பார்த்து அப்பாவியாய் கேட்டார்.

"உங்களுக்கு இது விளங்காது அண்ணை. இது தான் இப்பத்தேப் பசன்." என்றான் அவன் ஒரு புன்சிரிப்புடன்.

"ம்… ஒரு காலத்தில வளர்த்தாப் பசனா இருந்திச்சுது. இப்ப வழிச்சாப் பசன் ஆகீட்டுது. மாற்றங்கள் மட்டும் மாறாத உலகம்."

"அதுதான் அண்ணை உண்மை. பிறகு கொஞ்ச நாளில வளர்த்தாப் பசன் ஆகும்." என்றான் சொரூபன்.

"சும்மா புல்டா விடுகிறான் அண்ணை உவன். உவன் நித்திரை துாங்க அவன் மேல ஏறி இருந்து மொட்டை அடிக்கத் தொடங்கீட்டான். பிறகு முழிச்சுக் குளற சமாளிச்சு வெட்டி இருக்கிறான்." என்று சொரூபனை வம்பிற்கு இழுத்தான் அருள்.

"அருள் அண்ணைக்கு வயசு போயிட்டுது. அவருக்கு இனி இந்தப் பசன் எல்லாம் விளங்காது." என்றான் சொரூபன்.

"அது சரி... நீங்கள் என்ன திடீர்ப் பயணம்?" என்றார் "TS".

"நீங்கள் இல்லாமல் அங்க இருக்க விசரா இருந்திச்சுது. நானே வெளிக்கிட வேணும் எண்டன்." என்றான் நிமலன்.

"அங்க கிழமைக்கு ஒரு நாள் வேலை வாறதே கஸ்ரம் போல இருக்குது அண்ணை. அப்பிடியே அகதி முகாமில இருக்கிறது ஒண்டுக்கும் உதவாது எண்டும் விளங்கிச்சுது.

நாங்கள் நாலுபேரும் வெளிக்கிட்டு வந்திட்டம்." என்றான் அருள்.

"மூண்டு பேர்தானே வந்து இருக்கிறியள். எங்க சிவா. பிந்தி வருவானே?"

"இல்ல அண்ணை... அவர் தன்ரை ஒண்டுவிட்ட அண்ணா இருக்கிறார்... அவரிட்டைப் போகிறன் எண்டு சென்றல் ஸ்ரேசனில இருந்து வஸ் எடுத்துக் கொண்டு போகிறார்... அவற்றை அண்ணை அவருக்கு எங்கையோ சாப்பாட்டுக் கடையில வேலை வாங்கித் தாறன் எண்டு சொன்னவராம்."

"ஓ அப்பிடியே சங்கதி. சரி உங்களுக்குப் பசிக்க இல்லையே?"

"ஐயோ அண்ணை... காலமை வெளிக்கிட்டது. பசி குடலைத் தின்னுது. வாய்விட்டு எப்பிடிக் கேக்கிறது எண்டு நாங்கள் நெளிஞ்சு கொண்டு இருக்கிறம்." என்றான் அருள்.

"சரி அப்ப கையைக் கழுவுங்கோ. பூபாலன் சாப்பாடு போட்டுக் குடுக்கிறீரே? அல்லது நானும் உதவிக்கு வரவோ?"

"வேண்டாம் அண்ணை... முட்டை உடைச்சு முடிஞ்சுது. நானே சாப்பாடு போட்டுக் கொண்டு வாறன். இங்க இரண்டு பிளேற்றுத் தானே இருக்குது. சம்பந்தன் அண்ணாவின்ரை புது பிளேற்றில மூண்டு கொண்டு வந்து தாங்க."

"அவன் ஏதும் சொல்லுவானேடா?"

"நீங்கள் எடுத்தது எண்டா அவர் ஒண்டும் சொல்ல மாட்டார் அண்ணை."

"சரி அப்ப எடுத்து வாறன்."

நிமலன் "Video caset"ஐக் கண்டு விட்டு அதை எடுத்து "Video Deck"கின் உள் திணித்தான். அது மீனம்மா மீனம்மா என்று பாடத் தொடங்கியது. பாட்டு அரைவாசி, காட்சி அரைவாசியாக வாய்கள் ஓய்ந்து கதை தணிந்து போயிற்று.

பூபாலன் எல்லோருக்கும் சாப்பாடு பரிமாறினான். எல்லோரும் தொலைக்காட்சியைப் பார்த்த வண்ணம் சாப்பிட்டார்கள். "TS" யோசிக்கத் தொடங்கினார். எப்படி என்பது அவருக்கு விளங்கவில்லை. சம்பந்தனோடு

கதைத்தால் அவன் ஒரு வழி சொல்லுவான் என்று தோன்றியது. இன்னும் சிறிது நேரத்தில் சம்பந்தன் வந்து விடுவான் என்பதில் அவருக்கு ஒருவித நிம்மதி ஏற்பட்டது.

6 புதுமனை

சம்பந்தன் வந்தான். வீட்டில் இவ்வளவு ஆட்கள் இருப்பார்கள் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. "TS" ஏதாவது செய்தால் அதில் மனிதாபிமானம் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். அவன் எதுவும் பேசவில்லை. அவர்கள் தொடர்ந்தும் சிங்கப்பூர் கொப்பியைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். சம்பந்தனும் அதைப் பார்த்துப் பார்த்துச் சாப்பிட்டான். அவன் சாப்பிட்டு முடியும் வரை பார்த்துக் கொண்டு இருந்த "TS" அவனைப் பார்த்து,

"சம்பந்தன் ஒருக்கால் வெளியால போட்டு வருவமே?" என்றார்.

"ஓம்... அதுக்கு என்ன? போயிட்டு வருவம் அண்ணை." என்றான்.

"நானும் வரட்டே?" என்று நிமலன் உடனே கேட்டான்.

"வரட்டும் அண்ணை... நாங்கள் என்ன இரகசியமே கதைக்கப் போகிறம்?" என்றான் சம்பந்தன்.

"சரி வா." என்றார் "TS".

மூவரும் புறப்பட்டுப் பாரம் தூக்கியில் ஏறிக் கீழே வந்து இறங்கினார்கள். வெளியே வெயில் மறைந்து குளிர், தோற்றுப் போன நாட்டைத் துவசம் செய்வது போலத் தனது ஆட்டத்தைத் தொடங்கி இருந்தது. அப்படி இருந்தும் ஆதவ ஒளியின் இறக்கும் தருணத்திலான இறுதிப் போராட்டம், வர்ண ஜாலத்தோடு வானில் தொடர்ந்தது. நீ மாண்டு விழுந்தாலும் போரைத் துவக்க நாம் மீண்டு எழுவோம் என்பதாக விழித்துக் கொண்ட மின் குமிழ்கள். இளம் பெண் ஒருத்தி முழு அங்கி அணிந்த வண்ணம் தனது நாயோடு உலாப் போனாள். அந்த நாய் கறுப்பு நிறமானதால் அதன் கண் மாத்திரமே மினுக்கத்தோடு மனிதப் பார்வைக்கு முதலில் புலப்பட்டது.

சிறிது தூரத்தில் ஒரு மின் விளக்கின் கீழ் அவள் இவர்களைச் சந்தித்தாள். அது ஒரு மாட்டுக் கண்டின் உயரம் இருக்கும். அதன் இழுவைக்கு அவள் நடை ஓட்டமாக மாறி இருந்தது. ஒரு முறை இவர்களைப் பார்த்துவிட்டு அது தன்வழியில் தொடர்ந்தும் ஓடியது. அவள் தனது பொன்னிறக் கேசம் அலை அலையாகப் பின்னோக்கிப் பாய முன்நோக்கி ஓடினாள். அப்படி ஓடும் போது மின் ஒளியின் கீழ் அவள் ஒரு முறை இவர்களைப் பார்த்தாள். சாம்பல் நிறத்திலான அவள் விழிகள். அதன் நடுவே குந்தியிருக்கும் கறுப்பு வைர மணிகள். இவர்களின் கண்களில் தான் எத்தினை வகைகள்? "TS"சிற்கு அதில் மாறாத மலைப்பு. ஒவ்வொருவரது கண்ணும் ஒவ்வொரு விதமாக இருக்கும். "TS" பல வித்தியாசமான கண்களைக் கண்டு இருக்கிறார். அதன் மூர்க்கத்தை இங்கே போல் அங்கே கண்டது இல்லை.

இரண்டு இளம் சுதேசிகள் வாகனத் தரிப்பிடத்தில் கதைத்த வண்ணம் நின்றார்கள். அதில் ஒருவன் கையில் வாகனத்தின் சாவியை வைத்து இருந்தான். எங்கோ புறப்பட்டுச் செல்லப் போனவன் நண்பனைக் கண்டதும் கதைத்த வண்ணம் நிற்பதாக "TS"சிற்குத் தோன்றியது. அவர்கள் ஆறடி உயரத்திற்கு மேல் இருப்பார்கள். சுதேசிகள் பொதுவாக எங்களைப் போல் குள்ளம் இல்லை என்று "TS" எண்ணிக் கொண்டார். பல மனிதர்கள் ஆறு அடி என்கின்ற எல்லையை மீறிய வளர்த்தி கொண்டவர்கள். அவர்கள் மரபணுபா அல்ல ஊட்டமான சாப்பாடா அதற்குக் காரணம் என்பது அவருக்கு விளங்கவில்லை. இரண்டும் காரணமாக இருக்கலாம் என்று அவர் எண்ணிக் கொண்டார்.

சோமாலியா நாட்டுப் பெண் ஒருத்தி முகம் மாத்திரம் தெரியும்படி கறுத்த மேல் அங்கியால் தன்னை மறைத்த வண்ணம் இரு பெண் குழந்தைகளோடு நடந்து வந்தாள். பெண் குழந்தைகள் ஐரோப்பியரைப் போல ஆடை அணிந்து இருந்தனர். கறுப்பு வைரக் கம்பிகளாய் சுருண்டு கிடந்த தலை முடி. சுழன்று கதை சொல்லும் கரு விழிகள். அழகான சிறிய இதழ்கள். அதற்கேற்ப சிறிய கிழி மூக்கு. அவர்கள் கறுப்பில் அழகான குழந்தைகள். தாயைப் போல பிள்ளை என்றால் தாயும் அழகாகத்தான் இருப்பாள் என்பது "TS"சிற்கு விளங்கியது. அழகு இரசிப்பதற்கு. ஆண்களின் தர்பாரில் போட்டியாக அமைந்து விடுமோ என்கின்ற பொறாமையில்

உருவாக்கப்பட்ட திரைகள் அதற்குப் பல. அதைக் கலாச்சாரமாக, பண்பாடாக, அடையாளமாகப் பெண்களே பாதுகாத்துக் கொள்ளும் மடமை எங்கும். ஆணிற்கே சுதந்திரம் பெண்ணிற்கு அடிமை வாழ்வு என்பது பெரும் சமுதாயக் கட்டமைப்பாக. "TS"சிற்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. இருந்தும் பாதிப்பிற்கு உள்ளானவர்களே அதற்கு எதிராகப் போராட வேண்டும் என்பதை அவர் வலுவாக நம்பினார்.

பிரதான பாதையால் இன்னும் வாகனங்கள் அவசரமாய் போய் வந்தன. வேலை முடிந்து வீட்டிற்கு அவசரமாகப் போகும் மனிதர்கள். அன்றைய நாளின் பிரதான உணவிற்காகக் குமுறும் அவர்களின் அடிவயிறுகள். இந்த வயிற்றை இறைவன் கொடுக்காது விட்டு இருந்தால் பல மனிதர்கள் இயங்காது சோம்பி இருப்பார்கள். வயிறு மனித வாழ்வின் பிறப்பிடம் ஆகிறது. கருவும் அங்கே தான் உருவாகிறது. மனிதன் இயங்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தும் கருவியும் அங்கு தான் இருக்கிறது. "TS" மேலங்கியின் "Zip"ப்பைச் சாதுவாக மேலே இழுத்து விட்டார். நிமலன் ஏற்கனவே பொத்திக் கட்டி விட்டான். "TS"சைப் பார்த்து விட்டுச் சம்பந்தனும் "Zip"ப்பை இழுத்து விட்டான். அதைத் தொடர்ந்து "TS" கதைக்கத் தொடங்கினார்.

"பெடியள் வந்து இருக்கிறாங்கள். உமக்கு நான் திரும்பவும் சங்கடம் தரவேண்டி இருக்குது. அவங்களுக்கும் வேற யாரும் இல்லை. நாங்கள் உதவி செய்ய வேணும். என்னிட்டை ஒரு திட்டம் இருக்குது." என்று நிறுத்தினார் "TS".

"சொல்லுங்க அண்ணை." என்றான் சம்பந்தன்.

"நான் ஒரு பிளாற் வாடகைக்கு எடுக்க வேணும். அப்ப நானும் பெடியளும் அங்க இருக்கலாம். உம்மடை பிளாற்றில இனி நாங்கள் எல்லாரும் இருக்க ஏலாது. அதால உமக்குப் பிரச்சனை வரும்."

"அப்பிடி ஒண்டும் எனக்கு இதால பிரச்சனை இல்லை."

"உமக்குப் பிரச்சனை இல்லாட்டியும் கட்டடத்தைப் பராமரிக்கிறவன் கண்டாப் பிரச்சனை ஆகும். அதுக்கு நான் இடந்தர முடியாது."

"ம்... அது ஒரு விஷயம் இருக்குத்தான்."

"நாங்கள் இரண்டு அறை பிளாற் ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போனால் எல்லாத்துக்கும் வசதியாய் இருக்கும். நீர் என்ன சொல்லுகிறீர்?"

"நீங்கள் இங்க இருந்தாலும் எனக்குப் பிரச்சனை இல்லை. அவங்கள் லேசில செக் பண்ண மாட்டாங்கள்."

"அது முடியாது சம்பந்தன். உதுக்க இண்டைக்கு இரவுக்கே எப்பிடி எல்லாரும் நித்திரை கொள்ள முடியும் எண்டு யோசிச்சுப் பாரும். ஆகக் குறைஞ்சது அரையடி அரையடி இடைவெளி ஆட்களுக்கு இடையில இருக்க வேண்டாமே? நாங்கள் இவ்வளவு ஆட்கள் இருக்கிறதை யாரும் கண்டாலும் அடிச்சுச் சொல்லுவாங்கள் தானே?"

"ம்... நீங்கள் சொல்லுகிறதிலும் உண்மை இருக்குதுதான்."

"எனக்கும் இதில ஒரு சுயநலம் இருக்குது. இப்ப வீடு வாடகைக்கு எடுத்தா எல்லாருக்கும் பயன்படும். அதே நேரம் என்னோட பெடியள் இருந்தாச் செலவும் பங்கிடலாம். பிறகு எனக்கு வீடு தொடர்ந்தும் பயன்படும். வேலை இருக்குது. அதுக்கான துண்டு வாங்கி வைச்சு இருக்கிறன். வாடகைக்கு அது உத்தரவாதமாய் இருக்கும். இந்தப் பச்சை அட்டையைப் பாத்திட்டு ஏதும் பின்னடிக்கிறாங்களோ தெரியாது."

"எனக்கு ஒரு பாக்கிஸ்தான் பெடியன் பழக்கம். அவன் உந்த வேலைதான் செய்கிறான். அவனிட்டைப் போனா நிச்சயம் ஏதாவது ஏற்பாடு செய்வான்." என்றான் சம்பந்தன்.

"நாளைக்கு உனக்கு என்ன மாதிரி வசதி?" என்று கேட்டார் "TS" .

"நாளைக்கு எனக்கு வேலை. கொஞ்சம் வெள்ளன வேலையை முடிச்சுக் கொண்டு வாறன். அவனைப் போய் பார்க்கலாம். அவன் ஒரு விசிற்றிங்காட் தந்தவன். அது எங்க கிடக்குதோ தெரிய இல்லை. தேடி எடுத்தா நாளைக்கு வேலையில இருந்து போன் செய்து விஷயத்தைச் சொல்லி வைக்கலாம். பிறகு பின்னேரம் நேர போய் பார்க்கலாம்."

"அது நல்ல திட்டம் தான். நாங்கள் அவனைப் போய் பார்ப்பம். அதைவிட வேற யாரைக் கேட்கலாம்?"

"எனக்கு தெரிய இல்லை. நொஸ்க்குகள் என்ன மாதிரியான உத்தரவாதம் கேட்பாங்கள் எண்டும் தெரியாது." என்றான் சம்பந்தன்.

"எப்பிடி எண்டாலும் ஒரு வீடு எடுக்க வேணும்."

"நீங்கள் வீடு வாங்கலாமே அண்ணை?" என்று நிமலன் தனது கருத்தை திடீரெனத் தெரிவித்தான்.

"அதுக்கு நிறையக் காசு வேணும். எங்களுக்கு எப்பிடி இந்தப் பச்சை மட்டையோடை கடன் தருவான். பாஸ்போட் வந்தா முயற்சிக்கலாம்" என்றார் "TS".

"அது கெதியா வரும். வந்த பிறகு வீட்டை வாங்குகிறது புத்தி. சும்மா தூக்கி கொண்டு அலையத் தேவை இல்லை. வாடகையாய் கொடுக்கிற காசு திரும்பி வராது. கடன் எடுத்து வீடு வாங்கினாலும் அதில மிச்சம் இருக்குது." என்றான் பூபாலன்.

"நீர் சொல்லுகிறதும் உண்மைதான்." என்றார் "TS".

"எங்களால உங்களுக்குத் தேவை இல்லாத சிக்கல்." என்றான் நிமலன்.

"இது உங்களுக்காக மட்டும் இல்லை. இதில எனக்கும் ஒரு சுயநலம் இருக்குது எண்டன். இது எல்லாருக்கும் உதவியாகத்தான் இருக்கும். அதைவிட உங்களுக்கு நாங்கள் உதவி செய்யாமல் யார் உதவி செய்கிறது சொல்லு பார்ப்பம்." என்றார் "TS".

ஒளியை இருள் விழுங்கி ஏப்பம்விட மின்னொளி வெல்ல முடியாத யுத்தத்தை இருள் என்னும் வல்லரசை நோக்கி இன்றும் என்று போல் தொடங்கியது. வெல்ல முடியாத யுத்தம்? "TS"சின் சிந்தனை விண்ணில் பறக்கும் குதிரை ஆகியது.

வெல்ல முடியாத யுத்தம்? அப்படி எதாவது இருக்கிறதா? மூர்க்கமாக, ஒற்றுமையாகப் போராடினால் வெற்றி பெற முடியாதா? பெற முடியும். இனி நாட்டில் ஒற்றுமையாகப் போராடுவது சாத்தியம் ஆகாது. மூர்க்கமாகப் போராட முடியும். அதற்கு அவர்கள் மற்றவர்களைவிடத் திறமையானவர்கள். வீரம் செறிந்தவர்கள். சுயநலம்

இல்லாதவர்கள். உயிரைத் துச்சமாக மதிப்பவர்கள். ஈழத்தை உயிர் மூச்சாய் சுவாசிப்பவர்கள். உறவு, பந்தம், பாசம் எல்லாவற்றையும் தமிழுக்கும் தமிழ் ஈழத்திற்கும் அர்ப்பணித்த மாவீரர்கள். ஈழத்தமிழருக்கு விடிவு வருவது என்றால் அவர்களால் தான் அது வரவேண்டும். தனி மனித பாதிப்புகளோ, குரோதங்களோ பொதுவான தமிழரின் விடுதலைக்கு எதிராக ஒரு போதும் வரக்கூடாது. போராட்டத்தில் பிழைகள் ஏற்படுவது வழமை. அதற்காக எங்கள் மூச்சான விடுதலைக்கு மூர்க்கமாகப் போராடுபவர்களை நாங்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்க முடியாது. சிவா வித்தியாசமானவன். அவன் இருந்த தளம் அப்படி. தளத்தில் தப்பு நடந்து இருக்கலாம். அது தவிர்க்க முடியும் என்றால் தவிர்க்கப்பட்டு இருக்கும். தவிர்க்க முடியாது என்கின்ற கட்டத்தில்தான் மாபெரும் அந்தத் தவறு நடந்து இருக்கும். இன்றும் பல்லின் ஊத்தையைக் குத்திக் காட்டுவதில் யாருக்கு என்ன இலாபம்? இப்போது இருக்கும் நிலையில் இனி நாட்டின் போக்கு எப்படிப் போக வேண்டும் என்பதை அவன் யோசிக்க வேண்டும். அன்றில் அது வெறும் சுயநலப் பிதற்றலாக மாறிவிடும்.

கேட்பதற்குக் கசப்பாய் இருந்தாலும் சிவா நியாயம் ஆனவன். சில வேளை அதுவே எங்களைக் கவிழ்த்து விடும். கண்ணுக்குக் கண் பதில் இல்லை. இலங்கை அரசின் காட்டுமிராண்டிப் பதிலே யுத்தம் ஆகியது. கண்ணுக்குக் கண் என்பது நிச்சயம் எங்களுக்குள் ஆவது நடந்து இருக்கக் கூடாது. அதற்கு மற்றவர்களும் தாங்கள் எப்படிச் சார்ந்து இருக்கிறோம் அதற்கு என்ன அர்த்தம் என்பதை அறிந்து செயற்பட்டு இருக்க வேண்டும். இப்படி ஒன்று நடக்கலாம் என்கின்ற ஊகம் இருந்து இருக்க வேண்டும். முறுகல் இல்லாது இருக்கவில்லை. அந்த முறுகலைக் கருத்தில் எடுத்திருக்க வேண்டும். பேரழிவு வராது தடுத்து இருக்கலாம். நடந்த அந்தச் சம்பவத்தை இனி யாராலும் மாற்ற முடியாது. நாட்டின் விடுதலைக்கு எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டும். அதில் பாகுபாடு பார்க்கக் கூடாது. பார்க்கிறார்கள். அவர்கள் நிலையில் அது சரி என்கிறார்கள். நாட்டின் நிலையில் அது பிழை இல்லையா? அன்று அவர்களைத் தாக்கியதும் இன்றும் இவர்களை எதிர்ப்பதும் நாட்டிற்கு நன்மை தரப் போவதில்லை.

"என்ன அண்ணை அமைதி ஆகீட்டியள்?" என்று நிமலன் "TS"சைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லச் சிவாவைப் பற்றித் தான்..."

"அவர் சில வேளை சுள் சுள் எண்டு கோவப்படுவார். சில வேளை கலைச்சுக் கலைச்சு நக்கல் அடிப்பார். எங்களிட்ட இந்த அட்றெஸ் வாங்கினவர். உங்களைச் சந்திக்க வருவார் எண்டு நினைக்கிறன்." என்றான் நிமலன்.

"சிவாவும் எங்களோடை இருந்தா இன்னும் பம்பலா இருக்கும்."

"கடியாகவும் இருக்கும் அண்ணை."

"உனக்கும் பொழுது போகத் தானே வேணும்." என்றார் "TS".

"பொழுது போகுதோ இல்லையோ காது புளிக்கும்." என்றான் நிமலன்.

ஒரு யுவதியும் இளைஞனும் தோழில் கை போட்டுக் கொண்டு சென்றார்கள். மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் முகங்கள் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு வாகனம் ஒற்றைக் கண்ணுடன் அரைக் குருடாக ஓடியது. அப்படி ஓடினால் தண்டனைப் பணம் கட்ட வேண்டும் என்று வாகனத்தில் வேலைக்குப் போகும் போது சக தொழிலாளி "TS"சிற்குக் கூறினார்.

"சம்பந்தன் அப்ப சொல்லு?"

"பெடியள் சமாளிச்சுப் படுக்கட்டும். நான் வேணும் எண்டா இவரைக் கூட்டிக் கொண்டு போய் என்ரை பிறண்ட் வீட்டில படுக்கிறன். அப்ப தான் மற்றவை காலைக் கைய நீட்டிப் படுக்கலாம். நாளைக்கு நீங்கள் ஏதாவது சொல்லி சமாளிச்சிட்டு றெடியா இருங்க. இரண்டு பேரும் போட்டு வருவம்."

"ம்… சரி உனக்கும் எங்களால கஸ்ரம் தான்."

"இதில என்ன கஸ்ரம். இதுவும் செய்யாட்டி, நாங்கள் தமிழர்... ஒரே ஊர்க்காரர் எண்டு சொல்ல முடியுமே?"

"உனக்குப் பெரிய மனசு." என்றார் "TS" .

ஒரு சுதேச இளம் சோடி வந்து பாரம் தூக்கியில் இவர்களோடு ஏறினர். இவர்களைப் பார்த்துக் காய் என்றார்கள். இவர்களும் காய் என்றார்கள். அந்தப் பெண்ணிற்கு பொன் போன்ற சுருள் முடி. வைரம் போன்ற மென் பச்சைக் கண்கள். மெல்லிய செவ்வலரி மொட்டு போன்ற இதழ்கள். அவள் கறுப்பு மேலங்கி அணிந்து இருந்தாள். இதழ்களின் வண்ணக் கோணலின் தொடர்ச்சியாக மாறாத புன்னகை. அந்த இளைஞன் மிகவும் வளர்த்தியாகத் தோன்றினான். அவனுக்குக் கறுத்த முடியும் கறுத்தக் கண்களும். அதிகம் கதைக்காத சுபாவமாய் இருக்க வேண்டும். அறிமுகத்தோடு இறுகிக் கொண்ட இதழ்கள். கணத்தில் பாரம் தூக்கி மூன்றாவது மாடியில் நின்றது. அவர்கள் இறங்கிச் சென்று விட்டார்கள்.

வீட்டிற்குள் வந்த போது பூபாலன் பத்திரிகை ஒன்றைச் சம்பந்தனிடம் காட்டினான். அது நொஸ்க்கில் இருந்தது. "TS"சிற்கு என்ன எழுதி இருக்கிறது என்பது விளங்கவில்லை. சம்பந்தன் ஏதோ எழுத்துக் கூட்டி வாசித்தான். பின்பு பூபாலனைப் பார்த்து,

"எல்லாம் அரசியல்." என்றான்.

"எதைப் பற்றி சொலுறீர்?" என்றார் "TS".

"இல்லை. பாலிமென்ற்றில சட்டத்தை மாத்துகிறது பற்றிக் கதைக்கினம்."

"எந்தச் சட்டத்தை?"

"மனிதாபிமான முறையில அகதிகள் தங்க அனுமதி தாற சட்டத்தை இறுக்க வேணும் எண்டு கதைக்கினம். இதைத் தொழிற்கட்சி மற்றக் கட்சிகளின்ரை ஆக்கினைக்காக செய்யுது. இல்லாட்டித் தங்களுக்கு வாக்குக் குறைஞ்சு போயிடும் எண்டு பயம். இங்க "பிறம்ஸ்கிறித் பாட்டி" எண்டு ஒரு கட்சி இருக்குது. அவங்கள் வெளிநாட்டுக் காரருக்கு எதிராகத்தான் கதைப்பாங்கள். அவங்களுக்கு இப்ப சாதுவாகச் சப்போட் கூடுது. அதைப் பார்த்துத் தொழிற்கட்சிக்கு வாக்குப் பயம் வந்திட்டுது. அதைவிட டென்மார்க் அகதிகளை ஏற்காததால இப்ப இங்க வாற சனம் கூடிட்டுது. அது அந்த பிறம்ஸ்கிறித் பாட்டிக்கு மெல்ல அவல் கிடைச்ச மாதிரி. தொழிற்கட்சிக்கு ஆப்பிழுத்த குரங்கு கணக்கான சங்கடம். டொக்ரர் அம்மாவுக்கு ஏதாவது செய்ய வேணும் எண்ட கட்டாயம்.

அதுதான் தாங்களும் லேசான ஆட்கள் இல்லை எண்ட மாதிரி சட்டத்தை மெதுவா இறுக்குகினம்."

"எங்களுக்கு இன்னும் பாஸ்போட் வரேல்ல." என்றார் "TS". சிந்தனைக் கோடுகள் அவரின் சந்தோஷத்தை அடித்துச் சென்றதான தோற்றம்.

"பயப்பிடாதேங்க அண்ணை. பச்சை அட்டை தந்தாலே கிட்டத்தட்ட பாஸ்போட் கிடைச்ச மாதிரித்தான். சட்டம் இயற்றினாலும் அது நடைமுறைக்கு வரக் கனகாலம் எடுக்கும். நடைமுறைக்கு வந்தாலும் இந்த கவர்மென்ற் இருக்கும் வரைக்கும் பெரிய மாற்றம் ஏதும் இருக்காது." என்றான் சம்பந்தன்.

"ஆறுதலுக்கு சொல்லுறீர் ஆக்கும்?" என்றார் "TS".

"இல்லை அண்ணை. இங்கத்தே நடைமுறை அதுதான்." என்று திடமாகச் சொன்னான் சம்பந்தன்.

"அது என்ன டொக்ரர் அம்மா எண்டு சொன்னீர்?"

"ஓ இப்ப இருக்கிற பிரதமர் ஒரு டொக்ரர்தான். அவவுக்கு "குறுகாலம் வுருந்லாண்ட்" எண்டு பெயர்."

"சிறிமா மாதிரியோ?"

"அப்பிடிச் சொல்ல ஏலாது. இவவும் பெண் பிரதமர் தான். அதுக்கு இவவைச் சிறிமாவோடை ஒப்பிட முடியாது. இவங்கள் சிந்திக்கிற விதமே வேறையா இருக்குது. பதவிக்காக நாட்டைச் சூதாட நினைக்க மாட்டினம்."

"அதுதான் இந்த நாடுகள் இப்பிடி முன்னேறி இருக்குதுகள்."

"Video Deck"இல் திணிக்கப்பட்ட பிரதியில் இருந்து இரயில் பயணங்கள் ஓடத் தொடங்கியது. பலரது கண்களும் சிந்தனையும் தொலைக்காட்சியில் ஒட்டிக் கொண்டன. அன்று கேட்ட செய்தி "TS"சின் நெஞ்சை இடைவிடாது கூரிய வாள் கொண்டு குற்றிக் கிழித்தது. அந்த வலியை யாருக்கும் காட்டாது "TS" அவர்களோடு இருந்து தொலைக்காட்சி பார்த்தார். பூபாலன் கொத்து ரொட்டி செய்யப் போவதாய் மாக் குழைத்தான். அவனுக்கு விதம் விதமாய் சமைப்பது பிடிக்கும். நிமலன் அவனோடு ஒட்டிக் கொண்டு அவனுக்கு உதவி செய்தான். கொத்து ரொட்டிக்கு ஆட்டிறைச்சிதான் தோதாக இருக்கும் என்று

கூறிவிட்டு சம்பந்தன் கடைக்குப் புறப்பட்டுச் சென்றான். அருளும், சொரூபனும் வெங்காயம் மிளகாய் துப்பரவு செய்த வண்ணம் படம் பார்த்தார்கள்.

நல்ல உறைப்போடு ஊர்ச் சாப்பாடு புது அனுபவமாய் இருந்தது. இனி விரும்பியதைச் சமைத்துச் சாப்பிடலாம் என்பது அவர்களுக்கு ஒருவித குசியைத் தந்தது.

*

அடுத்த நாள் பின்னேரம் "TS"சும் சம்பந்தனும் புறப்பட்டு "குரன்லாண்டிற்குச்" சென்றார்கள். குரன்லாண்டில் சமீரின் அலுவலகம் இருந்தது. அந்த அலுவலகம் "ஆக்கர்ஸ் எல்வா" எனப்படும் ஆற்றைத் தாண்டி வருகின்ற மின்சமிக்கையில் முதலாவது இடப்பக்கம் திரும்பிப் போக ஒரு மாடிக் கட்டடத்தில் இருந்தது. அதன் கதவில் "சமீர் கான்" என்று எழுதியதை வைத்துச் சம்பந்தன் அழைப்பு மணியை அழுத்தினான். அது உயிர் பெற்றதும் ஒரு பெண்குரல் யாரைப் பார்க்க வேண்டும் என்று நோஸ்கில் கேட்டது. "சமீர்" என்று சம்பந்தன் பதில் கூறியதும் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. சம்பந்தன் எட்டிக் கதவை இழுத்தான். அல்லது மீண்டும் ஒரு முறை அழைத்துத் திறக்குமாறு கேட்க வேண்டும். இருவரும் உள்ளே புகுந்து இரண்டாவது மாடிக்குச் சென்றார்கள். அங்கேயே சமீரின் அலுவலகம் இருக்கிறது. சமீரின் அலுவலகத்தில் அவன் மாத்திரம் மட்டுமே வேலை செய்வான் என்பது சம்பந்தனின் கணிப்பு. ஒரு பெண் தங்கள் அழைப்பிற்குப் பதில் அளித்த போது அந்த அவிப்பிராயம் மறைந்து போயிற்று.

இருவரும் படிகளால் ஏறி மேலே சென்றார்கள். கறுப்பான, பலமான கதவு சுவர் போல அனுமதி மறுத்தது. அந்தக் கதவின் நடுவில் உள்ளே இருந்து பார்க்கக் கண்ணாடி இருந்தது. கதவின் ஒரு பக்கத்தில் இன்னும் ஒரு அழைப்பு மணிக்கான அழுத்தி. சம்பந்தன் அதை அழுத்தினான். யாரோ நடந்து வரும் டொக் டொக் குதிரை ஓசை கேட்டது. அதையடுத்துக் கதவு திறந்து கொண்டது. சம்பந்தனின் வாயும் அதனுடன் திறந்து கொண்டது. "TS"சிற்கும் ஆண்டவனின் அற்புதம் என்ற எண்ணம் ஒரு முறை தோன்றியது.

ஓவியம் போல் அழகாய் இருக்கிறாள் என்று சொன்னால் அது பொய் என்பது சம்பந்தனுக்குத் தெரியும்.

ஓவியத்தைவிட உயிரோடு அழகாய் இருக்கிறாள் என்று சொன்னாலும் அதுவும் பொய் என்பது சம்பந்தனுக்கு விளங்கியது. எந்த ஓவியத்தில் இந்த நளினம், இந்த உயிர்ப்பு, இந்த ஈர்ப்பு, கண்ணின் இந்த ஒளி, செம்மலர் இதழாய் விரிந்து மூடி மந்திர ஜாலம் காட்டும் பெண் இதழ். ஓவியத்துடன், சிற்பத்துடன் உயிருள்ள தேவதைகளை ஒப்பிட்டு அவர்கள் உயிரை ஏன் எடுக்கிறார்கள்? தேவதைகள் உலகத்தில் பிறப்பது உண்டு. மனிதர்கள் அவர்களைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் எப்போதும் கிடைப்பது இல்லை. தேவதைகளை ஓவியத்தோடு ஒப்பிட்டு உயிரைப் பிடுங்குவது கற்பனை வறட்சியாகும். பார்ப்பதை எல்லாம் சொற்களால் வடித்துவிட முடியாது. பார்ப்பவனுக்கு எல்லாம் வடிப்பதற்குச் சொற்கள் வந்து விடாது. சம்பந்தனுக்கு அவள் அழகைச் சொல்வதற்கு சொற்கள் கிடைக்க வில்லை. திறந்த வாய் மூடியதா என்கின்ற அக்கறையும் அவனிடம் இருக்க வில்லை.

பேசும் பொற்சித்திரமே என்று பாடினானே பாரதி? பேசும் பொற்சித்திரம் அல்ல அவள். பொற்சிலையும் அல்ல அவள். அவள் உயிர்ப்பு, மணம், உணர்வு, துடிப்பு... நாம் வருணிக்கச் சொற்கள் கண்டு பிடிக்க வேண்டும். பிரதி எடுப்பது பிழையான உதாரணம்.

அவள் ஐந்தடி ஆறு அங்குலம் இருப்பாள். குதி உயரப் பாதணி அணிந்து குதிரை போல் நடந்தாள். நிமிர்ந்த அவள் உருவம். திமிறும் நெஞ்சத்து முயல்கள். மினு மினுக்கும் மாம்பழ நிறம். மின்னல் தெறிக்கும் விழிகள். செல்லம் பொழியும் அவள் இதழ் வழி வந்த மொழி. அவள் தங்களைக் கண்ட உடன் கை தந்து அறிமுகம் செய்யாத ஏக்கம் சம்பந்தனை வாட்டியது. ஏன் செய்யாது விட்டாள் என்பது விளங்கவில்லை. நாங்களும் ஆசியர் என்ற உடன் அவளின் கலாச்சார விழுமியங்கள் அதற்குத் தடை போட்டு விட்டதா என்பதான எண்ணத்துடன் உண்டான ஏக்கம் சம்பந்தனுக்கு.

அந்த அலுவலகம் எதிர்பார்த்ததைவிட நவீனமாக அழகுடன் மினுங்கியது. வாடிக்கையாளர்கள் இருப்பதற்குச் சோபா போடப்பட்டு இருந்தது. வளைவான தடுப்பு மேசை ஒன்று வாடிக்கையாளரையும் அலுவலகப் பகுதியையும் தடுத்து நின்றது. அதில் வரவேற்பை மேற்கொள்ளும் அலுவலகர் இருந்து வேலை செய்வதற்கான கணினி, கதிரை என்பன இருந்தன. இந்தக் கணினிக்கும் இரண்டு

பெரிய ஐந்து அங்குல செமிப்புத் தகடுகளை உள்ளே செலுத்த அவை இரண்டும் சேர்ந்தே சம்பூரண கணினியை உருவாக்கும்.

நீர் சூடாக அல்லது குளிராக எடுத்துப் பருகும் இயந்திரம் ஒரு கரையில் இருந்தது. சம்பந்தன் குளிர் நீர் எடுத்து வந்து பருகினான். அந்த வரவேற்பு மேசைக்குப் பின்னாலே ஓடை போன்ற பாதை. அதைத் தொடர்ந்து பல அலுவலக அறைகள். புக முடியாத இடங்களிலும் புகும் திறமை பாகிஸ்தானியரிடம் உண்டு. அதற்கு இதுவும் ஒரு சான்று ஆகும். வியாபாரம் அவர்களுக்குக் கைவந்த கலை போலும். இந்தத் தேசத்திலும் அவர்களது கடைகளுக்கும், அலுவலகங்களுக்கும் குறைவு இல்லை. குரன்லாண்ட் என்கின்ற இந்த இடத்தில் அவர்கள் புடவைக் கடை, பலசரக்குக் கடை, சாப்பாட்டுக் கடை, மரக்கறிக் கடை என்று பல கடைகள் உள்ளன.

இருவரும் சென்று அங்கே இருந்த சோபாவில் அமர்ந்தார்கள். அதன் முன்பு மேசை ஒன்று இருந்தது. அதில் பல சஞ்சிகைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. சஞ்சிகையின் பளபளப்பு, அதன் தாளின் தரம் "TS"சிற்கு விளங்கியது. விகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகளை இப்படி வெளியிடலாம். தர்மிகளான தமிழர்களுக்கு விற்க முடியாது. இங்கு அது ஒரு பிரச்சனையாக இல்லை என்பதில் அதன் பொருளாதார வளமும் வாங்கு திறனும் புலப்பட்டது.

விசுவாமித்திரரே பெண்ணிடம்... அதுவே இயற்கை. ஆண்களுக்கு மட்டும் தானா? பெண்களுக்கு இல்லையா? இல்லை என்பதாக, அவள் அந்த இயற்கையை வென்றதாக வேஷத்தோடு காரியத்தில் கண்ணாக இருந்தாள். அல்லது இருப்பதாகக் காட்டினாள். பின்பு அந்த மேசையை விட்டு முன்னே இவர்களுக்கு அருகாக வந்து, அவள் நொஸ்கில் கதைக்கத் தொடங்கினாள். அவள் செவ்வலரி இதழ்கள் வெடித்தன. அதில் இருந்து மகரந்தப் பொடிகளாக சொற்கள் சிதறி விழுந்தன.

"சமீர் வெளியே சென்று விட்டார். சிறிது நேரத்தில் வந்து விடுவார். அதன் பின்பு உங்களை அழைத்துச் சென்று வீடு காட்ட வேண்டும் என்று கூறினார். அந்த வீடு இருக்கும் இடம் அதிக தூரம் இல்லை. விரைவாகப் போய்விட்டு வந்து விடலாம். உங்களுக்குக் குடிப்பதற்கு

தேநீர், கோப்பி ஏதாவது வேண்டுமா?" என்று அவள் நொஸ்கில் கேட்டாள்.

வைத்த கண் வாங்காது பார்த்த வண்ணம் இருந்த சம்பந்தனுக்கு அவளிடம் ஏதாவது வாங்கிக் குடிக்க வேண்டும் என்று தோன்றியது. சம்பந்தன் கோப்பி என்றான்.

"உங்களுக்கு?" என்று "TS"சைப் பார்த்து அந்தப் பெண் கேட்டாள்.

"எனக்கும் கோப்பி தாருங்கள்." என்றார் "TS".

இருவருக்கும் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். பின்பு சென்று வரவேற்பு மேசைக்குப் பின்னால் உள்ள கதிரையில் அமர்ந்து கணினியைத் தட்டத் தொடங்கினாள். கோப்பி குடித்துக் குடித்து அழகை இரசித்ததில் நேரம் சட்டென்று போனதாய் சம்பந்தனுக்குத் தோன்றியது.

சமீர் கதவைத் திறந்து கொண்டு புயல் போல் உள்ளே வந்தான். சமீரை "TS" ஒரு முறை பார்த்தார். கிட்டத்தட்ட ஆறடி இருப்பான். நீட்டாகக் கறுப்பு மெல்லிய மேல் அங்கி அணிந்திருந்தான். கறுப்பாகப் பாதணிகள். அவை நல்ல தரமான தோலில் செய்யப்பட்ட தோற்றம். கட்டையாக வெட்டப்பட்ட முடி. கன்னத்தில் கை வைத்தால் வழுக்கும் அளவிற்கு அக்கறையாகச் சவரம் செய்யப்பட்ட முடியற்ற முகம். அத்தால் முகத்தில் ஒரு மென் நீல மினு மினுப்பு. நீட்டு மூக்கு. முத்துகள் மிளிர வெடித்த புன்னகை. கண்களில் தெறிக்கும் அக்கறையும் வரவேற்பும். நிமிர்ந்த நடை. வேகத்திலும் நிதானம். அவன் நேராக இருவரிடமும் நடந்து வந்து கை கொடுத்து அறிமுகம் செய்தான்.

"நாங்கள் புறப்படுவோம். காரில் கதைத்துக் கொண்டு போகலாம்." என்று நொஸ்க்கில் கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராது புறப்பட்டான். சம்பந்தன் "TS"சிற்குப் போவோம் என்று கண் பாசை காட்டினான். "TS"சும் சம்பந்தனும் புறப்பட்டு அவன் பின்னே சென்றனர்.

அது ஒரு சாம்பல் நிறமான "Toyota camry". ஜப்பான் கார்களும் ஜெர்மன் கார்கள் போன்று தரத்தில் உயர்ந்து உலகத்தைப் பிடித்துக் கொண்டு வரும் காலம். ஜெர்மன் கார்களுக்கு இவை எந்த விதத்திலும் குறைவும் இல்லை என்பதோடு சில விடயங்களில் மேன்மையாகவும் இருக்கின்றன. மேற்கு ஐரோப்பாவின் குளிர் காலங்களில்

ஜெர்மன் கார்கள் மக்கர் செய்வது உண்டு. அந்தப் பிரச்சனை ஜப்பான் கார்களில் குறைவு என்பது சம்பந்தனின் அவிப்பிராயம். தானும் ஒரு ஜப்பான் கார் வாங்க வேண்டும் என்பது அவனது எண்ணம். ஜப்பான் கார்கள் ஜெர்மன் கார்களோடு ஒப்பிடும் போது விலை குறைவு என்பது அடுத்த முக்கிய காரணம்.

சமீர் நொஸ்கில் கதைப்பதால் "TS" பின் ஆசனத்தில் இருந்து கொண்டார். அவரால் நொஸ்கில் கதைக்க முடியவில்லை. சொற்கள் விளங்கினாலும் சில வேளை வசனங்களை அர்த்தப்படுத்தத் தெரியவில்லை. வாக்கியம் அமைத்துப் பதில் சொல்வது கடினமாக இருந்தது. விரைவாக நொஸ்க் வகுப்புத் தொடங்க வேண்டும் என்பது அவருடைய ஆவல் ஆகியது. புதிய வீட்டிற்குப் போனதும் அதைச் செய்ய வேண்டும் என்று மீண்டும் எண்ணிக் கொண்டார்.

உள்ளே இருக்கைகள் சாம்பல் நிறத்தில் வசதியாக இருந்தன. ஜப்பான் கார்கள் அமரிக்க அல்லது ஜெர்மன் நாட்டுக் கார்கள் மாதிரி அதிகம் எரிபொருள் குடிக்காது என்பது "TS"சிற்குத் தெரியும். மத்திய கிழக்கில் பாரிய அமரிக்க வாகனங்கள் எரிபொருளைக் குடம் குடமாய் குடித்துச் சூழலைக் கெடுத்துப் பயணம் செய்வதைப் பார்த்து இருக்கிறார். அவற்றோடு ஒப்பிடும் போது ஜப்பான் கார்களை வைத்திருப்பது பொருளாதார ரீதியில் நன்மையாக அமையும். விபத்துக்களில் சிக்கிக் கொண்டால் மாத்திரம் ஜப்பான் கார்களின் பலவீனங்கள் சில அம்பலத்திற்கு வந்துவிடும். ஜெர்மன், அமரிக்கக் கார்கள் அந்த வகையில் உரமாக நின்று பிடிக்கும் என்பது "TS"சின் எண்ணம்.

சமீரின் காரில் ஏற்கனவே அவன் பயணித்து இருந்ததால் உள்ளே வெக்கையாக இருந்தது. அது "TS"சிற்கு சௌகரியம் ஆகிற்று. அவன் தனது காரைச் சில சிறிய ஒழுங்கை ஊடே ஓட்டிச் சென்று ஒரு பிரதான பாதையில் ஏற்றிச் சில மின் சமிக்கைகள் தாண்டிச் சென்றான்.

பின்பு சம்பந்தனைப் பார்ப்பதும், வீதியைப் பார்ப்பதுமாய் வாகனத்தை ஓட்டிய வண்ணம் கதைக்கத் தொடங்கினான்.

"இந்த வீட்டின் சொந்தக்காரி தற்போது ‘துறம்சோ’வில் வசித்து வருகிறார். அங்கு உள்ள பல்கலைக்கழகத்தில் வேலை கிடைத்து மாற்றலாகிச் சென்று விட்டார். அவருடைய பல தளபாடங்களையும் அவர் பாவிப்பதற்கு

அனுமதி தந்து இருக்கிறார். இங்கிருந்து அவற்றை அங்கே ஏற்றிக் கொண்டு செல்வதற்கு அதிக செலவாகும். அத்தோடு தளபாடங்கள் உடன் வாடகைக்கு விடுவது இலகு என்பதும் அவருக்குத் தெரியும். அவர் நன்கு படித்தவர். ஏதோ ஆராட்சி செய்கிறேன் என்று கூறினார். அவர் சில நிபந்தனைகள் விதித்து இருக்கிறார். முதலாவதாக நீங்கள் பதினைந்தாயிரம் முற்பணம் தர வேண்டும். இரண்டாவதாக ஒழுங்காக ஒவ்வொரு மாதமும் பணம் கட்டிவிட வேண்டும். வீட்டைக் காயப் படுத்தாது கவனமாகப் பாவிக்க வேண்டும். வீட்டில் நான்கு நபருக்கு மேல் தங்கக் கூடாது என்றும் சொல்லி இருக்கிறார். அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். மற்றதைக் கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொரு மாதமும் பணத்தைக் கொண்டு வந்து என்னிடம் தந்தால் சரி. அவர் இந்த வீட்டின் முழுப் பொறுப்பையும் என்னை நம்பி ஒப்படைத்து இருக்கிறார். எனக்கு அவர் கணிதம் படிப்பித்த ஆசிரியை என்கின்ற முறையிலும் தெரியும். அதனால் அவருக்கு என் மீது அதிக நம்பிக்கை உண்டு. அதற்குப் பங்கம் வராமல் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். நாங்கள் எல்லோரும் ஆசியர்கள். அந்த நம்பிக்கை எனக்கு உங்கள் மேல் நிறைய இருக்கிறது. வீடு பார்த்த பின்பு பிடித்துக் கொண்டால் ஒரு ஒப்பந்தத்தில் நீங்கள் கையெழுத்துப் போட வேண்டும். நான் தரும் வங்கி எண்ணிற்கு பதினைந்தாயிரம் கட்டி அதற்கான பற்றுச்சீட்டு பெற்று வந்து தர வேண்டும். அதன் பின்புதான் என்னால் திறப்பைத் தர முடியும். அதுதான் இங்குள்ள வளமை. அவர் எனக்கு மிகவும் வேண்டப் பட்டவர் என்பதால் பணத்தை வாங்கி அனுப்புவதில் இருந்து வீட்டில் எதாவது பிரச்சனை என்றாலும் என்னிடம் நீங்கள் கூறலாம். நான் அந்தப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பேன். அதை நான் அவருக்காகச் செய்வதாக ஒத்துக் கொண்டு இருக்கிறேன்." என்றான் சமீர்.

வாகனம் பல மின் சமிக்கைகளைத் தாண்டி வலப் பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றது. சமீர் மீண்டும் கதைக்கத் தொடங்கினான்.

"இது மிகவும் நல்ல இடம். எந்தப் பக்கம் போய் வருவது என்றாலும் போக்குவரத்திற்கு ஏற்ற இடம். இந்தச் சந்தியில் நீங்கள் வஸ், "Tram" எடுக்கலாம். அதோ பாருங்கள்… அதற்குள் சென்றால் 'தேவாண்' சுரங்கரதம் எடுக்கலாம்." சமீர் காட்டிய இடத்தில் 'T' என்கின்ற

பெரிய நீல ஆங்கில எழுத்து வெள்ளைப் பின்னணியோடு வட்டத்திற்கு உள்ளே இருந்தது. அதற்குள் இருந்த மின் குமிழ் அதற்கு உயிரூட்டியது. சமீர் தொடர்ந்தான்.

"இதற்குத் தெருவின் இரண்டு கரைகளிலும் உள்ளே செல்லும் பாதை இருக்கின்றன. நீங்கள் எந்தப் பக்கம் நின்றாலும் ஓடிப் போய் ஏறிக் கொள்ளலாம்."

வாகனம் மெதுவாகி, இடப்பக்கம் சமிக்கை போட்டு, முன்னுக்கு வந்த இரு வாகனங்களைப் போகவிட்டு, ஏற்றமான ஒரு ஒழுங்கைக்கு உள்ளே புகுந்து அந்த ஏற்றத்தில் ஏறியது. சடைத்த மரங்கள் நிறைந்த ஒழுங்கை அது. சூரிய வெளிச்சம் இடைவெளி காணும் இடத்தில் பிரயத்தனத்துடன் ஒழுகியது. அந்த ஒழுங்கையின் இடப்பக்கம் வாகனங்கள் தரித்து நின்றன. வலப்பக்கம் அந்த ஒன்பது மாடிச் சிகப்பு கட்டடம் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. அதன் முன் பகுதியில் அந்தக் கட்டடத்திற்கான வாகனத் தரிப்பிடங்கள் கட்டடத்திற்குள் பொதியப்பட்டு இருந்தன. அந்தத் தரிப்பிடத்திற்கு மேலே பச்சைப்பசேல் என்கின்ற தாவர இராட்சியம். ஏதோ ஒரு அழகுக் கொடி முல்லைக்குத் தேர் கிடைத்ததாக நினைத்து அந்தக் கட்டடத்தின் ஏழாவது மாடிவரை ஏறிவிட்டது. அந்தக் கட்டடத்தைப் பார்த்த போது பணக்காரக் குடியிருப்பு மாதிரி இருந்தாலும் அதன் பல்கணிகள் அளவில் சிறிதாக இருந்தன. கட்டடத்தின் முன்பு அரை வட்டத்தில் ஒரு அழகுத் தோட்டம். கட்டையாகக் கத்தரிக்கப்பட்ட புற்கள். அரைவட்டத்திற்கு விழும்பு கட்டியது போன்ற பூக்கன்றுகள். கட்டடத்தின் கீழ் தளத்திற்குச் செல்லும் சாம்பல் நிறமான இரும்புக் கதவு. அந்த அரை வட்டத்திற்கு எதிரே வாகனம் தரிப்பதற்கான இன்னும் ஒரு தரிப்பிடம். அதையும் தாண்டி வெள்ளை நிறத்தில் புது வகையான தேவாலயம். இரண்டு ‘H’களை நிலையாக அடுக்கியது போல அதற்குக் கோபுரம். எங்கும் பசுமை நிறைந்த வளவுகள். தொடர்ந்தும் இடப்பக்கம் பார்த்தால் சிவப்பு நிறத்தில் தொடர் மாடிவீடுகள். அதற்கும் அப்பால் பார்க்க முடியாது மரங்களே வேலியான மறைப்பு.

வாகனம் அசைவை நிறுத்தி அமைதி அடைந்தது. சமீர் தனது பட்டியைக் கழற்றி வாகனத்தை விட்டு இறங்கினான். அப்படியே "TS"சும், சம்பந்தனும் செய்தார்கள். இங்கு வாகனத்தில் யார் ஏறினாலும் உடனே பட்டியைப் போட்டுக் கொள்கிறார்கள். அவர்களைப் பார்த்து புதிதாக வருபவர்களும் அப்படிச் செய்கிறார்கள்.

வாகனத்தில் எப்படிப் பாதுகாப்பாய் பயணிப்பது என்பதில் "TS"சிற்கோ, சம்பந்தனுக்கோ அறிவுரை தேவைப்படவில்லை. அவர்களுக்கு நல்ல முன் அனுபவம் இருந்தது. எல்லோரும் இறங்கியதும் சமீர் முன்னே நடந்தான். அந்தப் பெரிய மாடிவீட்டின் பின்னால் பெரியதொரு மஞ்சள் நிற வீடு இருந்தது. அதைவிட இதே அடுக்குமாடி போல ரோஜா நிறத்திலும், மஞ்சள் நிறத்திலும் இரு கட்டடங்கள் இருந்தன.

"இந்த வீட்டிற்குப் பின்னால் வேறு ஒரு பங்களா இருக்கிறது. வீட்டை முதலிற் பார்த்து விட்டுப் பின்பு அதைப் பார்ப்போம்." என்றான் சமீர்.

பின்பு வாசலில் ஏறித் திறப்பைப் போட்டு முன் கதவைத் திறந்தான். விருந்தினர்கள் வந்தால் குறித்த எண்ணை அழுத்தி அந்த வீட்டுடன் தொடர்பு கொள்வதற்கான ஆழிகள் கதவுக்கு வலக்கைப் பக்கமாக இருந்தன. உள்ளே நுழைந்த உடன் வரிசைக்குச் சுவரில் பொருத்தப்பட்ட தபால் பெட்டிகள். அனைத்துக் குடியிருப்புகளுக்கும் அங்கேயே தபால் பெட்டிகள் வைக்கப்பட்டு இருந்தன. ஒவ்வொரு தபால் பெட்டிக்கும் பிரத்தியேகத் திறப்பு அதற்குரிய வீட்டுக்காரரிடம் இருக்கும். தபால் காரனிடம் எல்லாவற்றையும் திறப்பதற்கான திறப்பு இருக்கிறது. தபாலைக் கொண்டு வந்து கையில் கொடுக்கும் அவசியம் தபால் காரனுக்குக் கிடையாது. தபால் காரனுக்காய் யாரும் காத்து இருக்கவும் தேவை இல்லை. பாவம் தபால் காரர்கள். இங்கு பண்டிகைச் சலுகைகள் மக்களிடம் இருந்து அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. அதற்குப் பதிலாக கட்டுபடியாகும் சம்பளத்தை அரச நிறுவனம் கொடுக்கிறது. உள்ளே பாரம் தூக்கி இருந்தது. சமீர் பாரம் தூக்கிக்குச் சென்றான்.

"இந்த வீடு இரண்டாவது மாடியில் இருக்கிறது. நீங்கள் படிகளையும் பாவிக்கலாம். நல்ல அகலமான படிகள்." என்றான் சமீர்.

இரண்டாவது மாடியில் இறங்கி இடப்பக்கமாக இருந்த அந்தக் கதவைத் திறந்தான். எல்லோரும் உள்ளே சென்றார்கள். உள்ளே சென்றதும் உடுப்புகள் கொழுவுவதற்கான அலுமாரி இருந்தது. ரோஜா நிறத்தில் சுவர்களுக்கு வண்ணம் பூசப்பட்டு இருந்தது. தரை எங்கும் மரத்தால் ஆனதாய் வழுவழுப்பாய் சறுக்கியது. மேலே

கூரைக்கு வெள்ளை வண்ணம் பூசப்பட்டு ஒளிர்வைக் கூட்டியது. வீடு விஸ்தீரணமாய் "TS"சின் எதிர்பார்ப்பை மிஞ்சியது. கோல் நீள் சதுரமாகத் தாராளம் காட்டியது. கோலிற்குள் மட்டும் பத்து நபர்கள் தாராளமாய்ப் படுத்து உறங்கலாம். கோலிற்கும் அறைகளுக்கும் இடையில் பெரிய இரட்டைக் கதவுகள். கோலிற்கும் பல்கணிக்கும் இடையில் முழு நீளக் கதவு ஒன்று. நீட்டுக் கண்ணாடிச் சாளரம் அதன் அருகில். ஒரு பல்கணியை இரண்டு வீட்டிற்குப் பாதி பாதியாய் பிரித்து இருந்தார்கள். கோலிற்குள் சோபா, மேசை, தொலைக்காட்சி வைக்கும் மேசை, தொலைக்காட்சிப் பெட்டி என்பன இருந்தன. அத்தோடு ஒரு மர அலுமாரி வெறுமையாகக் கிடந்தது. எந்த இடைஞ்சலும் இருக்காது என்பது "TS"சின் எண்ணம். தரைக்குப் "பாக்கெற்" என்னும் மரம் பதித்து இருந்தார்கள். சுவருக்கு மொத்தமான சாம்பல் நிறக் கடதாசி ஒட்டி இருந்தது. மேலே வெள்ளை நிற வண்ணம் அடித்து இருந்தது. அறைகளில் ஒன்று பெரியது. அதற்குள் இருவர் படுக்கக் கூடிய படுக்கை ஒன்று அம்மணமாகக் கிடந்தது. அதற்கான போர்வைகள், தலையணைகள் வாங்க வேண்டும். சின்ன அறையில் ஒருவர் படுக்கக்கூடிய கட்டில் ஒன்று கிடந்தது. பெரிய அறை சமையல் அறையை ஒட்டி இருந்தது. "IKEA"வில் தயாரிக்கப்பட்ட சமையல் அறைத் தளபாடங்கள். இருந்தும் அவை பார்ப்பதற்கு நன்றாக இருந்தன. அடுப்பும், சில அலுமேனியச் சட்டிகளும், நான்கு தட்டுக்களும், நான்கு குவளைகளும், வேறு சில பொருட்களும் அங்கே இருந்தன. அதைவிடக் கத்தி, கரண்டி போன்ற மிக அத்தியாவசியமான உபகரணங்களும் இருந்தன. படுக்கை அறைகளைத் தவிர மற்றைய நிலங்கள் மரத்தில் ஆனவை.

சில பொருட்களைத் தவிர பெரிதாக எதுவும் வாங்க வேண்டியது இல்லை என்பது "TS"சிற்குப் பெரும் நிம்மதியைத் தந்தது. சம்பந்தன் வாழும் வீட்டிற்கும் இதற்கும் இடைப்பட்ட தராதரம் நிறையவே வித்தியாசப்பட்டது.

சமீர் குளியல் அறையைத் திறந்து காட்டினான். அதுவும் துப்பரவாக இருந்தது. நின்று குளிப்பதற்குப் பிளாஸ்ரிக் கண்ணாடியால் அமைக்கப்பட்ட சதுர அறை இருந்தது. சிறிய உடை கழுவும் இயந்திரம் ஒன்றும் முகம் கழுவும் "சிங்" ஒன்றும் இருந்தன.

"நீங்கள் வேண்டும் என்றால் இந்த இயந்திரத்தைப் பாவிக்கலாம். இலவசமாகப் பாவிக்கக் கீழே பெரிய இயந்திரங்கள், காய வைப்பதற்குத் தனி அறை என்பன உண்டு. அதை நான் உங்களுக்குப் பின்பு காட்டுகிறேன்." என்றான் சமீர்.

சமீர் போய் சோபாவில் அமர்ந்தான். அது ஒரு கருஞ் சிவப்பு நிறமான தோலிலான சோபா.

"TS"சும் சம்பந்தனும் அவனைத் தொடர்ந்து சோபாவில் போய் அமர்ந்தார்கள்.

"என்ன சொல்லுகிறீர்கள்? வீடு பிடித்து இருக்கிறதா?"

"பருவாய் இல்லை. ஆனால் வாடகையும் முற்பணமும் அதிகமாக இருக்கிறது. அதுதான் யோசிக்க வேண்டி உள்ளது. அவர்கள் புதிதாக நாட்டுக்கு வந்து இருக்கிறார்கள். அவர்களிடம் அவ்வளவு பணம் இருக்காது."

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்? காசு விஷயத்தில் அவர் கறாராய் இருப்பார். நீங்கள் இருபத்தி மூன்று ஆயிரம் எனது வங்கிக் கணக்கில் போட்டுவிட்டு வாருங்கள். அதற்கு முன் என் அலுவலகத்தில் ஒரு படிவத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போக வேண்டும். நீங்கள் தரும் பதினைந்தாயிரமும் வீட்டைப் பழுதாக்காது திருப்பிக் கொடுத்தால் உங்களிடம் திருப்பித் தந்து விடுவோம். மாதம் தவறாமல் வாடகை வந்துவிட வேண்டும். அல்லது நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியது தவிர்க்க முடியாது போய்விடும்."

"என்ன அண்ணை இப்பிடிச் சொல்லுகிறான்? இருபத்தி மூவாயிரம் வேணுமாம்."

"என்னிட்ட அவ்வளவு காசு இல்லை. எல்லாமாச் சேத்து ஒரு பன்னிரண்டுதான் இருக்குது. பெடியளை வேணும் எண்டாக் கேட்டுப் பார்க்கலாம்."

"சரி எல்லாத்தையும் கணக்குப் பாப்பம். நான் மிச்சத்தைத் தாறன். உங்களுக்குச் சம்பளம் வரக் கொஞ்சம் கொஞ்சமாத் திருப்பித் தாங்க."

"உனக்குத் திரும்பத் திரும்பக் கஸ்ரம் தந்து கொண்டே இருக்கிறன்."

"சும்மா இருங்க அண்ணை... அது எல்லாம் ஒண்டும் இல்லை."

அவன் பெருந்தன்மை "TS"சை மலைக்க வைத்தது. எதையும் எதிர்பார்க்காத இந்த நட்பைவிட உலகத்தில் உயர்வாக எதுவும் இருக்க முடியாது என்று தோன்றியது.

"இப்ப என்ன சொல்லுறியள்?" சமீர் கேட்டான்.

"நாங்கள் ஒழுங்கு செய்கிறம்."

"அது நல்லது. உங்களுக்கு அதிஸ்ரம் இருப்பதால்தான் இந்த வீடு கிடைத்து இருக்கிறது. இங்கு வெளிநாட்டுக்காரர் என்றாலே இலகுவில் வாடகைக்கு வீடு தரமாட்டார்கள். நான் பொறுப்பு என்பதால் தருகிறேன். நாங்களே எங்கள் பகுதி மக்களை நம்பாவிட்டால் எப்பிடி? நீங்கள் அதுக்கு ஏற்ற மாதிரி நடந்து கொள்ள வேண்டும்."

"நிச்சயமாக. அவர் ஒரு பொறுப்பான மனிதர்."

"சரி அப்படி என்றால் கீழே போய் பார்ப்போம்."

என்று கூறிய சமீர் பதிலுக்குக் காத்து இராது எழுந்து நடந்தான். அவன் பின்னே இருவரும் தொடர்ந்தார்கள். சமீர் பாரம் தூக்கிக்குச் சென்று தான் வைத்து இருந்த சாவியை நுழைத்து ‘U’ என்கின்ற ஆங்கில எழுத்தை அழுத்தினான். அது அதன் பின்பு கீழ்த்தளத்திற்குச் சென்றது. கீழ்த்தளத்தில் பொருட்கள் வைப்பதற்குக் கம்பி வலை அடிக்கப்பட்ட சிறிய அறைகள் இருந்தன. ஒரு பக்கத்தில் பெரிய ஒரு அறை இருந்தது. அதன் கதவு வெள்ளையாகப் பளிச்சிட்டது. அதைத் திறந்து சமீர் உள்ளே போனான். இரண்டு பெரிய கழுவும் இயந்திரங்கள் அங்கு இருந்தன. அவற்றைப் பாவிப்பதற்கான முறை எழுதும் கொப்பி அருகில் இருந்தது. அதைவிட உடுப்புக் காயப் பண்ணும் இயந்திரம் ஒன்றும், உடுப்பை அழுத்தும் பெரிய உருளைகளும், இரும்புப் பெட்டியும் இருந்தன. இயந்திரத்தில் காயப் போட முடியாத உடுப்புக்களைக் காயப் போடுவதற்கு பிறிதாக ஒரு அறை இருந்தது. அந்த அறை நல்ல வெக்கையாக இருந்ததோடு சலவைப் பொடியினது வாசம் மென்மையாக வந்தது. அது ஏதோ ஒரு மலரின் வாசத்தை "TS"சிற்கு ஞாபகப் படுத்தியது. இவர்கள் சலவைப் பொடியைவிடத் துணிகள் மென்மையாக இருப்பதற்கும், அது வாசனையாக இருப்பதற்கும் ஒரு திரவம் பாவிப்பது வழக்கம். அது

காயப் போட்டிருந்த துணிகளில் இருந்து வாசத்தை அள்ளி வீசியது.

"மேற்கொண்டு நீங்கள் 'வாக்மஸ்ரரிடம்' கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். எனக்கு இன்னும் ஒரு வேலை இருக்கிறது. நாங்கள் இப்போது போவோமா?"

வழமை போலச் சமீர் பதிலை எதிர்பார்க்காமல் நடக்கத் தொடங்கினான். அலுவலகத்தில் அந்தப் பெண் இவர்கள் வரவுக்காகக் காத்து இருந்தாள். அவளிடம் உருதில் ஏதோ சமீர் சொல்லி விட்டு,

"கையெழுத்துப் போட்டு விட்டுப் போங்க." என்று இவர்களிடம் கூறிவிட்டு அவன் அவசரமாக மீண்டும் எங்கோ சென்றான். அந்தப் பெண் சில படிவங்களோடு வந்தாள். அது பிரதி எடுக்கப்பட்ட படிவங்கள். சம்பந்தன் சிரமப்பட்டு அதை வாசித்து விட்டு "TS"சிடம் கொடுத்தான். "TS" தன்னால் வாசிக்க முடியாது என்பதை விளங்கிக் கொண்டு அதற்கு மினக்கெடாது கையெழுத்து வைத்துக் கொடுத்தார். அந்தப் பெண் பிறிதொரு காகிதத்தில் வங்கிக் கணக்கு எண்ணை எழுதிக் கொடுத்தாள். பணத்தைக் கட்டி ரசீதைக் கொண்டு வந்தால் சாவியை வாங்கலாம் என்று கூறினாள். அவளிடம் விடை பெற்றுக் கொண்டு இருவரும் வெளியே வந்தார்கள்.

ஒஸ்லோவின் மத்திய பகுதியில் உள்ள குரன்லாண்டில் வெளிநாட்டுக்காரரை அதிகம் பார்க்க முடியும் என்பது சரியாக இருந்தது. அதுவும் குறிப்பாகப் பாகிஸ்தானியரை அங்கு அதிகம் காண முடிந்தது. அவர்கள் தங்களது சுதேச உடுப்புகளுடன் நடமாடினர். சம்பந்தன் அந்த உடுப்புகளை ஆண்கள் பஞ்சாபி, பெண்கள் பஞ்சாபி என்று வகைப் படுத்துவான். அதுவும் ஆண்கள் பொதுவாக சல்வார் கமிஸ் வெள்ளை நிறத்தில் அணிவார்கள். அவர்கள் இதைவிடப் பலவகையான உடை அணிவார்கள். அவற்றில் வித்தியாசம் காண்பது பலருக்கும் கடினமான விடயம். இந்தக் குளிருக்குள் இவர்களால் எப்படி இந்த ஆடையுடன் நடமாட முடிகிறது என்பது "TS"சிற்கு விளங்கவில்லை.

"நான் வேலைக்குப் போட்டு வாறன் சம்பந்தன்." என்றுவிட்டு "TS" அவசரமாகக் குரன்லாண்ட் சுரங்கரத நிலையத்தை நோக்கி ஓடினார். சுரங்கரதத்தில், "Tram"இல், பேருந்தில், பயணிப்பதற்காக "Seasons card"

எடுத்து வைத்து இருந்தார். அது இல்லாவிட்டால் சாவி வேலைக்குப் போய் வரப் போக்கு வரத்துச் செலவு கட்டுபடி ஆகாது என்பதைச் சம்பந்தன் ஏற்கனவே விரிவாக விவரித்து, அவரை அதை எடுக்குமாறு கூறினான். அவரும் அதற்காக மத்திய புகையிரத நிலையத்திற்கு முன்பு இருந்த அவர்களின் அலுவலகத்திற்குச் சென்று அதை வாங்கி வந்தார்.

"TS" அவசரமாகப் போவதைப் பார்த்துவிட்டுச் சம்பந்தனும் "Tram" எடுப்பதற்காக நடந்து 'குன்னாறியஸ்' என்னும் இடத்திற்குச் சென்றான்.

7 சிவா வந்தான்

"TS", சொரூபன், அருள், நிமலன் ஆகியோர் புதுமனை புகுந்தனர். புதுமனை புகல் நினைத்ததை விடவும் பல செலவுகளைக் கொண்டு வந்தது. தாராள மனதோடு எல்லாச் செலவுகளையும் எழுதி வைத்து மாத முடிவில் தங்களுக்குள் சமமாகப் பிரித்துக் கொள்வதாய் ஒரு முடிவுக்கு வந்தார்கள். தொலைக்காட்சி பெரிதாக இருந்தாலும் அதன் நிறம் சற்று மங்கிக் கலங்கலாக இருந்தது. அதன் ஆழிகளை அழுத்தி அழுத்திப் பார்த்துக் களைத்த நிமலன் அதைக் கைவிட்டு விட்டான். சோறு, கோழி இறைச்சிக் கறி என்பவற்றைவிட வேறு சாப்பாடுகளும் செய்ய வேண்டும் என்பது அவர்களுடைய ஆசையாகியது. இருந்தும் பிழைத்துப் போய்விடும் என்கின்ற பயத்தில் சோறு கறி, பிட்டு, ரொட்டி ஆகியவற்றிற்குள் அவர்கள் அட்டவணை ஏழையின் சாப்பாடு போல் அடங்கியது. பூபாலன் செய்தது போன்று கொத்து ரொட்டி செய்ய வேண்டும் என்று நிமலனுக்கும், அருளுக்கும் ஒரு எண்ணம். அருள் சமைப்பதில் கெட்டிக்காரன் என்றாலும் பிழைக்காமல் செய்ய வேண்டும் என்கின்ற பயத்தில் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்.

"TS" தனது நிறுவனத்தில் கதைத்து மூவருக்கும் கழுவும் வேலை வாங்கிக் கொடுத்து இருந்தார். "TS"சிற்கு நிமலன் எங்காவது பாடசாலையில் சேர்ந்து படிப்பது உத்தமமாகப் பட்டது. அவன் அதற்குச் சம்மதிக்க வில்லை. வந்த காசு உழைக்காமல் தான் எந்த முடிவும் எடுப்பதில்லை என்று

அவர் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான். வேலை தொடங்கிய பின்பு பணத்தைக் காணக் காண படிப்பு பற்றி அவன் இனிச் சிந்திக்கமாட்டான் என்றே "TS"சிற்குத் தோன்றியது.

*

அன்று சொரூபனும் அருளும் வேலை முடித்து வரும் போது ஏழுமணி ஆகிவிட்டது. ஐந்து மணிக்குப் பின்பு வியர் கடைகளில் வாங்க முடியாது. அதற்கான நேரம் ஐந்து மணியுடன் முடிந்துவிடும். என்ன செய்வது என்று யோசித்த அவர்களுக்கு ஒரு பாகிஸ்தான் காரனின் கடை ஞாபகம் வந்தது. அவனிடம் இருட்டிய பின்பும் வியர் களவாக வாங்கலாம். வெளிநாட்டுக்காரர் என்றால் மட்டுமே அவன் வியர் அந்த நேரங்களில் விற்பான். சுதேசிகளுக்கு விற்றால் அவர்கள் சில வேளைக் காவலிடம் போட்டுக் கொடுத்து விடுவார்களோ என்கின்ற பயம் அவனுக்கு. அவனது கடை "Tram" போகும் பாதையில் இருந்தது. அந்தக் கடைக்குப் பக்கத்தில் மரக்கறிக் கடை ஒன்றும் உள்ளது. சிறிது தூரம் தள்ளிச் சென்றால் இறைச்சிக் கடை வருகிறது. அதை ஒரு அரேபிக்காரன் வைத்து இருந்தான். ஓதி வெட்டப்படும் ‘ஹாலால்’ இறைச்சி அங்கு விற்பார்கள். பெரிய அங்காடிகளில் விற்பதைவிட அங்கு இறைச்சி மலிவு. இவர்கள் போகும் போது ஒருவர் மாத்திரம் இறைச்சி வாங்கிக் கொண்டு நின்றார். கடை பூட்டுவதற்கான ஆயுத்தத்தில் கடைக்காரன். இவர்கள் போனதும் என்ன வேண்டும் என்று அவன் கேட்டான். அருளுக்கு ஆட்டிறைச்சி என்றவுடன் குட்டி ஆட்டின் இறைச்சியைத் தந்து விடுவானோ என்கின்ற பயம். அப்படி ஒரு முறை குட்டி ஆட்டின் இறைச்சியைச் சமைத்து ஒரே பால் மொச்சையாக இருந்தது. அன்றில் இருந்து ஆட்டிறைச்சி வாங்குவது என்றால் கண்ணுக்குள் எண்ணெய் விட்ட கணக்காக அவன் நிற்பான்.

அருள் தனக்குத் தெரிந்த நொஸ்கிலும் ஆங்கிலத்திலும் கலந்து அந்தக் கடைக்காரனோடு கதைத்தான். அவன் தான் வைத்திருப்பது குட்டி ஆட்டு இறைச்சி இல்லை என்று சத்தியம் பண்ணினான். அருள் இறைச்சியை வாங்கி முகர்ந்து பார்த்தான். பெரிதாகப் பால் மணம் அடிப்பது போல இருக்கவில்லை. அதன் பின்பு அவர்கள் இரண்டு கிலோ ஆட்டிறைச்சியை அங்கு வாங்கினார்கள். பின்பு மரக்கறிக் கடைக்குச் சென்று வெங்காயம், பச்சை

மிளகாய், முட்டை என்பன வாங்கிக் கொண்டு பாகிஸ்தான் கடைக்குச் சென்றார்கள்.

அங்கு இரண்டு சுதேசிகள் தாங்கள் எடுத்த பொருட்களுக்குப் பணம் செலுத்திக் கொண்டு நின்றனர். அவர்கள் போகும் வரைக்கும் இவர்கள் இருவரும் நின்று நெளிந்தார்கள். அவர்கள் போன பின்பு,

"என்ன வேண்டும் தோழா?" என்று கேட்ட வண்ணம் அந்தக் கடை முதலாளி இவர்களை நோக்கி வந்தான்.

"எங்களுக்கு வியர் வேண்டும்." என்றான் அருள்.

"ஓ இன்று பார்ட்டியா?" என்று கேட்டான் அவன்.

"ஆம் நாளைக்கு வேலையில்லை. இன்று நாங்கள் சிறிலங்காச் சாப்பாடு செய்து வியரும் குடிக்கப் போகிறோம்." என்றான் அருள்.

"நான் வியர் குடிப்பது இல்லை. ஒரு நாள் இதைக் குடித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது." என்றான் அவன்.

"குடித்துப் பாருங்கள். சொர்க்கம், அல்லது நரகம் உங்களுக்குத் தெரியும்." என்றான் அருள்.

"குடிப்பது பாவம் என்பது என் நம்பிக்கை. என்றாலும் குடிக்க வேண்டும் என்கின்ற எனது அடங்காத ஆசை ஓயவில்லை." என்றான் அவன்.

"ஆசைகளோடு மனிதன் இருக்கக் கூடாது. இன்று இருப்பவர் நாளை இருப்பாரோ தெரியாது. நிரந்தரம் இல்லாத வாழ்வில் நினைத்ததை அனுபவிக்காது விடுவது மடமை." என்றான் அருள்.

"உன் தத்துவம் விளங்குகிறது. அல்லா பாவம் செய்பவர்களை மன்னிப்பானோ தெரியவில்லை. அவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு ஒரு நாள் அருந்திப் பார்க்கப் போகிறேன்." என்றான் அவன்.

அதன் பின்பு இவர்கள் கேட்ட வியரைக் கொடுத்துப் பணத்தை வாங்கிக் கொண்டான். அருளுக்கு ஆங்கிலத்தையும், நொஸ்க்கையும் முக்கி முக்கிக் கதைத்ததில் வியர்த்து விட்டது. வியரை வாங்கிக் கொண்டு வெளியே வந்து "Tram"ற்காகக் காத்து

நின்றார்கள். வியர்வையைக் குளிர் உறிஞ்சியது. கறிவேப்பிலை இல்லாது கொத்து ரொட்டி என்பது சற்று அன்னியமானாலும் இன்று சமாளிப்போம் என்கின்ற எண்ணத்தில் வீட்டிற்கு வந்தார்கள்.

வீட்டிற்குள் வந்த போது தொலைபேசி அலறியது. வீட்டுக்காரி சுழற்றிச் சுழற்றி இணைப்பை உண்டாக்கும் பழைய தொலைபேசியை விட்டுச் சென்று இருந்தாள். சுழற்றி அடிப்பது இப்போது பட்டிக்காட்டுத்தனமாய் இருக்கிறது என்று எல்லோரும் அவிப்பிராயப் பட்டார்கள். இவர்களின் வீட்டில் இருந்து இறங்கிச் சென்றால் பெரிய சந்தி வருகிறது. அதற்கு "Carl Berners plass" என்று பெயர். அங்கே பல கடைகள் இருக்கின்றன. அதில் ஒரு பெரிய "Electronic"க் கடையும் இருந்தது. அங்கே போன போது இரண்டு "Receiver"கள் உடையத் தொலைபேசி மலிவாகப் போனது. அதைக் கண்டவுடன் எல்லோருக்கும் அதில் ஆசை வந்தது. நான்கு பேரும் பிரித்துப் போட்டால் அதிகம் இல்லை என்பதாகத் தோன்றிற்று. அதை எடுத்துக் கொண்டு வந்து சுற்றுவதை மாற்றி அழுத்துவதைப் பொருத்தி விட்டார்கள். ஐந்து மீற்ரரில் இருந்த அடுப்படிக்குள் வேறு ஒன்றைப் பொருத்தி ஆகிற்று. அடுப்படியில் பொருத்துவதா அல்லது ஒரு படுக்கை அறையில் பொருத்துவதா என்கின்ற விவாதம் வேறு நடந்தது. படுக்கை அறையில் பொருத்தினால் படுக்கும் போது அடிப்பது படுப்பவர்களுக்கும் அதை எடுக்க வருபவர்களுக்கும் அசௌகரியம் என்பதால் இறுதியாகச் சமையல் அறையில் பொருத்துவதாக முடிவு செய்யப்பட்டது. அது இப்போது ஏன் அலறுகிறது என்று யோசிப்பதற்கு நேரம் இருக்கவில்லை. அருள் பாய்ந்து அதை எடுத்தான். அவசரமாகக் கலோ என்றான். அடித்து ஓய்ந்து போனை யாராவது வைத்து விடுவார்களோ என்கின்ற பதட்டம் அவனிடம்.

"கலோ"

…….

"உண்மையாவா?"

…….

"எப்ப?"

……..

"சரிவா. இண்டைக்குக் கொத்து ரொட்டி செய்யப் போகிறம்."

……..

"எங்க இருந்து போன் பண்ணுகிறா. எப்ப வருவாய்?"

…..

"என்ன?"

…….

"சரி எப்ப வருவாய் எண்டால்... நிமலனைக் கீழ தேவாணடிக்கு அனுப்பி விடுவன்."

……

"சரி. பத்து நிமிசத்தில அனுப்பி விடுகிறன்."

"நிமலன்?"

கூப்பிட்ட வண்ணம் அருள் நிமலனைத் தேடினான். ஒவ்வொரு அறையாகப் பார்த்த பின்பு அவன் வீட்டில் இல்லை என்பது விளங்கியது. சமையல் அறையில் சொன்ன மாதிரி ரொட்டிக்கு மா குழைத்து முட்டை முட்டையாக அதைப் பிடித்து, எண்ணெய் பூசி, ஈரத் துணியால் போர்த்தி இருக்கிறான். பின்பு எங்கே புறப்பட்டச் சென்றான் என்பது தெரியவில்லை. நிமலன் வராவிட்டால் சொரூபன் கீழே செல்ல வேண்டும். கொண்டு வந்த பொருட்களை சமையல் அறையில் வைத்து விட்டு உடுப்பை மாற்றினார்கள். பின்பு படுக்கை அறைக் கதவுகளை இழுத்துக் கவனமாகச் சாத்தினார்கள். சாப்பாட்டு மணம் படுக்கை அறைக்குள் சென்று உடுப்புக்களில் மணம் ஏறக் கூடாது என்பது எல்லோருடைய கவனமாகும். வியர்களைக் கவனமாக எடுத்துக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தார்கள். அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது என்பது அவர்கள் எண்ணம். மாக் குழைத்த போது குளிர்சாதனப் பெட்டியில் பால் இல்லாததை நிமலன் அவதானித்து விட்டான். காலை வேளையில் தனிப் பாலில் கடும் சாயம் விட்டுத் தேநீர் தயாரிப்பதே வழக்கம். அதற்குப் பால் இல்லை என்பதை அவதானித்தவன் அதை வாங்குவதற்காக "யென்ஸ் ஏவென்சன்" என்கின்ற கடைக்குச் சென்று விட்டான். அதற்குப் போவது என்றால் தெருக்கள் கடக்கத் தேவை

இல்லை. தெருக்கள் கடந்து சென்றால் "ரீமி" என்கின்ற கடை இருக்கிறது. அதில் பொருட்கள் மலிவு என்கின்ற அவிப்பிராயம். நிமலனுக்குத் தெருக் கடந்து போவதற்கு அலுப்பாக இருந்தது. அதிக தூரம் பாரத்தை இழுத்துச் செல்வதிலும் விருப்பம் இருக்க வில்லை. யென்ஸ் ஏவென்சிற்கு முன்பு அந்த வளவில் ஒரு மருந்துக் கடை இருக்கிறது. அந்தக் கடை அரசிற்குச் சொந்தமானது. ஏதும் தலையிடி என்றால் அங்கே சென்று மருந்து வாங்கிக் கொள்ளலாம். நோர்வேயில் மருந்து இலகுவில் வாங்கிவிட முடியாது. பென்சிலின் போன்ற மருந்துகள் மருத்துவரின் அனுமதி இன்றி வாங்கவே முடிவதில்லை. யென்ஸ் ஏவென்சனில் விதம் விதமான பொருட்கள் இருக்கும். அதன் தரமும் நன்றாக அமையும். விலை சற்றுக் கூடுதலாக வைக்கிறார்கள் என்பது அவன் கருத்து. அதைவிட வாட்டிய இறைச்சி வகைகள், வாட்டிய கோழி, மற்றும் சமைத்த சாப்பாட்டுப் பொருட்களும் வாங்கலாம். வீட்டில் சாப்பாடு இல்லை என்றால் இங்கு வந்து ஏதாவது வாங்கிச் சென்று சாப்பிடக் கூடியதாக இருக்கும். கடையின் முன் பகுதியில் பாணும் பாலும் வைத்து இருந்தார்கள். ஆக்கிய உணவுகள், உடன் இறைச்சி, மீன் ஆகிவை கடையின் பின் பகுதியில் இருக்கும். வாட்டிய கோழியின் வாசம் நிமலனின் மூக்கில் நுழைந்தது. வாங்கிச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும் என்பதாகத் தோன்றியது. அப்படிச் சாப்பிட்டால் கொத்து ரொட்டியை மறக்க வேண்டியது ஆகிவிடும். கொத்து ரொட்டியை மறப்பதற்கு அவனுக்கு மனம் இருக்கவில்லை.

பால் வாங்கிக் கொண்டு வெளியே வந்த நிமலன் ஒரு கணம் சந்தியைப் பார்த்தான். இந்தச் சந்தி எப்போதும் பரபரப்பாய் இருக்கும். ஒஸ்லோவின் முக்கியமான சந்திகளில் இதுவும் ஒன்று. இது ஒரு நாற்சந்தி. நீல நிற "Tram" ஒன்று சந்தியைக் கடந்து நேரே பயணித்தது. ஒரு பேருந்து வளைந்து "கல்க பேர்க்" என்னும் இடத்தை நோக்கிச் சென்றது. பல கார்கள் அங்கும் இங்கும் வேகமாகச் சீறிப் பாய்ந்தன. ஒரு காரில் சில தமிழர்கள் சவாரி செய்தார்கள். ஒரு இளம் நோஸ்க் சோடி மருந்துக் கடைக்கு முன்பு நின்று தங்களை மறந்து முத்தமிட்டார்கள். நிமலனுக்கு அதைப் பார்க்க எனக்கும் ஒரு காலம் வர வேண்டும் என்கின்ற எண்ணம் எழுந்தது. வரும்... வரும்... என்கின்ற எண்ணத்தோடு புவியின் குணம் மாறா அதன் ஈர்ப்பைச் சபித்த வண்ணம் நடக்கத் தொடங்கினான்.

நிமலன் வீட்டிற்கு வரவும் சிவா மீண்டும் தொலைபேசி எடுக்கவும் சரியாக இருந்தது. பையை வைத்து விட்டு நிமலன் தொலைபேசியை எடுத்தான். அருளும், சொரூபனும் இறைச்சி, பச்சைமிளகாய், வெண்காயம் வெட்டும் அலுவலில் மும்மரம் காட்டினர். இறைச்சிக் கறியும் வைத்து ரொட்டியும் சுட்டு வைத்து விட்டால் பின்பு ஆறுதலாகக் கொத்தலாம் என்பது அவர்கள் எண்ணம்.

"அஙா வாறன்."

பாலைக் கொண்டு வந்து சமையல் அறையில் கொடுத்து விட்டு நிமலன் அவசரமாகக் கீழே ஓடினான்.

சொன்னபடி சிவா சுரங்கரத வாசலில் நின்றான். சிவாவைப் பார்க்க இப்போது சாதுவாய் உடம்பு வைத்ததாய் நிமலனுக்குத் தோன்றியது. தோலில் அதிகமான மினு மினுப்பு ஒட்டிக் கொண்டதான தோற்றம். சிவாவுக்கும் நிமலனைப் பார்க்க அப்படித்தான் இருந்தது. சிவா கறுப்புத் தோலால் செய்யப்பட்ட மேலங்கி ஒன்று அணிந்திருந்தான்.

"என்ன சிவா அண்ணை? எங்களை நீங்கள் மறந்து போயிட்டியள் எண்டு நினைச்சன்..."

"அப்ப உங்களை மறந்த ஒரு பைத்தியமே இப்ப உங்களைத் தேடி இங்க வந்து இருக்குது?"

"ஐயோ அண்ணை... அப்பிடி எல்லாம் நான் உங்களை நினைப்பேனா? வாங்க நடந்து நடந்து கதைப்பம். நீங்கள் இப்ப நல்லா மாறீட்டியள். இப்பிடியே ஒரு படம் எடுத்து அனுப்பி வைச்சியள் எண்டா பல லட்சம் கூடத் தருவினம்."

"நாய்க்கு நடுக் கடலிலும் நக்குத் தண்ணி தானாம்."

"சரி நீங்கள் நக்கிறியளோ குடிக்கிறியளோ எண்டு உங்களுக்கு மனிசி வரேக்க நான் பார்க்கிறனே? அப்ப இருக்குது உங்களுக்கடி." என்றான் நிமலன்.

"நல்லாக் கேள். சிவாவுக்கு எப்பவும் ஒரு நாக்குத்தான். அது சரி நீயும் நல்லா இப்ப தெளிஞ்சிட்டாயடா. உடம்பும் மினு மினுக்குது."

"அது இஞ்சத்தேச் சாப்பாடு. இவங்கடை சீசும் வட்டரும் கருவாட்டையும் துள்ளுகிற மீனாக்கிப் போடும் அண்ணை.

நாங்கள் ஏதோ முற்பிறவியில புண்ணியம் செய்து இருக்கிறம்."

"இல்லையடா.... இரண்டும் நிறையச் செய்து இருப்பம். அதுதான் இங்க வந்து சேர்ந்து இருக்கிறம். சரி... இப்ப வீட்டில யார் நிக்கினம் எண்டு சொல்லு?"

"அருள் அண்ணையும், சொரூபனும் நிக்கினம்."

""TS" அண்ணை இன்னும் வரேல்லையே?"

"கொஞ்ச நேரத்தில வந்திடுவார். உங்களுக்கு அவரோட சும்மா நோண்டுகிறது தான் வேலை."

"அப்பிடி இல்லை... நான் பட்ட அனுபவத்தை, உலக ஞானத்தைக் கதைக்கிறன். அவர் விழுந்தாலும் மீசையில மண் ஒட்ட இல்லை எண்டு கதைப்பார்."

"எனக்கு உந்தப் புடுங்குப்பாடு தெரியாது. ஆனால் போராட்டம் ஒழுங்கா நடந்தால் வரலாறாகும். இல்லை என்றால் இனத்தை அழித்த வசையாகும்."

"ஓ... உன்னிட்ட இருந்து வந்த ஒரு முத்தான தத்துவம்தான். அது ஏற்கனவே தெளிவான விஷயம்தானே?

"நீங்கள் சொல்லுகிறது எனக்கு விளங்க இல்லை."

"அது தெரியுமடா. அதுதான் நான் "TS" அண்ணையோடை கதைக்கிறனான்."

"உங்களுக்கு என்னை மட்டம் தட்டாட்டி விடியாதே?. ஆனா... நானும் ஒரு நாளைக்குப் பெரிய ஆளாய் வருவன். அப்ப பாருங்க."

"அது சரி, அப்ப நீ சின்ன பெடியன் எண்டுகிறதை ஒத்துக் கொள்ளுகிறாய். உது என்ன...? உந்த கொடி இப்பிடிக் கட்டிடத்தில சடைச்சு நிக்குது?"

"நீங்கள் உந்தக் கொடியின்ரை வடிவைப் பகல்ல பார்க்க வேணும். அது ஒன்பதாவது மாடி வரையும் போகுது. உந்தச் சேர்ச்சைத் தாண்டி நடந்து போனா 'கஸ்ல' வருமாம். அது பணக்காரர் இருக்கிற இடமாம்."

"அப்ப உனக்கு என்ன ஐடியா? பணக்காரன் ஆகிற ஐடியாவா? இல்லாட்டிப் பணக்காரப் பெட்டையாக் கலியாணம் செய்கிற ஐடியாவா?"

"ஐயா சாமி... என்ன விடுங்க. எதையோ குடுத்து எதையோ புண்ணாக்கின மாதிரி உங்களோடை கதைக்கிறது."

வீட்டின் வாசலுக்கு அருகே சிவா வரும் போது "நல்ல வடிவான இடமாகத்தான் இருக்குது. "TS" அண்ணை எப்பிடியும் ஒரு கலா இரசிகன்தான்." என்றான்.

"ஆனா... சிவா அண்ணை... அவரைச் சில வேளை விளங்கிக் கொள்ளவே முடியாது. எனக்குச் சில வேளை அவரைப் பாக்க மர்மமான மனிசரா அல்லது எதையோ மறைக்கிறவர் போல இருக்கும்?"

"உன்னிட்ட இருந்து மறைக்க அவருக்கு என்ன இருக்குது?"

"தெரிஞ்சா நான் ஏன் உங்களிட்டைப் புலம்புகிறன்."

"அடடா நீயும் கதைக்கப் பழகீட்டாய் போல இருக்குது?"

"பிறகு என்ன...? உங்களோடை சேர்ந்து இருக்கிறன். கதைக்கத் தெரியாட்டி எப்பிடி?"

வீட்டின் கதவைத் திறந்த போது ரொட்டியின் வாசம் மூக்கைத் துளைத்தது. கொத்து ரொட்டிக்கான முக்கிய அலுவல்களை முடித்த பின்பு, கோலில் வந்து சிவாவிற்காக அருளனும், சொரூபனும் காத்து இருந்தனர். சிவா உள்ளே வந்ததும் அவனது மேலங்கியை நிமலன் வாங்கிச் சென்று படுக்கை அறைக்குள் வைத்துக் கதவை மீண்டும் கவனமாகச் சாத்தி விட்டான். பின்பு கோலிற்குள் வந்து,

"சிவா அண்ணை... உங்களுக்கு ரீ போட்டரட்டுமே?" என்று கேட்டான் நிமலன்.

"அட சும்மா இருப்பியே?" என்றான் அருளன்.

"ஏன் சிவா அண்ணையை ரீ குடிப்பாரோ எண்டும் கேட்கக் கூடாதே?"

"இப்ப அதை நீ கேக்கக் கூடாது. நீ சின்னப் பொடியனாவே இருக்கிறாய்."

"ஓ…"

"பிறகு வேலை எல்லாம் எப்பிடிச் சிவா?" என்றான் அருள்.

"முறியலுக்குப் பஞ்சமில்லை. கழுவுகிறதில இருந்து இப்ப கொஞ்சம் சாப்பாடு செய்கிறது, சாமான்கள் கணக்குப் பார்த்து எடுத்து வைக்கிறது மாதிரியான பிறமோசன் கிடைக்குது. இண்டைக்குக் காலமையில இருந்து பின்னேரத் திருவிழாவுக்கான ஆரம்ப வேலை வரை என்ரை தலையிலதான். ஒரு மாதிரிச் செய்து முடிச்சாச்சு. அதால எனக்குப் பின்னேரம் லீவு. இல்லாட்டி தொடர்ந்து முறியலா இருந்து இருக்கும்." என்றான் சிவா.

"எண்டாலும் சிவா அண்ணை நினைச்ச உடன சாப்பிடலாம். நாங்கள் வீட்டை வந்து சமைச்சுத் தானே சாப்பிட வேணும்." என்றான் நிமலன்.

"அங்கையும் சமைச்சாத்தான் சாப்பிடலாம்." என்றான் சிவா.

"உங்களோடை கதைக்க ஏலாது." என்றான் நிமலன் தோல்வியோடு.

"உங்கடை வேலையள் எப்பிடிப் போகுது?" என்று அருளனைப் பார்த்துச் சிவா கேட்டான்.

"ஏதோ போகுது... பருவாய் இல்லை. சில இடங்கள் வாய்க்கும். கொம்பிளையின் பண்ண மாட்டான்கள். சிலர் ஒரு சின்னத் தூசு கண்டாலும் அடிச்சு அமர்க்களப்படுத்திப் போடுவாங்கள். பிறகு பையப் பையக் கழுவ வேணும்... வடிவாத் துடைக்க வேணும். 'கூவிட்றென்யோரிங் - பிரதான கழுவுதல்' எண்டாக் கொழுப்பு வெட்டக் கொஞ்சம் கடுமையான மருந்து பாவிப்பம். இதுகள் எல்லாம் உடம்புக்குக் கூடாதோ என்னவோ தெரியாது. அவங்கள் ஒண்டும் சொல்ல மாட்டாங்கள். கொந்தோர் வழிய வேலை வந்தால் ஓரளவுக்கு சுத்திப் போட்டு ஓடி வரலாம். இடைக்கிடை 'தொர்மப் - நீரில் நனைக்கா துணி' அடிக்கலாம். சின்ன பிள்ளையள் போகிற பள்ளிக்கூடம் இல்லாட்டி 'வாணகாகன் - குழந்தைகளைப் பராமரிக்கும் இடம்'

கிடைச்சால் அவ்வளவு தான். நிண்டு மாய்கிறதில நாரி முறிஞ்சிடும்." என்றான் அருளன்.

"காசு தாறவன் எங்கை எண்டாலும் முறிக்காமல் விடமாட்டான். வேலை விஷயத்தில முதலாளிகள் எந்தத் தேசத்தில இருந்தாலும் ஒரே குணமுடைய மனிசராகத் தான் இருப்பாங்கள். அதே மாதிரித் தொழிலாளிகளும் அதுக்கு எதிரான ஒரே குணமுடைய மனிசராகத்தான் இருக்கிறாங்கள்."

"அது எண்டா உண்மை. அண்ணை வந்திடுவார்… நாங்கள் துவங்குவமே?" என்றான் அருள்.

"இப்ப எங்க சுட்டுக் கொண்டு வந்தனியள்? எதுக்கும் அவரும் வரட்டும்." என்றான் சிவா பொறுமையாக.

"அது எங்களுக்கு ஒரு பாகிஸ்தான் ‘கமறாத் - தோழன்’ பழக்கம். நாங்கள் கேட்டா இல்லை எண்டு அவர் சொல்லமாட்டார். அண்ணை அடிப்பாரோ தெரியாது. இப்ப அவர் முன்ன மாதிரி இல்லை. கொஞ்சம் கலகலப்புக் குறைவு. ஏதோ ரெலிபோன் வந்தது எண்டு முதல் இருந்த வீட்டில சொல்லிச்சினம். ஆனா... என்ன கதைச்சவர் எண்டு தெரியாதாம். எங்கயோ மழையில நனைஞ்சு போட்டு வந்தவராம்."

""TS" அண்ணையா?" சிவா நம்ப முடியாது கேட்டான்.

திடீரென அம்புலன்ஸ் சத்தம் கேட்டது. அது வர வரப் பெரிதாகியது. இவர்கள் கட்டடத்தை அண்டுவதாக அதன் ஒலி அருகாகக் கேட்டது. எல்லோரும் சாளரத்தை நோக்கி ஓடினர். அருள் பல்கணிக் கதவைத் திறந்து வெளியே போனான். குளிர் வேகமாக உள்ளே தள்ளிக் கொண்டு வந்தது. பல்கணியில் போய் நின்று எல்லோரும் விடுப்புப் பார்த்தார்கள். கீழே சிவப்பும் மேலே வெள்ளையுமான அம்புலன்ஸ் நீல ஒளி வீசிய வண்ணம் வந்து நின்றது. அதில் இருந்து வெள்ளைச் சீருடையோடு ஒரு மருத்துவர் இறங்கி வந்தார். அவர் கையில் ஒரு கறுத்தப் பெட்டி இருந்தது. அவர் அதைச் சிரமப்பட்டு எடுத்துச் சென்றார். அதைவிட அம்புலன்சில் வந்தவர்கள் தள்ளக்கூடிய கட்டிலையும் மற்றும் உபகரணங்களையும் எடுத்துக் கொண்டு கட்டடத்திற்குள் வந்தார்கள். பல்கணிக் கதவை மூடிவிட்டு முன் கதவைத் திறந்து எல்லோரும் எட்டிப் பார்த்தார்கள்.

சிறிது நேரத்தில் நான்காவது மாடியில் இருந்து ஒரு கிழவியைத் தள்ளக்கூடிய கட்டிலில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தார்கள். அப்போது அந்த மருத்துவர் கையில் இருந்த கறுத்தப் பெட்டியில் தொலைபேசி ஒன்று வயரோடு இருப்பதை நிமலன் கவனித்தான். ஆர்வக் கோளாற்றின் தலை வெடிப்புத் தாங்க முடியாதவனாய் சிவாவைப் பார்த்து,

"டொக்ரர் கொண்டு போறது என்ன பெட்டி?" என்று தன்னை மறந்து கேட்டான்.

"அம்புலன்சிற்குள் ரேடியோ இருக்கும். இவர் எங்கயோ இடையில நிண்டு இருப்பார் போல இருக்குது. அமுக்கிக் கொண்டு வந்து இருக்கிறாங்கள்." என்றான் சிவா.

"நீங்கள் சொல்லுகிறது விளங்கேல்லை?"

"அட அது வயர் உள்ள சுக்கேஸ் பெட்டி." என்றான் சிவா விஷமத்தோடு.

"அது ஏதோ ரெலிபோன் போல இருக்குது."

"பிறகு என்ன உனக்கு விளங்கீட்டுது."

"உங்களுக்குத் தெரிஞ்சதைச் சொல்லுகிறதில என்ன பெரிய பிறியம்?"

"சொன்னா நீயும் விண்ணன் ஆகீடுவாய் எல்லே? ஒரு உறையில இரண்டு வாள் கூடாது."

"நான் விண்ணன் ஆகினாலும் உங்களுக்கு எதிராக நாகக்கணைய வீசமாட்டன் அண்ணை."

"அது எப்பிடித் தெரியும்? உனக்கு "TS" அண்ணை கிஷ்ணபரமாத்மா மாதிரி எப்பவும் உனக்காக தேரைப் பூமியில பதிப்பார். எங்களுக்கு அப்பிடி யாரும் இல்லையடா."

"சரி... கதையை மாத்துகிறதை விட்டிட்டு... விசயத்தைச் சொல்லுங்கோ. பிறகு நாங்கள் சுக்கேஸ் பெட்டிய விட்டிட்டுப் புராணத்துக்குப் போயிடுவம்."

"அதுதான் நிமலன் மொபயில் ரெலிபோன். வயர் இல்லாமல் கதைக்கலாம். எங்கையும் கொண்டு போகலாம். எங்கை இருந்தும் கதைக்கலாம்."

"வாக்கி ரொக்கி மாதிரியா?"

"ம்... அதுக்கும் இதுக்கும் சில வித்தியாசங்கள் இருக்குது. முதலாவதா நாங்கள் இதில ஓவர் சொல்லத் தேவை இல்லை. இரண்டு பெரும் ரெலிபோனில கதைக்கிற மாதிரிக் கதைக்கலாம். சனல் பிடிக்காமல் நம்பர் அடிச்சுக் கதைக்கலாம்."

"நானும் ஒண்டு வாங்க வேணும் அண்ணை."

"ஏன் நீ யாருக்கும் வைத்தியம் பார்க்கப் போறியே? இல்லாட்டிக் கழுவுகிற 'மப்தடி – கழுவப் பாவிக்கிற தடி' உடைஞ்சு போட்டுது எண்டு அடிச்சுச் சொல்லவே?" அதைக் கேட்டு அருளும், சொரூபனும் பொறுக்க முடியாது சிரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

"வாழிய... மருந்தை... மறந்து போனாலும் அடிச்சுச் சொல்லலாம். காரில உடனடியாக் கொண்டு வந்து தருவினம்." என்றான் அருள்.

"பகிடிய விடுங்க. உது எவ்வளவு வரும்?" என்று நிமலன் சிவாவைக் கேட்டான்.

"இருபத்தி ஐஞ்சு, இல்லாட்டி முப்பது ஆயிரம் குரோணர் போகுதாம். உன்னிட்டை இருக்குதே?"

"இருந்தால் வந்த கடனை எல்லாம் நான் அடைச்சுப் போடுவன்."

"அப்ப கொத்து ரொட்டிக்கான அலுவலைப் பாரும். தேவை இல்லாத ஆராய்ச்சி செய்தீர் எண்டால் தலை எயார்ப்போட் ஆகிடும்."

"அதை நீங்கள் சொன்னா என்ன சொல்லாட்டி என்ன… சுடுதண்ணிக்கு இங்க அப்பிடித்தான் கத்தை கத்தையாக் கொட்டுது." என்றான் நிமலன்.

அருள் மூன்று வியரைத் திறந்து கொண்டு வந்தான். நிமலன் சோபாவில் சிவாவுக்குக் கிட்டவாக இருந்தான்.

"உனக்கும் வேணுமோடா?" என்று நிமலனைப் பார்த்து அருள் கேட்டான்.

"ஆசையாகத்தான் இருக்குது. ஆனாக் கெட்ட பழக்கம் எண்டு எல்லாரும் சொல்லுகினம். கலியாணம் கட்டும்

வரைக்கு ஆவது நல்ல பிள்ளையா இருப்பம்." என்றான் நிமலன்.

"ஆங... அப்பிடியும் ஒரு நினைப்பு உனக்கு இருக்குதே?" என்றான் சிவா. எல்லோரும் நிமலனைப் பார்த்து நக்கலாகச் சிரித்தார்கள்.

"இப்ப சிரியுங்க அண்ணைமாரே. ஒரு நாளைக்கு என்னைப் பார்த்து மனசுக்க அழுவீங்கள். அப்ப நான் நிறைய உயரத்தில இருப்பன்."

"ஏன் மலையில 'கித்தை – சிறிய குடில்' வாங்கீட்டியே?"

"மலையில கித்தையும் வாங்குவன். ஒஸ்லோவில நாலு வீடும் வைச்சு இருப்பன்." என்றான் நிமலன்.

அவன் அப்படிச் சொல்லும் போதே வீட்டுக் கதவு திறக்கும் ஓசை கேட்டது. "TS" சாவி வைத்து இருந்ததால் கதவைத் திறந்து உள்ளே வந்தார். குளிரில் நித்தம் குளிப்பதால் அவர் உடலும் மினு மினுத்தது. சிவாவைக் கண்டதும் அடக்க முடியாத ஆவலோடு,

"சிவாவே...? வா... வா... உன்னச் சந்திக்க வேணும் எண்டு அடிக்கடி நினைப்பன்." என்றார்.

"நீங்கள் என்ன கூத்தாடினாலும் என்னைக் கழுவ ஏலாது. எனக்கும் உங்களோடை கதைக்க வேணும் போலத்தான் இருந்திச்சுது. எங்களுக்கு இரவு பகல் மாதிரி, பகல் இரவு மாதிரி... அப்பிடியான வேலை அது. இண்டைக்கு ஒரு மாதிரி விட்டிட்டாங்கள்."

"ம்... உம்மடை நிலை விளங்குது. சிவா உம்மைக் கழுவுகிறது என்ரை நோக்கம் இல்லை. அப்பிடி உம்மை யாராலும் கழுவ முடியாது எண்டும் எனக்கு நல்லாத் தெரியும். அது அரும்பு மீசைக் காலத்தில இல்லாட்டி அதைவிடக் குறைவான பருவத்தில செய்கிறது. அப்பிடி யாரையும் கழுவுகிறத்துக்கான மனதும் என்னிட்டை இல்லை. உனக்கு விரும்பினதை, சரி எண்டுகிறதை நீ செய்கிறாய். அந்தச் சுதந்திரத்தில நான் தலையிட மாட்டன். அதைப் போல நான் எனக்குச் சரி எண்டுகிறதைத்தான் செய்ய வேணும். நான் எதுக்கையும் போகேல்லை... போகப் போகிறதும் இல்லை. அதுக்கு உள்ள என்ன குத்துப் பாடுகள் நடந்தது எண்டும் எனக்குச் சரியாய் தெரியாது. நாட்டில நல்ல முடிவு

வரவேணும். நாங்களும் சுதந்திரமா இருக்க வேணும். அதுக்கு ஏதாவது உதவி செய்ய இயலும் எண்டாச் செய்யலாம். அப்பிடிப் பார்த்தாக் காசு குடுக்கலாம். அதைத் தவிர எங்கடை போராட்டத்தை நியாயப்படுத்தி இவங்களோடை கதைக்கலாம்."

"நாங்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு தோணி எடுத்துப் பயணிச்சம். தோணிகள்தான் எங்களுக்குச் சொந்தம் எண்டு பலரும் நினைச்சம். இல்லைக் கடலே தங்களுக்குச் சொந்தம் எண்டாங்கள் சுயநலம் பிடிச்சவங்கள். இப்ப கடலைக் குத்தகைக்கு எடுத்தவங்கள் எண்டாலும் கரைபோய் சேருறாங்களா எண்டு பார்ப்பம். அங்கை இப்ப இந்தியன் சாப்பாடு போடுகிறானாம். கிட்டடியில அவங்கள் இறங்குவாங்கள் எண்டு கதைக்கினம். உதோடை சில வேளை பிரச்சனை தீரலாம். பிரச்சனை தீர்ந்தா எல்லாரும் நாட்டுக்குப் போகலாம். எத்தினை பேருக்கு நாட்டுக்குப் போக விருப்பம் எண்டு அப்ப பார்ப்பம்."

"ஆமி பெரிய அநியாயம் செய்து எங்கடை பக்கத்தைப் பிடிச்சுப் போட்டாங்கள். அதோடை வடமாராச்சிக்கான சண்டை இப்ப நடக்குது. உந்தப் பெரிய ஆமி வந்தால் சில வேளை ஒருத்தராலும் தாக்குப் பிடிக்க ஏலாது. பெரிய அநியாயம் எல்லாம் நடந்திட்டுது. நிச்சயம் எல்லாருக்கும் ஒரு நாள் விடிவு வரும். அவங்கடை ஓர்மமான போராட்டம் ஒரு நாளைக்கு வெல்லும்."

"உங்களுக்கு அவங்களில அபார நம்பிக்கை. இந்தியன் இறங்குவான். ஒப்றேசன் பூமாலை இப்பவே ஆரம்பம் ஆகீட்டுது. அவனைப் பாவிக்கிறதைப் பொறுத்து இருக்குது எங்கடை போராட்டம் எந்தத் திசையில போகும் எண்டது. அதை எப்பிடிப் பாவிக்கினம் எண்டு பொறுத்து இருந்துதான் பார்க்க வேணும். பார்சல் போடுகிறது ஒரு பரீட்சார்த்த முயற்சி. கிட்டடியில அவங்கள் இறங்கச் சந்தர்ப்பம் இருக்குது."

"நம்பிக்கை தானே வாழ்க்கை சிவா. இந்தியன் ஆமி இறங்கிப் பிரச்சனை தீர்ந்தால் எல்லாருக்கும் நன்மை. சிலோன் ஆமி செய்கிற மாதிரி இல்லாமல் எங்களுக்கு எப்பவும் ஆதரவாகத்தானே இருப்பாங்கள்?"

"அதை எப்பிடிச் சொல்லுகிறது? வங்கம் தந்த பாடம் மறக்க முடியுமா? தமிழ் ஆமியா இருந்தா தமிழருக்கு ஆதரவா நடக்க வேணும். இந்தியன் ஆமி தமிழ் ஆமி

இல்லைத் தானே? எல்லாம் போகப் போகத்தான் தெரியும்."

"உண்மை. ஆமி எண்டா அதுக்கு எண்டு ஒரு தனிக் குணம் இருக்குது." என்றார் "TS". அவரின் முகத்தில் தடிப்பாக அப்பிய கவலை.

இதற்குப் பதில் சொன்னால் இந்த விடயத்தில் இருந்து நாங்கள் நகரமாட்டோம் என்பது சிவாவுக்கு விளங்கியது. அவன் மௌனம் காத்தான். பின்பு,

"இருங்க அண்ணை கதைப்பம்." என்றான்.

"இல்லை... நான் முகம் கழுவீட்டு வாறன் சிவா."

என்று கூறிய வண்ணம் "TS" முகம் கழுவச் சென்றார். பசியோடு இருந்த வயிற்றில் வியர் சுள்ளிட்டது. தலைக்குள் மெல்லிய கிறுக்கம்.

"கொத்துப் போடுவமே?" என்றான் நிமலன்.

"நிமலனுக்கு நித்திரை வருகுது போல இருக்குது... கொத்துப் போட்டுக் குழந்தைக்கு குடுத்து விடுங்கோ..." என்று விட்டு ஒரு மிடறு வியரைக் குடித்தான் சிவா. அருளும், சொரூபனும் மீண்டும் சிரித்தார்கள். "TS" முகம், மேல் கழுவிய பின்பு நீல நிற சாறத்தோடும், சாம்பல் நிற ரீசேட்டுடனும் கோலுக்குள் மீண்டும் வந்தார். அவர் பார்வையில் ஏதோ ஒரு வித சோகம். அதை யாரிடமும் சொல்ல முடியாத தவிப்பு. சிவாவுக்கு அவரின் அவஸ்தை விளங்கியது. சொல்ல முடியும் என்றால் சொல்லி இருப்பார். சொல்லக் கூடாது என்று நினைத்து இருக்க வேண்டும். சொல்லக் கூடாது என்பதிலும் அது சொல்ல முடியாத சங்கதியாய் இருக்க வேண்டும் என்பது அவனுக்கு விளங்கியது. அது என்னவாக இருக்கும் என்பது மட்டும் அவனுக்கு விளங்கவில்லை. சோபாவில் வந்து இருந்த "TS", "சொல்லு சிவா?" என்றார்.

"நான் தானே சொன்னனான் அண்ணை... எங்களுக்குப் பகல் இரவு மாதிரி... இரவு பகல் மாதிரி. தமிழற்றை விஷயம் எனக்கு வாறது குறைவு. நோஸ்க்குகளின்ரை விஷயம் எண்டா நிறைய வரும். உங்களுக்குத்தான் தமிழற்றை விஷயம் தெரிஞ்சிருக்கும். நீங்கள் தான் சொல்ல வேணும்."

"எப்ப, எங்க வேலை செய்தா என்ன? குரன்லாண்டிற்குப் போனால் எல்லா விஷயமும் வாங்கிக் கொண்டு வரலாம்." என்றார் "TS".

"அதுவும் உண்மை தான். அது சரி "TS" அண்ணை உங்கடை பாடு எப்பிடிப் போகுது?"

"பார்க்கிறீர் தானே...? வேலை... வீடு... அதுவே சிறையான வாழ்க்கை வட்டமாய் போச்சுது."

"ம்... நீங்கள் வியர் அடிக்க இல்லையே?"

"எனக்கு இண்டைக்கு வேண்டாம் சிவா. நான் இப்ப அடிக்கிற மன நிலையில இல்லை."

"எல்லா மனிசருக்கும் பிரச்சனை இருக்குது அண்ணை. இதை நான் உங்களுக்குச் சொல்ல வேணுமே? சொல்ல வேண்டாம் எண்டா விடுங்க. ஆனாப் பிரச்சனையைச் சொன்னா உங்களுக்குப் பாரம் குறையும் எண்டு நினைக்கிறன்."

"அதைச் சொன்னா இன்னும் பாரம் கூடும். அதை விடுவமே சிவா?"

"ம்... நல்ல காலம் வரப் போகுது." என்றான் சிவா.

"இது என்ன குடுகுடுப்பைக்காரன் மாதிரிச் சிவா அண்ணை... எப்ப சாத்திரம் சொல்லத் தொடங்கின நீங்கள்?" என்றான் நிமலன்.

"அட நீயும் பகிடி விடுகிறாய் என்ன? ஆனா... "TS" அண்ணை எங்களுக்கு எல்லாம் ஒரு நல்ல காலம் இருக்குது. இப்ப கொஞ்ச நாளைக்குப் பல்லைக் கடிச்சுக் கொண்டு வாடகை வீட்டில இருந்தா மலிவா வீடு வாங்குகிற சந்தர்ப்பம் வரும் எண்டு எங்கடை கடைக்கு வாற ஒரு வாங் மனேச்சர் அண்டைக்கு வெறியில விளங்கப்படுத்தினார். மலியேக்க வாங்கிறது நல்ல இலாபமாய் இருக்குமாம். ஆனா... வீடு மலிகிற பொருளாதார நெருக்கடியான நேரத்தில வீட்டுக்கடன் தாறதுக்கும் வாங் பின்னடிக்குமாம். அதுக்கு ஒரே வழி, ஒரு வேலையில நிண்டு பிடிச்சு அந்த வேலை நிரந்தரம் எண்டு கடிதமும், நல்ல 'லோன்சிலிப்பும் - சம்பளத்துண்டு' குடுக்க வேணும் எண்டு சொன்னார். அப்பிடி எண்டா தன்ரை வாங்கிற்கு அவர் வரச் சொன்னார். தான்

கடனுக்கு ஏற்பாடு செய்கிறாராம். வெறியில தான் உது கதைச்சவர். அவர் உண்மையாக் கதைச்சாரோ இல்லையோ தெரியாது. ஆனா... அவர் ஒரு முக்கியமான வாங்கில வேலை செய்யிறார்."

"நீர் சொல்லுகிறது உண்மை. நோர்வேயின்ரை பொருளாதாரம் இப்ப டவுண்ல போகுது எண்டு பரவலா கதைக்கினம். வேலையை விட்டால் இனி வேலை எடுக்கிறது லேசா இருக்காது எண்டு சொல்லுகினம். சில வேளை இந்தக் கழுவுகிற வேலைக்கும் தட்டுப்பாடு வரலாம்." என்றார் "TS".

"நொஸ்க் பெடி, பெட்டையள் இப்பிடியான சம்பளம் குறைஞ்ச வேலையைப் பொதுவா இப்ப விரும்புகிறது இல்லை. ஆனா... வேலை கிடைக்கிறது கஸ்ரம் எண்டு வந்தால் அவங்களும் இந்த வேலைக்கு வரலாம். அவங்கள் இந்த வேலைக்குப் போட்டியா வந்தால் நாங்கள் இரண்டாம் பட்சமாகத்தான் இருப்பம்."

"அது உண்மை. இப்போதைக்கு மனசுக்குப் பிடிச்சா என்ன பிடிக்காட்டி என்ன முதலாளிக்கு விசுவாசமாய் தான் நடக்க வேணும்." என்றார் "TS".

"நிமலன் படிச்சு நல்ல உத்தியோகத்துக்கு வரலாம். அவனுக்கு வயது இருக்குது. இப்படி எங்களோடை சேர்ந்து கழுவத் தேவை இல்லை." என்றான் சிவா.

"படிச்சு நல்ல உத்தியோகம் பார்த்தாக் கௌரவம் தான். கடனை அடைச்சா அதைவிடக் கௌரவம். எனக்குக் கடனை அடைக்க வேணும் எண்டது முக்கியம்." என்றான் நிமலன்.

"நிமலன் பிடிச்சான் எண்டாப் பிடிதான். லேசில அவனை மாத்த ஏலாது." என்றார் "TS" .

"சரி நான் கொத்துப் போடுகிறன்." என்று கூறிய வண்ணம் அருள் எழுந்தான். சொரூபனும் அவனோடு சேர்ந்து எழுந்து சென்றான். நிமலன் தொலைக்காட்சியை இயக்கினான்.

8 இந்திய இராணுவம்

சூரியன் உச்சத்தில் சஞ்சரிக்கும் ஆனி, ஆடி மாதங்கள் கழிந்து போக ஆவணி திடீரென வந்திற்று. ஆவணி ஞாயிற்றுக்கு உரிய மாதம். ஆதவனைப் பூசிக்கும் அந்த மாதத்தில் ஆதவனின் அரவணைப்பை நோர்வே மெல்ல மெல்ல இளக்கும். ஆதவனின் அரவணைப்பு அற்றுப் போகக் குளிர் ஏக்காளமாய் எட்டி உதைக்கும் அவஸ்தை தொடங்கும். பகற் பொழுதில் அதன் உச்சம் தெரியாவிட்டாலும் இரவிலும், காலையிலும் அது தன் கொடிய கரங்களால் இரக்கம் இன்றி மனித உடலைத் தீண்டிச் செல்லும். குளிர் காலம் எப்படித் தொடங்கும் என்ன என்ன மாற்றங்கள் உண்டாகும் என்பது பற்றி "TS" கேள்விப்பட்டு இருந்தார். நேரடியாக அதை இன்றுவரை அவர் அனுபவித்தது இல்லை. இந்தக் குளிர் காலம் முதல் அனுபவமாக இருக்கப் போகின்றது. அது அவஸ்தையா அல்லது ஆனந்தமா என்பது பற்றி அவர் முடிவு செய்யவில்லை. வண்ணங்கள் மாறி வானமும் பூமியும் மாயாஜாலம் காட்டும் என்று கேள்விப்பட்டு இருக்கிறார். பஞ்சு போல் வானத்தில் இருந்து பனி இறங்கும் என்றும்... ஆறுகள், கடல்கள், உறைந்து போகும் என்றும் அவர் கேள்விப்பட்டு இருக்கிறார். அதை எல்லாம் பார்க்க வேண்டும் என்கின்ற ஆசை இருந்தாலும் காலையில் குளிர்வதை அனுபவிக்கும் போது குளிர் காலம் எப்படி வாட்டி எடுக்கும் என்பது அவருக்கு விளங்கியது. அதற்கான மேலங்கி, காலணி, கம்பளி மேற்சட்டை, கம்பளி உள்ளாடைகள் வாங்க வேண்டும். அதற்கு ஒரு தொகை பணம் தேவைப்படும் என்பதும் அவருக்கு புரிந்தது.

இன்று ஞாயிற்றின் கிழமையான ஞாயிற்றுக் கிழமை. ஞாலத்தில் வாழும் மனிதர்களுக்கு விடுமுறையான தினம். சிவாவுக்கும் இன்று விடுப்பு. இரண்டு மணிபோலத் தான் இங்கே வருவேன் என்று கூறி இருந்தான். அவன் இரண்டு மணிக்கு வந்து, பெடியள் வியர் அடித்துச் சாப்பிட நான்கு மணி ஆகிவிடும் என்பது "TS"சிற்கு விளங்கியது. இன்று இரவு படுத்துவிட்டுச் சிவா நாளைக் காலை, தான் குடியிருக்கும் வீட்டிற்குச் செல்வான். சிவா வந்தால் எல்லாப் புதினங்களும் அவனோடு கூட வரும். அவன் சிரித்துச் சிரித்து பொல்லாத விஷயங்களைச் சில வேளை நைசாகத் தள்ளுகிறான். சில வேளை எதிரி போலக் குமுறுகிறான். ஒரே குறிக்கோளிற்குப் புறப்பட்டவர்களின் பாதைகள் ஒவ்வொரு விதமாக மாறிப் போயிற்று. அவனுக்கு இப்போது யாரையும் பிடிப்பது இல்லை என்பது

"TS"சின் கணிப்பு. எல்லோரும் விடுதலை என்று கூறித் தமிழ் இனத்தை ஏமாற்றி விட்டார்கள் என்பது அவன் கொதிப்பு. அவன் கொதிப்பில் எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பது "TS"சிற்குத் தெரியாது. அவனது பாதிப்பு தனக்கு இருந்தால் தான் எப்படிக் கதைப்பேன் என்கின்ற கேள்வி அவரை நோண்டுவது உண்டு. தவிர்த்து இருக்க முடியாததா அல்லது தவிர்த்துக் கொள்ள விரும்பவில்லையா என்பது யாருக்குத் தெரியும்? அவன் பலவற்றையும் மறந்து இருப்பான். அந்தச் சம்பவம் மாத்திரம் அவனுக்கு எல்லாவற்றையும் நினைவூட்டுகிறது. அதைப் பற்றிக் கதைத்தால் எரி குளம்பாக அவன் கண்கள் சிவந்து விடுகின்றன. உடலில் பதட்டம் தொற்றிக் கொள்கிறது. சாத்தான் வந்து அவனில் குடி கொண்டது போன்று மாற்றம் அடைகிறான். அப்படி அவனைப் பார்ப்பது "TS"சிற்குப் பிடிப்பது இல்லை. சில வேளை அந்தக் கதைகள் யதார்த்தமாகச் சம்பாசனைகளில் வந்து விடுகின்றன. அவன் அப்போது தணல் போல ஆகி விடுகிறான். அவன் நியாயம், அவன் நம்புவது, அவனுக்குச் சரியாகப் படுகிறது. என் நியாயம், நான் நம்புவது, எனக்குச் சரியாகப் படுகிறது. எது உண்மையான நியாயம் என்பது எவருக்கும் தெரியாது. நாங்கள் சாரும் பக்கத்தை விட்டு மற்றைய பக்கத்தில் நின்று யாராலும் சிந்திக்க முடிவது இல்லை. அப்படிச் சிந்தித்து இருந்தால் இலங்கையில் இன்று பிரச்சனை இருந்து இருக்காது.

"என்ன அண்ணை ஒரே யோசினையில இருக்கிறியள்?" பக்கத்தில் வந்து இருந்த வண்ணம் நிமலன் கேட்டான். "TS" அதற்குப் பதில் சொல்லவில்லை. ஆதவன் மேலே மேலே வந்தான். அவன் கதிர்களை வீட்டிற்குள் இருந்து பார்க்கும் போதே கண்ணைக் கூசியது.

"வெயில் கண்ணைக் கூசுதடா. சிவா வாறான் எல்லே. இண்டைக்கு என்ன சாப்பாடு செய்வம்?" என்றார் "TS".

"அருளண்ணை காலமை வெளிக்கிட்டு ஓடினது உங்களுக்குத் தெரியாதே?"

"இல்லை."

"அவர் காலமையே வெளிக்கிட்டு 'ஆக்கர்பிறிக்க' போயிட்டு வந்திட்டார். மக்கிரலும், இறாலும் வாங்கி வந்து

இருக்கிறார். இண்டைக்கு மீனும் இறாலும் எண்டு நாங்கள் ஒரு பிடி பிடிக்கலாம்."

"அட... ஆக்கர்பிறிக்க போகிறது எண்டா என்னையும் எழுப்பி இருக்கலாம்."

"அவருக்கு வித்தியாசமான சாப்பாடு செய்கிறதில இன்றஸ்ற். இண்டைக்கு வியருக்கு நல்ல சாப்பாடு இருக்க வேணும் எண்டு ஓடினவர். கட்டாயம் மக்கிரல்ல பொரியலும் இருக்கும்."

"அவருக்கு உதவி செய்ய வேணும். எங்கயோ போயிட்டார். வந்து துவங்கினதும் உதவி செய்து குடுப்பம்."

"ம்... நீ நேற்று நியூஸ் பார்த்தனியே?"

"இல்ல... வேலையால வரப் பிந்திப் போச்சுது."

"வேற யாரும் பார்த்தவங்களே?"

"ஒருத்தரும் பார்த்து இருக்க மாட்டினம். நான் வரேக்க ஒருத்தரும் வீட்டில இல்லை. வந்தாலும் உடன என்ன படம் ஓடுது எண்டுதானே பார்க்கிறது வழக்கம்."

"நியூஸ் பார்த்தாத் தானே என்ன நடக்குது எண்டு தெரியும்."

"பருவாய் இல்லை. இண்டைக்குச் சிவா அண்ணை வாறார் தானே...? அவரிட்டை எல்லா நியூசும் கேட்கலாம். கேட்காட்டியும் அவருக்குச் சொல்லாட்டித் தலை வெடிக்கும்."

"சும்மா இரு நிமலன். அவன் நாலு விஷயமும் அறிஞ்சு வைச்சு இருப்பான். கடிக்கவும் செய்வான். அதுக்காக நாங்களும் அறிஞ்சு வைச்சிருக்கக் கூடாது எண்டு இல்லையே?"

"ஆருக்கு அண்ணை விருப்பம் இல்லை. நேரம் சரியா வருகுது இல்லை. பேப்பர் படிக்க நொஸ்க் தெரியாது. அது தெரியாமல் என்ன எண்டு வாசிக்கிறது?"

"வேலைப் பராக்கில அதையும் மறந்தாச்சுது. திங்கள் காலமை போய் கதைச்சிட்டு வரவேணும்."

"ஓம் அண்ணை... கிட்டத்தானே அது இருக்குது. நான் ஞாபகப் படுத்துகிறன்."

கதவைத் திறந்து கொண்டு அருள் உள்ளே வந்தான். "TS"சும் நிமலனும் சோபாவை விட்டு எழுந்து சென்றனர். அருள் அவர்களைப் பார்த்து,

"சிவா வருவான். சமைப்பம் அண்ணை. மீன் வாங்கி வந்து பிறிச்சில வைச்சு இருக்கிறன். கொஞ்ச இறாலும் வாங்கினான். வெங்காயமும் போட்டுப் பொரிச்சா நல்லா இருக்கும்."

"ம் அப்படித் தான் நிமலன் சொன்னான். நெடுகவும் இறைச்சியைச் சாப்பிடுகிறதும் கூடாது. இங்க எதுக்கு எடுத்தாலும் இறைச்சி வாங்கி வந்து சமைக்கிறது வழமையாப் போச்சுது. ஆனா... அது நல்லதா எண்டு யோசிக்க வேணும்."

"ம்..." என்ற வண்ணம் அவன் சமையல் அறைக்குள் புகுந்தான்.

நிமலனும் "TS"சும் சமையல் அறைக்கு அவன் பின்னே சென்றார்கள். "TS" பெரிய அலுமேனியச் சட்டி ஒன்றில் நீர் எடுத்துக் கொதிக்க வைத்தார். முதலில் அரிசியைப் போட்டு வடித்தால் மற்றையவற்றை அருள் பார்த்துக் கொள்வான். மற்றவர்கள் சமைத்து அருளைத் திருப்திப் படுத்த முடியாது. ஆனால் அவன் சமைத்தால் எல்லோரையும் திருப்திப் படுத்துவான். இது ஊர் அறிந்த புதினம் ஆதலால் "TS" இறாலை எடுத்து அதன் கோதுகளை நீக்கத் தொடங்கினார்.

அருள் சில வெங்காயங்களையும், பச்சை மிளகாய்களையும் எடுத்து நிமலனிடம் கொடுத்தான். பின்பு மீனை எடுத்துச் சுத்தம் செய்யத் தொடங்கினான். மக்கிரல் மீன் செதில் இல்லாது தோலோடு மாத்திரம் இருக்கும். அது நாவல் பழம் போல் வழுவழுப்பான, பளபளப்பான தோல் கொண்டது. பார்க்கவே உண்ணும் விருப்பைத் தூண்டும். கையில் அதை எடுத்தால் உரித்த வாழைப்பழம் மாதிரி வழுவி ஓடும். நீல நிற மேனியில் கறுப்புக் குதிரை வரிகளும் சில இருக்கும். அடி வயிற்றுப் பாகம் வெள்ளி போலப் பளபளக்கும். அதற்குப் பெரிய கண்கள். அது ஒருவகை எண்ணைத் தன்மையான மீன்.

மனிதர்களுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் மிகவும் ஆரோக்கியமான உணவு.

அவை இரண்டும் பெரிய மீன்கள். நல்ல நிறை நின்றன. அருள் அதை எடுத்து, இருந்ததில் நல்ல கத்தி ஒன்றைத் தெரிவு செய்து, துண்டுகளாக வெட்டத் தொடங்கினான். மக்கிரல் வெடுக்கான மீன். இங்கு இருக்கும் மற்றைய மீன்கள் மணம் குறைவு. இங்கே பல வகை மீன்கள் உண்டு. சல்மன் மீன் அனேகருக்குப் பிடிக்கும். அதைவிட ‘கிவைத்தா’ என்கின்ற மீனும் உண்டு. அது விலை கூடியது. மக்கிரல் விலை குறைவாக இருப்பதோடு நாங்கள் வைக்கும் குழம்பிற்கும் தோதாக இருக்கும் என்பது அருளுக்குத் தெரியும். அவன் அதை மெல்லிய துண்டுகளாக வெட்டினான். அதில் இருந்து இரத்தம் வந்தது. அதனால் உடன் மக்கிரல் என்பதில் அருளுக்குத் திருப்தி உண்டானது. உடன் மீன் வாங்கி வருவதற்காக ஆக்கர்பிறிக்கவிற்குக் காலை அருள் சென்றதற்கு நல்ல பயன் இருந்தது.

அருள் மக்கிரலைக் கவனமாக மெல்லிய துண்டுகளாக வெட்டுவதற்குக் காரணம் அப்போதே அதில் உப்பு, புளி, உறைப்புச் சுவரும் என்பது அவன் எண்ணம். பெரிய துண்டாய் கறிக்குள் போட்டால் மரக் கட்டை போல நடுவே எதுவும் சுவராது சப்பென்று இருக்கும் என்பது அவன் கணிப்பு. இரண்டு தலையையும் போட்டுச் சொதி வைக்க வேண்டும் என்பது அவன் திட்டம். தேங்காய் பால் விட்டு சொதி, குழம்பு வைத்தால் நன்றாக இருக்கும். தேங்காய் துருவுவதற்கு திருவலகை வீட்டில் இல்லை. திருவலகை ஒன்று மிக விரைவில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது அவன் திட்டம். தற்போது பசுவின் பாலை விட்டே சொதி, குழம்பு போன்றவை வைப்பது வழமை. வெங்காயம், மிளகாய் உறைத்தால் சொதிக்கு எந்தப் பால் விட்டோம் என்பது முக்கியம் இல்லை என்பது அவன் கருத்து. அருள் சொதி இறக்கிய பின்பு தேசிக்காய் புளி விட்டுச் சுவைத்துப் பார்த்த பின்பே யாரையும் தொட விடுவான். ஆனால் அதுவும் தவறாது திரைந்த சொதியாகத்தான் வரும். அது பாலின் தவறு என்று அவன் கூறுவான்.

நிமலன் அழுது அழுது வெங்காயம் உரித்துச் சிறிய பிளாஸ்ரிக் பலகையில் வைத்து அதை வெட்டினான். அருள் பொரியலுக்கு நீட்டா எப்படி வெட்டுவது என்று நிமலனிடம் கூறிய பின்பு தொடர்ந்தும் மீனைக்

கவனித்தான். மீன் வெட்டிக் கழுவிச் சொதிக்கும் குழம்பிற்கும் பிரித்த பின்பு, பழப் புளி கரைத்து ஊற்றி, உப்புத் தூள் போட்டு, அதற்குள் வெங்காயம், பச்சைமிளகாயும், சிறிது வெந்தயம், உள்ளிப் பற்கள் இட்டு, இறுதியாக மிளகாய்த் தூளும் இட்டு மீன் குழம்பைக் கூட்டி ஒரு அடுப்பில் வைத்தான். பின்பு சொதிக்கான ஆயுத்தங்களைச் செய்தான். "TS" இறாலின் கோது நீக்கி முடிந்ததும் அதை அருள் வாங்கிக் கொண்டான். அவனுக்கு "TS" தான் நிற்கும் போது சமைப்பது அந்தரமாய் இருந்தது. அப்படிச் சமைக்க விடுவது அவரை அவமானப் படுத்துவதான செயல் என்கின்ற எண்ணம் அவனிடம். "TS" இறாலைக் கொடுத்துவிட்டு அரை மனதோடு வெளியே சென்றார்.

சமையல் முடிந்தும் சிவா வரவில்லை. கதவுகளைத் திறந்து விட்டு வந்து கோலில் இருந்து தொலைக்காட்சியில் என்ன போகிறது என்று தட்டத் தொடங்க அழைப்பு மணி சிணுங்கியது. நிமலன் ஓடிப் போய் கதவைத் திறந்தான். சிவா குரன்லாண்டில் இருந்த இந்தியன் கடை ஒன்றில் லட்டும், தொதலும் வாங்கி வந்திருந்தான். குரன்லாண்டுக்குப் போய்வருவதாக அவன் முதலிற் சொல்லவில்லை. இடையில் ஏதோ நினைவு வந்திருக்க வேண்டும். அங்கே சென்று விட்டு வருகிறான். இனிப்பு சாப்பிடுவதில் பொதுவாக யாருக்கும் பிரச்சனை இருப்பது இல்லை. இனிப்பின் பிரச்சனையே பொதுவாகப் பலருக்கும் பிடிபடுவதில்லை. இளமையில் வருத்தங்கள் அதிகம் சேட்டை செய்வதும் இல்லை. எதைச் சாப்பிட்டாலும் எரித்துக் கழிக்கும் வயது அது.

"என்ன சிவா ஆடிப் பாடி வாராய்?" சமையல் அறையால் வந்து சோபாவில் இருந்த வண்ணம் அருள் கேட்டான்.

"நல்ல வாசம் வருகுது. அருள் உன்னைக் கலியாணம் செய்கிறவள் குடுத்து வைச்சவள் தான். குரன்லாண்டுக்கு ஏன் போனனான் எண்டே கேட்டனி? அது நிமலனுக்கு இனிப்பு வாங்கத்தான்." என்று கேட்காத கேள்விக்குப் பதில் சொல்லி நிமலனை இழுத்தான்.

"சிவா அண்ணைக்கு வந்த உடனேயே என்னை இழுக்காமல் இருக்க முடிய இல்லை பாருங்கோ."

"உண்மையாவாடா... உனக்கு இனிப்பு வாங்கத்தான் அங்க போனனான்."

"இல்லை... இல்லை... நீங்கள் சும்மா எல்லாம் இனிப்பு வாங்கி வரமாட்டியள். சோழியன் குடுமி சும்மா ஆடாது."

"இண்டைக்கு இனிப்பு குடுத்து நாங்கள் கொண்டாடலாம் தானே?"

"ஏன் உங்களுக்குப் பிறந்த நாளே?" என்று கேட்டான் நிமலன்.

"எங்களுக்குக் கிட்டடத்தட்ட விடுதலை வந்த மாதிரி." என்றான் சிவா.

"என்னத்தைச் சொல்லுகிறா சிவா? எங்களுக்கு எப்ப விடுதலை வரும்? அதெல்லாம் நடக்கிற காரியமே? இன்னும் எவ்வளவு காலத்துக்கு உந்த அடிபாடோ?" என்றார் "TS" மாறாத ஏக்கத்தோடு.

"உங்களுக்கு விஷயம் தெரியாதே? நீங்கள் ரீவி பார்க்க இல்லையே?" என்றான் சிவா.

"என்ன சொல்லுகிறாய் சிவா?" என்றார் மீண்டும் ஆர்வம் பொங்க "TS".

"ரீவியை இடைக்கிடை பாருங்க." என்றான் சிவா.

"ரீவியைப் பார்க்கினம்... ஆனா... நியூசைத்தான் பார்க்கினம் இல்லை." என்றார் "TS".

வெளியே போன சொரூபன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். எதுவும் கதைக்காது அவசரமாக அறைக்குப் போய் உடுப்பை மாற்றி விட்டுக் கோலுக்கு வந்தான். கோலுக்குள் வந்தவன் சிவாவையும், சிவா கொண்டு வந்திருக்கும் இனிப்புப் பெட்டிகளையும் பார்த்தான்.

"என்ன சிவா அண்ணை... உங்களுக்குப் பிறந்தநாளே?" என்றான்.

"இதைத்தான் நாங்கள் எல்லாரும் கேட்கிறம். அவர் பதில் சொல்லுகிறார் இல்லை." என்றான் நிமலன் வெப்பியாரத்தோடு.

"எல்லாருக்கும் மண்டையைக் குழப்பினது காணும். என்ன எண்டு சொல்லு சிவா. கேட்டிட்டுப் பிறகு சாப்பிடப் போவம்." என்றார் "TS".

"நல்லதொரு விஷயம் இலங்கையில நடக்குது. நீங்கள் அறியாமல் இருந்து இருக்கிறியள்?"

"என்ன அது?" "TS" ஒருவித ஆவலோடு மீண்டும் அடக்க முடியாது கேட்டார்.

"அப்ப உங்கள் ஒருத்தருக்கும் இந்தியன் ஆமி இறங்கினது தெரியாதே?"

"என்ன? இந்தியன் ஆமி இறங்கினதோ? (அதிர்ச்சியாகப் பல குரல்கள் ஒரே நேரத்தில் ஒலித்தன.) நாங்கள் எங்க பின்நேரத்தில நிண்டாத் தானே? நிக்கிறவையும் நியூசை விட்டிட்டுப் படத்தைப் பார்ப்பினம். இந்தியன் ஆமி இறங்குகிறதை எல்லாரும் ஏத்துக் கொள்ள மாட்டினம். அதே வேளை ஒரு ஆமி எங்கடை பக்கம் நிக்கிறதும் பலம்தான். பெடியள் உலகம் புரிஞ்சு கொண்டு வெட்டி ஓடுவாங்கள். இப்ப அவங்கள் அடிபட்டு அலுத்துப் போய் தானே இருக்கிறாங்கள். எப்பிடி என்டாலும் ஒரு அந்நிய ஆமி எங்கடை மண்ணுக்கு வந்திருக்குது. எல்லாம் நல்லா நடக்க வேணும்."

"அந்நிய ஆமி மட்டும் இல்லை, யார் ஆயுதத்தோடை நிண்டாலும் பிரச்சனை தான். நான் எங்கடை ஆட்களையும் தான் சொல்லுகிறன். நான் சொல்லுகிறன் எண்டு கோவிக்கக் கூடாது. இப்ப இந்தியன் ஆமி இறங்கச் சனம் மாலை போட்டு வரவேற்குதாம். இந்தியன் ஆமி வந்தால் பெடியள் ஆயுதத்தைக் கொடுக்க வேணும். கூட்டணி மாதிரி எலக்சனுக்கு றெடியாக வேணும். அது நடக்கும் எண்டு நீங்கள் நினைக்கிறியளே? அப்படி எலக்சனுக்கு நிண்டா அவைக்கு எவ்வளவு சப்போட் இருக்கும் எண்டு நினைக்கிறியள்? இந்தியன் ஆமி இறங்கினதைக் கொள்கைப்படி புலியள், புளொட், ஈரோஸ் போன்றவை ஒத்துக் கொள்ளப் போகிறது இல்லை. புலிகளைத் தவிர மற்ற இயக்கங்கள் பல்லுப் பிடுங்கின பாம்புகள் போல எந்த இராணுவப் பலமும் இல்லாதவை. ஆனாப் புலியள் இப்பவும் பெரும் பலத்தோடை இருக்கினம். ஆயுதத்தைப் போட்டிட்டு ஜனநாயகத்துக்கு அவை வருவினமா? வந்தால் அவையின்ரை எதிர்காலம் எப்பிடி இருக்கும்? சரி ஒரு கதைக்குப் புலிகள் சமாதானத்திற்கு வராமல் முண்டினா என்ன நடக்கும்? முண்டுகிறத்துக்குச் சந்தர்ப்பம் அதிகம். றோவிட்ட ஒரு பட்டியல் இருக்குது. அதில யாரை நம்பலாம் யாரை நம்பக் கூடாது எண்டு தெளிவா

இருக்கும். தங்களுக்கு என்ன நடக்கப் போகுது எண்டு புலிகளுக்கும் தெரியும். சனத்துக்கு இப்ப அமைதி வந்ததான ஒரு மாயை. அந்த மாயை வலு கெதியாக் கலைஞ்சு போகும். புலிகள் பணிஞ்சு போகவோ வேறை யாரையும் ஆளவோ அனுமதிக்கப் போகிறது இல்லை. ஏகபோகமாத் தங்களிட்டைத்தான் தரவேணும் எண்டுவினம். இந்தியா அதுக்கு இணங்கப் போகிறது இல்லை. நடந்த யுத்தத்தில நிகழ்ந்த அநியாயத்தை விட இனி நடக்கப் போகிறது இன்னும் அதிகமான அநியாயமாக இருக்கும். நீங்கள் நான் சொல்லுகிறதைக் கேட்டு என்னை விசரன் எண்டு நினைப்பியள். நான் நாட்டில நிண்டதை வைச்சு, என்னுடைய அனுபவத்தில பட்டு அறிஞ்சதை அடிப்படையாக வைச்சுக் கொண்டு, இது தான் நடக்கும் எண்டுகிறன். சில வேளை வித்தியாசமாய் நடக்கலாம். ஆனாக் குழம்ப, அதால ஒரு பெரிய அழிவு ஏற்பட நிறையச் சந்தர்ப்பம் இருக்குது. இல்லைப் புலியளிட்டை ஆட்சி போனால் இலங்கையை இரண்டு நாடாய் பிரிக்கிறதுக்கு இதைவிட அருமையான சந்தர்ப்பம் வராது. அதுக்கு ஏற்ற மாதிரி அவை காய் நகர்த்துவினம். ஆனா... இந்தியாவின்ர நோக்கம் அது இல்லை. புலியள் இனி என்ன செய்யப் போகினம் எண்டதில அவையின்ரை அரசியல், தமிழற்ற ஏதிர்காலம் இரண்டும் தெரியும். புலிகளுக்கு கைவராத தூரநோக்கா? அல்லது கண்கட்டு வித்தையான சுயநலமா எண்டதைப் பொறுத்துத் தமிழற்ற போராட்டமும், தலைவிதியும் அமையும். அந்த விதி நல்ல விதியா அமைய வேணும் எண்டுதான் இனிப்போட வந்து இருக்கிறன்." என்று சொல்லிச் சிவா சிரித்தான்.

"சிவா... நீ சொல்லுகிறதில பொயின்ரே இல்லை எண்டு நான் சொல்ல வரேல்லை. ஆனா... நீ புலியளைக் குறைச்சு எடை போடுகிறாய். அவங்கடை அரசியலும், இராணுவக் காய் நகர்த்தலும்தான் இண்டைக்கு எங்கடை போராட்டத்தை உலகு அறிய வைச்சது. அவங்கடை தியாகத்திற்கும், உறுதிக்கும், வீரத்திற்கும் இணையா எந்த இயக்கமும் இதுவரை தோன்றினதும் இல்லை. இனித் தோன்றப் போகிறதும் இல்லை. அப்படியான ஒரு இயக்கத்திட்டை இதுக்கான ஒரு தூரப் பார்வையோடு கூடிய சரியான முடிவு நிச்சயம் இருக்கும். புலிகள் இருக்கிற காலத்தில எங்களுக்கு ஒரு சரியான முடிவு வரும். அப்பிடி இல்லாமல் போனால் எங்களுக்கு விடிவே இருக்காது."

"நீங்கள் சொல்லுகிற பிரபலம், பிரசித்தம் தற்கொலைக் குண்டுத் தாக்குதலால கிடைச்சது. அது சாதாரணமானது இல்லை. போராளிகள் எண்ட பெயரை அழிச்சுப் பயங்கரவாதிகள் எண்ட பெயரை உலகத்திட்ட இருந்து வாங்கி வைச்சு இருக்கினம். அது எங்கடை போராட்டத்தை எவ்வளவு நலிவுறப் பண்ணும் எண்டதை நீங்கள் இப்ப ஏற்க மாட்டியள். போகப் போக உங்களுக்கு அது தெரியும். அரசியல் இல்லாத ஆயுதப் போராட்டம் எப்பிடி இருக்கும் எண்டுகிற முடிவு எங்களுக்குப் பாடமா வரும். அதைவிட இந்தியாவை மீறி எங்களுக்கு எந்த முடிவும் வராது எண்டுகிற உண்மையும் விளங்கும். அதை விளங்கிக் கொண்டு, விட்டுக் கொடுத்து, இந்தியாவின்ரை உதவியோடை, கிடைக்கக்கூடிய உரிமையைப் பெற வேணும் எண்டா, அதைத் துரோகம் எண்டுகினம். ஒரு நாளைக்குக் கோவணமும் இல்லாமல் தமிழர் நிக்கேக்க இவை என்ன சொல்லுகினம் எண்டு பார்ப்பம். அண்ணை நீங்கள் களத்தில நிக்கேல்லை. உங்கடை புரிதல் இப்பிடி இருக்கிறதில எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை. என்னுடைய கள அனுபவம் வேறை. தத்துவத்தை விட அங்க நடந்த அக்கிரமங்களைப் பார்த்துப் பார்த்து உண்டான தெளிவு, என்னை இப்பிடி சிந்திக்க வைக்குது. அதிசயங்கள் சில வேளை உலகத்தில நடக்கிறது உண்டு. புலிகள்; இந்திய, இலங்கை அரசியலை விளங்கிக் கொள்ளுவினம் எண்டு நம்புவம். கடவுள் நம்பிக்கை இருக்கிறவை கடவுளை வேண்டிக் கொள்ளுவம். ஆனா... எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை. என்ரை மனசுக்க கவலையா இருக்குது. பக்கத்தில இருந்து கிடைக்கக்கூடிய உதவியும் வரும் காலத்தில கிடைக்காமல் போயிடுமோ எண்டு பயமா இருக்குது." என்றான் சிவா. "TS" சிவாவின் கதையைக் கேட்டு நம்பிக்கை இளக்கவில்லை. அவர் எந்தப் பாதிப்பு வந்தாலும் தமிழருக்கு ஏதாவது ஒரு விடிவு வருவது என்றால் அது புலிகளால் தான் வரும் என்பதை உரமாக நம்பினார். அதையே தனது கதையிலும் வெளிப்படுத்தினார்.

"புலியள் எப்பிடிக் காய் நகர்த்துவாங்கள் எண்டு நீர் இருந்து பாரும். அவங்களை இப்பிடிக் குறைச்சு மதிப்பிடக் கூடாது. இதுவரை காலம் செய்த ஒவ்வொரு தாக்குதலும் எங்களைப் பிரமிக்க வைக்கிற மாதிரித்தானே செய்தவங்கள்? இருந்து பாரும் சிவா... அவங்கள்

வெல்லுவாங்கள். இந்தியாவைக் கொண்டே அவங்கள் தனி நாடு பிரிச்சு எடுப்பாங்கள். இப்பிடி ஒரு சந்தர்ப்பத்தை அவங்கள் ஒரு நாளும் நழுவ விடமாட்டாங்கள்." என்றார் "TS".

"உங்கடை நம்பிக்கை நிறைவேறினா நானும் நிறையச் சந்தோஷப்படுவன். ஈழம் எண்ட ஒண்டு கிடைச்சா எங்களைப் போல எதிராக் கதைக்கிறவை எல்லாம் அங்க போக ஏலாது. அது பருவாய் இல்லை. தமிழருக்கு அப்பிடி ஒரு நாடு கிடைச்சால் அதுவே சந்தோஷம்தான். பிறகு அவை தங்கடை உரிமையை எப்பிடித் தக்க வைச்சுக் கொள்ளுகிறது எண்டுகிறதை விளங்கிக் கொள்ளுவினம். எப்பிடியோ எங்கடை போராட்டத்திற்கு இன்னும் நிறைய ஆயுள் இருக்குது." என்றான் சிவா.

"இந்தியன் ஆமி இறங்கிப் பிரச்சனை சுமுகமா முடிஞ்சா, நாட்டில பிரச்சனை இல்லை எண்டு தானே அர்த்தம்? அப்ப இவங்கள் எங்களைத் திருப்பி அனுப்ப மாட்டாங்களே?" என்றான் சொரூபன்.

"அதுக்குத்தான் வந்த காசை எண்டாலும் அவசர அவசரமா உழைச்சுச் சேர்க்க வேணும் எண்டுகிறது. அப்பிடி அதை உழைச்சு எடுத்திட்டா ஆண்டி குண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல் எண்டிட்டுப் போய்க்கொண்டே இருக்கலாம்." என்றான் அருள்.

"உதோடை பிரச்சனை தீர்ந்தாலும் தீர்ந்திடும்." என்றார் "TS". அவருக்கு அவ்வளவு நம்பிக்கை.

"நான் வேணும் எண்டா உங்களோடை பந்தயம் கட்டத் தயார். நான் பிரச்சனை தீராது எண்டுகிறன். நீங்கள் இன்னும் சரியாய் எங்கடை அரசியலை விளங்கிக் கொள்ள இல்லை. அதால அவசரப்படுகிறியள்." என்று கூறிச் சிவா சிரித்தான்.

"எங்கடை இனம் ஒரு பாவப்பட்ட இனம்." என்றான் நிமலன் கவலையாக.

"ஏனடா உனக்கு உந்தக் கவலை?" என்றான் சிவா.

"ஏன் சிவா அண்ணை... உங்களுக்குத்தான் அரசியல் தெரியுமே? எனக்கும் தெரியும். நான் சிங்களவருக்கு எதிராகத் தமிழர் ஒரு ஆயுதப் போராட்டத்தை தொடங்கினதே பிழை எண்டு சொல்லுவன். அது என்ன

காரணம் ஆகவும் இருந்து இருக்கலாம். இதால அழியப் போகிறது நாங்கள் மட்டும்தான் எண்டு சொல்லுவன். உங்களால அதை எதிர்த்துக் கதைக்க முடியுமா? தந்தை செல்வாவாய் இருந்தால் என்ன? கூட்டணியாய் இருந்தால் என்ன? ஏன் உங்கடை இயக்கமாய் இருந்தால் என்ன? புலியளாய் இருந்தால் என்ன? எல்லாரிடத்திலும் சுயநல அரசியல் இருக்குது. உண்மையான தியாகமும் கரிசனையும் முழுமையாக் கிடையாது." என்றான் நிமலன். அவன் தன்னை மறந்து உணர்ச்சி வசப்பட்டு இருந்தான். சிவா தன்னை ஒன்றும் தெரியாதவன் என்று நினைத்துக் கதைப்பதான கோபம் அவனுக்கு. சிவா அதை வெகுவாக இரசித்தான். பின்பு,

"நிமலன்... இப்ப நீ சொன்னியே... அவ்வளவும் தீர்க்க தரிசனமான வார்த்தைகள். நீ ஒரு காலத்தில பெரிய ஆளாய் வருவாயெடா." என்றான் சிவா. நிமலன் அவன் வார்த்தைகளை இப்போது நம்பவில்லை.

"உந்த நக்கல் தானே வேண்டாம் எண்டுகிறது." என்றான்.

"நக்கல் இல்லை நிமலன்... நான் உண்மையாகத்தான் சொல்லுகிறன்." என்றான் சிவா.

"பிழைகள் நடந்து இருக்கலாம். பிழைகள் இல்லாத போராட்டமே இருக்காது. ஆனா... அவங்கள் செய்கிற தியாகத்தை யாராலும் செய்ய முடியாது. அந்தத் தியாகத்தை யாராலும் விலை பேச முடியாது. நாங்கள் இங்க வந்த பிறகு எப்பிடியும் கதைக்கலாம். அங்க சையனெட் குப்பியோடை, உயிரைத் துச்சமாக மதிச்சு, இனத்திற்காகப் போராடுகிறவங்கள் எப்பவும் அழியாப் புகழ் கொண்ட மாவீரர்கள்." என்றார் "TS".

""TS" அண்ணை நான் ஒண்டு சொன்னா நீங்கள் கோவிக்கக் கூடாது. அவங்கடை தியாகம் மதிக்கப்பட வேணும். அதில யாருக்கும் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனா... அந்தத் தியாகம் துஸ்பிரயோகம் செய்யப்படுகுது எண்ட நிச்சயமான, ஏற்றுக் கொள்ள முடியாத உண்மையைச் சொன்னா என்னைத் துரோகி எண்டு சொல்லுவாங்கள். எது எப்பிடி எண்டாலும் அது மட்டும் உண்மைதான் "TS" அண்ணை. வருங்காலத்தில ஒரு நாளைக்கு நீங்கள் விளங்கிக் கொள்ளுவியள். போராட்டத்திற்கு ஆயுதம் ஒரு கருவி. ஆயுதம் மட்டுமே போராட்டத்தை நிர்ணயிக்கிறது இல்லை. அரசியல்

வங்குரோத்து இருக்கேக்க ஆயுதம் எவ்வளவு இருந்தாலும் அது குப்பை மாதிரித்தான்."

அருள் எழுந்து சென்று குடிப்பதற்கு வியர் எடுத்துக் கொண்டு வந்தான். நிமலன் ஒரு "Video caset"ஐ "Deck"கினுள் திணித்தான். அது உதிரிப் பூக்கள் என்கின்ற படம். நிமலன் "Deck"கின் "Remote control"லை எடுத்தான். முதலில் எழுத்து ஓட்டத்தை ஓட்டி உடனடியாகவே கதைக்குள் எல்லோரையும் குதிக்க விட்டான். ஆங்கிலப் படங்கள் போல் எழுத்தோட்டத்தைப் பின்னுக்கு வைத்திருக்க வேண்டும். முன்னுக்கு வைத்து அலுப்பு அடிக்கச் செய்வது பொதுவாகப் பலருக்கும் பிடிப்பது இல்லை.

நிமலன் தொடர்ந்தும் "Remote control"லைக் கையில் வைத்து இருந்தான். அதைப் பார்த்த சிவா,

"உதை நீ கீழ வைக்க மாட்டியே?" என்றான்.

"இல்லை... பாட்டு, சண்டை எல்லாம் ஓட்ட வேணும்."

"அட அவங்கள் எவ்வளவத்தைச் செலவழிச்சு அதை எடுக்கிறாங்கள்... நீ பொறுப்பில்லாமல் ஓட விடுகிறியே?"

"அது அவையின்ரை இரசனை. எங்களுக்குப் படத்தில பாட்டு, சண்டை மாதிரிக் குப்பாடிக் கூத்துத் தேவை இல்லை. மலையாளப்படம் மாதிரி அல்லது உலகப் படங்கள் மாதிரி கதைக்கு மாத்திரம் முதல் இடமாக இருக்க வேணும். எப்ப இவங்கள் அப்பிடி உருப்படியான படங்கள் எடுக்கப் போகிறாங்கள்?" என்றான் நிமலன்.

"மலையாளப் படங்கள் கதைக்கு மட்டும் இல்லை. எல்லாத்துக்கும் பிரசித்தம். உனக்கு அது இப்ப தேவை இல்லை. இது உருப்படியான படம்தான். பாட்டும் கதையும் மாத்திரம்தான். சண்டை றியலா இருக்கும்." என்றான் சிவா.

"ம்... நீங்கள் ஒரு வகையில பன்னாடை மாதிரி. அதோடை உங்களுக்கு என்னை மட்டம் தட்டாட்டி நிம்மதி கொஞ்சமும் வராதே? அது சரி... ஏன் சிவா அண்ணா பாட்டு வைக்கிறவை? நாங்கள் எப்பவாவது யாற்றையும் கையைப் பிடிச்சுக் கொண்டு தெருவில பாடித் திரிஞ்சு இருப்பமா? அப்பிடிப் பாடித் திரிஞ்சா எங்களைப் பார்த்து என்ன நினைப்பாங்கள்? கல் எறிய மாட்டாங்கள்?"

"அங்க படம் எடுக்கிறது உங்கடை இரசனையை வளர்க்கிறதுக்கு இல்லை. அது காசு சம்பாதிக்கிற பெரிய தொழில். அப்ப சனம் எதைக் கேட்குதோ அதைத்தான் வியாபாரிகள் குடுப்பாங்கள். தமிழ்நாட்டில பாட்டு, சண்டை போன்ற அட்டகாசத்தைத்தான் அதிகமான ஆட்கள் விரும்புவினம் எண்டது நிதர்சனம். அதுதான் அப்பிடியான படங்கள் ஓடுது. அதுக்கு நிறையக் காரணங்கள் இருக்குது. முதலாவது கல்வி அறிவு. அதில கேரளாவுக்கும் இலங்கைக்கும் இருக்கும் ஒற்றுமை தமிழ் நாட்டிற்கும் உலகத்தின்ரை பல நாடுகளுக்கும் இல்லை எண்டுதான் சொல்ல வேணும். சங்க காலத்தில வளர்ந்த மாதிரித் தமிழ் இந்தக் காலத்தில வளர்கிறதுக்கு தமிழர்களே தங்களைத் தயாராக்கிக் கொள்ள இல்லை. அப்பிடி ஒரு சுயநலம் பிடிச்ச மனிசர்களைக் கொண்ட இனமாக அது திரிஞ்சு போயிட்டுது. அங்க நடக்கிற சுயநலம் பிடிச்ச குப்பை அரசியல் அதுக்கு முதல் காரணம்."

"உந்தப்படம் பாட்டு இருந்தாலும் ஒரு அருமையான படம் எண்டு கேள்விப்பட்டன். மகேந்திரன் எண்டவர் இயக்கி இருக்கிறார். அவருடைய படங்கள் பொதுவாய் பருவாய் இல்லை. உதிரிப் பூக்கள் சிற்றன்னை என்கின்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட படமாம். இதுவும் அதைப் போல நல்லா இருக்கும்." என்றார் "TS". அவரது கவனம் படத்தில் திரும்பி இருந்தது. அதன் பின்பு நிமலன் "Remote control"ஐ மேசையில் வைத்து விட்டுப் படம் பார்த்தான். "TS" தனது கவனத்தை படத்தில் செலுத்தினார். சிறிது நேரத்தில் "அழகிய கண்ணே உறவுகள் நீயே" என்கின்ற அருமையான பாட்டு வந்தது. அந்த இடைவேளையைப் பயன்படுத்த எண்ணிய அருள்,

"படத்தை நிப்பாட்டு. சாப்பிட்ட பிறகு வந்து பார்ப்பம்." என்றான் நிமலனைப் பார்த்து.

9 தொலைபேசிக் கட்டணம்

நித்தமும் வரவேண்டிய கடிதங்கள் வந்து இருக்கின்றனவா என்கின்ற எதிர்பார்ப்போடு சொரூபன் தபால் பெட்டியைத்

திறந்தான். இரண்டு கடிதங்கள் வந்து இருந்தன. ஒன்று வடநோர்வேயில் இருந்து வந்தது. மற்றையது "தெலநூர்" என்கின்ற அரச தொலைபேசி நிறுவனத்தில் இருந்து வந்தது. சொரூபன் பரபரப்போடு அந்த இரண்டு கடிதங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். பரமேஸ், சண்முகன், சுபத்திரன், திருநா, குலம் ஆகியவர்கள் வடநோர்வே சென்று பல மாதங்கள் ஆகிவிட்டன. அவர்கள் புதினம் எப்படி இருக்கிறது என்பது இதுவரையும் தெரியாது. அவர்கள் வசிக்கும் ஊருக்குப் பாடசாலை கிடைத்து ஒஸ்லோவில் இருந்து சென்ற தமிழ் மாணவனிடம் ஒரு கடிதம் "TS"சின் தலைமையில் எல்லோரும் சேர்ந்து எழுதிக் கொடுத்து விட்டார்கள். அப்படிக் கடிதம் கொடுத்து அனுப்பிய பின்பு அதிற் தொலைபேசி எண்ணை எழுதி அனுப்பி இருக்கலாம் என்கின்ற ஞானம் பிறந்தது. அப்படித் தொலைபேசி எண்ணை எழுதி அனுப்பி இருந்தால் அவர்கள் எப்பொழுதோ தொலைபேசியில் தொடர்பு கொண்டு இருப்பார்கள். மனிதர்கள் சில வேளை முக்கியமான சில விடயங்களை மறந்து போய்விடுவது அவர்களுக்கு வரமாகவும், சாபமாகவும் அமைகிறது. இவர்களுக்கும் அன்று தொலைபேசி எண்ணை எழுத வேண்டும் என்கின்ற எண்ணம் முதலில் ஏற்படவில்லை. கடிதம் கொடுத்து அனுப்பிய பின்பே "TS", அருளன், நிமலன் ஆகியோர் கவலைப்பட்டனர். அதற்குத் தற்போது பதில் வந்து இருந்தது. "TS" வரும் வரைக்கும் காத்திருக்கும் பொறுமை செரூபனுக்கு இல்லை. என்ன செய்வது என்று யோசித்தான். வீட்டில் நிற்பவர்கள் பொதுவான கடிதத்தைப் பிரித்துப் பார்ப்பது வழக்கம். இதுவரையும் அதைப் பற்றி யாரும் முறைப்பாடு செய்தது கிடையாது. இன்னாருக்கு என்று பெயர் போட்டு வரும் கடிதங்களை அப்படிச் செய்வது இல்லை. இவ்விரண்டு கடிதங்களும் "TS"சின் பெயரில் இருந்தன. எல்லாக் கட்டணங்களும் அவர் பேரில் மட்டுமே இருக்கின்றன. கட்டணங்கள் என்று தெரிந்தால் இதுவரையும் அவரின் வரவுக்காக காத்திருந்தது இல்லை. அதைத் திறந்து பார்ப்பதில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்பது சொரூபனின் முடிவு. மற்றையதையும் தான் திறந்து பார்க்கலாம் என்று அவன் எண்ணினான். எல்லோரும் சேர்ந்து எழுதிய கடிதத்திற்கே பதில் வந்து இருக்கிறது. இதில் தான் தயங்குவதற்கு எதுவும் இல்லை என்று அவன் முடிவு செய்து கொண்டு, கடிதத்தோடு வந்து சோபாவில் அமர்ந்தான்.

சண்முகனே அந்த நீண்ட கடிதத்தின் சிறுகதை எழுத்தாளன். தாங்கள் தற்போது தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதாகவும், அங்கு அதைவிட வேறு ஒரு தொழிற்சாலை உண்டு என்றும் எழுதி இருந்தான். அத்தோடு அதைச் சுற்றிய ஊர்களிலும் அப்படியான மீன் தொழிற்சாலைகள் உண்டு என்றும், அவற்றிலும் சில தமிழர்கள் வேலைக்காக வந்து உள்ளார்கள் என்றும் தொடர்ந்தான். அங்கே றுபன் என்கின்ற தெல்லிப்பழையைச் சார்ந்த இளைஞனும் வாழ்வதாக எழுதி இருந்தார்கள். அத்தோடு தங்களுக்கு அறைகள் வாடகைக்குத் தரப்பட்டு இருப்பதாயும், அவை மிகவும் குறைவான வாடகை என்றும் எழுதி இருந்தான். மேலும் அங்கு இலங்கைச் சரக்குகளோ, மரக்கறியோ வாங்க முடியாது தவிப்பதாயும், உள்ளதை வைத்து மரக்கறிப் பிரச்சனையைச் சமாளித்தாலும் தூளும், சரக்குப் பொருட்களும் தங்களுக்கு வேண்டும் என்றும், அதை ஒஸ்லோவில் இருந்து வாங்கி அனுப்ப முடியுமா என்றும் கேட்டு இருந்தான். மீன் தொழிற்சாலையில் வேலை செய்தாலும் அங்கு உள்ள மீனில் மணம் குணம் கிடையாது என்றும், மக்கிரல் மாத்திரமே தாங்கள் கறிக்குப் பாவிப்பதாகவும், தங்களுக்கு நெத்தலிக் கருவாடு வாங்கி வரும் பொருட்களோடு சேர்த்து அனுப்பி விடுமாறும் கேட்டு இருந்தான். அத்தோடு தொலைபேசி எண்ணையும் எழுதியதோடு, பொருட்களுக்கான செலவைத் தாங்கள் தபால் அலுவலகத்தின் ஊடாக அனுப்பி வைப்பதாகவும் உறுதி கூறி இருந்தான்.

தாங்கள் இருக்கும் இடத்தில் அதிகமாகக் காற்று அடிப்பதாயும், குளிராக இருப்பதாயும் எழுதிய அவன் ஒவ்வொரு நாளும் வேலை கிடைப்பது சந்தோஷமாய் இருப்பதாயும், சில வேளைகளில் மேலதிக வேலை செய்து நல்ல சம்பளம் எடுப்பதாயும், வந்த காசு உழைப்பதில் தாங்கள் ஓரளவு வெற்றி கண்டு விட்டதாகவும் விவரித்து இருந்தான். தாங்கள் வாழும் நகரம் சிறிய நகரமாய் இருப்பதால் வேலைக்கு நடந்தே சென்று வருவதாகவும், அதனால் போக்கு வரத்திற்கு தங்களுக்கு எந்தச் செலவும் இல்லை என்று தொடர்ந்தான். இறுதியில் கையெழுத்தோடு கடிதத்தை முடித்துக் கொண்டான்.

எல்லோரும் வீட்டில் நிற்கும் ஒரு இரவில் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று எண்ணிய சொரூபன் எழுந்து சென்று தனக்குத் தேநீர் ஒன்று

தயாரித்து வந்தான். கோலுக்கு மீண்டும் திரும்பி வந்தவன் தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கினான். அது நோர்வே மொழியில் ஏதோ சொல்ல ஆங்கிலப் படம் போகும் அலைவரிசை பார்த்து நகர்த்தி விட்டான். அந்த அலைவரிசையில் "First Blood" என்கின்ற படம் போனது.

தேநீர் ஒரு மிடரை இழுத்துவிட்டு "றம்போ" என்று சொரூபன் தன்னை அறியாது கூறினான். அவனுக்குச் சில்வெஸ்ரர் ஸ்ரலோனின் படங்கள் பிடிக்கும். றம்போவின் படங்கள் மட்டும் அல்லாது விறுவிறுப்பான ஆங்கிலப் படங்கள் பலதும் பிடிக்கும். தொய்வில்லாத கதையும், காட்சிகளும் உலகை மறக்கடிக்கும். இடையில் பாட்டும் பகிடியுமாகக் கதையைக் குழப்புவது பிடிக்காது. தமிழ் படங்கள் பார்க்கப் பிடித்தாலும் அதில் இருக்கும் இந்தக் கூறுகள் அவனை சோர்வடையச் செய்யும். பாட்டிற்குத் தனியாக நேரம் ஒதுக்கிப் பார்ப்பது என்றால் பார்ப்பான். பகிடி தனியாகப் பார்ப்பதும் பிடிக்கும். நல்லதொரு படத்தின் கதை நடுவே அவை வந்து நந்திபோலக் குழப்புவது அவனுக்கு சுத்தமாகப் பிடிப்பது கிடையாது.

சிறிது நேரம் தன்னை மறந்து படத்தில் ஒன்றி இருந்தான். அந்த ஒன்றல் விளம்பரத்தால் குலைந்து போக மேசையில் கிடந்த தொலைபேசி நிறுவனத்தின் கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

பின்பு அதை அலட்சியமாகப் பார்த்தவன் "ஆ" என்ற வண்ணம் சோபாவில் இருந்து துள்ளி எழுந்தான். இப்படியும் நடக்கலாம் என்கின்ற அனுமானம் அவனிடம் இருந்தது இல்லை. இப்போது அவனால் அதை நம்ப முடியாது இருந்தது. இந்த நாட்டில் எல்லாமே குதிரை விலை. இதற்கு இவ்வளவு வரும் என்பது தெரிந்து இருந்தால் இப்படிக் கதைத்து இருக்கமாட்டார்கள். எட்டாயிரம் குரோணர்கள். இலங்கை காசிற்குப் பெருக்கிப் பார்க்க அவனுக்கு மயக்கம் வந்தது. இன்று எல்லோருக்கும் பெரிய அதிர்ச்சி காத்து இருக்கிறது என்பது அவனுக்கு விளங்கியது. சொரூபன் தொலைக்காட்சியை நிறுத்தினான். அவனால் இனித் தொலைக்காட்சியைப் பார்க்க முடியாது என்பது விளங்கிவிட்டது. இரவு நித்திரை வருமா என்பதும் விளங்கவில்லை. திருப்பித் திருப்பிப் பார்த்தான். எட்டாயிரத்துப் பதினாறு குரோணர்கள் வந்து இருந்தது. யார் யார் கதைத்து இருக்கிறார்கள்? எல்லாரும் கதைத்து இருக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரிந்தது. எவ்வளவு

நேரம் கதைத்து இருக்கிறார்கள்? தெரியாது. அது தெரிந்தாக வேண்டும். பணம் கட்டியாக வேண்டும். சொரூபன் அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் திருப்பிப் பார்த்தான். எதுவும் இம்மிய அளவும் மாறவில்லை. அது இயற்கையும் இல்லை.

நிமலன் வந்தான். அறைக்குள் போய் உடுப்பு மாற்றிவிட்டுத் தனக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டு சந்தோஷமாகப் பிரவேசித்தான். சொரூபனின் கவலையின் காரணம் அவனுக்குத் தெரியாது.

"என்ன கப்பல் கவுண்ட மாதிரி இருக்கிறியள்?" என்று கேட்ட வண்ணம் கொண்டு வந்த தேநீரில் ஒரு மிடர் இழுக்கும் போது சொரூபன் கடிதத்தில் இருந்த தொகையை அவனுக்குக் காட்டினான். நிமலனுக்கு அதிர்ச்சியில் புரைக்குகேறியது. அவனது வாய்க்குள் இருந்த தேநீரில் அரைவாசி மேசையில் பாய்ந்தது. அவன் அதி அவதியாக இருமினான். சொரூபன் அவன் தலையில் தட்டினான். சிறிது நேரம் இருமி முடிந்த பின்பு சமையல் அறைக்குள் சென்று துடைக்கும் கடுதாசி கொண்டு வந்து அந்தத் தேநீர் சிதறல்களைத் துடைத்துச் சென்று குப்பையில் போட்டான். மீண்டும் கோலுக்குள் திரும்பி வந்தவன் கடுமையான யோசனையோடு,

"பிழையா அடிச்சுப் போட்டாங்களோ?"

"பிழையா... என்ன பிழையா? நிமிசத்திற்குப் பதினெட்டு குரோணர் எண்டு அடிச்சிருக்கிறான். நாங்கள் விஷயம் தெரியாமல் வாசிச்சு இருக்கிறம். அவங்கள் சிரிச்சுக் கொண்டு இருந்திட்டு வில்லைக் கனமா அனுப்பி வைச்சு இருக்கிறாங்கள்."

"அட கோதாரிய... நானே ஒரு அரை மணித்தியாலம் கதைச்சு இருப்பன். "TS" அண்ணை தான் ஒரு நாள் காலமை கனநேரமாகச் சோகத்தோடை கதைச்சுக் கொண்டு இருந்தவர். அதுக்குப் பிறகு நாலு நாளாப் பேசாமலே திரிஞ்சார்."

"ம்... நானும் அரை மணித்தியாலம் கதைச்சு இருக்கிறன். அருள் ஒரு மணித்தியாலத்துக்குக் கிட்ட கதைச்சு இருப்பார். சமைச்சுச் சமைச்சு சுவாரசியமா கதைச்சவர்."

"உந்த எட்டையும் ஒரேயடியாக் கட்டாமல் பிரிச்சுக் கட்ட முடியுமோ எண்டு போய் கேட்டுப் பார்த்தா நல்லது."

"ஓமடா நிமலன். அது நல்ல ஐடியா தான்."

இருவரும் கதைத்துக் கொண்டு இருக்கும் போது "TS"சும், அருளும் கனமான வெள்ளைப் பைகளை இழுத்த வண்ணம் உள்ளே வந்தார்கள். அவர்கள் அதைச் சமையல் அறையில் வைத்து விட்டுத் தங்கள் அலுவல்களை முடித்துக் கொண்டு வரும் வரைக்கும் சொரூபனும், நிமலனும் அவதியோடு காத்து இருந்தார்கள். முதலில் அருள் வந்தான். அவனிடம் தூக்கி அந்தக் கடிதத்தைச் சொரூபன் கொடுத்தான். அவன் அதைப் பார்த்து விட்டுத் தலையில் கைவைத்த வண்ணம் சோபாவில் இருந்தான். அவனை அடுத்து "TS" கோலிற்குள் வந்தார். அவர் அருளைப் பார்த்து விட்டு,

"என்ன அருள்? என்ன நடந்தது உனக்கு அதுக்குள்ள? எதோ பேய் அடிச்ச மாதிரி இருக்கிறாய்?" என்றார்.

"பேய்தான் அடிச்சுப் போட்டுது." என்ற வண்ணம் அந்தக் கடிதத்தை அவன் "TS"சிடம் கொடுத்தான். "TS" அதைப் பார்த்துவிட்டு யோசனையோடு அமர்ந்தார்.

"கதைச்சது சரி. யார் யார் எவ்வளவு நேரம் கதைச்சு இருப்பம் எண்டு நாங்கள் எழுதி வைக்க இல்லை. அதை இப்ப கணக்குப் பார்க்க வேணும். கதைச்சது கதைச்சு ஆச்சுது. அதுவும் நான்தான் கூடக் கதைச்சு இருக்கிறன். இனி என்ன செய்கிறது... கட்டத்தானே வேணும்? நிமலன் ஒரு பேப்பரும் பேனாவும் எடுத்தா." என்றார் "TS". நிமலன் அதை எடுத்துவர எழுந்து சென்றான். நிமலன் திரும்பி வந்து அவர் கேட்டதைக் கொடுக்கவும் அவர் அருளைப் பார்த்து,

"நீ எவ்வளவு நேரம் கதைச்சு இருப்பாய்?" என்று கேட்டார்.

"நான் ஒரு மணித்தியாலம் கதைச்சு இருப்பன் அண்ணை." என்றான் அவன். பின்பு சொரூபனைப் பார்க்க,

"நான் ஒரு முக்கால் மணித்தியாலம் கதைச்சு இருப்பன்."

"ம்... நிமலன்?"

"அரை மணித்தியாலம் கதைச்சு இருப்பன்."

"ம்... மிச்சம் நான் என்ரை கணக்கில போடுகிறன்."

"உங்களிட்டை அவ்வளவும் போட்டுக் கட்டக் காசு இருக்குதா?" என்று கேட்டான் அருளன்.

"பிரச்சனை இல்லை... அது நான் சமாளிப்பன். அதோடை பிரிச்சுப் பிரிச்சுக் கட்டுகிறது எண்டாலும் கட்டத்தானே வேணும். அதுக்கும் இனி லீவு எடுத்துக் கொண்டு அங்க ஒருக்கா அலைய வேணும்." என்றார் "TS".

"உந்த வில்லில எந்த நம்பருக்கு எவ்வளவு நேரம் கதைச்சது எண்டுகிற விபரம் எடுக்கலாம். அப்பிடி வில் அனுப்பச் சொல்லிக் கேட்க வேணும்." என்றான் அருளன்.

"அது போன் பண்ணிச் சொன்னா அனுப்பி விடுவாங்கள். அது நல்ல ஐடியா தான்." என்றான் சொரூபன்.

"எதுக்கும் உதில கதைக்கேக்க கவனமாக் கதைக்கிறது தான் நல்லது. இப்பிடி அறுக்கிறான்கள்..." என்று குறைபட்டுக் கொண்டான் நிமலன்.

"நிமலன் இந்த விஷயத்தில கெட்டிக்காரன். நான் அண்டைக்கு இருந்த விசரில கதைச்சன். அது இவ்வளவு வந்திருக்குது. சரி இப்பிடி எத்தின வருகுது போகுது. வாழ்க்கையில வந்ததையும், போனதையும் எண்ணிப் பார்த்தால் உது எந்த மூலைக்கு?" என்றார் "TS". அவர் கதைப்பது சில வேளை நிமலனுக்கு விளங்குவது இல்லை. அதற்கு எல்லா நேரமும் விளக்கம் கேட்க முடியாது என்பதும் அவனுக்கு விளங்கியது. அப்படி அதற்கு விளக்கம் கேட்டால் அதை வைத்தே ஒரு நக்கல் உலாவும் என்பது அவனுக்குத் தெரியும். அவன் அதற்கு விளக்கம் கேட்பதை விட்டுவிட்டுச் சண்முகனிடம் இருந்து வந்த கடிதத்தை "TS"சிடம் கொடுத்தான். "TS" அதை வாசித்து விட்டு அருளிடம் கொடுத்தார். அவன் வாசித்து முடிய "TS" தொலைபேசியை எடுத்து எண்களை அழுத்தினார். மறு முனை உயிர் பெற்றுக் கொண்டது. மாறி மாறிக் கதைத்து முடிய ஒரு மணித்தியாலம் ஆகிவிட்டது. கதைத்து முடியவும்,

"நாளைக்குக் காலமை போய் அவங்களுக்குச் சாமான் வாங்கி வந்தால் பார்சல் பண்ணிப்போட்டு நாளையண்டைக்கு அனுப்பலாம்." என்றார் "TS".

"ஓ நானும் வாறன்." என்றான் நிமலன்.

10 நோஸ்க் வகுப்பு

அடுத்த நாள் காலை எல்லோரையும் புறப்படுமாறு "TS" கூறினார். "TS" ஏதாவது கூறினால் தங்களின் நன்மையைக் கருதியே அதைக் கூறுவார் என்பதில் அனைவருக்கும் நம்பிக்கை இருந்தது. அவர்கள் எந்தக் கேள்வியும் இன்றிப் புறப்பட்டார்கள். வெளியே வெயில் வெள்ளிப் பொடியாய் பூமிமீது இடைவிடாது அள்ளித் தூவப்பட்டது. வெள்ளித் துகள்களாய் குத்தி இறங்கிய சூரியக் கதிர்களைக் கண் திறந்து பார்க்க முடியாத அவஸ்தை. கண்களில் குண்டூசியாய் ஏறும் கூர்மை அவற்றிடம். சுதேசிகள் கோடை காலத்திலும், பனி கொட்டி இருக்கும் குளிர் காலத்திலும் அந்தக் கதிர்களில் இருந்து கண்கள் பாதுகாப்புப் பெறுவதற்குக் கறுத்தக் கண்ணாடி அணிவார்கள். அதை அணிந்து கொள்வது துருவத்துச் சூரியனிடம் இருந்து தப்பித்துக் கொள்ளும் சௌகரியத்தைத் தருகிறது. கண்களைக் கூசிய வண்ணம் வெளியே வந்த பின்பு தான் தாங்கள் மேலங்கியோடு வந்திருக்கத் தேவை இல்லை என்பது அவருக்கு விளங்கியது. நிமலன் மேலங்கியைக் கழற்றி இடுப்பில் கட்டினான். சொரூபனும் அப்படியே செய்தான். "TS"சும் அருளும் அதைத் தோளில் போட்ட வண்ணம் நடந்தார்கள். கீழே இருக்கும் கார்க் கடையில் இருந்து ஸ்பிறீற்றும் பெயின்றும் கலந்தது போன்ற ஒரு மணம் வந்தது. அவர்கள் வேலையில் மும்மரமாய் இருப்பதை அது அறிவித்தது. தெருவால் வாகனங்கள் இப்போது வேகமாகச் செல்லத் தொடங்கிவிட்டன. காலை ஏழுமணியில் இருந்து ஒன்பது மணி வரையும் அரங்கி அரங்கித்தான் அவை செல்லும். அவ்வளவிற்கு நெருப்புப் பெட்டியை அடுக்கி வைத்தது போல வாகனத்தின் நெரிசல் அந்தத் தெருவை அடைக்கும்.

கீழே இறங்கித் திரும்பிய உடன் சுரங்கரதம் வந்தது. அதற்குள் போகின்றவர்களும் வருகின்றவர்களுமாக மனிதர்களின் அவசர அசைவு. அதைப் பார்த்த "TS"சிற்கு ‘இந்த அவசர அசைவுகளைப் பார்க்கும் போது உலகம் நாளை அழிந்து விடுமோ என்கின்ற பயம் உண்டாகும். மனிதர்கள் ஒவ்வொரு நாளும் பறக்கிறார்கள். அற்ப ஆயுளிற்குள் ஆடும் ஆட்டங்கள் தொடர்கின்றன.

பற்றிற்காக, பற்று அறுத்ததாகப் பிதற்றுகிறோம். இயற்கை தான் நினைத்த பணியை மனித ஜென்மங்களை மூலதனமாக்கிச் செய்விப்பது தெரியாது செய்கிறோம். நாங்களே செய்ததாக அகந்தை கொள்கிறோம். இயற்கை தனக்கு இந்த மனிதன் தேவையில்லை என்கின்ற போது முதுமையாக, அல்லது நோயாக வந்து அவன் வாழ்வை முடிக்கிறது. அற்ப ஆயுளில் மரிக்கும் பல கோடி மனிதர்களைப் பார்த்து இந்தப் பூமி சிரிக்கிறது. வலையில் அகப்பட்ட ஈயைப் புசித்த சிலந்தியாக இயற்கை விரிகிறது. முந்திய ஈ போனது தெரியாது பிந்திய ஈயும் அங்கே போகிறது. எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? என்பது விளங்காது இயற்கையின் கட்டளையை நிறைவேற்ற மனிதர்கள் அவசரமாக ஓடுகிறார்கள். அதற்குள் நாங்களும் சேர்ந்து ஓட வேண்டியது கட்டாயமாகிறது.' என்று அவர் எண்ணினார்.

எண்ணத்தில் நடைபோட்டுச் சந்திக்கு வந்ததும் அவர்கள் இடப்பக்கம் திரும்பிக் கடைக்குப் போக எண்ணினார்கள். அப்போது,

"உந்தப் பக்கம் இல்லை... இந்தப் பக்கம்." என்று "TS" வலப் பக்கத்தைக் காட்டினார். தெருவில் மனிதர்களின் ஓட்டம் தொடர்ந்தது. பேருந்துகள் அங்கும் இங்குமாகத் தமது இலக்கை நோக்கிப் பயணித்தன. பல திக்கையும் நோக்கிப் பயணிப்பவர்கள் இந்தச் சந்தியைக் கடந்து செல்ல வேண்டியது கட்டாயம் ஆகிறது. "Tram" ஓடுவதற்குத் தண்டவாளம் நடுத்தெருவில் புதைந்த சமாந்தர அட்டை மாதிரிக் கிடந்தது. மருந்துக்கடை, "Electronics"க்கடை, யென்ஸ் ஏவென்சன்ஸ் என்கின்ற பலசரக்குக் கடை போன்றவை திறந்து இருந்தன. மனிதர்கள் அதற்குள் போவதும் வருவதுமாய் நடமாடினர். மறுபக்கத்தில் விளக்குக் கடை, றீமி, விளையாட்டுக்கடை எனப் பல கடைகள் திறந்து ருந்தன.

"உங்க எதுக்கு அண்ணை?"என்றான் நிமலன்.

"ஒரு நாட்டில வாழ்ந்தால் நிச்சயம் அந்த நாட்டு மொழி தெரிஞ்சிருக்க வேணும். நாலு விஷயம் வாசிச்சு அறிய அது உதவும். அந்த நாட்டில என்ன நடக்குது எண்டதை அறிய அந்த நாட்டு மொழி தெரிஞ்சிருக்கிறது அவசியம். அந்த நாட்டுச் சனத்தோடை கதைக்கிறது முக்கியம். வேலைக்குப் போனாலும் கட்டாயம் கதைக்க வேணும். எல்லாத்துக்கும் கதவு மாதிரி அந்த நாட்டு மொழி. அந்த

நாட்டு மொழி தெரியாதவனுக்கு எப்பவும் அந்த நாட்டில இருக்கிற சமுதாயத்தின்ரை கதவு சாத்தியே இருக்கும். நாங்கள் அந்தக் கதவைத் தட்டித் திறக்க முயற்சிப்பம். நாலு விஷயம் அறிய, நாலு விஷயம் தெளிவாய் கதைக்க அது உதவும். அதுக்கு மொழிதான் வழி. பக்கத்தில இருக்கிற ஸ்கூலுக்குப் போகாமல் எத்தினை நாள் சோம்பேறிகளாய் இருப்பம் சொல்லுங்கோ?" என்றார் "TS".

"நீங்கள் நல்ல விளக்கம் தாறியள் "TS" அண்ணை. எண்டாலும் பாருங்கோ சிவா பள்ளிக்கூடம் போகாமலே எல்லாம் அறிஞ்சு வந்து சொல்லுகிறான்." என்றான் நிமலன்.

"அவன் ஒரு மேதையடா... சில தலைவர்கள் மாதிரிப் பள்ளிக்கூடம் போகாமலே படிச்சிடுவான். எல்லாருக்கும் அது சரி வராது. நாங்கள் பள்ளிக்கூடம் போய்த்தான் படிக்க வேணும். அதோடை எப்பவும் சனத்தோடை கதைக்கிற சந்தர்ப்பம் அவனுக்கு வேலையில இருக்குது. அப்ப அவன் மொழியையும் படிச்சிடுவான். நாங்கள் மப்போடை கதைக்க முடியுமா?"

"மப்போடை கதைக்க முடியாது எண்டது உண்மை. இந்த வயசில பள்ளிக்கூடம் போகிறது எண்டால் ஒரு மாதிரி இருக்குது." என்றான் அருள்.

"நானே வரப்போகிறன். உமக்கு என்ன கோதாரி? இங்க வயது வித்தியாசம் பார்க்க மாட்டாங்களாம். இப்ப போனாத் தெரியும் தானே? எந்தெந்த வயசில எந்தெந்த சைஸ்சில படிக்கினம் எண்டதைப் பார்க்கலாம்." என்றார் "TS".

அவர்கள் வலது பக்கம் திரும்பி நடந்தார்கள். பலசரக்குக் கடையைத் தாண்டிப் போன போது அவர்களை முந்திக் கொண்டு மெல்லிய நீல நிற "Tram" ஒன்று வேகமாகச் சென்றது. தொடர்ந்தும் நடந்து செல்ல ஒரு சந்தியும், மின் சமிக்கைகளும் வந்தன. அதன் எதிரே பெரியதொரு எரிபொருள் நிலையம் இருந்தது. அதன் ஒரு மூலையில் சிறிய சாப்பாட்டுக் கடை. அதில் உருளைக்கிழங்கு பொரித்த மணம் வந்தது. அந்த மணம் ஏதாவது வாங்கி உண்ண வேண்டும் என்கின்ற ஆவலை நிமலனுக்கு உண்டு பண்ணியது.

"நல்ல வாசமா இருக்குது. ஏதாவது வாங்கிச் சாப்பிட்டால் நல்லா இருக்கும்." என்றான் நிமலன்.

"அதை இன்னொரு நேரம் வந்து வாங்கிச் சாப்பிடு... இப்ப எட்டி வா." என்றான் சொரூபன்.

"அப்ப நான் சமைக்கிறது உனக்கு மணக்கிறது இல்லையே?" என்றான் அருள்.

"ஐயோ சாமி. நான் தெரியாமல் சொல்லிப் போட்டன். என்ன விட்டிடுங்க." என்றான் நிமலன்.

"உதைத்தான் பொல்லுக் குடுத்து அடி வேண்டுகிறது எண்டுகிறவை." என்றான் சொரூபன்.

"பொல்லுக் குடுக்காட்டியும் நீங்கள் அடிப்பியள். உதை எத்தினை தரம் சொல்லுவியள்?" என்றான் நிமலன்.

எல்லோரும் சிரித்த வண்ணம் அந்த எரிபொருள் நிலையத்தைத் தாண்டி பாடசாலையை நோக்கி நடந்தார்கள்.

அந்த ஒழுங்கைக்கு உள்ளும் சில கடைகள் இருந்தன. அந்த கடைகளைத் தாண்டி சில குடியிருப்புகள் வந்தன. அவை பழமையை முதுகில் கெட்டியாகச் சுமந்தாலும் கம்பீரம் குறையாத தோற்றத்தில் நிமிர்ந்து நின்றன. சிறு கற்கள் பதித்த அழகான வீதி குறுக்காகச் சென்றது. தார் ஊற்றிய வீதியை விட்டு அந்தக் கற்கள் பதித்த வீதியாற் பாடசாலையைக் குறிவைத்து நடந்தார்கள். வீதி ஓரங்களில் மரங்கள் வரிசைக்கு உதாரணம் போல் நின்றன. வாகனங்கள் நிரைக்கு தமது இருப்பை உத்தரவாதம் செய்து இருந்தன.

ஒரு சுதேசப் பெண் நடந்து பேருந்துத் தரிப்பிடத்தை நோக்கிச் சென்றாள். அவள் பின்புறம் மட்டுமே அப்போது தெரிந்தது. இங்கே பெண்களில் அனேகருக்குப் பொன்னிறக் கேசமா என்பதில் தெளிவு இல்லை. முன்னே சென்றவளின் பொன்னிறக் கேசம் தங்கக் கிரீடமாக மினு மினுத்தது. ஊரில் இந்தக் கேசத்தை நரை என்று கேலி பேசுவார்கள். அதுவும் அழகு என்பதை "TS"சால் இப்போது விளங்கிக் கொள்ள முடிந்தது. அந்தத் தெரு முடிந்ததும் வலப்பக்கமாத் திரும்பப் பாடசாலை தெரிந்தது. சிலர் பாடசாலைக்கு அப்போதுதான் சென்றார்கள். சிலர் பாடங்கள் முடிந்து பாடசாலையை விட்டு வெளியே

வந்தார்கள். அங்கே செல்பவர்களிலும், வருபவர்களிலும் பலர் வெளிநாட்டினர் ஆகத் தோன்றினார்கள்.

பாடசாலை நன்கு கண்ணிற்குத் தெரிந்தது. பானா போன்ற அமைப்பில் கம்பீரமாக எழுந்து நின்ற ஐந்து மாடிச் செங்கற் கட்டிடம் அது. இலங்கைப் பாடசாலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது ஒரு பெரிய பாடசாலை என்றே "TS"சிற்குத் தோன்றியது. எங்கே பார்த்தாலும் வெளிநாட்டவராகவே தோன்றியது. ஆப்பிரிக்கர்கள், தென்கிழக்கு ஆசியர்கள், சீனாக்காரர்கள் (அவர்களில் வியட்னாமைச் சார்ந்தவர்கள் அனேகர்.) அரேபியர்கள் எனப் பல வர்ணங்களிலும், பல திணிசுகளிலும், ஆண்களும், பெண்களுமாக வலம் வந்தனர். அவர்களிடம் நிமலன் கண்ட ஒற்றுமை அவர்கள் தலை கறுப்பாக இருந்தது முக்கியமான ஒன்று. அனேகரது கண்களும் எங்களைப் போன்று கறுப்பாக இருந்தது. ஆப்பிரிக்கரின் முடி கறுப்பாகச் சுருண்டு மண்டை ஓட்டோடு ஒட்டிக் கொண்டு தலைக் கவசமாகத் தோன்றியது. சில பெண்கள் மாத்திரம் நீட்டாக முடிவைத்து இருந்தனர். சில ஆபிரிக்காப் பெண்களும், பல அரேபியப் பெண்களும் பல வண்ணங்களில் பர்தா அணிந்து இருந்தனர். உலகத்தில் வாழும் மனிதர்களிடத்தில்தான் எத்தினை வித்தியாசம் என்பது நிமலனை வியப்பில் ஆழ்த்தியது. படைப்பில் ஏற்பட்ட வித்தியாசம் பல. மனிதன் ஏற்படுத்திய வித்தியாசம் அதைவிடப் பல.

இயற்கையின் இசைவாக்கம் என்பது இறைவனையும் மிஞ்சும் இயக்கம். அதன் வடிவமைப்பில் உருவான உலகத்து உயிர்கள். மனிதனின் நிறம் வித்தியாசப் படுகிறது. மதம் வித்தியாசப் படுகிறது. மொழி வித்தியாசப் படுகிறது. கலாச்சாரம் வித்தியாசப் படுகிறது. உணவு வித்தியாசப் படுகிறது. எல்லாமே வித்தியாசப் படுகின்ற இந்த மனிதர்களில் ஓடும் இரத்தத்தின் நிறமும், அவர்கள் சுவாசிக்கும் காற்றும், அவர்களிடம் தோன்றும் காதல் போன்ற உணர்ச்சிகளும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. அந்த ஒற்றுமைகள் முந்திய வேற்றுமையில் மறைந்து போய்விடுகின்றன. அல்லது மறுக்கப் படுகிறது. அதைப் பற்றி மனிதர்களும் ஏனோ கதைக்க விரும்புவது இல்லை.

ஒரு ஆபிரிக்காப் பெண் வந்தாள். அவளிற்குப் பனியே வைரமாகியதாக மின்னும் வெள்ளைப் பற்கள். எண்ணெய் பூசிய விக்கிரகம் போன்ற கறுப்புச் சருமம். உரித்த றம்பிட்டானில் கறுத்தப் பொட்டை ஒட்டியதான கண்கள்.

புன்னகை தவழும் மெல்லிய நாவற்பழ இதழ்கள். கொடி போன்ற மெல்லிய உடம்பு. திமிர்த்து முறைக்கும் மார்பு. கறுப்புக் காற்சட்டையும், பெண்கள் அணியும் கறுப்பு மேலங்கியும் அணிந்து இருந்தாள். நிமலன் அவள் தலை முடியைப் பார்த்தான். வேலிக் கயிறு போன்று பின்னிப் பின்னித் தொங்க விட்டு இருந்தாள். எப்படிப் பின்னினாள்? எவ்வளவு நேரம் எடுத்து இருப்பாள்? கேள்வியின் குடைச்சலைத் தாங்க முடியாது நிமலன் மற்றவர்களைக் குடையத் தொடங்கினான்.

"இவள் எப்பிடி அண்ணை இதைப் பின்னி இருக்கிறாள்?" என்றான் "TS"சைப் பார்த்து.

"ஏன் நீ பின்னல் பழகி... இவளவைக்குப் பின்னி விடப்போறியே?" என்றான் அருளன் சிரித்த வண்ணம்.

"சிவா அண்ணை மாதிரி நீங்களும் அறுக்கிறதை விட்டிட்டு... உங்கடை அலுவலைப் பார்ப்பியளே?" என்றான் நிமலன்.

"இது செய்கிறத்துக்கும் இங்க படிக்க வேணுமாம்." என்றார் "TS".

"எது அண்ணை? எப்பிடி?"

"உந்தப் பெட்டைக்கு உண்மையிலேயே இப்பிடி நீட்டு மயிரா இருக்காது. அவளின்ரை கட்டை மயிருக்க செயற்கையாகச் செருகிச் செருகி கவனமாப் பின்ன வேணும். நிறைய நேரம் எடுக்கும். அப்பதான் வேலிக் கயிறைத் தலையில கட்டின மாதிரி உது தொங்கும்." என்றார் "TS".

"கறுப்பா... நீட்டா... எகிப்தியச் சித்திரங்களில வாற மாதிரி... வடிவா இருக்குது." என்றான் நிமலன்.

"அப்ப ஒரு ஆபிரிக்காப் பெம்பிளையை நிமலனுக்குப் பேசினால் நல்லா இருக்கும்." என்றான் சொரூபன்.

"ஏன் ஆபிரிக்காப் பெம்பிளையளுக்கும் எங்கடை பெம்பிளையள் மாதிரித் தானே? என்ன தோல் தான் கொஞ்சம் கூடக் கறுப்பா இருக்கும்." என்றான் நிமலன்.

"என்ன இனமா இருந்தால் என்ன... பெட்டையளுக்கு எண்டு சில குணங்கள், பாசைகள், நளினங்கள், மென்மையான

உடல், மென்மையான உள்ளம், தாய்மை, பரிவு, போன்ற குணங்கள் இருக்கும். சிலர் புறநடையாய் இருக்கலாம். ஆனா... பலருக்கும் இது பொருந்தும். ஆண்கள் அதற்கு எதிராக இருப்பது வழக்கம். கல் போன்ற உடல், வீரம், கோபம், உழைப்பு என வேட்டையாடப் படைக்கப் பட்டதின் மீதிக் குணங்கள் அழியாச் சவாரி செய்யும் உருவமாக. ஆணும், பெண்ணும் தங்களிடம் இல்லாததைப் பார்த்து ஏங்கும்படி படைத்த இயற்கையின் விந்தை. அது வேலை செய்யும் போது நிறம், மதம், இனம், சாதி எல்லாம் மங்கிப் போய் விடும்." என்றார் "TS".

வகுப்பு ஒன்றில் இருந்து பாடம் முடிந்து பலர் வெளியே வந்தார்கள். ஆங்கிலத்திலும் அரைகுறை நொஸ்கிலும் கதைத்த வண்ணம் பல நாட்டு மனிதர்களும் வெளியே சென்றார்கள். "TS"ற்குத் தாங்கள் வந்த காரியம் நினைவுக்கு வர அந்தக் கட்டடத்திற்குள் புகுந்தார்.

தாங்களும் வகுப்பில் சேர்வதற்கான அலுவல்களை முடித்து விட்டு வெளியே வர அவர்களுக்கு ஒரு மணித்தியாலம் ஆகிவிட்டது.

திங்களில் இருந்து காலை வகுப்பிற்கு இடம் கிடைத்து இருந்தது. இவர்களின் பிற்பகல் வேலைகளுக்கு அந்த வகுப்புக்கள் இடையூறாக இருக்காது. அப்படி இடையூறாகாது பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம். இங்கு வருவதற்குச் செலவு செய்த காசையாவது உழைக்க வேண்டும் என்பதில் ஒரு அவதி. இந்தியன் இராணுவம் ஈழத்தில் இறங்கியதால் அங்கே பிரச்சனை விரைவாகத் தீர்ந்து போகலாம் என்கின்ற நம்பிக்கை. அப்படித் தீர்ந்தால் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் சந்தர்ப்பம் வரும். வந்த காசை உழைப்பதோடு மேற்கொண்டும் கையில் காசு வைத்திருந்தால் திரும்பவும் மத்திய கிழக்கிற்குப் போகலாம். இனி அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது. மத்திய கிழக்கிற்கு உழைக்கச் சென்றாலும் அவர்கள் கொழும்பில்தான் வாழ வேண்டும். தேவைகள் நிறையவே இருக்கின்றன. அந்தத் தேவைகளுக்கு ஏற்ப பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டும். தொலைபேசியில் கதைப்பதை நிறுத்திவிட்டுக் கடிதம் எழுத வேண்டும். இப்படித் தொலைபேசிக்குச் செலவழித்து விட்டுத் திடீரெனப் போக வேண்டி வந்தால் வெறுங்கையோடு போக முடியாது. இவர்கள் எங்களைத் திருப்பி அனுப்புவார்களா? அது போகப் போகத்தான் தெரியும் என்று "TS" எண்ணினார்.

"வகுப்புத் தொடங்கினால் சமையல் வேலையைப் பகுதி பகுதியாகச் செய்ய வேண்டி வரலாம்." என்றார் "TS". அவர்கள் மீண்டும் சந்தியை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். முகில்கள் கோபித்துக் கொண்டு போய்விட வானம் நீல நிர்வாணம் காட்டிற்று. வானத்தின் நிர்வாணத்தில் அமர்க்களமான சூரியப் பிரசன்னம். நடந்து வர இதமான காலநிலை மனித உடலின் இருண்ட பகுதிகளிலும் கசகசப்பை உண்டு பண்ணியது. நித்தம் கிடைக்காத அருமையான பகற் பொழுது. எங்கு ஆவது வெளியில் இருந்து கதைக்கலாம் என்கின்ற ஆசை "TS"சின் மனதில் இருந்தாலும் சண்முகனுக்குச் சாமான் வாங்கி வரவேண்டியது, கொழும்பில் நிற்பவர்களின் நினைவு ஆகியவை அவரை அந்தச் சுகிப்பில் இருந்து நிதர்சனத்திற்குள் பிடுங்கி எறிந்தது. அதனால் அவர் கால்கள் சந்தியை நோக்கிப் பயணித்தன.

"அது என்ன பகுதி பகுதியா "TS" அண்ணை?" என்றான் அருள்.

"ஒரேதா காலமை எழும்பி நிண்டு சமைச்சுப் போட்டு வகுப்புக்குப் போக இயலாது. கறிய இரவு சமைச்சு வைச்சம் எண்டாச் சோத்த டப்பெண்டு போட்டு வடிச்சுச் சாப்பிடலாம். சும்மா பதறி அடிக்கத் தேவை இல்லை. என்ன நான் சொல்லுகிறது சரியே? இல்லாட்டி எப்பிடிச் செய்யலாம் எண்டு நினைக்கிறியள்?" என்றார் "TS".

"நீங்கள் சொல்லுகிறது சரிதான். எண்டாலும் உடன சமைச்சுச் சாப்பிடுகிற மாதிரி வராது." என்றான் அருள்.

"நேரம் கிடைச்சா உடன சமைச்சுச் சாப்பிடுவம். அது தான் நல்லது. ஆனா... வகுப்புகள் இருந்தால் சமாளிப்பம்."

"ம்... நாட்டு நிலமை என்னவாகப் போகுமோ தெரியாது. எதுக்கும் நாங்கள் விட்டதைப் பிடிக்கிறதில கவனமாக இருக்கோணும். மற்றதை எல்லாம் இரண்டாம் பட்சமாகத்தான் வைச்சிருக்க வேணும் எண்டுறியள்?" என்றான் அருளன்.

"அதுதான் புத்திசாலித்தனம் எண்டு நான் நினைக்கிறன் அருள்." என்றார் "TS".

"அதுதான் உண்மை என்றான்." சொரூபன்.

முப்பத்து ஒன்றாம் எண் கொண்ட பேருந்து நகரின் மத்திய பகுதியை நோக்கிச் சென்றது. அதை ஏக்கத்தோடு நிமலன் பார்த்தான். பின்பு பொறுக்க முடியாதவனாய்,

"கொஞ்சம் எட்டிப் போய் இருந்தால் உந்த வஸ்சில போய் இருக்கலாம்." என்றான் ஆதங்கத்தோடு.

"வஸ் போனா என்ன திறிக் வரும்." என்ற வண்ணம் "TS" நடந்தார்.

சந்தியை வந்தடைந்த போது ஒரு தமிழ் குடும்பம் இரண்டு பிள்ளைகளோடு இவர்களை நோக்கி நடந்து வந்தார்கள். அந்தத் தமிழ் பெண் ஊரைப் போல "Skirt and Blouse" அணிந்திருந்தாள். மேலே மெல்லிய கோடைக்கால மேலங்கி. ஊரில் கலியாணம் முடித்த பின்பு சேலை கட்டுவது பொதுமை. சிலர் அதற்குப் பின்பும் "Skirt and Blouse" தொடர்ந்தும் பாவிப்பார்கள். இங்கு அதற்கு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. ஈழத்து ஆண்கள் அன்றாடம் பாவிக்கும் உடைக்கும் ஐரோப்பிய ஆண்கள் பாவிக்கும் உடைக்கும் இப்போது வித்தியாசம் இருப்பது இல்லை. சிலர் மாத்திரம் இன்றும் புறநடையாக. ஈழத்தில் விசேஷத்திற்கு அல்லது கோயிலுக்கு மட்டுமே வேட்டியை இளம் சமுதாயம் தொடும். வயது முதிர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே அதை நித்தம் அணிவார்கள். அதற்காக இங்கு நாங்கள் கலாச்சாரம் காப்பதாய் குளிருக்குள் கோவணத்தோடு திரிய முடியாது. அல்லது முட்டாள்கள் போல அல்லது மூடர்கள் போல கோடை வெக்கையில் மேலங்கியை அணிந்து மேட்டிமை காட்டுவதாக அமையும்.

இவர்கள் வருவதைக் கண்டதும் அவர்கள் நின்று விட்டார்கள். தமிழர்கள் ஒஸ்லோவில் அதிகமாகக் குடியேறாத காலம் அது. அதுவும் குடும்பமாகக் காண்பது அரிதிலும் அரிது. ஔவையின் மனுடப் பிறப்பிற்கான விளக்கம் போல. "TS" அவர்களை நோக்கிச் செல்ல மற்றவர்களும் அங்கே சென்றார்கள்.

அவர் தன்னைத் தாமோதரன் என்று அறிமுகம் செய்தார். பின்பு அவரின் துணைவியின் அழகான பெயர் மாலினி என்றும், நரேஸ், குணேஸ் என்பது அவர்களின் செல்லப் பிள்ளைகளின் பெயர் என்றும் கூறினார். பின்பு ஆவலோடு இவர்களது பெயர்களையும் கேட்டு அறிந்து கொண்டார்கள். தாங்கள் 'வார்டோக் காத்தா'வில்

வசிப்பதாகக் கூறியவர்கள் நேரம் இருந்தால் தங்கள் வீட்டிற்கு வருமாறு அனைவரையும் அழைத்தார்கள். "TS"சிற்கு அவர்கள் வீட்டிற்குப் போக விருப்பமாய் இருந்தாலும் செய்ய வேண்டிய அலுவலை எண்ணி இன்னொரு நாள் வருவதாகக் கூறிவிட்டு விடை பெற்றார். அவருக்கு வலது காலில் ஏதோ பிரச்சனையாக இருக்க வேண்டும். அவர் தாண்டித் தாண்டி நடந்தார். அதற்குக் காரணம் கேட்டுக் கதையைத் தற்போது வளர்க்க நேரம் அற்றவராக "TS" நடக்கத் தொடங்கினார். நிமலனும் "TS"சும் "Tram" எடுத்துக் குரன்லாண்ட் போக, அருளும் சொரூபனும் வீட்டிற்குச் சென்றார்கள். ஏதாவது சமைத்துவிட்டு வேலைக்குப் போக வேண்டும் என்கின்ற நினைப்பு அவர்களுக்கு.

இரணங்கள் நிறைந்த கடந்த கால வாழ்வு. காயப்பட்ட மனங்கள் என்றும் புழுங்கும் தொடர்கதை ஈழத் தமிழராக உலகம் எங்கும். உரிமை கேட்கப் புறப்பட்டதால் மனதையும் உடலையும் காயப்படுத்திய வரலாறு என்பதாகத் திடீரென "TS"சின் மனது உண்மையை எண்ணிக் கொதித்தது. அவர் வேகமாக நடந்தார். அவர் பின்னாலே நிமலன் நடப்பதில் தோற்று ஓடி ஓடி நடந்தான்.

அந்த வேகத்தில் "Tram"ல் ஏறி அமர்ந்தார்கள். "Tram" "துறொண்ணியம் வைய்" என்கின்ற தெருவாற் சென்றது. அடுத்த தரிப்பிடம் "சோபியன்வர்க் காத்தா". அங்கு சில மனிதர்கள் அதில் ஏறினார்கள். அதில் சிலர் சுதேசிகள். சிலர் வெளிநாட்டவர். ஏறிய சுதேசிகளில் ஒருவர் அழுக்கான மேலங்கியும், அழுக்கான காற்சட்டையும் அணிந்து இருந்தார். அவர் அழுக்காகிக் கிழிந்த சொப்பிங் பைகளையும் கொழுவியபடி தனது சைக்கிளோடு ஏறி வந்தார். அழுக்கில் அவர் வெள்ளைத் தோல் கறுப்பான கோலம். அவர் உடம்பிற் தண்ணி பட்டுப் பல மாதங்கள் என்பதற்கான அனேக சாட்சிகள். அவரின் வரவையிட்டு முகத்தை நாசுக்காகச் சுளித்துக் கொண்ட சில மனிதர்கள். "TS"சும் நிமலனும் அவரைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். வெள்ளைக்காரார்கள் என்கின்ற கற்பனையில் ஒரு குட்டுப் போட்டதாக அவன் தோற்றம்.

"Tram" ஏறிய அவர் சைக்கிளைப் பிடித்த வண்ணம் அங்கிருந்த சிறிய குப்பை வாளிக்குள் கையை விட்டுத் தடவினார். அவர் கைக்கு எந்தப் போத்தலும் அகப்படவில்லை.

"TS"சும் இதைப் புனிதத் தொழிலாகத்தான் முதலில் நினைத்தார். காலையில் எழுந்து இதற்காக மினக்கெட்டார். வரியில்லாத பணம் கொஞ்சம் கையில் வந்து சேர்ந்தது. சமுதாயத் தொண்டு என்கின்ற திருப்தி இருந்தது. அது நிலைக்கவில்லை. சமுதாயத்தின் கைகள் வலுவானவை. அதன் கருத்திற்கு அடிபணியாவிட்டால் பணியாதவன் கழுத்தை நசிப்பவை. அந்த மனிதன் அதைத் தொடர்வதில் உள்ளே ஆனந்தம்தான்.

போதைப் பொருளுக்கு அடிமை ஆனவர்களும் இந்த வேலை செய்வதைக் காலப் போக்கில் அவரால் அறிய முடிந்தது. ஒரு நாள் போத்தல் பொறுக்கும் போது ஒரு தமிழர் வந்தார். "TS" சிரித்துவிட்டுத் தொடர்ந்தும் போத்தல் தேடினார். அந்த தமிழருக்குக் கோபம் வந்து இருக்க வேண்டும். வேறு ஒரு தமிழன் போத்தல் குப்பையில் தேடுவது அவமானமாய் இருந்து இருக்க வேண்டும். பொது இடத்தில் குப்பையைக் கிளறுவது அவரின் தன்மானத்தை மிதித்து இருக்க வேண்டும். இலங்கையில் சாதிக்கு வகுத்த தொழில். பணத்திற்காகத் தொழிலை மாற்றுவது அவமானம். அதை மாறாது கட்டுப்படுத்திய சமுதாயத்தின் வலிய கரங்கள். இங்கே வந்து சாதி பார்க்காது சக்கிலியனின் தொழிலை வெள்ளாளன் பார்த்தாலும் கௌரவக் கைகள் முடமாகி விடவில்லை. அது அந்தத் தமிழனை வெறி கொள்ள வைத்து இருக்க வேண்டும்.

"உங்களுக்கு வேற ஒரு வேலையும் கிடைக்க இல்லையா? இப்பிடி தமிழற்ற மானத்தை வேண்டுறியள்?" என்று அவர் "TS"சைப் பார்த்துக் கேட்டார்.

"பல வேலை இருக்குது. அது ஏன் உங்களுக்கு?"

"பிறகு எதுக்கு இந்தப் பொறுக்கிற வேலை?"

"கதைக்கிறதை ஒழுங்காக் கதையுங்க. நான் ஒண்டும் உங்கடைய இங்க வந்து பொறுக்க இல்லை... தெருவில பிச்சை எடுக்க இல்லை. சுற்றுப்புறத்துக்கு நன்மையானதைச் செய்கிறன்."

"எச்சில் போத்தல் பொறுக்கினால் என்ன... கக்கூஸ் கழுவினால் என்ன... காசு வந்தால் சரி எண்டுகிறது இப்பிடி ஓடி வந்த தமிழற்ற நினைப்பு. இதைத்தான் ஊரில சக்கிலியரும் செய்கிறவை. நீங்கள் எல்லாம் காசுக்காகக் கௌரவத்தை விக்கிற மனிசர்கள். சீ என்ன பிழைப்பு இது? நான் எண்டாத் தற்கொலை செய்து இருப்பன். ஏன்

எண்டா நான் மானத்தைப் பெரிசா, உயிரிலும் மேலா நினைக்கிறவன்."

"நீங்கள் ஓடிவராத தமிழராக்கும்? சக்கிலியரும் மனிசர்தானே? அவங்கள் வேலை செய்யாட்டி ஊரே நாறிப் போயிடும். நீங்கள் எப்பிடி எண்டாலும் இருந்திட்டுப் போங்கோ. நாங்கள் இங்க களவு எடுக்க இல்லை. கொள்ளை அடிக்க இல்லை. இது ஒரு சமுதாயத் தொண்டு எண்டு சிந்திக்கிறது மனிதாபிமானம் உள்ள மனிசருக்கு அது தெரியும். உங்களிட்டை நல்ல வேலை இருக்குது. அதால உங்களுக்கு ஒருவித சாதி வெறி. அதில மற்ற மனிசற்ற கஸ்ரம் உங்கடை கண்ணுக்குத் தெரிய இல்லை. கழுவிறதுக்கும் போத்தல் பொறுக்கிறதுக்கும் என்ன வித்தியாசம் இருக்குது? நீங்கள் என்ன எல்லா மனிசருக்கும் கடவுளா? அவனே கருணை உள்ளவன். அன்பை மட்டும் உண்மை என்று ஏற்றவன்."

"மற்றவன்ரை எச்சில் போத்தல் பொறுக்கிற உந்த வேலை அவமானம். அசிங்கம். வரி கட்டாமல் சம்பாதிக்கிறதுக்கான சமாதானம். எனக்கு வையித்தைப் பிரட்டடது. எங்கடையள் தான் காசுக்காகப் பீயைத் துடைக்குதுகள். ஈரான்காரர், வியட்னாம்காரர் நல்லாப் படிக்கிறாங்கள். நல்ல வேலை வந்தாத் தான் வேலை செய்வம் எண்டுறாங்கள். சீ... நீங்கள் எல்லாம் தமிழருக்கு அவமானம். தமிழர் எண்டு சொல்லி எங்கடை மானத்தை வாங்கிறியள். அதுக்க வேற உங்களுக்குத் தத்துவம் வருகுது."

அவன் கோபமாக நூறு குரோணர்களை எடுத்துப் போத்தல் போடும் பைக்குள் போட்டு விட்டு அதே வேகத்தில் காறித் துப்பி விட்டுச் சென்றான். "TS"சிற்கு முதன் முதல் தமிழரை எண்ணி அடங்காத அவமானமாய் இருந்தது. அங்கு நின்றவர்கள் பார்த்த விதம் வேதனையை அனலாக அள்ளி அவர் மேல் வீசியது. ஆத்ம சாந்தியா அவமானமா என்பது கலங்கிய குட்டையாக மூளைக்குப் பிடிபட மறுத்தது. அவமானம் இல்லாத பொழுது தானே ஆத்ம சாந்தி பற்றிச் சிந்திக்க முடியும்? அல்லது அன்று தொட்டுப் புகட்டப்பட்ட மானம் அவமானம் கடந்த நிலையை அடைந்து இருக்க வேண்டும். எதுவும் முழுமை இல்லாததால் அவர் உறைந்து போனார்.

பின்பு வந்த நாட்களில் போத்தல் பொறுக்க அவருக்கு மனம் ஏகவில்லை. இனி அதில் ஆத்ம சாந்தி இருக்காது என்பதாக அவர் விளங்கிக் கொண்டார். அவர் அந்தத் தொழிலை அத்தோடு கைவிட்டார். யாரும் பின்பு அதைப் பற்றி அவரைக் கேட்கவில்லை. இந்த மனிதனைப் பார்த்த போது அவருக்கு அந்த நினைவுகள் மீண்டும் மூளையில் படமாக ஓடிச் சென்றது.

அந்த மனிதன் "குன்னாரியூஸ்"இல் தனது சைக்கிளோடு இறங்கினான். "TS"சும் நிமலனும் அவனோடு அங்கே இறங்கினார்கள். இறங்கிச் சைக்கிளைச் சரி செய்தவன் என்ன நினைத்தானோ தெரியாது "TS"சைப் பார்த்து,

"பசிக்குது... பத்துக் குரோன் தா?" என்றான். "TS"சிற்கு அவன் அப்படிக் கேட்டதில் நம்பிக்கை இல்லை.

"பசித்தால் என்னோடு வா... நான் உனக்குச் சாப்பாடு வாங்கித் தருகிறேன்." என்றார்.

"இல்லைப் பத்துக் குரோன் தா." என்றான் அவன்.

"பசித்தால் வா." என்று கூறிய "TS" அவனுக்குக் காத்திராது நடந்தார். அவன் அவசரமாகப் பின்னால் சைக்கிளோடு வந்தான். அந்த நவீன அங்காடிக்குள் "நார்வேசன்" என்கின்ற கடை இருந்தது. அதில் அவனுக்கு உணவும் கோப்பியும் வாங்கிக் கொடுத்தார். அவன் நன்றி சொல்லிய வண்ணம் சைக்கிளை ஒரு பக்கம் சாத்தினான். பின்பு நிலத்தில் இருந்து அதைச் சாப்பிட்டான். "TS" மேற்கொண்டு நடந்தார். வந்த அலுவலைப் பார்க்க வேண்டும். வேலைக்குப் போக வேண்டும் என்கின்ற அவதி அவரிடம்.

தமிழ் கடையில் பொருட்கள் வாங்கி முடிய, அவற்றை வைத்து அனுப்பக்கூடிய ஒரு கடதாசிப் பெட்டியும் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தார்கள். விலைப் பட்டியலையும், பொருட்களையும் வைத்துப் பொதி பண்ணி அனுப்பிவிட "TS" எண்ணி இருந்தார். சண்முகன் "TS"சிடம் விலை விபரம் கேட்க மாட்டான். இவ்வளவு தொகை என்றால் அனுப்பி வைப்பான். நம்பிக்கை வேறு நாணயமாய் நடந்து கொள்வது வேறு என்பது "TS"சிற்கு விளங்கியது. யாரும் கேள்வி கேட்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடக் கூடாது என்பதில் அவர் கவனமாக இருந்தார்.

11 நீலக் கடவுச்சீட்டு

நொஸ்க் வகுப்புத் தொடங்கிய பின்பு நாட்கள் இறக்கைக் கட்டிய மாயம் காட்டின. வகுப்பு, சமையல், வேலை என்கின்ற சுழிக்குள் அகப்பட்டதில் மூச்சுவிட முடியாத ஓட்டமாய் காலம் ஆற்று வெள்ளம் போல யாரையும் கேளாது நகர்ந்தது. நொஸ்க் எழுத்துக்கள் ஆங்கில எழுத்துக்களை மருவியதாய் இருந்தன. அதில் ஆங்கிலத்தைவிட மூன்று எழுத்துக்கள் மட்டும் அதிகமாகவும் இருந்தன. வகுப்பிற்குப் போகத் தொடங்கிய பின்பு "TS"சிற்கு நொஸ்கில் சற்றுக் கதைக்கக் கூடியதாக தோன்றியது. அவருக்கு ஆங்கிலம் பரிச்சயம் என்பதால் நொஸ்க் தட்டுப்படும் போது தன்னிச்சையாக ஆங்கிலம் வந்து விடுகிறது. அப்படி இருந்தும் அவர் ஆங்கிலத்தைப் பாவிக்காது இருப்பதற்குக் கண்ணிற்குள் எண்ணெய் ஊற்றும் கவனம் எடுத்துக் கொள்வார்.

வெளியே வெயில் வெள்ளிக்குத் தங்க முலாம் பூசியதாய் சுள்ளிட இறங்கியது. யாரும் நித்திரையால் எழும்பவில்லை. ஒரு கிழமையில் ஆறு நாளும் சில வேளைகளில் ஓட வேண்டி வரும். இது ஏழாவது நாள். இந்த நாளின் அரைவாசி நேரத்தைப் படுக்கையில் கழிப்பதே தனிச் சுகம் என்பது இளைஞர்களின் நம்பிக்கை. "TS"சும் எட்டுமணி வரையும் படுத்து இருப்பார். அதற்கு மேல் அவரால் படுக்க முடிவது இல்லை.

எட்டு மணி ஆனதும் "TS" எழுந்து சத்தம் போட்டு அவர்களைத் தொந்தரவு செய்யாமல் முகத்தைக் கழுவினார். பின்பு தனக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டு கோலிற்குள் வந்து அதற்கும் அறைகளுக்கும் இடையில் இருந்த கதவுகளைச் சாத்தி விட்டுத் தொலைக்காட்சிக்கு உயிர் கொடுத்து, சிறிய சத்தத்தில் வைத்தார். தொலைக்காட்சியில் சுவாரசியம் பிடிக்காது தேநீர் குவளையோடு சாளரத்தை நோக்கிச் சென்றார். முன்னே வெள்ளையாக எழுந்து நின்ற தேவாலயம். இதற்குப் பிற்பகல் நிறையவே கூட்டம் வரும். வழமையான நோஸ்க் தேவாலயங்களைவிட இது வித்தியாசமானது. இந்தக் கிறிஸ்தவர்களின் பிரிவு அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் உருவாக்கப்பட்டு உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. இதை பிந்தை நாள் புனிதர்களின்

யேசுகிறிஸ்து திருச்சபை என்று அழைப்பார்கள். நோர்வேயில் கிட்டத்தட்ட நாலாயிரம் பேர் இதில் அங்கத்தவராய் இருக்கிறார்களாம். கிட்டத்தட்ட நூறு நபர்கள் இந்தத் தேவாலயத்திற்கு ஞாயிற்றுக் கிழமையில் வருவார்கள். "TS"சிற்கு தேவாலயத்திற்கு உள்ளே போய் பார்க்க வேண்டும் என்று ஒரு எண்ணம் இருக்கிறது. இருந்தும் இன்னும் ஒரு நாளும் அதற்கு உள்ளே போகவில்லை. சில தமிழர்கள் அதற்குள் போவதை "TS" ஆர்வத்தோடு பார்த்து இருக்கிறார்.

மதியம் சிவா வருவான் என்று சொல்லி இருந்தான். அவனுக்காக அருள் வியர் வாங்கி வந்து வைத்து இருந்தான். அருள் இன்று மக்கிரல் வாங்கப் போகவில்லை. ஆட்டிறைச்சிக் கறி வைக்க வேண்டும் என்று கூறி இருந்தான். அதற்காக "யென்ஸ் ஏவென்ஸ்"இல் உடன் ஆட்டிறைச்சி வாங்கி வந்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்து இருந்தான். உடன் ஆட்டிறைச்சி என்பதற்கு அர்த்தம் இன்று வெட்டியது இல்லை. சில நாட்களுக்கு முன்பு வெட்டப்பட்டு இருக்கும். குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கெடாது பாதுகாத்துத் தருவார்கள். அது கிடைக்காவிட்டால் கல்லாக உறைய வைத்த இறைச்சியைத் தான் வாங்க வேண்டும். அருள் அதைக் கையால் தொடமாட்டான். அந்த விலங்கு வாழ்ந்ததைவிட உறை நிலையில் கிடந்ததே அதிக காலம் என்பதும், அதன் சுவை, மணம், குணம் எல்லாம் அழிந்திருக்கும் என்பதும் அவன் கருத்து. சாப்பாட்டு விஷயத்தில் அவன் கருத்திற்கு எதிராக யாரும் கருத்துச் சொல்வது இல்லை. சிலருக்குச் சில கலைகள் இயற்கையாகக் கைவந்து விடுகின்றன.

மத்தியானச் சாப்பாட்டு அலுவலில் மும்மரமாக இருக்கும் போது சிவா வந்தான். சிவா வரத் தனது உதவிகளுக்கு முடிவு கட்டிவிட்டு "TS" கோலிற்கு வந்தார். ஏற்கனவே அங்கே சென்ற நிமலன் தொலைக்காட்சியை நோண்டினான். சிவா "Denim"மும் அணிந்து அதற்கு ஏற்ப நீலமும் வெள்ளையும் கலந்த பெரிய சதுரங்கள் போடப்பட்ட "Sweter"ரும் அணிந்து இருந்தான். சிவா இளம் சூரனின் மீசை வைத்து இருக்கிறான். சவரம் செய்து குளித்து இருக்க வேண்டும். பின்பு ஏதோ பூசி இருக்கலாம். அவன் கன்னங்கள் துப்பரவாக மென் பச்சையாக மின்னின. நோர்வேயில் வாழ்ந்தால் கடும் கறுப்பு என்றாலும் ஒரு மினுமினுப்பு விரைவாக ஒட்டிக்

கொள்கிறது என "TS" மீண்டும் எண்ணினார். "TS"சைக் கண்டதும் அவனது பற்களும் அழகாக வெளிரென மின்னின.

"உதை நிப்பாட்டு நிமலன். சிவா வந்திருக்கிறார்... கதைப்பம்." என்றார் "TS". "இவர் பெரிய அமிர்தலிங்கம் தானே? சரி... நீங்கள் சொன்னா என்ன செய்ய முடியும்." என்ற வண்ணம் நிமலன் தொலைக்காட்சியைச் சாகடித்தான்.

"எப்பிடி வெதர் சிவா?"

"வெயில் எறிக்குது தான்... எண்டாலும் குளிர் சாதுவாத் தன்ரை குணத்தைக் காட்டுது?"

"ஊர் புதினங்கள் எப்பிடி இருக்குது சிவா?"

"அது உங்கடை வயதைவிட என்னுடைய அனுபவம் சரி எண்டுது அண்ணை."

"என்ன சொல்லுகிறா சிவா?"

"நான் சொன்ன மாதிரி ஆயுதம் ஒப்படைக்கிறதில பின்னடிப்பு. சுதுமலை மீற்றிங்கில பேசினது. மற்றைய இயக்கங்களைக் குறைபாடுகிறது எண்டு கூட்டிக் கழிச்சா இன்னும் ஒரு கொஞ்ச நாளில சண்டை தொடங்கீடும் எண்டு தெரியுது. இப்பவே இந்தியன் ஆமி கெடு பிடி செய்கிற அளவுக்கு நிலமை வந்திட்டுதாம்."

"அவங்கள் ஆயுதத்தைக் குடுத்தா எங்கடை விடுதலை கரையில தூக்கிப் போட்ட மீன் மாதிரிப் போயிடும். மற்ற இயக்கங்கள் இந்தியனுக்குச் சப்போட்டாத் தானே இருக்கினம். ஒருத்தரும் சுத்தமில்லை. என்ன நடக்கும் எண்டு யோசிச்சுப் பாரும்?"

"ஒண்டை விளங்கிக் கொள்ளுங்க "TS" அண்ணை. இந்தியனைப் பகைச்சா எங்களுக்கு விடுதலை... இல்லை சில சலுகைகள் கூட இல்லாமல் போகும். புலியள் உண்மையா நாட்டை நேசிச்சா, இந்தியாவிட்டை ஆயுதத்தைக் கொடுக்கோணும். சுயநலத்தை விட்டு எல்லாரையும் ஜனநாயக முறையில அரசியலில ஈடுபட விட வேணும். இந்தியன் ஆமிய எதுக்காகவும் பகைக்காமல், அவங்களைச் சிங்களத்திற்கு எதிராகத் திருப்ப வேணும். ரெலோ ஆண்டா என்ன, ஈபி ஆண்டா

என்ன எண்டு நினைக்க வேணும். உரிமைகளை விட்டுச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேணும். எங்களுக்கு முதல்ல தேவை இந்தியன் ஆமியை வைச்சுச் சிங்கள ஆமியை சிறை வைக்கிறது. அது ஒண்டு மட்டுமே தமிழரின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு உதவும். ஆனாப் புலியள் பலி எடுக்கிறதை விட்டு, மற்றவையையும் அரசியலில ஈடுபட விடுவினமே? நிச்சயம் விடமாட்டினம். அதுக்காக ஆயிரம் பொய் சொல்லிக் கொண்டு உதைக் குழப்புவினம். இப்பவே குழப்பத் தொடங்கி ஆச்சுது. கொஞ்ச நாளில அது யுத்தமா வெடிக்கும். ராஜிவின்ரை அரசியல் வங்குரோத்தால இந்தியா தடாரெண்டு இலங்கையில இறங்கி இருக்குது. அதை நாங்கள் ஒழுங்காப் பாவிக்காமல் விட்டால் தமிழினத்திற்கு இதைவிட சாபமானது ஒண்டும் இருக்காது. உரிமை எண்ட மாயையை கொஞ்சக் காலம் நாங்கள் உண்மையாகக் கைவிட வேணும்."

"நீயேன் இப்பிடிப் பயப்பிடுகிறாய் சிவா? இந்தப் பெரிய வல்லரசான அமெரிக்காவே வியட்னாமில தோத்து ஓடினது தானே? பெடியளிட்டை இவை ஒரு நாள் தோத்து ஓடுவினம். சண்டை ஒண்டு இனி வராட்டி எல்லாருக்கும் சந்தோஷம் தான். ஆனா... அதைத் தவிர்க்க முடியுமோ தெரியாதே?"

"வியட்நாமில இருந்த நிலைமையும், அரசியல் பின்னணியும், மக்களின்ரை தியாகமும் வேறை... யாழ்ப்பாணத்தார்ற்ற புத்தி வேறை. வியட்நாமில நடந்தது ஒரு வகையில சோவியத்திற்கும் அமெரிக்காவிற்குமான யுத்தம். சொந்த மக்களோடை வேறு ஒரு நாடும் பின்னுக்கு உதவிய நிண்டதால வெற்றி கண்டது. எங்களுக்குப் பின்னணியா நிக்கிறதே இந்தியா. நாங்கள் யுத்தம் செய்ய முனையிறதே அதை எதிர்த்துத் தான். இருக்கிற அதையும் பகைச்சா எப்பிடிச் சலுகைகூடக் கிடைக்கும்? ஒரு வகையில இப்ப எங்களுக்கு விடுதலை கிடைக்காமல் சலுகை கிடைச்சாலும் இந்தியா சொல்லுகிறதைக் கேட்கிறது தான் புத்திசாலித்தனம். பிழைக்கத் தெரிஞ்சவன் செய்கிற புத்திசாலித்தனமான செயல் அது தான். இந்தியாவில சென்றல் கவர்மென்ற் ஒரு பிளான் வைச்சிருக்கும். அதை மீறி யாரும் எதுவும் செய்ய முடியாது. என்னைப் பொறுத்த வரையில இப்ப புலிகளுக்கு இருக்கிறது இரண்டு தெரிவு மட்டுமே. ஒண்டு தங்கடை சுயநலத்திற்காய் இந்தியாவைப் பகைச்சு ஒரு

யுத்தம் தொடங்கிறது. இல்லாட்டி தாங்கள் அழிஞ்சாலும் தமிழருக்குச் சில சலுகைகளாவது கிடைக்க வழி விடுகிறது. நிச்சயம் புலிகள் பொது நலம் பார்க்கப் போகிறது இல்லை. அவையின்ரை தனி நாட்டுக் கனவில, உள்ள நாடும் இல்லாமல் ஒரு இனம் அழியும் கோரம் நடக்கப் போகுது."

"சிவா நீர் ஏன் எப்பவும் அவங்களைப் பற்றிக் குறைவா நினைக்கிறீர்? அவங்களை மாதிரித் தியாகமும், ஓர்மமும் உள்ள ஒரு இயக்கம் உலகத்தில இதுவரை இருந்ததே கிடையாது. வியட்னாமையும் வெல்லுகிறதா எங்கடை வீரச் சரித்திரம் இருக்கும். எங்கடை போராட்டம் வருங்காலப் போராட்டங்களுக்கு முன்மாதிரியான ஒரு உதாரணமாக அமையப் போகுது. தலைவர் பெரிய படிப்பு படிச்சு இருக்காட்டியும் வெல்ல முடியாத சாணக்கியத்தோடை செயற்படக் கூடியவர். சிங்கள அரசுக்கு ஒரு நாளும் அவங்களை வெல்ல முடியாது எண்டு தெரியும். தங்கடை பதவியைத் தக்க வைச்சுக் கொள்ளுகிறத்துக்காக விதண்டாவாதம் பண்ணுகிற மாதிரியே இந்த யுத்தம் நடக்குது. பேச்சுவார்த்தையோ அல்லது யுத்தமோ பெடியள் ஒரு நாளைக்குத் தனி நாடு எடுப்பாங்கள். அதை யாராலும் தடுக்க இயலாது. அதுக்கான காலம் வெகு விரைவாய் வரும். சிங்கள அரசு தோற்கப் போகிற யுத்தம் ஒன்றைச் செய்து கொண்டு இருக்குது."

"உங்கடை நம்பிக்கையும், சமாதானமும் அபாரம். என் அனுபவம் அதைவிட வித்தியாசம். இப்ப நடக்கிற நிழல் யுத்தம் இலங்கைக்கு எதிராக இல்லை. இந்தியாவுக்கு எதிராக எண்டதே உண்மை. அது உண்மையில நிறைய ஆபத்தானது. இந்த யுத்தத்தை வெல்ல முடியாத யுத்தம் எண்டு சிலர் சொல்லுகினம். அதுக்குக் காரணம் என்ன எண்டா கொரில்லா யுத்தத்தை ஒரு நாளும் மரபு ரீதியான இராணுவத்தால வெல்ல முடியாது. அதே வேளை கொரில்லாவால ஒரு பிரதேசத்தை நீண்ட காலத்திற்குக் கட்டுப்பாட்டில வைச்சிருக்க இயலாது. அது அதன் நோக்கமும் இல்லை. ஒரு பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள்ள வைச்சிருக்க நினைக்கிறதே அந்த யுத்த முறைக்குப் புறநடை ஆனது. தொடர்ந்து பல பத்தாண்டுகள் கொரில்லா யுத்தம் நடந்தா அந்த ஆக்கினையில ஏதாவது ஒரு முடிவு வரும். அப்பிடி ஒரு முடிவு வர நிறையத் தியாகங்கள் செய்ய வேண்டி இருக்கும். எங்கடை தமிழர்கள் ஓடத் தொடங்கி

இருக்கிறதைப் பார்த்தா வத்தின குளத்துக்க நீந்துகிற மீனாட்டம் எங்கடை போராட்டம் முடிஞ்சாலும் முடியலாம். இதைவிட நிறைய வித்தியாசமான முறையில எங்கடை போராட்டம் போகலாம். புலியளிட்டை இருக்கிற அரசியல் வரட்டுத்தனமும், சுயநலமும் ஒரு நல்ல முடிவைத் தரும் எண்ட நம்பிக்கையை எனக்குத் தர இல்லை. உங்களுக்கு இருக்கிற நம்பிக்கையைப் பார்க்கேக்க எனக்கு ஆச்சரியமா இருக்குது."

"நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கை இல்லை. எங்கடை போராட்டமும் தமிழற்ற நம்பிக்கையில தான் இருக்குது. தமிழ் ஆட்கள்ள ஒரு சிலர் மட்டும் தான் அதிர்ப்தியாளர்கள். ஆனா... தொண்ணூறு வீதமான சனம் இந்தப் போராட்டத்தை ஆதரிக்கினம். அப்பிடியான ஒரு போராட்டம் நிச்சயமா வெற்றி பெறும் எண்டதில எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்குது."

"உங்கடை இந்தக் கணிப்பு வெளிநாட்டில இருக்கிற தமிழருக்குச் சரியா இருக்கலாம். இலங்கையில அப்பிடி இல்லை எண்டு நினைக்கிறன். எவ்வளவு ஆதரவு அங்க அவைக்கு இருக்கோ அவ்வளவிற்கு எதிர்ப்பும் இருக்குது. எத்தினை, எத்தினை கொலைகள்? ஊரில நிண்டு இருந்தால் அதுகின்ரை வெறுப்பலை தெரிஞ்சு இருக்கும். நீங்கள் வேணும் எண்டா இருந்து பாருங்க.... புலியள் ஒரு நாளும் ஜனநாயக அரசியலுக்கு வரப் போகிறது இல்லை. தாங்கள் ஜனநாயக அரசியலுக்கு வந்தா கெதியா மூட்டையைக் கட்டிக் கொண்டு போக வேண்டி வரும் எண்டு அவங்களுக்குத் தெரியும். புலத்தில் ஆதரவு இருந்தால் பணம் விளையும். பணத்தை வைச்சு ஆயுதம் வாங்கலாம். ஆயுதத்தால் மட்டும் போராட்டத்தை வெல்ல முடியாது. ஆயுதத்தைவிட அரசியல் முக்கியம். அந்த அரசியல் ஞானம் இருக்கா? அதுக்குப் பதிலா நான் எண்ட அகங்காரத்தில எங்கடை போராட்டம் கண்ணை மூடிக் கொண்டு ஓடுகிற குதிரை போல ஓடுது. நல்ல அரசியல் ஞானம் உள்ளவையின்ரை கருத்துக்கள் அங்க கொஞ்சமும் எடுபடாது."

"இல்லைச் சிவா... சில வேளை மேதைகளின்ரை செயல் மற்றவைக்கு விளங்காது. அது அவருக்கு மட்டுமே விளங்கும். இருந்து பாரும், நாங்கள் தமிழ் ஈழத்தில போய் இறங்குகிற காலம் கெதியா வரும்."

"ஐயோ அண்ணை... என்னை விடுங்க. ஒரு சந்தோஷமான செய்தி சொல்ல வேணும் எண்டு நினைச்சுக் கொண்டு வந்தன். இந்தக் கதையில அதை மறந்து போனன்."

"என்ன விஷயம் சிவா அண்ணை? அதை முதல்ல சொல்லுங்கோ. நீங்களும் "TS" அண்ணையும் இவ்வளவு நேரம் கதைச்சது யாருக்கும் கொஞ்சமும் பிரயோசனம் இல்லாத கதை. காகம் திட்டி மாடு சாகிற மாதிரி... நீங்கள் என்ன கதைச்சா என்ன? அங்க அது நடக்கிற மாதிரி தான் நடக்கும். அதில எதுவும் மாறாது."

"டேய்...? நீயும் வரவர ஞானக் கொழுந்து ஆகுகிறாய்… உண்மை தான். காகம் திட்டி மாடு சாகிற கதைதான். நாங்கள் இனி அங்க நடக்கப்போகிற அவலங்களின் தூரத்துப் பார்வையாளர்களாகவே இருக்க வேணும். அதில பெரும் பகுதி பணம் கொடுத்து அந்த அவலங்களை ஊக்குவிப்பவர்கள்."

"ஐயோ அண்ணை... திரும்பவும் அந்தச் சேத்துக்க போகாமல்... அது என்ன சொல்ல வந்த சந்தோஷமான செய்தி எண்டு சொல்லுங்கோ?. அதை முதல்ல கேட்டாத்தான் எனக்கு நிம்மதி வரும்."

"எனக்கு நீலப் பாஸ்போட் கிடைச்சு இருக்குது. வந்து எடுக்கச் சொல்லிக் கடிதம் வந்திட்டுது."

அதைச் சிவா சொல்லும் போது அருளும், சொரூபனும் சமையல் முடித்து விட்டு வியரோடு அங்கே வந்தனர்.

"அப்ப சிவா.... நீ எல்லே எங்களுக்குப் பார்ட்டி கொடுக்க வேணும்?"என்றான் அருள்.

"நிச்சயமா. அடுத்த சனிக்கிழமை நான் பெரிசோடை வாறன். ஆட்டுக் காலும் வாங்குவம்."

"இந்தியன் ஆமி இறங்கிப் பிரச்சனை தீரும் எண்டு பார்த்தா நீலப் பாஸ்போட் தாறாங்கள் எண்டுறியள்..." என்றான் சொரூபன்.

"இந்தியன் ஆமி இல்லை... சிவனே கைலாசத்தை விட்டு கோவணத்தோடை இறங்கி வந்தாலும் உந்தப் பிரச்சனை தீராது. அது இவங்களுக்கு விளங்கி இருக்க வேணும். உங்களுக்கும் கெதியா வரும்." என்றான் சிவா.

"அது வந்தாப் பெரிய நிம்மதியா இருக்கும். நானும் என்ரை அலுவலைப் பார்க்கலாம்." என்றார் "TS".

வியரை வாங்கிச் சிவா பருகத் தொடங்கினான். "TS" எழுந்து காலதரிற்கு அருகே சென்றார். பக்த கோடிகள் தேவாலயத்திற்குள் சென்றனர். அதில் சில வெளிநாட்டவரையும் காண முடிந்தது. வெள்ளிச் சன்னங்களாய் வெயில் இறங்கினாலும் சூடு குறைவாக இருக்கும் என்று "TS"சிற்குத் தோன்றியது.

சாப்பிட்ட பின்பு எல்லோருமாகப் புறப்பட்டு அவர்களது வீட்டிற்குப் பின்னே இருந்த பூங்காவிற்குச் சென்றார்கள். அது ஒரு சிறிய வனம். மரங்கள் சடைத்து நின்று நிழல் பரப்பும் அழகுச் சோலை. வித்தியாசமான பல மரங்கள் அங்கே. வெயில் முறையாக இறங்காததால் அங்கு நிற்க "TS"சிற்கு குளிர்ந்தது. சில ஆப்பிள் மரங்களின் காய்கள் தேடுவாரற்றுத் தொங்கின. பல விதமான வெண்கலச் சிலைகள், கற்சிலைகள் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. பூங்காவின் வடக்குப் பக்கமாக அவர்களது அடுக்குமாடி வீடு போன்ற இரண்டு வீடுகள் வானத்தை முட்டும் முயற்சியில் சளைக்காது ஈடுபட்டன. மூன்று அடுக்குமாடி வீட்டிற்கும் பொதுவானதாக இந்தப் பூங்கா இருந்தது. இவர்கள் அந்த ஆப்பிள் மரத்தைச் சூழ்ந்து காய்களைப் பறித்துச் சுவைத்தார்கள். அவை சிறிய காய்கள். அமிலமாகப் புளித்தன. அதைக் கடிக்கும் போது பல்லைக் கரைப்பதாகக் கூசியது. சொரூபனும், நிமலனும் மாத்திரம் கர்ப்பிணிப் பெண்கள் போல மேற்கொண்டும் பறித்துச் சுவைத்தார்கள். மற்றவர்கள் ஒரு கடியுடன் அதை நிறுத்திக் கொண்டார்கள். அதிக நேரம் அங்கு குளிரைப் புறக்கணித்து அவர்களால் நிற்க முடியவில்லை. அவர்கள் வெயில் உள்ள தெருவை நோக்கி நடந்தார்கள்.

12 மாற்றங்கள்

மாதம் திருவெண்பாப் பாடும் மதத்தை எட்டியது. திருவெண்பாவோ, திருவிழாவோ இங்கு எதுவும் இல்லை. குளிர் காலத்தின் கொடுமை மாத்திரம் பல மடங்காகப் பலரையும் நடுங்க வைத்தது. இவர்கள் குடி இருக்கும் வீட்டிற்கு உள்ளே மட்டும் நல்ல கதகதப்பாய் இருக்கும்.

எங்கே சென்றாலும் வீட்டிற்குள் வந்தால் போன நிம்மதி திரும்பி வந்து விடும். உடைகளைக் களைந்து, மனப் பயம் நீக்கி, உலா வரும் துணிவு உண்டாகும். குளிர் எவ்வளவு கொடூரமானது? எப்படி அது ஊசி போல் உடலைத் துளைக்கிறது? மனித ஜன்மங்களால் அதிக குளிரையோ அல்லது அதிக வெப்பத்தையோ தாங்க முடிவது இல்லை. காலநிலைக்கு ஏற்ப அவர்களின் உடல் முழுமையாக இசைவாக்கம் பெறவில்லை. தனது விருத்தியான மூளை இல்லாது இருந்து இருதால் அவன் இந்தத் தேசங்களுக்கு வந்து வாழ்ந்து இருக்க மாட்டான். அவன் சாமர்த்தியத்தில் அவன் வாழ்வு இங்கும் நிலைக்கிறது. இல்லைச் சிறக்கிறது.

வீட்டின் கீழ்த்தளத்தில் சூட்டை உற்பத்தி செய்யும் இயந்திரம் உண்டு. பின்பு அந்தச் சூடு நீர்மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் மேல் நோக்கிக் கடத்துவதற்குக் குழாய்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதைப் பரப்புவதற்கான தளம் வீட்டின் பல இடங்களில் பொருத்தப்பட்டு இருக்கிறது. அதைக் கூட்டிக் குறைத்து கொள்வதற்கான வசதியும் அதில் உண்டு.

கதவைத் திறந்து வெளியே சென்றால் குளிர்சாதனப் பெட்டிக்குள் வாழ்வதான இம்சை தொடரும். காலையில் எழுந்து செல்லும் போது அல்லது மாலையில் தாமதமாய் வரும் போது நீர் பனிப் பளிங்காக மனித நிதானத்தைக் குலைக்கக் காத்து இருப்பதை "TS" கவனித்து இருக்கிறார். அப்போது எல்லாம் கவனமாக காலை வைத்து கையை அகல விரிக்கத் தயாராக வைத்துக் கொண்டே தெருவில் நடந்து வருவார். பனி கொட்டி உருகினால் வழுக்கும் என்று சுதேசிகள் சொல்லி இருக்கிறார்கள். "TS"சிற்கு அது எப்படி இருக்கும் என்கின்ற அனுபவம் நேற்றுவரை தெரியாது. நேற்றின் பின்பு அதை இனி என்றும் மறக்க முடியாது என்பது விளங்கியது. பனி கொட்டிய பின்பு தங்களோடு பனிச்சறுக்கு விளையாட்டிற்கு வருமாறும் சில சுதேசிகள் கேட்டு இருந்தனர். அப்படி அவர்கள் கேட்கும் போது "TS" சிரிப்பார். அவரின் சிரிப்பிற்கு என்ன அர்த்தம் என்று தெரியாது சில சுதேசிகள் குழம்பியது உண்டு.

நிமலன் கோலிற்குள் வந்தான். அவனுக்கு "TS"சைப் பார்க்கக் கவலையாக இருந்தது.

"என்ன அண்ணை... கை எப்பிடி இருக்குது?" என்று கேட்டான்.

"நோகுதடா... அவங்களுக்குக் கை நோ எண்டு அடிச்சுச் சொல்ல அவங்கள் எப்ப வேலைக்கு வருவாய் எண்டு கேட்கிறாங்கள். கை எப்பிடி இருக்குது, என்ன காயம் எண்டுகிற எந்த அக்கறையும் அவங்களுக்கு இல்லை. கூட்டிக் கழிச்சுக் கணக்குப் பார்த்து எவ்வளவு நட்டம் எண்டு அலசி இருப்பாங்கள் போல இருக்குது. ரெலிபோனில கதைக்கவே அவனுக்குப் பிடிக்காத மாதிரி ஒரு இழுவல்."

"அப்பிடிதான் முதலாளி எண்டா இருக்க வேணும் ஆக்கும். இரக்கப்பட்டா கொள்ளையா ஆதாயம் சம்பாதிக்க முடியாது தானே?"

"நான் சும்மா எல்லாம் வீட்டில நிக்கமாட்டன் எண்டு அவனுக்குத் தெரியும். அப்பிடி நான் நிண்டால் அது தவிர்க்க முடியாத காரணமாய் இருக்கும் எண்டும் அவனுக்குத் தெரியும். அப்பிடி இருந்தும் அதை அவனால ஏத்துக் கொள்ள முடிய இல்லை. கொஞ்சமும் இரக்கப்படத் தெரிய இல்லை. நாங்கள் எப்பிடி இருந்தாலும் சரி தன்ரை காரியம் நடக்க வேணும் எண்டு நினைக்கிறான். இப்ப நான் போய் ஏணியில ஏறி நிண்டு கழுவ முடியுமே?"

"ஓம்... அண்ணை... எப்பவும் முறிக்கிறதிலை வலு அக்கறையா இருக்கிறாங்கள். ஒவ்வொரு நொட்டையும் மேலதிகமாய் வேலையும் கூடிக் கொண்டே போகுது. உங்களுக்கு எவ்வளவு வேதனையா இருக்கும் எண்டு அவங்களுக்குத் தெரியுமே?"

"ம்... நல்ல காலம். வேலிக்குப் பக்கத்தில போகேக்க வழுக்கினது. நானும் எட்டி வேலியப் பிடிச்சது. இல்லாட்டிப் பிடிரி அடியுண்ட விழுந்து இருப்பன். கெட்ட காலத்திலும் ஒரு நல்ல காலம். கையைச் சுழுக்கினதோடை தப்பீட்டன்.

"அது சாதுவாக் கரைஞ்சு இறுகின சினோ. நீங்கள் கவனமா நடந்து போயிருக்க வேணும்."

"நான் கவனமாகத்தான் நடந்து போனனான். இந்த ஜெக்கெற்றே இரண்டு கிலோ பாரம் இருக்கும். அதைவிட உள்ளுக்க அரச உடைமாதிரிக் கம்பளி அண்டர்வெயார். மேல யீன்ஸ், சுவேற்றர், தொப்பி, மப்ளர், கிளவுஸ், வின்ரர் சூ... இது எல்லாம் போட்டுச் சந்திர மண்டலத்திற்கு நாசா அனுப்பின மனிசர் மாதிரிப் போனா

எப்பிடி வலன்ஸ் இருக்கும்? அது படீரெண்டு வழுக்கீட்டுது. சூ வழுக்காமல் சினோவைக் கவ்விப் பிடிக்கிற மாதிரி ஒண்டு சூக் கடையில விக்கிறாங்கள் எண்டும், அதை வாங்கி வாறன் எண்டும் அருள் போய் இருக்கிறான். நான் நிறைய அலுவல் செய்ய வேணும் எண்டு இருந்தன். இப்ப ஒரு இடமும் வெளிக்கிட முடியாது. கடிதம் வந்து கிடக்குது. போனாப் பாஸ்போட் எடுத்து வரலாம். பிறகு மற்ற அலுவல்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்யலாம். நீ ஒருக்கா அந்த விண்டோஜனை எடுத்துத் தா. இன்னும் ஒருக்கா பூசி விடுவம். கெதியா சுகமானால் தான் நான் என்ரை அலுவலைப் பார்க்கலாம். அவங்களும் தங்கடை பிச்சைக் காசுக்கு நிண்டது எண்டு நினைக்காமல் இருப்பாங்கள்."

நிமலன் எழுந்து விண்டோஜன் எடுக்கச் சென்றான். அவன் எழுந்து செல்லவும் தொலைபேசி மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது. நிமலன் தொலைபேசியை எடுத்துக் கதைத்தான்.

"அப்பிடியே?"

……………

"உண்மையாகவே?"

……………

"ஓ... இருக்கிறார்."

தொலைபேசி கை மாறியது. "TS" தலையை மேலே அசைத்து யார் என்று உடல் பாசையால் நிமலனைக் கேட்டார்.

"சண்முகன் அண்ணை..." என்றான் நிமலன்.

"சொல்லு சண்முகம்." என்றார் "TS".

"நாங்கள் வேலை செய்கிற பக்றி இராத்திரி எரிஞ்சு போச்சுது அண்ணை. இனி இந்தப் பக்றி கட்டி எப்ப வேலை கிடைக்குமோ தெரியாது."

"அப்ப என்ன செய்யப் போகிறியள்?"

"இனி ஆர்பெயிட் கந்தோருக்கு (வேலை தரும் அலுவலகம்) போனால் தான் தெரியும். வேற பக்றியளும் இங்க இருக்கிறதால அங்க வேலை எடுத்துத் தருவாங்கள்

எண்டு நினைக்கிறன். இப்ப எங்களை ஒரு ஹெட்டல்ல தங்க விட்டு இருக்கிறாங்கள். நாங்கள் இருந்த வீடு பக்றிக்குக் கிட்ட எண்டதால ஒரே புகை மணம். அதோடை அதுக்கான கரண்டையும், தண்ணியையும் கட் பண்ணிப் போட்டாங்கள். அது இனி சரிப் பண்ணினால்தான் எங்கடை வீட்டிற்குப் போகலாம். காலமைச் சாப்பாடு பிரச்சனை இல்லை. மற்றச் சாப்பாடுகளுக்கு ஒவ்வொரு தமிழ் ஆட்களும் கூப்பிடுவினம். அங்கங்க போட்டு வருவம். தமிழர் வித்தியாசம் பார்க்காமல் பழகுகிறது, எல்லாரோடையும் பிறண்டா இருக்கிறது, இப்பிடியான ஒரு நிலை வரேக்க எவ்வளவு உதவியா இருக்குது எண்டு தெரியுது."

"நானும் இங்க சிநோவுக்க வழுக்கி விழுந்து போயிடன். அதால கையிக்க சுளுக்கிப் போட்டுது. வேலைக்குப் போகாமல் வீட்டில தான் இருக்கிறன்."

"உங்க சிநோக் கொட்டிப் போட்டுதே?"

"ஓ கொட்டிப் போட்டுது." என்றார் "TS".

"அது அண்ணை சிநோவில நடக்கேக்க வழுக்கி வழுக்கி நடக்க வேணும். பயந்து பயந்து நடந்தியள் எண்டா விழுத்திப் போடும்."

"ம்... இனி நான் குழந்தையள் போல அந்த நடையையும் நடந்து பழக வேணும்." என்றார் "TS".

"சரி... அண்ணை... நான் இங்க ஒரு ரெலிபோன் பூத்தில இருந்து கதைக்கிறன். வேறை வீட்டுக்குப் போனப் பிறகு உங்களோடை தொடர்பு கொண்டு விபரமாக் கதைக்கிறன்."

"சரி."

"காத."

"காத."

தொலைபேசியை வைத்து விட்டு "TS" விண்டோஜனைப் பூசும்போது அருள் வீட்டிற்கு உள்ளே வந்தான். வந்தவன் மேலங்கியை அறைக்குள் கொளுவி, உடுப்பை மாற்றிக் கொண்டு கோலுக்குள் பிரவேசித்தான். அவன் கையில் அந்தப் பை இருந்தது.

"அண்ணை உங்களுக்கு 'லாடன்' வாங்கிக் கொண்டு வந்து இருக்கிறன்." என்றான் அருள்.

"கொண்டா பார்ப்பம்." என்றார் "TS".

அது நல்ல உறுதியாக இறப்பரில் செய்யப்பட்டுக் கீழே முளைகளாக ஆணிகள் துருத்திக் கொண்டு நின்றன. அந்த ஆணிகள் பனியைக் குற்றிக் கவ்விப் பிடித்து வழுக்குவதைத் தடுக்குமாம். "TS" அதைப் பார்த்து விட்டு நிமலனிடம் கொடுத்தார். நிமலன் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அருள் "TS"சைப் பார்த்து,

"உங்களுக்கு 'ரீ' வேணுமே அண்ணை?" என்று கேட்டான்.

"கையிக்க சுளுக்கினாக் கவனிப்புத் தடபுடலாகத் இருக்கும் போல? உனக்குப் போடப் போகிறாய் எண்டால் அதோடை எனக்கும் ஒரு கப் கொண்டா." என்றார் "TS".

"அப்ப எனக்கும் ஒரு கப் தாறீங்களே?' என்றான் நிமலன்.

13 விருந்து

அது சனிக்கிழமையில் வந்துவிட்ட நத்தார் பெருநாள். இரண்டு முறை விடுமுறையைத் தன் தலையில் எழுதிக் கொண்ட திருநாள். எழுந்ததும் தாமோதரன் வீட்டிற்குத் தான் செல்ல வேண்டும் என்பது "TS"சிற்கு ஞாபகம் வந்தது. அன்று அவன் "Tram"இல் வைத்துப் மீண்டும் பிடித்துக் கொண்டது படமாக அவரது மூளையில் ஓடத் தொடங்கியது.

கை சுகம் வந்ததும் நோஸ்க் வகுப்பிற்குச் செல்லாது காவல் நிலையம் சென்று தனது நீலக் கடவுச்சீட்டை "TS" எடுத்து வந்தார். சொரூபனுக்கும், நிமலனுக்கும் கடிதம் வந்து விட்டது. அருளனுக்கு இன்னும் அது வரவில்லை. அவர்கள் நத்தார் கழித்துக் காவல் நிலையம் போவதாக இருந்தார்கள். அவர்களுக்குக் கடவுச் சீட்டிற்கு எந்த அவசரமும் இல்லை. அன்று கடவுச்சீட்டு எடுக்கப் போவதற்காய் "Tram"இல் ஏறினார். வெளியே தோல் விறைத்துப் பொசுங்கிப் போகும் சுள்ளிடும் கடும் குளிர். மூக்குத் துவாரத்தால் வந்த சிதறிய திரவத் துளிகள் வெண் வைரமாக மேலங்கியில் வேகமாகப் படிந்து

கிடந்தன. "Tram"இற்குக் காத்து நிற்கும் போது "TS"சால் ஒரு இடத்தில் நிற்க முடியவில்லை. நின்றால் விறைத்துச் சிலையாகி விடுவேனோ என்கின்ற பயம் அவருக்கு. அங்கும் இங்கும் நடந்து திரிந்தார். கையைக் காலை உதறினார். வேறு ஒரு சுதேசியும் அப்படி நடந்து திரிந்தான். ஒரு சிலர் அசையாது நின்றார்கள். "TS"சிற்கு அவர்களால் எப்படி இந்தக் குளிரைத் தாங்க முடிகிறது என்று விளங்கவில்லை.

"Tram"மிற்குள் ஏறிய போது பல அறிமுகம் இல்லாத முகங்கள் அங்கு இருந்தன. சில அழகான பெண்களின் வதனங்கள். விறைப்பான ஆண்களின் பார்வைகள். ஒரு சில தடுமாற்றமான மனிதர்கள். அவர்கள் சில வேளை ஒஸ்லோவிற்குப் புதிதாக இருக்கலாம் என்று "TS" எண்ணினார். "Tram" துறண்ணியம் வையால் நகரின் மத்திய பகுதியை நோக்கிப் பயணித்தது. அடுத்த தரிப்பில் தான் தாமோதரன் ஏறினார். தாமோதரன் சில வேளை தங்களை மறந்திருப்பார் என்று "TS" எண்ணினார். ஆனால் தாமோதரன் இப்படி வில்லங்கமாக வந்து கேள்வி கேட்பார் என்று "TS" சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"Tram"மிற்குள் ஏறிய தாமோதரன் "TS"சைக் கண்டதும் இல்லாது அவரின் முன்னிருக்கையில் வந்து அமர்ந்தார்.

"எப்பிடி இருக்கிறீங்கள்?" என்று "TS"சைப் பார்த்துத் தாமோதரன் கேட்டார்.

"நல்லா இருக்கிறம். நீங்கள்?" என்றார் "TS". நடந்த பிரச்சனையில் தாமோதரன் தங்கள் வீட்டிற்கு வருமாறு அழைத்து இருந்தது அவருக்கு மறந்தே போய்விட்டது. அவர் அதை எப்படி எடுத்துக் கொண்டாரோ என்கின்ற தர்மசங்கடம் அவருக்கு.

"நாங்களும் நல்லா இருக்கிறம். ஆனா... நீங்கள்தான் எங்களை மறந்து போயிட்டியள். வருவியள் எண்டு எதிர்பார்த்தம். நீங்கள் வரவே இல்லை. ஏன் ஊரை மாதிரி எல்லா இடத்திலும் கை நனைக்க மாட்டியளே? அதால தான் வரேல்லையா?" எந்த ஒளிவு மறைவும் இல்லாமல் நெத்தியடியாக அவர் அப்படிக் கேட்டதற்கு என்ன பதில் சொல்வது என்று "TS"சிற்கு ஒரு கணம் விளங்கவில்லை. இப்படி அவர் கேட்பார் என்று "TS" எண்ணி இருக்கவில்லை.

அந்த அதிர்ச்சியில் இருந்து தன்னை விடுவித்து, நிலமையைச் சமாளிக்க அவர் முயற்சி செய்தார்.

"என்ன இப்பிடிக் கதைக்கிறியள்? இங்க யார் அப்பிடி எல்லாம் செய்வினம்? எல்லாரும் தானே ஒண்டு மண்டா இருக்கிறம்... சாப்பிடுகிறம்... வாழ்க்கையை நடத்துகிறம்... இத்தினை அடிபாட்டுக்குப் பிறகும் தேவை இல்லாமல் யாரும் அதைப் பார்ப்பினமே? நான் அப்பிடிப் பார்க்கிறது இல்லை. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு இடம், ஒவ்வொரு பிரிவு. நாங்கள் அது எல்லாம் பார்க்காமல் ஒற்றுமை ஆகத்தான் இருக்கிறம். இங்க வந்த பிறகும் அதை எல்லாம் பார்க்க முடியாது. நான் பெடியளோடை ஒரு நாளும் அப்பிடிப் பழகிறது இல்லை. ஊரில எண்டாச் சனம் ஒரு மாதிரிப் பார்க்கும் எண்டது தெரியும். இங்க எங்களை யார் அப்பிடிப் பார்க்க இருக்கினம்? பார்த்தாத் தான் என்ன? நாங்கள் சாதி பார்க்கிறம் எண்டால்தான் எங்களை வித்தியாசமாய் இவங்கள் பார்ப்பாங்கள்."

"நீங்கள் சொல்லுகிறது உண்மை. ஆனா... இங்க வந்தும் சாதித் தடிப்போடை இருக்கிற சனங்கள் இருக்குது அண்ணை. நீங்களும் அதால தான் வர இல்லையோ எண்டு நினைச்சன். வெளியால பழகினாலும் மனசுக்க விருப்பம் இல்லாமல் சிலருக்கு இருக்கும். அதை எப்பிடி மறைக்கிறது எண்டு தெண்டாடுவினம். அப்பிடி நீங்கள் இல்லை எண்டு தெரியுது. நத்தாருக்கு எங்களுக்கு வியாழன் பின்னேரத்தில இருந்து திங்கள் வரைக்கும் லீவு இருக்குது. நீங்கள் சனிக்கிழமை மத்தியானச் சாப்பாட்டிற்குப் பெடியளை எல்லாம் கூட்டிக் கொண்டு வாங்க. கட்டாயம் வரவேணும். நாங்கள் சமைச்சு வைச்சுக் காத்துக் கொண்டு இருப்பம்."

"அது பிரச்சனை இல்லை... நாங்கள் வருவம். சண்டைக்குப் பிந்து சபைக்கு முந்து எண்டுவினம். உதிலை எல்லாம் எங்கடை பெடியள் பின்னுக்கு நிக்க மாட்டாங்கள்."

பின்பு அவர் குன்னாரியூஸ் வரையும் கதைத்துக் கொண்டு வந்தார். குன்னாரீயூசில் "TS" இறங்கித் தனது புதிய கடவுச்சீட்டை பெறுவதற்காக அந்தக் காவல் நிலையத்தை நோக்கி நடந்து சென்றார்.

*

இளைஞர்கள் அங்கே போவதற்குப் புறப்படுவதை "TS" பார்த்தார். இன்னும் சிறிது நேரத்தில் தாமோதரன் வீட்டிற்குச் செல்ல வேண்டும். ஆளுக்கு ஐம்பது குரோணர்கள் போட்டு ஒஸ்லோசிற்றியில் இருக்கும் விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடையில் அந்தப் பிள்ளைகளுக்கு அருள் இரண்டு பரிசிற் பொருட்கள் வாங்கி வந்து இருக்கிறான்.

நத்தாரை முன்னிட்டுக் கடைகள் வியாழனில் இருந்து திங்கள் வரையும் திறக்காது என்பதால் நிறையப் பொருட்களை அன்று இழுத்து வர வேண்டி இருந்தது. விடுமுறை நாள் அதிகம் என்பதால் அருளிற்கும், சொரூபனுக்கும் வியரும் அதிகமாகத் தேவைப்பட்டது. இங்கு வரும் பெரிய விடுமுறையில் இது முக்கியமானது. அலுவலகங்களில் வேலை செய்யும் உயர் அதிகாரிகள் பல நாட்களுக்கு முன்பே விடுப்பு எடுத்துக் கொண்டு சென்று விடுவார்கள். வேலை செய்யப் போகும் இடத்தில் நாளாந்தம் செய்யும் துப்பரவுப் பணியை "TS" விரைவாக முடித்து விட்டு வருவார். அதிக மனிதர்கள் அலுவலகத்தைப் பாவிக்காத போது அதிகமாக அசிங்கங்கள் அங்கு வரவு கண்டிருக்காது. அத்தால் வேலை சுருக்காக முடிந்துவிடும்.

சொரூபனும், அருளும் வியருக்காக மேலதிகமாகச் சில நடைகள் கீழே போய்விட்டு வந்தார்கள். நத்தார் காலத்தில் குடிப்பதற்கு என்றே வித்தியாசமான வியர்கள் கடைகளில் வந்து இருக்கிறது. அவர்கள் அதுவும் வாங்கி வந்தார்கள். மதுக் குடிக்காதவர்களுக்கு விசேடமான குளிர்பானங்களும் நத்தார் காலத்தில் வருகின்றன. அதன் சுவை கிட்டத்தட்ட இலங்கை ‘நெற்றோ’ குளிர்பானம் மாதிரி இருக்கிறது என்பது "TS"சின் கணிப்பு. அதன் நிறமும் சிவப்பே. யானை மார்க்கை குடிக்காத ஈழத் தமிழனாய் வெளிநாட்டில் வாழ்வதின் அன்னியத்தை அதைக் குடிக்கும் போது மீண்டும் அது ஞாபகப் படுத்துகிறது. அப்படி உணரும் போது சில வேளை இனி இது தானோ நிரந்தரம் என்கின்ற பயமும் எழுந்து வரும். இனி இது தான் நிரந்தரம் என்றாலும் உயிருக்கு இருக்கும் உத்தரவாதம், மனித உரிமைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், உழைப்புக்கு ஏற்ப ஊதியம், சமுகப் பராமரிப்பு போன்ற நோர்வேயில் இருக்கும் பல வசதிகள் இப்படியான நாடுகளில் வாழ்வதற்கு முற்பிறவியில் தவம்

செய்திருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தையும் அவருக்குத் தோற்றுவிக்கும்.

அந்தப் பிள்ளைகளுக்கு வாங்கி வந்த பரிசுப் பொருட்கள் சிவப்பு மினுமினுக்கும் கடதாசியால் சுற்றப்பட்டு இருந்தது. அந்தச் சிவப்புக் கடதாசியில் நத்தார் பாப்பாவின் படங்கள் வட்ட வட்டமாய் குமிழி வடிவில் இருந்தன. அதற்குச் சிவப்பில் றிபன் குஞ்சமும் கட்டி இருந்தார்கள். அவதானமாக இரண்டு பொதிகளையும் அவர் எடுத்துக் கொண்டார்.

அருளும் சொரூபனும் அந்த ஊட்டில் இரகசியமாக இரண்டு வியர்களைத் திறந்து பருகினார்கள். வியரை விஸ்கி குடிப்பது போலக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சவில்லை. அவதி அவதியாகக் குடித்தனர். பின்பும் ஒரு போத்தலைத் திறந்து பாதி, பாதி குடித்தார்கள். இல்லாவிட்டால் கணகணப்பாக இருக்காது என்று அவிப்பிராயம் தெரிவித்தனர். இவர்களின் இந்த வியர் பிரசங்கம் நிமலனுக்கு அலுப்பைத் தந்தது. அவன் தொலைக்காட்சி பார்த்தான். சிறிது நேரத்தில் வாயைக் கொப்பளித்துச் சுவிங்கம் அதக்கிய வண்ணம் அவர்கள் இருவரும் புறப்பட்டனர். அதைத் தொடர்ந்து சிவன் கோவில் தேர் போல நால்வரும் வீட்டைவிட்டு வெளியே வந்தார்கள். நீல வானம் திறந்து இருக்கக் குளிர் தொடர்ந்தும் விடாப்பிடியாக ஊசிக் காற்று வடிவில் உடலைத் தைத்து எடுத்தது. வெளியே வந்ததும் முகத்துத் தோல் மொர மொரவென விறைத்து வெடிப்பதான உணர்வு உண்டாகியது. சய பதின்நான்கிற்குக் குளிர் இறங்கியதின் கொடூரம் இது. அலாஸ்காவில் சய ஐம்பது அறுபது என்று போகும் என்பதாக "TS" தொலைக்காட்சியில் பார்த்து இருக்கிறார். அங்கே சென்று பரிசோதனைகள், சாதனைகள் நிகழ்த்த வேண்டும் என்று மனிதர்கள் துணிவோடு செல்கிறார்கள். அவர்கள் எப்படி இந்தக் குளிரைத் தாங்கிக் கொள்கிறார்கள் என்பது "TS"சிற்கு விளங்கவில்லை.

போக்குவரத்துச் செத்துப் பாதைகள் எந்தச் சந்தடிகளும் இன்றி வெறிச்சோடிக் கிடந்தன. எப்போதாவது ஒரு வாகனம் காட்டில் தனித்து வாழும் சிங்கம் போல உறுமிக் கொண்டு சென்றது. பிரதான தெருவைத் தவிர மற்றைய இடங்களில் வெள்ளைப் பஞ்சு விரித்த கணக்காக பனி படர்ந்து பூமித் தாயை விதவை ஆக்கியது. சில இடங்களில் வைரம் மினுங்குவது போல

மினுக்கம் அதில் தோன்றியது. ஆகாயம் கொட்டிய அந்த வைரங்களைக் கையில் அள்ள முடியாத குளிர். நோர்வேக்கு வந்து இறங்கிய போது பனியைக் கண்டாலும் இப்படிக் குளிராக இருக்கும் என்று எந்த அவிப்பிராயமும் யாருக்கும் இருந்தது இல்லை. பூமித் தாயின் மேனியில் குறி சுட்டது போன்ற கரும் நெடுஞ்சாலைகள். அதில் மட்டும் பனியின் வறட்சி. உப்புப் போட்டு பனியைக் கரைப்பார்கள். இயந்திரத்தால் உப்பைத் தூவிக் கொண்டு போகும் போது அதை "TS" பார்த்து இருக்கிறார்.

அவர்கள் வீடு இருக்கும் பிட்டியில் இருந்து இறங்கிச் சுரங்கரத நிலையம் கழிந்து வந்தார்கள். நேற்றுப் பிற்பகல் சுரங்கதரம் உட்பட அனைத்து வாகனங்களும் பல மணித்தியாலங்கள் ஓடவில்லை. நத்தார் பிற்பகல் நேரத்தில் இவர்களின் கிறிஸ்தவ மதக் கொண்டாட்டங்களின் உச்சக் கொண்டாட்டமாய் அது இருக்குமாம். அன்று பலவகை மாமிச உணவு வகைகளோடு, மது, இனிப்பு வகைகள் எனப் பல உணவுகளும் உண்டாம். நத்தார் மரத்தின் கீழ் இருக்கும் பொதிகளைத் திறந்து, அதற்குள் இருக்கும் தங்களுக்கான பரிசிற் பொருட்களைப் பார்த்து மகிழ்வார்களாம் என்றும் அவர் அறிந்து இருந்தார். அதுவே பலரின் பெரும் எதிர்பார்ப்பாக அமைகிறது. இந்தக் கொண்டாட்டத்தைச் சாட்டி மதுப் பிரியர்கள் பலவகை மதுக்களை அருந்தி மகிழ்வார்கள். மதுவும், மாதும் மகிழ்ச்சி மட்டுமல்ல. மகிழ்வு தருவதாய் முதலில் இருக்கும் மாயை ஆகவும், பின்பு மன உளைச்சலைத் தரும் நிதர்சனமாகவும் சிலருக்கு மாறி விடுகிறது. பெற்றோர்கள் அதிகம் மது அருந்திச் சண்டை பிடித்தால் அந்தக் குடும்பத்தில் வாழும் பிள்ளைகளுக்கு அது பெரிய சங்கடமாகப் போய்விடும்.

உயரக் கட்டடங்கள் நான்கு பக்கமும் சூழ்ந்த ஒரு நாற்சந்தியே காள்வாணர்ஸ் பிளாஸ். அண்ணார்ந்து பார்த்தால் விளக்குக் கடைக்கு மேலே "டாக்பிளாட்" என்பது பாரிய சிவப்பு மின் எழுத்து விளம்பரமாக வீற்றிருக்கும். பிறிதொரு கட்டடத்தில் அதற்குச் சமாந்தரமாகச் "சீமென்ஸ்" என்கின்ற பச்சை எழுத்துக்கள். அதற்கு எதிரா மறுகரையில் "அப்தன் போஸ்த்தன்" என்கின்ற பத்திரிகையின் நீல எழுத்துக்களும் இருக்கின்றன. அதற்குச் சமாந்தரமாக "குருண்டிக்" நிறுவனத்தின் நீல எழுத்துக்கள். பலமாடிக் கட்டடங்களின் நெற்றிப் பட்டங்களாக அவை குந்தியிருக்கும். இந்த

எழுத்துக்கள் தூரத்தில் வரும் போதே கண்ணைப் பறிக்கும். வாகனங்களும் மனிதர்களும் மூச்செடுக்க முடியாது இடைவிடாது கடந்து செல்வது இந்தச் சந்தியின் அன்றாட வாழ்க்கை. இன்று அச்தச் சந்தி சோம்பலோடு கும்பகர்ண வரம் பெற்றதாகத் தூங்கியது. வாகனங்களைக் காணாது அது மன வருத்தம் கொண்டது.

நான்குபேரும் தாங்கள் வந்த பாதையில் இருந்து விளக்குக் கடைப் பக்கம் மாறினார்கள். பின்பு திரும்பி றீமிக் கடைப் பக்கம் மாறித் துறண்ணியம் வய்யை நோக்கி நடந்தார்கள். வார்டோக் காத்தாவைக் கண்டு பிடிப்பது அவர்களுக்குச் சிரமமாக இருக்கவில்லை. அவர்களது வீடு மூன்றாவது மாடியில் இருந்தது. அதற்குப் பாரம் தூக்கி இருக்கவில்லை. திருப்பதி மலையேறும் பிரயத்தனத்தோடு படிகளில் ஏறித் தாமோதரன் குடும்பத்தைச் சந்திக்கச் சென்றார்கள்.

அவர்களின் கதவிற்கு நீல நிறத்தில் வண்ணம் பூசி இருந்தது. நல்ல கனமான கதவு. உள்ளே நின்று பார்ப்பதற்குக் கண்ணாடித் துவாரம் அதில் பொருத்தி இருந்தது. நிமலன் அழைப்பு மணியை அழுத்தினான். அவர்கள் பிள்ளைகள் சத்தத்தோடு கதவை நோக்கி ஓடி வருவது கேட்டது. கதவு உள்நோக்கித் திறந்தது.

"மாமாக்கள் வந்திட்டினம்." என்று கூறிய வண்ணம் அவர்கள் திரும்பி ஓடினார்கள். எல்லோரது கண்களும் வீட்டை மேய்ந்தன.

இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடு. அதில் ஒரு படுக்கை அறைக்குள் இரண்டு படுக்கை. ஒன்றின் மேல் ஒன்றாக உள்ள படுக்கையாக அது இருந்தது. அதைக் "கொய் செங்" உயரக் கட்டில் என்று இங்கே சொல்வது வழக்கம். அந்த அறைக்கு உள்ளேயும் நீல நிறத்தில் வண்ணம் பூசப்பட்டு இருந்தது. அதன் திரைச்சீலைகளும் நீல நிறம் கலந்த பொம்மை உருவங்களைத் தாங்கியதாகத் தொங்கின. படிப்பதற்கான மேசையும் கதிரையும் ஒரு பக்கம் இருந்தன. சில பொம்மைகள் நிலத்தில் கிடந்தன. மின்கலத்தில் ஓடும் கார் ஒன்று கதவு ஓரத்தில் நின்றது. விளையாட்டுக் கிற்றார் ஒன்று கட்டிலின் கீழ் ஒளிந்து கிடந்தது. அலுமாரி மூடப்பட்டு அறை சாதுவாகத் துப்பரவு ஆக்கப்பட்டது தெரிந்தது.

மற்றைய படுக்கை அறையின் கதவு சாத்தி இருந்தது. கோலிற்குள் இரத்தச் சிவப்ப வண்ணம் பூசி இருந்தார்கள்.

தமிழர்கள் சிவப்பு வண்ணத்தைப் பூசுவது வழமை அல்ல என்றாலும் சுதேசிகளுக்கு அதுவே பிடித்த வண்ணமாக இருக்கிறது. நிலத்திற்கு மரம் அடித்து இருந்தது. சிவப்பு நிறத்தில் மூன்று, இரண்டு, ஒன்று என்கின்ற வடிவிலான சோபாக்கள் மனிதரைச் சுமப்பதற்கான தவத்தில் அவை. பிள்ளைகளின் அட்டகாசத்தில் அவை இளைத்து, அலுத்துப் போய்விட்டதாகப் பரட்டையும், சில வெடிப்புக்களும் அதன் உடலில் சாட்சியாக. மரத்தால் செய்யப்பட்ட மேசை ஒன்று சோபாவிற்கு முன்பு. அதற்குச் சிவப்பு நத்தார் உறை போர்த்தி இருந்தார்கள். அதன் மேல் ஒரு சிறிய கூடை நிறைய "கிளமென்ரீன்" என்கின்ற சிறு தோடம் பழங்கள் வைக்கப்பட்டு இருந்தன. ஒரு சிறிய கண்ணாடிச் சட்டியில் பொரித்த நிலக்கடலை விருந்தினருக்காய் தவம் செய்தது. சோபாக்களுக்கு முன்பு தொலைக்காட்சி, "Video Deck" போன்றவை அதற்கான மேசையில் வைக்கப்பட்டு இருந்தன. பிள்ளைகள் அதைச் சிறுவர்களுக்கான அலைவரிசையில் விட்டு இருந்தார்கள். நிமலன் அதைப் பார்க்க அருளனும், சொரூபனும் அவனை எள்ளலாகப் பார்த்தார்கள்.

சுவரில் பிரபாகரனின் படம் ஒன்று பெரிதாகத் தொங்கியது. அருளன் அதைப் பார்த்தான். அவன் முகம் ஏனோ கோணிற்று. சொரூபனும் அதைப் பார்த்தான். அது பிடிக்காதவனாய் தனது கவனத்தை நிமலனில் செலுத்தினான். "TS" சிறிது நேரம் அதைப் பார்த்துக் கொண்டு இருந்தார். எங்கள் இனத்திற்கு விடுதலை வாங்கித் தரப் போகின்ற மாவீரன் என்கின்ற நினைவு அவர் மனதில் பரந்து விரிந்தது. வீரத்திற்கும், தியாகத்திற்குமான அடையாளமாக அந்தப் படம் அவருக்குத் தோன்றிற்று.

சுவரில் அதைவிடப் பல குடும்பப் படங்களும், பிள்ளைகளின் படங்களும், ஒரு சுவர் மணிக்கூடும் தொங்கின. வலப்பக்கம் இருந்த மர அலுமாரியில் சில பொம்மைகள், கண்ணாடிப் பாத்திரங்கள், மட்பாத்திரங்கள் போன்றவை வைக்கப்பட்டு இருந்தன. சமையல் அறையில் இருந்து கோழிக் கறியும் ஏலக்காயும் கலந்த வாசம் வந்தது. வியர் சுட்டிட்ட வயிற்றை மேலும் எரிப்பதாக அருளுக்குத் தோன்றியது. அவன் நிலக்கடலையில் சிலவற்றை எடுத்து வாயில் போட்டான்.

சிறிது நேரத்தில் மேலைத் துடைத்த வண்ணம் சாறத்தோடு தாமோதரன் குளியல் அறையை விட்டு

வெளியே வந்தார். இவர்களைக் கண்டதும் ஆச்சரியத்தை அதிகமாக வழிய விட்ட வண்ணம்,

"எப்ப வந்தநீங்களுங்கோ? நான் இப்ப எண்டு பார்த்துக் குளிக்கப் போயிட்டன். பெடியள் தாய்க்குச் சொல்லேல்லையா? அவ... மணம் வரும் எண்டு கதவைச் சாத்திப் போட்டுச் சமைக்கிறதால வெளியால என்ன நடக்குது எண்டு அவவுக்குத் தெரியாதுங்கோ. நீங்களும் வந்து பேசாமல் இருக்கிறீங்கள்." என்றார்.

"அது பருவாய் இல்லை. நீங்கள் உடுப்பை மாத்தீட்டு வாங்க கதைப்பம்." என்றார் "TS".

"ஓம் வாறன் இருங்கோ." என்று கூறிய வண்ணம் தங்களது படுக்கை அறைக்குள் புகுந்தார் அவர். அருளன் சொரூபனைப் பார்த்து,

"உந்தக் கோவில முடிகிற கதைப் பழக்கம் எந்த ஊர்?" என்றான்.

"ஏன்...? எங்கடை சிவா அண்ணையும் இப்படித்தான் இடைக்கிடை கதைக்கிறவர்." என்றான் நிமலன்.

"பார் அருள்... சிவாவைப் பழிவாங்குகிறதிலை இவன் எவ்வளவு அக்கறையா இருக்கிறான் எண்டு?" என்றான் சொரூபன்.

"நான் ஒண்டும் அவரைப் பழிவாங்க இல்லை. அவர் கதைக்கிற விதத்தைத்தான் சொன்னனான்." என்றான் நிமலன். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் அவசரம் அவனிடம்.

"அப்பிடிக் கதைக்கிறது தான் அவங்கடை தனித்தன்மை. இப்படியான விசயங்களை நாங்கள் காப்பாத்தப் பாடுபட வேணும். அது தான் எங்கடை மொழிக்கு வளத்தைச் சேர்க்கும். யாழ்ப்பாணத்துக்கு உள்ளேயே இப்படிப் பல விதமாகக் கதைக்கிறது போல யாழ்ப்பாணத்துக்கு வெளியாலும் பல விதமாக் கதைப்பினம். உதாரணமா மட்டக்களப்புத் தமிழைச் சொல்லலாம். இது எல்லாம் தமிழுக்குத் தனி அழகு. தமிழைக் கதைக்கிற எங்களுக்கும் தனி அழகு." என்றார் "TS".

தாமோதரன் வருவதற்கு முதலே சமையல் அறைக்குள் இருந்து மாலினி வெளியே வந்தாள். இன்னும் சமையல்

முடியாததால் மாலினி சிவப்புப் பூவும் பச்சை பூவும் கலந்த ரேசின்கவுண் அணிந்து இருந்தாள். சாப்பாட்டுடன் தானும் ஆவியில் அவிந்தது போல வியர்த்து வழியும் முகத்தோடு வெளியே வந்தாள். கதவைப் பூட்டியதால் அந்த அவியல் பிரார்த்தம் அவளுக்குக் கிடைத்து இருக்கிறது. இவர்கள் கதைத்தது அவளுக்கு எப்படியோ கேட்டிருக்க வேண்டும். கையில் தேநீர்த் தட்டைக் கொண்டு வந்து சோபா மேசையில் வைத்தாள்.

"எடுத்துக் குடியுங்கோ... நான் ஐஞ்சு நிமிசத்தில குளிச்சிட்டு வந்திடுவனுங்கோ. பிறகு சாப்பிடுவம்." என்றாள்.

"சரி... சரி... நீங்கள் குளிச்சிட்டு வாங்க." என்றார் "TS".

அவள் போகவும் தாமோதரன் வரவும் சரியாக இருந்தது. வந்த உடனேயே தேநீரை ஒருவரும் தொடாமல் இருப்பதைப் பார்த்துவிட்டு,

"ரீயை எடுத்துக் குடியுங்கோ." என்றார்.

"TS"சும் நிமலனும் எடுத்துக் குடித்தார்கள். சொரூபனுக்கும், அருளனுக்கும் தற்போது தேநீர் குடிக்கும் எண்ணம் இல்லை என்றாலும் எதுவும் செய்ய முடியாது எடுத்துப் பருகத் தொடங்கினார்கள். அவர்கள் தேநீர் பருகத் தொடங்கியதும் தாமோதரன் கதைக்கத் தொடங்கினார்.

அவரின் இரண்டு பற்கள் அணில் பற்கள் போல முன்னுக்குத் துருத்திக் கொண்டு நிற்கும். அவர் சிரித்தால் அவை அனுமன் போல் விஸ்வரூபம் எடுத்துப் பின்பு அவரது தடித்த இதழ்களுக்குப் பின்னே தனது விஸ்வரூபத்தை மறைத்துக் கொள்ளும். கதைக்கும் போது அடிக்கடி அவர் தனது பெரிய சொண்டுகளை ஈரமாக்கிக் கொள்வார். ஒரு முறை தனது சொண்டை ஈரப்படுத்திக் கொண்டு தாமோதரன் தனது திருவாயைத் திறந்தார்.

"என்ன...? இந்தியன் இறங்கினா எங்களுக்கு விடிவு வரும் எண்டு நம்பினமுங்கோ. இப்ப அவங்களும் சிங்களவற்றை பக்கம் சாஞ்சிட்டாங்கள் போல இருக்குதுங்கோ. எல்லாரும் பெடியளின்ரை பல்லைப் பிடிச்சுப் பார்க்க நினைக்கினம். ஆனாப் பெடியளைப் பற்றித் தெரியும் தானே? அவங்களை ஒருத்தரும் அசைக்க முடியாது. அவங்களோடை செருகினா இவை முறையா வாங்கிக் கட்டுவினம்.

இல்லையே சொல்லுங்கோ?" என்று "TS"சைப் பார்த்து வில்லங்கமான கேள்வியோடு முடித்தார்.

"பெடியள் கவனமாய் இந்தியாவோடை கொழுவாமல் போகிறது தான் புத்தி. இது முள்ளில விழுந்த பழைய சீலை மாதிரியான விவகாரம். விசுக்கா இழுக்காமல் நைசாத்தான் எடுக்க வேணும். அதே வேளை அவங்கள் எங்கடை இலட்சியத்தையும் விட்டுக் குடுக்க மாட்டாங்கள். அதிலை அவங்கள் எப்பவும் விடாப்பிடியா நிக்கிற ஆட்கள். தமிழருக்கு நல்ல காலம் இருந்தா அவங்களோடை கொழுவாமல் நல்ல முடிவு வரும் எண்டு நினைக்கிறன். பெடியள் அதுக்கு நிச்சயம் நிறையப் பாடுபடுவாங்கள். அவங்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் எண்டு அதில ஆழமான அறிவு இருக்கும். மதியூகம் சொல்ல நிறைய ஆட்கள் இருக்கினம் தானே? எல்லாரும் அவதானமாய் சிந்திச்சு செயற்பட்டால் எங்களுக்கு அவங்கள்தான் விடுதலையை வாங்கித் தருவாங்கள்." என்றார் "TS".

"ஒத்துத்தான் போக வேணும். ஆகவும் மட்டம் தட்டினா பெடியள் விடமாட்டாங்கள். இல்லையாவுங்கோ?" என்று "TS"சைப் பார்த்துத் தாமோதரன் கேட்டார்.

"அவங்களோடை கொழுவினா நிறைய அழிவு வரும். பெடியள் அனேகமாகக் கொழுவாமல் பிரச்சனையைத் தீர்த்து வைப்பாங்கள் எண்டு நினைக்கிறன்." என்றார் "TS" ஒரு விதமான நம்பிக்கையோடு.

"தலைவர் எங்கடை இனம். எதுக்கும் லேசில விட்டுக் குடுக்க மாட்டாருங்கோ. தான் செத்தாலும் தமிழரைக் கைவிட மாட்டார். அது மாத்திரம் தெரியும். இரத்தத்தைக் கண்டு பயப்பிட்டு ஓடுகிற ஆட்கள் இல்லை நாங்கள்." என்று தன்னை மறந்து பெருமையாகப் பேசினார் தாமோதரன். அவரது முகம் அதைச் சொல்லும் போது ஆயிரம் சூரியனின் ஒளியைத் திருடியதாகப் பிரகாசம் ஆகிற்று. மேட்டுக்குடிகளே தலைவர் பட்டம் கட்டிய காலம் போனதில் அவர் அகம் மகிழ்வது விளங்கியது. "TS"ஐப் பொறுத்தவரை எல்லோரும் சமன். எல்லோரும் ஆள வேண்டும் என்கின்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அருளுக்கும், சொரூபனுக்கும் மாற்றம் வருவதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அந்த மாற்றத்தை வைத்துக் கொண்டே தாங்கள் மற்றவர்களைவிட மேலானவர்கள்

என்று மார்பு தட்டும் மாறாட்டம் அவர்களுக்குப் பிடிப்பது இல்லை. தாமோதரன் அந்த ஆழியை அழுத்துவதான அந்தரிப்பில் அருள் நிமிர்ந்தான்.

"எந்த இனம்? எல்லாரும் தமிழ் இனம் தானே?" என்றான் அருள்.

"ஓ எல்லாரும் தமிழ் இனம் தான். நான் தலைவர் எங்கடை சாதி எண்டு சொல்ல வந்தனுங்கோ. வெள்ளாளர் எண்டு நடப்புக் காட்டின காலம் இப்ப மலையேறிப் போச்சுது தானே? இப்ப கரையார் எண்டு சொல்லுகிறதில நாங்கள் கவலைப்படத் தேவை இல்லை. அதை இப்ப நாங்கள் பெருமையாகத்தான் சொல்லுகிறம். இப்ப எல்லாரும் ஆளலாம் எண்டுகிற நிலை வந்திட்டுது. வர வைச்சாச்சுது." என்றார் தாமோதரன்.

"ஓ நீங்கள் பெருமைப் படலாம்தான்." என்றான் அருள். அவன் சொரூபனைப் பார்த்துக் கொண்டான்.

"நாங்கள் கரையார், வெள்ளாளர் எண்டு சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்ளுகிற விஷயம் இல்லை இது. சாதி எண்டதே ஒரு தேவை இல்லாத பிளவு. எங்கடை இனத்தைப் பலவீனப்படுத்துகிற முக்கிய காரணியே இந்தப் பிளவு தான். இதிலை பெருமைப் படுகிறதுக்கு எதுவும் இல்லை எண்டு நான் நினைக்கிறன். உண்மையில நாங்கள் அதுக்காக வெட்கப்பட வேணும். சொந்த இனத்திலேயே எவ்வளவு மனிதரைக் காலகாலமாய் கொடுமையாக அசிங்கப்படுத்தி இருக்கிறம் எண்டதை யோசிச்சு வெட்கப்பட வேணும்." என்றார் "TS".

"நீங்கள் சொல்லுகிறதும் சரிதான். கரையாருக்கு உள்ளேயே மீன் பிடிக்கிறவை, மீன் பிடிக்காதவை எண்டு வித்தியாசம் பார்ப்பினம். உண்மையில இதுகள் எல்லாம் தேவை இல்லாததுதான். எண்டாலும் உண்மையைச் சொல்லப் போனா பிறப்போடை ஒட்டின மாதிரி அவை அவையின்ர மனசை விட்டு விலகாமல் தொடர்ந்து வருகுதுங்கோ. இப்ப எங்களோடை சேர்ந்து நிக்கிறவை ஒரு காலத்தில எங்களுக்கு அதிகாரம் இல்லை எண்டாப் பழைய தடிப்பைக் காட்ட மாட்டினம் எண்டு நினைக்கிறியளா?" என்றார் தாமோதரன். அவரது கவலையை உள்வாங்கிக் கொண்டு,

"யாருக்குத் தெரியும்... முதல் இருந்த மாதிரிக் கொடுமைகள் இனி இருக்கப் போகிறது இல்லை எண்டு நான் நம்புகிறன். ஆனா... ஊரில உள்ள சனம் பிரச்சனை தீர்ந்தால் இதை எல்லாம் திரும்பவும் பார்க்கச் சந்தர்ப்பம் இருக்குது. இங்க இருக்கிறவைகூடக் கலியாணம் எண்டு வரேக்க அதைப் பார்க்கத்தான் செய்வினம். இது ஆயுதத்தால, வன்முறையால அல்லது அதிகாரத்தால தீர்க்கக்கூடிய பிரச்சனை இல்லை. மனித வளர்ச்சியால அழிஞ்சு போக வேண்டிய பிரச்சனை." என்றார் "TS".

"சாதி இல்லாமல் போக வேணும் எண்டா எல்லாரும் மேல் சாதியில கலியாணம் செய்ய வேணும், அவையோட சமபந்தி செய்ய வேணும் எண்டு இல்லாமல் தங்களைவிடக் குறைஞ்ச சாதியில கலியாணம் செய்தால், சமபந்தி செய்தால் அது இல்லாமல் போகிற வேகம் கூடும். ஒரு உதாரணத்துக்குத் தச்சன் வெள்ளாளர் வீட்டில கை நனைக்கோணும் எண்டதுக்கு முதல் நளவர் வீட்டில சாப்பிடத் துணிய வேணும். அப்ப தான் எங்கடை சமுதாயத்தில மாற்றம் வரும். எல்லாரும் மேல் சாதியிலதான் கை நனைக்க வேணும் எண்டு இருந்தா இது ஆயிரம் வருசம் ஆனாலும் இப்பிடியே இருக்கும். உந்தச் சாதி எதிர்ப்பு கதைக்கிறவை உதைப் பற்றி ஒரு நாளும் பெரிசாக் கதைக்கிறதே இல்லை. உண்மையான அக்கறை இருக்கிறவை, உண்மையான பிரச்சனைப் பற்றிக் கதைப்பினம். வெள்ளாளனைத் திட்டிக் கொண்டு இருந்தா கோவியனிட்டை இருக்கிற சாதித் தடிப்பு மாறுமா? புத்திமதி எல்லாருக்கும் பொதுவாய் இருக்க வேணும். அதைவிட இந்து மதத்தை இல்லாட்டிச் சைவத்தை பிழையா விளங்கிக் கொண்டு, அதைச் சாதிக்கு நெய் ஆக்கி இருக்கிறம். அதை ஒளிக்கிறது எண்டது எல்லாம் நடக்கிற காரியமே? கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை எண்டா எந்த முன்னேற்றமும் வரப் போகிறது இல்லை. இங்க சமபந்தி செய்கிறதால அங்க மாற்றம் வந்திட்டதாக் கனவு காணக் கூடாது. ஏன் பக்கத்தில இருக்கிற லண்டனிலேயே எந்த மாற்றமும் வர இல்லை. அந்த மாற்றம் ஊரில வரவேணும். அதுவும் ஆயுதத்தால அல்லது அச்சுறுத்தலால இல்லாமல் சுய விருப்பத்தோடை அது நடக்க வேணும். அப்ப தான் அது ஒரு நிரந்தரமான, உண்மையான மாற்றமாய் இருக்கும். சாதிய ஒரு சாதிக்காரன் மட்டும் பார்த்தா ஒளிச்சுப் போடலாம். எல்லாச் சாதிக்காரனும் சாதி பார்த்தா

சாதிக்குச் சாகா வரம்தான். தாழ்த்தப்பட்ட சாதிக்குச் சந்தர்ப்பம் கிடைச்சால் அதைப் பயன்படும் படியாகப் பாவிக்க வேணும். பழிவாங்கலா அதைப் பயன்படுத்தக் கூடாது. இது எங்கடை யாழ்ப்பாணத்துப் பிரச்சனையை வைச்சுச் சொல்லுகிறன். எல்லா இடத்துக்கும் சரியா வரும் எண்டு இல்லை. இதுக்கான மாற்றங்கள் தாழ்த்தப்பட்ட சாதியிலேயே முதல்ல தொடங்க வேணும். என்ன "TS" அண்ணை நான் சொல்லுகிறது சரியே?" என்றான் அருளன்.

"நீ சொல்லுகிறதைப் பற்றியும் நல்லா யோசிக்கத்தான் வேணும். இவ்வளவு நடந்த பிறகும் சாதி பார்க்கிறது படு பிற்போக்குத் தனம்." என்றார் "TS" .

"நான் அரசியல் கதைக்க விரும்புகிறது இல்லை. ஆனா... நீங்கள் சொல்லுகிற மாதிரி எங்கடை சமுதாயத்தில எதுவும் நடக்க இல்லை. யாரோ போராடுகினம். மக்கள் பார்வையாளராய் கூத்துப் பார்க்கினம். ஆண்டி குண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல் எண்டு சனங்கள் பிறகு போய் கொண்டே இருக்குங்கள். நான் சொல்லுகிறது சரியா?" என்றான் அருள்.

"உந்தச் சாதியையும், அரசியலையும் தவிர வேறை ஏதாவது கதைக்கலாமே? நாங்கள் இங்க வந்திட்டு நாட்டில மூர்க்கமா ஒளிஞ்சு இருக்கிற உதை எல்லாம் மாத்த முடியுமா என்ன?" என்றான் நிமலன்.

"இங்கை ஆவது மாறுதலா இருக்க வேணும். அது காலத்தின் கட்டாயம்." என்றார் "TS".

"என்ன தான் நீங்கள் சொன்னாலும் எங்களுக்கு ஒரு பெரிய பெருமை தான். இப்பிடி ஒரு உன்னதமான நிலை எங்கடை இனத்திற்கு இனி வராது." என்றார் தாமோதரன்.

"எனத்தைச் சொல்லுகிறியள்? சாதியைச் சொல்லுகிறியளா?" என்றான் சொரூபன்.

"தாமோதரன் அண்ணை இனம் எண்டு சாதியைத்தான் சொல்லுகிறார்." என்றான் நிமலன்.

"எல்லாம் ஒண்டுதான்." என்றார் தாமோதரன்.

மாலினி முழுகிவிட்டுத் தலையில் இருந்து தண்ணி சொட்டச் சொட்ட நேசிங்கவுணுடன் குளியல் அறையில்

இருந்து தங்கள் படுக்கை அறைக்குச் சென்றாள். இரண்டு பிள்ளை பெற்றாலும் ஐரோப்பிய வசதிக்கு அவளது உடம்பு மத மதப்பாய் இருப்பதாய் "TS"சிற்கு ஒரு கணம் தோன்றியது. பின்பு அவருக்குத் தான் அவளைப் பற்றி அப்படி எண்ணியதே அருவருப்பைத் தந்தது. காமத்திற்கு மாத்திரம் எந்த வேறுபாடும் தெரிவது இல்லை. ஆணிற்குப் பெண்ணும், பெண்ணிற்கு ஆணும் மட்டுமே காமத்திற்குத் தேவை என்பதைத் தவிர வேறு எந்தத் தடையும் இருப்பது இல்லை என "TS" எண்ணினார்.

"இப்ப மாலினி வந்திடுவா. நாங்கள் சாப்பிடலாமுங்கோ." என்று கூறிய தாமோதரன் அடுக்களையை நோக்கிச் சென்றார். பின்பு ஒரு பெரிய கண்ணாடிக் குவளை நிறையப் பழரசம் கரைத்து வந்தார். அலுமாரியில் இருந்த தட்டுக்களை எடுத்துச் சென்று நீரில் சிலாவிவிட்டு, கொண்டுவந்து மேசையில் வைத்தார். மின்கலத்தில் ஓடும் கார் ஒன்று பிள்ளைகளின் அறைக்குள் இருந்து கோலை நோக்கி ஓடி வந்தது. அறையின் வாசலில் வந்து நின்று அதைப் பார்த்து அவர்கள் சிரித்தார்கள். அவர்களைப் பார்த்து,

"தம்பிமாரே இங்க வாங்கோ." என்று நிமலன் கையை நீட்டினான். அவர்கள் விட்டால் போதும் என்று மீண்டும் அறைக்குள் புகுந்து கொண்டார்கள்.

"எங்கடை பக்கம் கோழிப்புக்கை செய்கிறது வழக்கமெங்கோ. உங்களுக்கு அது பிடிக்கமோ எண்டு தெரியாததால ஏதோ ரீவியில பார்த்துப் பழகின பிரியாணி செய்தவா." என்றார் தாமோதரன் சாப்பாட்டு மேசைகளில் கண்ணாடிக் குவளைகளை வைத்த வண்ணம்.

"கோழிப் புக்கையா? அது என்ன? எப்பிடி இருக்கும்?" என்றான் நிமலன் உடனடியாக ஆர்வத்தோடு.

"உங்களுக்கு அது தெரியாதா? அது புக்கை மாதிரித் தான். ஆனா... உறைப்பு, இறைச்சி எல்லாம் ஒண்டாப் போட்டுச் செய்கிறது. நல்லா இருக்கும்." என்றார் தாமோதரன்.

"ஒரு நாளைக்குச் சாப்பிட வேணும்." என்றான் நிமலன்.

"அதுக்கு என்ன? இன்னொரு நாளைக்குச் சாப்பிட வந்தால் செய்தாப் போச்சுதுங்கோ." என்றார் தாமோதரன்.

"இவன் இன்னொரு நாள் சாப்பாட்டுக்கு இப்பவே வழி பண்ணீட்டான்." என்று கூறிய வண்ணம் நிமலனைப் பார்த்தான் அருள்.

"நான் அப்பிடி ஒண்டும் குறுக்கு வழி பண்ண இல்லை. என்ரை விருப்பத்தைச் சொன்னன். அவ்வளவு தான்." என்றான் நிமலன்.

"உதைவிடப் பச்சையா வேறை எப்பிடிக் கேட்க முடியும்?" என்றான் அருளன்.

"ஏன் அவரை லோட்டி கட்டுகிறியள். அவர் தன்ரை ஆசையைச் சொன்னார். அது ஒரு சின்ன விஷயம்முங்கோ. ஒரு நாளைக்குச் செய்தால் எல்லாரும் சாப்பிடலாம்." என்றார் தாமோதரன்.

"எப்பிடியோ நிமலன் நினைச்சதைச் சாதிச்சுப் போட்டான்." என்றான் சொரூபன்.

"நான் இனி நிரந்தர மௌன விரதம்தான் பிடிக்க வேணும்." என்றான் நிமலன்.

மாலினி படுக்கை அறைக்குள் இருந்து வந்தாள். அவள் சேலை கட்டி வருவாள் என்று "TS" எதிர் பார்க்கவில்லை. மாலினி நல்ல மாநிறமானவள். வதனமோ சந்திர விம்பமோ என்கின்ற வதனம். நீட்டுக் கருப்புப் புடலங்காய்களாய் தொங்கும் கூந்தல். எடுப்பான மார்பு. இன்னும் இளமை தழும்பும் கோலம் அவள் உடல் எங்கும் மாற்றுக் குன்றாத தங்கமாக. தாமோதரனுக்கும் அவளுக்கும் எட்டாப் பொருத்தமான உருவ அமைப்பு. உருவங்களை விட மனதே ஒத்துப் போக வேண்டும் என்பது "TS"சிற்கும் விளங்கும். அவர்கள் மனம் ஒத்த தம்பதிகள் என்பதே அவர் கணிப்பு ஆகியது. சிரித்துக் கொண்டு வந்த மாலினி,

"ஐயோ... என்னால மினக்கெட்டுப் போயிட்டுதுங்கோ. நீங்கள் வந்து மேசையில இருங்க. நான் சாப்பாடு எடுத்துக் கொண்டு வாறன். நேரமாச்சுது சாப்பிடுவம்." என்று கூறியவள் அடுக்களையை நோக்கி வேகமாகச் சென்றாள்.

சென்றதும் மங்கை வென்றதாய் வேகமாகப் பிரியாணிச் சட்டியோடு புயல் போல வேகமாக வெளியே வந்தாள். அது ஒரு பத்து லீற்றர்ச் சட்டி. அதற்குள் பாரிய

சமையல் நடந்து இருக்கிறது. சட்டிக்கு முன்பு ஏலக்காய் வாசம் பாய்ந்து வந்து மூக்கைத் தாக்கியது. அதன் பின்னே கோழி இறைச்சி வாசம் வயிற்றைக் கிள்ளச் சம்பாவின் மணமும் சாதுவாய் நாசியை வருடிச் சென்றது. அத்தால் நிமலனின் வயிறு அக்கினிக் குளம்பாய் கொதிக்கத் தொடங்கியது. அந்த ஓம குண்டத்திற்குள் ஆகுதியாவதற்கு நிறையவே கொட்ட வேண்டும் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

திருமதி தாமோதரன் ஒவ்வொரு தட்டாக எடுத்துப் பிரியாணியைச் சுடச்சுடப் பரிமாறினாள். மஞ்சள் நிறத்தில் இருந்த சம்பா அரிசிக்குள் கயூவும், ஊதிய கறுப்பு கண்களாகக் கொடி முந்திரி வத்தலும், கோழி இறைச்சித் துண்டுகளும், அதன் கால்களும், அதன் குளம்பின் நனையலும், வெள்ளையாய் மிதந்த பாதி பாதி அவித்த முட்டைகளும், சோம்பிக் கிடந்த பசிச் சிங்கங்களை எழுந்து வயிற்றுக்குள் உரமாக கர்ச்சிக்க வைத்தன.

திருமதி தாமோதரன் பரிமாறத் திரு தாமோதரன் சென்று ஒரு சட்டியில் இருந்த தயிர் விட்டுச் செய்யப்பட்ட வெங்காயச் சம்பலைக் கொண்டு வந்து பரிமாறத் தொடங்கினார். பின்பு தானும் ஒரு கதிரையில் அமர்ந்தார்.

"பிள்ளையள் சாப்பிட வரேல்லையா?" என்று "TS" கேட்டார்.

"இல்லை... அவைக்கு இந்தக் குளம்பிலை கை வைக்கப் பிடிக்காதுங்கோ. அது தான் கோழி பொரிச்சு வெள்ளைச் சோறும் எடுத்து வைச்சிருக்கிறம். பிறகு அவைக்குக் குளைச்சுத் தீத்தலாம். இப்ப கொஞ்சத்திற்கு முந்தித்தான் பொல்சர் போட்டுக் குடுத்தம்." என்றார் திருமதி தாமோதரன்.

"நீங்கள் சாப்பிடேல்லையே? இருங்கோ... எல்லாரும் சேர்ந்தே சாப்பிடலாம்." என்றார் "TS".

"எனக்கு அது எல்லாம் சரிவராதுங்கோ. வந்தவைக்கு முதல்ல பரிமாறி அவையின்ரை அலுவலை முடிக்காமல் சாப்பிடுகிறது என்ரை பழக்கம் இல்லையுங்கோ." என்றாள் மாலினி.

"நோர்வேயில உதெல்லாம் பார்க்கக் கூடாது. நீங்கள் சாப்பிடாமல் பரிமாறுகிறதைப் பார்த்தாப் பெண்ணடிமை எண்டு சிலர் கோவிப்பாங்கள்." என்றார் "TS".

"அவை தங்கடை கலாச்சாரப்படி எது எண்டாலும் செய்யட்டுமுங்கோ. நாங்கள் இப்பிடித்தான். நாங்கள் சமைச்சதை எங்கடை கையால பரிமாறுகிறதில தான் அதுகின்ர சந்தோஷமே இருக்குது. நாங்கள் எல்லாத்தையும் அவையிட்டை இருந்து கொப்பி அடிக்க ஏலாதுதானே?" என்றாள் திருமதி தாமோதரன்.

"ஓ... நீங்கள் சொல்லுகிறதும் உண்மைதான்." என்றுவிட்டு "TS" சாப்பாட்டைக் கவனித்தார். திருமதி தாமோதரன் மறு முறையும் சாப்பாடு வைத்துக் கொண்டு வந்தாள். வேண்டாம், வேண்டாம் என்று மறுக்கவும் "TS"சிற்கும் வைத்து விட்டாள். "TS" அதைச் சாப்பிட்டு முடித்து எழும்பிய போது வியர்த்துப் போய்விட்டது.

சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் சென்று சோபாவில் அமர்ந்தார்கள். திருமதி தாமோதரன் மீண்டும் சமையல் அறைக்குள் சென்று விட்டாள். சிறிது நேரத்தில் "இங்க ஒருக்கா வாறீங்களே அப்பா?" என்று குரல் கொடுக்கத் திரு தாமோதரன் அங்கே சென்று விட்டார். நிமலன் மீண்டும் தொலைக்காட்சியில் சுவாரசியம் தேடி அலைவரிசைகளை மாற்றி மாற்றிப் பார்த்தான். அதைப் பொறுக்க முடியாத அருள்,

"நிமலன். ஒரு நேரத்தில ஒரு சனல்தான் பார்க்கலாம்." என்றான்.

"அது எனக்கு நல்லாய் தெரியும். நல்ல நிகழ்ச்சி ஏதும் போகுதோ எண்டு பார்க்கிறன்." என்றான் நிமலன்.

"உனக்கு முதல்ல எது நல்ல நிகழ்ச்சி எண்டதைச் சொல்லு பார்ப்பம்?" என்றான் சொரூபன். திருமதி தாமோதரனும் திரு தாமோதரனும் சமையல் அறையை விட்டு வெளியே வந்தார்கள். ஒரு தட்டில் ஐஸ்கிறீமிற்குள் கயூ, பழங்கள், நிலக்கடலை போன்றவற்றைக் கலந்து பஞ்சாமிர்தம் மாதிரியாக, வெள்ளை நிறத்தில் செய்து கொண்டு வந்தார்கள். திருமதி தாமோதரன் எல்லோருக்கும் பழச் சலாத்தைப் பரிமாறினாள். அதை வாங்கிச் சுவைக்கத் தொடங்கிய பின்பு கதை இற்றுப் போய்விட்டது. அது சுவையில் பஞ்சாமிர்தத்தையும் வென்று விட்டது என்பதைத் திருமதி தாமோதரன் அந்த மௌனத்தில் இருந்து அறிந்த பெருமையோடு மீண்டும்

சமையல் அறையை நோக்கிச் சென்றாள். அதன் பின்பு திரு தாமோதரன்,

"ஆருக்கும் கோப்பி இல்லாட்டி ரீ வேணுமா?" என்றார்.

"எங்களை விட்டாக் காணும். இதுக்கு மேல சாப்பிட்டா நீங்கள் எங்களைத் தூக்கிக் கொண்டேத்தான் வீட்டில விடவேணும்." என்றான் நிமலன்.

"அப்படி என்னத்தைச் சாப்பிட்டியள்? இன்னும் ஏராளமாய் பிரியாணி மிச்சம் இருக்குது." என்றார் திரு தாமோதரன்.

"அது பிரச்சனை இல்லை... பார்சல் கட்டித் தந்தியள் எண்டா இரவுச் சாப்பாடுக்கு உதவும்." என்றான் நிமலன்.

"இந்த வாய் ஒரு நாளும் சும்மா இருக்காது." என்றான் அருள் நிமலனைப் பார்த்து.

*

சாப்பிட்ட பின்பு சில மணித்தியாலம் அங்கு இருந்து கதைத்தாலும் வெளியே வந்து சிறிது தூரம் நடந்த பின்புதான் வயிற்றில் குடல் பிரண்டதான நிம்மதி "TS"சிற்கு வந்தது. நிமலன் எவ்வளவு தான் நெருக்கமாக "TS"சோடு பழகுவது போல் இருந்தாலும் உண்மையில் அவரை, அவரது அந்தரங்கங்களைத் தன்னால் நெருங்க முடியவில்லை என்பது அவனுக்கு விளங்கியது. மனதில் தோன்றுவதைக் கேட்டுவிட வேண்டும் என்கின்ற அவசரம் எப்போதும் அவனை ஆட்டிப் படைக்கும். இன்று நடந்த சம்பாசனைகளைக் கேட்ட அவனிடம் சில கேள்விகள் எழுந்தன. அதைக் கேட்கலாமா? அது நாகரிகமா? என்கின்ற தயக்கம் அவனிடம். தயக்கம் இருந்தாலும் கேட்காது விட்டால் மண்டை வெடித்துவிடும் என்கின்ற பொறுக்க முடியாத அவதியின் அந்தரிப்பு. குளிர் இப்போது இன்னும் அதிகமாகிவிட்டது. அவர்களின் வீட்டிற்குள் இருந்த வெக்கைக்குச் சிறிது நேரம் குளிர் இதம் தந்தாலும் விரைவாகவே இனி எப்போது மீண்டும் வெக்கைக்குள் போவது என்கின்ற அங்கலாயிப்பு மனதில் மீண்டும் எழுந்து விட்டது. சிறிது நேரம் அனைவரும் அமைதியாக நடந்து வந்ததைக் கலைப்பது போல அருள்,

"நல்ல சாப்பாடு." என்றான்.

"நான் பாம்பு மாதிரித்தான் ஒரு பிடி பிடிச்சனான்." என்றான் நிமலன்.

"அது எங்களுக்குச் சொல்லியே விளங்க வேணும்?" என்றான் சொரூபன்.

"ஒரு கதைக்குச் சொல்ல விடமாட்டியளே?" என்று நிமலன் அலுத்துக் கொண்டான்.

"நானும் அப்பிடித்தான் நினைச்சன் அருள். இப்ப நீயே சொல்லீட்டா. கஸ்ரப்பட்டுச் சமைச்சு இருப்பினம்." என்றார் "TS".

"ஒரு நாளைக்கு நாங்கள் கூப்பிட்டுச் சாப்பாடு குடுத்தாப் போச்சுது." என்றான் அருள்.

"அதுக்கு ஒண்டும் அவசரம் இல்லை. அவை அப்பிடி எதிர்பார்க்க மாட்டினம். குடும்பம் ஆகவிட்டிக் குடுக்கலாம்." என்றார் "TS".

"அதுவும் சரிதான்." என்றான் அருள்.

"நான் ஒரு விஷயம் கேட்க வேணும் எண்டு நினைக்கிறன். கேட்கலாமோ "TS" அண்ணை?" என்றான் நிமலன்.

"TS" பதில் சொல்ல முதலே திரும்பவும் கேள்வி கேட்டான்.

"நீங்கள் தெல்லிப்பளையில எந்த இடம்?"

"ஏன் உனக்கு இப்ப இந்த ஆராய்ச்சி?" என்றார் "TS".

"அவனின்ரை ஐடியா எப்பிடிப் போகுது எண்டு எனக்கு விளங்குது." என்றான் அருள்.

"சொல்லுங்க அண்ணை... நீங்கள் எந்தக் குறிச்சி?"

"நாங்கள் உண்மையா அளவெட்டி மேற்கெடா?"

"யாற்றை வீட்டுக்குக் கிட்டவா...?" என்றான் நிமலன்.

"அட நீ விடமாட்டியா?"

"இல்லைச் சும்மா சொல்லுங்க அண்ணை."

"சோமசுந்தரப்பிள்ளை மாஸ்ரர் வீட்டுக்குக் கிட்ட. அவர் எங்களுக்குப் பெரியப்பா."

"உண்மையாகவா? அவர் எங்களுக்கும் தூரத்துச் சொந்தம் எண்டு அம்மா சொல்லுகிறவா. அருள் அண்ணையின்ரையும், சொரூபன் அண்ணையின்ரையும்

சொந்தக்காரரை எனக்குத் தெரியும். இப்பிடி எல்லாரும் ஒரே குட்டையில ஊறின மட்டையளா இருப்பம் எண்டு நான் எதிர்பார்க்க இல்லை. சிவா அண்ணையும் தாமோதரன் அண்ணையும் ஒரே ஆட்கள் என்ன?" என்றான் நிமலன்.

"இவனுக்கு அடி போடுங்க "TS" அண்ணை." என்றான் அருள்.

"என்னத்துக்கு அடி போடுவியள்? தாமோதரன் அண்ணையே பெருமையாகக் கதைக்கிறார். அதுவும் வெளிப்படையாகவே கதைக்கிறார். நான் சும்மா கதைக்கிறதுக்கு ஏன் பயப்பிட வேணும்? எனக்கு ஒண்டும் சாதி வெறி இல்லை. கௌரவப் பிரச்சனையும் இல்லை. சாதிப் பிரச்சனை பற்றிக் கதைக்க வேணும் எண்டா எடுத்ததுக்கு எல்லாம் வெள்ளாளரை அதுக்குக் காரணமாச் சாட்டி இந்தக் காலத்திலும் ஒப்பாரி வைக்கக் கூடாது. நான் அதுக்கு ஒத்துப் போகிறவன் இல்லை. காலம் மாறிப் போச்சுது. முதல்ல தாங்கள் திருந்தினா உலகம் தானாத் திருந்தும் எண்டுகிறது அவைக்கு விளங்க வேணும். அவைக்காக நாங்கள் போராட இயலாது... அவை தான் அவைக்குள்ள முதல்ல போராட வேணும். நெடுக எங்களைக் குறை சொல்லுகிறதால அவையின்ர பிரச்சனை தீரப் போகிறது இல்லை. அழுக்கைத் தங்களுக்க வைச்சுக் கொண்டு யாரையும் குறை சொன்னா நாத்தம் போகுமா? என்னச் சின்ன பெடியன் எண்டு நினைக்காதீங்க... எனக்கும் சிந்திக்கத் தெரியும். ஒரு நாளைக்கு என்னைப் பார்த்து எல்லாரும் வாயில கை வைப்பியள்." என்றான்.

"சீ... நாங்கள் இப்பவே வாயில கை வைக்கிறம். எண்டாலும் நீ உதை நெடுகச் சொல்லாத. அதோடை வாய மட்டும் இல்லை நவ துவாரங்களையும் பொத்திக் கொள்ளுகிறம்... எங்களை இந்தப் பிரச்சனையில இருந்து விடு தம்பி..." என்றான் சொரூபன்.

"நிமலன்ரை கோபத்திலையும் அர்த்தமே இல்லாமல் இல்லை. அநியாயம் எண்டு கோவப்படுகிறவன் நியாயவானா இருக்க வேணும். அதுவரைக்கும் அவன் அநியாயம் எண்டு கோவப்பட முடியாது. ஈழத்தில தங்கடை தங்கடை சாதியைப் பற்றி நினைச்சுப் பெருமைபடுகிறது வெள்ளாளரும், பிராமணரும் மட்டும் செய்கிற காரியம் இல்லை. அதால... முதல்ல மாற்றங்கள்

அடிமட்டத்தில இருந்து வரவேணும் எண்டுகிறதிலை பிழை இருக்க முடியாது. சாதிப் பிரச்சனைக்கு உண்மையாகவே ஒரு முடிவு கட்ட வேணும் எண்டு நினைக்கிறவனுக்குத் தெரியும் உது வெள்ளாளரை விமர்சிக்கிறதால மட்டும் ஏற்படுகிற புரட்சி இல்லை எண்டு. அப்பிடியான விமர்சனம் அதற்கு எதிரான வேலையைத்தான் செய்யும். இது அடி போட்டுத் தீர்க்கிற பிரச்சனையும் இல்லை. அட... மற்றவன் எல்லாம் மாறீட்டான் நாங்கள் தனிச்சு நிக்கிறமே? எண்டு வெள்ளாளர் எண்ணுகிற நிலை வரோணும். அந்த நிலை வராமல் தலித்துக்கள் தங்களுக்கு உள்ள பார்த்துக் கொள்ளுகினம். அது வெளிநாட்டுக்கு வந்தும் எல்லாரும் சாதித் தடிப்பு பார்த்துக் கொண்டு திரிகிற நிலையா இருக்குது." என்றார் "TS".

"தாமோதரன்ரை கதையை விடுங்க அண்ணை. அவற்றை கதையைப் பார்க்கவே தெரியுது தானே... அவர் பெரிசா உலகம் அடிபட்டு இருக்க மாட்டார் எண்டு அப்பட்டமாய் விளங்குது தானே? தாங்களும், தங்களுடை சாதி சனமும், அவை செய்கிற தொழிலும் எண்டு வாழ்ந்த மனிசர்கள். அவை அப்பிடித் தானே இருப்பினம்?" என்றான் அருளன்.

"அது உண்மை. அதே நேரம் மாற்றங்கள் வரவேண்டியதும் அங்க இருந்து தான். மாற்றங்களைச் சண்டித்தனத்தால கொண்டு வரமுடியாது. தங்களைவிடக் கீழ இறங்கிப் போகிற சாணக்கியத்திலதான் அதைக் கெதியாக் கொண்டுவர முடியும். அந்தளவு துணிவும், தியாகமும் இங்க வந்துகூட எத்தினை பேருக்கு இருக்கும் எண்டது கேள்விக்குறிதான். அதிலும் தலித்துகள் எண்டுகிறவையில எத்தினை பேருக்கு இருக்குது? இங்க வாழுகிற இனி வருங்காலங்களில அந்த மாற்றங்களை நாங்கள் சில வேளை பார்க்கலாம் எண்டு நம்புவம்."

14 "TS"சின் பயணம்

உண்மை, பொய், சரி, பிழை, நீதி, அநீதி, சுத்தம், அசுத்தம், தர்மம், அதர்மம் என்பவை எல்லாம் ஒன்றோடு ஒன்றைச் சம்பந்தப் படுத்திப் பார்ப்பதால் மனித மனதில் ஏற்படும் விம்பம். நீதி என்கின்ற ஒன்றோ அநீதி என்கின்ற ஒன்றோ உலகத்தில் நிலையாக இருந்ததும் இல்லை. இருக்கப் போவதும் இல்லை. நாம் ஒரு நிகழ்வை அதற்கு

எதிரான வேற்று நிகழ்வோடு ஒப்பிட்டு நோக்குவது வழமை. அந்த ஒப்பீட்டு நோக்கல் எந்த மனிதரால் செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்து பாத்திரத்திற்குள் விடப்படும் நீராக அது தனது வடிவத்தைப் பெற்றுக் கொள்கிறது. துரியோதனனின் நீதி கண்ணனின் அநீதி. கண்ணனின் அநீதி துரியோதனனின் நீதி. காலம் அண்டத்தில் நிச்சயிக்கப்படும் புள்ளியின் அசைவுகளோடு சம்பந்தப்பட்டது. மனித ஜீவன்களின் ஒவ்வொரு செயலும் காலத்தோடு சம்பந்தப்பட்டது. நீதி, அநீதி என்பது காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், மனிதனுக்கு மனிதன் தனது உருவத்தை மாற்றிக் கொள்கிறது. கொலைகள் நீதியாக ஒரு மனிதனால், ஒரு இனத்தால் பார்க்கப்படும் போது அதுவே குரூரமாக, மனிதத்தை மிதிக்கும் செயலாக மற்றவர்களால் பார்க்கப் படுகிறது. காட்சி ஒன்றாக இருந்தாலும் பார்ப்பவனைப் பொறுத்து அவன் உணர்ச்சி, நீதி, அநீதி என்கின்ற தன்மை மாறுகிறது என்பது "TS"சின் எண்ணம்.

நாட்டில் இருக்க முடியாது நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கும், நாட்டுப் பிரச்சனையை விற்றாவது வயிறு வளர்க்கலாம் என்று வந்தவர்களுக்கும், சமதர்ம நோக்கோடு, மனிதாபிமான முறையில் வதிவிடம் தருவதாய் நோர்வே அரசு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது. அத்தால் சிறிது காலத்தில் இலங்கைப் பிரச்சனை முடிந்தால் அகதிகளைச் சொந்த நாட்டுக்கு அனுப்பிவிடலாம் என்கின்ற நப்பாசை நோர்வே அரசிற்கு இருந்தது. அரசின் நீண்டகால நோக்கைவிட "TS"சின் அப்போதைய தேவைக்கு அதிக அவசரம். அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு அன்று "TS" ஒஸ்லோவில் இருக்கும் பெரிய காவல் நிலையத்திற்குச் சென்றார். அவர்கள் அவருக்கு நீல நிறத்தில் ஒரு கடவுச் சீட்டைக் கொடுத்தார்கள். சுவர்க்கத்திற்கு வந்தவர்களுக்கு மேலும் சுதந்திரம் கொடுத்ததாக அந்தக் கடவுச்சீட்டு. நிரந்தர வதிவுக்கு அனுமதி கிடைத்ததோடு வேலையும் இருந்ததால் "TS" தனது குடும்பத்தை எடுக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்கான அலுவல் ஆண்டுத் தொடக்கத்திலேயே அவரால் தொடங்கப் பட்டது. இலங்கைக்கே சென்று குடும்பத்தை அழைத்துவர வேண்டும் என்கின்ற அவரது அடங்காத ஆசையை அந்த நீலக் கடவுச்சீட்டு தடை செய்தது. அந்தக் கடவுச்சீட்டில் இலங்கைத் தவிர மற்றைய நாடுகளுக்கே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. குடும்பத்தை எடுப்பதற்கு

இடையில் வரும் கோடைக்கால விடுமுறையில் ஐரோப்பிய நாடு ஒன்றிற்காவது போய்விட்டு வரவேண்டும் என்பது அவருடைய நீண்ட நாள் அவாவாய் கனன்றது.

"TS"சின் குடும்பம் வந்தால் வீட்டில் வேறு யாரும் தங்குவதற்கு வசதி இருக்காது என்பதை "TS" பெடியளிடம் கதையோடு கதையாகப் போட்டு வைத்தார். அதன் பின்பு அருளுக்கும் நீலக் கடவுச்சீட்டு கிடைத்துவிட அவன் வீடு பார்க்கத் தொடங்கினான். நிமலன் திடீர் ஞானம் பெற்றவனாகப் "பொல்கை ஸ்கூல்" என்னும் இந்த நாட்டு மொழி, கலாச்சாரத்தைக் கற்றுக் கொள்ளும் பாடசாலைக்குப் போவதற்குத் தன்னைத் தயார்படுத்தத் தொடங்கினான். சொரூபனும், வடக்கில் இருந்து தற்போது வந்த ரூபனும் "TS" போகச் சொல்லும் வரையும் காத்து இருப்போம் என்று அவரின் வீட்டில் மெத்தனமாய் இருந்தார்கள்.

கோடைக்காலம் விரைந்து வந்ததால் கொட்டிய பனி கானல் நீராகக் கரைந்து அதற்கு வழிவிட்டது. கோடைக்கால விடுமுறைக்கு முன்பு தனது குடும்பத்தை இலங்கையில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் தங்களது விண்ணப்பத்தைக் கொடுத்துவிடும்படி "TS" அவர்களுக்கு அறிவுறுத்தலும், ஆவணங்களும் அனுப்பி வைத்தார். அங்கு ஆமை வேகத்தில் அலுவல் நடப்பதாக "TS" பொறுமை இழந்து இங்கே தவித்தார்.

கோடைக் காலத்தில் பணமும் தந்து, விடுமுறையும் தரும் இந்த நாட்டு வேலைச் சலுகை எல்லோருக்கும் வியப்பைத் தந்தது. விருப்பமானது. "TS" தான் திட்டமிட்டு வைத்து இருந்தபடி ‘பிறேமன்’ என்கின்ற ஜேர்மன் நகருக்குப் பயணமானார். "TS"சின் நண்பனைப் பொஸ் என்றே அழைப்பது உண்டு. செபஸ்ரியன் ஜீவநாதன் அவனுடைய முழுப் பெயர். எதனால் அவனுக்கு பொஸ் என்கின்ற பெயர் வந்தது என்பது அவருக்குத் தெரியாது. அவன் ரெலா என்கின்ற சிறிய இயக்கம் ஒன்றில் இருந்த போது கிடைத்த பெயர் அது என்கின்ற அரைகுறைத் தகவல் அவருக்குத் தெரியும். பொஸ் "TS"சோடு மத்திய கிழக்கில் வேலை செய்து வந்தான். மத்திய கிழக்கில் இருந்து எப்படியோ ஜேர்மனிக்குள் நுழைந்து விட்டான். இனி இழுத்து அடித்து அங்கீகரிப்பார்கள் என்பது ஊரறிந்த விஷயம். இல்லா விட்டால் வேறு நாட்டிற்கு ஓட வேண்டி இருக்கும் என்கின்ற பயமும் உண்டு.

பொஸ்சைப் பார்த்தால் எல்லோருக்கும் பயம் வரும். அவன் ஆறரை அடி உயரம் இருப்பான். தலைமுடி மண்புக முடியாத அடர்த்தியில் முறுக்கிச் சுருண்டு கிடக்கும். எண்ணை வழுவழுப்பான கறுப்பான தேகம். இலந்தைப் பழம் போல் கோபத்தைக் கக்குவதான அவன் சிவந்த கண்கள். கராத்தே கற்றிருந்த அவன் எப்போதும் பயிற்சி செய்வதில் குறியாக இருப்பான். கேளிக்கை என்று வந்துவிட்டால் குடிக்கும், சாப்பாட்டிற்கும் அவனை அடிக்க முடியாது. இந்தப் பெரிய உருவத்திற்குப் பின்னே அவனிடம் இருக்கும் மென்மையான சுபாவமே "TS"சிற்கு மிகவும் பிடித்தது. அவனோடு போகும் போது பத்து ஆனைகள் பாதுகாப்பிற்கு வருவதான நம்பிக்கை "TS"சிடம் வந்துவிடும்.

பொஸ் தான் பிறேமனில் குடியிருப்பதாக "TS"சிற்குக் கூறி இருந்தான். நோர்வேயில் அகதிகளுக்கு அங்கே போகாதே இங்கே போகாதே என்கின்ற வரையறை எதுவும் கிடையாது. "TS" ‘கம்வேர்க்கில்’ போய் இறங்கிய போது வளவளப்பான அந்த நகரின் அவசர இயக்கம் அவருக்கு மலைப்பைத் தந்தது. திரும்பி வரும் போது அந்த நகரின் இரகசியங்களைப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டார். அந்த நகரத்தில் மேலும் கீழுமாக ஓடிய புகையிரதங்கள் தொழில் மயத்தின் உச்ச இராகம் பாடின. கம்வேர்க்கில் இருந்து "TS" சுயமாகவே பிறேமன் போக வேண்டியது ஆகிற்று. ஒரு நகரத்தில் இருக்கும் அகதிகள் மற்றைய நகரத்திற்குப் போவதற்கு அங்கே தடை விதித்து இருந்தார்கள். ஆரியப் போராட்டம் அழிந்தாலும் அதன் சுவடுகள் இன்னும் பலகாலம் அழியாது என்பதை அது ஞாபகப்படுத்துவதாய் "TS" உணர்ந்தார்.

ஜேர்மானியர்களின் வீதி அமைப்புக்கள் நோர்வேஜிர்களைப் பிச்சைக்காரர்கள் போல அவரை எண்ண வைத்தது. இந்தத் தொழில்நுட்ப வீரியத்திலேயே இரண்டாம் உலகமகா யுத்தம் நடந்தது என்பது "TS"சிற்கு விளங்கியது. பொஸ் கம்போர்க்கிற்கு வரமுடியாது அகதிகளுக்கான நவீன கேத்தோக்களின் சுவர்கள் அவர்களுக்கு வழிவிட மறுத்துவிட்டன.

பொஸ் பிறேமன் வந்தான். அங்கிருந்து மீண்டும் புகையிரதம் எடுத்து அவர்கள் ஊருக்குச் சென்றார்கள்.

அவர்கள் ஊரில் நகர இரைச்சலும், சிமேந்துக் காடும் முடிந்து எங்கும் பச்சைக் கம்பளமாய் விரிந்த வயல்களும், அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமான குடிமனைகளும் அழகு தந்தன. அந்த பரந்த வெளியில் ஒரு சிறிய நகரம் போன்று தேவையான வசதிகள் அடங்கிய கடைத் தெருக்கள் இருந்தன. தண்டவாளத்தில் ஓடும் இரும்பு வண்டிகளின் வருகையை நம்பி வாழும் இடங்கள் அவை. அல்லது போக்குவரத்திற்குச் சொந்தமாக வண்டி வைத்திருக்க வேண்டும். அனேகர் சொந்தமாகவே வண்டி வைத்து இருக்கிறார்கள். யுத்தம் முடிந்த சில காலத்தில் இருந்தே அவர்களுக்கு அந்த வசதி வந்து விட்டது. யுத்தத்திற்கு முன்னைய காலத்தில் கொஞ்சமாவது பசையுள்ளவர்கள் மட்டுமே வண்டி வைத்து இருந்தார்களாம். இப்போது யார் விரும்பினாலும் வண்டி வைத்து இருக்கலாம். காப்புறுதியையும், வீதி வரியையும் ஒழுங்காகக் கட்டினால் சரி என்கின்ற நிலை.

வீட்டிற்குப் போக முதல் அங்கு இருந்த கடை ஒன்றில் பொஸ் வலண்டையின் ஒரு போத்தலும், கோழியும் வாங்கி வந்தான். இருவரும் கதைத்த வண்ணம் தங்கள் குடியிருப்பிற்குச் சென்றார்கள். நாளை மறுநாள் தங்கள் குடியிருப்பில் ஒரு விருந்து நடைபெறும் என்றும், அப்போது பலரைச் சந்திக்கலாம் என்றும் "TS"சிற்குப் பொஸ் இடையில் கூறினான்.

வீடு தரையோடு ஒட்டிய ஒரே தளமாக விரிந்திற்று. ஐரோப்பிய வீடுகளுக்குள் இருக்கும் வசதிக்கு அங்கு எந்தக் குறைவும் இருக்கவில்லை. வீட்டிற்குள் ஈழத்து உணவின் மிச்ச வாசனை ஒட்டி இருப்பதை "TS"சால் உணர முடிந்தது. சரக்குப் பொருட்கள், தூள் போன்றவற்றைப் பிறேமனில் இருக்கும் ஒரு துருக்கிக் கடையில் இருந்து வாங்கி வருவதாகப் பொஸ் கூறியிருந்தது "TS"சிற்கு ஞாபகம் வந்தது.

வீட்டிற்குள் இன்னும் மூன்று தமிழ் இளைஞர்கள் தொலைக்காட்சியில் தொலைந்து போய் இருந்தார்கள். இவர்கள் வருவது தெரியாமலே பச்சை பச்சையான படத்தைப் பார்க்கும் பாவம் செய்தார்கள். இவர்களைக் கண்டவுடன் அவசரமாக அதை நிறுத்திவிட்டு எழுந்து வந்து தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள். அதில் தேவன் என்பவனும் பொஸ்சைப் போல் தடியனாய் இருந்தாலும் மார்பு பெண்களைப் போல் அவனது ரீசேட்டையும் மீறி ஆடியது. பலூன் போல ஊதி இருக்கும்

அவனின் நடையில் சிறிய பூகம்பங்கள் அடிக்கடி வீட்டிற்குள் வந்து போயின. நல்ல பழுத்த மாம்பழ நிறமாய் இருந்த அவனின் சொந்த ஊர் மயிலிட்டி என்பதை "TS" அறிந்து கொண்டார். மற்றவன் முருங்கைக்காய் போல மெல்லீசாகச், சுருட்டை முடியோடும், பொது நிறத்திலும் நின்றான். அவனுக்கு சத்தியசீலன் என்கின்ற அழகான பெயர். அவனது சொந்த ஊர் புங்குடுதீவு என்பதும் தெரியவந்தது. மூன்றாவது நபர் சிறிய பெடியன் போன்ற தோற்றத்தோடு நின்றான். அவன் பெயர் பாபு. அவன் மருதனாமடத்தைச் சார்ந்தவன்.

அவர்களின் அறிமுகம் முடிந்த பின்பு நோர்வே எப்படி இருக்கும் என்கின்ற விசாரணை, தாயகத்தில் என்ன நடக்கிறது என்று தாம் அறிந்தது பற்றிய தகவல்கள் என்று கதை போயிற்று.

அன்று "TS"சை வற்புறுத்தி வார்த்துக் கொடுத்தார்கள். இளநிலை தாண்டிக் குடும்பஸ்தன் ஆகாமல் இருந்த அந்த இளைஞர்களுக்கு அவர்களது வாழ்வு சொற்கமும், சோகமாய் போவது வலண்டையினில் கலந்து வெளியே சோகக் கதையாக வந்தது. "TS" மாம்பழத்தோடு நிற்பவர்களுக்கே இவ்வளவு கவலையா என்று ஆச்சரியப்பட்டார். தான் வைத்திருக்கும் பலாப்பழத்தை பற்றி அவர் மறந்தும் மூச்சு விடுவது இல்லை. அப்படி அதைப் பற்றி மூச்சுவிட்டால் எத்தினை நபர்களால் அதை விளங்கிக் கொள்ள முடியும் என்பது பற்றி அவருக்குக் குழப்பமாய் இருந்தது. தனது குழப்பத்தை அவர் தன்னோடு அடக்கம் செய்ய விரும்பினார். எரிகுழம்பை எரிமலை எத்தினைக் காலம் தாங்கி வைத்திருக்கும்? என்றோ ஒரு நாள் அது அதை வெளியே கக்க வேண்டும்.

மனிதனுக்குக் குழப்பம் வரும் போது பயம் மேல் ஓங்கி நிற்கிறது. அல்லது பயம் ஏற்பட்டாலும் அவன் குழப்பம் அடைகிறான். பயத்தில் மௌனம், கவலை, நடுக்கம், ஆத்திரம், வன்மம் பிறக்கிறது. அந்த மௌனக் குமுறலில் "TS"சிற்கு யோசனைகள் பீரிட்டன. "TS" மௌனத்தில் உறையாது, பயத்தில் தொலையாது, அவரைச் சுற்றி இருந்தவர்கள் கலகலப்பாய் கதைத்து, இறுக்கத்தைப் போக்கினர்.

கோழிப் பொரியல் உடனான வலண்டையின் முடிய, இறைச்சிக் கறியும், தயிர் சொதியும், பசுமதி அரிசியிலான உதிர்ந்த இடியப்பம் போன்ற சோறுமாக மத்தியானச்

சாப்பாடு பரிமாறப்பட்டது. அந்தச் சாப்பாட்டில் பொஸ் வைத்திருந்த தயிர்ச் சொதி வித்தியாசமான சுவையாக "TS"சிற்கு பிடித்துக் கொண்டது. "TS" அதற்கு முன்பு தேங்காய் பாலில் வைத்த சொதியையே சுவைத்து இருக்கிறார். தயிரில் வைத்த சொதியை அங்கேதான் முதலில் சுவைத்தார். பொஸ் பச்சைமிளகாய், வெங்காயம், கடுகு, சீரகம் போட்டுத் தாளித்து பின்பு மஞ்சளும் தயிரும் விட்டுச் சுவையான சொதி செய்திருந்தான். அது "TS"சிற்கு மிகவும் வித்தியாசமான சுவையாகத் தோன்றியது.

அரிசி மயக்கம்… மப்பு மயக்கம்... கடைசியில் என்ன கதைத்தது, ஏது கதைத்தது என்பது ஞாபகம் இல்லாமல் உறங்கிப் போனது மீண்டும் விழித்த போதே காட்சிகள் தொலைந்த கடந்த பொழுதாக விளங்கியது. அது விளங்கிய போது "TS"சிற்குத் தன் மீதே கோபம் வந்தது. இனி இப்படி எல்லைகளை மீறக் கூடாது என்று மனதில் சபதம் எடுத்தார்.

அடுத்த நாள் மத்தியானச் சாப்பாட்டிற்கு வெறிக்குக் குடிக்காமல் பசிக்குக் குடிப்பதாய் அளவு குறைந்து இருந்தது. பின்னேரம் விருந்து உபசாரத்தில் மிச்சத்தை வாசிக்கலாம் என்று சத்தியசீலன் தனது அவிப்பிராயத்தைக் கூறினான். "TS"சிற்கும் அந்த விருந்தில் கலந்து கொள்வதில் ஆர்வமாக இருந்தது. சாப்பிட்ட பின்பு அந்த இராத்திரிக்குச் சாட்சி இல்லை என்கின்ற படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டு இருந்ததில் நேரம் போய்விட்டது. படம் முடிந்ததும் "TS"சை கூட்டிக் கொண்டு பொஸ் வெளியே கிளம்பினான்.

ஒரு தொழில்மய நாட்டில் இருந்தாலும் வயல்களும், மரங்களும் "TS"சிற்கு ஒருவித பரவசத்தைத் தந்தன. நடந்து போகும் போது தங்களுக்குத் தொடர்ந்து இங்கு வேலை இல்லை என்றும் இடைக்கிடை எப்போதாவது தான் வேலை கிடைக்கும் என்றும் குறைபட்டான்.

பொழுது சாயும் போது இறைச்சி வாட்டுவதற்காக அடுப்பு (கிறில்) மூட்டினார்கள். அந்தக் குடியிருப்பில் உள்ளவர்கள் எல்லோரும் விருந்திற்கு வந்து விட்டார்கள். வந்தவர்களுக்கு வியரும், வியர் விருப்பம் இல்லாதவர்களுக்கு வயினும் பருகுவதற்குக் கொடுத்தார்கள். பொஸ்சும், அவனது நண்பர்களும், "TS"சும் வியர் வாங்கிக் குடித்தார்கள். சத்தியசீலன் வலண்டையினைக் கொக்கில் கலந்து எடுத்து

வந்திருந்தான். இடைக்கிடை அதையும் பரிமாறிக் கொண்டார்கள். பலவகை இறைச்சி வாட்டப்பட்டது. அந்தக் குடியிருப்பில் உள்ள ஒருவர் கிற்ரார் வாசிக்க 'டொச்சில்' ஒரு பெண் பாடினாள். அருகில் இருந்து கேட்பதற்கு "TS"சிற்கு அது அற்புதமாய் இனித்தது. குடித்த மது மூளையில் ஏறி அதன் இயக்கத்தை மெதுவாக்க, பாடப்படும் ஒவ்வொரு சொல்லும் அற்புதமாகத் தேவலோகத்து மயக்கம் தருவதாய் "TS" பூரித்தார். அந்த இசையை அடுத்த பலரும் நடனம் ஆடினார்கள்.

சத்தியசீலனும், வாபுவும் "TS"சை நடனமாட வருமாறு அழைத்தார்கள். "TS" மரியாதையாக மறுத்துவிட்டு நடனம் ஆடுபவர்களைக் கவனித்தார். இரசித்தார். சத்தியசீலனும், பாபுவும் அவர்களோடு சேர்ந்து நடனம் ஆடினார்கள். பூலோகத்தில் ஐரோப்பியரின் சுவர்க்கம் பூப்பது மதுவிலும் நடனத்திலுமே. நமது பண்டைய அரசர்களும் அதைத் தான் கடைப்பிடித்தனர். பஞ்சத்தில் அடிபட்ட எமது கலாச்சாரம் அந்தச் சுவர்க்கத்தை தவற விட்டதோ என்கின்ற எண்ணம் "TS"சிற்கு அந்த மயக்கத்தில் ஏற்பட்டது. மது, உணவு, நடனம், மாது என்பனவற்றை அனுபவிக்காது, உத்தமம் காத்து, இந்த உலகத்தை விட்டுப் போகும் போது எதைக் கொண்டு போகப் போகிறோம் என்கின்ற எண்ணம் "TS"சை தத்துவ விசாரணையின் விளிம்பிற்கு இழுத்துச் சென்றது. அப்படியானால் அற்புதமான கீதைக்கு அர்த்தமே இல்லையா என்கின்ற கேள்வி அவரைத் திகைக்க வைத்தது.

நடனத்தின் இடையில் குண்டன் யாரோ ஒரு துருக்கிக் காரனிடம் எதையோ வாங்கி ஒரு பைக்குள் வைத்துக் கொண்டான். அது என்ன என்பது முதலில் விளங்காவிட்டாலும் அதுவாகத்தான் இருக்கும் என்கின்ற எண்ணம் "TS"சிற்கு உண்டானது. இளமையில் அனுபவிக்கக் கிடையாது, கற்பனையில் காலவிரயம் செய்யப்படுவது "TS"சிற்குப் பரிதாபத்தையும், கவலையையும் உண்டு பண்ணியது.

சோகங்கள் யாரிடம்தான் இல்லை? அப்படி இருக்க தனது சோகத்தை யாரிடம் சொல்ல முடியும் என்பதும் "TS"சிற்கு ஒரு போதும் தெளிவாகியது இல்லை.

வாட்டிய இறைச்சி பதத்திற்கு வந்ததும், வாட்டிய இறைச்சியும், உருளைக்கிழங்குச் சலாத்தையும், மரக்கறி

சலாத்தையும் கடதாசித் தட்டுகளில் பரிமாறினார்கள். சாப்பாடு சாப்பிடும் போதும் கச்சேரி தொடர்ந்து நடந்தது. இசைக்கு ஏற்ப நடனமும் தொடர்ந்தது. "TS"சின் மனது இத்தினை பரபரப்பையும் மீறிச் சொல்ல முடியாத சோகத்தில் திடீரெனத் தனித்து ஆழ்ந்தது.

15 மீண்டும் ஒஸ்லோவில்

முழுமையாக அறிய முடியாத பிரபஞ்சம். அதில் அற்பனான இந்தப் பூமி. இருந்தும் பருவ காலங்கள் என்னும் மாற்றம் மெல்ல மெல்ல ஒஸ்லோ நகரை விழுங்க, ஆதவக் கரங்கள் முடமானதாகக் குளிர் தன் கொடும் கரங்களை முனைப்பாக நீட்டிப் பூமியை உறைய வைத்தது. மீண்டும் ஒரு குளிர்காலமும், நத்தார் பண்டிகையும் வர இருப்பதாகப் பகல் சுருங்கி, இரவு நீண்டு கொண்டே சென்றது. கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் நத்தை வேகத்தில் நகர்வதான "TS"சின் அந்தரிப்பு மென் மேலும் ஓங்கி உறுமியது. "TS" பொதுவாகப் பொறுமையோடு சரசம் புரிபவர். இப்போது அவருக்கு அதன் மீது திடீரெனக் கோபம் வந்தது. இனியும் பொறுத்து இருக்க முடியாது என்று அவருக்குத் தோன்றியது. தனது மனைவியை, தனது பிள்ளையைத் தன்னோடு சேர்ந்து வாழ விடுமாறு விண்ணப்பித்தால் எதற்காக இழுத்தடிக்க வேண்டும் என்கின்ற சினம் பொங்கிற்று.

கோபத்தால் நன்மை விளைந்ததாக வரலாறுகள் இல்லை. கோபத்தால் நன்மையே விளைவது இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. அளவான கோபம் பொருத்தமான இடத்தில் சில வேளை அவசியமாகிறது. அன்று காலை "TS" வெளிநாட்டு அலுவலகத்திற்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அடுத்த முனையில் ஒரு பெண் அதிகாரி கதைத்தார். அவர் "TS"சின் கோப்பு எப்போது பார்த்து முடியும் என்று தன்னால் கூறமுடியாது என்றார். "TS"சிற்கு அன்று அதிகமாகவே கோபம் பற்றிக் கொண்டு வந்தது. நான் என்ன கேட்கிறேன்? சொந்த மனைவியை, பிள்ளையைப் பார்க்க வேண்டும், சேர்ந்து வாழ வேண்டும் என்று தானே கேட்கிறேன். உங்களையும் உங்கள்

குடும்பத்தையும் பிரித்து வைத்து இருந்தால் எப்படி இருக்கும்? ஏன் எனது துன்பத்தை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது? தயவு செய்து நீங்கள் மனிதாபிமானத்தோடு விரைவாக எனது கோப்புக்களை பார்க்க முடியுமா என்று சற்று அவசரமாக உரக்கக் கேட்டார். மறுமுனையில் அதைச் செவிமடுத்த அதிகாரி நீங்கள் கோபப்படாதீர்கள். நான் எவ்வளவு விரைவாக அதைப் பார்க்க முடியுமோ அவ்வளவு விரைவாகப் பார்த்து அனுப்பி வைக்கிறேன் என்று விடை அளித்தார். அந்த விடை "TS"சிற்குப் பெரியதொரு நிம்மதியைத் தந்தது. அவர் அந்த அதிகாரிக்கு நன்றி கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்தார்.

தொலைபேசி கதைத்து முடிந்ததும் அருளன் "TS"சைத் தன்னோடு வீடு பார்க்க வருமாறு கேட்டான். அந்த வீடு அருகாமையில் இருந்தது. தரகரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு காலை பார்க்க வருவதாக அருளன் கதைத்து வைத்து இருந்தான். "TS" தொலைபேசி கதைப்பதால் நேரம் பிந்திப் போய் விடுமோ என்று அந்தரித்தவன் அவர் தொலைபேசியை வைத்ததும் அவரிடம் வந்து "போட்டு வருவமே அண்ணை? " என்றான்.

"TS"சிற்கு அவன் ஏற்கனவே கேட்டிருந்தது ஞாபகத்திற்கு வந்தவராய் அவனோடு புறப்பட்டுச் சென்றார். அந்த வீடு அவர்கள் இருந்த வீட்டைக் கடந்து தேவாலயம் தாண்டி மேலே உள்ள தெருவில் இருந்தது. அது சில வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம் ஒன்று. உள்ளே சென்ற போது "TS"சிற்கு பிரமிப்பாக இருந்தது. அதன் படிகள் மிகவும் அகலமாக இருந்தன. வெளிக் கதவு லோகத்தில் செய்யப்பட்டு இருந்தது. ஜன்னல்களும் நவீனமானதாய் தோன்றின. உள்ளே வீடு விஸ்தீரணமாய் இருந்தாலும் சமையல் அறையும் வரவேற்பறையும் ஒன்றாக இருந்தது. அதைப் பார்த்த அருளன்,

"என்ன அண்ணை இப்பிடி இருக்குது?" என்றான்.

"எங்கடை சமையலுக்குக் கொஞ்சம் கஸ்ரம் தான்." என்றார் "TS".

"கொஞ்சம் இல்லை அண்ணை... நிறையக் கஸ்ரம். வேறை வீடுதான் பார்க்க வேணும்." என்றான் அருளன்.

அதன் பின்பு தரகனிடம் நாங்கள் தொடர்பு கொள்கிறோம் என்று சடைந்து விட்டு இருவரும் வெளியே வந்தார்கள். வெளியே வந்ததும் அருளன் அலுப்போடு தொடர்ந்தான்,

"பார்க்கப் போகிற இடத்தில எல்லாம் ஏதோ ஒரு குறை இருக்குது. சில வீடுகள் உள்ளுக்க ஆயிரத்து தொழாயிரத்து நாற்பத்திஐஞ்சில செய்த மாதிரியே இருக்கும். சில வீடுகளில எல்லாம் நல்லா இருக்கும் வாத்துறும் இல்லாட்டிச் சமையல் அறை சரி இல்லாமல் இருக்கும். எல்லாம் சரியா வாறதுக்கு இப்பிடி திறந்த சமையல் அறையா இருக்கும். இல்லாட்டிச் சமையல் அறைக்கு ஜன்னல் இல்லாமல் இருக்கும். எப்ப தான் எல்லாம் ஒழுங்கா அமைகிற வீடு வருமோ தெரியாது."

"இந்த ஒஸ்லோ நகரத்தில வராமலா இருக்கும்? வாற விளம்பரங்களைக் கவனமாப் பாரும். உமக்கு முதல்ல பிடிச்சா எங்களையும் கூட்டிக் கொண்டேக் காட்டும்." என்றார் "TS".

"நீங்கள் சொல்லுகிறதுதான் சரி. நீங்கள் போன் பண்ணினியளே என்ன சொல்லுகினம்?"

"கெதியாப் பார்க்கிறம் எண்டு சொல்லி இருக்கினம்."

"கெதியா வந்தா நாங்களும் இடைக்கிடை வீட்டுச் சாப்பாடு சாப்பிடலாம்."

"நீர் சமைக்கிறதை விட ருசியா யார் சமைப்பினம்? சமைக்காமல் சாப்பிடுகிற சுகத்தை வேணும் எண்டால் நீர் அனுபவிக்கலாம்."

"நோஸ்க் வகுப்பு முடிஞ்ச பிறகு எத்தினை மணித்தியாலம் முடிச்சிட்டம் எண்டு எழுதித்தாறம் எண்டவை. நீங்களும் வாறியளே போய் அதை வாங்கிக் கொண்டு வருவம். இப்ப இல்லாட்டியும் பிற்காலத்தில வேலையளுக்குப் போகேக்க அது உதவும். நீங்கள் என்ன சொல்லுகிறியள் அண்ணை?" என்றான் அருளன்.

"நாங்கள் மட்டும் போனால் சரியே? எல்லாரையும் கூட்டிக் கொண்டு போவம். எல்லாருக்கும் அது தேவைப்படும்." என்றார் "TS". மீண்டும் வீட்டிற்குச் சென்று மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு "றுசன்கொவ்" பாடசாலைக்குச் சென்றார்கள். காலத்தின் கலாசாலையில் அதன் நிரந்தரம்

அற்ற கோலத்தில் எங்கும் மாற்றம், எப்போதும் மாற்றம். நோர்வேக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை இப்போது அதிகரித்துவிட்டது என்பதை அங்கு நடமாடிய மனிதர்கள் ஆணியடித்தது போல நிரூபித்தனர். உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் இருந்து வந்த மனிதர்களின் நடமாட்டம். அதைப் பார்க்கும் போது இயற்கையின் பரிசோதனையில் எத்தினை வண்ணங்கள் என்கின்ற பிரமிப்பு "TS"சிற்கு ஏற்பட்டது. இத்தினை வித்தியாசமான மனிதர்கள் இன்று ஒரு மொழியால் இணைகின்றார்கள். ஒரு நாட்டில் வாழ்கிறார்கள். "TS"சிற்கு அதற்கு மேல் அதைப் பற்றிச் சிந்திக்கப் பிடிக்கவில்லை. மனது வலித்தது.

16 மாற்றங்கள்

அருளுக்கா "TS" அடுத்து வந்த நாட்களில் அதிகம் அலைய வேண்டி இருந்தது. அருளை முதலில் வீட்டைப் பார்த்து அவனுக்குப் பிடித்த பின்பு தன்னைக் கூட்டிச் சென்று காட்டுமாறு "TS" கூறினாலும் அவனிற்கு இருந்த அழுத்தத்தில் அவரை எல்லாவற்றிற்கும் தொடக்கத்தில் இருந்தே அழைத்துச் சென்றான். உதவி என்று கேட்டால் மறுப்புச் சொல்ல வராத மனது "TS"சிற்கு. இருவருமாகப் பல வீடுகள் ஏறி இறங்க வேண்டி வந்தது. இறுதியாக அருள் அதிக தூரம் சென்று விடாது "வள்ள கோவின்" என்கின்ற இடத்தில் இரண்டாவது மாடியில் இரண்டு அறை கொண்ட வீட்டை வாங்கினான். அது மாடிக்கட்டடம் என்பதால் வெளிப் பக்கத்தைப் பராமரிக்கும் கவலை அவனுக்கு இல்லை. அதை "ஓவுஸ்" என்னும் வீடுகளுக்குப் பொறுப்பான நிறுவனம் செய்யும். வீட்டின் வெளிப்புறத்தைப் பராமரிப்பதற்கு நேரமும் இரசனையும் இருக்க வேண்டும். இதில் ஏதாவது ஒன்று இல்லாவிட்டாலும் கோலம் அலங்கோலமாய் போய்விடும். அந்த இக்கட்டில் இருந்து தப்பித்துக் கொள்வதில் அருள் குறியாக இருந்தான். மிஞ்சி மிஞ்சிப் போனால் வருடத்தில் இரண்டு முறை சிரமதானம் வரும். தலையைக் காட்டினாலும் சரி, காட்டாவிட்டாலும் சரி என்பது சரி இல்லாத அருளின் எண்ணம்.

வீட்டிற்குள் வெப்பத்தைக் கொடுப்பதற்கு, தொலைக்காட்சி சேவைக்கு, பொது இடங்களைப் பராமரிப்பது போன்ற செலவுகளுக்கு மாதம் ஆயிரத்து அறுநூறு குரோணர்கள் கட்ட வேண்டும். அதைவிட எடுத்த கடனுக்கு வட்டி மட்டும் நான்கு வருடங்களுக்குக் கட்ட வேண்டும். அதற்குப் பின்பு வட்டியும் முதலுமாய் கடனடைப்புத் தொடங்கும்.

அருள் வீடு வாங்கியாகிற்று. வீட்டிற்கு உள்ளே திருத்தும் வேலை பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை. வீடு கழுவிக் கொடுத்தாலும் அதை மீண்டும் ஒரு முறை துப்பரவாக்கி விட்டு ஒரு நல்ல நாள் பார்த்து வரவேண்டும் என்பது அருளின் முதல் எண்ணம். பின்பு அது மெல்ல மாறிற்று.

வாழையடி வாழையாக வந்த சம்பிரதாயங்கள் நாடு விட்டு நாடு தாண்டினாலும் தொலைந்து போய்விடும் என்பது இல்லை. அதுவும் வாழையடி வாழையாகக் குட்டிகள் மீதும் பாயத் தயாராக இருக்கிறது. அப்படி இருக்க அருள் மட்டும் அதை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஐயர் அருளுக்குக் கிடைக்காது விட்டாலும் ஐயர் பொடியன் ஒருவன் அருளுக்கு அகப்பட்டான். அவன் பூணூல் போடுகிறானோ அல்லது மச்சம் மாமிசம் உண்ணுகிறானா என்பது இங்கு முக்கியம் இல்லை. எது உண்மை என்று ஆராயப் போனால் எதையுமே நம்ப முடியாது வந்துவிடும் என்பது அருளுக்குத் தெரியும். சமயத்துக்கு நான்கு வடமொழி மந்திரம் சொல்லித் தண்ணி தெளித்தால் மனதுக்கு நிம்மதி என்பது அவனது சமதர்ம ஞானத்தை வென்ற, தற்போதைய ஞான உதயம். மாற்றங்கள் இல்லாமல் எதுவும் இல்லை. மனித மனங்களின் மாற்றங்களுக்குக் காலங்கள் எல்லாம் அளவுகோல் அல்ல. எதுவும் எப்போதும் எப்படியும் மாறலாம் என்பதும், மாற்றங்கள் மாத்திரம் மாறாதவை என்பதுமே ஐதார்த்தம்.

பால் காய்ச்சுவதற்கும் மற்றும் தேவைக்குமான பாத்திரங்கள், குத்துவிளக்கு ஐயருக்குத் தேவையான பொருட்கள் என்பனவற்றை ஒருவாறு குரன்லாண்டில் அலைந்து திரிந்து அருள் வாங்கி வந்து விட்டான். முழுமையாக எல்லாப் பொருட்களையும் வாங்க முடியாவிட்டாலும் ஓரளவுக்காவது திருப்தி தருமளவிற்குப் பொருட்கள் இருந்தன. ஐயர் பொடியன் என்பதால் அதிகம் நுணுக்கம் பார்க்க மாட்டான் என்கின்ற நம்பிக்கை வேறு இருந்தது.

அருள் நினைத்தது போல ஐயர் பொடியனைப் பிடித்து வெள்ளி பிற்பகல் குடி புகுதல் நடந்தது. மொழி எங்கள் அடையாளம் என்பது "TS"சின் எண்ணம். அதுவும் இல்லாவிட்டால் நாங்கள் முகவரிகள் இல்லாத மனிதக் கூட்டமாய் போய் இருப்போம். அகிலம் எல்லாம் அகதிகள் ஆகினாலும் தமிழர் என்கின்ற ஒரு முகவரி இருப்பதுவே இன்று எமக்கு இருக்கும் ஒரே ஆறுதல் என்பது "TS"சின் நினைவு. மற்றைய சின்னங்கள், அடையாளங்கள், மதங்கள், சம்பிரதாயங்களை ஊரோடு ஒத்து ஓடுவதற்காக அல்லது உள்ளத்திற்கு ஒரு சாந்தியை கொடுப்பதற்காகச் செய்வதாக "TS" நினைத்துக் கொள்வார்.

வெள்ளி பின்னேரத் தடபுடலுக்குப் பின்பு மீண்டும் எல்லோரும் "TS" வீட்டிற்கு வந்து விட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாகச் சட்டி பானையில் இருந்து கட்டில் சோபா வரை அருள் கொள்முதல் செய்ய வேண்டும். அவற்றை வாங்கி முடித்த பின்புதான் அங்கு வாசிக்கத் தொடங்கலாம் என்று அருள் முடிவு செய்து இருந்தான். அம்முடிவுக்கு ஏற்ப அவற்றை வாங்குவதில் அவன் மும்மரம் காட்டினான். அவன் கொள்முதல் செய்து வரும் புதிய பொருட்களைப் பூட்டிக் கொடுப்பதற்காக அனைவரும் நேரம் கிடைக்கும் போது அவனது வீட்டிற்குச் செல்வார்கள். போகும் போது கடையில் பால் பெட்டியும் "Biscuit"றும் அருள் வாங்கி வருவான். தேயிலையும் சீனியும் போதுமான அளவு வீட்டில் வைத்து இருந்தான். வீட்டிற்குப் போனதும் பால் தேநீர் தயாரிப்பது அருளின் பொறுப்பு. பால் தேநீரைப் பருகி "Biscuit"றைச் சாப்பிட்ட வண்ணம் பொருத்துவதைப் பொருத்தி, அடுக்குவதை அடுக்குவார்கள். பின்பு நிலத்தில் இருந்த வண்ணம் தங்களுக்குத் தெரிந்த ஊர் புதினங்களை அலசுவார்கள். ஊரில் பலருடன் நேரடியாகக் கதைக்க முடியாமல் இருக்கிறது. கடிதங்கள் பல மாதத்திற்குப் பின்பு தான் இங்கே வருகின்றன. வானொலி கேட்டாலோ, தொலைக்காட்சி பார்த்தாலோ செய்திகள் தான் பிரதானம் என்பதாகக் காலம் மாறிவிட்டது. இங்கே கிடைக்கும் செய்திகள்கூட ஊரில் இருப்பவர்களுக்குக் கிடைப்பது இல்லை என்பதைத் தொலைபேசியில் கதைக்கும் போது "TS"சால் அறிந்து கொள்ள முடிந்தது. ஓடுபவர்கள் ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். ஓடிக் கொழும்பிற்கு வந்தவர்கள் பயத்தில் அடைந்து கிடக்கிறார்கள். அதையும் தாண்டி

வெளிநாடு வந்தவர்கள் காசு கொடுத்துக் கற்பனை செய்கிறார்கள்.

*

சடைத்த மரத்தின் இலைகள் இலையுதிர் காலத்தில் உதிர்ந்து போவது போலக் கொத்தாக வாழும் மனிதர்களைப் பிரிவு பிரித்து உதிரிச் சருகாக அலைய விடுகிறது. பூமிக்கு இரவும் பகலும் இருப்பது போல மனித வாழ்விற்கும் உறவும் பிரிவும் தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. இழப்புக்கள் இல்லாது இன்பமயமானால் இன்பத்தில் இருக்கும் இதம்கூட மனிதனுக்கு விளங்காது போய்விடும். ஒரு உறவுக்காக ஒரு பிரிவு "TS"சின் வாசலைத் தட்டியது. வாசற்கதவு திறக்காவிட்டால் வரவிருக்கும் புதிய உறவு வராது போய்விடும். வாசல் கதவைத் திறந்து விட்டால் சேர்ந்து கழித்த பழைய உறவு கலைந்துவிடும். சில வேளைகளில் சில உறவுகளின் கழுத்தை அறுத்தே சில உறவுகளுக்கு உயிரூட்ட வேண்டியது மனித யதார்த்தம் ஆகிறது. வாசல் கதவைத் திறக்க விருப்பம் இல்லா விட்டாலும் திறந்தாக வேண்டிய பாசம் அவரைப் பிடித்து உலுக்கியது. அத்தால் அவர் தனது நிலையை இளைஞர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டியது ஆகிற்று. அந்த விளக்கம் யாருக்கும் அதிர்ச்சியாக இருக்க வில்லை. இப்படியான மாற்றம் ஒன்று வரப்போவதை சாடைமாடையாக "TS" ஏற்கனவே அறிந்து அவர்கள் தங்களைத் தயார் செய்து வைத்து இருந்தது அவர்களுக்குக் கைகொடுத்தது.

"TS" அன்று மாலைச் செய்திகள் முடியத் தனது குடும்பம் வர இருப்பது பற்றியும் அனைவரும் தனது வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பது பற்றியும் பிரஸ்தாபித்தார். அருள் வீடு வாங்கியதால் அவனுக்கு அதில் எந்தவித பிரச்சனையும் இருக்கவில்லை. "TS" சொன்னாலும் சொல்லா விட்டாலும் அவன் தனது வீட்டிற்குக் குடி பெயர்வதற்கான ஆயுத்தங்களில் மும்மரமாக ஈடுபட்டான்.

நிமலனுக்கு இப்படிதான் வரும் என்பது ஏற்கனவே விளங்கி இருந்ததாலும், ஊரில் இருந்து படிக்க வேண்டும் என்கின்ற அறிவுறுத்தல் வந்ததாலும் போல்கைஸ்கூல் போவதற்கு விண்ணப்பித்து, அதற்கான இடமும் கிடைத்து இருந்தது. அவன் அங்கே போவதற்கான நாட்களை அடங்காத ஆவலோடு எண்ணினான். அதன் கற்பனை அவன் மனதில் அழகாக விரிந்தது. புது இடம், அங்கே

புது மனிதர்கள்... அவ்விடத்தில் எப்படியான நட்பு வாய்க்கும் என்கின்ற கற்பனை இன்பத்தில் அவன் அடிக்கடி மிதப்பான்.

இப்படி ஒரு நிலை வரும் என்பது பற்றி அக்கறை இல்லாது இருந்த சொரூபனும், றுபனும் "TS" கூறியதைக் கேட்டுச் சற்றுத் தடுமாறிப் போய்விட்டார்கள். பின்பு அருளிடம் வீடு இருக்கிறது என்பதில் ஆறுதல் அடைந்தார்கள். அத்தோடு அருளோடு தாங்கள் குடி வருவது பற்றியும் கதைத்தார்கள். அருளும் திருமணம் செய்து மனைவியை இங்கே எடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடே வீட்டை வாங்கி இருந்தான். திருமணம் செய்து இங்கு மனைவியை எடுப்பதற்குக் காலம் ஆகும் என்பதால் அது வரைக்கும் இவர்களை வீட்டில் வைத்துக் கொள்வது பொருளாதார ஆதாயமாகும் என்பதைக் கணக்குப் பண்ணி, அவர்கள் அவனோடு வந்து தங்குவதற்குச் சம்மதித்தான்.

*

சடுதி சடுதியான மாற்றங்கள் அலை அலையாக மோதிற்று. நிமலன் போல்கைஸ்கூல் சென்று விட்டான். அருளோடு மற்றவர்கள் அவன் வீட்டிற்குப் போய் விட்டார்கள். அவசரமாக வந்து இறங்கிய தனிமையில் "TS" அனல் பட்ட புழுவாய் துடித்தார். இந்தத் துடிப்பு அடங்குவதற்கு அவர்கள் வரவேண்டும். அதற்கான காலம் எப்போது வரும் என்பது விளங்காத திகைப்பில் அவர் இடையறாது புழுங்கினார். சக மனிதர்கள் கைவிடும் போது கடவுளிடம் தஞ்சமடைவது மனித இயல்பு. அதைவிட அழிவில்லாத வழி மனிதனுக்கு வேறு எதுவும் இல்லை. மனதில் ஓயாது துர்க்கையை நினைத்து வாழ்வது "TS"சின் ஆன்மீக வாழ்வு. அவர் அந்தக் கடவுளை இப்போது இன்னும் அதிகமாக நேசித்தார். பூசித்தார். இத்தினைக் கொடுமைக்குப் பின்பும் மனிதர்களால், மனிதர்களுக்குக் கொடுமை இளைக்கப் பட்டதாகவே அவர் நம்பினார். பாவம் செய்பவர்கள் அதற்கான பலனை இந்த உலகத்தில் அல்ல வேறு உலகத்தில் அனுபவிப்பார்கள் என்பது அவர் நம்பிக்கை. தனது பாவத்திற்கான தண்டனை இவ்வுலகத்தில் கிடைத்து விட்டதாக அவர் தன்னைச் சமாதானம் செய்து கொள்ள முயன்றாலும் அதற்காகத் தண்டிக்கப் பட்டவர்களை எண்ணும் போது இரணம் அவரது நெஞ்சிற்குள் திராவகம் போலப் பாயும். அவர் ஆறா

வேதனையில் துடிப்பார். தான் வேதனையில் துடிப்பதை மற்றவர்களுக்குக் காட்டாது மனதிற்குள் புழுங்குவதே அவர் இயல்பு. தனது வேதனையை சக மனிதர்களுக்குச் சொல்லுவதால் இன்னும் வேதனை அதிகரிக்கும் என்பதாக அவர் நம்பினார். பிடுங்கித் தின்னும் உலகத்தில் பாவம் செய்யாமலும் பாவிகளாகப் பார்க்கப்படும் சந்தர்ப்பங்கள் நிறையவே வரும் என்பது அவருக்கு விளங்கி இருந்தது.

*

வேதனைகளைக் கொடுத்த கடவுளின் விருப்பு இப்போது மாறியது. சோதனைக் காலம் முடிந்து சுப வேளை வந்ததாக "TS" மகிழ்வுற்றார்.

கடவுள் அவரைக் கைவிட வில்லை. மனித மனதிற்குள் புகுந்து கருணை பிறப்பித்து, அந்தக் கருணையில் விசா என்கின்ற அனுமதியை அவர் கொடுத்தார். அந்தக் கொடையில் "TS" அகம் மகிழ்ந்தார்.

எனினும் குடும்பம் வருவதற்குக் காத்திருக்க வேண்டிய காலம் முடியவில்லை. பருவகாலத்துப் பறவைகளாக வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் வெளியேறிய பின்பு தனிமை அரக்கனாய் வந்து "TS"சை அடிக்கடி பயமுறுத்தியது. இன்னும் சில நாட்களே என்கின்ற ஆறுதலுடன் அந்த அரக்கனை எதிர்த்து அவர் மூர்க்கமாகப் போராடினார்.

17 அந்த நாள் வந்தது

"TS"சிற்குக் காலையில் இருந்து இருப்புக் கொள்ள வில்லை. இன்று வேலைக்கு விடுப்பு எடுத்து இருந்தார். என்ன சமைப்பது என்று முதலில் விளங்க வில்லை. சோறு பொருத்தமாக இருக்கும் என்பது அவரது இறுதி முடிவாகியது. விமான நிலையத்தில் இரண்டு மணிக்கு நிற்க வேண்டும். "பொர்ணவூ" விமான நிலையம் ஒஸ்லோ நகரத்திற்கு அருகே றமன் என்னும் நகரத்திற்குப் போகும் வழியில் இருக்கிறது. மூன்று பேருக்குப் பேருந்திற்கான அனுமதிச்சீட்டு எடுப்பதற்கும், வாடகைக் காரைப் பிடிப்பதற்கும் அதிகமாக வித்தியாசம் வராது என்பதால், வாடகைக் காரைப் பிடித்துக் கொண்டு சுருக்காக வீட்டிற்கு

வந்துவிட வேண்டும் என்று ஏற்கனவே அவர் எண்ணி இருந்தார்.

வெளியே மழை தூசாகச் சிணு சிணுத்துத் தூறியது. இங்கு இலங்கையைப் போன்று சோவென்று மழை கொட்டுவது இல்லை என்பதே "TS"சின் இன்று வரையான அனுபவம். அது எப்போதும் மெல்லிய தூவானமாக சிணு சிணுத்துக் கொண்டு இருக்கும். பல சுதேசிகள் அதைப் பொருட்படுத்தாது குடையோ, அல்லது தலையில் தொப்பியோ இல்லாது நடந்து செல்வார்கள். "TS"சிற்கு மழையைக் கண்டாலே குடை இல்லாது இறங்க மனம் வராது. இலங்கையில் மழையில் நனைந்தால் வருத்தம் வந்துவிடும் என்று பழக்கி வைத்த பழக்கம் இங்கும் அடிவயிற்றைக் கௌவிப் பிடிக்கும். "TS" மழை துமித்தாலே தனது மழைக்கான மேலங்கியை அணிந்தே இங்கே வெளியே செல்வார். சமைத்த வண்ணம் வெளியே பார்த்த "TS" இன்று விமானநிலையம் செல்லும் போது குடைகளும் கொண்டு செல்ல வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

கோழியைச் சிறிய துண்டுகளாக வெட்டி, அதில் சில நெஞ்சுத் துண்டுகளை எடுத்து அவளுக்குப் பொரித்து வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார். மீதியைப் புரட்டல் கறியாக வைத்து, கத்திரிக்காயும், பருப்பும் துணைக் கறியாக வைக்க முடிவு செய்தார். வந்ததும் அரிசியைப் போட்டு வடித்தால் சுடச்சுடச் சாப்பிடலாம் என்கின்ற எண்ணம் அவரிடம் ஓடியது. இலங்கையில் இருந்து வருபவர்களுக்கு இந்தக் குளிரே பெரும் குளிராக இருக்கும் என்பது "TS"சிற்கு விளங்கியது. சுடு சோறு அதற்கு இதம் ஊட்டும் என்பது அவரது எண்ணம்.

*

"TS"சால் காத்திருக்க முடியவில்லை. உள்ளங்கை வியர்த்தது. மனது அமைதி இன்றி அலை பாய்ந்தது. "TS" தன்னோடு யாரையும் அழைத்து வரவில்லை. அழைத்து வருவதற்கு விருப்பம் இருந்தாலும் அது சங்கடத்தைத் தரும் என்பதால் தவிர்த்து வந்தார். புவனலோசினியை முதல் முறை பெண் பார்க்கப் போன போது ஒருவித அவஸ்தை இருந்தது. அது இன்பமான அவஸ்தை. இன்று ஏதோ அவர்களைப் பார்க்கப் போவதில் ஒரு மரண வேதனை தரும் அவஸ்தை தோன்றி அவரை வாட்டியது. மனைவியையும், மகளையும் சந்திக்க வேண்டும் என்கின்ற

அடங்காத அவா அதையும் தாண்டி மனதில் புரள்கிறது. அதுவே வேதனையாக உறுமுகிறது. எப்படிச் சந்திப்பது என்கின்ற நடுக்கம் மின்னலாக வெட்டிப் பயமாக விரிகிறது. அந்தச் சம்பவம் நடந்து இருக்காது விட்டு இருக்கலாம். நடந்து இருந்தாலும் அதைத் தான் அறியாது இருந்து இருக்கலாம். சம்பவம் நடந்தது. சம்பவத்தை அவள் வாயாலேயே அவர் அறிய நேர்ந்தது. இந்த உண்மை அவர் மனதைச் செந்தணலாக எப்போதும் எரி ஊட்டுகிறது. இன்று அந்தக் கொடுமையின் உச்சமாகப் பாதிக்கப் பட்டவர்களை, பாதியில் விட்டு வந்த கணவன்... பாவப்பட்ட தகப்பன் என்கின்ற அவஸ்தை உடன்... நித்தமும் உயிர் போகின்ற வேதனை உடன்... தவித்து வந்தவர் இன்று அவர்களை நேரே பார்க்க வேண்டும். இப்படிப் பார்க்கும் சந்தர்ப்பம் வந்து இருக்காது மாண்டு போய் இருக்கலாம். மாண்டு போகவும் அவருக்கு மனது வரவில்லை. ஒரு முறை விட்டு வந்ததிற்கே இவ்வளவு பெரிய தண்டனை. உலகத்தையே விட்டுச் சென்றால் எவ்வளவு பெரிய தண்டனையோ என்பது அவரைக் கட்டிப் போட்டது.

அவர்கள் வந்த விமானம் தரை இறங்கிவிட்டதாக திரையில் விபரம் காட்டியது. இனி எப்போதும் அவர்கள் வெளியே வரலாம். முதல் முறை நோர்வேக்குள் வருவதால் குடிவரவு, குடியகல்வில் சற்றுத் தாமதப் படுத்துவார்கள். அதன் மூலம் எல்லாம் அசல் என்பது உறுதியான பின்புதான் அவர்களை உள்ளே வர விடுவார்கள். அவர்களிடம் அதை வாங்கி வாருங்கள், இதை வாங்கி வாருங்கள் என்று தங்கத் திரவங்களுக்கோ, புகைப் பொருட்களுக்கோ "TS" ஆசைப்படவில்லை. தன்னைக் கண்டவுடன் அவர்கள் என்ன செய்வார்கள் என்கின்ற நினைப்பு திகைப்பாக மீண்டும் மீண்டும் பதறடிக்க, குளிராக அவருக்கு உள்ளங் கை வியர்த்தது. கால்கள் நடுங்கின. கொட்டாவி மூடி திறந்த குளிர் பாணப் போத்தலாக தொடராக வந்தன. "TS"சால் அதற்கு மேல் நிற்க முடியவில்லை. எங்காவது ஒரு இடத்தில் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவர் இருப்பதற்கு இடம் தேடினார். இருக்கும் இடங்கள் தொலைவில் இருந்தன. தான் இருக்கப் போனால் அவர்கள் வரவைக் கவனிக்காது விட்டு விடுவேனோ என்கின்ற பயம் எழுந்தது. "TS" இருக்கும் எண்ணத்தைக் கை விட்டார். இருக்கவும் முடியாது, நிற்கவும் முடியாது அவர் அவஸ்தை தொடர்ந்தது.

மனதும் கால்களும் தொடர்ந்தும் கட்டுப்பாடற்று நடுங்கின. அவர் ஒரு தூணிற் சாய்ந்து பயணிகள் வரும் பாதையை உன்னிப்பாகக் கவனித்த வண்ணம் நின்றார். அந்த விமானத்தில் வந்த சுதேசிகள் ஈறாக அனைவரும் வந்து விட்டது போன்று அவருக்குத் தோன்றியது. காத்திருப்பு எல்லை அற்றதாகத் தொடர்ந்தது. வயிற்றைத் தொடர்ந்தும் இடைவிடாது அளைந்தது. அவர்கள் இன்னும் வரவில்லை. என்ன பிடுங்குப்பாடு என்று அவருக்கு விளங்கவில்லை. இந்த வேதனை எவ்வளவு நேரம் என்பதும் அவருக்குத் தெரியவில்லை. புவனலோசினி தன்னைக் கண்டவுடன் அழுவாளா? சிரிப்பாளா என்பதும் "TS"சிற்குத் தெரியவில்லை. அழுதால் அது பெரும் சங்கடமாக இருக்கும். சிரிப்பதற்குச் சந்தர்ப்பமே கிடையாது என்பதும் விளங்கியது. இரண்டும் இல்லாவிட்டாலும் நிம்மதியாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது. இந்தக் கொடுமைக்குப் பிறகும் அவள் அழாவிட்டால் அதுவே வாழ்க்கை உறைந்ததாக முடியும். எது நடக்கும் என்பது முடிவில்லாத கேள்வியாகியது. எப்படி அதைச் சமாளிப்பது என்பது மூளைக்கு எட்டாத குழப்பம் ஆகியது.

நடந்து இருக்கக் கூடாதது நடந்து விட்டது. நடந்ததை இனி யாராலும் மாற்ற முடியாது. நிகழ்தவற்றை மறக்க முடியாத நடைப் பிணமான வாழ்க்கை. நடந்ததை மறந்தால் நலமான வாழ்வாக. இதுவே இப்போது இருக்கும் யதார்த்தம். மென்மையான இதயம் கொண்டவர்கள். வன்மையாகக் கலாச்சாரத்தை, பண்பாட்டைக் காதலித்தவர்கள். என்ன நடந்து இருக்கும்? துர்க்கை எப்படிக் கல்லாய் சமைந்து இருந்தாள்? தொலைபேசியில் அவர்களோடு கதைக்கும் போது சாடைமாடையாகக் கேட்டது "TS"சின் மனதை ஏற்கனவே கொன்றுவிட்டது. துர்கை தொடர்ந்தும் சோதனை தரப் போகிறாளா என்பது அவருக்கு விளங்கவில்லை. மனதிற்குப் போடப்பட்ட பூட்டைத் திறக்க முடியாது. குற்றம் செய்யாமலே தண்டனைத் தரப்படுகிறது. சுயதண்டனையே வாழ்க்கையை அழிக்கிறது. அதற்கு மேல் வேறு ஒன்றும் தேவை இல்லை. யாருக்கும் எப்போதும் சொல்லத் தேவை இல்லை. சொல்வதால் எந்தவித நன்மையையும் அவர்கள் வாழ்விற்கு வந்துவிடப் போவது இல்லை.

நேரம் போகப் போக "TS"சிற்கு இருந்த நிம்மதியும் இல்லாமல் தொலைந்து போனது. எதற்காக இவ்வளவு

சுணக்கம் என்பது விளங்காது திகைப்பு மேல் எழுந்தது. "TS" ஆற்றா அவஸ்தையோடு பாதையை நோக்கிய வண்ணம் ஒற்றைக் கால் கொக்காக நின்றார். "TS"ற்கு இருக்க வேண்டும் என்கின்ற அவஸ்தை. அதை எதிர்த்து இடைவிடாது போராடி இரண்டு காலில் நின்று தவம் செய்தார்.

"TS"சின் தவத்திற்குத் திடீரெனப் பலன் கிடைத்தது. பல ஆண்டுகள் கழித்துக் கிடைத்த அந்த வரம் ஆண்டவனின் அநீதியான சோதனையோடு கிடைத்த கொடுமையான இந்தக் கணங்கள் ஆகியது. துர்கை தன்னை இப்படித் தண்டிப்பாள், சோதிப்பாள் என்று "TS" ஒரு போதும் நினைத்தது இல்லை. இப்பிறப்பில் இல்லாவிட்டாலும் முற்பிறப்பில் ஏதோ பெரிய பாவஞ் செய்து இருக்க வேண்டுமென "TS" எண்ணினார். புவனலோசினி விமானநிலையப் பொதி ஏற்றும் வண்டிலை "எல் வோட்டில்" ஒட்டி வந்தாள்.

அவள் நீல நிறச் சேலை மீது சிவப்பு நிறத்தில் "Sweter" அணிந்திருந்தாள். நீண்ட நேரப் பயணத்தில் தலை கலைந்து இருந்தது. காலில் "TS" கூறியதற்கு அமைய கறுப்புச் சப்பாத்து அணிந்து இருந்தாள். ஆடை அலங்காரம் பற்றி அவள் எப்போதும் அக்கறை எடுத்துக் கொள்பவள். இப்போது அது வேண்டாம் என்கின்ற தோற்றத்தை பார்க்கவே "TS"சின் மனது சுருண்டிற்று. எப்படிச் சமாளிக்கப் போகிறேன் என்கின்ற திகைப்பு அவரிடம் மேலிட்டது.

அம்மாவுக்குப் பிள்ளை தப்பாத தோற்றத்தில் சரிஸ்காவும் தோன்றினாள். ரோஜா நிறத்தில் சுடிதார். கறுப்புச் சப்பாத்து. கலைந்த கூந்தல். காய்ந்து வெடித்த உதடுகள். ஒளி இழந்து மங்கிய பார்வை. தன்னைச் சுற்றி இருக்கும் உலகைக் கவனிக்காது காற்றில் நடப்பதான நடை.

புவனலோசினியின் பார்வை "TS"சைத் தேடியது. சரிஸ்கா மருண்டு மருண்டு கட்டடத்தையும் சனத்தையும் பார்த்தாள். பயத்தில் அம்மாவிற்குப் பின்பு ஒளிந்து கொண்டு வந்தாள். பதினாறு வயதுப் பெண் அம்மாவிற்கு வழிகாட்டி இருக்க வேண்டும். உலகத்திற்குப் பயந்து, அம்மாவிற்குப் பின்னால் ஒளிக்கும்படி விதி சதி செய்து விட்டது. அந்த நிகழ்வு அவள் வாழ்வில் வராது இருந்து இருக்கலாம். மனிதன் நினைப்பது போல் இறைவன் நினைப்பது

இல்லை. ஊழ்வினையிடம் இருந்து ஒளிந்து ஓட முடிவதில்லை. மருகி மருகித் துர்க்கையை வேண்டினாலும் விதியை வெல்ல முடியவில்லை.

"TS" அவர்களைக் கண்டுவிட்டு அவசரமாக முன்நோக்கி நடந்தார். புவனலோசினி "TS"சைக் கண்டுகொண்டாள். அந்தக் கணமே அவள் பலவீனமாக வண்டிலை அப்படியே கைவிட்டு நிலத்தில் குந்தி இருந்து தேம்பலானாள். சரிஸ்கா அழும் தாயை தேற்ற வேண்டும் என்கின்ற உணர்வுகூட இல்லாது மனிதர்களையும், இயந்திரங்களையும் பார்த்து மருண்டாள். அம்மா இருந்து விட்டதால் என்ன செய்வது என்று விளங்காது திகைத்தாள். தலையை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்த வண்ணம் அந்தரப்பட்டாள். அங்கும் இங்கும் பார்த்தாள்.

"TS" இதை எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வது என்கின்ற தடுமாற்றம் அவரை அலைக்கழித்தது. அதைப் புறம் தள்ளித் தன்னைச் சமாளித்த வண்ணம் புவனலோசினியை நோக்கி ஓடினார். அவளைத் தூக்கி எழுப்பி வண்டிலைப் பிடிக்க வைத்து, வண்டிலை வெளியே தள்ளிக் கொண்டு வந்தார். அவள் தேம்பித் தேம்பி அழுத வண்ணம் வந்தாள். "TS"சால் அழாதே அழாதே என்று மாத்திரம் கூற முடிந்தது. இவர்களுக்குப் பின்னே இந்த உலகத்தைப் பார்ப்பதில் ஏற்பட்ட மருட்சியோடும், கலக்கத்தோடும் சரிஸ்கா பின் தொடர்ந்தாள். அவள் பின் தொடர்வது ஏன் எதற்குத் தொடர்கிறேன் என்பதை அறியாது தொடரும் ஒரு சிறு பிள்ளையின் தொடரலாகத் தோன்றியது.

வெளியே வந்ததும் முதலாவதாக வந்த வாடகைக்காரில் பெட்டிகளை ஏற்றிவிட்டுப் புவனலோசினியையும், சரிஸ்காவையும் பின் ஆசனத்தில் இருக்க வைத்தார். பின்பு தான் முன் ஆசனத்தில் இருந்தார். புவனலோசினி தொடர்ந்தும் தேம்பித் தேம்பி அழுதாள். வாடகைக்கார் சாரதிக்கு எதுவும் விளங்காவிட்டாலும் அவன் தனது தொழிலில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

வீட்டிற்கு வந்த உடன் எதுவும் கதைக்கவில்லை. புவனலோசினி "TS"சைக் கட்டிப் பிடித்து அழுதாள். சரிஸ்காவும் அதற்குள் சேர்ந்து கொண்டாள். யாரும் எந்தக் காரணமும் சொல்லவில்லை. யாரும் எந்தக் காரணமும் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் புவனலோசினி சரிஸ்காவைக் குளிப்பதற்கு அழைத்துச்

சென்றாள். "TS" சோபாவில் இருந்து தாங்க முடியாது குலுங்கிக் குலங்கி அழுதார்.

18 இனி

இலங்கையில் இருந்து நோர்வேக்குக் குடும்பம் வந்திருக்கிறது என்றால் நலம் விசாரிப்பதற்குப் பழக்கம் ஆனவர்கள் வீட்டிற்கு வருவார்கள். நலம் விசாரிப்பது ஒரு விதமான சமூகத் தொடர்பாய், தகவல் பரிமாற்றமாய் இருக்கும். "TS"சிற்குத் தங்களைப் பொறுத்த மட்டில் அது அப்படி இருக்கப் போவது இல்லை என்பது தெரிந்தாலும் எப்படி அதைச் சமாளிப்பது என்பது அவருக்கு விளங்கவில்லை. வந்த அடுத்த நாளே தாங்கள் வரலாமா என்று கேட்டுத் தொலைபேசிகள் வரத் தொடங்கி விட்டன. அவர் சமயோசிதமாய் அவர்களுக்குச் சுகமில்லை என்றும், சுகமானதும் தான் தொலைபேசியில் தொடர்பு கொள்வதாயும் கூறிச் சமாளித்தார். அந்தச் சமாளிப்பை எப்போதும் செய்ய முடியாது என்பது அவருக்கு விளங்கியது.

முதலில் அவர்கள் இங்கே தொடர்ந்து தங்குவதற்கான விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டி இருந்தது. அத்தோடு வருமானம், குடிபெயர்வு என்பவற்றைப் பதிவு செய்து கொள்ளும் அலுவலகத்திற்கும் சென்று வரவேண்டி இருந்தது. அடுத்து வந்த நாட்களில் "TS" அவசர அவசரமாக அந்த அலுவல்களைக் கவனித்தார். அந்த அலுவல்கள் ஒழுங்காக நடந்தால் சிக்கல்கள் இருக்காது என்பது "TS"சிற்குத் தெரியும்.

அதற்கு அடுத்த நாளே இருவரையும் தனது மருத்துவரிடம் கூட்டிச் சென்றார். மருத்துவர் அவர்களது கதையைக் கேட்ட பின்பு அவர்களை வேறு ஒரு மருத்துவரிடம் இரண்டு நாட்களுக்குப் பின்பு போகுமாறு அனுப்பி வைத்தார்.

அந்த மருத்துவர் மூவருடனும் முதலில் பொதுவாகக் கதைத்தார். பின்பு தனித் தனியே புவனலோசினியிடமும், சரிஸ்காவிடமும் ஒரு தமிழ் பெண்ணை மொழி பெயர்ப்பாளராக வைத்துக் கதைத்தார். மீண்டும் ஒரு கிழமையால் வருமாறு கூறியதோடு, இருவரும் நித்திரை

வராது அவஸ்தைப்பட்டால் கொடுப்பதற்கு மாத்திரை வாங்குவதற்கான துண்டும் எழுதிக் கொடுத்தார்.

மருத்துவரிடம் போய்விட்டு வந்த பின்பு புவனலோசினியும், சரிஸ்காவும் அதிகமாக "TS"சோடு கதைத்தாலும் அவர்களிடம் இருந்த இறுக்கம், கவலை, பயம், வெறுப்புக் குறைந்ததாகவோ அல்லது முகத்தில் சிரிப்பு வந்ததாகவோ அவருக்குத் தெரியவில்லை. அதற்குக் காலம் எடுக்கலாம் என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார். தமிழ்ப் படங்கள் எடுத்து வந்து தானும் அவர்களோடு இருந்து பார்ப்பார். புவனலோசினி தேறிக் கொண்டு வந்தாலும் சரிஸ்கா தேறுவதான எந்தச் சமிக்கையும் அவருக்குக் கிடைக்கவில்லை. படம் பார்க்கும் போதே சில வேளைகளில் அவள் சோகமாக எழுந்து தனது அறைக்குச் சென்று விடுவாள். சில வேளைகளில் குலுங்கிக் குலுங்கி அழும் சத்தம் அவள் அறையில் இருந்து கேட்கும். அப்படிக் கேட்டால் புவனலோசினியும் எழுந்து அவளது அறைக்குள் சென்று விடுவாள். அப்படி நடந்தால் தொலைக்காட்சியை நிறுத்தி விட்டுப் புவனலோசினி வரும் வரையும் காத்திருப்பார். சில வேளைகளில் அறைக்குச் சென்று பார்த்தால் சரிஸ்கா அம்மாவின் மடியில் முகம் புதைத்து தீராத சோகத்தை அழுது தீர்த்துக் கொண்டு இருப்பாள். தன் குழந்தையின் வேதனை அவருக்குப் பெரும் சோதனை ஆகியது. அதற்கு எப்படி விடிவு காண்பது என்பது விளங்காது அவர் துடித்தார். விரைவில் வேலை தொடங்க வேண்டும். அவர்கள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களே கடைக்குப் போக வேண்டும். அவர்களே சமைக்க வேண்டும். சரிஸ்கா பாடசாலைக்குப் போக வேண்டும். வேண்டும்... வேண்டும்... என்கின்ற விவகாரமான நிகழ்வுகள் வரிசை கட்டி மூர்க்கமாக எதிர்கொள்ள நின்றன. அவர்கள் தனியே இதைச் சமாளிப்பார்களா என்று எண்ணும் போது "TS"சிற்கு கலக்கமாக இருக்கும்.

சரிஸ்காவையும், புவனலோசினியையும் எங்காவது கூட்டிச் சென்று குதுகலம் ஆக்கினால் அவர்கள் கவலை குறையும் என்று "TS" எண்ணினார். ஒஸ்லோவில் பெரியதொரு கேளிக்கைப் பூங்கா அமைக்கத் தொடங்கி விட்டார்கள். அது அடுத்த வருடமே கட்டி முடியும் என்பதால் அதற்குச் செல்ல முடியாது போய் விட்டது. "பொறங்கரில்" இருக்கும் தூசனப் பூங்காவிற்குப் பெண்

பிள்ளையை அழைத்துச் செல்ல அவருக்கு மனது ஏகவில்லை. ஒஸ்லோவில் பாரிய அளவிலான வர்த்தக மையங்களும் இருக்கவில்லை. ஒஸ்லோவில் அரச மாளிகையும், கடைகளும் நிறைந்த பகுதியாக கால்யோகன்ஸ்காத்தா என்கின்ற ஒழுங்கையும் அதைச் சுற்றிய இடங்களும் உண்டு. வெளிநாட்டுக் கடைகள் உள்ள குரன்லாண்ட் என்கின்ற இடத்தையும் அழைத்துச் சென்று காட்டி வரலாம். அத்தோடு அவர்களுக்குத் தேவையான மேலங்கி போன்றவற்றையும் வாங்கி வரலாம் என்கின்ற திட்டம் "TS"சின் மனதில் உதித்தது. "TS" இருவரையும் அழைத்துக் கொண்டு நகர்வலம் போவதற்கு உத்தேசித்தார்.

தனது திட்டத்தைப் புவனலோசினியிடமும், சரிஸ்காவிடமும் கூறி அவர்களை வெளிக்கிடுமாறு பணித்தார். புவனலோசினி சரிஸ்காவோடு அதிக நேரம் மல்லுக்கட்டியே அவளை வெளிக்கிடுத்தினாள். தான் வரவில்லை என்று மறுத்த சரிஸ்கா பின்பு தாயின் ஆக்கினைக்காகப் புறப்பட்டு வந்தாள். ஒரு கணம் அவளின் விருப்பப்படியே வீட்டில் இருக்க விடுவோமா என்று எண்ணிய "TS" அப்படிச் சோர்ந்து போனால் அவளைச் சகஜ நிலைக்குக் கொண்டுவர முடியாது என்பதை உணர்ந்தவராகப் பேசாது இருந்தார்.

மூன்றுபேர் புறப்பட்டால் முக்கிடி சிக்கிடி என்று தான் கேட்ட அருள்வாக்கைப் புறந்தள்ளி, சரிஸ்காவுடனும், புவனலோசினியுடனும் காள்பானரில் உள்ள "Tram" நிறுத்தத்தை நோக்கி நடந்தார். ஒஸ்லோ கொழும்பைவிடச் சிறிய நகரமாக இருந்தாலும் கொழும்பில் ஓடுவதற்கு மேலாக வாகனங்கள் இங்கே ஓடுவது "TS"சிற்கு வியப்பைத் தராவிட்டாலும், சரிஸ்காவினதும் புவனலோசினியினதும் கவனத்தை அது ஈர்த்தது. அத்தோடு மனிதர்கள் வாகனத்திற்காக நின்று வழிவிடாது வாகனங்கள் மனிதருக்காக நின்று வழிவிட்டுச் செல்லும் பொறுமையும் அவர்களை அபாரமாக ஈர்த்தது. சந்தியிலேயே பல கடைகள் இருந்தன. அவற்றிற்கு ஆறுதலாகக் கூட்டிச் செல்ல வேண்டும் என்று "TS" நினைத்தார்.

"Tram"ற்காய் வந்து தரிப்பிடத்தில் காத்து நின்றார்கள். புவனலோசினியும், சரிஸ்காவும் தங்களைத் தாண்டிப் போய்வரும் மனிதர்களையும், வாகனங்களையும், கட்டடங்களையும், அதன் மேல் இருந்த விளம்பரப்

பலகைகளையும் விடுப்புப் பார்த்தார்கள். சரிஸ்கா அங்கும் இங்கும் விடுப்புப் பார்த்தால் "TS"சிற்கு மனதிற்குள் நிம்மதியாக இருக்கும். சில வேளைகளில் அதை விடுத்து எங்கோ பார்த்து முறைத்துக் கொண்டு நின்றால் வயிற்றில் புளியைக் கரைப்பதாக அடி வயிறு அளைந்து நோகும். சரிஸ்காவின் வேடிக்கை பார்ப்புத் தந்த மகிழ்வில் அவரும் சிறுவனைப் போல் வேடிக்கை பார்த்தார். எத்தினை நிமிடங்கள் கழிந்து இருக்கும் என்று அவருக்குச் சரியாகத் தெரியவில்லை. பின்பக்கமாகத் தோழில் ஒரு கை விழுந்ததை உணர்ந்து திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தார். தாமோதரனும், மாலினியும் சிரித்த வண்ணம் நின்றார்கள்.

உலகத்தில் படைக்கப்படும் மனிதர்களில் ஒருவன் அறிவாளி ஆவதும் இன்னொருவன் சோடை போவதும் அந்தத் தனி மனிதர்களின் குறை அல்ல. அது இயற்கையின் விசித்திரத்தில்... விருப்பில்... பல இலட்சம் வருடம் பரிசோதித்து இயற்கை கடைந்தெடுத்த நெய்யாக, தாயின் கருவறையில்... படைக்கப்படும் மூளையும், அதில் பொதிந்து கிடக்கும் நரம்புக் கலங்களும், அதனில் பாய்ச்சப்படும் மின் சமிக்கைகளும், ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமாக அமைந்து விடுகின்றது. இந்த அடிப்படை விளங்காது திறமையான மற்றைய மனிதனைப் பார்த்து மலைப்பதும், போற்றுவதும், மயங்குவதும், சங்கம் அமைப்பதும், கொடி பிடிப்பதும், கோபத்தில் தூற்றுவதும், பட்டியல் போடுவதும் பேதைமை அல்லவா? அறிவுஜீவிகள் என்பவர்கள்கூட சில விடயங்களில் அறிவீனர்களாக இருப்பதும் அந்த விசித்திர கோளத்தின் மர்மம். இயற்கையின் சூட்சுமம் அதுவே என்று "TS" எண்ணினார்.

"ஆன்ஸ்ரயின்" மூளையில் என்ன இருந்தது? அந்த நரம்புக் கலங்களை இயற்கை கோர்த்த விதம் யாருக்கு விளங்கும்? அணுக்களையும், அண்டத்தையும், ஆண்டவன் மனிதனுக்குக் கூறாததையும், அவரால் எப்படி மனிதருக்குக் கூற முடிந்தது? அந்த மூளைக்குள் அடங்கும்படி ஏன்? எப்படி? அது படைக்கப்பட்டது? அவர் நிருபித்த ஞானம் ஏடுகளில் கற்றதால் வந்ததா? அல்லது அவர் மூளையில் மின்பொறிச் சுடராய் உள்ளுக்குள் இருந்து பெரும் ஊற்றாக எழுந்ததா? அல்லது பிரபஞ்சத்தில் இருந்து அவரது மூளைக்குள் மின்னலாகப் பாய்ச்சப் பட்டதா? அவர் மூளையை வெட்டி வெட்டி ஆராய்ந்து எதைக் கண்டுபிடிக்க முடிந்தது? துணைக் கலன்களுக்கும் நரம்புக் கலன்களுக்கும் என்ன தொடர்பு?

துணைக் கலன்களை அதிகரித்து வருங்காலத்தில் பல ஆன்ஸ்ரெயின்களை உருவாக்க முடியுமா?

மனிதர்களுக்கு இடையேயான போட்டிகள் அறிவிலிகளுக்கான அடையாளம். ம்... அறிவுஜீவிகள் என்று சொல்லிக் கொள்ளும் அறிவிலிகளின் அடையாளம். ஒவ்வொரு மூளையும் அற்புதமான தனித் தன்மையுடன் படைக்கப்பட்டு இருக்கிறது. அந்த மூளை போல் வேறு ஒரு மூளையைத் தேடிப் பிடிக்க முடியாது. என்பதாக "TS"சின் எண்ணம் பொருத்தமற்ற நேரத்தில் விவஸ்தை அற்று விரிந்தது.

தாமோதரனின் மூளை வெளியே குளிர்வதாய் உணர்ந்து இருக்க வேண்டும். நல்ல தடித்த கறுத்த மேலங்கியோடும் தலையில் நீலத் தொப்பியோடும் "TS"சைப் பார்த்து அவரது நீட்டுப் பற்கள் தெரியச் சிரித்தார்.

மாலினி நீல நிறக் காற்சட்டையும், ஊதா நிற மேலங்கியும் அணிந்து இருந்ததோடு கையில் தொப்பியும், கையுறையும் வைத்திருந்தாள். மாலினியின் பார்வையில் நலம் விசாரிக்க, புதினம் பிடுங்க என்கின்ற அடங்காத ஆசையின் அவஸ்தை. அவள் கணவனோடு சோடி கட்டிக் கொண்டு நிற்பதைவிட புவனலோசினிக்கு அருகே போனாலே புதினம் அறியலாம் என்கின்ற ஆர்வக் கோளாற்றில் நகர்ந்து புவனலோசினிக்கு அருகே சென்றாள். மாலினி புவனலோசினிக்கு அருகே வந்தது சரிஸ்காவிற்குப் பிடிக்கவில்லை. அவள் மாலினியை ஒருவாறு பார்த்துவிட்டுக் கட்டடத்தின் மேல் இருந்த விளம்பரப் பலகையை முறைத்தாள். "TS"சிற்கு "Tram" விரைவாக வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அதைக் காணவில்லை. கண்முன்னே தாமோதரனும், மாலினியுமே நின்றார்கள். அது அவர் மனதைக் கொன்றது. தாமோதரனுக்கு விளங்கியதா அல்லது விளங்கவில்லையா? அவன் மூளையின் இயக்கம் "TS"சைச் சில வேளை வியக்க வைக்கும். எந்தக் குற்ற உணர்வும் இல்லாதவனாய் தாமோதரன் தொடர்ந்து சிரித்தார். பின்பு "TS"சைப் பார்த்து,

"எங்க.... சொப்பிங் போறியளோ? இல்லாட்டி வேறு ஏதும் அலுவலாப் போறீங்களோ? புதுசா வந்தவைதானே... எல்லா இடமும் கூட்டிக் கொண்டு போய் காட்ட வேணும். நாங்களும் உங்களிட்டை வரவேணும் எண்டு நினைச்சு இருந்தம். நேரம் கிடைக்க இல்லை. கெதியா உங்களிட்ட

ஒருக்கா வரவேணும். எப்பிடி இருக்குதாம் நோர்வே?" என்று கேள்விகளால் "TS"சைத் தாமோதரன் திக்குமுக்காட வைத்தார்.

"ஓ செந்தூரம்தான் போகிறம்... சும்மா கடையளைச் சுத்திக் காட்டிக் கொண்டு வருவம் எண்டு வெளிக்கிட்டன். இங்கத்தே கடையளைப் பார்க்கிறது அவைக்குப் புதினமாகத் தானே இருக்கும். நீங்கள் எங்க பயணம்?" என்றார் "TS".

"நாங்கள் பிள்ளையள் இரண்டு பேரையும் பள்ளிக்கூடத்தில விட்டிட்டு வாறம். எனக்குப் பத்து மணிக்கு வேலை தொடங்க வேணும். அவ ஐஞ்சு மணிக்குக் கீ யோப்பிற்குப் போக வேணும். அவ திரும்பி வாறத்துக்குப் பதினொரு மணி ஆகீடும். இங்க பயம் இல்லாமல் போய் வரலாம் தானே? ஊரில எண்டா உதை நினைச்சே பார்க்க ஏலாது எல்லோ?" என்று தொடர்ந்தார் தாமோதரன்.

"என்ன...? மகள் கதைக்கப் பயப்பிடுகிறா போல? நாங்கள் ஒண்டும் கடிச்சுச் சாப்பிட மாட்டம். பின்னேரங்களில வீட்ட வந்தாத் தம்பிமாரோடை விளையாடலாம். படிக்கலாம். எல்லாருக்கும் பிரயோசனமாய் இருக்கும் எல்லேங்கோ?" என்றாள் மாலினி.

சரிஸ்கா மாலினியை விட்டுச் சிறிது விலகிப் புவனலோசினியோடு ஒட்டிக் கொண்டாள்.

"TS"சின் பெரும் சங்கடத்தையும், அவதியையும் தீர்ப்பது போல "Tram" வந்து நின்றது. அந்த "Tram"இன் வெளிப்புறத்தை அவதானிக்க முடியாத அவசரத்தோடு எல்லோரும் ஏறினார்கள். ஏற்கனவே ஆசனங்களில் இருந்தவர்களின் பார்வை உள்ளே வருபவர்களை நோண்டியது. வெளிநாட்டுக்காரரைப் பார்ப்பதில் ஒஸ்லோ வாசிகளுக்கு எந்தப் புதினமும் இல்லை. அது ஏற்கனவே பாகிஸ்தானியரைப் பார்த்துப் பார்த்துப் பழகிப்போய் விட்ட ஒன்று. தற்போது ஏறிவந்தவர்களும் உள்ளே இருப்பவர்களை ஒரு அலசு அலசி விட்டு தங்கள் ஆசனங்களைப் பிடிக்க அவதியாக முன்னேறினார்கள்.

"TS" தான் வாங்கி வைத்து இருந்த அட்டையை இயந்திரத்திற்குள் தள்ளி அதன் பதிவை அதில் உறுதி செய்தார். சரிஸ்கா ஒருவிதக் கூச்சத்தோடு ஒரு

ஆசனத்தில் அமர்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு இளைஞன் அமரப் போக அவள் அந்த ஆசனத்தை விட்டு எழுந்தாள். அவன் ஆசனத்தில் இருந்த பின்பும் அவள் அமராது அப்படியே நின்றாள். அவன் விளங்காது திகைத்தான். பின்பு அவளை ஒரு விதமாகப் பார்த்துவிட்டு நகர்ந்து வேறு ஒரு ஆசனத்தில் அமர்ந்தான். புவனலோசினி விரைவாகச் சென்று சரிஸ்காவிற்குப் பக்கத்தில் இருந்தாள். சரிஸ்கா அம்மாவை முறைத்துப் பார்த்துவிட்டு வெளியே பார்க்கத் தொடங்கினாள். "TS" ஒரு ஆசனத்தில் இருக்க அவர் அருகில் தாமோதரன் அமர்ந்தார்.

புவனலோசினிக்கு பின்னால் இருந்த ஆசனத்தில் மாலினி வந்து இருந்தாள். அவளுக்குச் சரிஸ்காவின் நடவடிக்கை விசித்திரமாக இருந்தது. என்ன பிரச்சனை இவளுக்கு என்கின்ற கேள்வி அவளைக் குடைந்தது. அதை நேரடியாகக் கேட்கும் துணிவு அவளுக்கு இருக்கவில்லை. அவளால் கதைக்காமலும் இருக்க முடிய வில்லை. அவள் புவனலோசினியின் முதுகைச் சுரண்டி,

"ஏன் உங்கடை மகள் இப்பிடி பயப்பிடுகிறாவுங்கோ? இன்னும் இலங்கையில இருக்கிற நினைப்பே? இங்க இரவிலையும் பெம்பிளையள் தனியாகப் போய் வரலாம். அவவுக்கு விஷயத்தை விளங்கப் படுத்துங்கோ. பேயைக் கண்ட மாட்டைப் போல எதுக்கு அரள அரளப் பார்க்க வேணுமுங்கோ? இது நோர்வே... இங்க யாரும் எதுவும் செய்யமாட்டினம். ஊரிலதான் ஆமி, நேவி, மற்ற இயக்கம், கள்ளர் காடர், பேய் பிசாசு எண்டு பயப்பிட வேணும். இங்க யாருக்கும் எதுக்கும் பயப்பிட வேண்டியது இல்லைத் தானேங்கோ. எல்லாப் பயத்தையும் விடவேணும் எண்டுதானே ஓடி வந்தமுங்கோ." என்றாள்.

"அவளுக்கு அங்க இருந்த பயம் உடன மாற மாட்டுது தானே? கொஞ்சம் கொஞ்சமா மாறீடும். எனக்கே இன்னும் இலங்கையில இருக்கிற நினைவு மாற இல்லை. அவள் சின்னப் பிள்ளை தானே? கொஞ்ச நாள் பிடிக்கும். நாங்கள் விஷயத்தை எடுத்துச் சொல்லுவம்." என்று புவனலோசினி தனது நடுக்கத்தை மறைத்து மாலினிக்குச் சமாதானம் சொன்னாள். மாலினி தேவை இல்லாத கதைகளை யாருக்கும் சொல்லி விடுவாளோ என்கின்ற பயம் அடிமனதில். உள்ளத்து வேதனை ஒரு பக்கம், ஊர் வம்பை நினைத்து நடுங்குவது மறு பக்கமாக அவள் அந்தரித்தாள்.

"பயம் இருக்கத்தான் வேணும். அதுக்கு இவ்வளவு பயம் இருக்கக் கூடாது. எதுக்கும் அவளை கவனமாப் பாருங்கோ. பெம்பிளைப் பிள்ளை நாளைக்குக் கலியாணம் காட்சி எண்டு செய்யத்தானே வேணுமுங்கோ." என்று தொடர்ந்தாள் ஓயாத வாய் மாலினி.

விட்டால் இப்போதே பட்டம் கட்டிவிடுவாளோ என்கின்ற எரிச்சல் புவனலோசினிக்கு பொத்துக் கொண்டு வந்தது. பொறுமை இல்லாது குழம்புவதால் பின்னுக்கு வருத்தப்படக் கூடாது என்கின்ற முன்னெச்சரிக்கை உணர்வு அவளை நிதானம் ஆக்கியது. புவனலோசினிக்கு ஏனோ திடீரென உடம்பு கூசியது. ஏதோ நினைவுகள் எல்லாம் வந்து போயின. மறக்க முடியாத சாபம் அது. எழுந்து சென்று ஓடும் "Tram"இல் இருந்து குதிக்க வேண்டும் என்கின்ற அந்தரம் தோன்றியது. எத்தினை காலம் சென்றாலும் அந்த எரிவும், வெடுக்கும், இரத்த வாடையும், அதன் கரிப்பும் மாறாது, உயிரைப் பிழியும் வேதனையாக அந்த நினைவு அலையாகத் தொடரும். தொடர்ந்தது. நடந்த சம்பவத்தின் தடையங்கள் அழிக்கப்படலாம். மனிதர்கள் புலம் பெயர்ந்து வேறு தேசங்கள் செல்லலாம். வாழ்க்கை மாறலாம். வசதி வரலாம். எந்த மூலைக்கு ஓடினாலும் மனிதனின் மூளையை, மனதை மாற்ற முடிவது இல்லை. அதில் பதிந்த நினைவை அழிக்க முடிவது இல்லை. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் செய்யப்பட்ட அநியாயங்கள் அவன் அவன் மூளையில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. அவன் உலகத்தின் எந்தக் கோடியில் இருந்தாலும் அது அவனை வாட்டுகிறது. மறதி என்பது இல்லாது இருந்திருந்தால் மனித இனமே இப்படியான வேதனைகளால் மரணித்திருக்கும். மறதி இருந்தும் மரணிக்காத நினைவுகள் பல உண்டு. அது மனதை நிறைத்துவிட்டால் நரகம் பூமிக்கு வந்துவிடுகிறது.

"என்ன... நீங்களும் பேசாமல் இருக்கிறியள்?" என்றாள் மாலினி. புவனலோசினிக்குக் கோபம் வந்தது. அவள் அதைக் காட்டிக் கொள்ளாது,

"அவளின்ரை வேதனை அவளுக்குத் தானே தெரியும்." என்று புவனலோசினி கூற மாலினி இவள் எதைக் கூறுகிறாள் என்று குழம்பிக் கொள்ள, மத்திய புகையிரத நிலையத்திற்கு "Tram" வந்து சேர்ந்தது.

"Tram"மால் இறங்கிய உடன் தாமோதரன் தனக்கு நேரமாகி விட்டது என்று கூறிவிட்டு அவசரமாகச் சுரங்கரத நிலையத்தை நோக்கிச் சென்றார். மாலினியை அழைத்துச் செல்வது தங்களுக்கு உதவியாக இருப்பதைவிட உபத்திரவமாக இருக்கும் என்பது "TS"சிற்கு விளங்கினாலும் அவளை எப்படிக் காய் வெட்டுவது என்பது அவருக்குத் துப்பரவாகத் தெரியவில்லை.

சரிஸ்காவும், புவனலோசினியும் நகரத்தின் மத்திய பகுதியில் இருந்த கட்டடங்களையும், கடைகளையும், மனிதர்களையும் வியப்போடு பார்த்தார்கள். கொழும்பிற்கும் ஒஸ்லோவிற்கும் நகர அமைப்பிலும், துப்பரவிலும் நிறையவே வித்தியாசம் கண்டதான ஆர்வத்தில் அவர்கள் அகலக் கண்களை விரித்தனர்.

சரிஸ்காவும், புவனலோசினியும் இப்போது உள்ள மன நிலையில், அவர்களை மாலினி இன்றித் தனியே அழைத்துச் செல்வதே உத்தமமாய் "TS"சிற்குத் தோன்றியது.

"மாலினி..." என்றார் "TS".

"சொல்லுங்க அண்ணை." என்றாள் அவள் பாசத்தோடு.

"உங்களுக்குப் பின்னேரம் வேலை இருக்குது எல்லோ?"

"ஓம்... வேலைக்குப் போகத்தான் வேணும். அதுக்கு முதல் சமைக்கவும் வேணும்."

"இவ்வளவு அலுவல் இருக்க எதுக்காக எங்களோடை நீங்கள் அலைகிறியள்? நாங்கள் திரும்பி வர நிறைய நேரம் ஆகும். அவை புதிசு. ஆறுதலா ஒவ்வரு இடமும் நிண்டு நிண்டு பார்ப்பினம். நீங்கள் போய் உங்கடை அலுவலைப் பாருங்கோ."

"இல்லை அண்ணை... அவை இரண்டு பேருக்கும் நான் உதவியா இருக்க வேணும் எண்டு நினைச்சனுங்கோ."

"உண்மை தான். நீங்கள் வந்தா உதவியாகத் தான் இருக்கும். ஆனா... நாங்கள் வரக் கன நேரம் ஆகும். அதால நீங்கள் வேலைக்கும் போகாமல், சமையலும் இல்லாமல் உங்களுக்குத் தேவை இல்லாத சிரமம் குடுக்கிறது எனக்குச் சரியாத் தெரிய இல்லை. நீங்கள் போய் உங்கடை அலுவலைப் பாருங்கோ. நாங்கள் சுத்திப் பார்த்திட்டு ஆறுதலா வாறம்."

"அப்பிடியே சொல்லுகிறியள்? அப்ப சரி. நான் உதால குரன்லாண்ட் நடந்து போய் மரக்கறி வாங்கிக் கொண்டு வீட்டை போறனுங்கோ. அப்ப சந்திப்பம் புவனா அக்கா... சரிஸ்கா நான் போயிட்டு வாறன்."

"ஓ போயிட்டு வாங்கோ..." என்றாள் புவனலோசினி. "TS" சரிஸ்காவிற்கு அருகே சென்றார். அவளுக்கு அதிக கவனம் தேவைப்படுவது அவருக்கு விளங்கியது. ஸ்கன்டிநேவியாவின் சனத்தொகை குறைந்த நாடுகளில் நோர்வே ஒன்றாக இருந்தாலும் கால்யோகன்ஸ்காத்தா என்னும் வீதியில் சனத்திற்குக் குறைவு இருப்பதில்லை. அந்த வீதியில் சாப்பாட்டுக் கடைகள்தான் அதிகம். "TS"சிற்குச் சாப்பாட்டுக் கடைக்கு அவர்களைக் கூட்டிக் கொண்டு போகும் உத்தேசம் இல்லை. கூட்டிச் சென்றாலும் இவர்களின் உணவு பிடிக்குமா என்கின்ற பூதாகரமான கேள்விக்குத் தெளிவான பதில் இன்னும் அவரிடம் இல்லை. கால்யோகன்ஸ்காத்தாவால் போகாது "டொம்" தேவாலயத்தை நோக்கிச் சென்றால் பலவிதமான கடைகள் வருகின்றன. தொடர்ந்து அதன் சுற்றாடலில் எந்தப் பக்கம் சென்றாலும் விதம் விதமான கடைகள் இருக்கின்றன. "TS" அவர்களை டொம் தேவாலயத்தை நோக்கி அழைத்துச் சென்றார்.

நோர்வேயில் பதினெட்டு வயதாகியதும் இராணுவத்திற்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்ல இயலாதவர்கள் சமுதாயப் பணி ஏதாவது அதற்குப் பதிலாகச் செய்தாக வேண்டும். அப்படி இராணுவத்திற்குச் செல்பவர்கள் தங்களது சீருடையோடு சில வேளைகளில் வருவார்கள். நகரில் அவர்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். அப்படி ஐந்து இளைஞர்கள் "TS"சை நோக்கி வந்தார்கள். "TS"சிற்கு இங்குள்ள இளைஞர்கள் இராணுவச் சீருடையில் வந்தாலும் சரி, பொது மகனாக வந்தாலும் சரி யாருக்கும் தீங்கு விளைவிக்க மாட்டார்கள் என்று தெரியும். அவர்களைக் கண்டு யாரும் எந்த எதிர்வினையும் காட்டிக் கொள்வது இல்லை. "TS" அவர்களைப் பார்த்துச் சிரித்த வண்ணம் சென்றார்.

அவர்கள் "TS"சைப் பார்த்து விட்டு ஒரு வித மருட்சி உடன் அப்படியே நின்று விட்டார்கள். இது என்ன விசித்திரம் என்று "TS"சிற்குக் குழப்பம் ஆகிவிட்டது. பின்பு அவர்களது பார்வையை உற்று நோக்க அது தனக்கு பின்னே நீள்வதை அறிந்த "TS" திரும்பிப் பார்த்தார்.

அவரால் நம்ப முடியவில்லை. சரிஸ்கா "TS" நடந்து போன திசைக்கு எதிர்த் திசையில் ஓட, அவளைக் கலைத்துக் கொண்டு புவனலோசினி ஓடினாள். "TS"சிற்கு இப்போது விளங்கியது. "இந்த விசர்ப் பெட்டைக்கு ஏன் இது கூட விளங்கவில்லை?" என்கின்ற ஆத்திரம் முதன் முதல் வந்தது. அவர் தனது ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு தாமதிக்காது அவர்களை நோக்கி ஓடினார். அப்படி ஓடும் போது பலர் தன்னையும், புவனலோசினியையும், சரிஸ்காவையும் விடுப்புப் பார்ப்பது அவருக்கு வருத்தமாக இருந்தது. அது அவமானமாயும் தோன்றியது. மான அவமானத்தை சற்றுப் புறந்தள்ளி அவர் அவசரமாகச் சரிஸ்காவை நோக்கி வேகமாக ஓடினார்.

மீண்டும் அவர் கால்யோகன்ஸ்காத்தாவிற்கு வந்த போது அங்கு இருந்த ஒரு கடையின் ஓரத்தில் புவனலோசினி சரிஸ்காவைக் கட்டிப் பிடித்து அமைதிப் படுத்தினாள். சரிஸ்கா அவள் பிடிக்குள் தன்னை இழந்தவளாய் தேம்பித் தேம்பி அழுதாள். அருகே வந்த "TS"சிற்குச் சிறிது நேரம் என்ன செய்வது என்று விளங்கவில்லை. பின்பு அவர்களை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்வதே உத்தமமாக அவருக்குத் தோன்றியது. எப்போது சரிஸ்கா வெளியுலகத்தை எதிர்கொள்ளப் போகிறாள் என்பது அவருக்குத் திகைப்பையும் கவலையையும் தந்தன.

19 தாமோதரன் குடும்பத்தின் வருகை

தாமோதரன் "TS" வீட்டிற்கு விஜயம் செய்ய வேண்டும் என்று தொலைபேசியில் தொல்லையாகத் தொடர்ந்து தொடர்பு கொண்டார். அவரைத் தற்போது விஜயம் செய்ய வேண்டாம் என்று சொல்வதற்கே "TS"சிற்கு விருப்பமாக இருந்தது. அவர் வருவதால் உண்டாகும் சங்கடங்கள் கண்முன்னே திரைப்படக் காட்சி போல் அவருக்கு விரிந்தன. தொலைபேசியில் தொடர்பு கொண்டு விஜயம் செய்ய வருகிறேன் என்பவரை வேண்டாம் என்று சொல்வது மரியாதை இல்லை என்பதும் விளங்கியது. அது பகையாகிவிடும் என்கின்ற அச்சம் அவருள்

எழுந்தது. இங்கு இருக்கும் ஒரு சில தமிழர்களோடும் கோபித்துக் கொண்டு தனியே இருப்பது நலமல்ல எனத் தோன்றியது.

"TS" வா என்று சொல்வதா வராதே என்று சொல்வதா என்று தத்தளிக்கும் போதே "அப்ப நாங்கள் ஐஞ்சு மணிக்கு வாறம்." என்று விட்டுத் தாமோதரன் தன்னிச்சையாகத் தொலைபேசியைத் துண்டித்துக் கொண்டார். அதன் பின்பு அவர் வருகைக்கான ஆயுத்தங்களை செய்வதைத் தவிர வேறு மார்க்கம் "TS"சிற்கு இருக்கவில்லை. ஐந்து மணிக்கு வருவதால் ஏதாவது இரவுச் சாப்பாடும் செய்ய வேண்டும் என்பது "TS"சின் விருப்பம்.

புவனலோசினிக்கு வாழ்ந்தால் என்னச் செத்தால் என்ன என்கின்ற எண்ணம் இப்போது. சரிஸ்காவிற்கும் தனக்குமாக நடைப்பிணமாய் அவள் வாழ முயற்சிப்பது "TS"சிற்கு விளங்கியது. அதை எப்படி மாற்றி அமைப்பது என்பது எப்போதும் அவருக்கு விளங்குவது இல்லை. சில வேளைகளில் இது எல்லாம் தன்னால் வந்த வில்லங்கம் என்கின்ற குற்ற உணர்வு எழுந்து அவரைச் சரமாரியாக உதைக்கும். அங்கு இருந்திருந்தால்கூட தான் என்ன செய்திருக்க முடியும் என்று அவர் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொள்வார். தான் இருக்க முடியாத கட்டத்தில்தானே அவர்களை அங்கு விட்டு கொழும்புக்கு வந்தேன் என்றும் ஆறுதல் படுவார். அதற்கான தண்டனையில் இருந்து அவருக்கு ஆறுதலோ அமைதியோ கிடைக்கும் என்கின்ற நம்பிக்கை இருக்கவில்லை.

புவனலோசினி கோலை அலங்கரித்து விட்டு இடியப்பம் இல்லைப் பிட்டு அவிக்கலாம் என்று கூறினாள். ஏதாவது கொடுத்து அனுப்பினால் சரி என்று "TS" திருப்திப்பட்டுக் கொண்டார். அவர்கள் வீட்டில் போய் பிரியாணி சாப்பிட்டது ஞாபகம் வந்தது. சின்னப் பிள்ளைகளும் வருவதால் எதாவது ஐஸ்கிறீம் வாங்கி வந்தால் நல்லது என அவருக்குத் தோன்றியது. அவர் தனது மேலங்கியை எடுத்து கொளுவிக் கொண்டு வெளியே கடைக்குச் சென்றார்.

கடையால் திரும்பி மீண்டும் வீட்டிற்கு வந்த போது தாமோதரன் குடும்பம் வந்து விட்டனர். அவர் கடைக்குள் நிற்கும் போது அவர்கள் சந்தியைத் தாண்டி வந்திருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். அல்லது அவர்களைத்

தெருவில் சந்தித்திருப்பார். தான் நிற்கும் போது அவர்கள் வருவதே அவருக்கு விருப்பமாய் இருந்தது. தான் இல்லாத நேரத்தில் வந்தால் உளறல்களால் உபத்திரவங்கள் ஏதாவது ஏற்படலாமோ என்கின்ற அச்சம் ஓட்டிற்குள் புதைந்த ஆமையாக எப்போதும் மனதிற்குள் பயமாகக் கிடந்தது.

வீடு புயலை விழுங்கிய மறுநாட் பொழுதாக அமைதி பேசியது. தாமோதரனும் மாலினியும் கோலில் உள்ள சோபாவில் இருந்தனர். சுவரோரமாக இருந்த ஒரு கதிரையில் புவனலோசினி இருந்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஒவ்வொரு சொல்லில் பதில் கூறினாள். சோபா மேசையில் "Chocolate" பொதி ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. இப்போதுதான் வந்திருக்க வேண்டும் என்று "TS" நினைத்தார். அவர்களுக்குக் குடிப்பதற்கு எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும் கண்டு கொண்டார்.

முன்பு எல்லாம் புவனலோசினி வாய் திறந்தால் அது எப்போது மூடும் என்கின்ற அலுப்பு "TS"சிற்கு வரும். இப்போது அவள் எப்பிடி மாறிப் போய்விட்டாள் என்பது அவரைப் பயத்தில் நடுங்க வைக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அவள் சகஜ நிலைக்கு மாறிவிட வேண்டும் என்பதே அவருடைய தற்போதைய பிரார்த்தனை. நாட்கள் செல்கின்றன. பாரிய மாற்றங்கள் எதுவும் நிகழ்வதாக அவருக்குத் தோன்றவில்லை. ஆரம்பத்தில் துர்க்கை அம்மனின் நினைவு அடிக்கடி வந்து போனது. அதுவும் இப்போது வெறுத்துப் போய் விட்டது. தன்னை எல்லோரும் கைவிட்டதான ஏக்கம் அவருக்கு அடிக்கடி உண்டாகும். தனிமையில் இருந்து அழவேண்டும் என்கின்ற ஆதங்கம் பிறக்கும். ஏற்கனவே கலங்கிப் போயிருக்கும் இரண்டு பெண்களையும் மேலும் தானும் கலக்கி அவர்களை அதிகமாகக் குழப்பத்தில் தள்ளுவதற்கு அவருக்கு விருப்பம் இருக்கவில்லை. புவனலோசினியை விடச் சரிஸ்கா பற்றியே அவர் எப்போதும் மனதிற்குள் குமுறுவது உண்டு. மாலினி விஷயம் விளங்காது அவளைக் குழப்பி விடுவாளோ என்கின்ற பயம் இருந்தது. நல்ல வேளையாக மாலினி கோலிற்குள் இருந்தது அவருக்கு ஆறுதல் தந்தது.

சரிஸ்காவின் அறைக்குள் இருந்து நரேசினதும், குணேசினதும் "வாங்க அக்கா வெளிய போவம்." என்கின்ற கெஞ்சல் கேட்டுக் கொண்டு இருந்தது. சரிஸ்கா என்ன

மனநிலையில் இருப்பாள் என்பது "TS"சிற்குத் தெரியாது. தான் அழுவாளோ? அல்லது அவர்களை அழ வைப்பாளோ என்கின்ற பயமும் வந்து போயிற்று. என்ன நடக்கிறது என்று "TS" எட்டிப் பார்த்தார். சரிஸ்கா "இப்ப அங்க போய் என்ன செய்யப் போகிறியள்?" என்று வெருட்டும் தொனியில் அவர்களைப் பார்த்துக் கேட்டாள்.

"அக்கா... அக்கா... அங்க பார்க்கு இருக்குது அக்கா. அதில பந்து விளையாடலாம். வெளியில வெயில் எறிக்குது அக்கா..."

"வெயில் எறிச்சாலும் குளிருமடா." என்றாள் சரிஸ்கா. சரிஸ்கா இவ்வளவு கதைத்ததே "TS"சிற்கு பெரும் வியப்பையும், சந்தோஷத்தையும் தந்தது. அவர் நகர்ந்து சமையல் அறைக்குச் சென்றார். ஐஸ்கிறீமை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தார். சிறிது நேரத்தில் அந்த அதிசயம் நடந்தது. சரிஸ்கா நரேசோடும், குணேஸ்சோடும் புறப்பட்டு வெளியே சென்றாள். "TS"சிற்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது. அவர் கோலுக்குள் வந்து சோபாவில் அமர்ந்தார். அவர் வந்ததும் புவனலோசினி தேநீர் தயாரித்து வர எழுந்து சென்றாள். அதைப் பார்த்த மாலினி தானும் எழுந்து அவளோடு சமையல் அறைப் பக்கம் சென்றாள். மாலினி புவனலோசினியைக் கேள்விகள் கேட்டுத் திக்குமுக்காடப் பண்ணக் கூடாது என்கின்ற கவலை "TS"சிடம் எழுந்தது. தாமோதரனின் கதைகளுக்கு ஓம் சொல்லிக் கொண்டு இருந்தாலும் சமையல் அறைக்குச் சென்று புவனலோசினியும், அவளைத் தொடர்ந்து சென்ற மாலினியும் என்ன கதைக்கிறார்கள் என்பது பற்றிய நினைவு அவரது நிம்மதியைத் தின்றது. "TS"சின் வதனத்தில் ஓடிய கவலைக் கோடுகளின் நாடியைப் பிடித்ததான பெருமை தாமோதரனுக்கு. மனதில் நினைத்து விட்டதை மடக்கி வைத்திருக்க முடியாத அவதி அவரிடம்.

"மனிசி வந்தாப் பிறகு நீங்கள் நல்ல சந்தோஷமாய் இருப்பியள் எண்டு நினைச்சன். உங்கடை முகத்தைப் பார்த்தா அப்படி தெரிய இல்லையே?" என்றார் தாமோதரன். "TS" தன்னைச் அவசரமாகச் சுதாகரித்துக் கொண்டு அவரது சந்தேகத்திற்கு பதில் கூறினார்.

"எனக்கு என்ன கவலை? இங்க என்ன ஆமியோ நேவியோ? இல்லாட்டி நாளைக்குச் செலவுக்குக் காசு

இல்லை எண்ட பிரச்சனையோ? இருக்க வீடு இருக்குது... சாப்பிடச் சாப்பாடு இருக்குது... மனிசியும் பிள்ளையும் என்னோடை இருக்கினம். எனக்கு என்ன கவலை இருக்கும் எண்டு நீங்கள் நினைக்கிறியள்? சொல்லுங்க பார்ப்பம்? வேலைச் சலிப்பில முகம் சுருண்டு கிடக்குது போல... இதை எல்லாம் நீங்கள் பெரிசுபடுத்தாதேங்க..."

"அதுதான் எனக்கும் விளங்க இல்லை. இப்ப உங்களுக்கு எல்லாம் இருக்குது. நீங்கள் ஏன் கவலைப்பட வேணும்? அது சரி... மகளுக்கு ஸ்கூல் கிடைச்சிட்டுதா?"

"ம்... கதைச்சு இருக்குது... வாற கிழமையில இருந்து வரச் சொல்லி இருக்கிறாங்கள்."

"நொஸ்க் எப்பிடிச் சமாளிக்கப் போகிறா?"

"அவள் ஆங்கிலம் கதைப்பாள். நொஸ்க் எக்ஸ்றாவா சொல்லிக் குடுப்பினமாம். அவவுக்கு மொழி படிக்கிறது பிரச்சனை இல்லை எண்டு எனக்குத் தெரியும்." என்றார் "TS".

"நாங்கள் நினைக்கிற மாதிரி இல்லை. இவங்கள் வாசிக்கிற வேகம் காணாது எண்டு கொம்பிளையின் பண்ணி இருக்கிறாங்கள். இன்னும் கூட நேரம் இவங்களை வாசிக்கச் சொல்லி இருக்கிறாங்கள். இவங்கள் எங்க அதைக் கேட்கிறாங்கள். எங்க யாரோடை விளையாடப் போகலாம் எண்டதுதான் எப்பவும் அவங்கடை ஒரே தியானம். ஒரு கொஞ்சம் கூடப் பொறுப்புக் கிடையாது." என்றார் தாமோதரன்.

மாலினி மூவருக்கும் தேநீரோடு கோலுக்குள் வந்தாள். பின்பு அதைக் கொடுத்துவிட்டு தானும் சோபாவில் அமர்ந்து அருந்தத் தொடங்கினாள். அதைப் பார்த்த தாமோதரன்,

"புவனா அக்கா என்ன செய்கிறா? ஏதும் சமையல் அலுவல் எண்டா நீயும் உதவி செய்யலாம் தானே? வந்த புதுசு இங்கத்தே சமையல் வித்தையள் எல்லாம் தெரியாமல் இருக்கும்..."

"அவதான் தேவை இல்லை எண்டு போயிருக்கச் சொல்லிப் போட்டா. தான் தனியவே சமாளிப்பாவாம். நான் இரண்டுதரம் கேட்டுப் பார்த்திட்டன். அது ஏதோ "TS" அண்ணை கதைக்கிற மாதிரி அவ கதைக்கிறா இல்லை.

தங்கம் மாதிரி ஒண்டு இரண்டு சொல்லுத்தான் அவவின்ரை வாயில இருந்து உதிருது." என்றாள் மாலினி.

"புதுப் பழக்கம் தானே? அதுதான் இப்பிடி. இல்லாட்டி புவனா நல்லாக் கதைப்பாள்." என்று "TS" சமாளித்தார்.

*

விளையாடக் கீழே போன சிறுவர்களுக்கு நிழலும் வெயிலும் இடித்துத் தள்ளி விளையாடும் அந்தப் பூங்கா மிகவும் பிடித்துக் கொண்டது. அங்கு உயர்ந்த மரங்கள் பல நின்றன. சில இடங்களில் அவை அடர்த்தியாகச் சடைத்து நின்றன. அவற்றிற்குப் பின்னால் யாரும் ஒளித்து இருந்தால் யாராலும் கண்டு பிடிக்க முடியாது. சரிஸ்காவுக்கு அந்தப் பகுதியைப் பார்க்கப் பிடிக்கவில்லை. செப்பில் ஒரு எருமை மாட்டுச்சிலை ஒரு மரத்தின் அடியில். அது சண்டைக்குத் தயாராக நிற்பது போன்று நின்றது. இரண்டு மனித உருவங்கள் கல்லில் வடிக்கப்பட்டு வெயில் படும்படி வைத்து இருந்தனர். சில ஆப்பிள் மரங்களும், சில பியர் மரங்களும் பழம் தரும் தருக்களாக அங்கே நின்றன. ஆப்பிள் மரங்களின் கீழ் உதிர்ந்து விழுந்த சில பச்சை நிற ஆப்பிள்கள் கிடந்தன. சரிஸ்காவிற்கு அந்த இயற்கை பிடித்தாலும் மரம், செடி, கொடிகள் பற்றையாக சடைத்து நிற்பது பிடிக்கவில்லை. இராணுவத்தினர் இப்படியான பற்றைகளில் ஒளிந்து இருந்துவிட்டுப் பாய்ந்து வருவார்கள். அல்லது கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளுவார்கள் என்பது அவளுக்குத் தெரியும். தாங்கள் நோர்வேக்கு வந்து விட்டோம் என்பது விளங்கினாலும் இங்கும் இராணுவம் நிற்குமோ என்கின்ற அச்சம் அவள் அடிமனதில் முளைவிட்டது. அவர்களை அவள் ஏற்கனவே பார்த்து இருக்கிறாள். அவள் இப்போது அவதானமாகப் பற்றைகளை ஆராய்ந்து பார்த்தாள். பச்சைப் பாதணிகளைக் கண்டால் வீட்டிற்குப் பாய்ந்து ஓடுவதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டாள். பற்றையை உற்றுப் பார்த்த வண்ணம் சரிஸ்கா தொடர்ந்தும் அப்படியே நின்றாள்.

"அங்க என்ன பேயா நிக்குது, அப்பிடிப் பாக்கிறீங்க? பேய் எல்லாம் நாங்கள் இங்க பார்த்தது கிடையாது... வாங்க அக்கா விளையாடுவம்." என்று நரேஸ் அவளது கையைப் பிடித்து இழுத்தான். அவள் விருப்பம் இல்லாது அசைந்தாள்.

"பேய் இல்லையடா... ஆனா... ஆமி பேய் மாதிரி வரும்." என்றாள்.

"ஆமி வந்தா என்ன? அவங்கள் மனிசர் இல்லையா?" என்றான் குணேஸ்.

"ஆமி வந்தா… ஆமி வந்தா… போங்கடா... உங்களுக்கு என்ன தெரியும்? அதுவும் சிலோன் ஆமி பற்றி என்ன தெரியும்? அவங்கள் ஈவிரக்கம் இல்லாமல் சுட்டு தள்ளுவாங்கள். எது வேணும் எண்டாலும் செய்வாங்கள். அவங்கள் பேயளைவிட மோசம் எண்டது எனக்கு நல்லாய் தெரியும். ஓம்... நல்லாய் தெரியும்." அவள் குரல் மாறி இருந்தது. அதில் ஆத்திரம், பயம், நடுக்கம் ஆகியவை தொனித்தன.

"இங்க ஆமி ஒண்டும் செய்ய மாட்டாங்களே? இங்க நீங்களும் ஒரு நாளைக்கு ஆமிக்குப் போக வேணுமே..."

"நான் போகமாட்டன். எனக்கு ஆமியைக் கண்டாலே பிடிக்காது."

"சரியக்கா… இப்ப விளையாட வாங்க."

"எனக்குப் போல் விளையாடத் தெரியாதடா..."

"தெரிஞ்ச அளவில அடியுங்க அக்கா... பிளீஸ்..."

அவர்களின் கெஞ்சலைப் பார்த்துவிட்டுச் சரிஸ்கா அவர்களோடு சேர்ந்து பந்தை உருட்டத் தொடங்கினாள். இவர்களைவிடச் சிறிய நோர்வேப் பெண்பிள்ளைகள் இருவர் சில்லுப் பூட்டிய நாய் பொம்மைகளை இழுத்துக் கொண்டு வந்தார்கள். இவர்கள் விளையாடுவதைக் கண்டு விட்டு அதை ஆர்வமாகப் பார்க்கத் தொடங்கினார்கள். ஓடு... ஓடு... அடி... அடி... என்று நரேசும், குணேசும் கத்திக் கத்தி விளையாடச் சரிஸ்காவும் சற்றுத் தன்னை மறந்து பந்தைக் கலைத்து விளையாடினாள். அப்படி விளையாட்டில் ஒன்றி இருந்தாலும் பற்றைக்குள் இருந்து யாரும் வந்து விடுவார்களோ என்கின்ற அவள் பயம் கலந்த கவனத்தில் குறைவு இருக்கவில்லை.

அப்போது திடீரென நோர்வே இராணுவத்தின் சீருடை அணிந்த ஆறடி உயரமான, மீசை வைத்த சுதேசி ஒருவன் பூங்காவிற்கு மறுபக்கம் இருந்து பூங்காவை நோக்கி வந்தான். அதை முதலில் கண்டவள் சரிஸ்காதான். அதைக் கண்டதும்,

"ஐயோ நான் வாறன்..." என்று நரேசையும், குணேசையும் பார்த்துக் கத்திய வண்ணம் தங்கள் வீட்டை நோக்கி ஓடினாள். பூங்காவில் இருந்தவர்கள் எதற்காக அவள் அப்படிக் கத்திக் கொண்டு ஓடினாள் என்பது விளங்காது திகைத்தனர். நரேசும், குணேசும் முதலில் திகைத்தாலும் பின்பு, அக்கா நில்லுங்க... அக்கா நில்லுங்க... என்று கத்திய வண்ணம் பந்தை எடுத்துக் கொண்டு அவளுக்குப் பின்னால் ஓடினார்கள்.

ஒரு பெண் வாசல் கதவைத் திறந்து வைத்திருந்தது சரிஸ்காவுக்கு வசதியாகப் போய்விட்டது. அவள் ஒரே வீச்சாகப் படிகளைத் தாண்டித் தங்கள் கதவிற்கு முன்னால் நின்று, அவசரமாக அதைப் பலமாகத் தட்டினாள். அழைப்பு மணி இருப்பது அவளுக்குப் பயத்தில் மறந்து போய் விட்டது. நரேசும், குணேசும் அவளை விட்டுக் கலைத்துக் கொண்டு வந்து சேர்ந்து விட்டார்கள். அப்படி வந்தவர்கள் மூச்சு இளைக்க இளைக்கச் சரிஸ்காவைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்கள். அதைப் பார்க்க சரிஸ்காவிற்குக் கோபமும், அழுகையும் வந்தது. அவள் அவர்களைப் பார்த்து முறைத்தாள்.

"ஏனக்கா பயந்தாங் கொள்ளி மாதிரி ஓடியந்தியள்? இங்கை ஆமியைக் கண்டு யாரும் பயப்பிடுவினமே? சீ... நீங்கள் இப்படிப் பயப்பிடுகிறியள்...? உங்களை மாதிரிப் பயந்தாங் கொள்ளியை நாங்கள் பார்த்ததே இல்லை." என்று கூறினான் நரேஸ்.

"எனக்கு ஆமியைச் சுத்தமாகப் பிடிக்காது." என்றாள் சரிஸ்கா கோபம் மாறாது. அவள் பார்வை நிலத்தில் படிந்து கிடந்தது.

"பிடிக்காட்டி இப்பிடியா பயந்து ஓடுகிறது?" என்றான் குணேஸ்.

அவனுக்குச் சரிஸ்கா பதில் அளிப்பதற்கு முன்பு கதவு திறந்து கொண்டது. "TS" வியப்போடும் கவலையோடும் மகளைப் பார்த்தார். அவள் எதுவும் சொல்லாது தலையைக் குனிந்த வண்ணம் தனது அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். நரேசும், குணேசும் சிரித்த வண்ணம் கோலில் இருந்த தாயை நோக்கிச் சென்றார்கள்.

20 கற்பனைகளோடு

வாழும் வாழ்க்கையைவிட வாழ விரும்பும் கற்பனை வாழ்க்கை மிகவும் வளமானதும், அழகானதும், அமைதியானதும், ஆனந்தமானதும், ஆடம்பரமானதும், அற்புதம் ஆனதும் ஆகத் தோன்றும். பூமியில் வலுவாக ஊன்றி இருக்கும் கால்களை இடறித் தள்ளிக் கற்பனைக் கண்ணிற்குப் புலப்படாத உலகிற்கு மனதை அண்டத்தைத் தாண்டிக் காவிச் செல்லும். அது எப்போதும் எல்லைகள் உடைத்து, எங்கும் வியாபிக்க நினைக்கும். கற்பனைகள் எல்லாம் நிஜங்கள் ஆகி விடுவது இல்லை. நிஜம் என்று நம்பியவையே சில வேளைக் கற்பனையாய் கலைந்து போய் விடுவது உண்டு. கற்பனைகள் கலைந்தால் கவலை தான் மிஞ்சுகிறது. நிஜமே வழுவினால் நெஞ்சில் ஆறாத வடுவே உண்டாகிறது. அதில் ஆறாத வலி பொங்கி எழுகிறது. வலியை எண்ணாது வாழத் துடிக்கும் பருவம். கற்பனையில் பறப்பதற்குத் தயாராக இருக்கும் கட்டுக்கு அடங்காத மனது. பாடசாலை விடுமுறை ஒன்றிற்கு அருள் வீட்டிற்கு வந்த நிமலன் எப்போது "TS" வீட்டிற்குச் செல்வது என்கின்ற ஆர்வத்தில் துடித்தான். "TS"சுடன் அவனுக்குப் பிசின் போன்ற பாசப் பிணைப்பு இருந்தது. நோர்வேக்கு வந்தது தொடக்கம் "TS" ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து தன்னை வழிநடத்தினார் என்கின்ற மதிப்பும், மரியாதையும் குறைவு இல்லாது அவன் நெஞ்சில் நிறைந்து கிடந்தது.

"TS"சைப் பார்க்க வேண்டும். அதைவிட அவரது குடும்பத்தைப் பார்க்க வேண்டும். "TS" தனது குடும்பத்தைப் பற்றி ஒரு போதும் பிரஸ்தாபித்தது இல்லை. ஏன் என்பது நிமலனுக்கு விளங்கியதும் இல்லை. அதை நினைத்தால் தன்னை இன்னும் அந்நியனாகவே அவர் எண்ணுகிறாரோ என்கின்ற கவலை அவனுக்குத் தோன்றும். அப்படி எதுவும் அவர் மனதில் இருக்கக் கூடாது என்பதுதான் அவனது இறைஞ்சல். இருந்தும் அவர் ஏன் தனது சொந்தக் குடும்பத்தைப் பற்றிக் கதைப்பது இல்லை என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. அவர் தனது குடும்பத்தைப் பற்றிக் கதைக்காவிட்டால் என்ன? இன்று அதை நேரில் பார்த்துவிட வேண்டும் என்கின்ற ஆசை எழுந்து நின்று கூத்தாடியது. அவரையும், அவரது குடும்பத்தையும் கண்குளிரப் பார்த்துவிட வேண்டும் என்கின்ற ஆசை இடைவிடாது தொடரும் அலையாக அவனுள் ஆர்ப்பரித்தது.

அருளிடம் இருந்து தொலைபேசி அழைப்பு "TS"சிற்கு வந்தது. அதில் அருள் தங்கள் வரவு பற்றி "TS"சிற்கு அறிவித்தான். அவர்கள் வரவு சௌகரியமாக இருக்கப் போவதில்லை என்பது "TS"சிற்கு அப்போது விளங்கியது. அதற்காக அவர்களை வரவேண்டாம் என்று சொல்லும் துணிவும் அவரிடம் இருக்கவில்லை.

புவனலோசினியிடம் அவர்கள் வரப்போவது பற்றி "TS" மெதுவாகக் கூறினார். புவனலோசினியின் முகம் தொட்டாற் சுருங்கி போல வாடிப் போயிற்று. அது வாடினாலும் அவர்கள் வரவைத் தடுக்க முடியாது என்பதை "TS" விளங்கிக் கொண்டார். அவள் தனக்கு நடந்ததிற்காக மற்றவர்களின் வாழ்வை ஸ்தம்பிக்கப் பண்ண வேண்டும் என்று எண்ணுபவள் அல்ல. மன உறுதியை மீறும் தன்னிச்சையான சில செயல்கள் பலரைச் சில நேரங்களில் மாட்டி விடுவது உண்டு. அதை வெல்லுவது போல அவளை மீறிய அவள் அடிமனதின் கட்டளைகள் சில வேளை செயலாக்கம் பெற்றுவிடும். தனது பிரச்சனையைப் புவனலோசினி துரும்பாக நினைக்க முயன்றாள். என்றும் தன்மேல் காதலும், பாசமும் வைத்திருக்கும் கணவன் இருக்கும் போது நீரைத் தெழித்தால் கறைகள், காசுக்கள், மாசுக்கள் என்பவை எல்லாம் கழிந்து போகும் என்று எப்போதும் தன்னைச் சமாதானம் செய்து கொள்வாள். சரிஸ்கா அப்படியல்ல. அவள் தற்போதும் புவனலோசினிக்குக் குழந்தைதான். அந்தக் குழந்தையின் மனதில் விழுந்த கீறல்கள் விரிசலாகுவது கண்டு அவள் துடிப்பாள். துவள்வாள். இன்றும் கீறல்கள் விரிசலாகும்படி எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதே அவள் பிரதான கவலையாகியது.

அவர்கள் வீட்டிற்கு வந்தால் சாப்பாடு கொடுக்காமல் அனுப்ப முடியாது. காப்புக் கையால் சாப்பிடும் கனவுகள் பற்றி "TS"சோடு இருக்கும் போதே அவர்கள் பல முறை, பல விதத்தில் பிரஸ்தாபித்து இருக்கிறார்கள். இன்று சாப்பிட்டுச் சமா வைத்துச் செல்லும் எண்ணத்துடனேயே அவர்கள் வருவார்கள். அவர்களின் அந்த எதிர்பார்ப்பை நிர்மூலம் செய்ய முடியாது என்பது "TS"சிற்குத் தெரியும். "TS"சிற்குத் தெரிந்தால் மட்டும் காப்புக் கையால் ஆக்கிப் போடும் கொடுப்பினை வந்து விடாது. புவனலோசினி முன்பு போல இப்போது இல்லை. எதை எடுத்தாலும் அவளுக்குப் பதற்றம். தன்நம்பிக்கை என்பது அவளிடம் இப்போது மருந்திற்கும் இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை.

இறைச்சி வேண்டும் என்றால் வெட்டிக் கொடுக்கலாம். வெங்காயம் பச்சை மிளகாய் வெட்டுவதே பிரச்சனை என்றால் "TS"சிற்குச் சிலவேளை தன் கட்டுப்பாட்டையும் மீறிக் கோபமும், அரிகண்டமும் வரத்தான் செய்கிறது. புவனலோசினி காலுக்கு மேல் கால் போட்டு உலக சங்கதி பேசிய வண்ணம் யாரையும் ஏவிச் சமைத்துச் சாப்பிட்டவள் இல்லை. பம்பரமாக அவள் சுழன்றது "TS"சிற்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. இப்போது அந்தப் பம்பரத்திற்கு சாவி கொடுத்தாலும் தளும்பாமல் சுழல மறுக்கிறது. ஏன் என்பது "TS"சிற்குத் தெரிகிறது. அதை எப்படி மாற்றுவது என்பது மட்டும் அவருக்கு எப்படி என்று தெரியவில்லை.

அவர்கள் வரவைத் தடுப்பது கடுகாய் இருக்கும் பிரச்சனையைப் பூசனிக்காய் ஆக்கும் முட்டாள்தனம் என்பதும் "TS"சிற்கு விளங்கியது. அவர்களை வரச்சொல்லி ஆகிற்று. புவனலோசினி முனுகலோடும் கவலையோடும் சமையல் அறைக்குச் சென்றாள். அங்கு நின்று என்ன செய்ய வேண்டும் என்கின்ற எண்ணமே அவளுக்கு நடுக்கத்தை உண்டு பண்ணும் என்பது "TS"சிற்கு விளங்கியது. அதற்கான திட்டத்தைக் கூறி ஆயுத்தங்களைச் செய்து கொடுத்தால் மட்டுமே அவளால் இயங்க முடியும். அடிக்கடி சென்று உதவி செய்து கொடுக்க வேண்டும். இடியப்பம் பிழிவதற்கு அவளால் இப்போது இயலாது. "TS"சிற்கு அதற்கு மினக்கெடப் பிடிப்பதில்லை. பிட்டு அவித்தால் போதும் என்பதே அவர் எண்ணம். உருட்டினால் என்ன பிழிந்தால் என்ன அரிசிமா அரிசிமாத் தானே என்கின்ற எண்ணம் அவரிடம்.

சரிஸ்கா பற்றிய கவலை "TS"சை விடாது துரத்தியது. தனது குடும்பத்தைப் பற்றி அவர் அதிகம் பிரஸ்தாபித்து இருக்காவிட்டாலும் தனக்குப் பிள்ளை இருக்கிறது என்கின்ற ஊகம் எல்லோரிடமும் இருந்து இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். வீட்டிற்கு வந்ததும் வீட்டில் இருப்பவர்களைப் பார்ப்பதற்கு ஆர்வமாக இருப்பார்கள். அவர்களுக்கு ஆர்வமாகத்தான் இருக்கும். சரிஸ்காவிற்கு அது எப்படி இருக்கும் என்பது "TS"சிற்குக் கலக்கம் ஆகியது. அழகிய வீணையாகச் சுருதி பேசிய அவள் இன்று அலறும் ஒற்றைக் குருவியாகத் தவிப்பது அவரது மனதைக் குடைந்து எடுக்கும். தாங்கள் அதே வீட்டில் இருந்தும் அவள் தன் உலகத்தினுள் தவித்துத் துவள்வதை அவரால் உணர முடிந்தது. உணர முடிந்த

அவரால் உதவ முடியாதது மனதை அனலாகப் பொசுக்கியது.

நேரம் ஐந்து இருக்கும். அவசரமாக அழைப்பு மணி அலறியது. சரிஸ்காவின் கதவு காற்றும் புகாத இறுக்கத்தில் மூடிக் கொண்டது. புவனலோசினி சமைப்பதை நிறுத்திவிட்டு வந்து சரிஸ்காவின் கதவை ஒரு முறை ஏக்கத்தோடு பார்த்தாள். பின்பு முனகிய வண்ணம் மீண்டும் சமையல் அறைக்குள் சென்றாள். கறிக்குள் உப்புக்குப் பதிலாகச் சீனியைப் போட்டு விடுவாளோ என்கின்ற பயம் "TS"சை வெருட்டியது. அப்படி எதுவும் நடக்காமல் இருக்க வேண்டும். அதைக் கண்காணிக்கும் பொறுப்பும் தன் தலைமேல் விழுந்ததை அவர் உணர்ந்தார். சமையல் அறைக்குச் சென்று புவனலோசினியின் புதினத்தைப் பார்த்தார். அவள் பிட்டுக்கு மாக் குழைத்தாள். குழைத்த மாவில் சிறிது அள்ளி வாயில் போட்டார். உப்பு கணக்காக இருந்தது. "நான் வந்து கறிக்கு உப்பச் சரி பார்க்கிறன்." என்று கூறிவிட்டுக் கதவை நோக்கிச் சென்றார். கதவைத் தயக்கமும் ஆர்வமும் பந்தாடும் நிலையில் திறந்தார். சிவா, சோரூபன், அருள், நிமலன், றூபன் ஆகிய ஐவரும் அடங்கா ஆர்வத்தோடு அங்கே நின்றார்கள். ஐவரும் சேர்ந்து வருவார்கள் என்று "TS" எண்ணவில்லை. அப்படி வந்ததில் அவருக்குச் சந்தோஷமாயும் இருந்தது... சங்கடமாயும் இருந்தது.

நிமலன் நிறையவே மாறி இருந்தான். பெண்களைப் போலத் தலை முடியை நீட்டாக வளர்த்து, அதை அள்ளிச் சிறிய கொண்டை போட்டு இருந்தான். நாகரிகங்கள் பருவகாலம் போல மாறி மாறி வருவதாய் இருக்க வேண்டும் என்று "TS"சிற்குத் தோன்றியது. ஒரு காலத்தில் எல்லோரும் கொண்டையோடு அலைந்தார்கள். பின்பு அது பட்டிக்காடாய் பார்க்கப்பட்டது. கட்டையாக முடியை வெட்டுவது நவீனமாகியது. இப்போது மீண்டும் கொண்டை வைப்பது நவீனமாகிறது. இயற்கையின் சுழற்சி போல இதுவும்...

நிமலன் அப்போது இருந்ததைவிட இப்போது வெளிறி இருந்தான். அரும்பி இருந்த தாடியும், மீசையும் சிறிது தடித்து இருந்தது. நீல நிறத்தில் காற்சட்டையும் நீலமும் வெள்ளையும் கலந்த "Sweter"உம் அதற்கு மேல் தோலாலான மேலங்கியும் அணிந்து இருந்தான். அவன் கண்களில் இப்போது நம்பிக்கை, பிரகாசம், குறும்பு

என்பன குடியேறியதாக "TS"சிற்குத் தோன்றியது. அருள், சொரூபன், றூபனை இடையிலும் சந்தித்து இருந்தார். அவர்கள் அருகில் இருப்பதால் எப்படியும் பார்த்துவிடும் சந்தர்ப்பங்கள் வந்து விடுகின்றன. அவர்களும் நிமலனைப் பார்த்துக் கொண்டை வைத்துக் கொள்வார்கள் என்று "TS"சிற்குத் தோன்றியது. ஏற்கனவே றூபன் இடது காதிற் தோடு குத்தி இருந்தான். இடது காதிற் தோடு குத்தினால் பெண்களை விரும்புபவன் என்று அர்த்தமாம். வலது காதில் தோடு குத்தினால் ஆண்களை விரும்புபவன் என்று அர்த்தமாம். எங்கள் மூதாதையர் இரண்டு காதிலும் கடுக்கன் போட்டார்கள். பெண்கள் இரண்டு காதிலும் காதணி அணிகிறார்கள். அதற்காக அத்தினை பேரும் ஆண்களை விரும்புவார்கள் என்று அர்த்தம் கிடையாது என்பதும் "TS"சிற்கு விளங்கியது. அருள் மெலிந்து இருப்பது போலத் தோன்றியது. அவன் பல இடத்தில் வேலை செய்வதாகக் கூறி இருந்தான். தாய் நாட்டில் வாழ்பவர் பலருக்கு வெளிநாட்டில் பணம் மரத்தில் தொங்குவதாக ஒரு இதமான கற்பனை. கடன் அட்டையிலும், களவு வழியிலும் சம்பாதிப்பவர்கள் அதற்குத் தூபம் போடுகிறார்கள். பணம் சம்பாதித்து மிச்சம் பிடிக்க வேண்டும் என்றால் ஒன்றிற்கு மேற்பட்ட வேலை செய்ய வேண்டும். அதை விட்டால் சட்டவிரோத செயல்களில் இறங்க வேண்டும். எங்களவர்களிற் பலர் ஊனையும் உயிரையும் உருக்கிப் பணம் ஆக்குகிறார்கள். அருளும் தனது வருங்கால வாழ்விற்காய் தற்போது ஊனையும் உயிரையும் உருக்குகிறான்.

"அண்ணை உள்ள வரச் சொல்ல மாட்டியளோ?" என்ற வண்ணம் "TS"சைக் கடந்து சோபாவை நோக்கி நிமலன் நடை போட்டான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் உள்ளே வந்தார்கள். கலைஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் என்று பலதரப்பட்ட மனிதர்களும் இப்படியே தலையை வளர்த்துக் காதைக் குத்தி, காற்சட்டையைக் கிழித்து உள்ளே உள்ள பைத்தியத்தை வெளியே காட்டிக் கொண்டு திரிகிறார்கள். எழுபதுகளில் வந்த கிப்பிக் கலாச்சாரத்தோடு நோர்வேயில் அந்த வியாதி பரவியது. நோர்வேக்கு வந்த எம்மவர்கள் அவர்களைப் பார்த்து விரைவாகவே பிரதி எடுக்கப் பழகுகிறார்கள் என்பதாக "TS" எண்ணிக் கொண்டார்.

சிவா உள்ளே வந்ததுமே,

"அக்கா சமைக்கிறா போல... வாசம் வருகுது. குளிருக்கால வந்ததுக்கு ஒரு பிளேன் ரீ குடிச்சா நல்லா இருக்கும்." என்றான்.

"எனக்குப் பால் ரீ அண்ணை..." என்றான் நிமலன்.

"எனக்கும் அதுதான்." என்று சேர்ந்து கொண்டான் அருளன்.

சொரூபனுக்கும், ரூபனுக்கும் பால் தேநீர் தான் பிடிக்கும் என்பது "TS"சிற்குத் தெரியும். மற்றவர்கள் என்ன குடிப்பார்கள் என்பதை அவர் மறக்காவிட்டாலும் அவர்கள் அதைக் கேட்டுப் பெறத் தயங்கவில்லை. வேறுபாடுகள் வெறுத்துப் போன பழக்கம் அது. புரட்சியா? பெருந்தன்மையா? என்பது அப்போதைய வாதம் இல்லை. தேசியம் உருவாக்கிய ஆயிரம் பிரச்சனைக்குள் சில பிரச்சனைகள் குமரிக் கண்டத்தைப் போல் மூழ்கிப் போய் இருந்தன. குமரிக் கண்டத்தை இனி மீட்க முடியுமா என்பது தெரியாது. தேசியம் நலிந்து போகும் போது இவை மீண்டுவிடும் என்பது "TS"சிற்குத் தெரியும். சிவாவுக்கும் அது பற்றித் தெளிவு இருந்தது. ஆயுதத்தால் சமுதாயப் பிளவுகளைத் தற்காலிகமாக அடக்க முடியும். நிரந்தரமாக அமுக்க முடியாது. பிரச்சனையை முற்றுமாகத் தீர்க்க முடியாது என்று சிவா அடிக்கடி சொல்லுவான். சிவாவைப் பார்த்து நீண்ட காலம் ஆகிவிட்ட நினைப்பு "TS"சிற்கு. அவனது கருவண்ணம் திருமாலின் திருவண்ணத்தைக் காட்டுவது போல. கண்ணன் அர்ச்சுனனின் வெற்றிக்கு வியூகம் வகுத்த கணக்காகச் சில வேளைகளில் இவன் கதை சொல்லுவான். அதைக் கேட்பதில் "TS"சிற்கு எப்போதும் சுவாரசியமாக இருக்கும். "TS"சிற்குப் போராட்டத்திலும், போராட்டத்தில் இருந்து சற்றும் தளராது போராடும் புலிகள் மீதும் அசையாத நம்பிக்கை இருந்தது. அவர் அதற்காக வாதாடியும் இருக்கிறார். வாதாட்டங்கள் கருத்தை மட்டும் மறுப்பதாய் இருந்தது. புலிகளின் போராட்டமே ஒரு பொய் விம்பம் என்பதும், அது ஒரு நாள் மாயக் கோட்டை போல் மறைந்து போகும் என்பதும் சிவாவின் பிடிவாதமான கருத்து. சிவாவின் இப்படிப்பட்ட கருத்துக்களை ஜீரணிப்பது "TS"சிற்குச் சில வேளை பெரும் அவஸ்தையைத் தரும். இருந்தும் அந்த அரிகண்டம் அந்த நிமிடமே மறந்து போய் விடுவதும் அவருக்குக் கிடைத்த இயல்பாக இருந்தது.

"TS" தேநீர் எடுத்து வருவதாகக் கூறிவிட்டுச் சமையல் அறையை நோக்கிச் சென்றார். தேநீர் எடுத்து வருவதா அல்லது தயாரித்து வருவதா என்பது புவனலோசினியின் மனநிலையைப் பொறுத்தது. அவள் சில வேளைத் தேநீர் தயாரித்தும் வைத்து இருப்பாள். சில வேளைத் தலையில் கையை வைத்துக் கொண்டும் நிற்பாள் என்பது "TS"சிற்கு மட்டும் தெரியும்.

"TS" சரிஸ்காவின் அறையைத் தாண்டிச் சமையல் அறைக்குச் சென்றார். அவளின் அறை நிசப்தத்தில் மூழ்கிக் கிடந்தது. சில வேளைப் படுத்திருப்பாளோ என்கின்ற எண்ணம் "TS"சிற்குத் தோன்றியது.

சமையல் அறைக்கு உள்ளே சென்ற போது புவனலோசினி நல்ல மனநிலையில் தொடர்ந்தும் இருப்பது போலத் தோன்றியது. தேநீர் தயாரிப்பதற்கான ஆயுத்தங்கள் நடைபெற்றன. "TS" யாருக்குப் பால் தேநீர், யாருக்கு வெறும் தேநீர் என்கின்ற விபரத்தைக் கூற, அதற்குத் தகுந்தாற் போல் அவள் தேநீர் தயாரித்துக் கொடுத்தாள்.

தேநீரையும், சிற்றுண்டிகளையும் தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு கோலுக்கு வந்த போது,

"என்ன அண்ணை இன்னும் நீங்கள்தான் மெயின் குக்கே?" என்று சிவா கேட்டான்.

"அப்பிடி எண்டு இல்லை. சும்மா ஸ்ராட்டிங் பிரச்சனை தான்." என்று "TS" சிரித்து மழுப்பித் தப்பித்துக் கொள்ளத் தவண்டை அடித்தார்.

"அக்காவுக்கும் ஸ்ராட்டிங் பிரச்சனையே?" என்று சிவா தொடர்ந்தான்.

"ஆருக்கு எண்டாலும் இங்க ஸ்ராட்டிங் பிரச்சனை வரும் தானே?" என்று நிமலன் "TS"சைக் காக்க வந்தான். அதைப் பார்த்த சிவாவின் கவனம் தற்போது முழுமையாக அவனில் திரும்பியது. சிவா அவனை ஒரு முறை முதன் முதலாக மேலும் கீழும் பார்த்தான். அப்படிப் பார்த்தவனுக்கு நமட்டுச் சிரிப்பு வந்திற்று. சும்மாய் மெல்லும் வாய்க்கு அவல் கிடைத்த சந்தோஷம் அவனைத் தட்டிற்று.

"உது என்ன நாடகக்காரர் மாதரி ஒரு வேஷம் போட்டுக் கொண்டு அலைகிறாய்? யார் உனக்கு இப்பிடி ஒரு

வேஷம் போடலாம் எண்டு காட்டித் தந்தது?" என்றான் சிவா.

"நாடகக்காரரா? இது தான் இப்பதே பசன். நீங்கள் என்ன றெஸ்ரூறன்ரில வேலை செய்கிறியளோ? இல்லாட்டித் தண்டவாளம் போடக் காட்டுக்க கொண்டு போய் உங்களை விட்டு இருக்கிறாங்களோ?" என்றான் நிமலன்.

"அதைவிடு நிமலன்... நீ என்ன செய்யப் போகிறா?" என்று "TS" திசையை மாற்றினார். அவருக்கு அடுப்படிக்குப் போகும் அவசரம்.

நிமலன் என்றும் இல்லாதவாறு திடீர் அமைதியை அணைத்துக் கொண்டான். சிவா அவனைக் குறும்பாகப் பார்த்தான். பின்பு எதையோ சொல்லத் துணிந்தவனாக எல்லோரையும் பார்த்து,

"நான் எழுத்தாளனாகப் போகிறன்." என்றான்.

சிவாவிற்கு அதற்கு மேல் சிரிப்பை அடக்க முடியவில்லை. எழுந்து சென்று சாளரத்தின் ஊடாக வெளியே பார்த்துச் சிரித்தான். மற்றவர்கள் தங்களுக்கு வந்த சிரிப்பை ஒருவாறு அடக்க முயற்சித்தனர். "இவனுக்கு என்ன மூளை கலங்கி விட்டதோ?" என்கின்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது.

"எழுத்தாளனாகப் போகிறியோ?"

"ஓம் அண்ணை... ஏன் நான் எழுத்தாளன் ஆகக் கூடாதே?"

"ஆகலாம்... நீ என்னத்தில, என்ன எழுதப் போகிறாய் எண்டதிலை அது இருக்குது? இல்லை... ஆங்கிலத்தில இல்லாட்டி நொஸ்க்கில எழுதினால் நீ எழுத்தாளனா வாழலாம். தமிழில எழுதுகிறது எண்டா வேறை வேலை செய்ய வேணும். இல்லாட்டி நோர்வேத் தெருக்களில நிண்டு பிச்சை எடுக்க வேணும். அது கொஞ்சம் கடுமையாக் குளிரும். உன்ரை ஐடியா எப்பிடி?"

"நீங்கள் ஊக்குவிப்பியள் எண்டா நீங்களும் இப்படிச் சொல்லுகிறியள் அருள் அண்ணை?"

"நீ முதல்ல என்னத்தில எழுதப்போகிறா எண்டு சொல்லு?"

"தமிழிலதான். எனக்கு அதைவிட வேற என்ன மொழி ஒழுங்காத் தெரியும்?"

"சரி... சரி... பொழுது போக்கா முயற்சி செய்." என்றான் அருள்.

"TS" எழுந்து சமையல் அறைக்கு அவசரமாகச் சென்றார். புவனலோசினி தன்னை எழுத்தாளன் ஆக்கி விடுவாளோ என்கின்ற பயம் அவருக்கு.

மீண்டும் சிவா திரும்பி வந்து சோபாவில் அமர்ந்தான். சிரிப்பை வலுவில் அடக்கி முகத்தைக் கடுமை ஆக்கினான்.

"எழுத்தாளன் ஆகிறது எண்டா நீ என்ன எழுதப் போகிறாய் எண்டதும் முக்கியமே. அதைச் சொல்லு கேட்ப்பம்." என்று கேட்ட சிவா தொடர்ந்தும் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டான். இனி துளிக்கும் நிமலனைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது என்பது அவன் கடுமையான விரதம். குடிகாரன் சத்தியம் மாதிரி இது இருக்கக் கூடாது என்று அவன் தன் மனதிற்கு மீண்டும் மீண்டும் கட்டளை இட்டான்.

"கதை எழுதப் போகிறன்." என்றான் நிமலன்.

"ஓ... தமிழில கதை எழுதப் போகிறாய்... அப்பிடி தானே? அப்ப பூவாவுக்கு?" என்று மீண்டும் கேட்டான் சிவா.

"கதை எழுதினால் காசு வரும் தானே?" என்றான் நிமலன்.

"தமிழில கதை எழுதி இங்க வாழ்க்கை நடத்துகிறதுக்கு உனக்கு வருமானம் வருமே? உனக்கு என்ன பித்து ஏறீட்டுதே? தமிழில கதை எழுதுகிறவன் பெண்டாட்டியின்ரை தாலிக் கொடிய வித்துத்தான் புத்தகம் வெளியிடுவான். நான் அப்பிடிப் பலரை ஊரில பார்த்து இருக்கிறன். உனக்குப் பெண்டாட்டிகூட இல்லை. இங்க பெண்டாட்டி இருந்தாலும் காசு தரமாட்டாள். தாலிக்கொடியும் தரமாட்டாள். ஒரு சிலருக்கு மாத்திரம்தான் எழுத்திலை வாழ்கிற பாக்கியம் கிடைக்கும். அது தமிழைப் பொறுத்தவரை கோடியில ஒருத்தனுக்குக் கிடைக்கும். அந்தக் கெட்டித்தனம் உன்னிட்டை இருக்குதா? இல்லாட்டி நீ கோமாளி ஆகிவிடுவாய். இது தகுதிக்கு மீறின தன் நம்பிக்கையாய் இருக்காட்டிச் சரி."

"அப்ப என்ன செய்யலாம் எண்டுகிறியள்? என்ரை ஞானப் பசிக்கு... தேடலுக்கு... என்ன செய்ய முடியும்?"

"இஞ்ச பாருங்க இவருக்கு வந்து இருக்கிற வருத்தத்தை? நல்லாய் படிச்சு ஒரு ஒழுங்கான வேலையை முதல்ல எடு. பிறகு வேணும் எண்டா உன்ரை ஞானப் பசியை இருந்து பேப்பரில கிறுக்கு. அப்ப உன்னிட்டை அதுக்கு வசதி இருக்கும். கதை அலட்டல் எண்டாலும் புத்தகமாக வெளியிடலாம். அதுக்குப் புறம்பா அதிஸ்ரமும் திறமையும் இருந்தா எழுத்தாளனாய் பிரகாசிக்கலாம்." என்றான் சிவா. அவனுக்கு நிமலனைப் பற்றி நினைக்கும் போது உள்ளூரக் கவலையாக இருந்தது. இங்கு என்ன கூத்து ஆடினாலும் பட்டினி கிடந்து சாகத் தேவை இல்லை. பட்டினி கிடக்காது வாழ்வது மாத்திரம் இன்றைய காலத்திற்கான வாழ்க்கை ஆகவும் அமைந்து விடாது. இன்று ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எத்தனையோ திறமைகளும் தகுதிகளும் தேவைப்படுகிறது. சுடர் மிகு அறிவுடன் எழுதி வெற்றி அடைந்தால் அது சிகரத்தில் நிற்பது போலத்தான். சுடர் மிகு அறிவை இறைவன் எல்லோருக்கும் கொடுத்து விடுவது இல்லை. இல்லாததை இருப்பதாய் எண்ணி ஏமாந்து போனவர்கள் பலர். அந்தப் புகழ் என்னும் சிகரத்தை அடைவதும் அதில் நிற்பதும் சாதாரண காரியம் இல்லை. அதற்கான ஞானமும் அயராத உழைப்பும் வேண்டும். அந்த இரண்டும் இருந்துதான் இவன் இதைக் கூறுகிறானா அல்லது யாரையும் பார்த்துவிட்டுத் தானும் அப்படி ஆகலாம் என்கின்ற ஒரு பகற்கனவோடு இதைக் கூறுகிறானா என்பது சிவாவிற்கு விளங்கவில்லை.

"தமிழில எழுத்துலக வாழ்வு எண்டுகிறது பணக்காரனாக இருக்கிறதுக்கோ இல்லாட்டி வாழ்க்கையை ஒழுங்கா நடத்திறத்துக்கோ பல நேரங்களில் ஒரு வழியாக இல்லாமல் முட்டுக்கட்டையா இருக்கும். பாரதி உலகம் வியக்கக் கவிதை எழுதினான். அவனுக்குக் கிடைச்ச வாழ்க்கை எப்பிடி இருந்தது தெரியுமா? அவன்ரை ஞானத்தை விளங்காமல் பயித்தியமாய் நினைச்சு, வறுமையில வாட விட்டாங்கள். இந்த நாட்டில எந்த வேலை எண்டாலும் அதில வருமானம் வரவேணும். நீ அந்த வருமானத்தில வாழ வேணும். இல்லாட்டி அது வேலை இல்லை. பொழுது போக்கு மட்டும்தான் எண்டதை விளங்கிக் கொள்ள வேணும். இந்த நாட்டில வாழ்கிறதுக்கு ஏற்ற மாதிரி படிச்சு ஏதாவது வேலையில

புகுந்திட்டு, நீ எந்த ஆட்டமும் ஆடலாம். அது இல்லாட்டித் தெருவில நிண்டு கச்சேரி வைக்கிறவையின்ரை நிலைதான்." என்றான் அருள்.

"சா... ஒருத்தரும் மருந்துக்குக்கூட ஊக்குவிக்கிறியள் இல்லை. எப்பிடி எங்கடை சமுதாயத்தில சிறந்த படைப்பாளிகள் உருவாக முடியும்?" என்றான் நிமலன் வெறுப்போடு.

"உன்னை ஊக்குவிக்கிறதோ, நீ ஒரு சிறந்த படைப்பாளியாய் வாறதோ எங்களுக்குப் பிரச்சனை இல்லை. அது எல்லாருக்கும் பெருமைதான். ஆனா... நீ உன்ரை கால்ல நிக்கிற மாதிரி ஒரு அடித்தளத்தை அமைச்சுக் கொண்டு உனக்குக் கிடைக்கிற நேரத்தில எழுதி முன்னுக்கு வா. அதுதான் உனக்கும், உன்னை நம்பி இருக்கிற குடும்பத்திற்கும் ஒரு வளமான, நிலையான, உறுதியான எதிர்காலத்தைத் தரும். அரசனை நம்பிப் புருசனைக் கைவிடுகிறது சாதுரியமான செயல் இல்லை. இதுக்கு மேல உன்ரை விருப்பம். இது சுகந்திரமான நாடு. நீ எதை நினைச்சாலும் செய்யலாம். அதே நேரம் சொந்தமா உழைக்காமல் பிச்சைக்காசு எடுத்துக் கொண்டு இந்த நாட்டில இருந்தாலும் அரிகண்டம் தான். அது உனக்கும் விளங்கும்." என்றான் சிவா.

இப்படி எல்லோரது அறிவுரைகளையும் கேட்டு சிறிது நேரம் நிமலன் சூரிய குடும்பத்தைக் கட்டி வைத்திருக்கும் சூரியனின் ஈர்ப்புக் கைவிட்டது போல குழம்பிப் போய்விட்டான். எத்தினைபேர் குழப்பினாலும் அவன் அடிமனதில் பற்றிக் கொண்ட ஆசை அணைய மறுத்தது. எழுத்து ஒரு காலத்தில் தனது உயிர் நாடியாக இருக்க வேண்டும் என்கின்ற வெறி சாக மறுத்து வலியோடு அடம் பிடித்தது. அதே வேளை எழுத்து எப்போதும் பிழைப்பிற்கான வழி இல்லை என்பதும் அவனுக்கு விளங்கத் தொடங்கியது.

"TS" புவனலோசினியோடு சேர்ந்து சமையல் அலுவல்களை முடித்துவிட்டுக் கோலுக்கு வந்தார். சரிஸ்கா வெளியே வருவதான எந்தச் சமிக்கையும் இல்லை. அவளை வெளியே வா என்று அழைக்கும் மனத் தயிரியமும் அவரிடம் இல்லை. அவள் வேற்று ஆட்களைச் சந்திப்பதையே வெறுக்கிறாள். அதுவும் ஆண்களை அவளுக்குப் பிடிப்பதே இல்லை. பிரமிப்பான மனித

மூளையின் பிறழ்வுகளையும் யாராலும் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. அநியாயம் நேர்ந்தது உண்மைதான். அதற்காகத் தனக்குத் தானே உலகில் சிறை அமைத்துக் கொள்வது அதைவிடக் கொடுமை ஆனதாக "TS"சிற்குத் தோன்றும். எந்தச் சமாதானமும் எடுபடாத காதில் எந்த மந்திரத்தை ஓதுவது என்பது அவருக்கு விளங்கவில்லை. எதையும் சொல்லாது தப்பித்துக் கொள்வதையே தான் ஒரு யுக்தியாகக் கடைப் பிடிக்கிறேனோ என்கின்ற குற்ற உணர்வும் அவரை வாட்டும்.

"TS" கோலுக்கு வந்த போது சிவா அவரைப் பார்த்துச் சிரித்தான். மற்றவர்கள் சிரிப்பதற்கும் சிவா சிரிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. சிவா சிரித்தால் நிச்சயம் அதற்குள் ஒரு அர்த்தம் புதைந்து இருக்கும் என்பது "TS"சிற்குத் தெரியும். புதைந்து இருக்கும் அர்த்தம் பற்றிய புரிதலுக்காக அவரால் இப்போது அதிக சக்தியைப் பயன்படுத்த முடியாது அவரைச் சுற்றிப் பூதாகரமான பிரச்சனைகள் வளர்ந்து நின்றன. அந்தப் பிரச்சனைகளை அடிமனதிற் போட்டு இறுக்கமாகப் பூட்டி வைத்து விட்டு,

"என்ன சிவா சிரிக்கிறாய்?" என்று அழுத்தம் கொடுக்காது கேட்டார். சிவாவுக்கு அக்காவின் சமையல் பிரச்சனை பற்றிய "TS"சின் சங்கடத்தைக் கிளறுவதற்கு ஏனோ அப்போது மனது வரவில்லை. அவன் திசையைத் திருப்பி,

"தம்பிக்கு நல்ல புத்திமதி சொல்லி இருக்கிறம்." என்றான்.

"ஆர் நிமலனுக்கோ? சரி என்ன சொன்னியள்?"

"எழுத்து நல்ல விஷயம்தான். ஆனாத் தமிழில எழுதிச் சீவிக்க ஏலாது. முதல்ல சீவியத்துக்கு உழைக்கக் கூடிய மாதிரி ஒரு வேலையை எடுத்துப் போட்டு எழுதும் எண்டு சொல்லி இருக்கிறம். நீங்கள் என்ன நினைக்கிறியள்?"

"நானும் உதைத் தான் நிமலனுக்குச் சொல்ல வேணும் எண்டு யோசிச்சனான். அதோடை தமிழில எழுதுகிறது எண்டாப் போல இப்ப நினைச்ச மாதிரி எழுதவும் ஏலாது. அப்பிடி எழுதுகிறது சில வேளை மரண தண்டனையைக் கூடப் பரிசாக் கொண்டு வந்திடும். எழுதுகிறது எண்டது கத்தியில நடக்கிற மாதிரி... கொஞ்சம் சறுக்கினாலும் சேதமாகீடும். விளங்குதா நிமலன்?"

"ம்" என்றான் அவன். அவனுக்குத் தன்னை இவர்கள் ஏன் இப்படிப் பயமுறுத்துகிறார்கள் என்பது விளங்கவில்லை. பேனா என்பதும் ஒரு முக்கியமான ஆயுதம் என்பது விளங்கினாலும் அது இவ்வளவு ஆபத்தான ஆயுதமா என்பது விளங்காது அவன் திகைத்தான்.

"TS" ஒருவாறு அன்றைய பிற்பகல் விருந்தை ஒப்பேற்றி வைத்தார். "TS" சொல்லிக் கொடுத்தது போல பழச்சலாத் ஐஸ்கீறிம் சேர்த்துப் புவனலோசினி செய்து இருந்தாள். இனிப்பிற்கு உப்புப் புளி பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பது பலர் எண்ணம். அனேகமான ஜீவன்கள் அதை விரும்பிச் சாப்பிடுவதால் அதை நம்பி யாரிடமும் கொடுக்க முடியும். எல்லோரது எதிர்பார்ப்பும் சரிஸ்காவைப் பற்றியதாய் இருந்ததை "TS" விளங்கிக் கொண்டார். அவர் அதைத் தெரிந்து கொள்வதால் எதுவும் நடந்துவிடப் போவது இல்லை என்பது அவருக்கு மட்டும் விளங்கிய உண்மை. "TS" தனது குடும்பத்தைப் பற்றிய விபரத்தைச் சொல்லா விட்டாலும் அது மற்றவர்கள் பார்த்த விதத்தில் காலும் கையும் வைத்து உலாவும் என்பதை அவர் நன்கு உணர்ந்து இருந்தார். நிச்சயம் இவர்களும் அதைப் பற்றி எல்லாம் அறிந்து இருக்கலாம் என்பது "TS"சிற்குத் தெரியும். சரிஸ்கா வந்து அதை எல்லாம் போட்டு உடைப்பது போலச் சகஜமாக கதைக்கலாம். அவள் அப்படிச் செய்யமாட்டாள் என்பது எல்லோருக்கும் வெளிச்சம் ஆகிவிட்டது. என்றாலும் சிவாவுக்கு அவளைப் பார்க்க வேண்டும் என்கின்ற அவாவை அடக்க முடியவில்லை.

"எங்க... உங்கடை மகளைக் கண்ணில காட்ட மாட்டியள் போல இருக்குது அக்கா?" என்றான். புவனலோசினி இதை எதிர் பார்க்காதது போல விழித்தாள். "TS" இதை எதிர் பார்த்து இருந்தார். அதற்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்றும் அவர் மனதில் ஒத்திகை போட்டுப் பார்த்து இருந்தார்.

"அவளுக்குத் தலை இடிக்குது எண்டு போய் படுத்தவள். அவளை இப்ப எழுப்ப ஏலாது. இன்னொரு நாளைக்கு வரேக்க கதைக்கலாம். நாங்கள் இங்க தானே இருக்கப் போகிறம்." என்றார்.

"அது ஒரு பிரச்சனையே இல்லை. அப்ப நாங்கள் வெளிக்கிடுகிறம்." என்று கூறிச் சிவா புறப்பட

மற்றவர்களும் புறப்பட்டார்கள். நிமலன் வந்து "TS"சின் கையைப் பிடித்துவிட்டுச் சென்றான்.

21 கால வெள்ளத்தின் கட்டுடைப்பில்

புவனலோசினிக்கு வளர்ந்து... வாழ்ந்த பின்பு ஏற்பட்ட கொடூரம். அதனால் அதன் பாதிப்பைச் சிறிது சிறிதாய் மனநல மருத்துவரால் குறைக்க, அழிக்க முடிந்தது. அவள் இப்போது வீட்டிற்கு யார் வந்தாலும் சகஜமாகப் பழகுவாள். மனநல மருத்துவர் கொடுத்த மருந்துகளைத் தவறாது அவள் எடுக்க வேண்டி இருந்தது. அந்த மருந்து எடுத்தால் அவள் அமைதி ஆவதோடு, பகலில் சில வேளைகளில் சமையலை முடித்துவிட்டு நித்திரை கொள்ளவும் போய் விடுவாள். மருந்து உடலை முறிப்பதால் தன்னால் முழித்து இருக்க முடியவில்லை என்று "TS"சிற்குச் சாப்பாடு போட்டுக் கொடுக்க முடியாது அவரே போட்டுச் சாப்பிட்டது தெரிய வந்தால் வருத்தம் கொள்வாள். "TS" அதை எல்லாம் அவளிடம் எதிர்பார்ப்பது இல்லை. அவள் இந்த அளவுக்குத் தேறினதே அவருக்குப் பெரும் சந்தோஷத்தை அளித்தது. சரிஸ்காவை எண்ணினால் மட்டும் இன்னும் அவர் மனதில் பயத்தின் சுவடுகள் உறுத்தும். அவளுக்கும் மருந்து கொடுக்கப் பட்டது. அவளும் மருந்து எடுக்கிறாள். புவனலோசினியை விடப் பல முறை மருத்துவரிடம் போய் வந்து விட்டாள். அவள் நடத்தையில் இப்போது பெரிதாக எந்தப் பிறழ்வுகளையும் யாரும் கண்டு பிடித்துவிட முடியாது. "TS"சோடு ஓரளவிற்கு முன்பு பழகியது போல் பழகுகிறாள். ஆனால் அந்நிய ஆண்கள் யாராவது வீட்டிற்கு வந்தால் அவள் தனது அறைக்குள் அடைந்து கொள்வாள். அப்படி அவள் அடைந்தாள் என்றால் அவளை யாராலும் வெளியே கொண்டுவர முடியாது. தனியே பெண்கள் வந்தால் அவள் அதிகமாக வெளியே வருவாள். பெண்களும், ஆண்களும் சேர்ந்து வந்தாலும் அவள் வெளியே வரமாட்டாள். அவளின் இந்தப் பயத்தை எப்படி மாற்றுவது என்பது "TS"சிற்கு விளங்கவில்லை. மனநல மருத்துவர் மருந்து கொடுத்து இருப்பதாகவும், கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் ஏற்படும் என்றும் "TS"சிற்கு ஆறுதல் கூறுவார்.

பாடசாலை தொடங்க வேண்டும் என்று கூறிய போது சரிஸ்கா பைத்தியம் போல முதலில் கத்தத் தொடங்கி

விட்டாள். தன்னை எதிர்த்து அவள் மூர்க்கமாகக் கத்தியதை "TS" அன்றுதான் கண்டார். அவள் அத்தினை கூத்து ஆடியும் நீ பாடசாலை போகத்தான் வேண்டும் என்பதில் "TS" பிடிவாதம் காட்டினார். மனநல மருத்துவரின் கருத்துப்படியும் சில வேளை அது அவளது மனதை மாற்றலாம் என்பது ஆரூடமாய் இருந்திற்று. பாடசாலைக்கு அழைத்துச் செல்வதே போராட்டம் ஆனது. அப்பாவையும் அவள் மற்றைய ஆண்கள் போல் பார்ப்பதான அவஸ்தையில் "TS" நெளிந்தார். மகளின் வெறுப்புத் தீயில் புழுவாய் துடித்தார்.

பாடசாலைக்குச் சென்ற போது ஊரைப் போல இங்கு ஆண்கள் ஒரு பகுதி பெண்கள் ஒரு பகுதியாய் வகுப்பில் இருக்கவில்லை. கலப்பதில், தொடுவதில், கட்டி அணைப்பதில் ஒருவித மொழியைக் காணும் மனிதர்கள் இவர்கள். பாடசாலையிலும் எங்கும் கலவன். சரிஸ்காவிற்கு யாரும் ஆண்கள் பக்கத்தில் இருக்கக் கூடாது. போன அன்று ஒரு சோமாலியாப் பெண்ணிற்குப் பக்கத்தில் இருந்தாள். சோமாலியாப் பெண் முக்காடு உடன் வந்து இருந்தாள். அவர்கள் மதத்திற்காக ஆண்களோடு கலப்பது இல்லை. சரிஸ்கா மனவருத்தத்தால் ஆண்களோடு கலப்பது இல்லை. இரண்டும் ஒரே திசையில் இருந்ததால் அவர்களுக்குள் ஒரு மென் நகை மலர அறிமுகம் தொடங்கியது. அந்த நிம்மதியில் வகுப்பு ஆசிரியரோடு சற்றுக் கதைத்தார். அவர் நோஸ்க் படிப்பதற்கு சரிஸ்கா மேலதிக வகுப்பிற்கு வர வேண்டும் என்பது பற்றிக் கூறினார். அதன் முக்கியத்துவம் "TS"சிற்கு விளங்கியது. நாங்கள் வசிக்கும் இடத்தில் பேசும் மொழி தெரியாவிட்டால் எங்களுக்கு வாழ்க்கையே மறுக்கப்படும் என்பதை அவர் அனுபவத்தில் விளங்கிக் கொண்டார். சரிஸ்காவிற்கு அந்த அனுபவம் தேவை இல்லை என்பது அவர் எண்ணம். மேலதிக வகுப்பிற்குத் தான் அனுப்பி வைப்பதாக வாக்களித்து விட்டு "TS" அன்று பாடசாலையை விட்டுத் திரும்பி வந்தார். வரும் போது அவரது மனது வேதனையில் துவண்டது. எப்படி இருந்த சரிஸ்கா இன்று இப்படி ஆகிவிட்டாள் என்பது அவரது மனதைப் பிழிந்தது. ஊரில் அவள் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தது, கலவன் பாடசாலைக்குச் சென்றது ஒன்றும் புதினம் ஆனது அல்ல. அங்கு வரும் பொடிப் பயல்களோடு சண்டைக்குத் தயங்காத சரிஸ்காவைப் பற்றி அவர்களுக்குத் தெரியும்.

சரிஸ்கா அந்த வகுப்பின் மாணவர் தலைவராக இருந்ததில் அவள் மீது எல்லோருக்கும் மரியாதை இருந்தது. படிப்பிலும் கெட்டிக்காரியாக இருந்ததால் ஆசிரியர்களும் அவளுக்கு மதிப்புக் கொடுத்தனர். எதற்கும் துணிந்து தான் வைப்பதே சட்டம் என்று நெஞ்சு நிமித்தித் திரிந்தவள் இன்று, எங்கே ஒதுங்கி ஒளிவது என்று தேடி அலைவதைப் பார்க்கும் போது இப்படி ஒரு கொடுமை தங்கள் வாழ்க்கையில் நேர்ந்து இருக்கக்கூடாது என்கின்ற ஏக்கத்தில் "TS" துவண்டு போய்விடுவார்.

ஏக்கங்களும், சோகங்களும், கவலைகளும் அவர் மனதைக் கறையானாக அரித்தாலும் அதை யாரிடமும் சொல்ல முடியாத அந்தரிப்போடு சிரித்துக் கொண்டு திரிவதை விதி அவருக்கு வாழ்க்கை ஆக்கி விட்டது. புவனலோசினியிடம் கதைக்க வேண்டும் என்கின்ற ஆவல் எப்போதும் ஓயாத கடல் அலை போல எழுந்து எழுந்து ஆர்ப்பரித்தாலும் தனது கவலைகளைச் சொல்லி அதனால் இப்போது சிறிது அமைதி காணும் அவள் மனநிலையையும் குழப்புவதற்கு அவருக்குப் பிடிப்பதில்லை. எழுந்த அலைகள் கரையில் கரைவது போல அவர் ஆசையும் தொடராக நிராசை ஆகும். அதைவிட நண்பர்கள், தெரிந்தவரிடம் கதைத்தால் சும்மாய் மெல்லும் வாய்க்கு அவல் போட்டதாய் அது முடியும் என்பதால் தனது மனக் குகையின் ஆழமான இருண்ட பகுதிக்குள் அவர் யாரையும் நுழையவே விடுவதில்லை. அதைப் பற்றி வாயைக் கனவிலும் அவர் திறப்பது இல்லை.

*

சரிஸ்கா பாடசாலை தொடங்கிச் சில மாதங்கள் ஆகி இருந்தன. அன்று பாடசாலையில் அவளை விட்ட பின்பு, என்றும் ஓயாத மனப் போராட்டத்துடன் நடந்து வரும் போதுதான் அருளிடம் இருந்து அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது. வேலைக்குப் போவதற்கு "TS"சிற்கு அப்போது தாராளமாக நேரம் இருந்தது. அதற்கு இடையில் தான் சிறிது நேரம் வந்து கதைத்து விட்டுப் போவதாக அவன் தொலைபேசியில் கூறினான். "TS"சிற்கும் அப்படி யாருடனும் வேறு ஏதாவது விடயங்களைப் பற்றிக் கதைத்தால் தனது மனைவி பற்றிய நினைவுப் பிடுங்கலில் இருந்து சிறிது விடுப்புப் பெற்றுக் கொள்ளலாம் என்கின்ற ஆசை உண்டாகிற்று. அவனை வருமாறு கூறிவிட்டு அவர் வீட்டிற்கு நடந்து சென்றார்.

அருளும் ஓடி ஓடி உழைக்கிறான். வீட்டுக் கடனை குறைக்க வேண்டும் என்பதில் அவன் குறியாய் இருக்கிறான். அருளைவிடச் சிவா வந்தால் நிறையக் கதைக்கலாம். சிவா தூர இருப்பதாலும், பின்னேரங்களில் வேலை செய்வதாலும் வருவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பது குறைவு. திடீரெனச் சிவாவின் நினைவு வந்தது. அது "TS"சிற்குக் குளிர்ச்சி தந்தது. சிலரை நினைத்தால் சந்தோஷமாக இருக்கும். சிவாவும் அப்படித்தான். அவன் எதிராகக் கதைத்தாலும் அவனது கருத்தில் ஏதோ ஒரு நியாயம் இருப்பது போலத்தான் "TS"சிற்குத் தோன்றும்.

"TS"சின் நினைவுகள் திடீரென இலங்கைக்குப் பாய்ந்தது. கால்கள் மட்டும் பழக்கப்பட்ட பாதையில் வீட்டை நோக்கிச் சென்றன. சிவா சொல்லுவது உண்மையோ என்கின்ற பிறழ்வு அவர் மனதில் ஒரு முறை எழுந்தது. இந்தியன் இராணுவம் வந்தால் எமது நாட்டில் பிரச்சனை முடிந்துவிடும் என்று எல்லோரும் கனவு கண்டோம். இப்போது இந்தியன் இராணுவத்தோடும் பிரச்சனை தொடங்கி விட்டது. எல்லோரையும் பகைத்துக் கொண்டு நாங்கள் வாழ முடியுமா என்பது "TS"சிற்கு விளங்க வில்லை. தலைவரின் இராணுவ வெற்றிகள் எல்லாம் அரசியல் சூதாட்டத்தில் தோற்று விடுமோ என்கின்ற பயம் அவருக்கு உண்டாகியது. இராணுவ வெற்றிகள் சிறிய மாயையை உருவாக்கலாம். அரசியலில் தோற்றால் அதுவே எமது இனத்தின் சாவுமணி ஆகிவிடும். என்ன நடந்தாலும் இந்தியன் இராணுவத்தைப் பகைத்து இருக்கக் கூடாது. இலங்கை அரசை எந்தக் கட்டத்திலும் நம்ப முடியாது. எந்த அரசோடும் நாங்கள் மோதாது அவர்களை மோதவிட வேண்டும். அது இப்போது பிழைத்துப் போய்விட்டது. தலைவர் தெரிந்து செய்கிறாரா தெரியாது செய்கிறாரா? தலைவருக்கு விளங்கிய, இராணுவ யுக்திகள், அரசியல் சாணக்கியங்கள் எனக்கு விளங்காததால் நான் இப்படிச் சிந்திக்கிறேனா? "TS"சிற்கு அதை எண்ணக் குழப்பம் மேலிட்டது. அவர் தனது நடைக்கு வேகத்தைக் கூட்டினார்.

வீட்டிற்கு வந்த போது புவனலோசினி சமையல் அலுவலில் மூழ்கி இருந்தாள். இப்போது உப்புப் புளி "TS" பார்க்கத் தேவை இல்லை என்கின்ற முன்னேற்றம். தானே பார்த்துச் சமைக்கிறாள். சாப்பிடும் போது குறை சொல்ல வேண்டிய அவசியமே அவருக்கு வந்தது இல்லை. அவசியம் வந்தாலும் "TS" ஒரு போதும் குறை சொல்வது இல்லை.

சரிஸ்கா எங்கோ உள்ள கோபத்தைத் திடீர் திடீர் என்று அம்மா மீதும் திருப்புவாள். புவனலோசினிக்கு அவளைப் பேசுவதற்கு மனம் ஏகுவது இல்லை. "TS"சைப் பரிதாபமாய் பார்ப்பாள். "TS" அவளைப் பரிவோடு பார்த்துக் கொள்வார்.

வீட்டிற்கு உள்ளே வந்த "TS"சிற்குப் புவனலோசினியிடம் இருந்து தேநீர் வாங்கிக் குடித்தால் நன்றாய் இருக்கும் என்று தோன்றியது. இப்போது குடித்தால் மறுபடியும் அருள் வரும் போதும் குடிக்க வேண்டும் என்கின்ற தயக்கம் உண்டாகப் பேசாது போய் சோபாவில் அமர்ந்தார்.

சிறிது நேரத்தில் அழைப்பு மணி ஒலித்தது. எழுந்து சென்று "TS" கதவைத் திறந்தார். அருள் படி ஏறி மேலே வந்தான். தற்போது புதிதாக நீல நிறத்தில் மேலங்கி வாங்கி இருந்தான். உடல் போன முறை பார்த்ததைவிட மெலிந்து போய் இருந்தது. தலைமுடி வளர்ந்து தாறுமாறாய் தொங்கியது. முகத்தின் தசை களவு போனது போல எலும்பு துருத்தி முறைத்தது. அவன் "TS"சைப் பார்த்துச் சிரித்தான். இவனுக்கு என்ன நடந்தது என்கின்ற எண்ணம் "TS"சின் மனதில் ஓடியது.

"வா. உள்ள வா. என்ன கோலமிது?" என்றார் "TS".

"ஏன் நான் உள்ள மாதிரி தான் இருக்கிறன்..." என்றான் அருள்.

"என்ன உள்ள மாதிரி? முகத்திலேயே எலும்பு துருத்திக் கொண்டு நிக்கிற மாதிரி இருக்குது" என்றார் "TS".

"அப்பிடியே இருக்குது? இரண்டு வேலை... குளிர்... உடம்பை உருக்குது. அதுக்காக அதிஸ்ரமாய் கிடைச்ச வேலையை விட முடியாது தானே? இப்ப வேலை கிடைக்கிறதே குதிரைக் கொம்பா இருக்குது. இப்படிக் கழுவுகிற வேலை எண்டதால ஒரு மாதிரி இரண்டு வேலைக்க புகுந்தாச்சுது. அதை ஒழுங்காச் செய்யத் தானே வேணும்? எங்களை இப்ப கொண்டு போய் ஓபீசிலையா வேலை செய்ய விடுவாங்கள்? இப்ப கழுவுகிற வேலையும் எடுக்க இயலாமல் தெண்டாட வேண்டி வருகுது. அதைவிட அவங்களும் எங்களை அடிமை மாதிரித்தான் நடத்தப் பார்க்கிறாங்கள். வெளிநாட்டுக்காரர் எண்டா ஏதோ காட்டுக்க இருந்து வந்து இருக்கிற மந்தியள் எண்ட நினைப்பு ஒரு சிலருக்கு.

ஆபிரிக்காவில இருந்து பிடிச்சுக் கொண்டு வந்த மாதிரி ஒரு நடப்பு. எங்களுக்கே இப்பிடி எண்டா ஆபிரிக்காவில இருந்து வாறவங்களுக்கு? உதுக்கு எல்லாம் எங்களுக்கும் எழுதப் பேசத் தெரியும் எண்டதை செய்து காட்ட வேணும். அதுக்கு ஒரே வழி நாங்களும் களத்தில கொஞ்சம் கொஞ்சமா இறங்கி விளையாட வேணும். தமிழருக்குத் தெரியாத வியாபாரமா?"

"ஓம் எண்டுதான் என்ரை வேலையிலையும் கதைச்சவங்கள். இப்ப வேலையை விட்டா அவ்வளவு தானாம். அதோடை வீட்டு விலை குறைஞ்சு கொண்டு போகுதாம். அதுக்கு எதிர் மாறா வட்டி கூடிக் கொண்டு போகுமாம். வீட்டை வேண்டி வைச்சு இருக்கிறம். ஒரே யோசினையாகத்தான் இருக்குது. கடன் ஒழுங்காக் கட்ட வேணும். இல்லாட்டி வீட்டை வாங் பறிச்சுப்போடும் எண்டுகிறாங்கள். இது தான் சந்தர்ப்பம் எண்டு வேலையிலையும் முறிச்சு எடுக்கிறாங்கள். நீ சொல்லுகிறதும் சரி எண்டுதான் படுகுது. சொந்தமா நாங்கள் தொடங்கினாத்தான் வரும் காலத்தில ஒரு நல்ல நிலைக்கு வரலாம். எனக்கு உந்தத் தொழில் சரிவரும் எண்டு நினைக்க இல்லை. நீ கட்டாயம் முயற்சி செய்."

"வேற என்ன அண்ணை? எங்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு தாற சம்பளம் மாதிரி மூண்டு மடங்கு காசு வேலை குடுக்கிறவனிட்டை வாங்கிறாங்கள். அந்த மூண்டில ஒரு மடங்கு போனாலும் குண்டியைக் குசனில வைச்சுக் கொண்டு ஒரு மடங்கு சம்பளத்தை அப்பிடியே சுளையா விழுங்குறான்கள். நாங்கள் பதினெட்டுப்பேர் வேலை செய்கிறதிலை அவை மூண்டுபேர் ஓபிசில இருந்து குளிர் காயினம். உதைப் பார்க்கேக்க நாங்களே ஒரு கொம்பனி திறந்து வேலையளை எடுத்துச் செய்ய வேணும் போல இருக்குது. நாங்களே முதலாளி... நாங்களே தொழிலாளி... யாருக்கும் உழைச்சுக் குடுக்க வேண்டியதும் இல்லை" என்றான் அருள்.

"அருள் நீ சொல்லுகிறதும் உண்மைதான். எனக்கும் அது விளங்குது. இப்ப கொஞ்சம் கஸ்ரமான காலம். பொருளாதார வீழ்ச்சி. இதுக்கு "யப்பத்தீட்" எண்டு பெயராம். தமிழில பஞ்சக் காலம் மாதிரி. எண்ணெய் அள்ளுகிற நாட்டில சாப்பாட்டுக்குப் பிரச்சனை வராது. ஆனா... மற்றைய விஷயங்களில பிரச்சனை ஆகத்தான் இருக்கும். அப்படியான நிலைமை இருக்கேக்க இருக்கிற

வேலையை விட்டிடாமல் சின்னனாத் தொடங்கினா இன்னும் சில வருடங்களில பிக்கப் பண்ணீடலாம். பொருளாதாரம் கடல் அலை போல. ஒருக்கால் எழும், எழுந்ததைச் சமனாக்க விழும். மீண்டும் எழும். இது ஒரு தொடர் மாதிரி. எனக்குக் கடை ஏதும் வைக்க வேணும் எண்டு ஆசை. அது எங்கடை குலத் தொழில். அது மட்டும்தான் எனக்குச் சரியா வரும். ஆனா... இப்போதைக்கு இந்த வேலையளை விடாமல் கவனமா இருக்கிறது புத்தி எண்டு விளங்குது. எப்பவும் தொழிலோடை தொங்கிக் கொண்டு நிக்கக்கூடிய நிலையில நான் இப்ப இல்லை. கடை எண்டா அதோடையே நாள் முழுவதும் விலக முடியாமல் தொங்க வேணும்."

"நீங்கள் சொல்லுகிறது உண்மைதான். அதே நேரம் நாங்களும் சோர்ந்து போகக் கூடாது. ஆனா... உந்த வட்டி பற்றிக் கேள்விப் படுகிறதை நினைக்கப் பயமா இருக்குது. வீடு விலை குறைஞ்சாப் பருவாய் இல்லை. நாங்கள் என்ன விக்கிறதுக்கே வீடு வாங்கி இருக்கிறம்? நிரந்தரமா இருக்க வாங்கின எங்களுக்கு இப்பவே விற்க வேண்டிய அவசியம் இல்லை. வட்டி எக்கச்சக்கமா ஏறினாக் கட்டத் தவண்டை அடிக்க வேண்டி வரும் எண்டதை நினைக்க அடிவயித்தைக் கலக்குது" என்றான் அருள்.

"உண்மை அருள். நான் இன்னும் இரண்டு பேரையும் பார்த்துக் கொண்டு சமாளிக்க வேணும்."

"நீங்கள் புவனா அக்காவையும் எங்கையாவது வேலையில செருகி விடுகிறது உங்களுக்கு நல்லது. இல்லாட்டித் தனிய உங்களுக்குப் பெரும் கஸ்ரமாய் போயிடும். ஏதாவது ஒரு நொக்கிள் யொப்பை எண்டாலும் எடுத்து அவவுக்கு குடுங்க" என்றான் அருள்.

"நீ சொல்லுகிறதும் உண்மை... சரிஸ்காவின்ரை வயசில இருக்கிறதுகளே வேலை செய்யுதுகள். நாங்கள் சும்மா இருந்தாச் சமாளிக்க ஏலாது. மனிசிமாரை வீட்டுக்க வைச்சு இருக்கிற வேலை எல்லாம் இங்க சரிவராது. இனி அவவை எங்கை ஆவது கொழுவத்தான் வேணும்."

"இந்த முறை கிறிஸ்மஸ்சுக்கு அந்தப் பெரிய "சொப்பிங் கொம்பிளெக்ஸ்" திறந்திடுமாம். அதுக்கு உள்ள ஏகப்பட்ட கடையள் இருக்கும் எண்டு சொல்லுகினம். அதுக்கு உள்ள ஏதாவது ஒரு வேலையை எடுக்கலாமோ எண்டு

பாருங்கோ. புதுக் கட்டடம் எண்டா வேலை செய்யிறதும் ஈசி... அதோடை சம்பளமும் நல்லா இருக்கும்." என்றான் அருள்.

"கேட்டுத்தான் பார்க்க வேணும். ஆனா... ஏதாவது "கொமீன்"(நகரசபை) இல்லாட்டி ஸ்தாத்தன் (மத்திய அரசு) வேலையில புகுந்தால் நிம்மதியா வேலைக்குப் போய் வரலாம். அப்பிடி ஒரு வேலை எடுத்திட்டா வேலையும் குறைவா இருக்கிறதோடை வேலை போயிடும் எண்டு பயப்பிடவும் தேவை இல்லை." என்றார் "TS".

"அது அவ்வளவு ஈசி இல்லை அண்ணை. நொஸ்குகளே அப்பிடியான வேலையை லேசில விடமாட்டாங்கள். ஆனா... முயற்சி செய்தாக் கிடைக்கும். ஒஸ்லோவில தானே நிறைய ஓபீஸ் இருக்குது." என்றான் அருள்.

"உண்மை தான். சொரூபனும், ரூபனும் என்ன செய்யிறாங்கள்?"

"அவங்கள் கவலையே இல்லாத ஜீவன்கள் அண்ணை. ஒவ்வொரு நாளும் வியர் போத்திலோடை வாறாங்கள். கேட்டா இன்றிருப்பார் நாளை இல்லை எண்டு தத்துவம் பேசுகிறாங்கள்."

"அவங்களுக்குச் சகோதரங்கள் இல்லையே?"

"சகோதரங்கள் இருக்க வேணும். அனேகமாகச் சகோதரங்கள் இருந்தா எவ்வளவு மிச்சம் பிடிச்சு ஊருக்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு அனுப்புவாங்கள். இவங்கள் ஐரோப்பியக் கலாச்சாரத்தைத் தத்து எடுத்த மாதிரி... முதல்ல தாங்கள் அனுபவிச்சு மிஞ்சினாக் குடுப்பம் எண்ட கொள்கையில இருக்கிறாங்கள்.

"நிமலன் ஏதும் கதைச்சவனே?"

"ஓம் அண்ணை... நான் அதை மறந்து போனன். அவன்ரை கவிதை ஒண்டு வீரகேசரியில வந்து இருக்குதாம், அவனுக்கு அது இருப்புக் கொள்ளாத புளுகு, தான் இனி நிறைய வாசிக்க வேணும், எழுத வேணும் எண்டான்."

"இப்பிடியே ஆர்வத்தோடை இருந்தா ஒரு நாளைக்குப் பெயர் சொல்லுகிற மாதிரியான ஒரு எழுத்தாளனா வருவான். அவனிட்டை அந்தத் திறமையும் ஆர்வமும் இருக்குது. அதில குறை சொல்லுகிறதுக்கு ஏதுவும்

இல்லை. எழுத முதல்ல நல்லதொரு படிப்பை முடிக்க வேணும். அதைச் செய்து முடிப்பான் எண்டு நினைக்கிறன்." என்றார் "TS".

"அவன் படிப்பிலும் கெட்டிக்காரன். ஏதாவது படிச்சு முடிப்பான். அது சரி... சரிஸ்காவா? அவ எங்களோடை கதைக்கவே மாட்டாவோ?"

"TS" கடைசிக் கேள்வியை அருளிடம் இருந்து எதிர்பார்க்க வில்லை. அவன் வழமையாக அப்படிக் கேட்பதும் இல்லை. இன்று ஏன் அப்படிக் கேட்டான் என்பதும் அவருக்கு விளங்க வில்லை. அதைவிட அது திடீரெனக் கேட்கப்பட்டதால் அவனுக்கு எப்படிப் பதில் சொல்வது என்பதும் பெரும் குழப்பம் ஆகிற்று. மனிதர்கள் தமது அன்றாட வாழ்வில் தத்துவம் பேசிக் கொண்டு இருக்க முடியாது. இலட்சியங்களுக்காக இவ்வுலகை மறக்க முடியாது. ஒரு சாதாரண மனிதன் வாழ்வில் நாளுக்கு நாள் எப்படியும் கோலங்கள் மாறலாம்.

வாழ்வில் எதையும் யாரிடமும் கேட்கலாம். நரம்பு மண்டலத்தில் எப்போது எப்படி மின்துளிகள் பாயும் என்பதற்கான வரைபிலக்கணங்கள் எப்போதும் இருந்தது இல்லை. இருந்து இருந்தால் ஆன்ஸ்ரையினுக்குப் பிரபஞ்சமும், அணு குண்டும் மூளையில் தோன்றாது போயிருக்கும். மட்டுப்படுத்தப்பட்ட இயக்கத்தோடு இருக்கும் சதைப் பிண்டமாக இருக்கும் எம் மூளையும் அண்டத்தையே அளவெடுத்த அந்த அற்புத மூளையும் மண்டை ஓட்டிற்கு உள்ளேயே ஒளிந்து இருந்தது. அதில் பாய்ந்த மின் சமிக்கைகள், அதன் சேமிப்புகள் மனிதனுக்கு மனிதன் அளவிட முடியாத தனித் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. ஏன் இவன் இப்போது இதைக் கேட்டான்? எந்தச் சமிக்கை இதைக் குறி வைத்தது? கேட்டுவிட்டான். எதையாவது சொல்லிச் சமாளிக்க வேண்டும் என்கின்ற உணர்வு அவருக்கு இறுதியாக வந்தது.

"அப்பிடி எண்டு எல்லாம் ஒண்டும் இல்லை. அவளுக்குக் கூச்ச சுபாவம்... அதுதான் இப்பிடி... அடுத்தமுறை வரேக்க பாரும்... அவள் உம்மோடை கனக்கக் கதைப்பாள்." என்றார் "TS".

"சரி அண்ணை... நான் சும்மா தான் மருமகளைப் பாக்க வேணும் எண்ட ஆசையில கேட்டன். அப்ப நான்

வெளிக்கிடட்டே? உங்களுக்கும் வேலைக்கு நேரமாகுது. புவனா அக்கா நான் வெளிக்கிடட்டே?"

"ஓம்... ஓம்..." என்று இருவரும் தலையை ஆட்டி அருளுக்கு விடை கொடுத்தனர்.

22 தீண்டல்

சில காலமாய் சரிஸ்கா "மாய்" என்கின்ற வியட்னாம் சினேகிதி உடன் பாடசாலைக்குச் சென்று வருவாள். அந்த வியட்னாம் சினேகிதியும் "சாலொத்த" என்கின்ற நோர்வேப் பெண்ணும், சோமாலியாப் பெண்ணுமே அவளது நெருங்கிய சினேகிதிகள். சினேகிதிகள் என்றால் சலசலக்கும் அருவியாக எப்போதும் கதைக்காத தோழிகள். மாய் சரிஸ்காவைவிட உயரத்திலும், உடம்பிலும், குரலிலும் நொடிந்தவள். அவளிடம் இருந்து வரும் சத்தத்தை கேட்க வேண்டும் என்றால் அருகில் போய் ஒட்டிக் கொண்டு நிற்க வேண்டும். அவளுக்குக் கூர்மையான அகலக் கண்கள். சில தாய்லாந்துப் பெண்கள் எங்களைப் போல மங்கிய தோலோடு இருப்பது உண்டு. ஆனால் இவள் சீனர்களைப் போல நல்ல நிறமானவள். பாடசாலைக்குப் போகும் வழியில் அவளது வீடு இருந்தது. அவளது தாயும், தகப்பனும் ஒரு கடை வைத்து இருந்தார்கள். அதில் அவளது அண்ணனும் வேலை செய்தான். மாய்க்கும் தனிமை அதிகமாக இருக்க வேண்டும். எப்படியோ சரிஸ்காவை நட்பாக்கிக் கொண்டாள். அவளின் அந்தக் கெட்டித்தனம் "TS"சிற்குப் பிடித்துக் கொண்டது. அவள் ஒரு முறை வீட்டிற்கு வந்த போது அவளுக்குக் கோண் ஐஸ்கிறீம் "TS" எடுத்துக் கொடுத்தார். சரிஸ்கா வெப்பியாரமாய் பார்த்துவிட்டு அப்பாவிடம் இருந்து மற்றதை பிடுங்கிச் சாப்பிட்டாள். அவள் மண்டைக்குள் எந்த நேரத்தில் என்ன ஓடும் என்பது அவருக்கு விளங்குவது இல்லை. சில வேளை இரவில் கனவு கண்டு கத்தும் போது அவருக்குக் குலை நடுங்கும். ஓடிப் போய் தட்டி எழுப்பினால் கையைத் தட்டி விட்டுத் திரு திரு என்று விழிப்பாள். அவள் மூளையில் அழியாது அடம் பிடிக்கும் சங்கதிகளை எப்படி அழிப்பது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. இவ்வுலகில் மனிதர்களின் கண்கண்ட கடவுள்கள் தான் மருத்துவர்கள்.

அந்தக் கடவுள்களையும் மிஞ்சிய கடவுள் இருப்பது "TS"சிற்குத் தெரியும். அந்தத் துர்க்கை அம்மனை வேண்டாத நாள் இல்லை. யார் கடவுள் மேல் அதிக நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்களுக்கே கடவுள் அதிக சோதனை கொடுப்பாராம். "TS"சைத் துர்க்கை தயவு இன்றிச் சோதித்தாள். எப்பிறவியிலோ செய்த பாவத்திற்கான தண்டனையை இப்பிறவியில் மொத்தமாக அனுபவிக்கக் கொடுத்தாள். சாலொத்தவுக்குச் சிவப்பு முடி. மீண்டும் மீண்டும் பட்டை தீட்டிய வைரம் போல ஒளிர்வதான நீலக் கண்கள். வகுப்பில் உயரமானவர்களில் அவளும் ஒருத்தியாக இடம் பிடித்தவள். ஆர்ப்பாட்டமாகக் கத்திக் கதைப்பாள். அவள் கேட்பதற்கு பல வேளைச் சரிஸ்கா பதில் சொல்வது இல்லை. அனேகமான கேள்விக்கு சரிஸ்கா தனது புன்னகையால் பதில் சொல்லிக் கொள்வாள். அதுவும் அவளுக்கு மட்டுமே அந்தப் பதில். அவளில் என்ன நம்பிக்கை வந்தது என்று யாருக்கும் எதுவும் தெரியாது. சாலொத்தவும் இவளின் பதிலை எதிர்பார்ப்பது இல்லை. எதிர்பார்ப்பு இல்லாத போதே ஆணவம் அடங்கத் தொடங்குகிறது என்கின்ற தத்துவம் சரிஸ்காவிற்குத் தெரியாது. என்றாலும் அவளின் செய்கை பிடித்துக் கொண்டது. அவளின் உயரத்திற்கும், உடம்பிற்கும் சக மாணவர்கள் மரியாதை கொடுப்பது உண்டு. அதுவும் சிப்பிலிக் கொச்சிக்காய் கணக்கில் இருக்கும் பொடியள் கழுத்தின் மீது கைபோட்டு வளைத்துப் பிடிக்க முயற்சிப்பது இல்லை. முடியாததை ஏன் முயற்சிப்பான் என்கின்ற முடிவு அவர்களிடம். அஸ்துார் இவர்களைவிடச் சரிஸ்காவின் முக்கியமான முக்காடு போட்ட தோழி.

இப்போது சரிஸ்காவில் சில மாற்றங்கள். அதன் விளைவால் இன்றும் அவள் சென்ற பின்பே "TS" நித்திரை விட்டு எழுந்தார். எப்போதாவது உடம்பு அடித்துப் போட்டது போல இருக்கும். "TS"சிற்குக் காலைச் சாப்பாடாகப் பாணும் அதற்கு வைத்துச் சாப்பிடும் பொருட்களும் பரிமாறிய பின்பு புவனலோசினி பால் தேநீர் வைத்துக் கொடுத்தாள். கோலில் சாப்பாட்டு மேசை இருக்கிறது. சாப்பாட்டு மேசையில் "TS" இருந்து சாப்பிடுவது இல்லை. எப்போதும் சோபாவே அவருக்கு வசதியாக இருக்கும். சாப்பாடு, சோபா மேசைக்கு வரும். கண்ணும் காதும் தொலைக் காட்சிக்குள் தொலைந்து போகும். தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு

சாப்பிடக் கூடாது என்று சில மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். தொலைக்காட்சி பார்க்காவிட்டால் சாப்பாடு இறங்காது என்கின்ற அனுபவம் "TS"சிற்கு.

*

இப்போது சரிஸ்காவைவிட புவனலோசினி நிறையவே மாறி இருந்தாள். இருந்தும் சரிஸ்கா போன பின்பு "TS"சும் வெளியே போவது என்றால் அவளுக்கு முகம் வெளிறிப் போய்விடும். நெற்றியில் முத்து முத்தாய் வியர்வை சிந்தத் தொடங்கும். "TS" "பயப்பிடாத... பயப்பிடாத... இங்க ஒண்டும் நடக்காது." என்று அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டி இருக்கும். இந்தச் சிறிய வீட்டிலேயே தனிய இருக்க இப்படிப் பதறும் இவள் பெரிய பெரிய நிறுவனங்களில்... மாலை நேரங்களில்... தனியே நின்று வேலை செய்வாளா என்பது "TS"சிற்குச் சந்தேகத்தை உண்டு பண்ணும். என்றாலும் தொடர்ந்தும் வீட்டிற்குள் வைத்து இருக்காது வேலை ஒன்றில் கோர்த்துவிட வேண்டும் என்று "TS" முடிவு செய்திருந்தார்.

பால் தேநீரோடு வந்த புவனலோசினி அதை வைத்து விட்டுச் சோபாவில் அமர்ந்தாள். முகத்தில் ஏதோ பிசினாய் வடியும் கவலை. அது என்ன கவலை என்பது "TS"சிற்கு விளங்கியது. அவளுக்கு நித்தமும் அதே கவலையே. "TS"சும் நித்தமும் அவளைச் சமாளிக்க வேண்டியது கட்டாயக் கடமை ஆகிறது.

"TS" தேநீரை எடுத்துப் பருகத் தொடங்கினார்.

"ரீ நல்லா இருக்குது. அது சரி உனக்கு இப்ப என்ன யோசினை?"

"நீங்கள் எத்தினை மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வருவியள்?"

"எத்தின மணிக்கு வந்தால் என்ன? இங்க யாரும் உங்களை ஒண்டும் செய்ய மாட்டினம். நீயும் எங்கை ஆவது வேலைக்குப் போனால் உந்தப் பயம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் குறையும்."

"நான் வெளியால போய் வேலை செய்கிறதா?"

"அப்ப வீட்டுக்கையே இருக்கப் போகிறியா?"

"அப்படி எண்டு இல்லை. ஆனா... வெளியால போய் வேலை செய்கிறதை நினைக்கவே பயமா இருக்குது. யார் யார் என்னென்ன செய்வாங்களோ? எப்ப என்ன நடக்கும் எண்டு நான் பயத்தில சாகிறது உங்களுக்குத் தெரியாதே?"

"தெரியும். அது அந்த நாடு அப்பிடி. இந்த நாடு வேறை மாதிரி. இங்க ஒருத்தரும் ஒண்டும் செய்ய மாட்டினம். தேவை இல்லாமல் பயப்பிடக் கூடாது. விபத்து நடக்கும் எண்டு வாகனமே ஓட்டாமல் இருக்க முடியுமா? கூட இருக்கிற பிள்ளையும் உன்னைத் தானே பார்க்கும்? அதையும் நீ ஞாபகம் வைச்சிருக்க வேணும். மறக்க வேண்டியதை மறந்து போட்டு இருக்கிற வாழ்க்கையில சந்தோஷமாய் இருக்க வேணும்."

"உங்களுக்கு என்ன... ஈசியாச் சொல்லுவியள்... எனக்கு எல்லோ தெரியும் அந்த வேதனை. என்னை விட்டு எப்பவும் களண்டு போகாத இம்சை அது... ஒருத்தருக்கு உலகம் சொற்கமாகத் தெரியலாம். மற்றவருக்கு அதுவே நரகமாகத் தெரியலாம். எனக்கு உங்களையும் சரிஸ்காவையும் விட்டால் இந்த உலகமே நரகம் போலத் தெரியுது."

"சரி உலகத்தை விடு. எங்களுக்காக எண்டாலும் சந்தோஷமாய், பயப்பிடாமல் வாழத்தானே வேணும். அதுக்கு நீ முதல்ல றை பண்ண வேணும். அது தான் எல்லாருக்கும் நல்லது."

"எனக்கும் விளங்குது. நானும் றை பண்ணுகிறன். எண்டாலும் திரும்பத் திரும்ப மனசு சோர்ந்து போகுது. எத்தினை போராடினாலும் கடைசியாத் தோத்துப் போயிடுகிறன். கை கால் நடுங்குது. காணுகிறவன் எல்லாம் ஆமி மாதிரி இருக்கிறான். உங்களுக்கு அது விளங்கேல்லை. என்ரை மண்டைக்கு உள்ள என்ன கஸ்ரம் இருக்கு எண்டு உங்களால இல்லை படைச்ச கடவுளாலேயே புகுந்து பார்க்க முடியாது. அப்படி முடியும் எண்டா எல்லாற்றை வாழ்க்கையும் சந்தோஷமாய் இருந்து இருக்கும்."

"சரி... சரி... கோவிக்காத. எல்லாரும் நல்லா இருக்க வேணும் எண்ட ஆதங்கத்தில அப்பிடிச் சொல்லுகிறன். உனக்கும் அவளுக்கும் கஸ்ரம் எண்டது எனக்கு நல்லா விளங்குது."

"அதையே நாங்கள் நினைச்சுக் கொண்டு இருக்காமல், அதை மறக்கிற மாதிரி ஏதாவது நீங்கள் செய்யுங்கோ எண்டு நான் சொல்லுகிறன்." என்றாள் புவனலோசினி. "TS" அதற்கு ஆறுதலாகப் பதில் சொல்ல எண்ணினார். அவர் எண்ணங்கள் சொற்களாக வடிவெடுக்க முதல் திடீரெனக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. புவனலோசினி அதை எதிர்பார்க்க வில்லை. எட்டி "TS"சைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அவள் உடல் நடுங்கியது. "TS"சிற்கு ஒரு கணம் தான் என்ன பாவம் செய்தேன் என்பது விளங்கவில்லை. அதற்குத் தான் என்ன பிராயச்சித்தம் செய்ய முடியும் என்பதும் தெரியவில்லை. அவளை இறுக்கி அணைப்பதைத் தவிர எதையும் செய்ய வேண்டும் என்று அவருக்குத் தோன்றா விட்டாலும் யார் கதவைத் திறந்து இப்போது வருவது என்கின்ற யோசனை ஓடியது. கதவைத் திறந்து வருவது என்றால் சரிஸ்காதான் வரவேண்டும். இப்போது பாடம் நடக்கும் நேரம். அந்த நேரத்தில் எதற்காக வீட்டிற்கு வருகிறாள்? ஏதாவது சுகம் இல்லையா? என்கின்ற எண்ணங்கள் அவருக்குத் தோன்றின. "TS" மெதுவாகப் புவனலோசினியை விலக்கிவிட்டுக் கதவை நோக்கி நகர முயன்றார். அதற்கு இடையில் சரிஸ்கா கதவை உள்ளே பூட்டிவிட்டு தனது அறைக்குச் சென்றாள். அதே வேகத்தில் மாற்று உடுப்பை எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குள் புகுந்தாள். சரிஸ்கா காலையில் குளித்த பின்பே பாடசாலைக்குச் செல்வாள். இன்றும் குளித்த பின்பே பாடசாலைக்குச் சென்றாள். இப்போது எதற்காக மீண்டும் ஒரு குளியல் என்பது விளங்காது விட்டாலும் பெண்கள் குளிப்பதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கும் என்று தனக்குத் தானே சமாதானம் கூறிய வண்ணம் வந்து சோபாவில் இருந்தார்.

மகளே வந்தாள் என்பதை அறிந்ததில் இருந்து புவனலோசினியின் நடுக்கம் குறைந்து விட்டது.

"நான் சமைக்க வேணும். அதுக்கு முதல் ரீ வைச்சரவே? இவள் ஏன் இப்ப பள்ளிக்கூடத்தில இருந்து வந்தவள்? எப்பிடித் தான் கழுவினாலும் போகாத ஊத்தை எண்ட நினைப்போடை அப்பிடியே இருக்கிறாள்... ம்... நாங்கள் இதுக்கு மேல என்ன செய்கிறது? நான் போய் ரீ வைச்சாறன்."

புவனலோசினி எழுந்து சமையல் அறையை நோக்கிச் சென்றாள். எப்படி இவர்களை மீட்பது என்னும் கேள்வி

மீண்டும் விசித்திரமாக, பூதாகரமாகத் தன்னை விழுங்கத் தயாராக நிற்பதை எண்ணி "TS" பரிதவித்தார். "TS" பரிதவித்தால் அவருக்கு ஆறுதல் சொல்வதற்கு யாரும் இல்லை என்பது அவருக்கான சாபம். புவனலோசினி ஆறுதல் சொல்லி இருப்பாள். ஏன் சரிஸ்காகூட ஆறுதல் சொல்லி இருப்பாள். எல்லாவற்றையும் விதி விழுங்கித் தலைகீழாக்கி வைத்திருந்தது. விதி என்று ஒன்று உண்டா என்றால் "TS" ஓம் என்றே பதில் சொல்லுவார். இல்லாவிட்டால் தனது வாழ்க்கையில் இத்தினை கொடுமை நடந்து இருக்காது அல்லது நடக்க விட்டு இருக்கமாட்டார் என்பது அவர் எண்ணம். எல்லாம் நினைப்பதற்குள் நடந்து முடிந்து விட்டன. வாழ்வில் என்ன நடக்கப் போகிறது என்பது எம் கையில் இல்லாத போது அதை விதி என்றுதானே நம்ப வேண்டும்? என்பது அவரது எண்ணம் ஆகியது.

சரிஸ்கா ஏன் இடையில் பாடசாலையில் இருந்து வந்தாள் என்பது அவருக்கு விளங்கவில்லை. அவள் குளித்து முடித்துவிட்டு வந்தால் என்ன நடந்தது என்று கேட்கலாம். கேட்டாலும் பல வேளைகளில் அவள் பதில் சொல்லமாட்டாள். எப்போது சிரிப்பாள் எப்போது முறைப்பாள் என்பது யாருக்கும் தெரியாத புதிர். சிரிக்கும் போது மலரும் மனம் அவள் முறைக்கும் போது சுருண்டு விடும். அவள் முறைக்கும் போது வயதை, அனுபவத்தை மீறி அவளைத் திருப்பி முறைக்க வேண்டும் என்கின்ற உந்தல் வந்து தோல்வியோடு அடங்கிப் போய்விடும். மகளிடம் தோற்பது அவருக்கு அவமானம் இல்லை. அதை நித்தமும் அனுபவிப்பது வேதனைத் தந்தது. அதுவும் எப்போது அனுபவிப்பேன் என்பது தெரியாது அதை அனுபவிக்க வேண்டி வருவது மிகவும் அவஸ்தை ஆனது. அவள் மூளைக்குள் தன்னால் புகுந்து பார்த்துவிட முடியாது என்பதும் அவருக்கு விளங்கியது. புவனலோசினியே இவ்வளவு பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கிறாள் என்றால் அவள் உலகத்தையே அந்த நிகழ்வுக்குப் பின்பு எப்படிப் பார்ப்பாள் என்பதை "TS"சால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

குற்றங்களுக்குத் தண்டனை தரப்படுவது உண்டு. குற்றமே செய்யாது கொடுமையான தண்டனை தரப்பட்டால் அது எப்படி இருக்கும்? நீதி மறுப்பு என்பது உலகத்தில் நித்தமும் நடைபெறும் மனிதத்தின் மரணம். அதை நேரடியாக அனுபவிக்கும் போது அதன் வலி

கொடுமையாக உறைக்கிறது. தன்னையே தான் வெறுக்கும் எண்ணத்தை என்றும் அகற்ற முடியாது, அந்த உணர்வோடு வாழவும் முடியாது, சாகவும் முடியாது துடிப்பது பற்றி "TS"சிற்குத் தெரிந்து இருந்தாலும் அதையும் வென்று வாழ வேண்டும் என்பது அவருடைய விருப்பம். அவருடைய விருப்பம் அப்படி இருந்தாலும் வாழப் போகின்றவர்கள் அதற்கு ஒத்துழைப்பார்களோ இல்லையோ என்பது அவரது விடை இல்லாத வினாவாகியது. தன்னையே தான் வெறுக்கும் எண்ணம் தன்னுள் எழுந்தால் உடனேயே அதனை முளையில் கிள்ளி எறிவது போல எறிந்து விடுவார். எறிந்தாலும் அது இடைக்கிடை முளைப்பதற்கு மறப்பது இல்லை. இலட்சிய வசனங்கள் போல வாழ்க்கை அமைந்து விடுவது இல்லை. வாழ்க்கை என்பது அன்றாட சலனங்களின் கை வசப்பட்ட பொம்மை. இப்படித்தான் வாழ வேண்டும் என்று கோடு கிழித்து வாழும் மனிதர்கள்கூட ஒரு நாள் அந்தக் கோட்டைச் சீதை போல் தாண்ட வேண்டியது ஆகிறது.

"TS" ஒரு போதும் உயரச் சுவர் எழுப்பி உள்ளே வாழ வேண்டும் என்று எண்ணியவர் இல்லை. மனைவியைவிடச் சரிஸ்கா அப்படியான ஒரு உலகத்தைத் தன்னைச் சுற்றி அமைத்து விடுவாளோ என்கின்ற பயம் அவரிடம் எப்போதும் உண்டு. அப்படி எதுவும் நடந்துவிடக் கூடாது என்று அவர் அன்னை துர்க்கையை இப்போதும் அடிக்கடி இறைஞ்சுவதும் உண்டு.

சரிஸ்கா குளித்தாள்... அவள் தொடர்ந்தும் குளித்தாள்... அவள் குளிக்கத் தொடங்கினால் விறாண்டி விறாண்டி நீண்ட நேரம் தோல் உரியும் வரை குளிப்பாள். உடம்பின் ஒவ்வொரு கலங்களும் அழுக்காகி விட்டதான வெறியும் அருவெருப்பும் அவளிடம் எப்போதும் இருக்கும். அந்த மூர்க்கமாகச் சுத்தம் செய்யும் எண்ணத்தை அவளிடம் இருந்து அகற்ற வேண்டும் என்கின்ற பரபரப்பு "TS"சிடம். சவர்க்காரத்தைப் போட்டு உரஞ்சிக் குளிக்கலாம். சவர்க்காரத்தைப் போட்டு விறாண்டிக் குளிக்கும் இரகம் அவள். அவள் குளித்து வெளியே வந்தால் தோள் மூட்டு, கழுத்து எல்லாம் நோர்வேக் காரரின் வெள்ளைத் தோல் வெயிலில் படுத்தால் குங்குமமாய் சிவந்து இருப்பது போலச் சிவந்து இருக்கும். "TS" பல முறை சொல்லிப் பார்த்து விட்டார். சவர்க்காரம் இங்கு அதிகம் பாவிக்கக் கூடாது என்று அறிவுரை வழங்கிப் பார்த்தார். சரிஸ்கா "TS" சொல்லும் போது எதுவும் பேசாது கேட்டுக் கொண்டு

இருப்பாள். பின்பு தான் நினைப்பது போல விறாண்டிக் கிழித்துக் கொண்டு வெளியே வருவாள்.

சரிஸ்கா இன்னும் குளித்து முடிக்கவில்லை. புவனலோசினி மீண்டும் தேநீரோடு கோலுக்குள் வந்தாள். "TS" தேநீரைப் பருகத் தொடங்கினார். பின்பு தொலைக்காட்சியைப் பார்ப்போம் என்கின்ற எண்ணத்தோடு "Remote control"த் தூக்கினார். அவர் "Remote control"த் தூக்கவும் தொலைபேசி சிணுங்கவும் சரியாக இருந்தது. "TS" தேநீரை நடு மேசையில் தள்ளி வைத்துவிட்டு எட்டிச் சென்று தொலைபேசியை எடுத்தார். அடுத்த முனையில் வகுப்பு ஆசிரியர் கவலையோடு கதைத்தார்.

"நான் கஸ்ல பாடசாலையில் இருந்து இன்கிறி கதைக்கிறேன். நான் சரிஸ்காவின் வகுப்பு ஆசிரியர். அவள் இடையில் வெளிக்கிட்டு வீட்டிற்கு வந்து விட்டாள். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையாக இருக்கிறது. முதலில் அவள் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாளா என்று நாங்கள் அறிய வேண்டும்? அது எங்களுடைய முக்கியமான கடமை. அவள் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாளா என்று தயவு செய்து சொல்லுங்கள்." என்றார்.

"அவள் வீட்டிற்கு வந்து விட்டாள். இப்போது மீண்டும் குளிக்கிறாள்? பிரச்சனை ஒன்றும் இல்லை. ஆனால் பள்ளிக்கூடத்தில் என்ன நடந்தது? ஏன் இடையில் வெளிக்கிட்டு வீட்டிற்கு வந்தாள் என்று நீங்கள் சொன்னால் நன்றாய் இருக்கும்." என்றார் "TS".

"என்ன நடந்தது என்று எனக்குச் சரியாகத் தெரியாது. அவளுக்குப் பிரச்சனை இருப்பது பற்றி எனக்குத் தெரியும். என்றாலும் திடீர் திடீர் என்று ஏன் சில வேளைகளில் அப்படி ஒதுக்கமாக இருக்கப் பார்க்கிறாள் என்பது எனக்கு விளங்கவில்லை. நீங்கள் மருத்துவரோடு கதைத்ததாக ஒரு முறை கூறி இருந்தீர்கள். தொடர்ந்தும் அவருடன் கதையுங்கள். அவளின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிய வில்லை. அவளின் மனக் குடைச்சலை இயலும் ஆனவரைக்கும் குறைக்க முயற்சிப்பது நல்லது. சிறிதாக இருக்கும் போதே பிரச்சனையைத் தீர்ப்பதே புத்திசாலித்தனம். உங்களுக்கு இது விளங்கும் என்று நினைக்கிறேன்." என்றார் இங்கிறி.

"எனக்கு விளங்குகிறது. நாங்கள் தொடர்ந்தும் வைத்தியருடன் தொடர்பில்தான் இருக்கிறோம். அதை

நான் சரியாகப் பார்த்துக் கொள்ளுவேன். நீங்கள் இன்று என்ன நடந்தது என்று கூறினால் எங்களுக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும்."

"பெரிசா ஒன்றும் நடக்கவில்லை. எல்லோரும் கலகலப்பாக இருந்தார்கள். திடீரென்று பகிடி பகிடியாகப் "பிறேட்" என்கிறவன் சரிஸ்காவை அணைத்து கன்னத்துடன் கன்னம் வைத்தார். அது இங்கு சாதாரணமானது தானே? பெண்களுக்கு ஆண்கள் வணக்கம் சொல்லிக் கொள்ளும் ஒரு முறை. அது உங்களுக்குத் தெரிந்து இருக்கும். அவன் அதைச் சாதாரணம் ஆகத்தான் செய்தான். சரிஸ்காவுக்கு அது பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் வெளிக்கிட்டு வந்து விட்டாள். வேறு யாரும் என்றால் இதை ஒரு நடத்தைப் பிரச்சனை ஆக்கி இருப்பார்கள். எனக்கு நீங்கள் அவளைப் பற்றி ஏற்கனவே கூறி இருந்ததால் நிலைமையை விளங்கிக் கொண்டேன். ஆனால் நீங்களும் உங்களது மருத்துவரும் கொஞ்சம் அதிகமாக நேரம் அவளோடு செலவழிக்க வேண்டும். என்ன பிரச்சனை என்றாலும் வகுப்பில் சலசலப்பு ஏற்படாமல் அவள் சமாளித்துப் போக வேண்டும். அவளுக்கு இப்போது கஷ்டமாய் இருக்கலாம். எல்லாவற்றிற்கும் வைத்தியம் இருக்கிறது. நாளையளவில் அவள் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்கிற மாதிரி நாங்கள் எல்லோரும் செயற்பட வேண்டும்." என்றார் இன்கிறி.

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்குகிறது. அவள் ஏற்படுத்திய சலசலப்பிற்கு முதலில் எங்களை நீங்கள் மன்னிக்க வேண்டும்." என்றார் "TS".

"அப்பிடி இல்லை. நான் அதை ஒரு பெரிய பிரச்சனையாய் எடுத்துக் கொள்ள வில்லை. ஆனால் நாங்கள் அவளை இப்பிடியே விடக்கூடாது. அவள் அனுபவிக்க வேண்டியவை நிறையவே உள்ளன. எல்லோரும் ஒரு குறிக்கோளை நோக்கி உழைத்தால் முழுப் பயனையும் அடைய முடியும்." என்றார் இங்கிரி.

"நிச்சயமாக... உங்களை மாதிரி விளங்கிக் கொள்ளக் கூடிய ஆசிரியர் கிடைத்ததே பெரிய பாக்கியம். நான் அவளுடனும் கதைக்கிறேன். மருத்துவர் உடனும் கதைக்கிறேன். நிச்சயம் அவள் இனி வகுப்பில் சலசலப்பு

ஏற்படுத்தாமல் இருப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கிறேன்." என்றார் "TS".

"உங்களுடைய வார்த்தையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்னோடு கதைக்க வேண்டும் என்றால் நீங்கள் அவளிடமே தகவல் அனுப்பி வைக்கலாம். அவளின் பிரச்சனைக்கு எல்லோரும் தொடர்பில் இருப்பது நல்லதாகவே நான் நினைக்கிறேன். அதை நாங்கள் மறந்து விடக் கூடாது. சரி உங்களுடைய பொழுது நல்ல பொழுதாய் இருக்கட்டும். நான் வைக்கிறேன்."

"உங்களுடைய பொழுதும் நல்ல பொழுதாய் இருக்கட்டும்."

சரிஸ்கா குளித்துவிட்டுக் குங்கும நிறத்தில் வந்து சோபாவில் முறைத்த வண்ணம் இருந்தாள். "TS"சிற்கு அவளோடு எப்படிக் கதைப்பது என்று விளங்கவில்லை. தேநீரை எடுத்து வாயில் வைத்தார். அது ஆறிப்போய் இருந்தது. அதை இரண்டு மிடறில் குடித்தவர் மணியைப் பார்த்தார். வேலைக்கு நேரமாகிக் கொண்டு இருந்தது.

"சரிஸ்கா."

"ம்..." என்ற வண்ணம் அவள் "TS"சை நிமிர்ந்து பார்த்தாள். முகம் சுருங்கிப் பிதுங்கிக் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. அவள் துக்கத்தைப் பார்த்து "TS"சின் இதயம் இரத்தம் சொரிந்தது. அவர் வலியால் துடித்தார். இந்த வலி எப்போது மாறும் என்கின்ற ஆறா ஏக்கம் பிறந்தது. பாடசாலை என்பது அவசியமா என்கின்ற கேள்வி ஒரு கணம் தோன்றி மறைந்தது. பாடசாலை போகத்தான் வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இப்படி அவள் விம்மும் போது "TS"சிற்கு மனது கேட்பதில்லை. புத்திமதி சொல்ல வேண்டும் என்று நினைத்தவரின் புத்தியே பேதலித்தது போன்று இருந்தது. இவளுக்கு என்ன புத்திமதி சொல்லமுடியும் என்பது அவருக்கு விளங்காது குழப்பம் ஆகியது. சரிஸ்கா கண்களைத் துடைத்தாள். அம்மா கொடுத்த தேநீரைப் பருகத் தொடங்கினாள். "TS" ஆழமாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டார். மீண்டும் "சரிஸ்கா..." என்றார்.

"என்னப்பா?"

"ரீச்சர் போன் பண்ணினா."

"ம்..."

"நீ ஏன் சின்ன விஷயத்தைப் பெரிசு பண்ணுகிறா?"

"எதப்பா சின்ன விஷயம்? எனக்கு அது சின்ன விசயம் இல்லை."

"இங்க இப்படித்தானே வணக்கம் சொல்லிக் கொள்ளுகிறது?"

"அது அவைக்கு உள்ள சொல்லிக் கொள்ளட்டும். இல்லாட்டி விருப்பம் ஆனவைக்குச் சொல்லிக் கொள்ளலாம். விருப்பம் இல்லாமல் என்னை யாரும் தொட அனுமதிக்க மாட்டன். அது எனக்கு அசிங்கமாய் இருக்குது. அதிலும் பார்க்க நான் செத்தே போயிடலாம்."

"ஏன் சரிஸ்கா அப்பிடிக் கதைக்கிறாய்? உனக்காகத் தானே நாங்கள் இரண்டு பேரும் வாழுகிறம். நீ இப்படிக் கதைச்சா எங்களுக்கு எப்பிடி இருக்கும் எண்டு யோசிச்சுப்பார்?"

"உங்களுக்கு இது வேதனை தரும் எண்டு எனக்குத் தெரியும் அப்பா. ஆனா... அதே நேரம் என் வேதனை உங்களுக்கு விளங்காது. என்னை யாரும் தொட்டால் மேலில நெருப்புப் பத்தின மாதிரி இருக்கும். இது தொடர்ந்தால் நான் செத்துப் போயிடுவன். என்னால இனி அதைத் தாங்க முடியாது அப்பா."

"அதை மறக்கோணும். நீயும் மற்றப் பிள்ளையளைப் போலக் கலகலப்பாய் இருக்கோணும்."

"நான் எப்பிடி மறக்க முடியும்? மூளையில ஆழமாத் தோண்டிப் புதைச்ச மாதிரி ஒவ்வொரு கணமும் என்னை உலுக்கிற அந்த நினைவுகளில இருந்து நான் எப்பிடியப்பா விடுபட முடியும்? எனக்கும் அதில இருந்து விடுபட ஆசை, ஆனா... வழி தெரியுதில்லை. செத்துப் போனாத்தான் அதுக்கு வழி கிடைக்கும் எண்டு நினைக்கிறன்."

"அப்பிடி எல்லாம் சொல்லாத செல்லம். அதை எங்களால தாங்க முடியாது."

புவனலோசினி சரிஸ்கா கூறியதைக் கேட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். "TS"சின் கண்களும் வெள்ளிக்

கோடுகளை விட்டு விட்டத் தள்ளிக் கொண்டு இருந்தன. கரைந்த முத்துக்களாய் அவை கன்னம் தாண்டி புவியீர்ப்பின் வசப்பட்டன.

"உங்களால என்ரை வேதனையைத் தாங்க முடியாது எண்டது எனக்குத் தெரியும். என்னாலையும் என்னுடைய வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாது எண்டதையும் நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கோ. எப்பவும் நான் நரகத்து முள்ளாக் குத்துகிற நினைவுகளோடை வாழுகிறன் எண்டு உங்களுக்கும் தெரியும். கண்ணை மூடினா நடந்தது எல்லாம் மூளையில திரும்பத் திரும்ப ஓயாத படமாய் ஓடிக் கொண்டு இருக்குது. நான் ஒவ்வொரு நாளும் இரவில எத்தினை தரம் எழும்புகிறன் எண்டு உங்களுக்குத் தெரியுமா? உங்களை நான் இரவில எழுப்புகிறது இல்லை. என்ரை நிம்மதி தான் போயிட்டுது. நீங்களாவது நிம்மதியா நித்திரை கொள்ளட்டும் எண்டு புரண்டு புரண்டு படுக்கிறன். டொக்ரரிட்டைச் சொல்ல நித்திரைக் குளிசை தந்தார். அதுகின்ரை வீரியமும் எத்தினை நாளைக்கு? அதையும் மீறி இரவை நரகமாக்கிற அந்தக் கனவு வந்து கொண்டே இருக்குது. தயவு செய்து என்னுடைய வேதனையை விளங்கிக் கொள்ளுங்கோ அப்பா." என்றாள் சரிஸ்கா.

"சொறி அம்மா. நீ போய் சாப்பிடு. பிறகு எதையாவது செய். எனக்கு வேலைக்கு நேரமாகுது. நாங்கள் டொக்ரரோடை ஒருக்காக் கதைப்பம். மருந்து மட்டுமில்லை வேறை முறையாலும் கனவு வாறதைக் குறைக்க அவர் உதவி செய்வார். நீ இரவில படுக்க முதல் குளிச்சிட்டு, விபூதி பூசி, தேவாரம் பாடி, கடவுளை கும்பிட்டிட்டுப் படு. சில விஷயங்களுக்கு நாங்கள் கடவுளைத் தவிர வேறை யாரையும் நம்ப முடியாது. எல்லாருக்கும் கடவுள் ஒரு வழி காட்டுவார். ஒரு துர்க்கை அம்மன் படத்தை உன்ரை அறைக்கு உள்ள வைக்க வேணும்." என்றார் "TS".

"விடுங்க அப்பா… துர்க்கையும் இல்லை, முருகனும் இல்லை. ஒருத்தரும் எங்களை அங்க காப்பாத்த இல்லை. இங்கையும் அவை காப்பாத்த மாட்டினம்."

"அப்பிடி இல்லையடா. நம்பிக்கை தானே வாழ்க்கை."

"ம்…"

சரிஸ்கா ஏதோ சிந்தனையில் மூழ்கிப் போனாள். "TS" நேரத்தைப் பார்த்து விட்டுக்,

"கதவைப் பூட்டு." என்று புவனலோசினியிடம் கூறிய வண்ணம் அவசரமாக வெளியே சென்றார்.

23 தாம்பத்தியம்

அடக்கப் படுதலும் அடங்கிப் போதலும் இன்பம் என்பதான எண்ணம் "TS"சிடம் இருந்தது இல்லை. அடக்கப்பட்டு அடங்கிப் போவது அடிமைச் சாசனம் எழுதிக் கொடுப்பதான காரியம் என்பது அவருடைய நித்திய கருத்து. எங்களுக்கு என்று ஒரு கருத்து இருக்கலாம். உலகத்தில் நடப்பவை எல்லாம் அதற்கு ஒழுக நடந்துவிடும் என்பது அல்ல. அப்படி நடக்க வேண்டும் என்பது கட்டாயமும் இல்லை. அடக்கப் படுவதும் அடங்கிப் போவதும் இன்பம் தருவதாகவும் சில நிகழ்வுகள் இருக்கின்றன. மனிதர்கள் சில வேளை அப்படியே செய்கிறார்கள். விலங்குகள் பலவும் சில வேளை அப்படிச் செய்கின்றன. இயற்கையின் சூட்சுமம் என்ன என்பது புரிந்தும் புரியாததுமான குழப்பம் "TS"சிற்கு.

ஆண் மிருகத்தைப் பெரிதாகவும், பலமானதாகவும் ஏன் இயற்கை உருவாக்கியது? சில புறநடையாக இருக்கலாம். பெண் மிருகத்தின் மென்மையும், பதுமையும் பெண் மிருகம் ஆண் மிருகத்தால் ஆட்சி செய்யப் படுவதற்கு என்றே படைக்கப்பட்டதா என்கின்ற கேள்வியை அவரிடம் உருவாக்கும். பலம் உள்ளவனும் பலவீனம் ஆனவனும் ஒரு இடத்தில் இருந்தால் பலவீனம் ஆனவனைப் பலம் உள்ளவன் ஆட்சி செய்யத்தானே செய்வான்? இயற்கை பெண்களை உடல் ரீதியாகப் பலவீனமாகப் படைத்ததின் சூட்சுமம் என்ன? அடங்கிப் போனாலும் உனக்கு நான் தந்த பணியை நிறைவேற்று என்பதா? ஆண் மிருகத்தின் அடக்கலுக்குள் அந்தக் கணங்கள் இனித்தேதான் பெண் மிருகத்திற்கும் கழிகின்றனவா? அதுவே பெண் மிருகத்தின் சந்தோஷத் துளிகளா? உயிரினங்களின் பிறப்பின் நோக்கமா? அல்லது அதன் சாபக்கேடா? இயற்கையின் சூட்சுமத்தில் இனப்பெருக்கத்தின் தேவையே தத்துவங்களையும் கொள்கைகளையும் வெல்கிறதா? அதை வென்றுவிட முடியாத மனித மிருகம். அதன் கேலிக்குரிய அறிவு. இயற்கையிடம் என்றும் தோற்பதை வெல்ல முடியாத போட்டியாளன். அதை வென்றால் இவன் இனம் இன்று உலகத்தில் இருந்து இருக்காது. கடவுள்

இயற்கையைப் படைத்தான். படைத்த கடவுளே இயற்கைக்குப் பலியானதாக அவனது குடும்பம் உருவாகியது. அர்த்தநாதீஸ்வரரிலும் ஆண் பாகம் பெண் பாகத்திற்குச் சமனா? பால்களால் பிளந்து, பாலியலால் இணைந்து, வாழாவிட்டால் உலகத்தில் எந்த ஜீவராசியும் இருந்து இருக்காது. மில்லியன் வருடங்கள் செப்பனிடப்பட்ட இயற்கையை சில இலட்சம் வருடங்கள் செழுமையாகிய மனிதனாலும் வெல்ல முடியுமா. முடியவில்லை. அது அவனுக்கு முன்பு முதிர்ந்து விட்டது. இன்றும் பலமாக இருக்கிறது.

உறவு பல வேளைகளில் இன்பமாக இருக்கிறது. அதுவே உணர்வைக் கொன்று மனித முகத்தில் மிருக பலம் காட்டினால்? ஈனர்களும் இவ்வுலகில் இருக்கவே செய்கிறார்கள். உலகில் ஒவ்வொரு நாளும் அந்த ஈனம் மிருக பலத்தோடு நடக்கவே செய்கிறது. இரு மனதும் சேராத போது வன்முறை பாவித்து ஈனமாயும் ஈருடல் இணையலாம். இயற்கையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கற்பழிப்பான மிருக உலகம் அது. இயற்கையின் அந்தச் சூட்சுமத்தை என்றும் வெல்ல முடியாது என்பதை எங்கும் பறைசாற்றும் தாவரங்களும் விலங்குகளும்... அதற்குள் அடக்கமாகச் சிந்திக்கும் மனிதனும்? அவனும் சில வேளை மிருகத்தைப் போல அல்லது அதைவிடக் கேவலமாக நடந்து கொள்கிறான் என்பதும் உண்மை.

*

புவனலோசினி முன் போல் இப்போது இல்லை. இனி அவள் முன் போல இருக்க வேண்டும் என்று "TS" எதிர்பார்க்க முடியாது. என்றாலும் எதுவுமே வேண்டாம் என்கின்ற நிலையை அவர் எட்டிவிட வில்லை. மாலை நேரங்கள் வசந்த காலமாய் இருந்த காலம் இப்போது அவர் கனவில் மட்டும்தான் விரியும். முதல் நாளைப் போல அனைத்து மாலை நேரங்களும் இருப்பது இல்லை. முன்பு இருந்த மாலை நேரங்கள் இப்போது கனவிலும் கிடைப்பது இல்லை. "TS"சால் அதை எல்லாம் அவளிடம் கேட்க முடியாது. அவள் வாழ்வில் அது வெறுக்கப்பட்ட விடையமாக இருக்கும் என்பது அவருடைய அனுமானம். அவளாக வந்தால் மட்டும் என்பதோடு அவர் தன்னை அடக்கிக் கொண்டார். தன்னை அடக்கினாலும் உடற்பசி எப்போது எல்லாம் விழித்து இரை கேட்கும் என்பதற்கு இப்போதும் வரையறை கிடையாது. அனேகமாக ஒரு தொங்கலில் அவள் படுத்துக் கொள்வாள். "TS" வந்து மறு

தொங்கலில் படுத்துக் கொள்வார். அவளாக வந்து அணைந்து படுத்தால் மட்டுமே அவள் மீது கைபோடும் துணிவு அவருக்கு வரும். முன்பு அவராக இழுத்த நாட்கள் அதிகம். அதை இப்போது செய்ய முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும். அவள் என்ன மனநிலையில் படுத்திருக்கிறாள் என்பது விளங்காது அவளை அவர் எப்படி அணைப்பார்?

அவளைத் தொந்தரவு செய்யக் கூடாதே என்று மறுகரை புரண்டு படுத்தாலும் மனதிற்குள் கட்டி அணைத்தால் என்ன என்கின்ற ஏக்கம் பிறக்கும். அதுவே அவளுக்கு அரிகண்டமாகி ஏதாவது சொல்லிவிட்டால் என்கின்ற பயம் எழுந்து கூத்தாடும். தன் ஆசையை அத்தோடு அடக்கி வைத்து விட்டு அவர் திரும்பிப் படுத்துக் கொள்வார். அவள் நித்திரை கொள்வது இல்லை. இவர் பக்கம் திரும்பிப் பாராது ஏதோ யோசித்த வண்ணம் படுப்பாள். முன்பு எல்லாம் என்னப்பா, என்னப்பா என்று தனது சந்தேகங்கள் அத்தினைக்கும் பதிலளிக்கும் இயந்திரமாக "TS"சை அவள் படுக்கையிலும் உலுப்பி எடுத்து விடுவாள். இப்போது அவளிடம் கேள்விகளை விட மனதிற்குள் குமுறும் யோசனைகளே அதிகம். அவள் தன்னைப் பற்றி அதிகம் யோசிக்காது விட்டாலும் சரிஸ்காவைப் பற்றி அதிகம் குழம்புவது "TS"சிற்கு விளங்குகிறது. அவர் சொல்லும் ஆறுதலை அவள் செவி மடுத்தாலும் அடுத்த கணமே நாய் வால் போல் குழம்பத் தொடங்கி விடுவாள்.

படுக்கை அறைக் கதவு என்பது மூடப்பட்டு இருப்பதே அந்தக் காலத்து வழமைகள். இப்போது அவள் அதைப் பற்றிக் கவலை கொள்வது இல்லை. திறந்தபடியே வந்து படுக்கையில் விழுவாள். தான் அதை மூடினால் அதற்கான அர்த்தத்தை அவள் எப்படி விளங்கிக் கொள்வாள் என்கின்ற பயம் "TS"சிற்கு. அவரும் எழுந்து சென்று மூடுவது இல்லை. கதவு திறந்து இருக்கக் கால்களைத் தூக்கிப் போடும் வழக்கமும் "TS"சிடம் இருந்தது இல்லை. அந்த ஆசைகளை அடைகாக்க வைத்துவிட்டு எதையாவது யோசித்த வண்ணம் படுத்தால் சிறிது நேரத்தில் உடற் களைப்பிற்கு உலகம் மறந்து குறட்டை மேல் எழும்பும். இடையில் குறட்டை அறுந்து நினைவு வரும் போது அட இன்றும் இல்லை என்கின்ற பரிதாபம் அவரிடம் பிறக்கும்.

மனிதர்களுக்கு மனத் திருப்திக்காக, உடல் இன்பத்திற்காக, உறவு நீடிப்பதற்காகக் கலவி தேவைப்

படுகிறது. கலவி இரு மனித உயிர்களை இந்தச் சமுதாயத்தில் பிணைத்து வைக்கிறது. மனிதக் கலவியில் பங்கம் ஏற்பட்டால் பல வடிவத்தில் அவன் மனதில் கடுப்பு விளைகிறது. அது கால ஓட்டத்தில் எரிமலையாக வெடிக்கக் காத்திருக்கும். அது வெடிக்கும் போது குடும்பம் சிதறுகிறது. ஒவ்வொரு பெண்ணின் ஆசையும் அல்லது ஒவ்வொரு ஆணின் ஆசையும் அவன் விரும்புபவளால் அல்லது அவள் விரும்புபவனால் நிறைவேற்றி வைக்கப் படுகிறதா? வெடிப்புத் தெரியாது கருவையே பிளக்கும் விரிசல்கள் அவை. சின்னச் சின்ன ஆசைகளில் லயித்து இருக்கும் உணர்வுகள் அவை. மராதான் ஓடுவது வாழ்க்கை அல்ல. மனதை குளிரப் பண்ணும் வருடலில் அது புதைந்து இருக்கிறது. வருடுவது பற்றித் தெரியாதே பலரது வாழ்க்கை நடக்கிறது. உடன் இருப்பவன் உள்ளக் கிடக்கை அறியாதே உறவு நடக்கிறது. அவரவர் உள்ளத்தில் ஆயிரம் எதிர்பார்ப்புக்கள் இருக்கலாம். அது மிகவும் அழகிய மென்மையான விடையமாக இருக்கலாம். முத்தம் பிடிக்கலாம். முகர்வது பிடிக்கலாம். சத்தம் பிடிக்கலாம். சாய்வது பிடிக்கலாம். எது எதுவோ பிடித்து இருக்கலாம். எது எதுவோ பிடிக்காது இருக்கலாம். ஊமைகள் கதைப்பதற்கும் பாசை இருக்கின்றது. உள்ளம் கதைப்பதற்கும் பாசை இல்லாத பாசை இருக்கிறது? தொடுகையும், அணைப்பும் அற்புதம் ஆனவையே. அதை முழுமையாக விளங்கிக் கொண்ட மனிதர்கள் எத்தினை நபர்கள்

எங்கள் அழகிய தமிழ் மொழி என்கின்ற தாய் மொழி. அதில் எத்தினையோ விடையங்கள் கதைக்கப்படாது கலாச்சாரம் என்று கட்டுப்பட்டு முக்காடு போட்டுக் கிடக்கிறது. அதை மீறிக் கதைத்தவன் காவாலி ஆவான் என்பதற்குப் பயந்து மௌனி ஆகிறான். சில விடையங்களை மணந்த ஆணும் பெண்ணும் தெரிந்து, புரிந்து கொள்ள வேண்டும். வாயே திறவாது உள்ளங்களின் பாதாள இருட்டிற்குள் இப்படித்தான் என்று குருட்டுத் தனமாய் நடக்கிறது. மற்றவரின் முகமே தெரியாத போது, மற்றவரின் மனம் எப்படி அவர்களுக்குத் தெரியப் போகிறது?

"TS"சும் யாழ்ப்பாணத்துத் தமிழனே. அவர் காலத்திலும் அத்தினையும் இருட்டிற்குள் முகத்தை முகம் பார்க்க முடியாமலே அற்புதத் தாம்பத்தியம் நடந்தேறியது. அதன் பின்பு புவனலோசினியோடு பகிடி பகிடியாகச் சில விஷயங்களைக் கதைத்து இருக்கிறார். தனது

மனக்கிடக்கையைப் பட்டும் படாமலும் சொல்லி இருக்கிறார். இப்போது அவளோடு "TS" எதுவும் கதைப்பது இல்லை. அவள் பல விடையங்களைத் தன்னையும், சரிஸ்காவையும் எண்ணிச் செய்தாலும் உணர்வு அற்ற சவமாக, மற்றவருக்காய் வாழ்வதாயே "TS"சிற்குத் தோன்றியது. ஏனோ உயிர் பிழைத்து இருக்கிறாள். தொடர்ந்தும் ஜீவிக்கிறாள். உண்மையில் இப்போது அவளுக்கு வாழ்க்கை வெறுத்தாலும் "TS"சிற்கும், மகளுக்குமாக உயிர் வாழ்கிறாள் என்பது அவருக்கு சுய நலமான ஆறுதல் தந்தது.

புவனலோசினி படுக்கை அறைக்குள் வந்தாள். "TS" சறத்தோடு தடித்த போர்வைக்குக் கீழ் படுத்து இருந்தார். புவனலோசினி நையிட்டி அணிந்து இருந்ததால் அவளின் அரை நிர்வாணத் தோற்றம் அதனூடாகக் கசிந்தது. அவள் மார்பு இப்போது முன் போல அல்ல. அது இப்போது பெருத்துப் புவி ஈர்ப்பால் இழுக்கப்பட்டுத் தொங்கியது. வயதும் வடுவுமாய் இருக்க வேண்டும். புவனலோசினி சென்று வழமை போல் மறுகரையில் படுத்தாள். "TS" நா எழாமல் எதிர்வினை தவிர்த்துப் படுத்தார்.

ஆரம்பக் காலத்தில் அவள் அவரை அணைத்துக் கொண்டு படுப்பாள். இரவில் எழுந்து கையை எடுத்தாலே ஏன் என்பதாக முழித்துக் கொள்வாள். எப்போதும் "TS"சின் சூடு அவளுக்கு அப்போது வேண்டி இருந்தது. அந்தச் சூட்டோடு முத்தங்களும் சங்கமங்களும் அடிக்கடி சுருதி பிசகாது நடந்தன. அந்த வாழ்க்கை என்ன ஆகிற்று என்று "TS"சிற்கு இப்போது விளங்க வில்லை. ஏதோ, எப்போதோ அது தொலைந்து விட்டது. எங்கோ தூரப் போய் விட்டது. ஏன் நடந்தது? எதற்காக நடந்தது? குற்றம் செய்யாமலே தண்டனை பெறுவது எமது தலை விதியாக இருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

திடீரெனப் புவனலோசினி குறட்டை விடும் சத்தம் கேட்டது. "TS" பழைய வாழ்வின் அனுபவங்களை மீட்ட வண்ணம் படுத்தார்.

24 சண்முகன்

அன்று காலை அருள் சொல்லாமற் கொள்ளாமல் வீட்டிற்கு வந்து இருந்தான். வெளியே பனி கொட்டி விட்டது. கடும் குளிர் ஊசியாக அங்கிகளை ஊடுருவி அங்கங்களைப் பதம் பார்த்தது. இந்த வீட்டில் குளிர் என்று பயப்பட வேண்டிய அவசியம் "TS"சிற்கு இல்லை. கீழே எண்ணெய்யில் வெக்கையை உற்பத்தி செய்யும் இயந்திரம் இருக்கிறது. அது நீரைக் காய்ச்சி கொதி குளம்பாகக் குழாய்களில் மேலே அனுப்பி வைக்கும். குளிர் காலத்திலும் காலுறை அணியாது வீட்டிற்குள் இருக்கலாம். கொதி குழம்பு மேலே உள்ள வீடுகளுக்குப் போகும் பெரும் குழாய்கள் "TS"சின் வீட்டைத் தாண்டிப் போகும். அப்போது அவை பஞ்சம் இல்லாது வெப்பத்தை வீசி விட்டுச் செல்லும்.

சரிஸ்கா பாடசாலைக்குச் சென்று விட்டாள். சரிஸ்காவிற்கு அந்த மனநல மருத்துவர் கூறியபடி ஒரு சிகிச்சை அளித்த பின்பு அவள் இப்போது சாதாரணமாகப் பழகுகிறாள். அவளிடம் கலியாணம், நண்பர்கள் பற்றிக் கேட்கக் கூடாது. அருள் வந்தால் அவனைப் பார்த்து, அவனோடு வருபவர்களைப் பார்த்துச் சிரிப்பாள். அத்தோடு அந்த அறிமுகம் முடிந்து விடும். அருள் ஒரு நாள் அவளின் அறையை எட்டிப் பார்த்துப் "போயிட்டு வாறன்." என்று கூறினான். "சரி போயிட்டு வாங்க அண்ணா." என்று சரிஸ்கா பதில் கூறினாள். அது "TS"சிற்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. இப்படியே குணமாகி, யாரையாவது கலியாணம் செய்து கொண்டால் என்று அவரது கற்பனை அவரையும் கேளாது கொம்பில் தாவிய கொடியாகப் படர்ந்தது. வீண் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு அவஸ்தைப்படக் கூடாது என்று உடனடியாகத் தனக்குத் தானே அறிவுரை சொல்லிக் கொள்வார்.

அருள் உள்ளே வந்ததும் மேலங்கியை அவசரமாகக் கழற்றினான். அவனுக்கு "TS"சின் வீடு எப்படி இருக்கும் என்பது தெரியும். வெளியே குளிராக இருந்தாலும் ஏற்றத்தில் ஏறி வந்த போது உடம்பு சாதுவாகச் சூடேறிற்று. மாடிக்கு ஏறி வரும் போதே கையுறை, தொப்பி போன்றவற்றைக் கழற்றி ஆகிவிட்டது. மேலங்கியைக் கழற்றி உடம்பின் கொதி நிலையைக் குறைத்தான்.

அருளைக் கண்டதும்,

"வாங்க." என்று கூறிச் சிரித்த புவனலோசினி அடுப்படிக்குத் தேநீர் வைக்கச் சென்றாள். அருள் மேலங்கியை வாசலில் இருந்த அலுமாரியில் கொளுவிய பின்பு கோலுக்குள் வந்து சோபாவில் இருந்தான். அவனைத் தொடர்ந்து "TS"சும் சோபாவில் வந்து அமர்ந்தார்.

"அக்காவின்ரை வேலை எப்பிடிப் போகுது?" என்றான் அருள்.

"பிரச்சனை இல்லை. அவ மூண்டு மணிக்குப் போய் ஏழு மணிக்கு வந்திடுவா. ஆரம்பத்தில நான் போய் கூட்டி வருவன். இப்ப அவவே தனியப் போய் தனிய வாறா. சரிஸ்காவும் இப்ப அந்த நேரத்தில தனிய வீட்டில இருப்பாள். இப்போதைக்கு அது பெரும் உதவிதானே? சரிஸ்காவும் கடன் எடுக்காமல் படிக்கட்டும் எண்டு புவனா கூறிப்போட்டா. அதுவும் நல்லது தானே. அவளுக்குப் பிற்காலத்தில பிரச்சனை இருக்காது."

"சரிஸ்காவுக்கு எந்த ஸ்கூல் கிடைச்சது?"

"அவள் கெட்டிக்காரி. இவ்வளவு பிரச்சனை இருந்தும் படிப்பில கவனம் போய் இருக்குது. நல்ல மாக்ஸ் எடுத்தவள். அதால பிரச்சனை இல்லாமல் "எல்வவக்கனில" அவளுக்கு இடம் கிடைச்சு இருக்குது. அதில தானே பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் படிச்சவை. அவள் இனி இன்னும் கவனமாய் படிப்பாள் எண்டு நினைக்கிறன்."

"நிச்சயமா அவ நல்ல நிலைமைக்கு வருவா. நீங்கள் பயப்பிடாதேங்க அண்ணை. அப்ப... அக்கா வேலையால வரும் வரைக்கும் சரிஸ்கா பயப்பிடாமல் தனிய வீட்டில இருப்பாவே?"

"ஓ அவவுக்கு இப்ப பழைய மாதிரிப் பயம் இல்லை."

"அது சரி அக்கா ஏன் இங்க வெளியால போய் வாறத்துக்குப் பயப்பிர்றா?"

"தெரிய இல்லை. அவைக்குச் சிலோன் நினைவு விட்டுப் போகுது இல்லை. இனி மறந்திடுவினம்."

அருள் தொடர்ந்தும் இதைப் பற்றிக் கேட்டுக் கொண்டு இருந்தால் "TS"சிற்கு வியர்த்துவிடும் போலத் தோன்றியது.

எப்படி வேறு திசையில் கதையைத் திருப்புவது என்கின்ற தேடல் அவரிடம் தொடங்கியது. என்ன இந்த வெள்ளன என்று கேட்பது அவ்வளவு மரியாதையாகத் தோன்றவில்லை. எப்படித் தொடங்குவது என்று திகைப்போடு இருக்கும் போது அருளே தான் வந்த விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தான்.

"நான் என்ன விஷயமா இப்ப வந்தனான் எண்டு உங்களுக்குச் சொல்ல இல்லை. ரெலிபோன்லையும் சொல்லி இருக்கலாம். ஆனா... நீங்கள் இப்ப வீட்டில நிப்பியள் எண்டது தெரியும் தானே. அதுதான் நேர பார்த்துக் கதைச்சுப் போட்டுப் போவம் எண்டு வந்திட்டன். இங்க யாரும் நேர போய் கதைக்கிறது இல்லைத் தான். ஒண்டு தூரத் தூர இருக்கிறம். இரண்டாவது வெளியால இறங்கினா விறைச்சுப் போயிடும். அதுக்குப் பதிலா, வசதியாத் ரெலிபோன் இருக்குது. எண்டாலும் நேர பார்த்துக் கதைக்கிற மாதிரி வராது தானே எண்டு நான் வந்திட்டன்." என்று நிறுத்தியவன் பின்பு தொடர்ந்தான்.

"நோத்துக்குப் போன கோஸ்ரி நல்லா வேலை செய்து கொண்டு இருந்தவை. இப்ப அங்க மீனுக்குத் தட்டுப்பாடாம். அனேகமான ஆட்களுக்கு இப்ப வேலை போயிட்டுது. இருந்தாலும் மற்றவைக்கு இப்ப ஒஸ்லோவுக்கு வாற எண்ணம் இல்லை. தான் வெளிக்கிட்டு வரப் போகிறன் எண்டு சண்முகம் கேட்டான். அவன் தங்குகிறதுக்கு இடமும், வேலையும் எடுத்துத் தரட்டாம். நான் அவனைக் கொஞ்ச நாளைக்கு என்ரை வீட்டில தங்க வைக்கலாம் எண்டு நினைக்கிறன். ஆனா... வேலை எடுத்துக் குடுக்கிறது ஒண்டும் லேசான காரியம் இல்லை. அதுக்கு உங்கடை உதவியும் தேவைப்படும். நீங்கள் என்ன சொல்லுகிறியள். உங்களால உதவி செய்ய முடியுமா அண்ணை?" என்றான் அருள்.

"நான் வேலையில கேட்டுப் பார்க்கிறன். எல்லா வேலையும் இப்ப எடுக்கிறது கஸ்ரம். ஆனா... நாங்கள் செய்கிற வேலைக்கு நொஸ்குகள் போட்டி போடாமல் இருக்கிறதால சில வேளை வேலை கிடைக்கலாம். நான் கேட்டுப் பார்த்திட்டுச் சொல்லுகிறன்." என்றார் "TS".

"மற்றவை என்ன செய்யப் போகினமாம்?" என்று "TS" மீண்டும் கேட்டார்.

"அவங்கள் வேலை இல்லாமல் இருக்கிறவைக்கு குடுக்கிற காசை எடுத்துக் கொண்டு அங்க இருந்து பார்க்கப் போகிறாங்களாம். அதால... அவங்கள் இப்போதைக்கு இங்காலை வர இல்லையாம். அங்க இருந்தால் செலவு குறைவாம். மிச்சமும் பிடிக்கலாமாம். எங்கை இருந்தாலும் இனி நிறையக் காலம் மிச்சம் பிடிக்கலாம். அதுவும் ஆறுதலாகவே மிச்சம் பிடிக்கலாம். அது தான் நாட்டில தொடங்கீட்டுது தானே?" என்றான் அருள்.

"ஆருக்குத் தெரியும்? இன்னும் ஒரு முறை சமாதானம் வராமலே போகும். அப்ப ஒரு முடிவு கட்டாயம் பிறக்கும். போராட்டம் எண்டா இப்பிடித்தான் இருக்கும். எங்கடை அவசரத்துக்கு விடுதலை என்ன கடையில வாங்குகிற சாமானே? நிறையத் தியாகங்கள்... நிறையக் காலங்கள்... செலவாகும்." என்றார் "TS".

"போராட்டம், பொதுப்பணி எண்டுகிறதுக்கு உள்ளேயும், பொது நலம் எண்டுகிற வடிவான போர்வைக்கு உள்ளேயும், வடிவா மறைக்கப்படுகிற சுயநலத்தாலேயே சீரழிவுகளும், பின்னடைவுகளும் வாறது. அதுதான் எங்களுக்கும் வந்து இருக்குது. உதுக்கு விடிவு வரும் எண்டு எனக்கு நம்பிக்கை இல்லை." என்றான் அருள். அவனிற்குப் போராட்டத்தின் மேல் எந்த நம்பிக்கையும் இல்லை என்பதை "TS"சிற்குச் சொல்லத் தேவை இல்லை. "TS"சைப் பொறுத்தவரைப் போராடாமல் வாழ்க்கை என்பது ஈழத்தமிழருக்கு இனி இல்லை என்பது முடிவான முடிவு.

"எல்லாரையும் அப்பிடி நினைக்கக் கூடாது. அது நியாயமும் இல்லை. நாங்கள் ஓடி வந்து இருக்கலாம்... அது சுயநலம்தான். ஆனால் உயிரையே தியாகமாக் கொடுக்கிறவனிட்டை என்ன சுயநலம் இருக்க ஏலும்?" என்றார் "TS".

"அவங்களை நான் சொல்ல வரேல்லை. அந்த அப்பிராணிகளைப் பயன்படுத்துகிறாங்களே அவங்களைச் சொல்ல வேணும். யோசிச்சுப் பாருங்க... சொந்தப் பிள்ளையைத் திருடிக் கொண்டு போனா எப்படி இருக்கும்? பிறகு மூளைச் சலவை செய்து உயிராயுதமாய் வெடிக்க வைச்சு, அதைப் படம் எடுத்துப் பிரச்சாரம் செய்து திரிகிறதால நாடு காணலாம் எண்டுகிற கற்பனையில கண்மூடிப் பலியாகிக் கிடக்கிறது எவ்வளவு பரிதாபமான,

பயங்கரமான நிலைமை எண்டு யோசிச்சுப் பாருங்க... ம்... சொன்னாத் துரோகி எண்டுவினம்."

"விளங்காமல் இல்லை. சிங்கள இனவெறி அரசை எதிர்த்துப் போராட வேறை வழி இல்லை எண்ட நிலமையிலேயே அப்படிச் செய்கிறாங்கள். யுத்தத்தில குழந்தைப் போராளிகளை பாவிக்காத யுத்தங்கள் உலகத்தில நடந்து இருக்குதே? அது மனிதன் யுத்தம் செய்யத் தொடங்கின காலத்தில இருந்தே இருக்குது. குருக்கள் குசு விட்டால் குற்றம் இல்லை எண்டுகிற மாதிரி இந்த மேற்கு உலக நாடுகள். அதிகார வர்க்கத்தில உள்ளவன் கொண்டு குவிக்கேக்க அது குற்றம் எண்டு உலகம் எந்த நடவடிக்கையும் எடுக்காட்டி, நாங்கள் கையைக் கட்டிக் கொண்டு செத்து ஒழிகிறதே சொல்லு பார்ப்பம்? நாங்கள் ஏதாவது செய்ய வேணும் எண்டது தவிர்க்க முடியாதது. பிழை எண்டாலும் செய்தாக வேண்டிய நிலைமையாய் போச்சுது. மற்ற இயக்கங்களில இருந்த நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். உங்கடை இயக்கம் இந்த நிலையில இருந்தாலும் இதைத்தான் செய்து இருக்கும் எண்டதை ஒத்துக் கொள்ள வேணும். அதோடை இயக்கத்தை விட்டு ஓடினவை அதை ஏற்காமல் தூற்றலாம். பெரும்பான்மையான தமிழர் அவங்கள் செய்கிறதைச் சரி எண்டு ஏத்துக் கொள்ளுகினம்."

"மற்றவை சொல்லுகிறது பற்றிப் பிரச்சனை இல்லை. ஐரோப்பாவுக்கு ஓடியந்திட்டுக் கையைத் தூக்கிறவை பற்றியும் கவலை இல்லை. பிள்ளையைப் பறிகொடுக்கிற தாய், தகப்பன் என்ன சொல்லுகினம் எண்டதுதான் இங்க முக்கியம். நிச்சயமா அவைக்குப் பிள்ளையைத் தவிர வேறு எந்தப் பசப்பும் தேவைப் படாது. கற்பிதம் செய்து வைச்சிருக்கிற தனிநாடு சொந்தப் பிள்ளையளைவிட அவைக்கு முக்கியம் இல்லை." என்றான் அருள்.

"எல்லாரும் இப்படி நினைச்சா இவ்வளவு நாளும் போராடி, மண்ணுக்காக மடிஞ்சவங்களின்ரை தியாகத்துக்கு எல்லாம் என்ன பதில் அருள்? சும்மா விட முடியுமா? ஏதாவது ஒரு முடிவு வரும் வரையும் போராட்டத்தை அவங்கள் எதுக்காகவும் கைவிட மாட்டாங்கள்." என்றார் "TS". அவர் மனதில் ஆயிரம் கவலைகள். சிங்கள இராணுவத்தின் மீது அடங்காத வெறுப்பு. வயதும் சந்தர்ப்பமும் கிடைத்தால் தானே களத்தில் இறங்கிவிடும் கோப அக்கினியின்

குமுறல் மனதுள். அது இப்போது முடியாது என்கின்ற தாங்க முடியாத வேதனை. இளைக்கப்பட்ட அநீதிக்கு நீதி காண வேண்டும் என்கின்ற என்றும் மறையாத துடிப்பு. அவர் முகம் கோணிற்று. அருளிற்கு அவரோடு அதற்கு மேல் அந்த விடையத்தைக் கதைக்க வேண்டாம் என்று தோன்றியது. இந்தப் போராட்ட முறை நீண்ட காலத்தில் எப்படியான விளைவைக் கொண்டுவரும் என்பதை அவருடைய பாதிப்பு அறிய விடாது மறைக்கிறது என்பது அருளுக்கு விளங்கியது. சரி, பிழை என்பது எப்போதும் நிரந்தர வடிவமற்றது. ஒரு மனிதனின் மனதில் தனக்குப் பிடித்த விடையம் ஒன்று சரியாகத் தோன்றினால், சமுதாய நன்மை, தீமை பற்றி அவனால் சிந்திக்க முடியாது. அது அவர் மனதின் வடிவத்தை எடுத்திருக்கும். உணர்ச்சிகளின் வெள்ளத்தில், அல்லது சுயநலத்தில் ஆய்வுகள் அடிபட்டுப் போயிருக்கும். இதற்கு மேல் அந்தக் கதையை வளர்க்க விரும்பாத அருள்,

"சண்முகன் வந்தாக் கொஞ்ச நாளில மற்றவங்களும் வந்திடுவாங்கள். நோத்தில வேலை இல்லாட்டி அங்க இருக்கிறதில ஒரு பிரயோசனமும் இருக்காது." என்றான். "TS"சும் தனது கவலையை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு,

"ஓ அது எண்டால் உண்மை தான்." என்றார்.

25 வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்

"TS" அன்று வேலையால் வரும்போது குருன்லாண்ட் போனார். குரன்லாண்டில் பாகிஸ்தானியர்கள் நிறையக் கடை வைத்து இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையினர் பாக்கிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்தவர்கள். இந்திய உணவுகள், மரக்கறி போன்றவை குரன்லாண்டில் மலிவாக வாங்கலாம். இப்போது இலங்கைத் தமிழரும் கடை திறந்து இருக்கிறார்கள். முருங்கைக்காய், வாழைப் பூ, பயற்றங்காய், ஒடியல்மா, கருவாடு எனத் தமிழருக்குப் பிடித்த பல உணவுப் பொருட்கள் அந்தக் கடையில் உண்டு. தமிழர்களின் தொகை இப்போது ஒஸ்லோவில் பெருகிவிட்டது. அதை எப்படிப் பயன் படுத்துவது என்பது அந்தக் கடைக்காரருக்கு விளங்கி இருக்க வேண்டும்.

வரும் காலத்தில் குரன்லாண்டில் பல தமிழ் கடைகள் வரலாம். அதுவே இயல்பு. அதைவிடச் சில இந்திய, பாகிஸ்தானியச் சாப்பாட்டுக் கடைகளும் அங்கு உண்டு. பாகிஸ்தானியருக்கு அடுத்ததாக வியட்னாம்காரரும் சில கடைகள் வைத்து இருக்கிறார்கள். பாகிஸ்தானியர்களே வெளிநாட்டுக்காரர்களில் முதலில் நோர்வேக்கு வந்தவர்கள். வீதிகளைப் புனரமைப்பதற்கும், சுரங்கரதப் பாதைகளை அமைப்பதற்கும் ஆட்கள் தேவைப்பட்ட போது நோர்வே அரசு அவர்களை அழைத்து வந்ததாம். அவர்கள் அப்படியே இங்கே தங்கியது மட்டும் அல்லாது அவர்களுக்குத் தெரிந்த அவர்களது ஊர் மக்களையும் இங்கு எடுத்துத் தங்கள் சனத் தொகையை விருத்தி செய்து கொண்டார்கள். அவர்கள் தேவையைச் சுற்றி வியாபாரங்களும் விருத்தியாகி விட்டன.

"TS" போன போது அங்கே ஒரே அமளி துமளியாக இருந்தது. யாரோ ஒரு தமிழ் இளைஞனை வேறு ஒரு தமிழ் இளைஞன் கத்தியால் குற்றிவிட்டானாம். வழமையாகப் பாகிஸ்தானியர் இங்கே குற்றுப்படுவது நடைபெறும். ஓஸ்லோவில் அவர்களிடம் A அணி B அணி என்று இரண்டு குற்றச் செயல்களில் ஈடுபடும் அணிகள் இருக்கின்றன. அவர்களுக்கு இடையில் குற்றுப்பாடு, வெட்டுப்பாடு, சுடுபாடு என்பன பரவலாக நடக்கும். அதற்குப் பல்வேறு காரணங்கள் முட்டையில் மயிர் பிடுங்குவதாய் இருக்கும். முட்டையில் மயிர் பிடுங்காத முக்கியமான காரணம் போதைப் பொருள் தகராறாகும். இன்று அதற்கு மாறாகத் தமிழர்கள் கத்தியால் குற்றுப்பட்டு இருக்கிறார்கள். அதுவும் அவர்கள் இயற்கை தான்.

குற்றுப்பாட்டை அடுத்து அம்புலன்ஸ், காவல் ஆகியன அவசரமாகப் பிரசன்னமாகி இருந்தன. மக்கள் கூட்டம் கூட்டமாய் குழுமி நின்று திருவிழா போல வேடிக்கை பார்த்தனர். தங்களுக்குள் குசு குசு என்று தங்களது கற்பனைத் திறனோடு கதைத்தனர். சங்கதி கைகால் முளைத்துப் பின்பு வேகமாக இறக்கை அடித்துப் பறக்கத் தொடங்கியது. குற்று வாங்கியவனை அம்புலன்சிற்குள் ஏற்றி விட்டார்கள். ஒரு கடைக்குப் பக்கவாட்டுச் சுவரை அண்டிய தெருவில் இரத்தப் பொட்டுக்கள் சிதறிக் கிடந்தன. காவலர்கள் அதைச் சுற்றிப் பாதுகாப்பு நாடா இழுத்து இருந்தார்கள். அதன் முன்பு அந்தப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு இரண்டு காவலர்கள்

நின்றார்கள். குற்றியவன் யார் என்பது பலருக்கும் தெரியும். பகலில்... அதுவும் குரன்லாண்டிற்குள் வைத்துக் குற்றும் அளவிற்கு அவன் மூளையின் மத்திமம் அல்லது கோப வெறி பற்றி "TS"சிற்கு அங்கலாயிப்பு ஏற்பட்டது. அவன் ஓடிவிட்டான். காவல் அவனைத் தேடத் தொடங்கி விட்டது. அதற்காக நாய்கள் கொண்டுவரப் பட்டன. நாய்களைக் கண்டதும் கூட்டத்திற்கு வேடிக்கை முகரும் ஆர்வம் உண்டாகியது. அனுமதிச்சீட்டு வாங்காமல் படம் பார்ப்பதான துள்ளும் சந்தோஷம் அவர்களிடம். அடுத்தது என்ன நடக்கும் என்கின்ற ஆர்வமான எதிர்பார்ப்பு அலை மோதியது.

சிலர் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டுத் தாங்கள் புறப்பட்ட பணி நினைவுக்கு வர அவசரமாக அந்த இடத்தை விட்டு ஓட்டமும் நடையுமாக விலகினர். எங்கோ செல்வதற்கு வந்த பலர் இங்கு நடப்பதைப் புதினம் பார்த்துக் கொண்டு நின்றார்கள். புதினம் பார்க்கச் சனம் அங்கே வந்ததால் சில கடைகளுக்கு மேலதிக வியாபாரம் நடந்தது. கடைக்காரரிடம் சிலர் புதினம் கேட்க அவர் தானே குத்தியது போன்று அவர்களுக்குக் கதை சொன்னார்.

இன்று ஏதாவது திரைப்படப் பிரதியும் எடுத்துக் கொண்டு, மரக்கறியும் வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்று "TS" அங்கு வந்தார். இப்படி ஒரு இலவசப் படம் ஓடும் என்று அவருக்குத் தெரியாது. எதற்காக இந்தக் குற்றுப்பாடு நடந்தது என்று அவருக்கு விளங்கவில்லை. என்றாலும் ஒரு குழந்தைப் பிள்ளையின் ஆவலோடு நின்று விடுப்புப் பார்த்தார்.

ஒரு இடத்தில் மூன்று தமிழ் இளைஞர்கள் கதைத்துக் கொண்டு நின்றார்கள். "TS"சிற்கு அவர்களிடம் சென்றால் புதினம் அறியலாம் என்று தோன்றியது. இளைஞர்கள் புதினம் அறிவதில் கெட்டிக்காரர்களாக இருப்பதாக அவர் கணித்து இருந்தார். "TS" அருகே செல்லவும் அவர்களின் சம்பாசனை சிறிது தடைப்பட்டது. மரியாதையா அல்லது மறைப்பா என்கின்ற சிறு தடுமாற்றம் "TS"சிடம். "TS" மிகவும் நட்பாகச் சிரித்தார். அவர்களும் பதிலுக்குச் சிரித்தார்கள். அதில் ஒருவன் பனை போன்ற நிறத்திலும் உயரத்திலும் நின்றான். அவன் அதற்கு அழகு சேர்க்கத் தலையை மொட்டையாக ஒட்ட வெட்டி இருந்தான். தோலாலான மேலங்கியும், நீல நிறக் காற்சட்டையும் அணிந்திருந்த அவனுக்கு "TS"சை ஏனோ பிடித்து இருக்க

வேண்டும். அவனோடு நின்ற இன்னொருவன் குள்ளம் ஆகவும் மற்றையவன் நடுத்தர உயரமாகவும் தோன்றினான். கை கொடுத்து அறிமுகம் செய்வோமா என்கின்ற ஒரு எண்ணம் "TS"சிற்கு வந்தது. சும்மா புதினம் கேட்பதற்கு முன் பின் தெரியாத இளைஞர்களோடு என்ன அறிமுகம் தேவை என்று அந்த எண்ணத்தை அவர் கைவிட்டார்.

"அண்ணை நான் உங்களைப் பெரிசா இங்க காண்றேல்லை." என்றான் அந்த நெடியவன்.

"நான் மரக்கறி இல்லாட்டிப் படக்கொப்பி எடுக்கத் தானே இங்க வருவன். மற்றும்படி வேலை வீடு எண்டு ஒரே ஓட்டம் தான்... எங்க தம்பி இதுக்க வந்து நிற்க நேரம் இருக்குது?" என்றார் "TS".

"அது உண்மை அண்ணை. வேலை இல்லாட்டித் தானே இப்பிடித் தினவெடுக்கிற வேலையள் செய்வாங்கள்?" என்றான் அவன்.

"என்னடா தம்பி நடந்தது?"

"அவள் ஒரு சிங்கி அண்ணை... இரண்டு பேரையும் காதலிக்கிறன் எண்டு சொல்லி இருக்கிறாள். அவள் ஒருத்தனுக்கும் முழுசா ஒத்துக் கொள்ளவே இல்லை. இதுகள் அதை விளங்காமல் இரண்டும் தலை இல்லாத கோழிகள் போல ஆளையாள் குத்துப்பட்டு இருக்குதுகள்."

"அப்ப நல்லா ஆளையாள் தெரியும் அவைக்கு..."

"ஓம் அண்ணை?"

"குத்து வேண்டின பெடியனுக்கு காயம் எப்பிடி?"

"ஒரு குத்துத்தான் குத்தினவன். அதுவும் ஜெக்கெற்றைக் கிழிச்சுத் தான் வயித்தில ஏறி இருக்குது. ஐஞ்சாறு பாகிஸ்தான் பெடியள் வர விட்டிட்டு ஓடீட்டான். ஒரு காயம் எண்டாலும் இரத்தம் பருவாய் இல்லை. தெருவெல்லாம் பொட்டுப் பொட்டாய் கிடக்குது. அம்புலன்ஸ் கெதியா வந்திட்டுது... அனேகமா அவன் நாளைக்கு வீட்டை போயிடுவான்." என்றான் அவன்.

"அப்ப கத்தியைத் தூக்கினவன் காதலையும் விட்டிட்டு மாமியார் வீட்டில இருக்கிறது நிச்சயம். உதுக்குத்தான் சொல்லுகிறது கோபத்தில எழுந்த மானத்துக்கு எந்த

அலுவலும் செய்யக் கூடாது எண்டு. ஒரு காதல் இல்லாட்டி இன்னொரு காதல் வந்திருக்கும் தானே? இப்ப... ஜெயில்ல போய் இருக்க வேணும். அவனவன் என்னென்னவோ தியாகம் செய்கிறாங்கள். நாட்டுக்காகச் சாகிறாங்கள். இங்க இதுகள் காதலுக்குச் சாகுதுகளாம்." என்றார் "TS".

"அப்பிடிச் சொல்லுங்க அண்ணை. ஆனா ஒண்டு... நீங்கள் அவனவைய நோகிறதைவிட இங்க கூட்டி வந்த அவங்கடை அப்பா அம்மாவை நோக வேணும்." என்றான் அவன்.

"நீர் சொல்லுகிறது உண்மை தம்பி. கொஞ்சம் ஆவது ஊரில கஸ்ரப்படுகிற எங்கடை சனத்தைப் பற்றியும் யோசிக்க வேணும். அங்க எவ்வளவு சனத்துக்கு என்ன மாதிரியான கஸ்ரங்கள்? அட கடவுளே... இதுகள் இப்பிடி அநியாயம் பண்ணுதுகள். நாளைக்குப் பேப்பரில தமிழர் குத்துப்பட்டது எண்டுதானே போடப் போகிறாங்கள்?"

"உண்மை அண்ணை."

"சரி தம்பிமாரே... நீங்களாவது போய் உங்கடை அலுவலைப் பாருங்கோ. இப்பிடிக் கூடக்கூடாத கூட்டுச் சேர்ந்தா அனுபவிக்கக் கூடாத அனுபவம் எல்லாம் வந்து சேரும். வாழ்க்கை நாசமாப் போகும். குடும்பம் மானம் கெட்டுத் தெருவில நிற்க வேண்டி வரும். நான் சொல்லுகிறதில ஏதும் பிழை இருக்குதே தம்பிமாரே?" என்றார் "TS".

"இல்லை அண்ணை... நீங்கள் சொல்லுகிறது அப்பா வீட்டில சொல்லுகிற மாதிரி இருக்குது. வாங்கடா... நாங்கள் போவம்." என்று கூறிய நெடியவன் "TS"சைப் பார்த்து நக்கலாகச் சிரித்த வண்ணம் அவர் போக வேண்டிய திசைக்கு எதிர்த் திசையில் நடந்தான். அவனைத் தொடர்ந்து மற்றைய இருவரும் நடந்து சென்றார்கள். "TS" தமிழ் கடையை நோக்கிச் சென்றார்.

தமிழ் கடைக்கு உள்ளும், தெருவிலும் குற்றுப்பட்டவர்கள் பேச்சாகவே இருந்தது. மரக்கறியும் வாங்கித் திரைப்படப் பிரதியும் எடுத்துக் கொண்டு வெளியே வந்த போது சரிஸ்காவின் நினைவு அவருக்கு வந்தது. "TS" அவசரமாகச் சுரங்கரத நிலையத்தை நோக்கிச் சென்றார். ஐந்தாம் எண் சுரங்கரதம் பிடிக்க வேண்டும். அது

பதினைந்து நிமிடத்திற்கு ஒரு முறை தான் வரும். விரைவாக அது வந்துவிடும் என்கின்ற நம்பிக்கையோடு அவர் சுரங்கரத நிலையத்தை நோக்கி எட்டி நடந்தார்.

*

சரிஸ்கா முன்பு போல் இல்லாவிட்டாலும் அவள் முழுமையாக மாறிவிட்டாள் என்கின்ற நம்பிக்கை "TS"சிற்கு இன்னும் வரவில்லை. முதலில் அவள் பல்கலைக்கழகம் முடிக்க வேண்டும். பின்பு வேலையில் சேர்ந்து மற்றைய மனிதர்களோடு சகஜமாகப் பழக வேண்டும். அப்போதே அவருக்கு அவள்மேல் உறுதியான நம்பிக்கை வரும். "TS"சிற்கு இப்படி எல்லாம் தனது குடும்பத்திலேயே நடக்கும் என்கின்ற கற்பனை ஒரு காலத்திலும் இருந்தது இல்லை. அது நடந்திற்று. அதன் விளைவு விஸ்வரூபம் எடுத்து அவர் குடும்ப வாழ்வைச் சின்னாபின்னம் ஆக்கியது. நடந்ததிற்குத் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை அவர் ஏற்க வேண்டியது ஆகியது. இனி அவள் வாழப் போகும் வாழ்விற்குத் தன்னால் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவு உதவி செய்ய வேண்டும் என்பது அவருடைய நினைவும் கனவுமாகியது.

குரன்லாண்டில் ஏறி ஒரு சுரங்கரத நிலையம் கழிந்துவிட்டால் "TS" இறங்க வேண்டிய இடம் வந்துவிடும். திடீரென அது வந்துவிட "TS" சுரங்கரதத்தை விட்டு வெளியே அவசரமாக இறங்கினார். இந்தச் சுரங்கரத நிலையங்கள் நிலத்திற்குக் கீழே இருப்பதால் வெயில் காலங்களில் எப்போதும் வெளியில் இருப்பதைவிடக் குளிராக இருக்கும். பனிக்காலத்தில் வெளியில் இருப்பதைவிடக் குளிர் குறைவாகவும் இருக்கும். கோடைக் காலத்தில் சிறிது நேரம் அந்தக் குளிரில் இளைப்பாறி வெளியே போவது இதமான அனுபவமாய் இருப்பதோடு அது மற்றாஸ் குளிரூட்டப்பட்ட திரை அரங்குகளை நினைவுக்குக் கொண்டு வரும்.

"TS" இறங்கி அவசரமாக வீட்டை நோக்கிச் சென்றார். சரிஸ்கா பாடசாலையால் வந்து என்ன சாப்பிட்டாள் என்பது அவருக்குத் தெரியாது. அவள் இப்போது தானாகவே சாப்பாடு போட்டுச் சாப்பிடுவாள். சில வேளை ஏதாவது மனநிலை சரி இல்லாவிட்டால் சாப்பிடாமலும் போய் படுத்து விடுவாள். "TS" அப்போது எல்லாம்

அவளுக்குச் சமாதானம் சொல்லி மெதுவாகச் சாப்பிட வைப்பார்.

வீடு சிறிய மலை போன்ற ஒரு பிட்டியில் இருந்தது. மேலே ஏறி வரும் போது சாதுவாக வழுக்கியதோடு பிட்டியில் ஏறுவதால் மூச்சு வாங்கியது. பனிக் காலத்தில் சுவாசிப்பது கோடைக் காலத்தில் சுவாசிப்பதை விடக் கடினமாக இருப்பதாய் "TS"சிற்குத் தோன்றும். குளிர்காலத்தில் காற்றில் பிராண வாயு குறைந்தது போன்ற உணர்வு. பிராண வாயு குறைகிறதோ இல்லையோ வாகனங்களின் சக்கரங்களில் உள்ள ஆணிகள் மிகவும் நுண்ணிய தார் துகள்களை வளிமண்டலத்திற்குள் புகையாகச் செலுத்தி விடுவதோடு வாகனத்தின் எரிபொருளால் வெளி வரும் கழிவுப் பொருட்கள் குளிர்காலத்தில் மேல் எழும்பாது மனிதர் சுவாசிக்கும் வளியை மாசடையச் செய்கிறது. அந்த மாசடைந்த காற்றைச் சுவாசிப்பது "TS"சிற்குப் பிராணவாயு இல்லாத காற்றைச் சுவாசிப்பதை விட மோசமான இம்சையைத் தரும்.

"TS" கட்டடத்திற்குள் வந்த போது உடம்பு வியர்த்து விட்டது. தான் காவி வந்த பைகளை கீழே வைத்து விட்டு மேலங்கியைத் திறந்து விட்டார். அடைத்துக் கிடக்கும் வியர்வைத் துவாரங்கள் அவ்வப்போது திறந்து, அது விடும் வெப்பத்தின் குமுறலை எண்ணியபடி படிகளில் ஏறி வீட்டை "TS" அடைந்தார்.

கதவைத் திறந்து உள்ளே சென்றவருக்குப் பகீர் என்றது. ஏதோ சரியில்லை என்பது மண்டையில் உறைத்தது. சரிஸ்கா இப்படிச் செய்வதில்லை. இப்படிச் செய்வது என்றால் அவள் மனதில் ஏதோ அடங்காத கோபம் எழுந்திருக்க வேண்டும். அது என்ன கோபம்? யாரால் கிளறப்பட்டது என்பது "TS"சிற்கு விளங்கவில்லை. சலனமில்லாது வாழ்க்கை போவதாய் ஆறுதல் அடைந்து இருந்த போது பாறாங் கல்லைத் தூக்கித் தலையில் போட்டதாய் பெரும் சலனங்கள் மனதில் உண்டாகிற்று. ஏன் இந்தச் சோதனை என்கின்ற வெறுப்பு எழுந்தது. துர்கையை எண்ணக் கோபம் வந்தது. துஸ்டர்களைத் தண்டிக்கத் தெரியாத கடவுள்தானா நீ என்கின்ற கேள்வி எழுந்தது. அவள் பிஞ்சு மனதிற்கு எதற்காக இத்தினை வேதனை என்கின்ற தவிப்பு நெஞ்சைப் பிளந்து வலியாக மேல் எழல் ஆகிற்று. தான் புழுவாய்த் துடிக்கும் வேதனையை மற்றைய மனிதன் விளங்கிக் கொள்ள

மாட்டான் என்பதான ஞானம் பிறந்தது. தன்னைப் பற்றி யோசிக்காது அவளைப் பற்றி யோசிப்பதே தனது முதற் பணி என்கின்ற உண்மை உறைத்தது. "TS" பைகளை நிலத்தில் வைத்துவிட்டுக் கதவைப் பூட்டினார். பின்பு சரிஸ்காவின் புத்தகப் பையை எடுத்துக் கொண்டு அவசரமாக அவளது அறையை நோக்கிச் சென்றார்.

அவள் கதவு சாத்தி இருந்தது. "TS" கதவை இரு முறை தட்டி விட்டு உள்ளே சென்றார். அப்பா வருவதை உணர்ந்த அவள் படுக்கையில் அலுப்போடு எழுந்து இருந்தாள். கண்கள் அழுது வீங்கி இலவம் பழம் போல் சிவந்து இருந்தன. தலை குலைந்து சிக்காடிப் பேய் போல முகத்தை மறைத்துத் தொங்கியது. அப்பாவைப் பார்ப்பதற்காய் அதை அவள் பின்னே தள்ளினாள். நிமிர்ந்து அப்பாவைப் பார்த்த பார்வையில் எனக்கு ஏன் இப்படி நடக்கிறது என்கின்ற கேள்வியை "TS" உணர்ந்து துடித்தார்.

பெரிய விஷயம் சின்ன விஷயம் என்பது பற்றி அவருக்குக் கவலை இல்லை. அவளுக்கு எது பெரிய விஷயமாகத் தெரிகிறதோ அதனால் பாதிப்பு வரக்கூடாது என்பதே அவருடைய அவா. அது அடிக்கடி அடிபட்டுப் போகிறது. அது அடிபட்டுப் போகும் போது "TS" துடித்துப் போவார். இப்போதும் துடித்தார். புறவுலகாற் பாதிப்பு வருகிறது என்பதற்காகப் புறவுலகையே வெறுத்துவிட்டுத் தனித்து வாழ முடியாது. எப்படியும் இந்த உலகோடு ஒட்டியும், ஒட்டாமலும் உறவாட வேண்டியது கட்டாயமாகிறது. வீட்டிற்குள் மட்டும் வாழும் மிருகமாக மனிதன் படைக்கப்படவில்லை. அன்று வேட்டையாடி வாழப் படைக்கப்பட்டான். இன்று கல்வியும், வேலையும் மனிதனின் வாழ்நாளின் பெரும் பகுதியை விழுங்குகிறது. அந்தக் காலத்தில் அவன் வீட்டிற்குள் அடைந்து இருக்க முடியாது. சரிஸ்காவின் பயணம் அந்தக் காலத்தின் நடுவே. அவள் அனுபவிக்க வேண்டியது, அறிந்து கொள்ள வேண்டியது நிறையவே இருந்தன. அந்த அனுபவிப்பும், அறிதலும் வேதனையாகச் சில வேளை அமைந்து விடுகிறது. அப்போது அவள் சுருண்டு போகிறாள். அவள் சுருண்டு போகும் போது "TS"சும் அரண்டு போய் விடுகிறார். இந்த அல்லாட்டத்தை வென்று அவள் வாழ்க்கை என்றும் சலனமற்றுப் பிரயாணிக்க வேண்டும் என்பதே அவர் அம்மனிடம் வைக்கும்

வேண்டுகோள். இருந்தும் துர்கை அவருக்கு அடிக்கடி வேண்டாததை வரமாய் வழங்கி விடுகிறாள்.

"நான் என்ன செய்யட்டும் சரிஸ்கா? உனக்கு இண்டைக்கு என்ன நடந்தது சொல்லும்?" என்றார் "TS".

"கொல்லோணும் அப்பா. அவனைக் கொல்லோணும் அப்பா." என்றாள்.

"யாரை? ஏன்?"

"என்ரை வகுப்பில படிக்கிற மோல்ட்டனை."

"ஏன் அம்மா?"

"அவன் ஒரு நாய் அப்பா."

"ம்... நீ கொல்ல வேணும் எண்டு நினைக்கிற அளவுக்கு அவன் என்ன செய்தவன்?"

"பின்னால வந்து என்னக் கட்டிப் பிடிக்கிறான் அப்பா. கன்னத்தைப் பொத்தி அறைஞ்சு போட்டன். வகுப்பே கதிகலங்கிப் போச்சுது. என்னால அதுக்கு மேல அங்க இருக்க முடியேல்லை. பழைய நினைவு எல்லாம் வந்திட்டுது அப்பா. உடம்பு எல்லாம் கொதிச்சு நடுங்கிச்சுது. குழப்பமா இருந்திச்சுது. எங்கை ஆவது ஓடிப் போய் செத்திட வேணும் எண்டுகிற ஆவேசமாய் இருந்திச்சுது." என்று கூறிய சரிஸ்கா தன்னைக் கட்டுப்படுத்த முடியாது குலுங்கிக் குலுங்கி அழுதாள். வெண் முத்துக்கள் உருகிய வெள்ளிக் கம்பிகளாகியதாக கண்ணீர்க் கோடுகள் எந்த விதி பிழைத்தாலும் என் விதி பிழைக்காது என்கின்ற பூமியின் விதிக்குத் தப்பாது இயற்கையிடம் அடி பணிந்தது.

"TS" அவள் கைகளைப் பிடித்தார்.

"சரிஸ்கா நான் ஒண்டு சொன்னாக் கேட்பியா?" என்றார்.

"என்ன அப்பா?"

"ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு கலாச்சாரம் இருக்குது. ஒரு நாட்டுக்குப் போனா நாங்கள் அந்த நாட்டுக் கலாச்சாரத்தைத் தெரிஞ்சு கொள்ள வேணும். அதுக்காக எங்கடை கலாச்சாரத்தை எல்லாம் விட்டுக் கொடுக்கிறது எண்டு அர்த்தம் இல்லை. அவன் உன்னைக் கட்டிப் பிடிச்சது இங்க அவங்களுக்குப் பெரிய விஷயமா

இருக்காது. அதுக்காக அவன் கட்டிப் பிடிச்சது சரி எண்டு நான் சொல்ல இல்லை. உன்ரை அனுமதி இல்லாமல் உனக்குச் சம்மதமோ எண்டு தெரியாமல் உன்ரை விருப்பத்திற்கு எதிராக அவன் கட்டிப் பிடிச்சது எங்களைப் பொறுத்த வரையில மாகா தப்பு. அது தப்பு என்கிற அறிவு அவனிட்டை இருந்து இருக்காது. அதால தான் அவன் அப்பிடிச் செய்து இருக்கிறான். இதை நீ நினைச்சுத் தேவை இல்லாமல் குழம்பாத. நீ அடிச்சாப் பிறகு அவன் உன்னிட்டைச் சேட்டை விட்டவனா?"

"இல்லை... அவனுக்கு அதுக்குப் பிறகு தான் செய்தது பிழை எண்டு விளங்கி இருக்கும்.'

'சரி... நீ அதை மறந்து போட்டு உன்ரை படிப்பைப் பார் செல்லம். இதுக்கு எல்லாம் இங்க கவலைப்பட்டுக் கொண்டு இருக்க ஏலாது. இருக்கவும் கூடாது. இங்க சட்டத்தை மதிப்பாங்கள். குற்றம் செய்தாத் தண்டனை கொடுப்பாங்கள். அது எதுவுமே நடவாத ஒரு நாட்டில இருந்து வந்ததால எங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனா... இங்கத்தை நடைமுறை அப்பிடி இல்லை. நீ எதுக்கும் பயப்பிட வேண்டிய அவசியமே இல்லை. நான் சொல்லுகிறது விளங்குதா?"

"அது விளங்குதப்பா. ஆனா... உங்களுக்கு என்ரை மனசின்ர பயம் விளங்க இல்லை. கொஞ்சம் எண்ட உடன எனக்கு விசரா இருக்குது அப்பா. பழைய நினைவு எல்லாம் பொத்துக் கொண்டு வருகுது அப்பா. அப்ப நான் எங்க நிக்கிறன் எண்டதே எனக்குத் தெரிகிறது இல்லை. அப்ப நான் என்ன செய்கிறன் எண்டும் எனக்குத் தெரியாது." என்றாள் சரிஸ்கா.

"கொஞ்சம் கொஞ்சமாய் இந்த நாட்டில நம்பிக்கையை வைக்க வேணும். இங்க வாழ்கிற மனிசர்கள் மேல நம்பிக்கை இருக்கோணும். அப்ப பழைய நினைவுகள் தானா மறந்து போயிடும். நீ கஸ்ரப்படுகிறதைப் பார்த்தா எனக்கு மனசு தாங்குது இல்லை." "TS"சின் குரல் கை தவறிய கண்ணாடிப் பாத்திரமாய் உடைந்து கரகரத்தது. தொண்டைக்குள் திடீரென உருவாகிய கவளங்கள் மூச்சை அடைத்தது. கண்களில் கண்ணாடி கரைந்ததாய் திரவம் கோடிட்டது. அவர் பரிதாபமாய் சரிஸ்காவைப் பார்த்தார்.

"சரியப்பா அழாதேங்க... நானும் இயலும் ஆனவரை இனி என்னைக் கொன்றோல் பண்ணப் பார்க்கிறன்.

டொக்ரரோடை திரும்பவும் வடிவாக் கதைக்கோணும் அப்பா."

"ம்... கதைப்பம். இப்ப புத்தகத்தை எடுத்துப் படி. சரியா? ம்... மறந்து போனன்... சாப்பிட்டியா?"

"இல்லை அப்பா."

"சரி எழும்பு. நான் சாப்பாடு போடுகிறன்."

"சரி அப்பா. நான் முகம் கழுவீட்டு வாறன்."

"நீ அவனிட்டை மன்னிப்புக் கேட்க வேணும் எண்டு இல்லை. இப்படிச் செய்கிறது எனக்கு அறவே பிடிக்காது எண்டு தெளிவாச் சொல்லீடு. அனேகமாக இங்கை அதை மதிப்பாங்கள். சொன்னதைக் கேட்பாங்கள். தேவை இல்லாத பகையெல்லாம் கூடாது செல்லம்."

"சரியப்பா... நான் றைபண்ணுகிறன்."

26 சந்திப்பு

ஒஸ்லோசிற்றி என்கின்ற பெரிய நவீன அங்காடியை மத்திய புகையிரத நிலையத்திற்கும் சுரங்கரத நிலையத்திற்கும் அருகாகக் கட்டி முடித்து விமர்சையாகத் திறந்தாகிற்று. மத்திய சுரங்கரத நிலையத்தில் இருந்து அந்த அங்காடிக்குள் நுழைவதற்கு ஒரு வழி உண்டு. அந்தத் தளம் நிலமட்டத்திற்குக் கீழே இருந்தது. அந்தத் தளத்தில் சாப்பாட்டுக் கடைகளும், மதுக்கடையும் 'யென்ஸ் ஏவன்ஸ்' என்கின்ற பலசரக்குக் கடையும் இருப்பதோடு மற்றும் பல கடைகளும் அங்கே இருந்தன.

ஒஸ்லோசிற்றி ஐந்து தளங்களைக் கொண்டது. ஒவ்வொரு தளத்திலும் பலவகையான கடைகள் போட்டியாக. நுகர்வோரிடம் கறப்பதற்கு இதைவிடச் சிறந்த இடம் வேறு எதுவும் இல்லை என்பதை அங்கு வர்த்தகம் செய்தவர்கள் அறிந்து வைத்து இருந்தார்கள். எல்லாப் பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கும் வசதி புதிய மலர்களைக் கண்ட தேனீக்களாக நுகர்வோரைக் கவர்ந்தது. அதைவிட இளைப்பாறக் கூடிய சாப்பாட்டுக் கடைகளும் பல அங்கு இருந்தன. அத்தோடு சில அலுவலகங்களை மருத்துவர்கள், மற்றும் சேவை நிறுவனங்கள் ஆக்கிரமித்து

இருந்தன. கீழே வாகனங்களை நிறுத்துவதற்கு ஆகப் பிரமாண்டமான தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அது ஆறாவது தளமாக நிலத்தின் கீழே புதைந்து கிடந்தது. அதனால் இதுவரை காலமும் இருந்த வாகனத் தரிப்பிடத்தின் தட்டுப்பாடு சீராகிற்று. அதைவிடச் சுரங்க இரதங்களால் வாகனப் போக்குவரத்துச் சீராக மக்களின் போக்குவரத்து பன்மடங்கு ஆகிற்று. இவ்வளவு பிரமாண்டமான அங்காடியை நோர்வே இதுவரை கண்டது இல்லை. அதற்கு ஒஸ்லோவைவிட வெளியிடங்களிலும் இருந்தும் மக்கள் வந்து குவிந்தார்கள். அது நத்தார் பண்டிகை நெருங்கிய நாட்கள். அதற்காக நிறையவே பணம் செலவு செய்யத் தயங்காதவர்கள். பரிசுப் பொருட்களை பல மாதங்கள் முன்பே வாங்கத் தொடங்கி விடுவார்கள். நிறைய மாமிசங்கள், இனிப்புப் பண்டங்கள் போன்றவற்றைச் சமைத்து மதுவோடு உண்டு, நடனமாடி மகிழ்வார்கள். பரிசுப் பொருட்களை பரிமாறிக் களிப்பார்கள். அப்படிப் பரிசுப் பொருட்கள் வாங்குவதற்கு நிறையவே கூட்டம் கூடியிருந்த நாள் அது.

"TS" இம்முறை தங்கள் வீட்டில் நத்தார் விருந்து ஒன்றைச் செய்ய எண்ணி இருந்தார். நண்பர்களுக்கு வயிறு குளிரச் சாப்பாடு கொடுத்த மாதிரி அமைவதோடு ஆற அமர அந்த மாலைப் பொழுதைக் கழிக்கலாம் என்கின்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அதை அவர் புவனலோசினியிடம் கூறினார். புவனலோசினி சோறு அல்லது பிட்டு அவிப்போம் என்று தொடங்கினாள். "TS" கையை உயர்த்தி அவளை நிறுத்தினார். அந்த விருந்திற்குப் போரணைக்குள் வைத்து எடுக்கும் கோழி, வான்கோழி, பன்றி போன்ற மாமிசங்களும், தாச்சியில் பொரித்து எடுக்கும் இறைச்சிக் "Cacke", "Hot dog" போன்றவற்றையும் செய்து உருளைக்கிழங்கு அவித்துப் புளிப்புக் கோவாவோடு அதற்கான கறியும் செய்து அதற்காக வரும் விசேடமான "Jam"மும் சிறிது வைத்துப் பரிமாற வேண்டும் என்பது அவரது திட்டம். பின்பு ஏதாவது "Cacke" அல்லது "Ice cream" என்று அமர்க்களமாகச் சாப்பாடு அமைய வேண்டும் என்கின்ற திட்டத்தை அவர் கூறினார். இப்படியான விருந்திற்கு மதுவும் வேண்டும் என்பது "TS"சிற்கு விளங்கினாலும் தனது வீட்டில் தற்போது மது பாவிப்பது இல்லை என்பதில் அவர் எந்த விட்டுக்கொடுப்பையும் காட்டுவதற்குத் தயாராக இருக்கவில்லை. சரிஸ்காவின் அமைதியை எண்ணி யாரும்

மது அருந்திவிட்டு வருவதையும் அவர் விரும்பவில்லை. அதை விருந்துக்குச் சொல்லும் போதே சொல்லிவிட வேண்டும் என்பது அவரது திட்டம்.

நோர்வே நாட்டவர்கள் இப்படியான விருந்திற்குச் சென்றால் சாப்பிடுவதற்கு முதல் சிவப்பு அல்லது வெள்ளை வயின் குடிப்பார்கள். வயின் குடிக்காதவர்கள் பியர் குடிப்பார்கள். பின்பு சாப்பாட்டுடனும் தொடர்ந்து வயின் குடிப்பார்கள். சாப்பாடு முடிந்து இனிப்புச் சாப்பாடு பரிமாறும் போது அதற்கான இனிப்பு வயின் பருகுவார்கள். கடைசியாகக் கொழுப்பை வெட்டுவதற்கு "Akevitt" என்கின்ற மதுபானத்தைப் பருகுவார்கள். அது காரமான தாளியத்திற்குப் பாவிக்கும் பொருட்கள் சேர்த்து வடிக்கப்படுவது. சிலர் கோப்பியோடு "Cognac" என்கின்ற மதுவை அதனுடன் கலந்தோ கலக்காதோ அருந்துவது உண்டு. இத்தினைக்குப் பின்பும் களியாட்ட நிலையங்களுக்குச் சென்று விஸ்கி அல்லது வியர் குடிப்பார்கள். களைக்கக் களைக்க நடனமாடுவார்கள். இப்படி சில தமிழ் இளைஞர்களும் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டாலும் "TS"சால் அந்தக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. தனது வயது தன்னைத் தடுக்கிறதோ என்கின்ற எண்ணம் அவரிடம் எழும். எது எப்படி என்றாலும் தனக்கு என்று ஒரு மரியாதை உண்டு என்று அவர் நம்பினார்.

புவனலோசினி "TS"சின் திட்டத்தைக் கேட்டுத் திகைத்தாள். "TS" அந்த விருந்திற்கான உணவைத் தான் சமைப்பதாக நம்பிக்கை ஊட்டி அவளைச் சம்மதிக்க வைத்தார். அப்பாவின் சமையலைப் பார்க்க வேண்டும் என்கின்ற புதியதொரு ஆர்வம் சரிஸ்காவிடம். ஆனால் வீட்டிற்கு ஆண்கள் அதிகம் வருவது அவளைச் சங்கடப் படுத்தியது. எதற்கும் சில மணித்தியாலங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு சமாளிப்போம் என்று எண்ணிக் கொண்டாள். இறுதியாகப் புவனலோசினியின் சம்மதத்துடன் அந்த விருந்திற்கான ஏற்பாடுகள் தொடங்கின. வருபவர்களுக்குச் சிறிய பரிசுப் பொருட்களும் கொடுப்பதாய் முடிவு செய்யப்பட்டதிற்கு அமைய பரிசுப் பொருட்கள் வாங்குவதற்கு அன்று ஒஸ்லோ சிற்றிக்குச் சென்றார்கள். ஒஸ்லோ சிற்றி திருவிழாக் கோலம் பூண்டதான காட்சி. இவ்வளவு பளிங்காக ஒரு கட்டடத்தை இலங்கையில் பார்த்ததாக "TS"சிற்கு ஞாபகம் இல்லை. இனிவரும் காலங்களில்

இப்படியான கட்டடங்கள் அங்கும் வரலாம் என்று அவருக்குத் தோன்றியது. நான்கு பக்கமும் வாசல்களைக் கொண்ட அந்த நவீன அங்காடிக்குள் எள்ளுப் போட்டால் விழாது என்பதான மனித நெரிசல். சரிஸ்காவைக் கூட்டி வந்தது தப்போ என்கின்ற எண்ணம் "TS"சிடம் தோன்றியது. இந்தக் கூட்டத்தின் நெரிசல்களில் அவளுக்குக் கோபம் வந்துவிடக் கூடாதே என்கின்ற கவலை. அந்த அவதியில் நாட்காட்டி ஒன்றிற்குப் பணம் செலுத்திவிட்டுப் பின்பு காற்சட்டைக்குள் வைத்த "Wallet"ற்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. சரிஸ்கா சற்றுக் குழம்பினாலும் அவளைத் தவிர வேறு எதையும் புவனலோசினியால் அவதானிக்க முடியாது. சரிஸ்கா இப்படியான நேரங்களில் முட்டியவனை மூர்க்கமாகத் தாக்க வேண்டும் என்கின்ற வெறி ஏறி உலகையே மறந்து பாய்வாள். அந்த அனர்த்தம் இங்கு நடந்துவிடக் கூடாது என்கின்ற பதைபதைப்பில் "TS" வைத்ததோ, விழுந்ததோ தெரியாது அவளை நோக்கி வேகமாகச் சென்றார். "TS"சின் "Wallet" விழுந்ததை ஒரு சுதேசக் கிழவி கண்டுவிட்டார். உடனடியாக அந்த "Wallet"ஐ எடுத்துக் கொண்டு விரைவாக இவர்களை நோக்கி வந்தார்.

ஒருவாறு சரிஸ்காவைச் சமாளித்து பெண்களுக்கான ஒரு புடவைக் கடைக்குள் இழுத்துச் செல்லவும் அந்தக் கிழவி அங்கு வரவும் சரியாக இருந்தது. அவருக்கு எழுபது வயதுக்கு மேலேயே இருக்கும் போன்ற நெருக்கமான சுருக்கங்கள் படிந்த முகம். நடையிலும், துடியாட்டத்திலும் நாற்பது வயது இளம் பெண் போல் அபாரமாக இயங்கினார். குளிரைத் தாங்கக்கூடிய விலை உயர்ந்த சிவப்பு நிற மேலங்கி ஒன்றை அணிந்திருந்தார். பூனைக் கண்களை முழுமையாக மறைக்கும்படி பெரியதொரு கண்ணாடி முக்கின் மேல். பொன்னிறக் கேசம் அலை அலையாகச் சுருட்டப்பட்டு மேற்கொண்டு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இதழுக்கு இரத்தச் சிவப்பில் சாயம் எழுதி அது கௌவைப் பழமாகிய மாயம். ஈழத்தில் முதியவரின் அலங்காரம் கோமாளித் தனமாகும். இங்கு முதியவர்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் முழுமையான அதிகாரம் பெற்றவர்களாக. இவர்களிடம் வந்த அந்தப் பெண்மணி,

"நீங்கள் ஏதாவது தொலைத்து விட்டீர்களா? அது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"என்ன?" என்று சரிஸ்கா அந்தப் பெண்மணியை நோக்கிக் கேட்டார். அந்தப் பெண்மணி "TS"சைப் பார்த்து,

"நீங்கள் ஏதாவது முக்கியமான பொருளை தொலைத்து விட்டீர்களா?" என்று மறு முறையும் கேட்டார். "TS" "இல்லையே" என்ற வண்ணம் கைகளால் தனது காற்சட்டையைத் தடவிப் பார்த்தார். அவருக்குப் பேர் அதிர்ச்சியாக இருந்தது. "Wallet"ஐக் காணவில்லை. "TS"சிற்கு அந்த அதிர்ச்சியில் உடல் வியர்த்தது.

"என்ரை பேர்சைக் காணேல்லை. என்ரை பேர்சைக் காணேல்லை." என்று அவர் பதட்டப்பட்டார்.

"அமைதியாக இருங்கள். உங்கள் பேர்சை நீங்கள் தவறவிட்டதை நான் பார்த்தேன். இந்தாருங்கள்." என்று கூறிய வண்ணம் தனது மேலங்கியில் வைத்திருந்த "Wallet"ஐ எடுத்து அவரிடம் கொடுத்தார். பின்பு,

"எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்." என்று கூறிச் சிரித்தார்.

"TS"சிற்குப் பதட்டம் தணிந்தாலும் வெட்கமாய் இருந்தது. அலமலக்கத்தில் எப்படியோ "Wallet"ஐத் தவறவிட்டாகிற்று. நல்லவர் கையில் அகப்பட்டதால் அது திரும்பவும் கைக்கு வந்துவிட்டது. இல்லாவிட்டால் பொருட்கள் வாங்க எடுத்த பணத்தோடு எல்லாம் அநியாயமாய் போய் இருக்கும் என்கின்ற உண்மை விளங்கியது.

"உங்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நினைத்து இருந்தால் இதை அப்படியே கொண்டு சென்று இருக்கலாம். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்கு விளங்கவில்லை."

"பருவாய் இல்லை. நான் எதையும் எதிர்பார்த்து இதைச் செய்யவில்லை. எதிர்பார்ப்பு இல்லாது செய்வதே உதவி. எதற்கும் உங்கள் பேர்சை சரி பார்த்துக் கொள்ளுங்கள்." என்றார் அவர்.

"அப்பா... நாங்கள் எல்லோரும் கோப்பி குடிக்கலாமே? அவவையும் கூப்பிடுங்கோ அப்பா." என்றாள் சரிஸ்கா உற்சாகமாக. "TS"சும் அவரை உற்சாகமாக அழைத்தார்.

"இல்லை வேண்டாம்... நான் நிறையப் பொருட்கள் வாங்க வேண்டும்." என்று அந்தப் பெண்மணி மறுக்க,

"எனக்கு அம்மம்மா இங்கு இல்லை. உங்களைப் பார்க்க அம்மம்மாவைப் பார்ப்பது போல இருக்கிறது. நீங்கள் எங்களோடு வந்து கோப்பி குடித்தால் எல்லோருக்கும் மகிழ்வாய் இருக்கும். நாங்களும் பொருட்கள் வாங்கத்தான் வந்து இருக்கிறோம்." என்று சரிஸ்கா வியக்கும்படி கூறியதை கேட்டு அந்தப் பெண்மணியின் மனம் மாறி இருக்க வேண்டும். தனது கையை அவளுக்கு முதல் கொடுத்து,

"என்பெயர் கெலேனா." என்று தன்னை அறிமுகம் செய்தார். அதைத் தொடர்ந்து புவனலோசினி, "TS" ஆகியோரும் தங்களை அவருக்கு அறிமுகம் செய்து கொண்டனர்.

பின்பு கீழ்த் தளத்திற்குச் சென்று, அங்கு இருந்த சாப்பாட்டுக் கடைக்கு முன்பு இருந்த மேசைகளில் ஒன்றில் அமர்ந்தார்கள். "TS" சென்று கோப்பியும் "Chocolate Cacke"கும் வாங்கி வந்தார். அவற்றைப் பரிமாறிய பின்பு அவரும் அமர்ந்து கோப்பியைப் பருகத் தொடங்கினார். அதற்கு முன்பே சரிஸ்காவிடமும், புவனலோசினியிடமும் அவர் ஏதோ கதைப்பதை "TS" கவனித்தார்.

"உங்களுக்கு இங்கு யாராவது உறவினர்கள் இருக்கிறார்களா?" என்று அந்தப் பெண்மணி "TS"சைப் பார்த்துக் கேட்டார்.

"இல்லை உறவினர்கள் என்று யாரும் இங்கு இல்லை. ஆனால்... நண்பர்கள் இருக்கிறார்கள். எங்கள் மொழி பேசும் எமது நாட்டு நண்பர்கள் இருக்கிறார்கள்." என்றார் "TS".

"யாராவது இருப்பது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் இல்லாது நத்தார் காலத்தைக் கழிப்பது கொடுமையானது. என்னைப் பாருங்கள். எனக்கு ஒரு மகளும், மகனும் இருக்கிறார்கள். மகள் அவுஸ்த்ரேலியாவில் ஆராய்ச்சியாளாராகப் பணிபுரிகிறாள். அங்கேயே காதலனும் இருக்கிறான். இம்முறை இங்கு வருவதாக அவள் இன்னும் அறிவிக்கவில்லை. அனேகம் வருவதற்குச் சாத்தியங்கள் இல்லை. அங்கு இப்போது கோடைக்காலம்.

இங்கு வந்தால் குளிரும் என்பார்கள். மகன் கனடாவில் திருமணம் செய்து ஒரு பிள்ளையோடு வாழ்கிறான். அவன் ஒழுங்காக இங்கு வருவது இல்லை. எப்போது வருவான், எப்போது வரமாட்டான் என்பது எனக்குத் தெரியாது. உண்மையைச் சொல்லப் போனால் அவனுக்கே அது தெரியாது. இம்முறையும் தனிமையில் எனது நத்தார் கொண்டாட்டம் கழியப் போகிறதோ என்று பயமாக இருக்கிறது." என்றார் அந்தப் பெண்மணி.

"உங்கள் கணவர் எங்கே?" என்று மீண்டும் சரிஸ்கா வயதுக்கு மீறிய துணிவோடு கேட்டாள். அவளுக்குப் பெண்களிடம் எந்தப் பயமும் கிடையாது. "TS"சிற்கு அவளின் அந்தத் துணிவைப் பார்க்கச் சந்தோஷமாய் இருந்தது.

"என் கணவர் இறந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. அவர் இருக்கும் போது சந்தோஷமாய் இருந்தேன். கடவுளிற்குப் பொறுக்க வில்லை. அவருக்கு மூளையில் புற்றுநோய் வந்து விட்டது. மிகவும் வேதனையோடு கடைசி காலத்தைக் கழித்தார். சில வேளைகளில் வாழ்க்கையில் நாங்கள் எதிர்பார்க்காத பயங்கரமான முடிவுகள் கடவுளால் திடீரெனத் தரப்படுகிறது. எனது உலகம் என்னையும் எனது கணவரையும் சுற்றியதாக இருந்தது. அவர் இறந்த பின்பு எனது நிலை அண்டத்தில் ஈர்ப்பு அறுந்து பூமி அலைவது போல ஆகிவிட்டது." என்றார் அந்தப் பெண்மணி. அவர் முகம் வேதனையால் வாடிப் போய்விட்டது.

"மன்னிக்க வேண்டும். நான் உங்கள் வேதனையைக் கிளறி விட்டேன்." என்றாள் சரிஸ்கா கவலையோடு.

"அப்படி நான் நினைக்க வில்லை. நீ அப்படிக் கேட்பது எனது கவலைகளுக்கான வடிகாலாய் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்."

"அப்படி என்றால் நீங்கள் யாருக்காகப் பரிசுப் பொருட்கள் வாங்கப் போகிறீர்கள்?" என்று "TS" கேட்டார்.

"அதுவா? கனடாவில் இருக்கும் மகனின் குடும்பத்திற்கு, அவுஸ்த்ரேலியாவில் இருக்கும் மகளுக்கும் அவளது காதலனுக்கும், அதைவிட எனக்குத் தெரிந்த தூர இடங்களில் இருக்கின்ற சில உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு என்று எல்லோருக்குமாக வாங்கிப்

பார்சல்கள் அனுப்ப வேண்டும். நான் அனுப்புவது போலவே அனேகமானவர்கள் என்னை நினைவில் வைத்து அவர்களும் ஏதாவது பரிசுப் பொருட்கள் அனுப்பி வைப்பார்கள். நத்தார் தினத்து அன்று அந்தப் பரிசுப் பொருட்களை எடுத்துப் பிரிப்பதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது. அந்தச் சந்தோஷம் எனக்குக் கிடைக்கும். அது ஒரு கனவு வாழ்க்கை என்றாலும் எனக்கு மிகவும் இனிக்கிறது."

"அப்பா இவவையும் பாட்டிக்குக் கூப்பிடுவமே?" என்றாள் சரிஸ்கா "TS"சைப் பார்த்து கெஞ்சும் பாவத்தோடு.

"அது சரிவருமே?" என்றார் "TS" சந்தேகத்தோடு.

"அது எல்லாம் சரிவரும் அப்பா." என்றாள் சரிஸ்கா இன்று என்றும் இல்லாத துணிவோடு.

"நீங்கள் கதைப்பது விளங்கவில்லை." என்றார் அந்தப் பெண்மணி பேய்களின் மொழியைக் கேட்டதான குழப்பத்தோடு.

"மன்னிக்க வேண்டும். நாங்கள் தமிழிற் கதைத்தோம். எங்கள் வீட்டில் கிறிஸ்மஸ் அன்று பிற்பகல் விருந்து ஒன்று வைப்பதாக இருக்கிறோம். நீங்களும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்." என்றார் "TS".

"நீங்கள் என்னை விருந்திற்கு அழைத்ததே பெரும் சந்தோஷத்தைத் தருகிறது. ஆனால் தயவு செய்து உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம்." என்றார் கெலேனா.

"எங்களுக்கு எந்த வீண் சிரமமும் இல்லை. நீங்கள் வராவிட்டால் சரிஸ்கா கவலைப்படுவாள்." என்றார் "TS".

"உண்மையாகவா?" என்று கெலேனா சரிஸ்காவைப் பார்த்துக் கேட்டார்.

"உண்மையாகவே. நீங்களும் வந்தால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்." என்றாள் சரிஸ்கா.

"நிச்சயமாக உங்களது சந்தோஷத்திற்கும் எனது சந்தோஷத்திற்கும் பங்கம் ஏற்படாமல் நான் விருந்திற்கு வருகிறேன்." என்றார் அந்தப் பெண்மணி.

பின்பு சிறிது நேரம் இருந்து கதைத்துவிட்டு "TS" எழுதிக் கொடுத்த முகவரியையும், தொலைபேசி எண்ணையும் வாங்கிக் கொண்டு அவர் சென்றார். அவர் சென்ற பின்பு "TS" சரிஸ்காவைப் பார்த்து,

"சரிஸ்கா நீ அவவை வேற வரச் சொல்லி இருக்கிறா. அவைக்கு வயின் இல்லாமல் சாப்பாடு இறங்காது. நான் இப்ப என்ன செய்யட்டும் சொல்லு?" என்று "TS" கேட்டார்.

"பருவாய் இல்லை அப்பா. நாங்கள் வயின் வாங்கிக் கொண்டு போவோம். ஆனா... வயின் மட்டும் தான் வாங்க வேணும். அதைவிட வேறு ஒண்டும் வாங்கக் கூடாது."

"நல்ல அப்பாவும், மகளும்... யாரோ தெருவில போன மனுசிய விருந்துக்கு வரச் சொல்லி இருக்கிறியள். நீங்கள் எல்லாரும் தமிழில கதைக்க அவ வந்து முழிச்சுக் கொண்டு இருக்கப் போகிறா. அதோடை தாமோதரன் அண்ணைய மறந்து போட்டியள். கேள்விப்பட்டா அவ்வளவும் தான். அயலுக்க இப்ப இருக்கிற எங்களுக்கு தெரிஞ்ச ஒரே ஒரு குடும்பம்." என்றாள் புவனலோசினி.

"ஓ... உண்மையா நான் அவரைப் பற்றி நினைக்க இல்லை. றிங்பண்ணிச் சொல்லுவம். அப்ப நல்ல பம்பலா இருக்கும்." என்றார் "TS".

"உங்களுக்குப் பம்பலா இருக்கும். எனக்கு எப்பிடிச் சமாளிக்கிறது எண்டு தான் யோசினை."

"அதெல்லாம் சமாளிக்கலாம் அம்மா." என்று சரிஸ்கா திடீரென்று கூறினாள். புவனலோசினிக்கும் "TS"சிற்கும் அது ஆனந்தமாய் இருந்தது.

27 விருந்து

வழமையாகத் தமிழ் ஆட்களுக்கு விருந்து வைப்பது என்றால் அவியலோ, பொரியலோ அடுப்பில் செய்துவிட முடியும். இந்த நாட்டுக்காரர்களின் அனேக உணவு வகைகள் போரனைக்குள் பாண் வேக வைப்பது போன்று அமைந்து விடுகிறது. இங்கு நத்தார் கொண்டாட்டத்தின் போது முக்கிய உணவாக வான்கோழி, 'பின்னச்சொத்' என்கின்ற உப்புப் போட்ட ஆட்டு நெஞ்சு எலும்புப் பகுதிக்

கருவாடு, பண்டியின் நெஞ்சுப் பகுதி போன்ற இறைச்சி வகைகளும் சில வகையான மீன்களும், இன்னும் வேறு பல உணவுகளும் பரிமாறப்படுவது இவர்கள் கலாச்சாரமாக இருக்கிறது. சாதாரண கோழியைப் போரனையில் வைத்து எடுப்பது போல வான்கோழியை வைத்து எடுத்துவிட முடியாது. சாதாரண கோழி ஒரு கிலோ என்றால் வான்கோழி ஆறு தொடக்கம் எட்டுக் கிலோ எடை இருக்கும். "TS"சிற்கும் புவனலோசினிக்கும் ஏற்கனவே வான்கோழி சமைத்த எந்த அனுபவமும் இல்லை. இது முதன் முறை என்பதே அவர்களுக்கு ஒருவித நடுக்கத்தை உண்டு பண்ணியது. வான்கோழியை முதல் நாள் காலையே வாங்கி வந்து இளக வைத்தாகிற்று. அது இளகிய பின்பு அதற்குள் பொதி செய்து வைக்கப்பட்டு இருக்கும் ஈரல், இதயம் போன்றவற்றை எடுக்க வேண்டும். அதை அவித்து அதில் வரும் ஊனில் கறி செய்ய வேண்டும். வான் கோழியை நீர் போகுமாறு கடுதாசியால் துடைத்துப் பின்பு எண்ணை, உப்பு மிளகு மற்றும் வாசனைப் பொருட்கள் இட்டு உள்ளும் வெளியும் நன்கு ஊறும் வண்ணம் பூச வேண்டும். பின்பு ஆப்பிள், ஊறிய அரிசி, வெங்காயம், முந்திரி வற்றல், பழ வற்றல்கள், உப்பு ஆகியவை சேர்த்து செய்யப்பட்ட கலவையை அதன் உடற் பகுதிக்குள் செலுத்தி அவை வெளியேறாத வண்ணம் நூலால் தைக்க வேண்டும். பின்பு ஒரு கிலோவிற்கு அரை மணித்தியாலம் என்கின்ற கணக்கில் நூற்று எண்பது பாகையில் அதை வேக வைக்க வேண்டும். "TS"-இற்கு இதற்கு முன்பு ஒரு முறை இளைஞர்கள் செய்ததைப் பார்த்த ஞாபகம் இருந்தது. அப்போது அது சுமுகமாகவே முடிந்தது. அந்தத் துணிவிலேயே இம் முறையும் செய்வது என்கின்ற முடிவுக்கு வந்தார். இருந்தும் ஒரு நோர்வே நாட்டவரும் வருவதால் அவரைச் சற்றுப் பதட்டம் தொற்றிக் கொண்டது. புவனலோசினி வேறு தனக்கு இதைப் பற்றித் தெரியாது என்று கையை விரித்து விட்டாள்.

நோர்வே நாட்டவர்கள் எப்படியான உணவைக் கொடுத்தாலும் நன்றாக இருக்கிறது என்றே புகழ்வார்கள். அதற்கு அவர்கள் பெருந்தன்மை காரணமாக இருக்க வேண்டும். நாங்கள் எங்கள் சுவைக்கு ஒத்து வராது விட்டால் உடனடியாக இந்த உணவு சரியில்லை என்று முகம் கோணும்படி நேரடியாகச் சொல்லிப் பழக்கப்பட்டவர்கள். அந்தப் பெண்மணி குறை சொல்ல

மாட்டார் என்கின்ற நம்பிக்கை "TS"சிடம் இருந்தாலும் அப்படி எந்தக் குறையும் வந்து விடக் கூடாது என்பதே அவரது கரிசனை ஆகும்.

*

நத்தார் தினத்தன்று காலையில் இருந்தே வேலை தொடங்கி ஆகிற்று. சமையலறை வேலைகளை "TS"சும் புவனலோசினியும் செய்யச் சாப்பாட்டு மேசை அலங்காரம், நத்தார் மரத்தின் அலங்காரம் போன்றவற்றைச் சரிஸ்கா பொறுப்பு எடுத்துச் செய்தாள். விலகி, விலகிப் பதுங்கிப் பதுங்கி இருந்தவள் இப்போது தானாக முன்வந்து இதைச் செய்வது "TS"-சிற்கும் புவனலோசினிக்கும் பெரும் ஆறுதலைத் தந்தது.

வான்கோழிக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்து வைத்து ஆகிற்று. அதை இரண்டு மணிபோல் போரனைக்குள் வைத்தால் போதும் என்பது "TS"சின் உத்தேசம். "Hot dog", மற்றும் "Meat boll" உடனேயே பொரித்து எடுத்துவிட முடியும் என்பதும் அவருக்குத் தெரியும். உருளைக்கிழங்குகள் தோல் சீவி நீரில் இட்டு வைத்தார்கள். சாப்பாடு பரிமாறும் போது சூடாக இருக்க வேண்டும் என்பதால் சமைப்பதைத் தள்ளி வைத்து விட்டு அவற்றிற்கான ஆயுத்தங்களை மட்டும் இருவரும் கவனித்தார்கள்.

பன்னிரண்டு மணி போல் மாலினியும் அருளும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஏதாவது உதவி தேவையா என்று கேட்டார்கள். "TS" அப்படி எந்த உதவியும் தேவை இல்லை என்று மறுத்து விட்டார். அருளை மட்டும் அவனிடம் இருந்த பெரிய சட்டிகளில் ஒன்றைக் கொண்டு வந்து தருமாறு கூறினார். அதற்குள் உருளைக்கிழங்கு அவிக்க வேண்டும் என்பது அவருடைய எண்ணம். எல்லோரும் ஒரே நேரத்தில் இருந்து சாப்பிடும் வசதி இல்லாதது ஒரு குறையாக இருந்தாலும் அதைச் சமாளிக்கலாம் என்கின்ற எண்ணம் "TS"சிடம் இருந்தது. ஆண்கள் சபை, பெண்கள் சபை என்று பிரித்து வைத்து விடலாம். ஆனால்... அந்தப் பெண்மணி வருவதால் அப்படி இரண்டு சபைகள் வைக்க முடியாது என்பது அவருக்கு விளங்கியது. எப்படி என்றாலும் இரண்டு பகுதியாகப் பிரித்தே பரிமாற வேண்டும். சோபா மேசையில் இருந்து சாப்பிடப் பிரியப் படுபவர்கள் அதில் இருந்து சாப்பிடலாம். அப்படிச் சாப்பிட்டால் ஒரே நேரத்திலேயே பரிமாறி

முடிக்கலாம். அப்படிச் செய்வதே உத்தமம் என்று புவனலோசினி கூறினாள்.

மாலை நெருங்கிக் கொண்டு இருந்தது. ஊரடங்குச் சட்டம் போட்டது போன்று தெருவில் மனித நடமாட்டத்தையே காண முடியவில்லை. இந்த நேரத்தில் பேருந்துகளோ, சுரங்கரதங்களோ ஓடாது. அனைத்துக்கும் அப்போது விடுப்பு. எங்கும் அமைதி. எல்லோரும் விருந்து தயாரிப்பதில் மும்மரமாக ஈடுபடுவார்கள். "TS"சும் புவனலோசினியும் நேரம் நெருங்க விருந்து தயாரிப்பதில் ஈடுபடத் தொடங்கினார்கள். உணவைத் தயாரித்து வைத்த பின்பு அவர்கள் வருவதற்கு முன்பு ஒரு முறை குளித்து விட்டு, ஆடை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது அவர்கள் திட்டம்.

சரிஸ்கா வரவேற்பறை அலங்காரங்களை முடித்து விட்டுக் குளித்தாள். பின்பு தனது அறைக்குள் சென்று தன்னை அலங்கரிக்கத் தொடங்கினாள். மகளுக்குத் தங்க நகைகள் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்பது புவனலோசினியின் பரபரப்பு. கொழும்பில் "TS" அதை ‘வாங்லொக்கரில்’ அப்போதே கொண்டு வந்து வைத்தது பெரும் அதிஸ்ரமாகப் போய்விட்டது. புவனலோசினி இருந்த மனநிலைக்கு எதையும் எடுத்து வந்து இருக்க மாட்டாள். அவளது அண்ணா விடவில்லை. நீ இனித் திரும்பி வருவாயோ தெரியாது. இதைக் கொண்டு போய்விடு என்று கட்டளை பிறப்பித்தார். வழமையாகச் சகோதரங்கள் நகை என்றால் என்னிடம் தந்துவிட்டுப் போகலாமே என்று கேட்கும் காலத்தில் அண்ணாவின் அந்தக் காரியம் அவளுக்குப் பெருமை தந்தது. சரிஸ்காவை நினைத்துவிட்டு அண்ணாவோடு போய் அந்த நகையை எடுத்து வந்தாள். இங்கு வந்த பின்பு ஒரு பேணியில் போட்டு அலுமாரிக்குள் வைத்து இருக்கிறாள். இங்குள்ள மனிதர்கள் எங்களைப் போன்று பொன் நகைகள் அணிந்து திரிவதில்லை. இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாட்டவருக்கே பிடித்த தனிப் பைத்தியம் இது. தங்கத்திலான நகைக்காக தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்கும் பைத்தியங்கள். அவர்களுக்குத் தங்கம் உடலில் மினுங்கினால் அரசர்கள், அல்லது மகாராணிகள் ஆகிவிட்ட ஒரு புளுகம். இப்போது வெள்ளைத் தங்கத்தையும் கண்டு பிடித்து விட்டார்கள். இனிவரும் காலத்தில் அதையும் வாங்கிக் குவிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தங்கம், வெள்ளைத் தங்கம்

போன்றவை பெறுமதியான லோகம் என்பதைத் தவிர அதில் எதுவும் இருப்பதாக "TS"-சிற்குத் தோன்றுவது இல்லை. அவருக்கு அப்படிக் கழுத்து அல்லது கை நிறைய அடுக்குவதும் பிடிப்பது இல்லை. என்றாலும் பெண்கள் அப்படி இல்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

புவனலோசினிக்கு தான் அடுக்காவிட்டாலும் சரிஸ்கா அடுக்க வேண்டும் என்கின்ற ஆசை. அந்த அழகைப் பார்த்து தான் இரசிக்க வேண்டும் என்கின்ற அடங்காத மோகம். இப்போதும் மகள் வெளிக்கிடுகிறாள் என்றவுடன் எப்போது போய் தனது தங்க நகைகளை எடுத்துக் கொடுப்பது என்கின்ற துடிப்பில் அவள். "TS"-சிற்கு அவள் அந்தரம் விளங்கியது. சமையல் வேலைகளும் ஓரளவுக்கு முடிந்து விட்டது. புவனலோசினியை முதலில் போக விட்டால் நகையை எடுத்துக் கொடுத்து விட்டுக் குளிப்பாள் என்கின்ற எண்ணம் "TS"-சிற்கு எழவே, "நீ போ." என்று "TS" அவளைப் பார்த்துக் கூறினார். அவளும் அதற்காகவே எதிர்பார்த்து இருந்தது போல வெளியே சென்று விட்டாள். அதன் பின்பு வான்கோழியின் ஈரல், இதயம் போன்றவற்றைத் துப்பரவு செய்து சிறிது சிறிதாக வெட்டி அவிய வைத்தார். அதில்தான் கறி போன்ற பதார்த்தத்தைச் செய்ய வேண்டும். உருளைக்கிழங்கையும் "TS" தூக்கி அடுப்பில் வைத்தார். "Hot dog", மற்றும் "Meat ball" ஆகியவற்றை சாதுவாகப் பொரித்தால் போதுமானது என்று "TS"-சிற்குத் தெரியும். வான்கோழி முடிவதற்கு இன்னும் ஒரு மணித்தியாலம் பிடிக்கும். அதற்கு இடையில் தானும் குளித்து விட்டு வரலாம் என்கின்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. அவர் அடுப்புகளைச் சரி பார்த்துவிட்டு வெளியே சென்றார்.

"TS" குளித்து ஆடை மாற்றிக் கொண்டு வெளியே வரவும், அழைப்பு மணி சிணுங்கவும் சரியாக இருந்தது. அழைப்பு மணி சிணுங்கியதும் சரிஸ்கா சென்று கதவைத் திறப்பாள் என்று எதிர்பார்த்தார். அப்படியே அவள் கலகலப்பாய் இருந்தாள். ஆனால் அழைப்பு மணி அடித்ததும் அவள் மகுடி கேட்ட (கண்ட) நாகம் போலத் தனது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். ஏன் அவள் அப்படிச் செய்தாள் என்பது "TS"-சிற்கு விளங்கவில்லை. தற்போது அவளிடம் சென்று அதற்கு விளக்கம் கேட்டுக் கொண்டு இருப்பதற்கும் அவகாசம் அவருக்கும் இருக்க வில்லை. அவர் கதவை நோக்கி நடந்தார்.

அருள், ரூபன், சொரூபன், நிமலன் ஆகிய நால்வரும் சிரித்துக் கொண்டு நின்றார்கள். சண்முகன் வடக்கே சென்றுவிட்டான். அவர்களோடு நத்தார் கொண்டாடி விட்டுத் திரும்பி வருவேன் என்று புறப்பட்டு விட்டான். அவனும் வந்திருந்தால் விருந்து களைகட்டி இருக்கும் என்பது "TS"சின் எண்ணம். வடக்கே இருப்பவர்களைத் தான் மறந்து விட்டேன் என்கின்ற குற்றச்சாட்டு வந்து விடும் என்று கூறி அவன் புறப்பட்டான். அருளுக்கு அவன் அங்கே போவது அவசியம் இல்லை என்று தோன்றினாலும் அவன் சுதந்திரத்தில் தலையிடத் தான் யார் என்று பேசாது இருந்து விட்டான்.

வந்தவர்களோடு வெளியே உலாவிய குளிரும் ஒட்டிக் கொண்டு வந்ததாக அவர்களின் மேலங்கியை வாங்கிய "TS"சின் கைகள் குளிரை உறிஞ்சின... உணர்ந்தன.

"நல்ல குளிர் போல இருக்குது?" என்றார் "TS".

"ஓம் அண்ணை. வடக்கில இருந்து வாற காத்து கிறிஸ்மஸசுக்கு ஒஸ்லோவை உறைய வைக்கிறன் எண்டு நிக்குது."

"நிமலன் எப்ப வந்தனீ?"

"நேத்து இராத்திரி வந்தன். அலுப்புத் தீர அருள் வீட்டிலதான் படுக்கை."

"ஓ அவன் இப்ப கவிஞ்ஞன் ஆகீட்டான். அதை எல்லாம் கொப்பி கொப்பியா எழுதி வைச்சு இருக்கிறான். படிப்புக்கும் அப்படித்தான் கொப்பி கொப்பியா எழுதுகிறானோ தெரிய இல்லை." என்றான் அருள்.

"அதைப்பற்றிக் கவலைப்படாதேங்க அருள் அண்ணை. நான் பருவாய் இல்லாமல் தான் மாக்ஸ் எடுக்கிறன். இந்த நாட்டில எக்கவுண்டனா வர இயலாதவன் இலங்கையில கடைக் கணக்குக்கூடப் பார்க்க அருகதை இல்லாதவன். நான் நிச்சயம் எக்கவுண்டனா வருவன். உங்களுக்கும் கணக்குப் பார்க்க வேணும் எண்டாப் பார்த்துத் தருவன்." என்றான் நிமலன்.

"எக்கவுண்டன் ஒருத்தன் கையிக்க இருக்கிறது எங்களுக்கும் வசதிதானே?"

பாதணிகளையும், மேலங்கிகளையும் கழற்றி வைக்க வேண்டிய இடங்களில் வைப்பதற்கு "TS"சும் உதவினார். அந்த அலுவல்கள் முடிய நான்கு பேரும் உள்ளே வந்தார்கள். நிமலன் புதிய சட்டை, காற்சட்டை அதற்கு மேல் ஒரு மெல்லிய மேலங்கி என்பன அணிந்து இருந்தான். தலைக்கு ஏதோ பூசி இழுத்ததில் அது கண்ணாடியாக மினுங்கியது. பிசின் போட்டுக் காய வைத்ததாய் முடி குத்திட்டு நின்றது. ஒவ்வொருவரிலும் இருந்தும் ஒவ்வொரு வாசனைத் திரவியத்தின் நறுமணம். அருள், சொரூபன், றூபன் ஆகியோர் மடிப்புக் குலையாத சட்டையும், காற்சட்டையும் அணிந்து இருந்தனர். அருள் அதற்கு மேல் கம்பளிச் சட்டை அணிந்து இருந்தான்.

உள்ளே வந்ததும் பார்வையால் துழாவிய வண்ணம் அவர்கள் சென்று சோபாவில் அமர்ந்தார்கள். புவனலோசினி அவர்கள் வந்திருப்பது தெரிந்து தேநீர் தயாரிப்பதற்கு அடுக்களைக்குச் சென்றாள். அதைப் பார்த்த அருள் எழுந்து வந்து,

"சாப்பாட்டோடை ஏதும் இருக்குதோ?" என்றான்.

"பெரிசா ஒண்டும் இல்லை. அது நான் ஏற்கனவே சொன்னது தானே? நான் என்ன செய்கிறது? இருண்டவன் கண்ணுக்கு மருண்டது எல்லாம் பேய் எண்டுகிற மாதிரி இங்க அதெல்லாம் பாவிக்க முடியாது. ஆனா... ஒரு சமாதானத்துக்குக் கொஞ்சம் வயின் வாங்கி வைச்சிருக்கிறன். அது மாத்திரம் தான்."

"அப்ப அக்காவை பிளேன்ரீ போடச் சொல்லுங்கோ... பால் ரீ வேண்டாம். அது தான் சிக்கணமாய் இருக்கும்." என்றான் அருள்.

"சரி அதுக்கு என்ன? எல்லாருக்கும் பிளேன் ரீயப் போட்டிடுவம்." என்று கூறிய "TS" அவசரமாகச் சமையல் அறையை நோக்கிச் சென்றார். புவனலோசினி பாலை ஊற்றிக் கொதிக்க வைத்து விடுவாள் என்கின்ற அவசரம் அவரிடம். பால் காய வைத்து உறை போடுவது இங்கு இல்லை என்கின்ற இந்த நாட்டு யதார்த்தம். "TS" தேநீர் வைக்குமாறு கூறிவிட்டு மீண்டும் வரவேற்பு அறைக்கு வந்தார். எல்லோரும் சோபாவில் அமர்ந்து இருந்தார்கள்.

"சிவா வருவான் தானே?" என்றார் "TS".

"ஓம். ஓம். தனக்கு வேலை இல்லை தான் வருவன் எண்டு சொன்னவன். வந்திடுவான்." என்றான் அருள்.

"வேறை யாரும் வருவினமோ?" என்றான் சொரூபன்.

"ஏன் உனக்கு வேறை யாரும் வந்தா என்ன பயமே?" என்றான் அருள். நிறைய ஆட்கள் கூடுமிடத்து யாரும் ஏதும் தப்பாகக் கதைப்பார்களோ என்கின்ற பயம் றூபனுக்கு உண்டு என்கின்ற சந்தேகம் அருளுக்கு. அப்படி அவன் மனம் நோகும்படி நேரே யாரும் கதைக்க மாட்டார்கள் என்கின்ற நம்பிக்கை அருளுக்கு இருந்தது.

"றூபனுக்கு என்ன பயம். வேறை ஒரு நொஸ்க் மனிசியும், தாமோதரன் குடும்பமும் வருவினம்." என்றார் "TS".

"அந்த வால்களும் வருவினமே? அப்ப நல்லாப் பொழுது போகும்." என்றான் றூபன்.

"ஏதோ வித்தியாசமாய் எல்லாம் மணம் வருகுது... என்ன சமைக்கிறியள்?" என்றான் சொரூபன். திசை மாறியது.

"அதுக்கு ஏன் அவசரப்படுகிறாய்? மேசைக்கு வரேக்க பார்க்கலாம் தானே?" என்றான் அருள்.

"எனக்கு ஒரு பெரிய குறை?" என்றான் நிமலன்.

"கவிஞருக்கு என்ன பெரிய குறை?" என்று அருள் கேட்கவும் வாசல் மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது. "TS" அவசரமாக வாசல் கதவை நோக்கிச் சென்றார். சிவாவும், தாமோதரன் குடும்பமும் ஒன்றாக நின்றார்கள்.

"சொல்லி வைச்ச மாதிரி வாறியள்." என்றார் "TS".

"நாங்கள் வரேக்க சிவாவை அவற்றை பிரண்ட் கொண்டு வந்து விட்டிட்டுப் போகிறார். அது தான் சேர்ந்து வாறம். வெளியால சரியான குளிர். இந்த விருந்தை நாங்கள் வைச்சிருக்க வேணும்... எண்டாலும் நீங்கள் முந்தீட்டியள்." என்றார் தாமோதரன் தொடர்ந்து.

"அதுக்கு என்ன... அடுத்த முறை நீங்கள் செய்தாப் போச்சுது. எங்களைவிட உங்களுக்கு அது நல்லாய் பொருந்தும்." என்றார் "TS". அதற்கு இடையில் தாமோதரனின் பிள்ளைகள் தமது மேலங்கிகளையும், பாதணிகளையும் கழற்றிப் போட்டுவிட்டு உள்ளே சென்று

விட்டார்கள். "TS" மேலங்கிகளை எடுத்து அலுமாரிக்கு உள்ளே கொழுவினார். மாலினி அவர்களது பாதணிகளை ஒதுக்கமாக வைத்தாள். பின்பு தங்களது மேலங்கியையும், பாதணிகளையும் கழற்றி வைத்து விட்டு உள்ளே வந்தார்கள். குளிர் அதிகமாக இருந்ததால் சேலை கட்டும் விஷப் பரீட்சை செய்யாது மாலினி மேற்கத்தேய அலங்காரத்திலேயே வந்து இருந்தாள்.

உள்ளே சென்ற மாலினி சமையல் அறைப் பக்கம் சென்றாள். மாலினி சமையல் அறைக்குச் சென்ற பின்பு நரரேசும், குணேசும் மெதுவாக எழுந்து சரிஸ்காவின் அறைக்குச் சென்றார்கள். சரிஸ்காவிற்கும் அவர்கள் வந்தால் தனது அறைக்கு வருவார்கள் என்கின்ற ஊகம் அவள் மனதில் இருந்தது. அப்படி உள்ளே வந்தவர்கள்,

"அக்கா எங்களுக்கு சொக்ளேற் தாங்க..." என்றார்கள்.

"வடுவாக்கள்... அது தானே இவ்வளவு அவசரமா இங்க ஓடி வந்தநீங்கள். சாப்பிட்ட பிறகுதான் நான் சொக்ளேற் தருவன். இப்ப தந்தா உங்கடை அப்பா அம்மா என்னைப் பேசுவினம். நீங்கள் போய் கோலில இருந்து விளையாடுங்க. நான் சமையல் அறைக்குப் போய் உதவி செய்ய வேணும்." என்றாள் சரிஸ்கா.

அவர்கள் "Chocolate" கிடைக்காத ஏமாற்றத்தோடு மீண்டும் கோலுக்குச் செல்லச் சரிஸ்கா சமையல் அறைக்கு உள்ளே புகுந்தாள். சாப்பாட்டு அலுவல்கள் முடிந்தாகி விட்டது. வான்கோழியை இறக்கி அலுமேனியத் தாளால் சுற்றிவைக்க வேண்டும் என்று மாலினி அவிப்பிராயப்பட்டாள். அப்போதே அது ஆறாமல் சுடச்சுட நீண்ட நேரம் இருக்கும் என்பது அவள் எண்ணம். மீதம் இருக்கும் நேரத்தில் சிறிய துண்டுகளாய் நறுக்கப்பட்ட பழங்களிற்குள் "icecream", கயூ, கொடி முந்திரி வத்தலும் இட்டுப் பழச் சலாத் செய்வதற்கான ஆயுத்தத்தில் ஈடுபடத் தொடங்கினார்கள். அப்படி இனிப்பாகச் செய்யும் சலாத்திற்குச் சிறிது உப்பும் சேர்த்தாலே "TS"-சிற்குப் பிடிக்கும். அப்படிச் செய்தால் இனிப்பின் சுவை மேலும் தித்திக்க அது பஞ்சாமிர்தம் போல் இருக்கும் என்பது அவர் அவிப்பிராயம்.

"அப்ப நாங்கள் இனித் துவங்கலாம் தானே அண்ணை?" என்று சிவா கேட்டான்.

"இப்ப வந்திடுவா." என்றார் "TS".

"யார் அண்ணை?"

"கெலேனா எண்டு ஒரு மனிசி."

"நொஸ்கோ அண்ணை?" என்றான் றூபன்.

"ஓம். நொஸ்கு எண்டா என்ன?"

"கையால சாப்பிடுகிற எங்கடை சுதந்திரம் பறிபோயிடும் அண்ணை." என்றான் கவலையோடு றூபன்.

"இது கையால சாப்பிடுகிற மாதிரியான சாப்பாடு இல்லை. ஆனாக் கோழி நொஸ்குகள் கையாலையும் சாப்பிடுகிறவை தானே? சமாளிப்பம். அப்படி கையாலதான் சாப்பிட வேணும் எண்டா சாப்பிடுகிறது. அவ ஒண்டும் சொல்லமாட்டா. சொன்னாலும் நாங்கள் கவலைப்படத் தேவை இல்லை. ஏன் எண்டா அதுதான் எங்கடை கலாச்சாரம்." என்றார் "TS".

இவர்கள் கதைத்துக் கொண்டு இருக்கும் போதே மீண்டும் அழைப்பு மணி ஒலித்தது. "TS" சென்று கதவைத் திறந்தார். கெலேனா நல்ல அலங்காரத்தோடும், சிவப்பு நிற மேலங்கியோடும் நின்றார். காதில் வைரத் தோடுகள் போன்று ஏதோ மின்னின. அவை வைரமா அல்லது வெறும் கல்லா என்பது அவருக்கு நிச்சயம் தெரியாது. கழற்றி வானில் எறிந்தால் துர்கையின் தோடுகள் போல நிலவாகுமோ என்கின்ற கற்பனை அவருள் திடீரென எழுந்தது. இரத்தச் சிவப்பாக இதழ்களுக்குச் சாயப் பூச்சு. ஊதா நிறக் காற்சட்டையும், வெள்ளை நிற மேற்சட்டையும் அணிந்திருந்தார். அவரது மேலங்கியை வாங்கிக் கொழுவி விட்டு அவரை உள்ளே அழைத்து வந்தார் "TS".

கெலேனா இவ்வளவு பேர் உள்ளே இருப்பார்கள் என்று எதிர் பார்த்து இருக்கவில்லை. இவ்வளவு இளைஞர்களைக் கண்டதும் அவர் சற்று தடுமாறிப் போய்விட்டார். பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு ஒவ்வொருவராகத் தன்னை அவர்களுக்கு அறிமுகம் செய்தார். அவரோடு கதைப்பது தங்கள் மொழி அறிவைக் கூட்டும் என்பதால் இளைஞர்கள் ஆர்வமாக அவரோடு கதைக்கத் தொடங்கினார்கள்.

அவர் ஒரு முறை வீட்டைப் பார்த்தார். குறை சொல்லும்படியாக அது இல்லை என்பது அவருக்கு விளங்கியது. தான் கொண்டுவந்த பரிசிற் பொருளை

நத்தார் மரத்தின் கீழ் வைத்து விட்டு வந்து அமர்ந்தார். சாப்பாட்டு மேசை எட்டுத் தட்டுக்களோடும் அதற்கான உபகரணங்களோடும் அலங்கரிக்கப் பட்டு இருந்ததை அவர் தன் கடைக்கண்களால் வாங்கிக் கொண்டார். வீட்டில் தற்போது எட்டிற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்களே என்கின்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அவர் அதை வாய் திறந்து கேட்கவில்லை. என்ன நடக்கிறது என்பதைக் காத்திருந்து பார்ப்போம் என்று முடிவு செய்தவராய் அவர்கள் இருப்பில் கலந்து கொண்டார்.

"நாங்கள் உங்களுக்கு ஆகத்தான் காத்து இருந்தோம். சிறுவர்கள் மாத்திரம் தங்களுக்கு விருப்பமான பொல்சர் சாப்பிட்டு விட்டார்கள். மற்றயவர்கள் எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம். புவனலோசினியும், சரிஸ்காவும் சாப்பாடு பரிமாற உதவியாக இருப்பார்கள்." என்றார் "TS".

"ஏன் அவர்களும் எங்களுடன் இருந்து சாப்பிட்டால் சந்தோஷமாய் இருக்குமே?" என்றார் அவர்.

"எங்கள் கலாச்சாரத்தில் வீட்டுக்காரர் சாப்பாடு பரிமாறுவது முக்கியம். அதைப் பெண்களே முன்னின்று செய்வதும் வழக்கம். நான் இங்கு வந்து இருக்கச் சொன்னாலும் அவர்கள் ஒத்துக் கொள்ளப் போவது இல்லை. நீங்கள் எல்லோரும் எழுந்து சாப்பாட்டு மேசைக்கு வாருங்கள்." என்றார் "TS".

ஒவ்வொருவராக எழுந்து மேசைக்குச் சென்றார்கள். "TS" சமையல் அறைக்குச் சென்று மாலினியையும் கோலுக்கு அனுப்பி வைத்தார். பின்பு வயின் போத்தல்களையும், கோலாப் போத்தல்களையும் எடுத்துக் கொண்டு வந்தார். வயின் போத்தலை பார்த்த போது சிவாவுக்குப் பசி வந்தது போல இருந்தது. பசிப்பதற்கு வயின் குடிப்பதாகச் சொல்லுகிறார்கள். தனக்கு அதைப் பார்த்தவுடனேயே பசிப்பதாய் அவன் எண்ணினான். எல்லாம் மூளையின் ஜாலம் என்பது அவனுக்கு விளங்கியது. மதுவும் உணவும் சமிபாட்டிற்குச் செல்லும் போது மதுவிற்கே முதலிடம் கிடைக்கும் என்பதும் அதனால் உணவு காத்திருக்க வேண்டி வரும் என்பதும் அவன் அறிந்த உண்மை.

அருளுக்கும் அந்தப் போத்தல்களைப் பார்த்ததில் ஆனந்தம் உண்டானது. றூபனும், சொரூபனும் அகத்தில் மகிழ்ந்தார்கள். நிமலன் நிர்மலமாய் இருந்தான். அவன்

இன்னும் மதுவை ருசித்துப் பார்க்கவில்லை. அது வேண்டாம் என்பதில் அவன் பிடிவாதம் காட்டினான். அவன் படித்த போல்கைஸ்கூலும் கிறிஸ்தவப் போல்கைஸ்கூல். அங்கு அது அனுமதிக்கப்படுவது இல்லை. பின்பு மாணவ விடுதிகளில் தங்கி இருந்து படித்தான். அங்கு எல்லாச் சுதந்திரமும் இருந்தது. அப்படி இருந்தும் அவன் மதுவைத் தொடாது தள்ளி வைத்திருந்தது மற்றவர்களுக்கு வியப்பைத் தந்தது. அவன் மனதில் அதுக்கும் ஒரு கணக்கு உண்டு. அவன் அதை வாய் விட்டு யாரிடமும் சொல்வது இல்லை. சொல்லும் துணிவும் அவனிடம் இருந்தது இல்லை.

மது அருந்தாமல் இருப்பது யாழ்ப்பாணத் தமிழர்களுக்குப் புறநடையான செயல் அல்ல. குடிகாரன் என்று யாரும் ஊரில் பெயர் எடுக்க விரும்புவது இல்லை. குடித்தவர்கள் ஆடும் கூத்துக்கள் ஊரில் இலவசச் சினிமாவாக ஓடுவது உண்டு. அங்கு சாப்பாட்டுக்குக் குடிப்பது என்று இல்லை. குடிப்பது என்றால் அது வெறிப்பதற்குக் குடிப்பது ஆகும். வெறித்தால் உள்ளத்தில் உள்ளதைக் கொட்டுவதற்கு வசதியாகும். தூற்றுவதற்கும் துணிவு வரும். துள்ளி ஆடுவதற்குத் தென்பு உண்டாகும். குடித்து விட்டுத் தேவாரம் அல்லது பாட்டு பாடிச் செல்பவர்களும் உண்டு. கிழமை முழுவதும் வேலை செய்து வெள்ளி தங்கள் குடி விழாவைத் தொடங்குபவர்கள் பலர். அவர்கள் அத்தால் தங்களுக்கு என்று ஒரு பட்டப் பெயரையும் பெற்றுக் கொள்வார்கள். அது வெறிக்கான குடி. இது பசிக்கான குடி என்கிறார்கள்.

தமிழர்களில் பலர் மது அருந்துவது இல்லை. இங்கு வந்த பின்பு அது தலை கீழாக மாறி இருக்கிறது. மது குடித்தால் குடி மூழ்கிப் போய்விடாத வருமானம் இங்கு இருப்பதால் நித்தமும் வியர் அருந்துபவர்களும் உண்டு. கிழமைக்கு ஒரு தரம் மது அருந்துபவர்களும் உண்டு. வயின் வெறிக்குக் குடிப்பது அல்ல. அது சாப்பாட்டிற்காக குடிப்பது. அதற்காக வயின் குடித்தால் வெறிக்காது என்றும் இல்லை.

இங்கே குடிகாரன் என்று பழிக்கும் ஊர் இல்லை. லண்டன், கனடாவில் குடிப்பதை ஊர்க்காரன் பார்த்தால் அதை ஊருக்குப் புதினமாகத் தந்தி அடித்து விடுவான். ஒஸ்லோவில் யார் ஊர்க்காரன் பார்ப்பதற்கு? பார்த்தாலும் யார் தந்தி அடிப்பதற்கு? தந்தி அடிக்கும் தகமையும் பலருக்கு இல்லை என்பதும் மது அருந்துபவர்களுக்கு

பெரும் வாய்ப்பாகும். பொருளாதாரச் சுதந்திரத்திற்கும் கலாச்சாரத்திற்கும் ஒரு வகையான தொடர்பு இருக்கிறது. யாருக்கும் பதில் சொல்ல வேண்டும் என்கின்ற கட்டாயம் இங்கு இல்லை. அவனாக விரும்பினால் உண்டு. அல்லது அவனே அவனுக்கு அரசன். மஞ்சள் துண்டுகளை ஒழுங்காகக் கட்டினால் இங்கு யாரும் எதுவும் கேட்கப் போவது இல்லை.

லண்டன் கனடாவில் பெண்களும் பரவலாக வயின் குடிப்பார்களாம். நோர்வே வாழ் தமிழ்ப் பெண்கள் பொதுவாக அதைக் கொஞ்சம் தூரவே வைத்து இருக்கிறார்கள். இவர்கள் இன்றும் உறைந்து விட்ட யாழ்ப்பாணக் கனவில் காலத்தை ஓட்டுகிறார்கள். இங்கும் அது நடக்கலாம்... எதுவும் எங்கும் நடக்கலாம்... அது புறநடையாகவோ வழமையாகவோ இருக்கலாம்.

எல்லோரும் இருந்ததும் "TS" ஒரு வயின் போத்தலை எடுத்துத் திறந்தார். அருகில் இருந்த அந்த நோர்வேப் பெண்ணைக் கௌரவிக்கும் முகமாக அவரது கண்ணாடிக் குவளையில் முதலில் அதைச் சிறிது சரித்தார். அவர் அதை எடுத்து முகர்ந்து பார்த்ததோடு சிறிது சுவைத்தும் பார்த்துவிட்டு நன்றாக இருக்கிறது என்று கூறினார். பின்பு "TS" வார்க்க அரைக் குவளை நிரம்பியதும் போதும் என்று அந்தப் பெண்மணி பணிவாகத் தடுத்தார். அதன் பின்பு அந்தப் போத்தலை தாமோதரனிடம் கொடுத்துவிட்டு வேறு ஒரு போத்தலை எடுத்துத் திறந்து மறு பக்கத்தால் அனுப்பி வைத்தார். நிமலன் கோலாப் போத்தலைத் திறந்து கோலாவைத் தனக்கு எடுத்த பின்பு மாலினிக்கு வார்த்தான்.

கண்ணுக்கு மை தீட்டி... கார் குழலைப் பின் அலையாகப் பரவ விட்டு, தங்கத்தில் நகை மாட்டி, கருவிழியின் கடை ஓரத்தில் தெறித்த வாள் ஒளி காட்டி, இந்தக் கொள்ளை அழகை இந்நாள்வரை பூட்டி வைத்த கொடூரத்தை எண்ணிப் பார்ப்பவர்கள் துவண்டு போக, துள்ளும் நடையோடும், துருத்தும் மார்போடும், வாசத்தை வீசும் மென் வெம்மைக் காற்றோடும், பார்வை எல்லாம் அவளைத் தின்ன, பாவை அவள் விரதம் முடித்து, முதன் முதல் கோலுக்குள்... மாலையில் பிரசன்னமாகும் சந்தனக் குளிர் சந்திரனாய், வழக்கத்திற்கு மாறாகத் திடீரெனத் தோன்றினாள். அவளின் ரோஜா நிறத்திலான சுடிதார் சந்திரனுக்கே புது நிறம் கொடுத்து, அவனது

வெள்ளைக்குச் சாப விமோசனம் அளித்திற்று. அப்படி வந்தவள்,

"அப்பா சாப்பாடு கொண்டரட்டா எண்டு அம்மா கேட்கிறா?" என்றாள்.

"இல்லை அம்மா இன்னும் ஒரு இருபது நிமிசத்தில கொண்டு வாங்கோ. அப்ப தான் எல்லாருக்கும் பசிக்கும்." என்று கூறி "TS" சிரித்தார். அதை ஆமோதிப்பதாக அருளும் சிவாவும் புன்முறுவல் புரிந்தனர். நிமலன் தன்னை மறந்தவனாய், கண்ணை அவளில் இருந்து எடுக்கத் தவறியவனாய், "TS" கவனிப்பதையும் கவனிக்காதவனாய், பெண்ணைப் பார்த்ததால் கால் ஊன்றி இருந்த இம் மண் உலகை மறந்தான்.

"சரியப்பா." எதற்காக அப்பா பொறுக்கச் சொல்கிறார் என்பது முழுமையாக விளங்காதவளாய் செய்தியைக் காவிக் கொண்டு தாயிடம் சென்றாள்.

"இது இப்ப உங்களுக்குத் தேவையா? நிமலன்தான் நல்ல பிள்ளை. உதைக் குடிச்சு என்னத்தைக் காணுறியளோ தெரியாது? சும்மா காசை அநியாயம் செய்கிறது தான் மிச்சம்." என்றாள் மாலினி.

"அக்கா நீங்கள் குடிக்க முடியேல்ல எண்ட வெப்பியாரத்தில சொல்லுகிறியள். குடிச்சிருந்தா இப்ப உங்கடை விளக்கமே வேற மாதிரி இருந்திருக்கும். அப்ப தாமோதரன் அண்ணையே வாயில கை வைச்சிருப்பார்." என்றான் சிவா.

"சும்மா இரு சிவா. கோடி தந்தாலும் நாங்கள் உந்த நசலைத் தொட மாட்டம்." என்றாள் மாலினி.

"சும்மா டுப் விடாதேங்க அக்கா. என்னிட்டக் கோடி தாறத்துக்கு வசதி இல்லை எண்டுகிறதால தானே இந்தத் துணிவு? நல்ல காலம் நான் கோடீஸ்வரன் இல்லை. அது தாமோதரன் அண்ணையின்ரை அதிஸ்ரமாய் இருக்க வேணும்." என்றான் சிவா.

"சிவா... இவன் நிமலனைப் பார்." என்றான் அருள்.

"என்ன பேயடிச்ச மாதிரி இருக்கிறா நிமலன்? இங்க மனிசர்தானே இருக்கிறம்?" என்றான் சிவா.

"இல்ல உங்ளைப் பார்த்தா எனக்கு அப்படித் தான் இருக்குது. சொறி அண்ணை நீங்கள் இப்பிடிக் கேட்காட்டி நானும் அப்பிடிச் சொல்லி இருக்க மாட்டன்." என்றான் நிமலன்.

"அவனைத் தொடர்ந்தும் நீங்கள் சின்னப் பிள்ளையா நினைக்கிறியள். ஒருத்தரும் செய்யாத வேலை அவன் இப்ப செய்கிறான்." என்றார் "TS".

நிமலனுக்குப் பகிர் என்றது. தன்னை அவதானித்தாரோ என்கின்ற கவலை எழுந்தது.

"அவன் கவிதை எழுதுகிறது பெரிய விஷயம். அது எல்லாருக்கும் வராது. அதுக்கு மற்றவை கதைக்கேக்க பேய் அறைஞ்சவன் மாதிரி இருக்கிறதா?." என்றான் சிவா மான அவமானங்களைத் துறந்த ஞானியாக.

"நீங்கள் சிவா அண்ணையிட்டை இன்னும் ஒரு போத்தலைக் குடுங்கோ." என்றான் நிமலன் தன்னை அந்த நினைவில் இருந்து விடுவித்துக் கொண்டு.

"உங்கள் நாட்டைப் பற்றி கேள்விப்பட்டேன். மிகவும் அழகான நாடு அல்லவா?" என்றார் கெலேனா.

"எங்கள் நாடு மிகவும் அழகான நாடாக ஒரு காலத்தில் இருந்தது. அங்கு ஒரு காலத்தில் மதவெறி குறைவான மனிதர்கள் வாழ்ந்தார்கள். அந்த நாட்டிற்குப் பௌத்தம் என்கிற மேன்மையான ஞானம் கொண்டு வரப்பட்டது. அது பிற்காலத்தில் மாற்று இனத்தவரைக் கொல்லும் வெறிக்கான தத்துவமாய் போலித் துறவிகளாலும், வெறி பிடித்த அரசியல்வாதிகளாலும் மாற்றப் பட்டது. அங்கே இப்போது மனிதர்கள் இல்லை. மதம் பிடித்த மிருகங்கள் போல நாட்டைச் சுடலையாக்கி நர்த்தனம் ஆடும் அதிகார வர்க்கம் பிசாசுகள் போல ஆட்சி செய்கிறது. அந்தப் பேய்களின் நடனத்திற்குப் பல அன்னியப் பிசாசுகள் அரங்கம் அமைக்கின்றன. அவை இரண்டும் சேர்ந்து அப்பாவிகளின் இரத்தத்தைக் குடிக்கின்றன. நீங்கள் சொன்ன அழகான நாடு இன்று பேய்களின் நர்த்தனக் காடாகி இருக்கிறது. கௌதம புத்தர் இழப்பதே ஞானம் என்றார். மகனுக்கே பிச்சைப் பாத்திரத்தைப் பரிசாக்கினார். அவரது வாரிசுகள் என்று சொல்பவர்கள் மற்றவர்களின் உரிமையைப் பறிப்பது தங்கள் தர்மம் என்கிறார்கள். அவர்கள் இழப்பதை அல்லது கருணை காட்டுவதையே

மறந்தாலும் பருவாய் இல்லை. ஆனால் இனவெறியால் கொலை வெறி கொண்டு அலைகிறார்கள். இப்படியாக இருக்கிறது எங்கள் நாடு இப்போது." என்றார் "TS".

"ம்... ஆனா... நீ என்ன சொல்ல வருகிறாய் என்று இலகுவாக விளங்கும்படி சொல்லு." என்றார் கெலேனா.

"எங்கள் நாட்டில் யுத்தம் நடக்கிறது. அதனால் அங்கு மனிதம் மீறப் படுகிறது. அப்பாவிகள் சாகிறார்கள். இரத்த வெள்ளம் ஓடுகிறது. அழகான இலங்கை அலங்கோலம் ஆகிவிட்டது. செந்நீரும், புண்ணீரும், கண்ணீரும் அங்கு ஆறாக ஓடுகிறது." என்று சொல்கிறார் என்றான் சிவா.

"ஓம் நானும் கேள்விப்பட்டேன். நீங்கள் தமிழர். புலிகளுக்கு ஆதரவானவர்கள்."

"தமிழர்கள் என்றால் புலிகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று இல்லை. புலிகள் தூய்மையான போராட்டத்தைச் செய்யவில்லை. எங்கள் போராட்டத்தின் பாதை சிதைக்கப்பட்டு விட்டது. அதனால் சில வேளை நீங்கள் எங்கள் போராட்டத்தைப் பற்றித் தப்பாகக் கேள்விப்பட்டு இருக்கலாம்." என்றான் சிவா.

"சிவா?" என்றார் "TS" ஆற்றாமையோடு.

"உது எல்லாம் உவவிட்டை சொல் வேணுமே?" என்றார் தாமோதரன்.

"உங்கள் போராட்டத்தைப் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. உங்கள் போராட்டமும் பலஸ்தீனப் போராட்டம் போல் இருக்கும் என்கின்ற எண்ணம் என்னிடம் இருக்கிறது. உங்கள் தலைவர்கள் சாதுரியமானவர்கள் என்றால் அமெரிக்காவினதும், மேற்கு நாடுகளினதும் ஆதரவை ஒரு போதும் இழந்து விடக் கூடாது. தத்துவங்கள் பேசி அந்த ஆதரவை இழப்பது இனி வரும் காலத்திற்குப் பயன்தராது. ஒரு காலத்தில் போராட்டத்திற்கு உதவுகின்றவர்கள் இடதுசாரிகளாகவும், அதற்கு எதிராக முண்டு கொடுப்பவர்கள் வலதுசாரிகளாகவும் இருந்தார்கள். அந்தக் காலம் மலை ஏறி விட்டது. இப்போது தங்கள் பொருளாதாரத்திற்கு என்ன இலாபம் கிடைக்கும் என்பதைப் பொறுத்தே யாருக்கு உதவி செய்வது என்பதை ஒரு நாடு முடிவு செய்கிறது. அதில் பதவியில் இருக்கும் அரசுகள்

ஆதாயம் தேடிக் கொள்ளும். உங்கள் போராட்டத்தை நல்ல தலைவர்கள் நடத்தினால் நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் சந்தேகம் இல்லை." என்றார் கெலேனா.

"உங்களுக்கு நல்ல அரசியல் அறிவு இருக்கிறது. என்றாலும் எங்கள் அரசியலை விளங்கிக் கொள்வது மிகவும் கடினம்." என்றான் சொரூபன்.

"நான் படித்தது, வேலை செய்தது எல்லாமே அரசியல் பற்றியே." என்றார் கெலேனா.

"எங்கள் மொழி பேசுபவர்கள், எங்கள் கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் நாங்கள் மட்டுமல்ல... தென்னிந்தியாவில் உள்ள தமிழ் நாட்டில் அறுபத்து ஐந்து மில்லியன் மக்கள் எங்களைப் போன்று தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தோடு வாழ்கிறார்கள். அந்த மக்கள் கிளர்ந்து எழுந்தால் எங்களுக்கு விடுதலை நிச்சயம் கிடைக்கும். ஆனால் இனத்திற்காகக் கிளர்ந்து எழும் உரமான முள்ளந்தண்டு இல்லாதவர்களாக, தங்கள் அன்றாட வாழ்வை மட்டும் பார்ப்பவர்களாக அவர்கள் வாழ்கிறார்கள் என்பது தமிழ் இனத்திற்கான கசக்கும் உண்மை ஆகும். இந்தியா எங்களைக் கட்டாயத்திற்குக் கட்டுப்படுத்த நினைத்தது. அதை வைத்து வலோக்காரமாக ஒப்பந்தம் செய்தது. அதை எங்கள் இயக்கம் ஏற்க மறுத்து விட்டது. அது இப்போது தவிர்க்க முடியாது மீண்டும் போராக வெடித்து விட்டது. இந்தியாவில் இருந்து தமிழ் இராணுவத்தை மட்டும் அனுப்பி இருக்கலாம். அப்போது இராணுவத்திற்கும் மக்களுக்கும் புரிந்துணர்வு அதிகமாக இருந்து இருக்கும். அவர்கள் எதுவும் அறியாத, இராணுவ வெறி பிடித்த, வட இந்திய இராணுவத்தை அங்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் எங்கள் பெண்களைக் கற்பழிக்கிறார்கள். வீட்டிற்குள் உயிருடன் அடைத்து வைத்து அந்த வீட்டையே குண்டு வைத்துத் தகர்க்கிறார்கள்." என்றார் "TS". அவர் இதைச் சொல்லும் போது உணர்ச்சி வசப்பட்டிருந்தார். மூன்றாவது வயின் போத்தல் திறந்து பரிமாறப்பட்டது. "TS" சொல்வதில் நடைமுறை உண்மை இருப்பதாய் சிவா எண்ணினாலும் தமிழ் இராணுவம் வந்தாலும் புலிகள் ஆயுதம் தூக்காமல் இருந்து இருப்பார்களா என்கின்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அப்படியாக நடந்திருந்தால் அது எப்படியாக இருந்திருக்கும் என்று அவன் சிந்தித்தான்.

"எனக்கு இருக்கும் அரசியல் அறிவைப் பொறுத்த வரை இந்தியாவை மீறி உங்களுக்கு இராணுவ ரீதியாக உதவுவதற்கு வேறு அரசுகள் துணியமாட்டார்கள்? இந்தியாவின் பெரிய சந்தை அவர்களுக்கு மிகவும் முக்கியம். அது உங்களால் உருவாக்கக் கூடிய சந்தையை விட ஆயிரம் ஆயிரம் மடங்கு பெரியது. இறால் பிடிப்பதற்காகச் சுறாக்கள் இரையாக வெட்டி வீசப்படுவது இல்லை." என்றார் கெலேனா.

"விட்டா இவவே போராட வேண்டாம் எண்டு சொல்லுவா போல இருக்குது. இப்படி ஒரு போராட்டத்தை நடத்த இவவின்ரை அரசியல் கதை போல எத்தினை கதை தெரிஞ்சிருக்க வேணும் எண்டு இவவுக்குத் தெரியுமே? சும்மா விழல் கதை கதைச்சுக் கொண்டு இருக்கிறா உந்த மனிசி." என்றான் றூபன் தமிழில்.

"அவர் என்ன சொன்னார். தமிழ் எனக்கு விளங்காது." என்றார் கெலேனா.

"இல்லை நீங்கள் சொல்வது தான் சரி என்கிறார் அவர்." என்றான் சிரித்த வண்ணம் சிவா.

"கெட்டிக்காரன்... விரைவாகப் விளங்கிக் கொண்டார்." என்று கெலேனா றூபனை வஞ்சகம் இல்லாது பாராட்டினார்.

"TS"-சிற்குப் பசித்த வயிற்றில் வயினை ஊற்றியது காட்டுத் தீ பற்றிய குடைச்சலை உண்டு பண்ணியது. இனிச் சாப்பிடலாம் என்கின்ற அவதி அதில் பிறந்தது. எழுந்து சென்று புவனலோசினியிடம் சொல்ல வேண்டும் என்று நினைக்கச் சரிஸ்கா அடுக்களைப் பக்கம் இருந்து வேகமாக வந்தாள். மேசையில் இருப்பவர்களுக்குச் சாப்பிட அவசரம் இல்லை என்றாலும் அவளுக்குப் பரிமாற வேண்டும் என்கின்ற அவசரம். ஆறவைத்து மீண்டும் சூடேற்ற முடியாத உணவு என்பது அவள் அவிப்பிராயம். அவசரமாக வந்த சரிஸ்கா "TS"சைப் பார்த்து,

"அப்பா சாப்பாடு கொண்டு வாறம். சரியா?" என்று தன் எண்ணத்தைச் சொன்னாள்.

"ஓ சரி கொண்டு வாங்கோ." என்றார் "TS".

"நீங்க கொண்டு வாங்கோ. இல்லாட்டித் தண்ணியைக் கண்டவை நாள் பூராகவும் இருந்து இப்பிடியே கதைச்சுக் கொண்டு இருப்பினம்." என்றாள் மாலினி.

"பார்த்தீங்களே...? அக்காவுக்குத் திரும்பப் பொறாமை வந்திட்டுது." என்றான் சிவா.

"சிவா அண்ணைக்குக் குசும்பு பண்ணாமல் இருக்க ஏலாது. கலியாணத்துக்குப் பிறகு என்ன நடக்குது எண்டு பார்ப்பம்." என்றான் நிமலன்.

"அதுக்கு இடையில கூர்ப்பு முற்றி நடக்கிறது எல்லாம் பறக்கவே போகுது? என்ன நடக்குதோ இல்லையோ நான் இப்ப மாதிரி அப்பவும் இரண்டு காலால தான் நடப்பன். அதில எந்த மாற்றமும் இருக்காது." என்றான் சிவா.

"தமிழ் படிக்க வேணும்." என்றார் கெலேனா.

"மன்னிக்க வேண்டும். இப்போதைக்கு நாங்கள் தமிழில கதைக்கிறம்." என்றார் "TS" .

"பருவாய் இல்லை... நீங்கள் விருப்பம் போல் கதையுங்கள்." என்றார் கெலேனா.

"வா சரிஸ்கா... நானும் வாறன். சாப்பாடுகளை எடுத்து வருவம்." என்று கூறிய வண்ணம் மாலினி எழுந்து சரிஸ்காவையும் அழைத்துக் கொண்டு அடுக்களைக்குச் சென்றாள்.

சிறிது நேரத்தில் மாலினி மரக்கறியால் அலங்கரிக்கப்பட்ட நீள்வட்ட வெள்ளைத் தட்டு ஒன்றில் வான்கோழியைத் தூக்க முடியாது தூக்கி வந்தாள். அதை வெட்டுவதற்கான கத்தி, பிடித்து வெட்ட, பகிர, பெரிய முள்ளுக் கரண்டி ஆகியவற்றோடு சரிஸ்கா வந்தாள். வான்கோழியை மேசையில் வைத்துவிட்டு,

""TS" அண்ணை இதை முதல்ல வெட்டி, வெட்டி எல்லாருக்கும் கணக்காப் போடுங்க, நாங்கள் மிச்சச் சாப்பாட்டை எடுத்தாறம்." என்று மாலினி கூறும் போதே புவனலோசினி பெரிய கண்ணாடிச் சட்டி ஒன்றில் பொரித்த நத்தார் "Hot dog" உடன் வந்தாள். அதை அடுத்து சரிஸ்காவும் மாலினியும் மீண்டும் குசினிக்குச் சென்றார்கள்.

எல்லாத் தட்டுக்களிலும் வான்கோழி, "Hot dog", மற்றும் "Meat ball", பருப்புத் துவையல், புளிப்புக் கோவா, அவித்த உருளைக்கிழங்கு, கறிப்பாகு, "Jam" என்பன பரிமாறப்பட்ட பின்பு மாலினியும் தனது இருக்கையில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.

"அக்காவும், சரிஸ்காவும் இங்க இடம் இல்லாட்டிச் சோபா மேசையில வைச்சாவது சாப்பிடலாம் தானே?" என்றான் சிவா.

"இல்லைச் சிவா... டெசேற் அலுவலும் முடிஞ்ச பிறகு நாங்கள் ஆறுதலாச் சாப்பிடுவம். நீங்கள் இப்ப சாப்பிடுங்கோ."

"டெசேற் வேற இருக்குதா?" என்றான் சிவா.

"அதுக்குப் பிறகு கேக்கும் இருக்குது." என்றாள் சரிஸ்கா.

"எல்லாம் பிள்ளையின்ரை வேலைதான் என்ன?" என்றான் சிவா.

"ஐயோ அது அம்மா அப்பா சமைச்சது. நான் சும்மா எடுபிடி. பத்தாததுக்கு மாலினி அக்காவின்ரை கை வண்ணமும் இதில இருக்குது." என்றாள் சரிஸ்கா.

அதன் பின்பு சரிஸ்காவும், புவனலோசினியும் மீண்டும் சமையல் அறைக்குச் சென்றார்கள். "TS" விரைவாகச் சாப்பிட்டு முடித்தார். பின்பு சாப்பிட்டு முடித்தவர்களின் தட்டுகளை எடுத்துச் சென்றார். எல்லோரும் சாப்பிட்டு முடித்த பின்பு பழச்சலாத் வழங்கப்பட்டது. அதுவும் சாப்பிட்டு முடிய எல்லோரும் எழுந்து சோபாவிற்குச் சென்று விட்டார்கள். அதன் பின்பு அவர்களின் கதைகளைக் கேட்ட வண்ணம் மாலினியும், சரிஸ்காவும் சாப்பிட்டார்கள்.

பின்பு கோப்பியும், "Chocolate cacke"உம் வழங்கப்பட்டது. நரேசிற்கும், குணேசிற்கும் விஷேடமாகக் குழந்தைகளுக்கான இனிப்புக் கொடுக்கப் பட்டது. மேற்கொண்டும் வயிற்றுக்குள் இடம் வைத்து இருந்தவர்களுக்காக கிளெமென்ரீன் சரிஸ்கா கொண்டு வந்து மேசையில் வைத்தாள். அதைப் பார்த்த அருள்,

"அடுத்தது சரிஸ்காவின்ரை கலியாணத்துக்கு இதைவிடப் பெரிய விருந்தா வைக்கிறது." என்றான்.

"கலியாணமா? அந்தக் கரப்பான் பூச்சி மேலில ஊரவிர்ற வேலை எல்லாம் எனக்குச் சரிவராது." என்று கூறிய வண்ணம் நிமிர்ந்த சரிஸ்காவின் கண்கள் சிவந்து இருந்தன. கண்களில் நீர் கோத்து அதில் வெளிச்சம் பட்டுக் கண்ணாடியாக மின்னிற்று. அந்த மின்னல் அருளைத் திகைக்க வைத்தது. என்ன நான் கேட்டேன்? ஏன் அதைக் கேட்டேன் என்பது விளங்காத தவிப்பில் அவன் அல்லாடினான். சரிஸ்கா அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. வேகமாகக் குசினிக்குச் சென்றுவிட்டாள். அவள் திரும்பி வருவாள் என்கின்ற பலரது எதிர்பார்ப்பு அன்று நிராசை ஆகிற்று.

தொடரும்...